Downloaded from https:// www.studiestoday.com

# Social Studies

## CLASS X

# சமூக அறிவியல்

Free

## வகுப்பு X (TAMIL MEDIUM)



வெளியீடு

தெலங்கானா மாநில அரசு

ஐதராபாத்

தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு

சமூக அறிவியல் வகுப்பு X

சமூக அறிவியல் வகுப்பு X



Mahatma Gandhi is identified as the most prominant person of 20th century India. Albert Eistein said, about him *"Generations to come, it may well be, will scarce believe that such a man as this one ever in flesh and blood walked upon this Earth."*



Government of Telangana

Department of Women Development & Child Welfare - Childline Foundation

CHILD LINE 1098 NIGHT & DAY

24 HOUR NATIONAL HELPLINE

- When abused in or out of school.
- To save the children from dangers and problems.
- When the children are denied school and compelled to work.
- When the family members or relatives misbehave.

1098 (Ten...Nine...Eight) dial to free service facility.

State Council for Educational Research and Training, Telangana, Hyderabad




தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




## கல்விக் கடன் வசதி

நமது நாட்டில் பண வசதியின்றி அதிகமான இளைஞர்கள் உயர்கல்வியை பெற முடியாமல் உள்ளனர். இத்துயரை போக்க, கல்விக் கடன் வசதித்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உயர்கல்வியைப் பெற இந்திய மாணவர்களுக்கு இக்கடன் வசதி அளிக்கப்படுகிறது. இந்தியாவில் படிப்பதாக இருந்தால் இருபது லட்சம் வரை கடன் அளிப்படுகிறது.

மேல்நிலைக்கல்வி முடித்த இந்திய மாணவர்களுக்கு நுழைவுத்தேர்வு வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளில் இடம் வழங்கப்படுகிறது. சில வங்கிகள் சில நிபந்தனைகளுடன் கடன்களை வழங்குகின்றன. இவ்வங்கி மூலம் வேலைவாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

கல்விக்கட்டணம், பாடநூல்களின் செலவு, உணவு விடுதிச் செலவு, தங்கும் அறை செலவு ஆகிய கட்டணங்கள் கடனாக அளிக்கப்படுகின்றன. மாணவரும் அவருடைய தந்தையும் இணைக் கணக்கு ஒன்றை வங்கியில் துவக்கி, வீட்டு பத்திரங்கள் சிலவற்றையும் வங்கியில் உத்திரவாத பத்திரமாக அளிக்க வேண்டும்.

மாணவரோ அல்லது அவருடைய தந்தையோ மாணவரின் கல்வி முடியும் வரை கடனை திருப்பி செலுத்த வேண்டியதில்லை. படிப்பு முடிந்த ஆறு மாதத்திற்கு பிறகோ அல்லது வேலை கிடைத்த பிறகோ அதாவது எது முதலில் வருகிறதோ அதன் பிறகு கடனை திருப்பிச் செலுத்த வேண்டும்.

மாணவர்கள் எந்த ஒரு வர்த்தக வங்கியையும் கடன் பெற அணுகலாம். இதற்காக எந்த கட்டணமும் வசூலிக்கப்படமாட்டாது.

மேலும் தகவல்களுக்கு www.rbi.org.in மற்றும் www.rbi.org.in/scripts/helpdesk.aspx எனும் இணையதளங்களை அணுகவும்.

## வங்கியியல் விசாரணைத் திட்டம் - 2006

வங்கிச் செயல்பாட்டில் ஏதேனும் குறையிருப்பின், அப்புகாரை விசாரிக்க வங்கியில் விசாரணைத் திட்டம்-2006ல் வங்கியில் கணக்கு உள்ளவர்களுக்காக துவக்கப்பட்டது. நுகர்வோரின் குறைகளைத் தீர்ப்பதற்காக ரிசர்வ் வங்கியால் இத்திட்டம் துவக்கப்பட்டது. ஒரு வெள்ளைத்தாள், மின்னஞ்சல் அல்லது www.bankingombudsman.rbi.org. மூலமோ உங்களது புகாரை அனுப்பலாம். இதில் உங்களுடைய புகாரின் விவரம், செல்பேசி எண், வீட்டு விலாசம், வங்கி எண், ATMஎண் போன்றவற்றை அளிக்க வேண்டும். நுகர்வோர் தங்களுடைய புகாரை முதலில் வங்கி மேலாளருக்கு அனுப்பி, பதுலுக்காக 30 நாட்கள் காத்திருக்க வேண்டும். இப்பதிலின் மேல் முறையீடாக வங்கியியல் விசாரணையிடம் ஒரு வருடத்திற்குள் புகாரளிக்க வேண்டும். அனைத்து வர்த்தக வங்கிகள், வட்டார கிராம வங்கிகள், மாநில மற்றும் மாவட்ட கூட்டிறவு வங்குகள் ஆகியவையும் இவ்விசாரணைத் திட்டத்தின் கீழ் வருகின்றன. இப்புகாரை தெரிவிக்க விண்ணப்பக் கட்டணம், வழக்கறிஞர் கட்டணம், தபால் தலை ஒட்டுதல் போன்ற செலவிகள் இருக்காது. விசாரணை அதிகாரியின் பதில் நுகர்வோரை திருப்திப்படுத்தாவிடில், துணை ஆளுனர், மேல் முறையீட்டு ஆணையம், நுகர்வோர் சேவைத் துறை, ரிசர்வ் வங்கி, மும்மை எனும் விலாசத்திற்கு முறையிடலாம்.

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# சமூக அறிவியல்

## பத்தாம் வகுப்பு

# SOCIAL STUDIES

## Class X

## (TAMIL MEDIUM)

### தொகுப்பாளர்கள்


**திரு.அரவிந்த் சர்தானா,** ஏகலவ்யா, M.P.

**டாக்டர். K. நாராயண ரெட்டி,** உதவி பேராசிரியர், புவியியல் துறை, உஸ்மானியா பல்கலைக்கழகம், ஐதராபாத்.

**பேராசிரியர். I.லட்சுமி** வரலாற்றுத்துறை, உஸ்மானியா பல்கலைக்கழகம், ஐதராபாத்.

**பேராசிரியர் புபேந்திர யாதவ்**

Azim Premji பல்கலைக்கழகம், பெங்களூரு

**டாக்டர். K.K. கைலாஷ்,** உதவி பேராசிரியர், அரசியல் துறை, ஐதராபாத் பல்கலைக்கழகம். ஐதராபாத்.

**டாக்டர்.சந்திரசேகர் பாலசந்திரன் ,**

The Indian Institute of Geography, பெங்களூரு.

**டாக்டர்.N.சந்த்ராயுடு,** உதவி பேராசிரியர், புவியியல் துறை, S.V.பல்கலைக்கழகம், திருப்பதி

**பேராசிரியர். G. ஓம்கார்நாத்,**

பொருளாதாரத்துறை , ஐதராபாத் பல்கலைக்கழகம், ஐதராபாத்.

**திரு,C.N. சுப்ரமணியம்,**

ஏகலவ்யா, M.P.

**பேராசிரியர். K.விஜய பாபு,** வரலாற்றுத்துறை, காகதீயா பல்கலைக்கழகம், வரங்கல்.

**டாக்டர். M.V. சீனிவாசன்,**உதவி பேராசிரியர், DESSH, NCERT,புதுடெல்லி.

**திரு K. சுரேஷ்,**

சிறந்த புத்தகம், ஐதராபாத்.

**திருமதி சுகண்யா போஸ்,**உதவி பேராசிரியர் NIPFP, புதுடெல்லி

**திரு அலெக்ஸ். M.ஜியார்ஜ்,**

ஏகலவ்யா, M.P.


### பாடப்புத்தக வளர்ச்சிக் குழு


**திரு A. சத்திய நாராயண ரெட்டி,**
இயக்குநர்,
S.C.E.R.T. , ஐதராபாத்.

**திரு B. சுதாகர்,** இயக்குநர்,
அரசு பாடப் புத்தக பதிப்பகம்,
ஐதராபாத்.

**டாக்டர். N. உபேந்தர் ரெட்டி,**
பேராசிரியர் & Head C&T Dept.,
S.C.E.R.T.,,ஐதராபாத்.




**தெலங்கானா மாநில அரசு வெளியீடு, ஐதராபாத்.**

கல்வியால் முன்னேறு
பணிவாக நடந்துக்கொள்

சட்டத்தை மதித்து நட
உரிமையை பெறு



தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு 2019

SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

© Government of Telangana Hyderabad.

*First Published 2013*

*New Impression 2014,2015,2016,2017,2018,2019*

All rights reserved.

No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means without the prior permission in writing of the publisher, nor be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition including this condition being imposed on the subsequent purchaser.

The copy right holder of this book is the Director of School Education, Hyderabad, Telangana.
We have used some photographs which are under creative common licence. They are acknowledged at later (page viii).

This Book has been printed on 70 G.S.M. S.S. Maplitho,
Title Page 200 G.S.M. White Art Card

**தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு 2019-20**

*Printed in India*
at the Telangana Govt. Text Book Press,
Mint Compound, Hyderabad,
Telangana.



Downloaded from https:// www.studiestoday.com

SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

## எழுத்தாளர்கள்

**திருமதி. M. சத்யாவதி ராவ்,** ஓய்வு.,PGT அரசியல் அறிவியல்,Oxford S S School, விகாஸ்புரி, புதுடில்லி.

**டாக்டர் G. ஆனந்த்,**உதவி பேராசிரியர்(C), புவியியல் துறை, உஸ்மானியா பல்கலைக்கழகம், ஐதராபாத்.

**டாக்டர் S. வெங்கடரத்னம்,** உதவி பேராசிரியர் (PT), வரலாற்றுத் துறை, நிஜாம் கல்லூரி (உஸ்மானியா பல்கலைக்கழகம்), ஐதராபாத்.

**டாக்டர்.T. வெங்கடேஷ்வர ராவ்,** உதவி பேராசிரியர்(C), வரலாற்றுத் துறை, PG கல்லூரி(உஸ்மானியா பல்கலைக்கழகம்), சிகிந்தராபாத்

**திரு M.நரசிம்ம ரெட்டி,** GHM, ZPHS .பெத்தஜங்கம்பல்லி, Y.S.R.கடப்பா.

**திரு K. இலட்சுமி நாராயணா,** விரிவுரையாளர், Govt. DIET, அங்கலூர்.கிருஷ்னா.

**திரு M. பாபையா,** விரிவுரையாளர்,SCERT, A.P., ஐதராபாத்

**திரு A.லக்ஷமன் ராவ்,** S.A. GHS .தங்கர்வாடி, கரிம்நகர்.

**டாக்டர். R. கணபதி,** S.A. ZPHS .லாடல்லா, வரங்கல்.

**திரு U.ஆனந்த குமார்,** S.A. ZPHS .சுஜாதா நகர்,கம்மம்.

**திருP.ஜகன் மோகன் ரெட்டி,** S.AZPHS பிட்சேடு,கஜ்வெல், மெதக்.k.

**திரு P. இரதங்கபாணி ரெட்டி,** S.A ZPHS Polkampally, Mahabubnagar.

**திரு K.சீனிவாச ராவ்,** S.A MPUPS P.R.Pally, Tekkali,Srikakulam.

**திருமதி B. மரியா ராணி,** S.A. M.P.U.P.S .சிலுகாநகர், ரங்காரெட்டி

## ஒருங்கிணைப்பாளர்கள்

**திரு. M. பாபையா,** விரிவுரையாளர்,SCERT, A.P., ஐதராபாத்

**திருமதி. D. விஜயலட்சுமி,** விரிவுரையாளர், SCERT, A.P., ஐதராபாத்

## தமிழாக்கம்

**ஒருங்கிணைப்பாளர் திரு. பி.எஸ். தங்கமணி,** SA (MM), ZPHS, புதுப்பேட்டை, நகரி, சித்தூர் மாவட்டம்

**தொகுப்பாளர் திரு. டி. ஜான் டல்லஸ்,** SA (S.S), ZPHS, புதுப்பேட்டை, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம்,

### மொழிபெயர்ப்பாளர்கள்

**திரு. ஆர்.எ.ஏழுமலை,** SA (S.S), ஓய்வு,, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம்,

**திருமதி.எம்.மீரா,** SA (S.S), ZPHS, புதுப்பேட்டை, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம்,

**திரு. இ.ஜி.சதாசிவம்,** SA (ஆங்கிலம்), ZPHS, ஏகாம்பரகுப்பம், நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம்,

**திரு. எஸ்.என்.ஆறுமுகம்,** SA (ஆங்கிலம்) ZPHS, புதுப்பேட்டை, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம்,

**திருமதி. பி.ஏஞ்சலின் எஸ்தர் லிடியா,** SA (S.S), ZPHS, பிச்சாட்டூர், பிச்சாட்டூர் மண்டலம், சித்தூர் மாவட்டம்

**திரு. டி. ராஜசேகரன்,** SA (S.S), ZPH S, சிந்தலபட்டடை, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம்,

### கணினி வடிவமைப்பு

**திரு. கே.பி.சந்தோஷ் குமார்,** SGT , MPPS , புதுப்பேட்டை,நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம்,

**திரு. பி.எஸ்.உலகநாதன்,** SGT , MPPS, விநாயகபுரம் சத்திரவாடா, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம்,

**திரு. பி.எஸ்.துளசிராமன்,** SGT, MPPS, சத்திரவாடா, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம்,

,



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# மாணவர்களுக்கு ஓர் கடிதம்

"நாள் முழுவதும் வயலிலும், வீட்டிலும் வேலை செய்த களைப்பில் ஓய்வெடுக்கும் தம் தாயைப் பார்த்து, பெண்களுக்கு ஏன் இவ்வளவு கஷ்டம் என மனம் வருந்தினேன். சமுதாயத்திலும் பல்வேறு இன மக்களைக் கண்டபோது அவர்களிடையே நிகழும் மொழி, கலாசாரம், பழக்கவழக்கங்கள் போன்ற வேறுபாடுகளைக் கண்டு வியந்தேன்."

"நம் நாட்டு விவசாயிகளின் தன்னம்பிக்கையற்ற நிலையை செய்தித்தாளில் படித்தேன். நகர் புறங்களில் பெரிய கட்டிடங்கள், சாலைகள், கோவில்களைக் கண்டு வியந்தேன். அதே நேரத்தில் ஆயிரக்கணக்கான குடிசைப்பகுதிகளையும் கண்டேன். அழகிய கட்டிடங்கள் இருக்கின்றபோது ஏன் குடிசைகள் அதிகமாக உள்ளன?"

"பெரியோர்கள் வாக்குரிமை, தேர்தல் முறை, நம்மை ஆளும் தலைவர்கள் ஆகியவற்றைப் பற்றி கலந்துரையாடுவார்கள். இவற்றைக் கேட்டு நான் ஆச்சரியம் அடைந்தேன். அக்காலத்தில் புனிதர்களும், கடவுள்களும் அரசர்களோடும் மக்களோடும் ஒன்றாக வாழ்ந்தனர் என்பதை கேட்டு ஆச்சரியப்பட்டேன்."

"என்னுடைய மனதில் பல வினாக்கள் எழுகின்றன. என்னுடைய சந்தேகங்களுக்கு யாராவது பதில் கூறுவார்களா? நான் எவ்வாறு என்னுடைய சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வது? யார் எனக்கு உதவுவர்?"

அன்பார்ந்த நண்பர்களே,

உன்னுடைய மனதில் எழுந்த வினாக்களைப் போல் அனைவருடைய மனதிலும் பல சந்தேகங்கள் எழுகின்றன. இவ்வினாக்களுக்கும் விடை கூறுவது கடினம். இவ்வினாக்களுக்கு பல்வேறு மனிதர்கள் பல்வேறு விதமாக விடை அளிப்பர். சமூக அறிவியல் பாடத்தைப் புரிந்துகொண்டால் உன்னுடைய வினாக்களுக்கு ஓரளவு விடைக்கிட்டும். கல்லூரிகளில் பெண்கள் குறைவாக இருக்க காரணம் என்ன? எனக் கேட்டால் ஒவ்வொருவரும் ஒரு பதிலைக் கூறுவர். குடிசைப்பகுதிகள் ஏன் அசுத்தமாக உள்ளன? எனும் வினாவிற்கும் பல பதில்கள் கிடைக்கும். இவற்றிற்கு சமூக அறிவியல் பாடங்கள் பதிலளிக்கும்.

சமூக அறிவியல் பல்வேறு நிலைகளில் உள்ள வேறுபாடுகளுக்கும் வேற்றுமைகளுக்கும் பதிலளிக்கிறது. இவ்வுலகம் பல மாற்றங்களை கண்டு வருகிறது. இவற்றிற்கேற்ப மக்களும் மாறவேண்டும். கல்லூரிகளில் அக்காலத்தில் குறைவான பெண்கள் இருந்தனர். தற்போது அதிகரித்துள்ளது. பெற்றோர்கள் பெண் குழந்தைகளை கல்லூரிகளுக்கு ஏன் அனுப்புவது கிடையாது? சமூக அறிவியல் பல வினாக்களுக்கு பதிலளிக்கும்.

பதிப்பாசிரியர்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# இந்நூலைப் பற்றி

இந்நூல் இன்றையச் சமுதாயம் மற்றும் அதனைச் சுற்றி நடைபெறும் பல செயல்களைப் பற்றி எடுத்துரைக்கின்றது. இது கலைத்திட்டத்தின் ஒரு சிறு பகுதியே. நீ அறிந்ததை வகுப்பறையில் கலந்துரையாட இந்நூல் உதவுகிறது. சந்தை, பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சி, கோயில்கள், அருங்காட்சியகங்கள் பற்றி நீயும் உனது நண்பர்களும் அறிய இந்நூல் துணைபுரிகிறது. விவசாயிகள், கடைக்காரர்கள், அலுவலர்கள், சாமியார்கள் ஆகியோரைப் பற்றியும் இந்நூல் உதவுகிறது.

இந்நூல் மூலம் ஒரு புதிய புதிரை எதிர்நோக்கி, பகுத்தாய்ந்து அதற்கு ஒரு முடிவை அறியவும் முடிகிறது. இதில் பதில்கள் நேரடியாக வழங்கப்பட்டிருக்காது. நாமே பதிலை கலந்துரையாடி அறிய வேண்டும். நீயும், உனது நண்பர்களும், ஆசிரியரும் வகுப்பறையில் கலந்துரையாடியப் பிறகு இந்நூலின் முடிவை அறிய முடியும். இந்நூலில் உள்ள பதில்கள் உனக்கு திருப்தியளிக்காவிடினும், கவலை வேண்டாம். உன்னுடைய பதிலையும் அதற்கான காரணத்தையும் வழங்கலாம். உனது நண்பர்கள் ஒத்து போகாவிடினும் அவர்கள் புரியும்படி நீ விவரிக்கவும். உனது பதில் சரியாகும் வரை, தொடர்ந்து உனது பதிலுக்காக பிறருடன் கலந்துரையாடு. சரியான பதிலை பெற, உனது நண்பர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரை அணுகவும்.

நிலத்தோற்றத்தின் வேறுபாடுகள், காலநிலைகள், சுற்றுப்புறம், மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அதனை பெற மக்கள் பன்படும் வாழ்க்கைமுறை, மக்களின் தேவைகள், சமத்துவம், வழிபடும் முறைகள், உலகப் புகழ் பெற்ற புரட்சிகள், தொழிற்புரட்சிகள், பல நாடுகளில் மொழி வேற்றுமைகள், இன வேற்றுமைகள், பல கண்டங்களில் காலனி நாடுகளின் ஆக்கிரமிப்புகள், கச்சாப்பொருட்களின் சுரண்டல், பெண்கள் பாதுகாப்புச் சட்டங்கள், மக்களின் உரிமைகள், பேரிடர் குறித்த அறிவியல் நுட்பங்கள் மற்றும் போக்குவரத்து கல்வி ஆகியவற்றைப் பற்றி இந்நூல் விவரமாக எடுத்துரைக்கின்றது.

மேற்கூறியவற்றைப் பற்றி அதிகம் அறிய பிற நூல்களான பூமியின் தோற்றம், பீடபூமிகள், மலைகள், கடல்கள், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றிய மனித இனத்தைப் பற்றியும் நாம் அறிந்திருக்க வேண்டும். மேலும் பல்வேறுபட்ட மனித இன வேறுபாடுகளையும் அறிந்திருக்க வேண்டும்.

இந்நூலைப்பற்றி புரிந்து கொள்ள முயலும்போது, வகுப்பறையில் உனக்கு பல வினாக்கள் எழும். ஆசிரியரிடம் அவ்வினாக்களை கேட்டு உனது சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளுங்கள். மேலும் சந்தேகங்கள் தீர்க்கப்படும். பிற நண்பர்களின் பதில்கள் மூலம் உனது சந்தேகம் நிவர்த்தியாகும்.

இந்நூலின் ஒவ்வொரு பாடத்திலும் மாணவர்கள் செய்வதற்கான செயல்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றை செய்து முடிக்க பல நாட்கள் தேவைப்படும் பாடக்கருத்தை அதிகம் அறிந்துகொள்ள இச்செயல்திட்டங்கள் பெரிதும் உதவும். இது உனது நினைவாற்றலை அதிகரிக்கச் செய்யும்.

இந்நூலில் உள்ள பாடங்களைப் பற்றி நீ மனப்பாடம் செய்ய வேண்டியதில்லை. ஆனால் கருத்துக்களை ஆழமாக புரிந்து கொண்டு வினாவிற்கு பதிலளிக்கவும். உனது சொந்தக் கருத்தை விவரிக்கவும்.

இயக்குநர்,
SCERT,
ஐதரபாத்.



தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு 2019

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**இந்நூலை பயன்படுத்துதலும் ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு குறிப்புகளும்**

- இந்நூலை உருவாக்க கலைத்திட்ட ஒருங்கிணைந்த அணுகுமுறையை பின்பற்றியுள்ளோம். உயர்நிலைப்பள்ளிகளில் பின்பற்றப்பட்ட வேண்டிய ஒழுக்க அணுகுமுறை மத்திய மற்றும் மாநிலக் கல்விக் கொள்கையால் வழங்கப்பட்டுள்ளது.
- பள்ளிகளில் வரலாறு, பொருளாதாரம், குடிமையியல், மற்றும் புவியியல் பற்றி கற்பிக்கப்படுகிறது. இந்நூலில் ஆறு வகை கருத்துகளில் கற்பிக்கப்படுகின்றன.
- சமூக அறிவியல் பாடநூலை வகுப்பறையில் படித்து, அதிலுள்ள பாடக்கருத்தை பிற மாணவர்களுடன் கலந்துரையாடி பாடப்பொருளை சிறப்புற கற்க முனைதல் வேண்டும்.
- **பாடநூலின் மொழித்திறன்:** மாணவர்கள் புரிந்துக்கொள்ளும் பொருட்டு எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. இருப்பினும், சில வார்த்தைகளுக்கு விளக்கம் தேவைப்படுகிறது. பாடப்பொருளை புரிந்துக்கொள்ள பல எடுத்துக்காட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்திலும் தலைப்பிற்கு ஏற்ற துணைத் தலைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.
- இந்நூல் பல வகைகளில் எழுதப்பட்டுள்ளன. பாடம் 9-ல் அமான் மற்றும் சரிதாவைப் பற்றி உருவகப்படுத்தப்பட்டுள்ளது. இது உண்மைச் சம்பவத்தின் எடுத்துக்காட்டுகளாகும். பாடம் 6-ல் நிலக்கரிச் சுரங்கத்தைப் பற்றிய தனி ஆய்வு அறிக்கைகளும் வழங்கப்பட்டுள்ளன. பாடம் 14-ல் சட்டத்தை உருவாக்குபவர்களைப் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது.
- **பாடநூலின் இடையிலும் இறுதியிலும் வினாக்கள்:** பாடநூலின் இடையில் பல வினாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். இது கற்பித்தல் முறைகளின் ஒருங்கிணைந்த செயலாகும். இதில் பல வேறுபட்ட வினாக்கள் உள்ளன. வினாக்களுக்கேற்ற பதிலை உருவாக்கவும், மதிப்பிடவும் பாடக்கருத்தை ஆழ்ந்து படித்தறிதல் அவசியம். பதில்களை ஆசிரியர் முழுவதுமாக கூறாமல், மாணவர்களே கூறவும் எழுதவும்.

பாடநூலில் பல்வேறு வகை வினாக்கள் உள்ளன.

1. மாணவர்களின் அனுபவத்தை எழுதக் கூறுதல்.
2. அவர்களுடைய அனுபவத்தை பாடநூலில் உள்ள அனுபவத்துடன் ஒப்பிடுதல்.
3. பாடநூலில் வழங்கப்பட்டுள்ள பல நிகழச்சிகளை ஒப்பிடுதல்.
4. பல நிகழ்ச்சிகள் மற்றும் ஆய்வுகளைப் பற்றி மாணவர்களிடம் வினா எழுப்புதல்.

( ஒவ்வொரு மாணவனையும் அவனுடைய கருத்தை கூறச்செய்தல்)

- மாணவர்கள் வினாக்களை எழுப்ப ஆசிரியர் பல முறைகளை கையாளுவார். சில பதில்கள் குறிப்பு புத்தகத்தில் எழுத வேண்டும், சிலவற்றை மாணவர் குழுவிலும், சிலவற்றை மாணவர் அனைவரிடத்திலும் கலந்துரையடவேண்டும்.மாணவன் தன்னுடைய சுய மொழி நடையில் இலக்கணப் பிழையின்றி எழுத உதவ வேண்டும். அனைவரும் ஒரே வகையில் எழுத கூற வேண்டாம்.
- ‘‘ஒவ்வொரு பாடத்திலும் உனக்குத் தெரியுமா? என்றும், சில கட்டங்களில் அதிக அளவு விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றி வகுப்பறையில்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கலந்துரையாடவும். அவற்றைப் பற்றி செயல்களையும் வழங்குங்கள். ஆனால், தொகுப்பு மதிப்பீடு செய்ய வினாக்களை கேட்காதீர்கள்.

- **பாடநூலில் படங்கள்:** பழைய பாடநூலில் குறைந்த அளவு படங்களே இருந்தன. ஆனால், இப்பாடநூலில் மாணவர்கள் அதிகம் புரிந்துக் கொள்ள பல படங்கள் வழங்கப்பட்டுள்ளன. சிலப்படங்களுக்கு விளக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறே, தேசியத் தலைவர்களின் படங்களும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில், புகைப்படங்கள், கோட்டுப்படங்கள், செய்திப்படங்கள், வரைப்படங்கள், கேலிச்சித்திரங்கள் ஆகியவையும் வழங்கப்பட்டுள்ளன். இப்படங்கள் பல வரலாற்று நூல்களிலிருந்து எடுக்கப்பட்டதால், பல்வேறு வகைப்பட்ட படங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- **வரைப்படங்கள் அட்டவணைகள் மற்றும் கோட்டுவரை படங்கள்:** இந்நூலில் உள்ள வரைபடங்கள் புவியியல், பொருளாதாரம், அரசியல் மற்றும் வரலாறு ஆகிய பிரிவுகளுக்கு தொடர்புடையதாகும். பாடக்கருத்தை ஈடுபாடுடன் கற்க, இப்படங்கள் மாணவர்களுக்கு பெரிதும் துணைபுரியும்.
- **செயல் திட்டங்கள்:** இந்நூலில் பல செயல்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றை செய்துமுடிப்பது எளிதாகும். பாடநூலை விளக்கி கூறுவது கடினம். செயல்திட்டங்கள் மூலம் விளக்குவது எளிது. செயல்திட்டத்தால் மாணவர்கள் சமூகம், மக்கள் தொடர்பான செய்திகள் மற்றும் பிற செய்திகளை சேகரித்து பாடப்பொருளை அறிய முடிகிறது. நேர்காணலுக்கான வினாக்கள் சேகரித்தல், வங்கியின் செயல்பாடு, தகவல்களை சேகரித்து வழங்குதல் போன்றவை அனைத்தும் சமூக அறிவியலின் திறனை வெளிப்படுத்த உதவும். இச்செயல்களால் மாணவர்கள் குழுவுடன் இணைந்து மகிழ்ச்சியுடனும் ஈடுபாடுடனும் பாடச் பொருளை கற்க முனைவர்.

**ஏற்றுக்கொள்ளல்**

தெலங்கானா மாநில மனித உரிமைகள் கல்வி, ஒருங்கிணைப்பாளர் திரு.கே. ஜோதி, மருத்துவ பயிற்சியாளர் டாக்டர். திரு. ரமணி, அத்கூரி, பெங்களூரின் திரு.வெளினா முராரி, மஞ்சி புஸ்தகம் எனும் அமைப்பின் திருமதி கே. பாக்கியலட்சுமி டில்லி, ஜே.என்.யூ.வின் பேராசிரியர் எம்.எஸ்.எஸ். பாண்டியன், பேராசிரியர் இ.சிவநாகி ரெட்டி, சதபதி, ஆந்திர மாநில தொல்பொருள் மற்றும் அருங்காட்சியகத்துறை மத்திய நூல்நிலைய இயக்குநர் ஆகியோர் இந்நூலை உருவாக்க நேரடியாகவும் மறைமுகமாகவும் துணைபுரிந்து பல தகவல்களையும் புகைப் படங்களையும் வழங்கியதற்கு நன்றியைக் கூறிக்கொள்கின்றோம்.

 தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு 2019-20

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## கல்வித் தரங்கள்

**வகுப்பறைச் செயல் :** வகுப்பறையில் மாணவர்கள் பாடக்கருத்தை புரிந்துகொள்ளச் செய்ய வேண்டும். பகுத்தல், காரணம் விளைவு அரிதல், மன வரைபடம், உற்றுநோக்கல், சிந்தனை, கற்பனை, கலந்தாய்தல் ஆகியவற்றை பாடக்கருத்துடன் இணைத்து கற்பிக்க வேண்டும். முக்கிய வார்த்தைகளை அமைக்க பாடக்கருத்தை விவரிக்க வேண்டும்.

1) **பாடக்கருத்தை புரிந்துகொள்ளல் :** கலந்துரையாடல், உற்றுநோக்கல் ஆகியவற்றின் மூலம் பாடக்கருத்தை புரிந்துகொள்ளச் செய்தல்

2) **கற்றல், புரிந்துகொள்ளல் மற்றும் பாடக்கருத்தை ஆய்தல் :** விவசாயிகள், தொழிலாளர்கள் பற்றிய கருத்துக்களை, மாணவர்கள் கற்று தங்களின் முக்கிய தேவைகளை பூர்த்தி செய்தல்.

3) **தகவல் திறன்கள் :** சமூக அறிவியலின் கற்பித்தல் பாடநூல்கள் மட்டுமே அனைத்து கருத்தையும் வழங்காது. நகர்புறங்களில் வாழும் மாணவர்கள் மக்கள் பிரதிநிதிகளைப்பற்றியும், கிராமப்புற மாணவர்கள் ஏரி, குளம், காடு, மலை ஆகியவற்றைப் பற்றியும் விவரிப்பர். பாடநூலில் இல்லாவிடினும், மாணவர்கள் சார்ந்த பகுதிகளுக்கு ஏற்ப செயல் திட்டங்களை வழங்கவேண்டும். அவர்களின் பகுதிகளுக்கு ஏற்ப ஓவியம் தீட்டும் செல்களையும் வழங்கவேண்டும். மேலும், வீடுகளின் வகைகள், பயிர் வகைகள், தொழில்கள் ஆகியவற்றையும் பற்றியும் செயல்களை வழங்கவேண்டும்.

4) **ஆய்வுக்கருத்திற்கு காரண விளக்கம் அளித்தல் :** மாணவர் தங்கள் பகுதிகளில் பல்வேறு தொழில் செய்யும் மக்களை அடையாளம் கண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை விவரிக்கவேண்டும். காரணம் அறிதலுக்கு ஒரு காரணம் இருக்காது. பல காரணங்களை வழங்கவேண்டும்.

5) **வரைபடம் மற்றும் ஓவியம் வரைதல்/படித்தல் திறங்கள் :** பாடநூலில் பல்வேறு படங்களும், வரைப்படங்களும் வழங்கப்பட்டுள்ளன. வரைபடத்தில் முக்கிய இடங்களை குறிக்கும் திறனை வளர்க்க வேண்டும். வகுப்பறையின் உயரம், நீளம், பள்ளிக்கும் வீட்டுக்கும் உள்ள தூரம் ஆகியவற்றை குறிக்கும் திறனை வளர்க்க வேண்டும். கட்டிடக்கலையைப் பற்றி விளக்கும் திறனும் அதிகரிக்க வேண்டும்.

6) **பாராட்டுதல் :** நமது நாட்டில் மொழி, கலாச்சாரம், ஜாதி, மதம், பாலினம் என பல்வேறு வேற்றுமைகள் உள்ளன. இத்தனை வேற்றுமைகள் இருப்பினும் நாம் அனைவரும் இந்தியரே எனும் எண்ணத்துடன் மாணவர்கள், வாழ சமூக அறிவியல் ஆசிரியர் ஆறு மற்றும் ஏழாம் வகுப்பின் துவக்கம் முதல் இதை வெளிப்படுத்த வேண்டும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# பொருளடக்கம்



| வ.எண் | பொருள் | பக்க எண் | பிரிவேளை | மாதம் |
|---|---|---|---|---|
| | பகுதி – I வளங்களின் வளர்ச்சியும் சமத்துவமும் | | | |
| 1 | இந்தியா – இயற்கை அமைப்புகள் | 1-13 | 8 | ஜூன் |
| 2 | வளர்ச்சிக் கொள்கைகள் | 14-27 | 8 | ஜூன் |
| 3 | உற்பத்தியும் வேலை வாய்ப்பும் | 28-43 | 6 | ஜூலை |
| 4 | இந்தியாவின் காலநிலை | 44-57 | 10 | ஜூலை |
| 5 | இந்தியாவின் ஆறுகளும் நீர்வளங்களும் | 58-70 | 10 | ஆகஸ்டு |
| 6 | மக்கள் | 71-86 | 6 | ஆகஸ்டு |
| 7 | மக்களும் குடிபெயர்தலும் | 87-101 | 6 | செப்டம்பர் |
| 8 | ராம்பூர்: ஒரு கிராம பொருளாதாரம் | 102-116 | 6 | செப்டம்பர் |
| 9 | உலகமயமாதல் | 117-130 | 4 | நவம்பர் |
| 10 | உணவுப் பாதுகாப்பு | 131-144 | 4 | டிசம்பர் |
| 11 | சமத்துவ மற்றும் நிலையான முன்னேற்றம் | 145-161 | 5 | டிசம்பர் |
| | பகுதி – II சமகால உலகமும் இந்தியாவும் | | | |
| 12 | போர்களுக்கிடையே உலகம் | 162-185 | 12 | ஜூன் |
| 13 | குடியேற்ற நாடுகளில் தேசிய விடுதலை இயக்கங்கள் | 186-201 | 12 | ஜூலை |
| 14 | இந்தியாவில் தேசியஇயக்கம்-பிரிவினை மற்றும் சுதந்திரம் | 202-215 | 8 | ஜூலை |
| 15 | சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குதல் | 216-231 | 8 | ஆகஸ்ட் |
| 16 | இந்தியாவில் தேர்தல் முறைகள் | 232-241 | 10 | செப்டம்பர் |
| 17 | சுதந்திர இந்தியா (முதல் 30 வருடங்கள் - 1947-77) | 242-257 | 8 | அக்டோபர் |
| 18 | 1977-2000 ஆண்டுகளில் தோன்றிய அரசியல் நிகழ்வுகள் | 258-275 | 10 | நவம்பர் |
| 19 | போருக்குப் பின் உலகமும் இந்தியாவும் | 276-291 | 9 | நவம்பர் |
| 20 | தற்கால சமூக இயக்கங்கள் | 292-307 | 6 | டிசம்பர் |
| 21 | தெலங்கானா மாநில உருவாக்கிய இயக்கம் | 308-322 | 5 | ஜனவரி |
| | திருப்புதல் | | | பிப்ரவரி |





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## தேசிய கீதம்

– இரவீந்திரநாத் தாகூர்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்த் குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

'இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறப்புகள்.

என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்பிற்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன். எல்லோரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன். விலங்குகளிடத்தில் கருணை காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலே நான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.'

**இந்திய அரசியலமைப்புச் சட்டம் முன்னுரை**

**இந்தியாவின் மக்களாகிய நாங்கள், இந்தியாவை முழு உரிமை கொண்ட, சோஷியலிச, மதச்சார்பற்ற, மக்களாட்சி குடியரசாக அமைக்க உள்ளார்வமுடன் அனைத்து குடிமக்களுக்கும்;**
**நீதி : சமூக பொருளாதார அரசியல்**
**சுதந்திரம் : எண்ணம், வெளிப்படுத்துதல், நம்பிக்கை வழிபாடு.**
**சமத்துவம் : வாய்ப்பு, நிலை மற்றும் அனைவரிடமும் ஏற்படுத்துதல்.**
**சகோதரத்துவம் : தனிமனிதரிடம் ஏற்படுத்துதல் மற்றும் தேச ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துதலுக்காக நம்முடைய அரசியலமைப்பு சட்டத்தின் 1949 நவம்பர், 26–ஆம் நாளாகிய இன்று, இதன் மூலம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினை ஏற்று, சட்டமியற்றி, எங்களுக்கு நாங்களே அளித்துக் கொள்கின்றோம்.**



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்
1

# இந்தியா - இயற்கை அமைப்புகள்

இந்தப் பாடத்தில் நாம் இந்தியாவின் இயற்கை அமைப்புகளைப் பற்றி கற்போம். பின்வரும் பாடங்களான இந்தியாவின் காலநிலை, ஆறுகளும் நீர் வளங்களும், மக்கள்தொகை போன்றவற்றில் இயற்கை அமைப்புகளுடன் அவற்றை இணைத்து ஆராய்வோம். இந்த நூல் முழுவதும் படித்து முடிக்கும்வரை இந்த இயற்கை அமைப்புகளை நாம் அவ்வப்போது குறிப்பிற்காக பயன்படுத்தவேண்டியிருக்கும். முன் வகுப்புகளில் நீங்கள் கற்றறிந்த, ஆந்திரப்பிரதேசத்தின் இயற்கை அமைப்புகள் யாவை? உங்களுடைய அட்லாஸ் அல்லது சுவர் வரைபடத்தின் (wall map) துணைக்கொண்டு அவற்றை விளக்கவும். நீங்கள் மேற்கொண்டு கற்கும் போது உங்கள் வகுப்பிலுள்ள அட்லாஸ், சுவர் வரைபடம் மற்றும் உருவாக்கப்பட்ட முப்பரிமாண இயற்கை அமைப்புப் படங்களை (Relief map) பயன்படுத்தவும்.




*வரைபடம் 1.1 உலகப்படத்தில் இந்தியாவின் இருப்பிடம்*

## இருப்பிடம்

- மேலே உள்ள உலகப்படத்தைப் பார்த்து வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள கண்டங்களுடைய இருப்பிட குறிப்புடன் இந்தியாவின் இருப்பிடத்தைப் பற்றி சில வரிகளை எழுது.
- அட்சரேகை மற்றும் தீர்க்க ரேகைகள் ஓரிடம் அல்லது பகுதியின் இருப்பிடத்தை துல்லியமாக குறிப்பிடப் பயன்படுகின்றன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**அட்லாஸை பயன்படுத்தி பின்வரும் பத்தியில் உள்ள தவறுகளை திருத்துக.**

"இந்தியா பெரிய நிலப்பரப்பைக் கொண்ட நாடு. இது உலக உருண்டையில் தென் அரைக்கோளத்திலேயே முழுவதும் அமைந்துள்ளது. நாட்டின் நிலப்பகுதி 8° வடக்கு மற்றும் 50° வடக்கு தீர்க்க ரேகைகளுக்கிடையேயும் 68° தெற்கு மற்றும் 9° கிழக்கு அட்சரேகைகளுக்கு இடையேயும் அமைந்துள்ளது."

- நாம் ஏன் இந்திய தீபகற்பம் என்னும் சொல்லை அவ்வப்போது பயன்படுத்துகிறோம்?
- முதல் பக்கத்தில் உள்ள உலகப்படம் 1.1ஐ கவனித்து இந்தியா ஆர்க்டிக் வளையத்தில் அமைந்துள்ளது என கற்பனை செய். அப்போது உன் வாழ்க்கை எவ்வாறு வேறுபட்டிருக்கும் என்பதை கூறு.
- அட்லாஸ் புத்தகத்தில் இந்திரா முனையை கண்டறி. அதன் சிறப்பு என்ன?
- ஆந்திரப்பிரதேசம் ................ மற்றும் .................. வடக்கு அட்சரேகைகளுக்கும் மற்றும் .................... மற்றும் ....................கிழக்கு தீர்க்கரேகைகளுக்கும் இடையில் அமைந்துள்ளது.
- உங்கள் அட்லாஸ் புத்தகத்தில் தரப்பட்டுள்ள அளவுகளைப் பயன்படுத்தி குஜராத் மற்றும் ஒடிசா மாநிலங்களின் கடற்கரையின் நீளத்தை கணிக்கவும்.

இந்தியாவின் புவியியல் அமைப்பு பல்வேறு கால நிலைகளைக் கொண்டுள்ளது. இதனால் இது இந்தியாவில் பல்வேறு தாவர மற்றும் விலங்கினங்கள் மற்றும் பல்வேறு பயிர்களை வளர்க்க துணைபுரிகிறது. இதனுடைய நீண்ட கடற்கரையும் இந்தியப் பெருங்கடலில் இது அமைந்திருப்பதாலும் மீன்பிடித்தலுக்கும் உலக வாணிகத்திற்கும் துணைபுரிகிறது.

ஒன்பதாம் வகுப்பில் நீங்கள் அட்சரேகைகள் மற்றும் தீர்க்க ரேகைகளைப் பற்றியும் காலம் மற்றும் பயணத்தைக்குறித்தும் படித்திருப்பீர்கள். உங்கள் அட்லாஸ் புத்தகத்தில் இந்தியாவின் தீர்க்க ரேகை பரவலை ஆராயவும். இந்தியாவின் மையத்தில் செல்லும் திட்ட நேரத்தைக் கணிக்கும் தீர்க்க ரேகையான 82°30' அலகாபாத்திற்கு அருகே கடக்கிறது. இது இந்திய திட்டநேரத்தைக் (IST) குறிக்கும். மேலும் இது இங்கிலாந்தில் உள்ள கிரீனிச் திட்டநேரத்திற்கு (GMT) 5½ மணி நேரம் முன்னதாக இருக்கும்.

- படம் 1.2ஐப் பார்

இந்தியாவின் எல்லைகளைக் கண்டறிந்து அவற்றிற்கு வண்ணம் தீட்டு. படத்தில் தரப்பட்ட அளவுகளின் உதவியுடன் இந்தியா பங்களாதேஷ் நாட்டுடன் பகிர்ந்து கொள்ளும் மொத்த நில எல்லையைக் கண்டறி.

இவற்றில் எந்த புள்ளிவிவரம் அகமதாபாத் மற்றும் இம்பாலில் சூரிய உதயம் மற்றும் சூரியன் மறைவினை காட்டுகிறது? உன் காரணத்தை விளக்கு.

| நாள் | இருப்பிடம்_____ | | இருப்பிடம் _____ | |
|---|---|---|---|---|
| ஜனவரி | சூரியஉதயம் | சூரியன் மறைவு | சூரிய உதயம் | சூரியன் மறைவு |
| 5 | 05:59 | 16:37 | 07:20 | 18:05 |



*படம் 1.1 : திபெத் பீடபூமியிலிருந்து இமயமலையின் தோற்றம். மரங்கள் இல்லாமையை கவனிக்கவும்.*



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




படம் 1.2 : இந்தியா - வடக்கு-தெற்கு, கிழக்கு-மேற்கு நிலப்பரப்பு பரவல் மற்றும் திட்ட நண்பகல் ரேகை.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## புவியியல் பின்னணி

ஒன்பதாம் வகுப்பின் சமூக அறிவியல் நூலில் உள்ள பூமியின் மேலோடு நகர்வதைக் குறித்து மீண்டும் படி. இந்திய நிலப்பகுதியானது புவியியல் உருமாற்றங்கள் மற்றும் பிற செயல்முறைகளான சிதைவு, மண் அரிப்பு மற்றும் படிவு போன்றவற்றின் மூலம் ஏற்பட்ட கோண்ட்வானா நிலத்தின் பகுதியாகும். மில்லியன் கணக்கான ஆண்டுகளில் இச்செயல் முறைகளால் இன்று நாம் காணும் இயற்கை அமைப்புகளாக ஏற்பட்டும், மாற்றமடைந்தும் காணப்படுகின்றது.

உலகின் நில வடிவங்கள் அங்காரா (லாரேசியா) மற்றும் கோண்ட்வானா என்னும் இரண்டு மிகப்பெரிய நிலப்பகுதிகளிலிருந்து தோன்றின. இந்திய தீபகற்பமும் கோண்ட்வானா நிலத்தின் பகுதியே ஆகும். சுமார் 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் கோண்ட்வானா நிலம் துண்டுகளாக பிளக்கப்பட்டு தீபகற்ப இந்தியத் தட்டு வடகிழக்கு திசையை நோக்கி நகர்ந்து மிகப்பெரிய நிலப்பகுதியான யூரேசியத் தட்டுடன் (அங்காரா நிலம்) மோதிக் கொண்டது. இதனால் மில்லியன் கணக்கான ஆண்டுகளில் மடிப்புச் செயல்முறையால் தீவிரமான இறுக்க விசை கொண்ட மடிப்புமலைகள் ஏற்பட்டன. தற்போது காணப்படும் இமயமலையின் வடிவம் இச்செயல் முறையின் விளைவேயாகும்.

தீபகற்பப் பீடபூமியின் வடக்கு மூலைகள் உடைக்கப்பட்டு மிகப்பெரிய வடிநிலம் ஏற்பட வழிவகுக்கப்பட்டது. காலப்போக்கில், இவ்வடிநிலங்கள் வடக்கிலிருந்து பாய்ந்த இமயமலை நதிகள் மற்றும் தெற்கிலிருந்து தீபகற்ப நதிகளால் கொண்டு வரப்பட்ட படிவுகளால் நிரப்பப்பட்டன. இதனால் வடக்கின் மிகப்பரந்த தட்டையான வடக்குச் சமவெளிகள் உருவாக்கப்பட்டன. இந்திய நிலப்பகுதி மிகப்பெரிய நில அமைப்பு வேறுபாடுகளைக் காட்டுகிறது. தீபகற்பப் பீடபூமியானது பூமியின் புறப்பரப்பின்மீது மிகவும் பழமையான நிலப்பகுதிகளுள் ஒன்றாக விளங்குகிறது.

- வடஇந்தியச் சமவெளி உருவாக்கக் காரணமாய் இருந்த இமயமலை மற்றும் தீபகற்ப நதிகளைப் பட்டியலிடு.
- இமயமலை.............. மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் உருவானது. ஆனால் அதற்கு முன் வேட்டையாடி உணவை சேகரித்த ஆதிகால மனிதர்கள் பூமியின் மீது ................ மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றினர்.



*படம் 1.2 : செயற்கைக்கோளிலிருந்து படமாக்கப்பட்ட இமயமலை, வடக்குத் சமவெளி மற்றும் தார்பாலைவனம்.*



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## முக்கிய இயற்கை அமைப்புப் பிரிவுகள்

இந்திய நிலப் பகுதியின் இயற்கை அமைப்புப் பிரிவுகளை கீழ்காணும் குழுக்களாக பிரிக்கலாம்.

1. இமயமலைகள் 2. சிந்து கங்கை சமவெளி 3. தீபகற்ப பீடபூமி
4. கடலோரச் சமவெளிகள் 5. பாலைவனம் 6. தீவுகள்

படம் 1.2 மற்றும் உங்கள் பள்ளியில் உள்ள முப்பரிமாண இயற்கை அமைப்புப் படத்தையும் (relief map) பார். உங்கள் விரலைக் கொண்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களை வரைபடங்களில் கண்டறியவும்.

- தக்காண பீடபூமியின் சரிவின் திசையைக் கண்டறிய கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகள் செல்லும் பாதைகளை கண்டறியவும்.
- நிலவடிவங்கள், உயரங்கள் மற்றும் நாடுகளின் துணைக்கொண்டு பிரம்மபுத்திரா நதி பாயும் அனைத்து இடங்களையும் விவரி.

## இமயமலைகள்

இமயமலைத் தொடர்கள் மேற்கு-கிழக்கு திசைகளில் சுமார் 2400கி.மீ பரப்பளவில் ஒரு வளைவு போல் அமைந்துள்ளது. அவற்றின் அகலம் மேற்குப் பகுதியில் 500கி.மீ முதல் மைய மற்றும் கிழக்குப் பகுதிகளில் 200கி.மீ வரை வேறுபட்டு காணப்படுகிறது. இது மேற்குப் பகுதி அகன்று காணப்படுகிறது. சில பகுதிகளில் உயரத்திலும் வேறுபாடுகள் உள்ளன. இந்த மலைத்தொடர்கள் ஆழமான பள்ளத்தாக்குகளாலும் பரந்த பீடபூமிகளாலும் பிரிக்கப்பட்டுள்ளன.

வடக்கு உச்சிப்பகுதியில் உள்ள மலைத்தொடரை பெரும்இமயமலைகள் அல்லது ஹிமாத்ரி என்பர். இம்மலைத் தொடர் மிகவும் தொடர்ச்சியாகவும் கடல்மட்டத்திலிருந்து சுமார் 6100மீ உயரம் கொண்ட மலைச்சிகரங்களையும் கொண்டுள்ளது.

பெரும் இமயமலைத் தொடர் பனியையும் பனிக்கட்டிப் போர்வையையும் கொண்டுள்ளது. இங்கு நீங்கள் பனியாறுகளைக் காணலாம். பருவகால சுழற்சிகளால் ஏற்படும் பனிக்கட்டி திரட்சிகள், பனியாறுகளின் இயக்கம் மற்றும் உருகுதல் போன்றவை வற்றாத நதிகளுக்கு வளங்களாக உள்ளன. பெரும் இமயமலைகளின் தெற்கில் காணப்படும் மலைத்தொடரின் பகுதியை சிறிய இமயமலைகள் என்பர். இதுமிகவும் கரடுமுரடான நில அமைப்பாகும். இந்த மலைத்தொடர்கள் மிகவும் இறுக்கப்பட்ட பாறைகளைக் கொண்டுள்ளது. இவை 3700 முதல் 4500மீட்டர் வரை உயரம் கொண்டவை. பீர்பாஞ்சல் மற்றும் மகாபாரத மலைத்தொடர்கள் இப்பகுதியின் முக்கியமான மலைத் தொடர்களாகும்.

- உங்கள் வரைபட புத்தகத்தில் மூன்று மலைத்தொடர்களைக் குறிக்கவும்.
- முப்பரிமாண இயற்கையமைப்பு படத்தில் உயரமான சிகரங்கள் சிலவற்றைக் குறிக்கவும்.

சிறிய இமயமலைத் தொடர்கள், மிகவும் புகழ்மிக்க காஷ்மீர் பள்ளத்தாக்கினையும் இமாச்சலப்பிரதேசத்திலுள்ள காங்கிரா மற்றும் குளு பள்ளத்தாக்குகளையும் கொண்டுள்ளன. இப்பகுதி சிம்லா, முசோரி, நைனிடால், ராணிக்கேட், டார்ஜிலிங் போன்ற பல கோடை வாழிடங்களுக்குப் புகழ்பெற்று விளங்குகிறது. இப்பகுதியில் பசுமை மாறாக் காடுகள் உள்ளன.

- முப்பரிமாண இயற்கை அமைப்பு வரைபடங்கள் மற்றும் சுவர் வரைபடங்களில் மேலே குறிப்பிட்ட இடங்களை குறிக்கவும்.
- உங்கள் அட்லாஸ் புத்தகத்தில் கீழ்காணும் இடங்களை கண்டறி. சிம்லா, முசோரி, நைனிடால், டார்ஜிலிங் மற்றும் ராணிகேட்.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

*படம் 1.3 முதல் 1.6வரை : இந்தியாவிலிருந்து காணும் போது இமயமலையின் பல்வேறு காட்சிகள். அதை திபெத்திலிருந்து காணும் காட்சியான படம் 1.1 உடன் ஒப்பிடுக.*




கீழே உள்ள வரைபடம் இமயமலையில் வளரும் சில வகைத் தாவரங்களைக் காட்டுகிறது. உயரத்தின் அடிப்படையில் இம்மலை ஐந்து நிலைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. முக்கியமான சில மரவகைகள் இங்கு காட்டப்பட்டுள்ளன.







*1.3)* சிக்கிம் மாநிலத்தில் காணப்படும் குறுகிய செங்குத்து பள்ளத்தாக்கு.

*1.4)* இமயமலைகளின் மீதுள்ள மேட்டு நில விவசாய முறையையும் வடிகாலின் மீதுள்ள கூழாங்கற்களையும் கண்டறியவும்.

*1.5)* இமயமலைகளில் உள்ள பல்வேறு நிலைகளில் காணப்படும் தாவரங்களை வரையவும்.

*1.6)* மேகாலயாவில் உள்ள 'மாக்டாக்', 'டிம்பெப்' பள்ளத்தாக்கின் தோற்றம்.






Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இமயமலைகளின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள மலைத்தொடர்களை 'சிவாலிக்குகள்' என்பர். சிவாலிக்குகள் 10-50கி.மீ அகலத்தில் பரவியுள்ளன. அவற்றின் உயரம் 90 முதல் 1100மீ வரை மாறுபட்டு காணப்படுகிறது. இந்த மலைத்தொடர்கள் பல்வேறு பகுதிகளில் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றன. ஜம்மு பகுதியில் 'ஜம்மு குன்றுகள்' என்றும் அருணாச்சலப் பிரதேசத்தில் 'மிஷ்மி' குன்றுகள் என்றும், அசாமில் 'கச்சார்' என்றும் அழைக்கப்படுகின்றன. இப்பகுதியில் அடர்த்தியான சரளை மண்ணும், வண்டல் மண்ணும் காணப்படுகிறது. சிறு இமயமலைகளுக்கும் சிவாலிக்குகளுக்கும் இடையே உள்ள பள்ளத்தாக்குகள் 'மணற்குன்றுகள் (Duns)' என்று அழைக்கப்படுகின்றன. இவற்றுள் டேஹ்றாடூன், கோட்லி டூன் மற்றும் பாட்லி டூன் ஆகியவை முக்கியமான சில மணற்குன்றுகளாகும்.

பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு இமயமலையின் கிழக்கு எல்லையாக உள்ளது. அருணாச்சலப்பிரதேசத்தில் 'திஹாங்' பள்ளத்தாக்கிற்கு அப்பால் இமயமலைகள் தெற்குப் பகுதியில் கொண்டை ஊசிவளைவாக மாறி இந்தியாவின் கிழக்கு எல்லையாக செயல்பட்டு வடகிழக்கு மாநிலங்கள் வழியாக செல்கிறது. இம்மலைப்பிரிவுகளை 'பூர்வாஞ்சல்' என்பர். இது பெரும்பாலும் படிவமணற் கற்களைக் கொண்டுள்ளது. வட்டார வழக்கில் பூர்வாஞ்சல் மலைகள் 'பட்காய்' குன்றுகள், நாகாக்குன்றுகள், மணிப்பூரிக் குன்றுகள் காசி மற்றும் மிசோக் குன்றுகள் என்னும் பெயர்களில் வழங்கப்படுகின்றன.

- உங்கள் அட்லாஸ் புத்தகத்தின் இந்திய இயற்கை அமைப்பு வரைபடத்தில் கீழ்காணும் மலைத்தொடர்கள் உள்ள மாநிலங்களை அடையாளம் காண்க.

| குன்றுகள் | மாநிலம்/மாநிலங்கள் |
|---|---|
| பூர்வாஞ்சல் | |
| பட்காய் | |
| நாகாக் குன்றுகள் | |
| மணிப்பூரி குன்றுகள் | |

இமயமலைகளின் தோற்றத்தால் வானிலை பல்வேறு வழிகளில் பாதிக்கப்படுகிறது. மிகுந்த குளிர்காலங்களின் போது மத்திய ஆசியாவிலிருந்து வீசும் குளிர்காற்றுகளைத் தடுக்கும் அரண்களாக இவை செயல்படுகின்றன. கோடை கால மழை பெய்யவும், இந்தியாவின் மேற்குப் பகுதிக்கு அப்பாலுள்ள பகுதிகளில் பருவகாற்று வகை வானிலை ஏற்படவும் இமயமலைகள் காரணமாக விளங்குகின்றன. இமயமலைகள் இல்லாமல் போயிருந்தால் இப்பகுதி வறட்சியான பகுதியாக இருந்திருக்கும். இமயமலையில் தோன்றும் நதிகள் பனியாறுகளிலிருந்து நீரைப் பெறுவதால் வற்றாத நதிகளாக உள்ளன. மேலும் இந்த நதிகளிலிருந்து கொண்டுவரப்படும் வண்டல் மண்ணின் மிகுதியால் இங்குள்ள சமவெளிகள் வளமிக்கவையாக உள்ளன.

## சிந்து கங்கை சமவெளி

இமயமலை நதிகளான சிந்து, கங்கை மற்றும் பிரம்மபுத்திரா என்னும் மூன்று நதிகள் மற்றும் அவற்றின் கிளை நதிகளின் செயல்களால் வடக்கு பெரும் சமவெளி உருவானது. ஆரம்பத்தில் (சுமார் 20மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்) இமயமலையிலிருந்து பாய்ந்த இந்த நதிகளால் படிப்படியாக கொண்டுவரப்பட்ட வண்டல்மண் படிவுகளால் இச்சமவெளி ஆழம் குறைந்த வடிநிலமாக இருந்தது.

சிந்து கங்கைச் சமவெளிகள் முக்கிய மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது.

1) மேற்கு பகுதியானது இமய மலையிலிருந்து பாயும் சிந்து மற்றும் அதன் கிளை நதிகளான ஜீலம், சீனாப், ராவி, பியாஸ் மற்றும் சட்லெஜ் நதிகளால் உருவானது. சிந்து நதி வடிநிலத்தின் பெரும்பான்மையான பாகம் பாகிஸ்தானிலும் ஒரு சிறு பகுதி பஞ்சாப் மற்றும் ஹரியானா சமவெளிகளிலும் அமைந்துள்ளது. இப்பகுதியில் இருநதிகளின் ஆதிக்கத்தால் இந்த நதிஇடைச் சமவெளி (Doab)யில் வளமான நிலம் காணப்படுகிறது.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




2) மத்திய பகுதி கங்கை சமவெளி என்று அழைக்கப்படுகிறது. இது கர்கர் முதல் டீஸ்டா நதிவரை பரவியுள்ளது. இப்பகுதி முக்கியமாக உத்திரப்பிரதேசம், பீகார் மாநிலங்களிலும் ஹரியானா, ஜார்க்கண்ட் மற்றும் மேற்கு வங்காள மாநிலங்களின் சிலபகுதிகளிலும் பரவியுள்ளது. இங்கு கங்கை, யமுனை மற்றும் அவற்றின் கிளை நதிகளான சோன், கோசி போன்றவை பாய்கின்றன.

3) சமவெளியின் கிழக்குப் பகுதி பெரும்பாலும் அஸ்ஸாமின் பிரம்மபுத்திரா நதிப்பள்ளத்தாக்கில் காணப்படுகிறது. இந்த பகுதி பிரம்மபுத்திரா நதியால் உருவாக்கப்பட்டது.

இமயமலைகளிலிருந்து பாயும் நதிகள் 8 முதல் 16கி.மீ அகலமுள்ள குறுகிய வளையத்தில் சரளைக்கற்களையும் கூழாங்கற்களின் படிவங்களையும் சிவாலிக்குகளின் அடியிலுள்ள குன்றுகளில் படியச் செய்கின்றன. இதனை 'பாபர்' (bhabar) என்பர். பாபர் அதிக ஈரத் தன்மைகொண்டது. பாபருக்கு அடிபகுதியில் அதன் வழியாக சிறு நதிகளும் ஓடைகளும் பாய்கின்றன. இவை மீண்டும் தாழ்வானப் பகுதிகளில் தோன்றி 'தெராய்' என்னும் குறைந்த ஈரம் உடைய சதுப்புநிலத்தை உருவாக்குகிறது. இப்பகுதியில் அடர்த்தியான காடுகளும் பல்வேறு வகையான விலங்குகளும் உள்ளன. இருப்பினும் இந்தியப் பிரிவினையின் போது நடந்த குடிபெயர்ப்பு காரணமாக தெராய் மண்டலத்தின் பெரும் பகுதி சீர்படுத்தப்பட்டு தற்போது விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன. தெராய் பகுதியின் தெற்கு பாகத்தில் நுண்ணிய வண்டல்மண் சமவெளிகள் காணப்படுகின்றன.



*படம் 1.8 : அஸ்ஸாமின் பிரம்மபுத்திரா நதிப்பள்ளத்தாக்கின் கரையிலுள்ள ஒரு கிராமம்*



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## தீபகற்ப பீடபூமி

இந்தியாவின் பீடபூமியானது மூன்று பக்கங்களில் கடலால் சூழப்பட்டுள்ளதால் அதை தீபகற்பப் பீடபூமி என்று அழைப்பர். இது முக்கியமாக பழைய படிகப்பாறைகள், உறுதியான அக்னிப் பாறைகள் மற்றும் உருமாற்றுப் பாறைகளைக் கொண்டுள்ளது. இந்தியப் பீடபூமியில் அதிக அளவில் உலோக மற்றும் அலோகத் தாது வளங்கள் காணப்படுகின்றன. அது அகன்ற மற்றும் ஆழம் குறைந்த பள்ளத்தாக்குகளையும் வட்டமான குன்றுகளையும் கொண்டுள்ளது. பீடபூமியின் இடவமைப்பு கிழக்கு நோக்கி சற்று சாய்ந்து காணப்படுகிறது. மேற்கு மற்றும் கிழக்கு ஓரங்களில் மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சிமலைகள் உருவாகியுள்ளன. இப்பீடபூமியின் தென்கோடி முனை கன்னியாகுமாரி ஆகும்.

தீபகற்பப் பீடபூமி இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை மத்திய உயர்நிலங்கள் (மாள்வாப் பீடபூமி) மற்றும் தக்காணப் பீடபூமி ஆகும். இந்திய இயற்கையமைப்புப் படத்தில் கங்கைச் சமவெளியை ஒட்டிய அதன் தெற்குப் பகுதியிலும், நர்மதை நதிக்கு வடக்கிலும் மத்திய உயர்நிலங்களை நீங்கள் காணலாம். இதன் மேற்குப் பகுதியில் மாள்வாப் பீடபூமியும் கிழக்கில் சோட்டா நாக்பூர் பீடபூமியும் உள்ளன. கங்கைச் சமவெளியுடன் ஒப்பிடுகையில் இப்பீடபூமி வறண்டு காணப்படுகிறது. இங்கு வற்றாத நதிகள் இல்லை. இரண்டாம் பயிரிடுகைக்குத் தேவையான நீர்ப்பாசனத்திற்காக ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் நீர்த்தேக்கங்களின் மீது இப்பீடபூமி விவசாயிகள் ஆதாரப்பட்டுள்ளனர். மத்திய உயர்நிலங்களில் வடக்கு நோக்கிப் பாயும் நதிகளை அடையாளம் காண்க. சோட்டா நாக்பூர் பீடபூமி வளமான தாதுவளங்களைக் கொண்டுள்ளது.

நர்மதை நதியின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள தீபகற்பப் பீடபூமியின் பகுதி முக்கோண நிலப்பகுதியாக உள்ளதால் அதை தக்காணப்பீடபூமி என்று அழைப்பர் சாத்பூரா மலைத்தொடர் தக்காணப் பீடபூமியின் வடக்கு ஓரத்திலும், மகாதேவ் கைமூர் மலைத்தொடர் மற்றும் மைக்கால் மலைத்தொடரின் ஒருபகுதி கிழக்கு ஓரத்திலும் தோன்றுகின்றன. மேற்கு, கிழக்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் நீலகிரி மலைகள் இந்தியாவின் மேற்கு, கிழக்கு, தெற்கு எல்லைகளாக உள்ளன.

- உங்கள் அட்லாஸ் புத்தகத்தில் உள்ள இந்திய இயற்கையமைப்புப் படத்தில் கீழ்காணும் இடங்களைக் குறி. மாள்வாப்பீடபூமி, பந்தேல்கண்ட், பாகல் கண்ட், ராஜ்மகால் குன்றுகள் மற்றும் சோட்டா நாகப்பூர் பீடபூமி.
- ஒரு அட்லாஸ் புத்தகத்தின் உதவியுடன் மேலே குறிப்பிட்ட பீடபூமியின் ஒப்பு உயரங்களுடன் திபெத் பீடபூமியின் உயரத்தை ஒப்பிடு.




படம் 1.9 : தீபகற்ப பீடபூமியின் விளக்க வரைபடம்

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

மேற்கு தொடர்ச்சி மலைகள் மேற்கு கடற்கரைக்கு இணையாக அமைந்துள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலைகளின் அமைப்பு கடற்கரைச் சமவெளிகளின் நுழைவாயில்களாக உள்ள சில கணவாய்களுடன் தொடர்ச்சியாக அமைந்துள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலைகள் கிழக்குத் தொடர்ச்சி மலைகளை விட உயரமானவை. இவ்வாறு தக்காணப்பீடபூமிப் பகுதிக்கு மேற்கு-கிழக்கு சரிவு காணப்படுகிறது. (படம் 1.9) மேற்குத் தொடர்ச்சி மலைகள் 1600கி.மீ நீளம் வரை பரவியுள்ளது. நீலகிரி மலைகள் கூடலூர் அருகில் மேற்குத் தொடர்ச்சி மலைகளுடன் இணைகிறது. அவை சுமார் 2000மீ உயரம் வரை உள்ளது. புகழ்மிக்க மலைவாழிடமான ஊட்டி என்று வழங்கப்படும் உதகமண்டலம் நீலகிரி மலையில் அமைந்துள்ளது. இதில் மிக உயர்ந்த சிகரம் 'தொட்டபெட்டா' (2637மீட்டர்கள்) ஆகும். மேற்குத் தொடர்ச்சி மலைகளில் ஆனைமலை, பழனி (தமிழ்நாடு). ஆனைமலை மற்றும் ஏலக்காய் குன்றுகள் (கேரளா) போன்றவை அடங்கும். தென்னிந்தியாவில் ஆனைமலைக்குன்றுகளில் உள்ள ஆனைமுடி (2695மீ) மிக உயர்ந்த சிகரமாகும்.



வரைபடம் 1.3 தீபகற்ப பீடபூமி, தொடர்ச்சி மலைகள் மற்றும் குன்றுகள்

கிழக்கு தொடர்ச்சிமலைகள் வடக்கில் மகாநதிப் பள்ளத்தாக்கிலிருந்து தெற்கில் நீலகிரி குன்றுகள் வரை பரவியுள்ளன. இருப்பினும் இவை தொடர்ச்சியாக அமையவில்லை. மேற்குத் தொடர்ச்சி மலைகளில் தோன்றும் நதிகளான கோதாவரி மற்றும் கிருஷ்ணா போன்றவை பீடபூமியின் குறுக்கே வெட்டிக் கொண்டு வங்காள விரிகுடாவில் கலக்கின்றன. கிழக்குத்தொடர்ச்சி மலைகளின் சராசரி உயரம் 900மீ. கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் உயரமான சிகரம் ஆந்திராவில் சிந்தப் பள்ளியில் 1680மீ உயரத்துடன் காணப்படுகிறது. நல்லமலை, வெளிக்கொண்டா, பாலகொண்டா மற்றும் சேஷாச்சலம் போன்றவை கிழக்குத்தொடர்ச்சி மலைகளில் உள்ள சில குன்றுகளாகும். தீபகற்பப் பீடபூமியின் ஒரு குறிப்பிடப்பட்ட அம்சம் என்னவென்றால் இங்குள்ள கரிசல் மண்கள் எரிமலைச் செயற்பாட்டால் உருவானவை என்பதாகும்.

- இந்தியாவின் முப்பரிமாண இயற்கை அமைப்புக் படத்தைப் பார்த்து கிழக்கு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் ஒப்பு உயரங்களையும், திபெத் பீடபூமி மற்றும் இமயமலைச் சிகரங்களின் உயரங்களையும் ஒப்பிடு.


படம் 1.10 : மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள ஆனைமலைக் குன்றுகள்



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## தார்ப் பாலைவனம்

தார்ப்பாலைவனம் ஆரவல்லி மலைகளின் காற்று மோதாத மறு பக்கத்தில் அமைந்துள்ளது. இப்பகுதியில் ஆண்டு மழைப்பொழிவு 100 முதல் 150மி.மீ வரை வேறுபட்டு காணப்படுகிறது. இந்தப் பாலைவனம் அலை அலையாகச் செல்லும் மணற்சமவெளியையும் பாறை போன்ற புறத்தோற்றத்தையும் கொண்டுள்ளது. இது கிழக்கு பாகிஸ்தானின் பெரும்பகுதியை ஆக்கிரமித்துள்ளது. இங்கு வறண்ட வானிலை நிலவுவதால் மிகவும் குறைவான அளவில் தாவரங்கள் காணப்படுகின்றன. மழைக்காலத்தில் ஓடைகள் தோன்றி விரைவிலேயே மறைந்து விடுகின்றன. இப்பகுதியில் லூனி என்னும் ஒரே ஒரு நதி உள்ளது. இந்தவகை சிறிய வழிந்தோடும் நதிகள் ஏரிகளில் பாய்கிறது. ஆனால் அவை கடலை அடைவதில்லை.



படம் 1.11 தார்பாலைவனத்திலுள்ள சிலவீடுகள்

இந்திராகாந்தி கால்வாய் தார்பாலைவனத்தில் பாயும் மிகநீளமான கால்வாய் (650கி.மீ) ஆகும். இதனால் பாலை வனத்தின் பலஹெக்டேர் நிலங்கள் சாகுபடியின் கீழ் கொண்டுவரப்பட்டன.

## கடற்கரைச் சமவெளிகள்

தீபகற்பப் பீடபூமியின் தெற்குப்பகுதி மேற்கில் அரபிக்கடலை ஒட்டியும் கிழக்கில் வங்காள விரிகுடாவை ஒட்டியும் குறுகிய கடற்கரைச் சமவெளிகளால் சூழ்ந்துள்ளன. மேற்குக் கடற்கரை மேற்கில் ரான்ஆஃப் கச் வளைகுடாவில் தொடங்கி கன்னியாகுமரியில் முடிகிறது. இது கிழக்கு கடற்கரையை விட குறுகலானது. இந்தச் சமவெளி சமமற்ற பரப்பினைக் கொண்டும் குன்று நிலப்பகுதியால் பிளவுபடுத்தப்படுகிறது. இதுமூன்று பகுதிகளாக பிரிக்கப்படும்.

1) **கொங்கண் கடற்கரை** – இது வடக்குப் பகுதி ஆகும். இது மகாராஷ்டிரா மற்றும் கோவா மாநிலங்களைத் தொடுகிறது.

2) **கனரா கடற்கரை** – இது மத்தியப்பகுதி ஆகும். இதில் கர்நாடகத்தின் கடற்கரை சமவெளி அடங்கும்.

3) **மலபார் கடற்கரை** – இது தெற்குப் பகுதி ஆகும். இதில் கேரளத்தின் பெரும்பகுதி அடங்கும்.



படம் 1.12 சுந்தர்பன் சதுப்புநிலக்காடுகள்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

வங்காள விரிகுடா கிழக்குக் கடற்கரைச் சமவெளிகள் அகன்றும் மிகப்பெரிய நிலப்பரப்பையும் கொண்டுள்ளது. இது ஒரிஸ்ஸாவில் மகாநதி முதல் தமிழ்நாட்டில் காவேரி டெல்டா வரை பரவியுள்ளது. இச்சமவெளிகள் மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவேரி நதிகளால் உருவாக்கப்படுவதால் இவை வளமானதாக உள்ளன. இந்த கடற்கரைச் சமவெளிகள் ஒவ்வொரு வட்டாரங்களிலும் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றன. உத்கல் கடற்கரை (ஒடிசா) சர்கார் கடற்கரை (ஆந்திரப்பிரதேசம், கோரமண்டல கடற்கரை (தமிழ்நாடு) போன்றவையாகும்.

இந்திய இயற்கை வரைபடத்தில் டெல்டா பகுதிகளைக் குறிப்பிடு. அனைத்து டெல்டா பகுதிகளும் ஒரே உயரம் உள்ளனா? அல்லது வெவ்வேறு உயரமா? இவற்றை வடக்குச் சமவெளியுடன் எவ்வாறு ஒப்பிடுவாய்?

வடக்குச் சமவெளிகளைப் போன்று இந்த டெல்டாக்களிலும் விவசாயம் வளர்ச்சியடைந்துள்ளது. கடற்கரைச் சமவெளிகள் மீன் பிடித்தலுக்கும் உகந்த இடங்களாக உள்ளன. ஒடிசாவின் சில்கா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் கொல்லேரு மற்றும் புலிகட் போன்ற ஏரிகளும் கடற்கரைச் சமவெளிகளில் காணப்படும் முக்கிய அம்சங்களாகும்.

## தீவுகள்



நிகோபார்பறவை

இரண்டு வகையான தீவுக் கூட்டங்கள் உள்ளன. வங்காள விரிகுடாவில் அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளும் அரபிக்கடலில் இலட்சத்தீவுகளும் அமைந்துள்ளன. அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகள் மியான்மரின் மலையான அர்கான்யோமாவின் கடலில் மூழ்கியுள்ள மலைப்பகுதிகளின் உயர்த்தப்பட்ட பகுதிகளாகும். அந்தமான் மற்றும் நிகோபாரின் பகுதிகளான நார்கொண்டம் மற்றும் மலட்டுத் தீவுகள் எரிமலைச் செயல்களால் உருவானவை. நிகோபார் தீவில் காணப்படும் இந்தியாவின் இறுதி முனையான இந்திராமுனை 2004ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி என்னும் ஆழிப்பேரலையால் மூழ்கடிக்கப்பட்டது. இலட்சத்தீவுகள் பவழப் பாறைகளால் உருவாக்கப்பட்டவை. இதன் மொத்த புவியியல் பரப்பு 32ச.கி.மீ. இத்தீவுக் கூட்டம் பல்வகைக் கொண்ட தாவர மற்றும் விலங்குச் செல்வங்களுக்கு புகழ்பெற்றது.

இறுதியாக, இந்தியர்கள் வாழும் வடிவங்கள் பல்வேறு வேற்றுமைகளைக் கொண்டு விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இமயமலைகளிலிருந்து பாயும் பெரிய நதிகளால் சிலபகுதிகள் நீர்ப்பாசனப் படுத்தப்படுகின்றன. சில பகுதிகள் மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் அவற்றின் காடுகளிலிருந்து உற்பத்தியாகும் நதிகளாலும் நீர்ப்பாசனம் செய்யப்படுகின்றன. பல பகுதிகள் பள்ளத்தாக்குகளிலும், மற்றவை மலைகளிலும் அமைந்துள்ளன.



படம் 1.13 பவழப் பாறைகள்

**முக்கியச் சொற்கள்**

வற்றாத நதிகள், பவழப்பாறைகள், கடற்கரைச் சமவெளிகள், லாரேசியா, மணற்குன்று, அங்காரா நிலம், கோண்டுவானா நிலம், சிவாலிக், பூர்வாஞ்சல்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## உனது கற்றலை மேம்படுத்துக

1. சூரியோதயம் குஜராத்துடன் ஒப்பிடும்போது அருணாச்சலப் பிரதேசத்தில் இரண்டு மணி நேரம் முன்னதாகத் தோன்றுகிறது. இது எவ்வாறு நிகழ்கிறது?(AS1)
2. இமய மலைகள் தற்போதுள்ள இடத்தில் இல்லாமல் இருந்தால் இந்தியத்துணைக் கண்டத்தின் கால நிலைகள் எவ்வாறு இருந்திருக்கும்?(AS1)
3. இந்தியாவின் முக்கிய இயற்கைப் பிரிவுகள் யாவை? இமயமலைப் பகுதியின் இயற்கை அமைப்பை தீபகற்பப் பீடபூமியின் இயற்கை அமைப்புடன் வேறுபடுத்திக் கூறு.(AS1)
4. இந்திய விவசாயத்தின் மீது இமயமலைகளின் தாக்கம் என்ன?(AS1)
5. சிந்து கங்கை சமவெளிகளில் மக்கள்தொகை அடர்த்தி அதிகமாக இருப்பதற்கான காரணங்களைக் கண்டறி.(AS1)
6. இந்திய புறவரிப் படத்தில் கீழ்காண்பனவற்றைக் காட்டு(AS5)
   (i) மலைகள் மற்றும் குன்றுத் தொடர்கள் காரகோரம், ஜஸ்கர், பட்காய்பூம், ஜைத்தியா, விந்தியமலைத்தொடர், ஆரவல்லி, ஏலக்காய் குன்றுகள்.
   (ii) சிகரங்கள் – K2, கஞ்சன்ஜங்கா, நங்கபர்வதம் மற்றும் ஆனைமுடி
   (iii) பீடபூமிகள் – சோட்டா நாக்பூர், மற்றும் மாள்வா
   (iv) இந்தியாவின் தார்ப் பாலைவனம், மேற்குத் தொடர்ச்சி மலைகள், இலட்சத்தீவுகள்
7. அட்லாஸ் புத்தகத்தை பயன்படுத்தி கீழ்காண்பனவற்றை அடையாளம் காண்.(AS5)
   (i) எரிமலை வெடிப்பால் ஏற்பட்ட தீவுகள்.
   (ii) இந்திய துணைக் கண்டத்தின் அண்டை நாடுகள்.
   (iii) கடகரேகை செல்லும் மாநிலங்கள்.
   (iv) இந்தியாவின் வடக்கின் இறுதியில் உள்ள அட்சரேகையின் டிகிரி.
   (v) இந்தியாவின் தெற்கு எல்லையில் உள்ள இறுதி அட்சரேகையின் டிகிரி.
   (vi) கிழக்கு மற்றும் மேற்கு எல்லையில் உள்ள தீர்க்க ரேகைகளின் டிகிரிகள்.
   (vii) மூன்று கடல்களின் ஓரத்தில் அமைந்துள்ள இடம்.
   (viii) இந்தியாவையும் இலங்கையையும் பிரிக்கும் ஜலசந்தி
   (ix) இந்தியாவின் யூனியன் பிரதேசங்கள்.
   (x) இமயமலை படர்ந்து காணப்படும் மாநிலங்கள்
8. கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரைச் சமவெளிகளின் ஒற்றுமை அல்லது வேற்றுமைகள் யாவை?(AS1)
9. சமவெளிப் பகுதிகளைப் போன்று இந்தியாவின் பீடபூமிப்பகுதிகள் விவசாயத்திற்கு துணைபுரிவதில்லை. இதற்கான காரணங்கள் யாவை?(AS1)
10. இமயமலைகள், தீவுகள் மற்றும் கடலோர சமவெளிகள் குறித்து படித்து விவரமான பட்டியலை தயாரி.(AS3)
11. “இந்தியாவின் வளர்ச்சியில் இமயமலைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.” இது குறித்து உன் கருத்தை எழுது.(AS2)

## செயல்திட்டம்

இயற்கையமைப்பு படத்தையும் உன் அட்லாஸ் புத்தகத்தில் உள்ள இயற்கை வரைபடங்களையும் பயன்படுத்தி இந்தியாவின் மாதிரியை தரையின்மீது களிமண்/மணலைக் கொண்டு உருவாக்கு. பல்வேறு இயற்கை அமைப்புகளின் வகைகளைக் குறிப்பிட பல்வேறு வகையான மணல்/மண்களை பயன்படுத்து. இடங்களின் உயரங்கள் சரியான விகிதத்தில் உள்ளனவா என்றும் நதிகள் குறிக்கப்பட்டுள்ளனவா என்றும் உறுதிப்படுத்து. உன் அட்லாஸ் புத்தகத்தில் இயற்கைத் தாவரங்களின் படத்தைப் பார். அவற்றை அலங்கரிக்க இலைகளையும் புற்களையும் பயன்படுத்தி முயற்சி செய். பிறகு, அவற்றுடன் இந்தியாவின் பிற அம்சங்களையும் இணைக்கலாம்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்
2

# வளர்ச்சிக் கொள்கைகள்

நம்முடைய மனதில், நாம் எதை செய்ய விரும்புகிறோம், நாம் எவ்வாறு வாழவிரும்புகிறோம் என்பன குறித்து விருப்பங்கள் கொண்டிருக்கிறோம். அவ்வாறே, ஒரு நாடு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை குறித்தும் கருத்துக்கள் கொண்டிருப்போம். நமக்கு தேவைப்படும் அத்தியாவசிய பொருட்கள் யாவை? வாழ்க்கை நிலைமைகள் அனைவருக்கும் சிறந்ததாக இருக்குமா? அதிக சமத்துவம் இருக்குமா? வளர்ச்சி என்பது இது போன்ற வினாக்களை சிந்தித்தல், இந்த இலட்சியங்களை சாதிக்க, பின்பற்ற வேண்டிய வழிமுறைகள், செய்ய வேண்டிய செயல்பாடுகள் முதலியவற்றோடு தொடர்புடையது. இது ஒரு கிக்கலான பணி. இந்த பாடத்தில் வளர்ச்சி குறித்து புரிந்துகொள்ள துவங்குகிறோம்.



படம் 2.1 : நான் இல்லாமல் அவர்களால் முன்னேற முடியாது. இந்த அமைப்பில் என்னால் முன்னேற முடியாது.

### வேறுபட்ட மக்கள் நலன் மற்றும் வேறுபட்ட இலக்குகளை அடைய வளர்ச்சி அளிக்கும் வாக்குறுதி என்ன?

அட்டவணை 2.1ல் பலதரப்பட்ட மக்கள் வளர்ச்சி குறித்து என்ன கருதுகின்றனர் என்பதை குறித்து கற்பனை செய்வோம். அவர்களின் எதிர்கால விருப்பங்கள் யாவை? அட்டவணையில் சில நிரப்பப்படவில்லை. அவற்றை நிரப்புக. அட்டவணையில் தரப்பட்டுள்ளவற்றோடு கூடுதலாக வேறு ஏதாவது சமூக பிரிவினரையும் சேர்க்கலாம்.

**அட்டவணை 2.1 : பலவகைப்பட்ட மக்களின் வளர்ச்சி இலக்குகள்**

| நபர்களின் வகைப்பாடு | வளர்ச்சி இலக்குகள்/எதிர்கால விருப்பங்கள் |
|---|---|
| நிலமற்ற கிராம தொழிலாளிகள் | அதிகமான வேலைநாட்கள் மற்றும் மேலான ஊதியம், வழங்குதல், உள்ளூர் பள்ளிக் குழந்தைகளுக்கு கல்வி வழங்குதல் போன்ற சமூக வேறுபாடுகள் இல்லை. அவர்களும் கிராமங்களில் தலைவர்கள் ஆக முடியும். |
| செல்வந்த விவசாயிகள் | இவர்களின் பயிர்களுக்கு உயர் ஆதரவு விலை அளித்தல், கடின உழைப்பு மற்றும் மலிவான தொழிலாளர்கள் கிடைத்தல் மூலம் நிச்சயமான உயர்வருவாய் ஈட்டுதல். அவர்களின் குழந்தைகளை வெளிநாடுகளில் நிரந்தரமாக தங்கச்செய்தல். |



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

| | |
|---|---|
| மழையை மட்டும் நம்பி பயிர்களை விளைவித்திடும் விவசாயிகள் | |
| நிலத்தை சொந்தமாகக் கொண்டுள்ள குடும்பத்தை சேர்ந்த கிராமப்பெண் | |
| நகர்புற வேலையில்லாத இளைஞன் | |
| நகர்புற குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிறுவன் | |
| நகர்புற செல்வந்த குடும்பத்தை சேர்ந்த ஒரு சிறுமி | அவள் தன் சகோதரனுக்கு சமமான சுதந்திரம் பெறுகிறாள். தன் வாழ்வில் என்ன செய்யவேண்டும் என்பதை முடிவு செய்கிறாள். அவள் தன் படிப்பை வெளிநாட்டில் தொடர விரும்புகிறாள். |
| சுரங்க வேலை செய்யும் ஒரு பழங்குடி இன மனிதன் | |
| கடலோர பகுதியை சேர்ந்த மீனவ சமுதாயத்தை சேர்ந்த நபர். | |
| | |

மேற்காணும் அட்டவணை 2.1ஐ நிரப்பிய பிறகு, அதை இப்போது நாம் பரிசீலிப்போம். சமுதாயத்தில் உள்ள எல்லா நபர்களும் வளர்ச்சி குறித்து ஒரே மாதிரியான எண்ணம் கொண்டுள்ளனரா? அவர்களுக்கு மிகவும் முக்கியமானவையாக உள்ளனவோ, அவற்றையே கோருகின்றனர். அதாவது எவை அவர்களின் எதிர்கால இலட்சியங்கள் அல்லது விருப்பங்களை நிறைவேற்றுகின்றனவோ அவற்றை எதிர்பார்க்கின்றனர். சில சமயங்களில் இரண்டு நபர்கள் அல்லது மனித குழுக்கள் எதிர்மாறான விருப்பங்களை கொண்டு, வசதிகளை கோருவர். ஒரு சிறுமி தன் சகோதரனுக்கு சமமான சுதந்திரம் மற்றும் வாய்ப்புகள் இருக்கவேண்டும் என்றும் வீட்டு வேலைகளை தன்னுடன் பகிர்ந்து செய்திட வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறாள். ஆனால் அதை அவனது சகோதரன் விரும்பாமல் போகலாம். அதைப் போலவே, தொழிலதிபர்கள் அதிக மின்சாரம் பெற, அதிகமான அணைக்கட்டுகள் தேவை என விரும்புவர். ஆனால் அவ்வாறு செய்தால், பெருமளவு நிலங்கள் மூழ்கிவிடும். பழங்குடி மக்கள் போன்றோரின் வாழ்க்கை இடப்பெயர்ப்புகளால் பாதிப்பிற்கு உள்ளாகும். எனவே, அவர்கள் எதிர்ப்பு தெரிவிப்பர். தங்களின் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய சிறிய தடுப்பு அணைகள் அல்லது ஏரிகள் தேவை என விரும்புவர்.




படம் 2.2 கால அளவுக்கோல் கொண்டு மனித வரலாற்றை நினைத்து பார்த்தால் நாம் எவ்வாறு மனித வளர்ச்சியை புரிந்துகொள்ளமுடியும்? வேட்டையாடி உணவு சேகரிப்பவர்களாக இருந்த ஆண்டுகள் (2,00,000 ஆண்டுகள்) நவீன தொழிற்சாலைகள் நிறுவி வளர்ந்த ஆண்டுகள் (400 ஆண்டுகள்) இவர்களில் யார் வளர்ச்சியடைந்த மனிதர்கள்?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**யாருடைய வளர்ச்சி**



படம் 2.3 : அணுசக்தி தயாரிப்பிற்கு எதிராக மக்களின் போராட்டம்

வளர்ச்சி என்பது எவற்றை உள்ளடக்கியது என்பது குறித்து வேறுபாடுகள் உடையதாக இருக்கும் போது, நிச்சயமாக வளர்ச்சிக்கான முறைகள் குறித்தும் முரண்பாடான கருத்துகள் இருக்கும். தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கூடங்குளம் அணுமின்திட்டத்திற்கு எதிராக நடந்து வரும் எதிர்ப்பு போராட்டம் வளர்ச்சி குறித்த கருத்து முரண்பாட்டை சேர்ந்ததாகும். இந்திய அரசாங்கம், இந்த அமைதியான கடலோர மீனவ மக்கள் வாழும் நகரத்தில் அணு மின் நிலையத்தை நிறுவியது. நாட்டில் விரைந்து வளர்ந்து வரும் மின்சார தேவையை ஈடுகட்ட அணு மின்சாரத்தை தயாரிப்பது இதன் நோக்கம். இப்பகுதி மக்கள் தங்களின் உயிர் மற்றும் தொழில் பாதுகாப்பை கருதி இத்திட்டத்தை எதிர்த்து போராட்டம் நடத்துகின்றனர். நீண்ட போராட்டம் தொடர்ந்தது. அறிவியல் அறிஞர்கள், சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள், சமூக ஆர்வலர்கள் இத்திட்டம் குறித்து குறை கூறியவர்கள் ஆகியோர் மக்கள் பக்கம் நின்றனர். மத்திய அரசிற்கு அனுப்பப்பட்ட எதிர்ப்பு கடிதங்களில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. "அணு சக்தியால் அளவற்ற மின்சார சக்தி உற்பத்தி மட்டுமல்ல நினைத்து பார்க்க முடியாத அளவு அழிவையும் எதிர்நோக்கி இருக்கவேண்டியுள்ளது என்பதை உங்களால் ஏற்கமுடியவில்லை அல்லது ஏற்கமறுக்கிறீர்கள். நாங்கள் எங்களுடைய கடலோரம் மற்றும் நாடு, கதிரியக்க அழிவில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறோம். இந்த அணு மின் திட்டத்தை நிறுத்துங்கள். புதுப்பிக்க கூடிய மின் உற்பத்தி முறையை இதற்கு மாற்று ஏற்பாடாக பின்பற்றுங்கள்". இதற்கு மத்திய அரசு தன் பதிலில் "கூடங்குளம் அணு மின் நிலையம் எல்லா பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது", எனக்கூறி எதிர்ப்புகள் இருப்பினும், அணு மின் திட்டத்தை தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

எனவே, மேற்கண்ட விவாதத்தில் இருந்து இரண்டு கருத்துக்கள் தெளிவாக தெரிகின்றன.

(1) வேறுபட்ட நபர்கள், வேறுபட்ட வளர்ச்சி இலட்சியங்களை கொண்டிருப்பர்.

(2) ஒரு பிரிவினருக்கு வளர்ச்சி என்பது, வேறொரு பிரிவினருக்கு வளர்ச்சி அற்றதாகவும் உள்ளது.

- இந்த செய்தித்தாள் அறிக்கையை படியுங்கள்

ஒரு கப்பல் 500 டன்கள் எடையுள்ள நச்சுத்தன்மை வாய்ந்த திரவ கழிவுகளை நகரத்தின் திறந்த வெளியிலும், சுற்றுப்புற கடலிலும் கொட்டி குவித்தது. இது ஆப்பிரிக்க நாடான ஐவரி கோஸ்ட் நாட்டின் அபிட்ஜான் என்னும் நகரில் நிகழ்ந்தது. அதிக நச்சுத்தன்மை கொண்ட அக்கழிவில் இருந்து எழும்பிய புகை, வாந்தியெடுக்க வைக்கும் அளவிலான துர்நாற்றத்தையும், தோல் அரிப்பையும், மயக்கத்தையும், வயிற்று போக்கையும் உண்டாக்கியது. ஒரு மாதத்திற்கு பிறகு ஏழு நபர்கள் இறந்தனர். இருபது பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். விஷத்தன்மை அறிகுறிகள் கண்டறியப்பட்ட இருபத்தாறாயிரம் பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. பெட்ரோல் மற்றும் உலோகங்கள் கையாளும் ஒரு பன்னாட்டு வணிக நிறுவனம், ஐவரி கோஸ்டில் உள்ள உள்நாட்டு நிறுவனம் ஒன்றை, தனது கப்பலில் இருந்து விஷக் கழிவுகளை அகற்றிட, ஒப்பந்தம் செய்திருந்தது. (இந்து செய்தித்தாளில் செப்டம்பர் 16, 2006ல் வைஜ் நரவாணி, என்பவர் எழுதிய கட்டுரையில் இருந்து பெறப்பட்டது)



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இப்போது கீழ்காணும் வினாக்களுக்கு விடையளி :

- எப்பிரிவு மக்கள் பயனடைந்தனர்? யார் பயனடையவில்லை?
- இந்நாட்டின் வளர்ச்சிக்கான இலக்கு எதுவாக இருக்கவேண்டும்?
- உன்னுடைய கிராமம்/நகரம்/பகுதியின் வளர்ச்சிக்கான இலக்குகள் எவை?
- அணு மின்திட்ட நிலையங்கள் உள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்கும், மத்திய அரசாங்கத்திற்கும் இடையே உள்ள முரண்பாடான அம்சங்கள் யாவை?
- வளர்ச்சி திட்டங்கள்/கொள்கைகள் குறித்து விவாதங்கள் நிலவுவது உனக்கு தெரியுமா? அவை குறித்து இருதரப்பு வாதங்களை கண்டறியவும்.

## வருவாய் மற்றும் இதர இலக்குகள்

நீங்கள் அட்டவணை 2.1ஐ மீண்டும் கவனித்து பார்த்தால், ஒரு பொதுவான விஷயத்தை காணமுடியும். மக்கள் விரும்புவதெல்லாம் முறையான வேலை, மேலான ஊதியங்கள், விளைவிக்கும் பயிர்களுக்கும் அல்லது தயாரிக்கும் இதர பொருட்களுக்கும் கணிசமான விலை பெறுதல் போன்றவையாகும். அதாவது அவர்கள் அதிக வருவாய் பெற விரும்புகின்றனர்.

மக்கள் அதிக வருவாயை விரும்புவதுடன், ஏதோ ஒரு விதத்தில் சமமாக நடத்தப்படுதல், சுதந்திரம், பாதுகாப்பு மற்றும் மற்றவரால் மதிக்கப்படுதல் போன்றவற்றையும் பெறவிரும்புகின்றனர். மக்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதை எதிர்க்கின்றனர். இவை அனைத்தும் வாழ்வின் முக்கியமான இலக்குகளாகும். சில சமயங்களில் இவை அதிக வருவாய் அல்லது நுகர்வை விட மிகவும் முக்கியமானவை. ஏனெனில் நீங்கள் உயிர்வாழ பொருட்கள் மட்டும்தான் தேவை என்பதால், பணம் அல்லது பணத்தால் வாங்கப்படும் பொருட்கள் போன்றவை, நம் வாழ்க்கையை சார்ந்துள்ள ஒரு காரணியாகும். ஆனால், நம் வாழ்க்கையின் தரம், மேலே குறிப்பிடப்பட்ட பொருட்கள் அல்லாதவற்றின் மீதும் சார்ந்துள்ளது. இது குறித்து உங்களுக்கு தெளிவான கருத்து ஏற்படவில்லை எனில், உங்கள் வாழ்க்கையில், உங்கள் நண்பர்களின் பங்கு குறித்து நினைத்துப்பாருங்கள். அவர்களின் நட்பை நீங்கள் விரும்புவீர்கள். அது போலவே, பலவற்றை சுலபமாக அளவிட்டு கூற இயலாது. எனினும் அவை நம் வாழ்விற்கு அதிகளவு பயனை தரக்கூடியவை. இவை பல சமயங்களில் அசட்டை செய்யப்படுகின்றன. எனவே, எவற்றையெல்லாம் அளவிட்டு மதிப்பிட முடியாதோ, அவை எல்லாம் முக்கியமானவை அல்ல என்று முடிவு செய்வது தவறாகும்.




மற்றொரு எடுத்துக்காட்டையும் நினைத்துப் பாருங்கள். வெகுதொலைவான இடத்தில் உங்களுக்கு வேலைகிடைத்தால், வருவாய் மட்டுமின்றி பல்வேறு காரணிகளைப் பற்றியும் சிந்திப்பீர்கள். உங்கள் குடும்பத்தாருக்கு வசதிகள், வேலை செய்யும் சூழ்நிலை அல்லது கற்பதற்கான வாய்ப்பு



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

முதலியவை அவற்றில் இருக்கலாம். மற்றொரு விஷயத்தில், நீ பெறும் வேலை குறைவான சம்பளத்தை தரலாம். ஆனால், நிலையான வேலையையும், வேலைப்பாதுகாப்பு உணர்வையும் தருவதாக இருக்கலாம். வேறொரு வேலை, அதிக சம்பளத்தை தருவதாக இருக்கும். ஆனால் வேலை பாதுகாப்பை தருவதாக இருக்காது. உங்கள் குடும்பத்தாரோடு பகிர்ந்து கொள்ள போதிய நேரத்தை தராது. இது உங்கள் மனதில் பாதுகாப்பு உணர்வு மற்றும் சுதந்திர உணர்வை குறைத்திடும்.

அது போலவே, வளர்ச்சியினை மக்கள் பல்வேறு இலக்குகளின் கலவையாக கருதுகின்றனர். பெண்கள் ஊதியம் செலுத்தப்படும் வேலையில் ஈடுபடும் போது குடும்ப வருவாய் அதிகரிக்கும். வீட்டில் மற்றும் சமுதாயத்தில் அவர்களின் கௌரவம் அதிகரிக்கும். பெண்கள் மீது மரியாதை இருக்கும் போது, அவர்களுடன் வேலைகளை பகிர்ந்து கொள்வது அதிகமாக இருக்கும். பெண்கள் வெளியே சென்று வேலை செய்யும் போது, பாதுகாப்பான மற்றும் ஒத்துழைப்பான சூழ்நிலை இருந்தால், பெண்கள் அதிக அளவில் வேலைகள் செய்ய, வியாபாரங்கள் நடத்த முன் வருவர்.

எனவே, மக்களின் வளர்ச்சிக்கான இலக்குகளாக தரமான வருவாய் மட்டுமல்ல வாழ்வின் முக்கிய இதர அம்சங்களும் அடங்கும்.

- வளர்ச்சிக் குறித்து பல்வேறு நபர்கள் பல்வேறு எண்ணங்களை கொண்டிருப்பதேன்? கீழ்கண்ட விவரங்களில் எது மிகவும் முக்கியமானது? ஏன்?
  a. ஏனெனில், மக்கள் வேறுபட்ட எண்ணமுடையவர்கள்.
  b. ஏனெனில், நபர்களின் வாழ்க்கைச் சூழ்நிலைகள் வேறுபட்டவை
- கீழ்காணும் இரண்டு கூற்றுகளும் ஒரே மாதிரியான அர்த்தத்தை தருகின்றனவா? உன் பதிலை நிரூபி.
  a. மக்கள் மாறுபட்ட வளர்ச்சி இலக்குகளை கொண்டிருக்கின்றனர்.
  b. மக்கள் முரண்பாடான வளர்ச்சி இலக்குகளை கொண்டிருக்கின்றனர்.
- மேற்கண்ட பாடப்பிரிவின் முக்கிய கருத்துக்கள் சிலவற்றை உன்னுடைய சொந்த வாக்கியங்களில் விவரி.

## வெவ்வேறு நாடுகளை அல்லது மாநிலங்களை எவ்வாறு ஒப்பிடுவது?

நாம் பல்வேறு அம்சங்களை ஒப்பிடும் போது, அவற்றில் ஒற்றுமைகளும், வேற்றுமைகளும் இருப்பதை காணலாம். எந்த அம்சங்களை நாம் ஒப்பிட்டுப் பார்க்கின்றோம்? வகுப்பறையில் மாணவர்களையே நாம் எடுத்துக்கொள்வோம். மாணவர்களை நாம் எவ்வாறு ஒப்பிடுகிறோம். அவர்கள் உயரம், உடல்நலம், திறமைகள் மற்றும் ஆர்வங்கள் போன்றவற்றால் வேறுபட்டு உள்ளனர். உடல் ஆரோக்கியமுள்ள மாணவன் மிகவும் நன்றாக படிப்பவனாக இருக்கிறான் எனக்கூறமுடியாது. மிகுந்த அறிவுள்ள மாணவன் அனைவருடனும் நட்புடன் பழகுபவனாக இருக்கமாட்டான்.

எனவே, நாம் மாணவர்களை எவ்வாறு ஒப்பிட்டு பார்க்க வேண்டும்? ஒப்பிட்டு பார்ப்பதன் நோக்கத்தை பொருத்து, நாம் பயன்படுத்தும் அளவுகோலாக இருக்கும். ஒரு விளையாட்டு வீரனை, ஒரு விவாதிக்கும் குழுவை, ஒரு இசைக்குழுவை, ஒரு சுற்றுலா நிர்வாகக் குழுவை தேர்ந்தெடுக்க, நாம் வெவ்வேறான அளவுகோல்களை பயன்படுத்துகிறோம். மேலும் சில நோக்கங்களுக்காக, மாணவர்களின் பன்முக வளர்ச்சிக்காக சிறப்பு திட்ட அளவுகோலை தேர்ந்தெடுக்கிறோம். இதை நாம் எவ்வாறு செய்கிறோம்?

வழக்கமாக நாம் நபர்களின் ஒன்று அல்லது அதற்கும் மேலான முக்கியமான குணாதிசயங்களை எடுத்துக்கொண்டு அவற்றை ஆதாரமாக கொண்டு ஒப்பிட்டுப் பார்க்கிறோம். நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்க, அவற்றில் வருவாய் மிகவும் முக்கியமான அம்சங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. மிகவும் அதிக வருவாய் உடைய நாடுகள்,



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

குறைவான வருவாய் உடைய நாடுகளை விட அதிக வளர்ச்சியடைந்த நாடுகளாகும். அதிக வருவாய் என்பது மனிதர்களுக்கு தேவையானவை அனைத்தும் அதிகமாக பெற்றிருத்தல் என்று பொருள் தரும்படியான விதத்தில் இவ்வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் எவற்றை விரும்புகின்றனரோ, கட்டாயமாக பெற்றிருக்க நிலைக்கின்றனரோ, அவற்றையெல்லாம் அதிக வருவாயால் அவர்களால் பெறமுடிகிறது. எனவே, அதிகப்படியான வருவாய் ஈட்டுதல் என்பது முக்கியமான இலக்கு என கருதப்படுகிறது.

ஒரு நாட்டின் வருமானம் என்பது என்ன? பொதுவாக ஒரு நாட்டில் வாழும் எல்லா மக்களின் வருவாயை, அந்நாட்டின் வருமானம் என்பர். இது ஒரு நாட்டின் மொத்த வருவாயை காட்டுகிறது.

இருப்பினும், நாடுகளிடையே ஒப்பிட்டு பார்த்திட, அவற்றின் தேசிய வருமானம் பயனுள்ள அளவீடு அல்ல. நாடுகள் வேறுபட்ட மக்கள் தொகையை கொண்டிருப்பதால், அவற்றின் தேசிய வருவாய்களை ஒப்பிடுவதால் மனிதன் சராசரியாக எவ்வளவு வருமானம் பெறுகிறான்? ஒரு நாட்டின் மக்கள், இதர நாட்டு மக்களை விட பணக்காரர்களா? என்பதை கூறஇயலாது. எனவே, நாம் சராசரி வருவாயை ஒப்பிடுகிறோம். நாட்டின் மொத்த வருவாயை, மக்கள் தொகையால் வகுத்தால் கிடைப்பதே சராசரி வருவாய். இதனை தலைசரி வருமானம் (Percapital Income) என்றும் அழைப்பர்.

உலக நாடுகளை வகைப்படுத்த, உலக வங்கி தயாரித்த உலக வளர்ச்சி அறிக்கையில் இந்த அளவுகோல் பயன்படுத்தப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டில் 12,055 அமெரிக்க டாலர்கள் மற்றும் அதற்கும் மேல் தலைசரி வருவாய் கொண்ட நாடுகள் உயர் வருவாய் (அல்லது) பணக்கார நாடுகளாக கருதப்பட்டன. 995 டாலர்கள் அல்லது அதற்கு குறைவான தலைசரி வருவாய் கொண்டவற்றை 2017-ல் குறைந்த வருவாய் உடைய நாடுகள் எனப்பட்டன. சில ஆண்டுகள் முன்பு வரை, இந்தியா குறைந்த வருவாய் கொண்ட நாடுகள் வகையில் இருந்தது. தற்போது நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளின் வகையில் உள்ளது. பல்வேறு நாடுகளின் தலைசரி வருவாயை விட, இந்தியாவின் தலைசரி வருவாய் விரைவாக உயர்ந்ததால், அதன் நிலை மேம்பட்டுள்ளது. அடுத்து வரும் பாடத்தில் நாம் இந்திய மக்களின் வருவாயில் ஏற்பட்ட வளர்ச்சி குறித்து மேலும் விவரமாக படிக்கப் போகிறோம்.

மேற்கு ஆசிய நாடுகள் மற்றும் சில இதர சிறுநாடுகள் தவிர மீதமுள்ள பணக்கார நாடுகள் பொதுவாகவே, வளர்ச்சியடைந்த நாடுகள் என அழைக்கப்படுகின்றன. சராசரி வருவாயை ஒப்பிட்டு அறிய பயனுள்ளதாக இருப்பினும், அவை ஏற்றத்தாழ்வுகளை மறைத்து விடுகின்றன.

எடுத்துக்காட்டாக, A மற்றும் B நாடுகளை எடுத்துக்கொண்டு ஒப்பிடுவோம். எளிமையாக இருக்கவேண்டி, ஒவ்வொன்றிலும் ஐந்து குடிமக்களின் வருவாயை கணக்கில் கொள்வோம். அட்டவணை 2.2ல் தரப்பட்டுள்ள விவரங்கள் படி இருநாடுகளின் சராசரி வருவாயை கணக்கிடுக.

அட்டவணை 2.2 இரண்டு நாடுகளின் ஒப்பீட்டு அளவு

| நாடுகள் | 2001ல் குடிமக்களின் மாதாந்திர வருவாய் (ரூபாய்களில்) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | I | II | III | IV | V | சராசரி |
| நாடு A | 9500 | 10500 | 9800 | 10000 | 10200 | |
| நாடு B | 500 | 500 | 500 | 500 | 48000 | |



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இவ்விரண்டு நாடுகளில் ஏதேனும் ஒன்றில் வாழ்ந்தால், சம மகிழ்ச்சியுடையவர்களாக இருப்பீர்களா? இவை இரண்டும் சமமாக மேம்பாடு அடைந்துள்ளனவா? நம்முள் சிலர் B நாட்டில், அந்த நாட்டின் ஐந்தாவது குடிமகனாக நிச்சயமாக தருவதாக இருந்தால் வாழ விரும்புவர். ஆனால் குலுக்கல் முறையில் நமது குடியுரிமை நிச்சயிக்கபடும் என்றால், நம்முள் பெரும்பாலோர் Aநாட்டில் வாழவே விரும்புவர். இரு நாடுகளும் ஒரே மாதிரியான சராசரி வருவாயை கொண்டிருந்தாலும், A நாடு முன்னுரிமை பெற்றது. ஏனெனில் அந்நாட்டில் பெருமளவு சமமான பங்கீடு செய்யப்பட்டுள்ளதே காரணம். A நாட்டு மக்கள் அதிக பணக்காரரும் அல்ல. மிகுந்த ஏழையும் அல்ல. B நாட்டில் பெரும்பாலோர் ஏழைகள். ஒரு நபர் மட்டும் மிகவும் பணக்காரர். எனவே, சராசரி, வருவாயை ஒப்பிட்டு பார்த்திட உதவுகிறது. ஆனால், அவ்வருவாய் மக்களிடையே எவ்வாறு பங்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை நமக்கு தெரிவிக்காது.




- சராசரி வருவாயை ஒப்பிட்டு அறிய உதவும் மூன்று எடுத்துக்காட்டுகளை தருக. இங்கு தரப்பட்டுள்ளதை தவிர்க்கவும்.
- வளர்ச்சியை அறிந்திட சராசரி வருவாய் மிக முக்கியமான ஒருஅளவுகோல் என நீ ஏன் கருதுகிறாய்? விவரி.
- ஒரு குறிப்பிட்ட காலத்தில், பதிவேடுகளின் படி ஒரு நாட்டின் சராசரி வருவாய் அதிகரிக்கிறது. அப்பொருளாதாரத்தில், எல்லா சமூகத்தினரும் வளர்ச்சியடைந்தனர் என நாம் முடிவுக்கு வரலாமா? உன் விடையை எடுத்துக்காட்டுடன் விவரி.
- உலக வளர்ச்சி அறிக்கை 2012ன் படி நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளின் தலைசரி வருவாயை கண்டுபிடி.
- இந்தியா வளர்ச்சி அடைந்த நாடாக உருவாக வேண்டுமெனில், அது செய்யவேண்டியவை அல்லது சாதிக்க வேண்டியவை குறித்து உன் கருத்துக்களை ஒரு பத்தியில் எழுதி காட்டுக.

## வருவாய் மற்றும் இதர அளவுகோல்கள்

தனிப்பட்ட மனிதர்களின் விருப்பங்கள் மற்றும் இலக்குகளை நாம் கருதும் போது, மக்கள் மேலான வருவாய் மட்டுமல்ல, பாதுகாப்பு, பிறரிடமிருந்து மரியாதை, சமமாக நடத்தப்படுதல், சுதந்திரம் போன்றவற்றையும் மனதில் கொண்டிருப்பதை காணமுடியும். அது போலவே, நாம் ஒரு நாடு அல்லது பகுதியை கருதும் போது, சராசரி வருவாய் மட்டுமல்ல இதர சமமான முக்கிய குணங்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அட்டவணை 2.3 தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களில் ஆண்டு தலைசரி வருவாய்

| மாநிலம் | 2016-17 ஆண்டிற்கான தலைசரி வருவாய் தலைசரி வருவாய் (லட்சங்களில்) | தரவரிசை 2016-17 | மனித மேம்பாட்டு குறியீடு 2015 |
|---|---|---|---|
| ஹரியானா | 2.15 | 7 | 9 |
| ஹிமாச்சல பிரதேசம் | 1.82 | 12 | 3 |
| பீஹார் | 0.66 | 33 | 21 |



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அம்முக்கிய குணங்கள் எவையாக இருக்கும்? இதை ஒரு எடுத்துக்காட்டுடன் பரிசீலிப்போம். அட்டவணை 2.3, பஞ்சாப், ஹிமாச்சல பிரதேசம் மற்றும் பீஹார் மாநிலங்களின் தலைசரி வருவாய் மதிப்புகளை காட்டுகிறது. இம் மூன்றில் பஞ்சாப் மிக அதிகமான தலைசரி வருவாயையும், பீஹார் மிகக் குறைந்த தலைசரி வருவாயை கொண்டுள்ளன. இதன் பொருள் பஞ்சாப் மாநிலத்தில் ஓராண்டில் சராசரியாக 78,000 ரூபாயையும், பீஹார் மாநிலத்தில் ஓராண்டில் சராசரியாக 25,000 ரூபாயையும் சம்பாதிக்கின்றனர். எனவே, தலைசரி வருவாய், வளர்ச்சியை அறிய பயன்படுத்தப்பட்டால், பஞ்சாப் மாநிலம் மிகவும் மேம்பாடு கொண்டதாகவும், பீஹார் மிகக் குறைந்த மேம்பாடு கொண்டதாகவும் மதிப்பிடப்படும். நாம் இப்போது அட்டவணை 2.4ல் குறிப்பிடப்பட்டுள்ள இம்மூன்று மாநிலங்கள் தொடர்புடைய சில அம்சங்களை பரிசீலிப்போம்.

அட்டவணை 2.4: தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களின் சில ஒப்பீட்டு விவரங்கள்

| மாநிலம் | குழந்தை இறப்பு வீதம் (2016)ல் | எழுத்தறிவு வீதம் (2011)% | பள்ளியில் மொத்த சேர்க்கை விகிதம் (2013-14) |
|---|---|---|---|
| ஹரியானா | 33 | 77 | 61 |
| ஹிமாச்சல பிரதேசம் | 25 | 84 | 67 |
| பீஹார் | 38 | 64 | 43 |

அட்டவணை 2.4ல் பயன்படுத்தப்பட்ட கலைச்சொற்கள்.

**IMR** - Infant Mortality Rate. உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளில், ஒரு வருடத்திற்குள் இறந்து போன குழந்தைகள் எண்ணிக்கை

எழுத்தறிவு வீதம் : 7 மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதுடையோரின் எழுத்தறிவு வீதத்தை இது அளவிடும்.

நிகர வருகை வீதம் (NAR) : 9 மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர்களை கணக்கில் கொண்டு நிகர வருகை வீதம் கணக்கிடப்பட்டது.

அட்டவணையில் முதல் கட்டத்தில், ஒரு வருடத்தில் ஹிமாச்சல பிரதேசத்தில் உயிருடன் பிறக்கும் 1000 குழந்தைகளில் 25 பேரும், பஞ்சாப் மாநிலத்தில் 33 பேரும், பீகாரில் 38 பேரும் இறக்கின்றனர்.

## பொதுமக்களுக்கான வசதிகள்

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த நபர் சராசரியாக, ஹிமாச்சல பிரதேசத்தின் நபரை விட சராசரியாக அதிக வருவாய் பெறுகிறார். ஆனால், பொது மக்களுக்கான வசதிகள் பெறுவதில் பின்தங்கியுள்ளார். காரணம் யாதெனில், உன்னிடம் உள்ள பணம் உனக்கு தேவையான எல்லா பொருட்கள் மற்றும் சேவைகளையும் பெற்றுத்தர இயலாது. எனவே, வருவாய் என்பது ஒரு முழுமையான, போதுமான குறிகாட்டி அல்ல. குடிமக்கள் பயன்படுத்தக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளை அவர்களின் வருவாய் முழுமையாக பெறச்செய்யாது. எடுத்துக்காட்டாக, பொதுவாக உங்களது பணம் சுற்றுச்சூழல் மாசற்ற இடத்தை பெற்றுத்தராது. கலப்படம் இல்லாத மருந்துகளை பெற முடியாது. இவை உள்ள இடத்திற்கு நீ மாறினால் மட்டுமே இயலும். உங்களது பணம், உங்களை தொற்று நோய்களில் இருந்து காப்பாற்ற இயலாது. நீங்கள் வாழும் சமுதாயம் முழுவதும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டால் மட்டுமே அது சாத்தியமாகும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

வாழ்க்கைக்கு தேவையான முக்கியமான பொருட்களையும், சேவைகளையும் கூட்டாக வழங்குவதே மிகவும் மலிவான மற்றும் சிறந்த வழியாகும். சற்றுயோசித்து பாருங்கள். ஒரு பகுதிக்கு கூட்டாக பாதுகாப்பு ஏற்பாடு செய்வது மலிவானதா? அல்லது ஒவ்வொரு வீட்டுக்காரரும், தனித்தனியாக காவலாளியை ஏற்பாடு செய்துக் கொள்வது மலிவானதா? உன் கிராமம் அல்லது பகுதியில் உன்னைத் தவிர யாரும் படிக்க விருப்பமில்லாமல் இருந்தால் உன்னால் படிக்க இயலுமா? இயலாது. உன் பெற்றோர் வேறு எங்காவது தனியார் பள்ளிக்கூடத்தில் சேர்த்தால் மட்டுமே இயலும். எனவே, உன்னால் படிக்க இயலுகிறது என்றால் இதர குழந்தைகளும் படிக்க விரும்புவதால் மட்டுமே சாத்தியமாகிறது. மக்கள் பலரும், அரசாங்கம் பள்ளிக்கூடங்களை திறக்க வேண்டும் என்றும், இதர வசதிகள் செய்துத்தரவேண்டும் என்றும் விரும்புகின்றனர். அவ்வாறு செய்வதால் எல்லா குழந்தைகளும் படித்திடும் வாய்ப்பை பெற முடியும். இப்போதுள்ள சூழ்நிலையிலும் பல்வேறு பகுதிகளில் குழந்தைகள் குறிப்பாக பெண் குழந்தைகள் உயர்நிலை கல்வியை சாதிக்க முடியாமல் உள்ளனர். ஏனினல், அரசாங்கம் அல்லது சமுதாயம் போதுமான வசதிகளை செய்துத் தரவில்லை.

சில மாநிலங்களில் குழந்தைகள் இறப்பு வீதம் குறைவாக உள்ளது. ஏனெனில், போதுமான அடிப்படை மருத்துவ மற்றும் கல்வி வசதிகளை அவை பெற்றுள்ளன. அதைப் போலவே, சில மாநிலங்களில் பொது விநியோக முறை சிறப்பாக பணியாற்றுகிறது. பொது விநியோகக் கடை சரியாக செயல்படவில்லை எனில், அப்பகுதி மக்கள் அதை சரிபடுத்திக் கொள்கின்றனர். உடல்நலம் மற்றும் ஊட்டசத்தின் நிலைமை, அம் மாநிலங்களில் நிச்சயமாக மேலான நிலையில் இருக்கின்றன.

- அட்டவணை 2.3 மற்றும் 2.4ல் தரப்பட்டுள்ள தகவல்களை கவனித்துப் பார். எழுத்தறிவு வீதத்தில் பஞ்சாப், பீஹாரை விட முன்னிலையில் உள்ளதா? தலைசரி வருவாயிலும் அவ்வாறே உள்ளதா?
- பொருட்கள் மற்றும் சேவைகளை கூட்டாக தரப்படும் போது அவ்வாறு இல்லை. இதற்கான எடுத்துக்காட்டுகளை நினைத்துப்பார்.
- நல்ல உடல் நலம் மற்றும் கல்வி வசதிகள் போன்றவை, அரசாங்கம் இவற்றின்மீது செலவிடும் பணத்தின் அளவால் மட்டும் சார்ந்துள்ளதா? வேறு எந்த காரணிகள் மீது அவை சார்ந்துள்ளன?
- 2009-2010ல் தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்களில் கிராமப்புறங்களில் உள்ள ஒரு குடும்பத்திற்கு நியாய விலைக் கடைகளில் இருந்து வாங்கப்பட்ட அரிசி முறையே 53 மற்றும் 33சதவீதம். தேவைப்பட்ட மீதி அரிசியை வெளிச்சந்தையில் இருந்து வாங்கிக் கொண்டனர். மேற்கு வங்காளம் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களில் முறையே 11 மற்றும் 6 சதவீதம் நியாய விலைக்கடைகளில் இருந்து வாங்கப்பட்டன. எங்குள்ள மக்கள் வசதியாக உள்ளனர்? எவ்வாறு?

### மனித மேம்பாட்டு அறிக்கை

வருவாயின் நிலை மேம்பாட்டை அளவிட பயன்படும் முக்கியமான காரணியாக இருப்பினும், அது போதுமானதல்ல என்று ஒருமுறை உணர்ந்து கொண்ட பின், நாம் இதர அளவுகோல்களைக் குறித்து சிந்திக்கத் தொடங்கினோம். அவை போன்ற அளவுகோல்கள் நீண்ட பட்டியலாக உருவாகும். ஆனால், அது மிகவும் பயனுள்ளதாக இருக்காது. நமக்கு தேவைப்படுவது யாதெனில், மிக முக்கியமான சிறிய எண்ணிக்கையிலான காரணிகளே யாகும். உடல்நலம், கல்வி குறிகாட்டிகள் போன்ற பிறஅளவுகோல்கள், கேரளா மற்றும் பஞ்சாப் மாநிலங்களை ஒப்பிட நாம் பயன்படுத்தினவையாகும். கடந்த பத்தாண்டுகளில் உடல்நலம் மற்றும் கல்வி போன்றவை பரவலாக வருவாய் காரணியோடு, வளர்ச்சியை அளக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு திட்டத்தால் (UNDP) (United Nations Development Programme) அவர்களின் உடல்நல தகுதி மற்றும் தலைசரி வருவாய் போன்றவற்றால் ஒப்பிட்டு வகைப்படுத்தியுள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

2017ஆம் ஆண்டின் மனித மேம்பாட்டு அறிக்கையை கவனித்து பார்த்தால் இந்தியா மற்றும் நம் அண்டை நாடுகள் சம்பந்தபட்ட ஆச்சரியமான விவரங்களை அறியமுடியும்.

அட்டவணை 2.5 இந்தியா மற்றும் அண்டை நாடுகள் குறித்த 2017 ஆண்டிற்கான சில விவரங்கள்

| நாடுகள் | தலைசரி வருவாய் (டாலர்களில்) | வாழ்நாள் காலம் (ஆண்டுகள்) | எழுத்தறிவு வீதம் | மனித மேம்பாட்டு குறியீடு (HDI) உலக அளவு தரம் |
|---|---|---|---|---|
| இலங்கை | 11,326 | 75.5 | 92.6 | 76 |
| இந்தியா | 6,386 | 68.8 | 74.4 | 130 |
| பாகிஸ்தான் | 5,331 | 66.6 | 60.0 | 150 |
| மியான்மர் | 5,567 | 66.7 | 93.1 | 148 |
| பங்களாதேஷ் | 3,677 | 72.8 | 61.5 | 136 |
| நேபாள் | 2,471 | 70.6 | 64.7 | 149 |

அட்டவணை 2.5க்கு குறிப்புகள்

**HDI** மனித மேம்பாட்டு குறியீடு. மேற்கண்ட பட்டியல் 189 நாடுகளில் எடுத்த கணக்குப்படி கொடுக்கப்பட்டுள்ளது.

வாழ்நாள் காலம் : ஒரு நபரின் எதிர்பாக்கும் சராசரி வாழ்நாள் காலம்.

சராசரி பள்ளிப்படிப்பு ஆண்டுகள் : 25 வயது மற்றும் அதற்கும் மேற்பட்டோர் கல்வி பெறக்கூடிய சராசரி ஆண்டுகள்.

எதிர்பார்க்கும் பள்ளிப்படிப்பு ஆண்டுகள் : பள்ளியில் சேர்ந்திடும் ஒரு குழந்தை கல்வி பெறக்கூடிய சராசரி ஆண்டுகள் (தற்போதுள்ள சேர்க்கை வீதத்தில்)

தலைசரி வருவாய் : தலைசரி வருவாய் அமெரிக்க டாலர்களில் கணக்கிடப்பட்டுள்ளது. ஏனெனில் ஒருவர் பிறநாட்டவருடன் ஒப்பிட்டு பார்க்க முடியும். ஒவ்வொரு டாலரும் ஒரே அளவிலான பொருட்களையும் சேவைகளையும், எந்த நாட்டில் இருந்தும் வாங்கமுடியும்.




*வரைபடம் :2.1: மனித மேம்பாட்டு குறியீட்டை காட்டும் உலகவரைபடம். பல்வேறு கண்டங்களில் அதன் பல்வேறு அளவுகளை அடையாளம் காண்க.*



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

நம் அண்டை நாடான இலங்கை மிகச்சிறிய நாடு. இந்நாடு ஒவ்வொரு துறையிலும் இந்தியாவை விட முன்னிலையில் உள்ளது. பெரிய நாடான இந்தியா மிகக் குறைவான தரவரிசையில் உலகளவில் இருப்பது ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? அட்டவணை 2.5 படி நேபாள் நாடு, இந்தியாவின் தலைசரி வருவாயில் பாதியைவிட குறைவாக தலைசரி வருவாய் பெற்றிருந்தாலும், கல்வியறிவில் இந்தியாவை விட மிகவும் பின்தங்கி இல்லை. எதிர்பார்க்கப்படும் வாழ்நாள் காலம், நம் இந்தியாவை விட முன்னிலையில் உள்ளது.

மனித மேம்பாட்டு குறியீட்டை கணக்கிட பல்வேறு புதிய நவீன முறைகள் மற்றும் பலபுதிய குறியீடுகள் மனித மேம்பாட்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால், மேம்பாடு என்னும் சொல்லுக்கு முன், ‘மனித’ என்னும் சொல்லை இணைத்து, ஒரு நாட்டிலுள்ள குடிமக்களுக்கு என்னமாற்றம் ஏற்படுகிறது என்பது தான் மேம்பாடு என்பதை எடுத்துரைத்தது. மக்களின் உடல்நலம், நல்வாழ்வு முதலியவை மிகவும் முக்கியமானவை.

## காலத்தோடு கூடிய வளர்ச்சியாக மேம்பாடு

மனித மேம்பாட்டு குறிகாட்டிகள் மதிப்பீட்டின் படி, சில நாடுகள் இதர நாடுகளைவிட முன்னிலையில் உள்ளன. அதுபோலவே, சில மாநிலங்கள் சிறப்பான மனித மேம்பாட்டு குறிகாட்டிகளை பெற்றுள்ளன. ஒரு மாநிலத்திற்குள்ளேயும் வேறுபாடுகள் இருக்கின்றன. சில மாவட்டங்கள் இதர மாவட்டங்களை விட மிகவும் முன்னேற்றம் அடைந்திருக்கும். ஒப்பீடுகள் மற்றும் தரவரிசைகள் சிறிதளவே பயனளிக்ககூடியவை என்பதை நினைவில் கொள்ளுங்கள். மேம்பாட்டு குறிகாட்டிகள் மூலம் நாம் சிலபகுதிகள் ஏன் பின்தங்கியுள்ளது என்பதை புரிந்து கொண்டு, அவற்றை களைய முடியும் போது அவை நமக்கு பயனுள்ளதாக அமையும். மனித மேம்பாட்டு குறிகாட்டிகளின் படி குறைந்த தரம் இருந்தால், மக்கள் வாழ்வின் சில அம்சங்கள் மீது அதிக கவனம் செலுத்தவேண்டும் என்பதை அறிகுறியாக எடுத்தக்கொள்ள வேண்டும். இதற்கு மாறாக, சில பகுதிகள் ஏன் மற்றவற்றை விட முன்னிலையில் உள்ளன என்பதையும் அறியமுடியும். ஹிமாச்சல பிரதேசத்தில், அதிகமான எண்ணிக்கையில் பள்ளிகளுக்கு செல்லுகின்றனர். இந்த எண்ணிக்கை, பிற மாநிலங்களில் காணப்படும் சராசரி எண்ணிக்கையை விட அதிமுள்ளது. சில மாநிலங்கள் ஏன் முன்னிலையில் உள்ளன என்பதை மேம்பாட்டு குறிகாட்டியால் அறிய முடிகிறது. (அட்டவணை 2.4)

இதற்கான விடையை கண்டறிய ஹிமாச்சல பிரதேசத்தில் பள்ளிக் கல்வியின் புரட்சி குறித்து நாம் ஆழ்ந்து பரிசீலனை செய்யவேண்டும். அது நமக்கு உள்ளார்ந்த கருத்துக்களை வழங்கிடும். குறிப்பாக, பல்வேறு காரணிகள் ஒருங்கிணைந்து அதுபோன்ற மாற்றத்தை சாத்தியபடுத்தின என்பதை புரிந்துகொள்ள முடியும். மேம்பாடு என்பது பல்வேறு அம்சங்களை தெரிவிக்கும் சிக்கலான சூழ்நிலையாகும்.

சுதந்திரத்தின் போது, இந்தியாவின் பிற மாநிலங்களை போலவே ஹிமாச்சலபிரதேசம், மிகக் குறைவான அளவு கல்வியறிவை கொண்டிருந்தது. மலைகள் நிறைந்த பகுதியாகவும், பல கிராமங்கள் மிக குறைந்த மக்கள் அடர்த்தியையும், கொண்டிருந்ததால் கிராமங்களுக்கு பள்ளிக்கூடங்களை அமைத்து தருதல் மிகப்பெரிய சவாலாக தோன்றியது. இருப்பினும், ஹிமாச்சல பிரதேச அரசாங்கமும், மாநில மக்களும் கல்வியை மேம்படுத்துவதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தனர். இந்த நோக்கத்தை எவ்வாறு உண்மையாக செயலாக்கி எல்லா குழந்தைகளுக்கும் வழங்குவது?




அரசாங்கம் பள்ளிக் கூடங்களை துவக்கியது. கல்வி வசதி பெரும்பாலும் இலவசம் அல்லது பெற்றோருக்கு மிகச்சிறு அளவே செலவு என்பதை நிச்சயப்படுத்தியது.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

மேலும், இப்பள்ளிகளில் குறைந்தபட்ச வசதிகளான ஆசிரியர்கள், வகுப்பறைகள் கழிவறைகள், குடிநீர் முதலியற்றை செய்துத் தர உத்தரவாதம் அளிக்கமுயன்றது. ஆண்டுகள் கழிந்தன. இவ்வசதிகள் மேம்படுத்தப்பட்டு, விரிவுபடுத்தப்பட்டன. அதிக பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன. ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். அதனால் மேலும் அதிக குழந்தைகள் சுலபமாக கல்வி கற்க முடிந்தது. பள்ளிக்கூடங்களை நிறுவி, நடத்துவதற்கு அரசாங்கம் பணத்தை செலவிட வேண்டியிருந்தது.

ஒவ்வொரு குழந்தையின் கல்விக்காக அரசின் வரவு செலவு திட்டத்தில் இருந்து அதிகமாக செலவு செய்யும் இந்திய மாநிலங்களில் ஹிமாச்சல பிரதேசம் மேலான இடத்தில் உள்ளது. 2005ஆம் ஆண்டில் கல்வி மீது அரசு செலவிடும் ஆண்டு சராசரி செலவு இந்திய மாநிலங்களில், ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ.1,049 ஆக இருந்தது. ஹிமாச்சல பிரதேசம் சராசரியாக ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ.2005 செலவு செய்தது.

கல்விக்காக உயர் முன்னுரிமை தரப்பட்டது. பள்ளிப்படிப்பு மீது 1996ஆம் ஆண்டிலும், மீண்டும் 2006ஆம் ஆண்டிலும் விரிவான ஆய்வு நடத்தப்பட்டது. ஆய்வாளர்கள் கீழ்கண்டவாறு குறிப்பிட்டனர்.

ஹிமாச்சல பிரதேசத்தில் மாணவர்கள் ஊக்கத்துடன் பள்ளிக்கு வருகின்றனர். பெரும்பாலான மாணவர்கள் அவர்களின் பள்ளிக்கூட அனுபவங்களை மகிழ்ச்சியாக அனுபவித்தனர். சாம்பா கிராமத்தில், நான்காம் வகுப்பில் சேர்க்கப்பட்ட 'நேஹா' இவ்வாறு கூறினாள். "எங்கள் ஆசிரியை எங்களை நேசிக்கிறார். நன்றாக கற்பிக்கிறார்". குழந்தைகள் மேற்படிப்பு படிக்க வேண்டும் என்றும், காவல் அதிகாரிகளாக, அறிவியல் அறிஞர்களாக மற்றும் ஆசிரியர்களாக உருவாக வேண்டும் என்ற உயர்நோக்கங்களை அரசு வெளியிட்டது. ஆரம்ப பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும், மாணவர்களின் வருகைவீதம் மிகவும் அதிகமாக இருந்தது.

ஹிமாச்சல பிரதேசத்தில் 10ஆண்டுகள் பள்ளிப்படிப்பு குழந்தைகளுக்கு அவசியமாக வழங்கப்படும் வரைமுறை ஏற்பட்டுள்ளது.

நம் நாட்டின் பல பகுதிகளில், இன்னமும் மாணவிகளின் கல்விக்கு பெற்றோர்கள் குறைவான முன்னுரிமை தருகின்றனர். சிறுவர்களின் படிப்பிற்கு தரும் முன்னுரிமை அதிகம் தருகின்றனர். மாணவிகள் சிலர் சில வகுப்புகள் வரை மட்டுமே படித்து, பள்ளிப்படிப்பை முழுவதுமாக முடிக்காமலேயே நின்றுவிடுகின்றனர். ஆனால், ஹிமாச்சல பிரதேசத்தில் வரவேற்கத்தக்க விஷயம் என்னவென்றால், பாலின வேறுபாடு மிகவும் குறைவாக உள்ளது. ஹிமாச்சல பிரதேச பெற்றோர்கள் பலர் தங்கள் மாணவிகளின் கல்விக்கு, மாணவர்களின் கல்விக்கு இணையான உயர் நோக்கங்களை கொண்டுள்ளனர். இவ்வாறாக 13-18 வயதுடைய மாணவிகளில் அதிக சதவீதத்தினர் எட்டாம் வகுப்பை முடித்து, உயர் நிலைப்பள்ளிகளுக்குச் செல்லுகின்றனர். இதன் பொருள் ஆண்-பெண் இடையே அந்தஸ்து வேறுபாடு இல்லை என்பதாகும். ஆனால், பல இதர பகுதிகளோடு ஒப்பிடும் போது (குறிப்பாக வட இந்திய மாநிலங்களோடு) வேறுபாடுகள் குறைவாக உள்ளன.

இந்த பாலின வேறுபாட்டு உணர்வு ஏன் இம்மாநிலத்தில் குறைவாக உள்ளது என வியப்பு ஏற்படுகிறது. கல்வியோடு, பாலின வேறுபாடு இதர பகுதிகளில் காணப்படுகிறது. பெரும்பாலான இதர மாநிலங்களுக்கு எதிர்மாறாக, ஹிமாச்சல பிரதேசத்தில், குழந்தை இறப்பு பெண் குழந்தைகளில் குறைவாகவும், ஆண் குழந்தைகளில் அதிகமாகவும் காணப்படுகிறது. ஒரு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், ஹிமாச்சலபிரதேச பெண்களில் பலர் வீடுகளுக்கு வெளியே சென்று வேலை செய்கின்றனர். வீடுகளுக்கு வெளியே சென்று வேலை செய்வோர் பொருளாதார ரீதியாக சுதந்திரமாகவும், தன்னம்பிக்கை உடையவர்களாகவும் இருக்கின்றனர். குழந்தைகளின் கல்வி, உடல் நலம், பிறப்பு, வளர்த்தல் முதலிய குடும்பம் சம்பந்தபட்ட விஷயங்களில் முடிவு எடுப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றனர். அத்துடன், தாங்கள் வேலை செய்வதுடன், தங்களுடைய மகள்களும் திருமணத்திற்கு பிறகு வெளியில் சென்று வேலை செய்யவேண்டும் என்று ஹிமாச்சல பிரதேச தாய்மார்கள் எதிர்பார்க்கின்றனர். எனவே, பள்ளிப்படிப்பு என்பது இயற்கையாகவே கிடைக்கிறது. அது ஒரு சமுதாய விதிமுறையாக உருவாகியுள்ளது.

ஹிமாச்சல பிரதேச பெண்கள், சமூக வாழ்விலும், கிராம அரசியலிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் பங்கேற்பதை காண முடிகிறது. பல கிராமங்களில் அதிக ஈடுபாட்டுடன் மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருவதை காணமுடிகிறது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அட்டவணை 2.6 எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்டுகள், ஹிமாச்சல பிரதேசம் மற்றும் இந்திய மாநிலங்களில் பள்ளிக்கல்வியின் வளர்ச்சியை ஒப்பிட்டு காட்டுகிறது.

அட்டவணை 2.6 ஹிமாச்சல பிரதேசத்தில் கல்வி வளர்ச்சி

| | ஹிமாச்சல பிரதேசம் | | இந்தியா | |
|---|---|---|---|---|
| | 1993 | 2006 | 1993 | 2006 |
| 6+ வயதுடைய சிறுமிகளில், 5ஆண்டுகளுக்கு மேலான கல்வி பெற்றவர்களின்சதவீதம் | 39 | 60 | 28 | 40 |
| 6+ வயதுடைய சிறுவர்களில், 5ஆண்டுகளுக்கு மேலான கல்வி பெற்றவர்களின் சதவீதம் | 57 | 75 | 51 | 57 |

இரண்டு காலப்புள்ளிகளிடையே ஏற்பட்ட மேம்பாட்டை அட்டவணையில் ஒப்பிடப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் ஏற்பட்ட பள்ளிக் கல்வி மேம்பாடு மற்றும் கல்விப்பரவலை காட்டிலும் ஹிமாச்சல பிரதேசத்தில் அதிகமாக ஏற்பட்டுள்ளது என்பதை தெளிவாக காட்டுகிறது. சிறுவர் மற்றும் சிறுமிகளில் சராசரி கல்வி வளர்ச்சி நிலையில் இன்னமும் அதிக அளவில் வித்தியாசம் இருப்பினும், சமீப ஆண்டுகளில் சமநிலையை நோக்கிய வளர்ச்சி காணப்படுகிறது.

## பாடச்சுருக்கம்

வளர்ச்சி என்பது இலக்குகளின் கலவையால் ஏற்படுவதாகும். இலக்குகள் மற்றும் அவற்றை அடைய மேற்கொள்ளும் வழிகள் போன்றவையிடையே முரண்பாடு இருப்பதை காணலாம். யாருடைய வளர்ச்சி என்பது ஒரு முக்கியமான கேள்வி. வளர்ச்சியை குறித்து கருதும் போது, அதை சாதிக்க எதிர்கொள்ளவேண்டும்.

வருவாய் மற்றும் தலைசரி வருவாய், பல்வேறு சமயங்களில் பயன்படுத்தப்பட்டாலும், அவை மேம்பாட்டின் ஒரே ஒரு அம்சத்தை குறிக்கும். ஒட்டுமொத்த வருவாய்கள் அதிகரித்தாலும், வருவாய்களின் பங்கீட்டில் மிகுந்தளவு சமனின்மை காணப்படும்.

மனித மேம்பாட்டுக்குறியீடு, சமூக குறியீடுகளை உடல்நலம் மற்றும் கல்வி போன்றவற்றோடு இணைத்தல் மூலம் மேம்பாடு குறித்த எண்ணத்தை விரிவுபடுத்தியுள்ளது. அரசாங்கத்தின் அளிப்பு, உடல்நலம் மற்றும் கல்வி எல்லோருக்கும் பெறச்செய்வதில் செய்யக்கூடிய ஒரே ஒரு வழியாகும். நற்பயனளிக்கும் பொதுமக்களுக்கான வசதிகள் நிச்சயமாக கிடைக்கச் செய்த போது, அதிகளவு சமம் கொண்ட சமுதாயங்கள் விரைவாக வளர்ச்சி அடைந்தன.

### முக்கியச் சொற்கள்

தலைசரிவருவாய், மனித மேம்பாடு, பொதுமக்களுக்கான வசதிகள், கல்வி மற்றும் உடல்நல குறிகாட்டிகள்.

### உனது கற்றலை மேம்படுத்துக

1. பல்வேறு நாடுகளை வகைப்படுத்த உலக வங்கி பயன்படுத்தும் திட்டஅளவுகோல் யாது? அத்திட்ட அளவுகோலில் குறைபாடுகள் எவையேனும் உள்ளனவா? அவை யாவை?
2. வழக்கமாக, ஒவ்வொரு சமுதாய திட்டத்தின் வெற்றியின் பின்னணியில், பல்வேறு பங்களிக்கும் காரணிகள் இருக்கும். உங்கள் கருத்துப்படி, ஹிமாச்சல பிரதேசத்தில் பள்ளிக் கல்வி வளர்ச்சிக்கு ஒன்று சேர்ந்து வழிவகுத்த காரணிகள் யாவை?
3. வளர்ச்சியை அளவிடுவதற்கு, ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு திட்டம் (UNDP) பின்பற்றிய திட்டஅளவுகோல் எந்த முறையில் உலகவங்கி பின்பற்றும் திட்ட அளவுகோலோடு வேறுபட்டது?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

4. மனித மேம்பாட்டை அளவிடுவதற்கு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய அம்சங்கள் குறித்து இந்த பாடத்தில் விவாதிக்கப்பட்டுள்ளன. அவை தவிர வேறு இதர அம்சங்களும் கருதப்படவேண்டும் என்று நீ கருதுகிறாயா?
5. நாம் சராசரிகளை ஏன் பயன்படுத்துகிறோம்? அவற்றை பயன்படுத்துவதில் ஏதேனும் குறைபாடுகள் உள்ளனவா? வளர்ச்சி தொடர்புடையவற்றை, உன் சொந்த எடுத்துக்காட்டுகளுடன் விவரி.
6. குறைந்த தலைசரி வருவாய் கொண்ட ஹிமாச்சல பிரதேசம், பஞ்சாபை விட மேலான மனித மேம்பாட்டு தரவரிசையை பெற்றுள்ளது. அதிலிருந்து வருவாயின் முக்கியத்துவம் குறித்து என்னென்ன படிப்பினைகளை நீ பெறுகிறாய்?
7. அட்டவணை 2.6ல் தரப்பட்டுள்ள விவரங்களை ஆதாரமாகக் கொண்டு, கீழ்கண்ட கோடிட்ட இடங்களை நிரப்புக :
1993ஆம் ஆண்டில் 6+ வயதுடைய மாணவிகளில், ஒவ்வொரு 100 மாணவிகளில் .................. மாணவிகள் ஆரம்ப கல்வியை கற்றனர். 2006ஆம் ஆண்டில் இந்த விகிதாச்சாரம் 100 மாணவிகளில் ................ கல்வி பெற்றனர் என்ற நிலையை அடைந்தது. இந்தியா முழுமைக்குமான அளவில், 2006ஆம் ஆண்டில், ஆரம்ப கல்வி கற்ற மாணவர்களின் விகிதாச்சாரம், ஒவ்வொரு 100 மாணவர்களில் ............... மட்டுமே இருந்தது.
8. ஹிமாச்சல பிரதேசத்தின் தலைசரி வருவாய் எவ்வளவு? உயர்வருவாய் பெறுவதால், பெற்றோர் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவது சுலபமாகிறது என்று நீங்கள் கருதுகிறீர்களா? இது குறித்து கலந்துரையாடு. ஹிமாச்சல பிரதேசத்தில் அரசாங்கம் பள்ளிகளை நடத்தவேண்டியது ஏன் அவசியமாக இருந்தது?
9. பெற்றோர்கள் மாணவிகளின் கல்விக்காக காட்டும் இணக்கம், மாணவர்களின் கல்வியோடு ஒப்பிடும் போது ஏன் குறைவாக உள்ளது என்று நீ கருதுகிறாய்? வகுப்பறையில் இது குறித்து கலந்துரையாடு.
10. வீடுகளுக்கு வெளியே சென்று வேலை செய்யும் பெண்களுக்கும், பாலின வேற்றுமைக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன?
11. கல்வி உரிமை சட்டம் 2009 (RTE) 6 முதல் 14வயதுடைய எல்லா குழந்தைகளும் இலவச கல்விபெறும் உரிமை பெற்றவர்கள் என்று பிரகடனம் செய்கிறது. போதுமான பள்ளிக்கூட கட்டிடங்களை மக்கள் வாழ்விடங்களுக்கு அருகே அமைத்துதர அரசாங்கம் உத்திரவாதம் அளிக்க வேண்டும். முறையான தகுதியுடைய ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும். தேவையான எல்லா வசதிகளையும் ஏற்படுத்தி தரவேண்டும். இந்த பாடத்தில் நீங்கள் படித்தவை மற்றும் ஏற்கனவே அறிந்தவை கொண்டு இச்சட்டம் (1)குழந்தைகள் மற்றும் (2) மனித மேம்பாட்டிற்கு எவ்வளவு முக்கியத்துவம் என்பது குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுங்கள் மற்றும் விவாதியுங்கள்.

## கலந்துரையாடல் :

**கல்வி என்பது வேலைவாய்ப்பிற்கு மட்டும்தானா? கல்வியின் நோக்கம் என்ன? இந்த அம்சத்தின் மீது விவாதிக்கவும்.**

## செயல்த் திட்டம்



1. வாழ்க்கைக்கான பொருள் ஈட்ட மேற்கொள்ளப்படும் பல்வேறு வாழ்வாதார மூலங்களை காட்டும் விளக்கப்படம் இங்கு காட்டப்பட்டுள்ளது. பல்வேறு தொழில்கள் செய்யும் மக்களின் மேம்பாடு என்னும் எண்ணத்தை வர்ணிக்கும், இதைப்போன்ற விளக்கப்படம் ஒன்றை உருவாக்கி, தலைப்பை எழுதுக.

2. உங்கள் பகுதியில் வாழும் பெற்றோரிடமிருந்து அவர்களின் குழந்தைகளின் படிப்பு குறித்த தகவல்களை சேகரித்து வகுப்பில் பரிசீ-க்க.

| வ. எண் | குடும்பத் தலைவரின் பெயர் | சிறுவன்/ சிறுமி | பள்ளிக்கூடம் அரசு/தனியார் | நகர்புறம்/ கிராமம் | இப்பள்ளியில் படிப்பதற்கான காரணம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பெற்றோரின் கருத்து | குழந்தைகளின் கருத்து |
| | | | | | | |



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்
3

# உற்பத்தியும் வேலை வாய்ப்பும்

**மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி 9ஆண்டு குறைவிற்கு திடீர் வீழ்ச்சி**

இந்தியாவின் மொத்த தேசிய உற்பத்தி 2012-2013ல் 5% மட்டுமே உயர்ந்தது. வேளாண் வளர்ச்சியும் மிதமாகவே இருந்தது. கட்டுமான மற்றும் சேவையின் வேகமும் குறைந்தது. மொத்த தேசிய உற்பத்தியின் உற்சாகமற்ற எண்களைக் கண்டு ஏமாற்றமடைந்தாலும் நிதி அமைச்சர் இறுதியில் நன்மையே விளையும் என்ற நம்பிக்கையை வெளியிட்டார். சில தெரிவு செய்யப்பட்ட துறைகளில் மீட்புக்கான அறிகுறிகள் காணப்படுவதை சுட்டிக்காட்டினார். (தி இந்து)

நீங்கள் இது போன்ற செய்திகளை செவிமடுத்திருக்கலாம். மேலே குறிப்பிட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன? அதனுடன் இந்தியப் பொருளாதாரத் துறைக்கு என்ன தொடர்பு உள்ளது? புரிந்து கொள்ள முயல்வோமாக.

## பொருளாதாரத் துறைகள்

எட்டு மற்றும் ஒன்பதாம் வகுப்புகளிலிருந்து சில பாடங்களை நினைவுகூர்க. நாம் அவற்றில் மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு ஈட்டுகின்றனர் என்பதை விவாதித்தோம். இந்த நடவடிக்கைகளை மூன்றாக வகைப்படுத்தலாம். 1. விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளான மீன்பிடித்தல், காடுவளர்ப்பு, சுரங்கத் தொழில் போன்ற உற்பத்தியின் மீது இயற்கையின் ஆதிக்கப் பங்கு உள்ள தொழில்கள். 2) பொருள் உற்பத்திச் செயல்முறைகளும், பிற தொழில்களும், இதில் கருவிகள் அல்லது எந்திரங்களைக் கொண்டு மக்கள் பொருட்களைத் தயாரிப்பர். மற்றும் 3) ஒரு பொருளை நேரடியாக உற்பத்தி செய்யாத ஆனால் உற்பத்திக்குத் தேவையான சேவைகளை வழங்குதல் மற்றும் மக்களுக்கான பிற சேவைகள் அடங்கிய நடவடிக்கைகள்.

### இந்த வேறுபாடுகளை நினைவுபடுத்திக்கொள்வதற்கு:

- விவசாயம், தொழில் மற்றும் சேவைத்துறைகளின் கீழ் உள்ள தொழில்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை வகைப்படுத்தி, உன் வகைப்பாட்டிற்கான காரணங்களைக் கொடு.

| தொழில் | வகைப்பாடு |
|---|---|
| தையல்காரர் | |
| கூடை முடைபவர் | |
| பூக்களை சாகுபடி செய்பவர் | |
| பால்விற்பனையாளர் | |
| மீனவர் | |
| மதகுரு | |
| செய்தி எடுத்துச்செல்பவர் | |



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

| | |
|---|---|
| தீப்பெட்டி தொழிற்சாலைப் பணியாட்கள் | |
| கடன் தருபவர் | |
| தோட்டக்காரர் | |
| குயவர் | |
| தேனீ வளர்ப்பவர் | |
| விண்வெளிப் பயணி | |
| அழைப்பு மைய ஊழியர் | |

- கீழ்காணும் அட்டவணை 1972-73லும் மற்றும் 37ஆண்டுகளுக்குப் பின் 2009-2010 ஆண்டுகளிலும் இந்தியாவில் பல்வேறு துறைகளில் வேலை செய்த உழைப்பாளர்களின் சதவீதத்தைக் காட்டுகிறது.

| ஆண்டு | விவசாயம் | தொழில் | சேவைகள் |
|---|---|---|---|
| 1972-73 | 74% | 11% | 15% |
| 2009-10 | 53% | 22% | 25% |

(i) மேலே உள்ள அட்டவணையிலிருந்து நீங்கள் காணும் பெரிய மாற்றங்கள் யாவை?

(ii) முன்பு நீங்கள் படித்ததிலிருந்து, இந்த மாற்றங்களுக்கு காரணங்கள் என்னவாக இருக்கமுடியும் என்று கலந்துரையாடுங்கள்.




1...................... 2...................... 3......................4.....................

## மொத்த உள்நாட்டு உற்பத்தி

ஒன்று பணக்காரக் குடும்பம், மற்றொன்று ஏழைக்குடும்பம் என இரண்டு குடும்பங்கள் இருப்பதாகக் கருதுவோம். நாம் பணக்கார அல்லது ஏழை குடும்பங்கள் என கீழ்காணும் கூறுகளின் அடிப்படையில் கணிக்கலாம். குடும்பங்களில் மக்கள் உடுத்தும் உடை, பயணத்திற்காக அவர்கள் பயன்படுத்தும் வாகனங்கள், அவர்கள் உண்ணும் உணவு, அவர்கள் வாழும் வீடு, அவர்கள் வைத்திருக்கும் சாமான்கள் மற்றும் பிற வீட்டு உபயோகப்பொருட்கள், சிகிச்சைக்காக அவர்கள் செல்லும் மருத்துவமனைகள் போன்றவை. மாற்றாக இக்குடும்பங்கள் ஈட்டும் வருவாய் ஒரு முக்கிய ஒட்டுமொத்தக் குறிப்பானாக உள்ளது. நாடு முழுமைக்கும் நாட்டின் வருவாய் குறிப்பானாக, நாட்டில் உற்பத்தியாகும் பொருட்சேவைகளின் மொத்த மதிப்பினை நாம் பயன்படுத்துகிறோம். இந்த மதிப்பைக் குறிக்கும் கலைச்சொல்லே மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP- Gross Domestic Product).

கீழ்காணும் வரைபடம் இரண்டு வெவ்வேறான ஆண்டுகளில் 1973-74 மற்றும் 2013-14 இந்தியாவின் மொத்த தேசிய உற்பத்தியின் மதிப்பைக் காட்டுகிறது. பொருளாதாரத்தின் மூன்று துறைகளின் உற்பத்தியிலும் எவ்வகையான அதிகரிப்பு இருந்தது என்பதை நாம் ஒப்பிடலாம்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




*வரைபடம் :3.1 விவசாயம், தொழில் மற்றும் சேவைத்துறைகளின் மொத்த தேசிய உற்பத்தி ( கோடி ரூபாய்களில்)*

வரைபடத்தைப் பார்த்து கீழ்காணும் வினாக்களுக்கு விடையளி :

- 1973-74ல் அதிகளவில் உற்பத்தி செய்த துறை எது?
- 2013-2014ல் அதிகளவில் உற்பத்தி செய்த துறை எது?
- காலி இடங்களை நிரப்பு: 1973-74 மற்றும் 2013-14 ஆண்டுகளுக்கிடையே இந்தியாவில் பொருட் சேவைகளின் மொத்த உற்பத்தி மதிப்பு சுமார் ........... மடங்கு உயர்ந்தது.

(2011-2012ஆம் ஆண்டிற்கான புள்ளிவிவரம் விலைகளுக்கான சரிப்படுத்தப்பட்டு வருகிறது. அதாவது 1972-73 மற்றும் 2011-2012என்னும் இரண்டிற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒப்பிடமுடியும். ஒரேகுறிப்பு/ அடிப்படை ஆண்டில் நடைமுறையில் இருக்கும் விலைகளில் இரண்டு குறிப்பிடப்பட்டு வருகிறது).

## மொத்த உள்நாட்டு உற்பத்தியை நாம் எவ்வாறு கணக்கிடலாம்?

மேற்கூறிய துறைகளில் பல்வேறு பொருளாதார செயற்பாடுகளில் மக்கள் ஈடுபட்டு மிகவும் அதிகளவில் பொருட்சேவைகளை உற்பத்தி செய்கின்றனர். நாம் கண்டறிய விரும்புவது யாதெனில், எவ்வளவு பொருட்சேவைகள் உற்பத்தி செய்யப்பட்டன என்பதாகும்.

ஆயிரக்கணக்கான பொருட்சேவைகள் உற்பத்தி செய்யப்படுவதால் இது ஒரு இயலாத காரியம் என நீங்கள் நினைக்கலாம். அளவுக்கதிகமான சிரமமான பணி மட்டுமல்லாமல் எவ்வாறு நாம் கார்கள், கணினிகள், கைப்பேசிச் சேவை, கூடைகள் மற்றும் பானைகள் ஆகியவற்றை நாம் சேர்த்துக் கொள்வது என்றும் நீங்கள் வியப்படையலாம். இது நமக்குப் புரியாது.

இப்பிரச்சனையை சமாளிக்க, உண்மையான எண்களை கூட்டிக்கொள்வதற்குப் பதிலாக பொருட் சேவைகளின் மதிப்புகளை பயன்படுத்தவேண்டும் என்று பொருளாதார வல்லுனர்கள் அறிவுறுத்துகின்றனர். எடுத்துக்காட்டாக, ஒருகிலோ நெல் ரூ.25 வீதம், 10,000கிலோ கிராம் நெல் விற்கப்பட்டால் நெல்லின் மொத்த மதிப்பு ரூ.2,50,000. ஒரு தேங்காய் விலை ரூ.10 வீதம் 5000 தேங்காய்கள் விற்கப்பட்டால் அதன் மொத்த மதிப்பு ரூ.50,000. ஒவ்வொரு பொருள் (அல்லது சேவை) உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படுவதை கூட்டிக்கொள்வது அவசியமா? பொருட் சேவைகளின் மொத்த மதிப்பை நாம் எவ்வாறு கணக்கிடுவது.

எடுத்துக்காட்டாக, ஒரு விவசாயி அரிசி ஆலைக்கு ஒருகிலோ நெல் ரூ.25வீதம் 100கிலோ கிராம் நெல்லை விற்கிறார். அவர் எந்த விதைகளையும் வாங்க வேண்டியதில்லை எனக்கருதுவோம். அப்போது அவரால் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லின் மொத்த மதிப்பு ரூ.2500. அரிசி ஆலை அதை அரிசியாக்கி (1) 80கிலோ அரிசியை ஒரு உணவுவிடுதியாளருக்கு ஒருகிலோ ரூ.40வீதமும் (2) 20கி உமியை ஒரு கிலோ ரூ.20 வீதமும் விற்றார். அரிசி ஆலை உரிமையாளரால் உருவாக்கப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு $(80 \times 40) + (20 \times 20) =$ ரூ. 3600. இது அரிசி ஆலை உரிமையாளருக்கு உணவு விடுதியாளர் செலுத்திய தொகையாகும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

உணவு விடுதியாளர் இட்லி, தோசையை தயாரித்தார் மற்றும் அவரால் உமி எரிபொருளாக பயன்படுத்தப்பட்டது. உணவுவிடுதி உரிமையாளர் அரிசி மற்றும் உமியைப் பயன்படுத்தி, இட்லி, தோசை விற்பனை மூலம் ரூ.5000தை ஈட்டினார்.

ஒவ்வொரு படிநிலையிலும் விற்கப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு

படிநிலை 1 விவசாயி அரிசிஆலை உரிமையாளருக்கு நெல்விற்றது ரூ.2500

படிநிலை 2 அரிசிஆலை உரிமையாளர் உணவுவிடுதியாளருக்கு அரிசி மற்றும் உமிவிற்றது ரூ. 3600

படிநிலை 3 இட்லி, தோசை விற்பனை ரூ. 5000

- கலந்துரையாடு : உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பினை கண்டறிய நாம் அவற்றைக் கூட்டிக்கொள்ள வேண்டுமா?

இந்த எடுத்துக்காட்டில் உள்ள நெல், அரிசி மற்றும் உமி போன்ற பொருட்கள் இடைநிலைப் படிநிலைகளில் உள்ளன. அவை இறுதி நுகர்வோரால் பயன்படுத்தப்படவில்லை. அவை இறுதிநிலைப் பொருளை உருவாக்கும் உள்ளீடுகளாக பயன்படுத்தப்படுகின்றன. இந்த எடுத்துக்காட்டில் இட்டிலியும், தோசையும் ஒருவர் அனைத்து இயல்பான உள்ளீடுகளின் மதிப்பையும் இறுதிநிலைப் பொருள்களின் மதிப்புடன் இணைத்துக் கொண்டால் நாம் இருமுறை கணக்கிடுவது போலாகும். இறுதிநிலை பொருட்களின் மதிப்பில் இறுதிநிலைப் பொருட்களை உருவாக்குவதில் பயன்படுத்தப்படும் அனைத்து நடுநிலை அல்லது இடைநிலைப் பொருட்களின் மதிப்புகளும் அடங்கும். ஒவ்வொரு படிநிலையிலும் உற்பத்தியாளர் இதற்குமுன் வேறொருவரால் உருவாக்கப்பட்ட இந்த உள்ளீடுகளுக்காக பணம் செலுத்தினார். எனவே இறுதிநிலைப் பொருளாக உணவு விடுதியாளரால் விற்கப்பட்ட உணவுப் பொருட்களின் மதிப்பான ரூ.5000த்தில் இயல்பான உள்ளீடுகளாக பயன்படுத்தப்பட்ட அரிசி மற்றும் உமி ஆகியவற்றின் மதிப்பான ரூ.3600ம் அடங்கும். இது உணவு விடுதியாளரால் உருவாக்கப்படவில்லை. ஆனால் அவர் அவற்றை அரிசி ஆலை உரிமையாளரிடமிருந்தே விலைக்கு வாங்கினார். அதேபோன்று அரிசி ஆலை உரிமையாளரால் உருவாக்கப்பட்ட ரூ.3600 மதிப்பு கொண்ட அரிசியும், உமியும் அவரால் விலைக்கு வாங்கப்பட்ட இயல்பு உள்ளீடான நெல்லின் மதிப்பில் (ரூ.2500) அடங்கி விடுகிறது. அவர் நெல்லை உருவாக்கவில்லை. படிநிலை 1ல் விவசாயி இதை உற்பத்தி செய்தார். அரிசி மற்றும் நெல்லின் மதிப்பைத் தனியாக கூட்டுவது ஒரேவித பொருட்களின் மதிப்பை பலமுறை கூட்டுவதற்குச் சமம். முதலில் நெல்லாகவும் பின்னர் அரிசி மற்றும் உமியாகவும் இறுதியாக இட்லி மற்றும் தோசையாகவும் கணக்கிடப்படுகிறது.

விற்பனைக்காக உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் ஒரு பொருள் தொடர்ந்து பயன்படுத்தப்படாவிட்டால் அப்பொருள் இறுதிப் பொருளாக மாறும். மேற்கூறிய எடுத்துக்காட்டாக ஒரு குடும்பத்தால் அவர்களின் நுகர்விற்காக அரிசி வாங்கப்பட்டால் இதுவே இறுதிநிலைக்புள்ளியாகும். இட்டிலியும், தோசையும் குடும்பத்தால் அவர்களுக்காகவே தயாரிக்கப்படுமேயன்றி விற்பதற்காக அல்ல.




- மேலே உள்ள எடுத்துக்காட்டில் நெல் அல்லது அரிசி என்பது இடைநிலைப்பொருள் மற்றும் இட்லி என்பது இறுதிநிலைப்பொருள். நம் அன்றாட வாழ்வில் நுகரும் சில பொருட்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிற்கும் இடைநிலைப்பொருளை எழுதி பட்டியலை நிரப்பு.

| இறுதிநிலைப்பொருள் | இடைநிலைப்பொருள் |
|---|---|
| குறிப்பேடு | |
| கார் | |
| கணினி | |



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இந்தப்படிநிலைகளைக் காணும் மற்றொரு வழிமுறையும் ஒவ்வொரு நிலையிலும் பொருள் உற்பத்தியாளரால் சேர்த்துக்கொள்ளப்படும் மதிப்பின் மீது மட்டும் மையப்படுத்துவதாகும். உற்பத்தியாளரால் இயல்பான உள்ளீடுகளை வாங்கி சேர்க்கப்பட்ட அதன் மதிப்பை கண்டறிய நாம் மேலே உள்ள எடுத்துக்காட்டை மீண்டும் பார்க்கவேண்டும்.

நிலை 1 விவசாயியால் அரிசி ஆலை உரிமையாளருக்கு நெல்விற்பனை ரூ.2500
உள்ளீடுகள் வாங்க 0 விலையை கழிப்பதால் சேர்க்கப்பட்ட மதிப்பு ரூ.2500
நிலை 2 அரிசி ஆலை உரிமையாளரால் உணவுவிடுதியாளருக்கு விற்கப்பட்ட அரிசி மற்றும் உமியின் விற்பனை ரூ.3600
வாங்கிய உள்ளீடுகளின் விலை ரூ.2500ஐ கழித்தால் சேர்க்கப்படட மதிப்பு ரூ.1100
நிலை 3 இட்லி, தோசை விற்பனை மதிப்பு ரூ.5000
வாங்கிய உள்ளீடுகளின் விலை ரூ.3600ஐ கழித்தால் சேர்க்கப்பட்ட மதிப்பு ரூ1400
அனைத்து நிலைகளிலும் சேர்க்கப்பட்ட மதிப்பு 2500+1100+1400

- கலந்துரையாடு : இரண்டு முறைகளும் ஒரேவிதமான முடிவுகளை ஏன் தருகின்றன?

ஒவ்வொரு நிலையிலும் கூட்டப்படும் மதிப்பு அல்லது இறுதிநிலை பொருட்சேவைகளின் மதிப்பினை எடுத்துக்கொண்டு அதை சேர்த்துக்கொள்ளும்போது மட்டுமே அது முழுமையான பொருள்தரும். ஒரு குறிப்பிட்ட ஆண்டின்போது ஒவ்வொரு துறையிலும் உருவாக்கப்படும் இறுதிநிலைப் பொருட் சேவைகளின் மதிப்பு அந்த ஆண்டிற்கான அத்துறையின் மொத்த உற்பத்தியை வழங்குகிறது. மேலும் மூன்று துறைகளின் மொத்த உற்பத்தியை ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) என்று அழைக்கப்படுகிறது. இது ஒருகுறிப்பிட்ட ஆண்டின் போது ஒரு நாட்டிற்குள் உற்பத்தி செய்யப்படும் அனைத்துப் பொருட்சேவைகளின் மதிப்பு ஆகும்.

2013-2014ஆம் ஆண்டிற்காக தரப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி எண்களை நீங்கள் கவனித்திருக்கலாம். இந்த எண் விவரங்கள் ஏப்ரல் 2013 முதல் மார்ச் 2014 வரை உள்ளவற்றை குறிப்பிடுவதாகும். இந்த காலவேலையை நிதியாண்டு என்றும் அழைப்பர்.

உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து இறுதிநிலைப் பொருட் சேவைகளின் சந்தை மதிப்பை மொத்த உள்நாட்டு உற்பத்தி பதிவு செய்கிறது. ஆனால் சந்தையில் வாங்கப்படாத மற்றும் விற்கப்படாத பல கூறுகள் உள்ளன. ஒரு முக்கியமான எடுத்துக்காட்டு வீட்டில் செய்யப்படும் வேலைகளான சமைத்தல், தூய்மை செய்தல், நிர்வகித்தல், குழந்தைகளை வளர்த்தல், தாவரங்களையும், கால்நடைகளையும் வளர்த்தல் போன்றவை. பெரும்பாலான சமயங்களில் இவை எவ்வித பணப்பரிமாற்றத்தையும் ஈடுபடுத்தாததால் பொருளாதாரத்திற்கு அவைமிகவும் முக்கியமானவையாக மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவீட்டிற்கு வெளிப்புறத்திலேயே இருந்துவிடுகின்றன. மேலும் இன்றளவிலும் இந்தியாவிலும், உலகமெங்கிலும் ஊதியம் வழங்கப்படாத வேலைகள் பெரும்பாலும் பெண்களாலேயே செய்யப்படுகின்றன.

- கீழ்காணும் அட்டவணையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பு தரப்பட்டுள்ளது. 2010-2011ஆம் ஆண்டிற்கு காட்டப்பட்டுள்ள மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தைக் கணக்கிடவும்.

| ஆண்டு | மொத்த உள்நாட்டு உற்பத்தி (ரூபாய் கோடிகளில்) | முந்தைய ஆண்டின் GDPயில் சதவீத மாற்றம் | GDPயின் வளர்ச்சி வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|
| 2009-10 | 45,16,000 | - | - |
| 2010-11 | 49,37,000 | [ (49,37,000 – 45,16,000)/ 45,16,000] *100 | = 9.32 % |
| 2011-12 | 52,44,000 | | |
| 2012-13 | 55,05,000 | | |



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**துறைகளில் முக்கியத்துவத்தில் மாற்றங்கள் - உற்பத்தி செய்யப்பட்ட பொருட்சேவைகளின் மதிப்பு மற்றும் மக்களின் வேலைவாய்ப்பு :**

பொருட் சேவைகள் மிகவும் அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதால் சில ஆண்டுகளாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவு எவ்வளவு அதிகரித்துள்ளது என்பதை நாம் இதுவரை தெரிந்துகொண்டோம். இந்த அதிகரிப்பு எவ்வாறு நிகழ்ந்தது என்பதையும், இந்த மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சிக்கு எவ்வகையான செயற்பாடுகள் துணைபுரிந்தன என்பதைத் தெரிந்துகொள்வது அவசியமாகும். தற்போது வளர்ச்சியடைந்துள்ள பல நாடுகள் வளர்ச்சியின் தொடக்க நிலைகளின் போது மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு மிக உறுதுணையாக விவசாயமும், அதனைச்சார்ந்த பிற செயற்பாடுகளும் என்பது கவனிக்கப்பட்டு வருகிறது.

சாகுபடி முறைகள் மாறியதால் விவசாயத்துறை வளம் பெறத்தொடங்கியது. முன்பு இருந்ததை விட மிக அதிக அளவில் உணவு உற்பத்தி செய்யப்பட்டது. பிற உற்பத்தியாளர்களாலும் முக்கியமான உணவுத் தேவைகள் சந்திக்கப்படுவதால் மக்களில் பலர் தற்போது பிற செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். கைவினைக் கலைஞர்கள் மற்றும் வணிகர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் பொருட் சேவைகளின் தேவை மேலும் அதிகரித்துள்ளது. மேலும் ஆட்சியாளர்கள் மக்களில் பலரை நிர்வாகிகளாகவும், இராணுவ வீரர்களாகவும் பணியமர்த்தியுள்ளனர். எனினும் இந்த நிலையில் ஒட்டுமொத்தச் சூழலில் உற்பத்தி செய்யப்பட்ட பெரும்பாலான பொருட்கள் விவசாயம் மற்றும் அதைச்சார்ந்த துறைகளிலிருந்தே வருகின்றன. இந்தத் துறையில் அதிக எண்ணிக்கையில் மக்கள் பணியாற்றுகின்றனர்.

முன் வகுப்புகளில் நீங்கள் தொழிற்புரட்சியைப் பற்றி படித்ததை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். பொருட்களை தயாரிப்பதில் புதியமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதால் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு விரிவடையத் தொடங்கின. முன்பு பண்ணைகளில் பணியாற்றிய மக்கள் தற்போது தொழிற்சாலைகளில் அதிக அளவில் பணியாற்றத் தொடங்கிவிட்டனர். மக்கள் பல பொருட்களை பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். தொழிற்சாலைகளில் மிகவும் குறைந்த விலைகளில் பேரளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்பொருட்கள் உலகெங்கிலுமுள்ள சந்தைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. இந்த நாடுகளில் தொழில் உற்பத்தியானது பொருட் சேவைகளின் மொத்த உற்பத்தியிலும், மக்களின் வேலைவாய்ப்புகளிலும் படிப்படியாக மிகவும் முக்கியத்துறையாக மாறியுள்ளது. அதாவது காலப்போக்கில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. துறைகளின் முக்கியத்துவம் மாறியுள்ளது என்பது இதன்பொருள். தொழில்துறை மேலாண்மை பொருந்திய துறையாக மாறியது. வேலை வாய்ப்பு மற்றும் உற்பத்தி போன்ற இரண்டிலும் விவசாயத்துறையின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது.

கடந்த 50ஆண்டுகளில் வளர்ந்த நாடுகளில் தொழில்துறையிலிருந்து சேவைத்துறைக்கு மேலும் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. சேவைத்துறை மொத்த உற்பத்தியில் மிக முக்கியமானதாக மாறியுள்ளது. உழைக்கும் மக்களில் பெரும்பான்மையோர் தற்போது மாறி சேவைத்துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் உற்பத்தியின் பெரும்பாலான செயற்பாடுகள் சேவைத்துறையைச் சார்ந்ததேயன்றி தொழிற்துறைப் பொருட்களைச் சார்ந்ததல்ல. இது வளர்ந்த நாடுகளில் கடைபிடிக்கப்படும் பொதுமுறையாகும். இது போன்ற முறை இந்தியாவில் கடைபிடிக்கப்படுகிறதா?

பின்வரும் வட்டவரைபடங்களைப் பார். 1973-74 மற்றும் 2013-2014 என்னும் இரண்டு நிதியாண்டுகளுக்காக மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பல்வேறு செயற்பாடுகளின் பங்கீடு இங்கு தரப்பட்டுள்ளது. வட்டமானது கொடுக்கப்பட்ட ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை குறிக்கிறது. விவசாயம், தொழில் மற்றும் சேவைகள் என்னும் மூன்று துறைகளின் உற்பத்தியைக் கொண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி உருவாக்கப்படுகிறது. மாறாக, சேவைகள் மூன்று வகைகளாகக் காணப்படுகின்றன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

| சேவைகள் எவற்றைக் கொண்டுள்ளன? | |
|---|---|
| சமூகம், சமுதாயம் மற்றும் தனிமனித சேவைகள் | பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, ஆரோக்கியம், கால்நடை மருத்துவ செயற்பாடுகள், ஊடகங்கள், நூல்நிலையம், ஆவணக்கிடங்குகள், அருங்காட்சியங்கள் மற்றும் பிற கலாச்சார செயற்பாடுகள் போன்றவை. |
| நிதி, ஆயுள் காப்பீடு மற்றும் வீட்டுமனை கொள்முதல் விற்பனை | வங்கிச் சேவைகள், அஞ்சலக் சேமிப்புக் கணக்குகள், வங்கியல்லாத நிதிநிறுவனங்கள், ஆயுள் காப்பீடு மற்றும் பொதுக்காப்பீடுக் கழகங்கள், தரகர்களின் சேவைகள் மற்றும் வீட்டுமனைக் கொள்முதல் நிறுவனங்கள் போன்றவை. |
| வாணிகம், உணவுவிடுதிகள், போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு | |

- வாணிகம், உணவுவிடுதிகள், போக்குவரத்துகள் மற்றும் தகவல்தொடர்புகளுக்கு எடுத்துக்காட்டுகளை உங்களால் கண்டறிய முடியுமா?

*வரைபடம் 3.2 மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பல்வேறு துறைகளின் பங்கீடு*




43 ஆண்டு காலஇடைவெளிகளின் போது விவசாயத்துறையின் உற்பத்திப் பங்கீடு வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தொழில் உற்பத்தியின் பங்கீடு ஓரளவிற்கு அதிகரித்தது. இதற்கு மாறாக, சேவைச் செயற்பாடுகளின் பங்கீடு பேரளவில் அதிகரித்தது. சேவை செயற்பாடுகளின் மூன்று துறைகளில் இரண்டு விரிவுபடுத்தப்பட்டுள்ளன.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## வேலைவாய்ப்பு – இந்தியாவில் உழைக்கும் வாழ்க்கை

ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது அந்த நாட்டின் உழைக்கும் மக்களின் மொத்த எண்ணிக்கையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் தொகை அதிகரிக்குந்தோறும் வேலையைத் தேடுபவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவது அந்த நாட்டிற்கு இன்றியமையாததாகும். பொருளை ஈட்ட மக்களுக்கு பணிகள் கிடைக்காவிட்டால் உணவையும், பிற தேவைகளையும் அவர்கள் எவ்வாறு பெறுவர்?

2011ஆம் ஆண்டின் இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் உள்ள 1.2 பில்லியன் மக்களில் 460 மில்லியன் மக்கள் உழைப்பாளர்களாவர். அதாவது மக்கள் சில உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். கீழ்காணும் அட்டவணை இந்தியாவிலுள்ள உழைப்பாளர்களைப் பற்றிய சில அடிப்படை உண்மைகளைக் காட்டுகிறது.

அட்டவணை 3.1 2011-2012ஆம் ஆண்டில் இந்தியாவில் உழைப்பாளர்களின் பகிர்வு (%)

| துறை | இருப்பிடம் | | பாலினம் | | மொத்த |
|---|---|---|---|---|---|
| | கிராமம் | நகரம் | ஆண் | பெண் | உழைப்பாளர்கள் |
| விவசாயத்துறை | 67 | 9 | 44 | 63 | 49 |
| தொழில்துறை | 16 | 31 | 26 | 20 | 24 |
| சேவைத்துறை | 17 | 60 | 30 | 17 | 27 |
| மொத்தம் | 100 | 100 | 100 | 100 | 100 |

இந்தியாவில் துரதிருஷ்டவசமாக மொத்த உற்பத்தியில் மூன்று துறைகளின் பங்கீட்டில் ஒரு மாற்றம் இருந்து வருகிறது. அதே போன்ற ஒரு மாற்றம் வேலை வாய்ப்பிலும் ஏற்பட்டுள்ளது. வரைபடம்3ல் 1973-74, 2015-16 மூன்று துறைகளிலும் வேலை வாய்ப்பின் பங்கீட்டினைக் காட்டுகிறது. தற்போதும் விவசாயத்துறை மிகப்பெரிய வேலை வழங்கும்துறையாக தொடர்கின்றது. விவசாயத்துறையிலிருந்து வேலைவாய்ப்பு ஏன் மாற்றப்படவில்லை? ஏனெனில் தொழில்துறை மற்றும் சேவைத்துறைகளில் போதிய வேலைவாய்புகள் உருவாக்கப்படவில்லை. இக்காலகட்டத்தில் தொழிலகப் பொருட்களின் உற்பத்தியானது பத்து மடங்கு அதிகரித்தாலும் வேலைவாய்ப்பு சுமார் மூன்று மடங்கு மட்டுமே உயர்ந்தது. சேவைத் துறைக்கும் இதுவே பொருந்துவதாக உள்ளது. பொருட்களின்உற்பத்தி 14மடங்கு அதிகரித்த போதும் வேலைவாய்ப்பு ஐந்து மடங்கு மட்டுமே அதிகரித்தது.

> மேலே கண்ட அட்டவணைக்கொண்டு கோடிட்ட இடத்தை நிரப்புக.
>
> - பெரும்பான்மையான விவசாயிகள் வாழும் இடம் ________.
> - விவசாயத்தில் ஈடுபடும் அதிகமானோர் ________பாலினம். குறைவான ________ புற மக்கள் சேவைத்துறையில் ஈடுபடுகின்றனர்.
> - 90% நகர்ப்புற மக்கள் ________மற்றும்________ துறைகளில் பணியாற்றுகின்றனர்.
> - ஆண்களோடு ஒப்பிடும்போது, பெண்கள் ________ மற்றும் ________ துறைகளில் குறைவான எண்ணிக்கையில் பணியாற்றுகின்றனர்.

இதன் விளைவாக நாட்டின் உழைப்பாளர்களில் பாதிக்கும் மேலானோர் விவசாயத்துறையிலேயே பணியாற்றி வருகின்றனர். மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு அவர்களின் பங்களிப்பு ஆறில் ஒரு பங்கு மட்டுமே. இதற்கு மாறாக, தொழில் மற்றும் சேவைத்துறைகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நான்கில் மூன்று பங்கினை உற்பத்தி செய்கின்றன. அதே சமயம் அவர்களால் பணியமர்த்தப்பட்ட உழைப்பாளர்களின் விகிதம் பாதிபேர் மட்டுமே. விவசாயத்துறை உழைப்பாளர்கள் அவர்களால் இயன்ற அளவு உற்பத்தி கிடைப்பதில்லை என்பது தான் இதன் பொருளா?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

விவசாயத்தில் அதிகமக்கள் ஈடுபட்டிருப்பினும் ஒவ்வொருவரும் முழுமையாக ஈடுபடுவதில்லை. எனவே, சில மக்கள் அதிலிருந்து வெளியேறிவிட்டாலும் உற்பத்தி பாதிக்கப்படுவதில்லை. வேறுவிதமாகக் கூறினால், விவசாயத்துறையில் உள்ள உழைப்பாளர்கள் குறைந்த வேலையுடையவர்களாக உள்ளனர்.

எடுத்துக்காட்டாக காயத்ரி என்னும் ஒரு சிறு விவசாயியை எடுத்துக்கொள்வோம். அவருக்கு மழைமீது மட்டுமே ஆதாரப்பட்ட நீர்ப்பாசன வசதியற்ற இரண்டு ஹெக்ட்டேர் நிலம் உள்ளது. அவர் ஜோவார் மற்றும் துவரை போன்ற பயிர்களை பயிரிடுகிறார். குடும்பத்திலுள்ள அனைத்து ஐந்து நபர்களும் அவர்களின் நிலத்தில் பணிபுரிகின்றனர். ஏன் என்று தெரியுமா? அவர்கள் வேலைக்கு வேறு எங்கும் செல்லவாய்ப்பில்லை. ஒவ்வொருவரும் வேலை செய்கின்றனர். யாரும் சோம்பலாக இருப்பதில்லை. ஆனால் உண்மையில் அவர்களின் உழைப்புதிறன் பிரித்துக்கொள்ளப்படுகிறது. ஒவ்வொருவரும் சில பணிகளைச் செய்தாலும் யாருக்கும் முழுமையான வேலைகிடைப்பதில்லை. இந்த சூழ்நிலையே குறைவேலை வாய்ப்பு (under employment) எனப்படுகிறது. மக்கள் வெளிப்படையாக வேலைசெய்தாலும் அவர்கள் அனைவரும் தங்கள் ஆற்றலைவிட குறைவாக வேலை செய்விக்கப்படுகின்றனர். இவ்வகையான குறைவேலை வாய்ப்பு, சிலருக்கு வேலை இல்லாமல் வேலைவாய்ப்பற்றவர்கள் எனத் தெளிவாக தோன்றுவதற்கு மாறாக மறைக்கப்படுகிறது. எனவே இது மறைமுக வேலையின்மை என்றும் அழைக்கப்படும்.

ஒரு நிலக்கிழார் காயத்ரியின் குடும்பத்திலுள்ள ஒன்று அல்லது இரண்டு உறுப்பினர்களை தன் நிலத்தில் வேலைசெய்ய பணியமர்த்திக்கொள்கிறார் என்று கருதுவோம். இப்போது காயத்ரியின் குடும்பம் கூலிகள் மூலமாக சிறிது அதிக வருவாயை ஈட்டுகிறது. அந்த சிறு நிலத்தினை கவனிக்க ஐந்துபேர் தேவையில்லாததால் இரண்டுபேர் அக்குடும்பத்திலிருந்து வெளியேறிவிட்டாலும் அவர்கள் வயலில் உற்பத்தி பாதிக்கப்படுவதில்லை. மேலே உள்ள எடுத்துக்காட்டில் இரண்டுபேர் கிராமப் பகுதிகளிலுள்ள தொழிற்சாலைக்கு வேலை செய்ய அல்லது வியாபாரத்திற்கு சென்றுவிடுகின்றனர் மீண்டும் அக்குடும்பத்தின் வருவாய் அதிகரிக்கும். அவர்களின் நிலத்திலிருந்தும் உற்பத்தி செய்வது தொடரும்.

இந்தியாவில் காயத்ரியைப் போன்று லட்சக்கணக்கான விவசாயிகள் உள்ளனர். இதன்பொருள் யாதெனில் வேளாண்துறையிலிருந்து பல மக்களை வெளியேற்றி அவர்களுக்கு வேறு எங்காவது தகுந்த வேலை வழங்கப்பட்டாலும் வேளாண் உற்பத்தி பாதிப்படையாது. பிற வேலைகளை மேற்கொள்பவர்களின் வருவாய் மொத்த குடும்ப வருவாயை அதிகரிக்கும்.

இந்த குறை வேலைவாய்ப்பு பிற துறைகளிலும் நிகழ்கிறது. எடுத்துக்காட்டாக, நகரங்களில் தினமும் வேலை வாய்ப்பு தேடும் ஆயிரக்கணக்கான தற்செயலான உழைப்பாளர்கள் சேவைத்துறையில் உள்ளனர். அவர்கள் வண்ணம்தீட்டுபவர்களாகவும், குழாய்கள் சீர்செய்பவர்களாகவும், பழுது பார்ப்பவர்களாகவும் மற்றும் பிற நிலையற்ற தொழில்களை செய்பவர்களாகவும் பணியமர்த்தப்பட்டு உள்ளனர். அவர்களில் பலருக்கு தினமும் வேலை கிடைப்பதில்லை. அதேபோல், சேவைத்துறையில் உள்ள பலர் தெருக்களில் வண்டி இழுப்பவர்களாகவும் முழுநாளும் உழைத்தாலும் மிகக்குறைந்த அளவிலேயே பொருளீட்டுபவர்களான ஏதேனும் பொருட்களை விற்பவர்களாகவும் உள்ளனர்.

*சேவை, தொழில், விவசாயம் வரைபடம் 3.3: வேலைவாய்ப்பில் துறைகளின் பங்கீடு*









Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்புகள் இல்லாததால் அவர்கள் இந்த வேலையைச் செய்கின்றனர்.

*வரைபடம் 3.4 மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூன்று துறைகளின் பங்கீடு*




- மேலே உள்ள வட்ட வரைபடங்களைப் பார்த்து கீழ்காணும் அட்டவணையை நிரப்புக.

| துறை | வேலைவாய்ப்பு (%) | | மொத்த உள்நாட்டு உற்பத்தி (%) | |
|---|---|---|---|---|
| | 1973-74 | 2015-16 | 1973-74 | 2015-16 |
| விவசாயம் | | | | |
| தொழில் | | | | |
| சேவைகள் | | | | |

சேவைத்துறை வளர்ந்திருந்தாலும், அனைத்து சேவைத்துறைச் செயற்பாடுகளும் சமஅளவில் வளர்ந்துவரவில்லை. இந்தியாவின் சேவைத்துறையில் பல்வேறுபட்ட வகை மக்கள் பணியாற்றுகின்றனர். ஒருபுறம் அளவான எண்ணிக்கையுள்ள சேவைகளில் மிகவும் திறமையான மற்றும் கற்றறிந்த பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். மறுபுறத்தில் சிறுஅங்காடியாளர்கள், பழுதுபார்ப்பவர்கள், போக்குவரத்துப் பணியாளர்கள் போன்ற சேவைகளில் மிக அதிக அளவில் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை ஈட்ட மிகவும் சிரமப்படுகின்றனர். இருப்பினும் அவர்களுக்கு மாற்று வேலை வாய்ப்புகள் கிடைக்காததால் இந்த சேவைகளை அவர்கள் செய்கின்றனர். இத்துறையின் ஒருபகுதி மட்டுமே முக்கியத்துவமடைந்து வளர்கின்றது.

### இந்தியாவில் ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்படாத துறைகளில் வேலைவாய்ப்புகள்

நாம் இதுவரை மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பல்வேறு துறைகள் எவ்வாறு துணைபுரிகின்றன என்பதைப் பார்த்தோம். மேலும் மூன்று துறைகளின் ஒப்பீட்டு முக்கியத்துவத்தையும் உணர்ந்தோம். இது உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட அல்லது ஏற்படாத மாற்றுகைகளை பகுத்தாய்வதற்கு நமக்கு உதவுகிறது.

நம் நாட்டில் வேலைவாய்ப்பில் கணிசமான மாற்றத்தை நம்மால் காணமுடிவதில்லை. மற்றும் இதை ஆராய்வதற்கு வேலைவாய்ப்பின் தன்மையை மையப்படுத்தும் மற்றொரு வகைப்பாட்டு முறையை நாம் பயன்படுத்துகிறோம். கீழே விவாதிக்கப்பட்டுள்ள வகைப்பாடு வேலை வாய்ப்பின் சிக்கல்களையும் வேலையுடன் மிகவும் முழுமையான அளவில் தொடர்புடைய நிலைமைகளையும் வலியுறுத்துகிறது.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## நரசிம்மன்



நரசிம்மன் ஒரு அரசு அலுவலகத்தில் பணியாற்றுகிறார். அவர் தன்னுடைய அலுவலகத்திற்கு காலை 9.30 மணிக்குச்சென்று மாலை 5.30வரை பணியாற்றுகிறார். அவர் தன் வீட்டிலிருந்து அலுவலகத்திற்குப் பயணம் செல்ல சுமார் 5கி.மீ தூரத்திற்கு தனது மோட்டார் பைக்கை பயன்படுத்துகிறார். அவர் மாதச்சம்பளத்தை சீராகப் பெறுகிறார். சம்பளத்துடன் அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட விதிமுறைகளின் வருங்கால வைப்புநிதியையும் அவர் பெறுகிறார். அவர் மருத்துவ மற்றும் பிற சலுகைகளையும் பெறுகிறார். நரசிம்மன் ஞாயிற்றுக்கிழமைகளில் அலுவலகத்திற்குச் செல்வதில்லை. விடுமுறை நாளான அன்றும் அவருக்கு சம்பளம் உண்டு. அவர் வேலையில் சேரும்போது பணியின் காலஅளவு மற்றும் நிபந்தனைகளைக் கொண்ட பணிநியமனப் படிவம் அவருக்கு வழங்கப்பட்டது.

## இராஜேஸ்வரி



இராஜேஸ்வரி என்பவர் கட்டுமானப் பணியாளராக பணியாற்றுகிறார். அவர் காலை 7மணிக்கு வேலைக்குச் சென்று மாலை 7மணிக்கு வீடு திரும்புகிறார். அவர்தினமும் பேருந்தில் 8 முதல் 10கி.மீ பயணம் செய்கிறார். கட்டுமானப்பணியாளர்கள் மதிய உணவு இடைவேளையாக மதியம் 1மணி முதல் 2மணி வரை ஓய்வைப்பெறுகின்றனர். அவருக்கு மாதத்தில் 10முதல் 12நாட்கள் மட்டுமே வேலைகிடைக்கிறது. மீதமுள்ள நாட்களுக்கு அவருக்கு வேலைஇல்லை. அந்த நாட்களுக்கு அவருக்கு எவ்வித கூலியும் வழங்கப்படுவதில்லை. அவர் ஒருநாள் கூலியாக ரூ.150ஐப் பெறுகிறார். பெரும்பாலும் அவருக்கு பணிமுடிந்தவுடன் அங்கேயே மாலையில் கூலிவழங்கப்பட்டுவிடுகிறது. அவர் ஒரே இடத்தில் மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு வேலை செய்தால் அவருக்கு பணிமுடிந்தவுடன் கூலிசெலுத்தப்படும். அவருக்கு பிப்ரவரி முதல் ஜுன் வரை அதிக அளவில் வேலைகிடைக்கும். ஜுலை முதல் ஜனவரி வரை வேலையற்ற காலமாகும். தன் சொந்த இருப்பிடத்தில் இராஜேஸ்வரி ஒரு சுயஉதவிக்குழுவில் உறுப்பினராக உள்ளார். இராஜேஸ்வரி வேலையில் இருக்கும்போது ஏதேனும் இறப்பு அல்லது விபத்து ஏற்பட்டால் அரசு ஓரளவிற்கு இழப்புத் தொகை வழங்குகிறது. வேலை செய்து கொண்டிருக்கும் போது விபத்துகள் நேர்ந்தால் மருத்துவசிகிச்சைக்காக அரசிடமிருந்து அதிக உதவி கிடைப்பதில்லை. அவர் கட்டுமானத் தலைவரின் கீழ் பணிபுரியும் குழுவில் ஒருபாகமே. ஒவ்வொரு கட்டுமானத் தலைவரின் கீழும் 6 முதல் 10 பணியாளர்கள் இருப்பர்.

நரசிம்மனும், இராஜேஸ்வரியும் முறையே ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்படாத துறைகளில் பணிபுரியும் உழைப்பாளர்களுக்கான சிறந்த எடுத்துக்காட்டுகளாவர். அவர்களுக்கிடையே பணிநிபந்தனைகளில் வேறுபாட்டை நீ காண்கிறாயா? ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்படாத துறைகளுக்கிடையே உள்ள வேறுபாடு நம் நாட்டில் பெரும்பாலான உழைப்பாளர்கள் எதிர்கொண்டுள்ள வேலைநிலை மற்றும் கூலிகளைப் பற்றி புரிந்துக்கொள்ள நமக்கு உதவுகிறது. இந்தியாவின் 92% உழைப்பாளர்கள் ஒழுங்கமைக்கப்படாத துறைகளிலும் 8%ம் மட்டும் ஒழுங்கமைக்கப்பட்ட துறையில் வேலை செய்கின்றனர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

வேலையின் கால அளவு நிரந்தரமாக இருக்குமிடங்களான வியாபார நிறுவனங்கள் அல்லது வேலை செய்யுமிடங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட துறையில் அடங்கும். எனவே அவற்றில் பணியாற்றுபவர்களுக்கு வேலை உறுதியைப் பெற்றுள்ளனர். அவை அரசாங்கத்தால் பதிவுசெய்யப்பட்டவை. அவற்றிற்கு பல்வேறு சட்டங்களான தொழிலகச் சட்டம், குறைந்தபட்ச ஊதியச்சட்டம், அங்காடிகள் மற்றும் நிறுவனங்களின் சட்டம் போன்றவற்றில் தரப்பட்டுள்ள அவற்றின் விதிமுறைகள் மற்றும் ஒழுங்கு முறைகளைப் பின்பற்ற வேண்டும். இது ஒழுங்கமைக்கப்பட்ட துறை என அழைக்கப்படுவதன் காரணம் இதற்கு சில முறை சார்ந்த செயல்முறைகள் மற்றும் சட்ட ஒழுங்குமுறைகளை அவை பின்பற்ற வேண்டும். ஒழுங்கமைக்கப்பட்ட துறைகளில் உள்ள பணியாளர்களுக்கு பணிப்பாதுகாப்பு உள்ளது. அவர்கள் ஒருகுறிப்பிட்ட மணிநேரம் வரை மட்டுமே பணியாற்றும் படி எதிர்பார்க்கப்படுகின்றனர். அதிக நேரம் பணியாற்றினால் அவர்களுக்கு அதிகநேர ஊக்கத்தொகை பணிஆணையரால் வழங்கப்படுகிறது. பணி ஆணையர்களிடமிருந்து அநேகமான பிற நன்மைகளும் அவர்கள் பெறுவர். வேலையின் காலஅளவு சீராக இருக்குமிடங்களான வியாபார நிறுவனங்கள் அல்லது பணியாற்றும் இடங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட துறையில் அடங்கும். அவர்களுக்கு காரணவிடுப்புகளுக்கும், பொதுவிடுமுறை நாட்களுக்கும் சம்பளம் செலுத்தப்படுவதோடு வருங்கால வைப்புநிதி போன்றவையும் அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு மருத்துவ நன்மைகளும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் சட்டங்களின் படி பணிஆணையர் குடிநீர் மற்றும் பாதுகாப்பான பணிமனை சுற்றுச்சூழல் போன்ற வசதிகளை உறுதியளிக்க வேண்டியுள்ளது. அவர்கள் ஓய்வு பெறும்போது பெரும்பாலான பணியாளர்களுக்கு நல்ல ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அரசு அல்லது கம்பெனிகள் அல்லது பெரிய நிறுவனங்களில் பணிபுரியும் மக்கள் ஒழுங்கமைக்கப்பட்ட துறையில் உள்ளனர்.

பெரும்பாலும் அரசின் கட்டுப்பாட்டிற்கு வெளியே இருக்கும் சிறிய மற்றும் சிதறிய அமைப்புகளைக் கொண்டதே ஒழுங்கமைக்கப்படாத துறை. இவற்றிற்கு விதிமுறைகளும், சட்ட ஒழுங்குமுறைகளும் இருந்தாலும் அவை பின்பற்றப்படுவதில்லை அல்லது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இங்கு உள்ள பணிகளுக்கு குறைந்தளவு ஊதியமே வழங்கப்படுகின்றது. மேலும் இது நிரந்தரமானதன்று. கூடுதல் வேலை நேரம், ஊதியம் விடுப்பு, பொதுவிடுமுறை நாட்கள், உடல்நலக்குறைவிற்கான விடுப்பு போன்ற சலுகைகள் இங்கு இல்லை. வேலை பாதுகாப்பற்றது. மக்கள் காரணமின்றி வேலையை விட்டு விலகும்படி ஆணையிடப்படுபவர். சில பருவகாலங்களில் குறைவான வேலை இருக்கும்போது சிலபேர் வேலையை விட்டு விலகிச் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுவர். முதலாளியின் விருப்பம் அல்லது சந்தை நிலைகளின் மாற்றத்தின் அடிப்படையில் பலரின் வேலை ஆதாரப்பட்டுள்ளது.

மேலே உள்ள நிபந்தனைகளுடன் இத்துறையில் சுயமான வேலையில் ஈடுபட்டு வரும் பெருமளவிலான மக்களும் சுயவேலை செய்பவர்களும் அடங்குவர். இத்துறையில் பாதிக்கும் பெரும்பாலானோர் சுயவேலை செய்பவர்கள். நீங்கள் அவர்களை எங்குவேண்டுமானாலும், சிறுவேலைகளான வீதிகளில் விற்பவர்கள் அல்லது பழுதுவேலை செய்பவர்களாக அல்லது அங்காடிகளில் விற்பவர்களாகவும காணலாம். அதே போன்று பெரும்பாலான விவசாயிகளும் சுயவேலை செய்பவர்களாகவும், குத்தகை உழைப்பாளர்களாகவும், தேவைப்படும் சமயங்களில் வேலை செய்பவர்களாகவும் உள்ளனர்.

ஒழுங்கமைக்கப்பட்ட துறை பெரும்பாலான மக்கள் விரும்பும் பணிகளை வழங்குகின்றது. ஆனால் ஒழுங்கமைக்கப்பட்ட துறைகளில் வேலை வாய்ப்புகள் மிகவும் மெதுவாக வளர்ந்து வருகின்றன. அதன் விளைவாக, மிகக்குறைவான ஊதியத்தை வழங்கும ஒழுங்கமைக்கப்படாத துறைகளில் நுழையும்படி அதிக எண்ணிக்கையில் பணியாளர்கள் வலியுறுத்தப்படுகின்றனர். அவர்கள் அவ்வப்போது ஏய்க்கப்படுவதுடன் நல்ல ஊதியமும் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை அவர்களின் வருவாய் மிகவும் குறைவாகவும், ஒழுங்கற்றதாகவும் உள்ளது. ஒழுங்கமைக்கப்பட்ட துறையில் அவர்கள் தங்களின் வேலையை இழக்கும்போது குறைவருவாயில் சீரமைக்கப்படாத வேலைகளை மேற்கொள்ளும்படி வற்புறுத்தப்படுகின்றனர். அதிக வேலைக்கான தேவையுடன் ஒழுங்கமைக்கப்படாத துறையிலுள்ள பணியாளர்களுக்கு பணிக்கான பாதுகாப்பும், ஆதரவும் தேவைப்படுகிறது.

பாதுகாப்புத் தேவைப்படும் இந்த பலவீனமான மக்கள் யார்? கிராமப் புறங்களில், ஒழுங்கமைக்கப்படாத துறையில் பெரும்பாலும் நிலமற்ற விவசாயக்கூலிகள், சிறிய மற்றும் இறுதிநிலை விவசாயிகள், பயிர் பங்கீட்டாளர்கள் மற்றும் கைவினைக்கலைஞர்கள் (நெசவாளர்கள், பொற்கொல்லர்கள், தச்சர்கள் மற்றும் கருமான்கள் போன்றோர்) அடங்குவர். இந்தியாவில் உள்ள கிராமப்புற குடும்பங்களில் ஏறக்குறைய 80% சிறிய மற்றும் இறுதிநிலை விவசாய வகையினராக உள்ளனர். இந்த விவசாயிகளுக்கு குறித்த காலத்தில் விதைகளை வழங்குதல், விவசாய உள்ளீடுகள் கடன்கள், சேமிப்பு வசதிகள் மற்றும் சந்தைவழிகள் போன்ற போதிய வசதிகள் வாயிலாக ஆதரவு தேவைப்படுகிறது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

விவசாயக் கூலிகளாக அவர்களுக்கு போதிய அளவு வேலையும், குறைந்தபட்ச ஊதியமும் தேவைப்படுகிறது.

நகர்ப்புறங்களில், ஒழுங்கமைக்கப்படாத துறையில் சிறுதொழில், கட்டுமானப்பணிகளில் நிரந்தரமற்ற பணியாளர்கள், வாணிகம் மற்றும் போக்குவரத்துத் துறை போன்றவற்றில் பணிபுரிபவர்களும், தெருவில் விற்பவர்களும், தலைச்சுமைப் பணியாளர்களும், துணி தயாரிப்பவர்கள், குப்பைகளில் கிழிந்த பொருட்களை/கந்தைகளைச் சேகரிப்பவர்கள் போன்றவர்களும் அடங்குவர். சிறுதொழில்களுக்கும் கச்சாப் பொருட்களை வாங்கவும் உற்பத்திகளை சந்தைகளில் விற்கவும் அரசின் ஆதரவு தேவைப்படுகிறது. கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள தற்செயலான பணியாளர்களுக்கு பாதுகாப்பு தேவை.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைவாழ்மக்கள், மற்றும் பின்தங்கிய வகுப்பினர் ஆகிய சமூகங்களிலிருந்து வரும் பெருமளவிலான பணியாளர்கள் தங்களை ஒழுங்கமைக்கப்படாத துறையில் பணியமர்த்திக் கொள்கின்றனர் என்பதை நாம் காணமுடிகிறது. இச்சமூகங்களிலிருந்து வரும் பெண் தொழிலாளரின் நிலை மிகவும் மோசமானது. நிரந்தரமற்ற மற்றும் குறைவான ஊதியப்பணியைப் பெறுவதுடன் இத்தொழிலாளர்கள் சமுதாய வேறுபாட்டினையும் எதிர்கொள்கின்றனர். எனவே பொருளாதார மற்றும் சமுதாய முன்னேற்றம் என்னும் இரண்டிற்கும் ஒழுங்கமைக்கப்படாத துறையிலுள்ள தொழிலாளர்களுக்கு பாதுகாப்பும், ஆதரவும் தேவை. இத்துறைகளிலிருந்து கிடைக்கும் பொருட்சேவைகளின் உற்பத்தியையும், வேலை வாய்ப்பையும் ஆராய்வோமாக.ஒழுங்கமைக்கப்படாத துறையும் மொத்த தேசிய உற்பத்திக்குத்துணைபுரிகின்றது. 2004-05ஆம் ஆண்டுகளின் போது அனைத்துத் தொழிலாளர்களில் 92% ஒழுங்கமைக்கப்படாத துறையில் பணிபுரிந்து அனைத்து உற்பத்தியில் பாதியை உற்பத்திசெய்தனர். மறுபுறம் தொழிலாளர்களில் 8% மட்டும் ஒழுங்கான வேலை வாய்ப்பைப் பெற்று பொருட் சேவைகளில் 50% உற்பத்தியை வழங்கினர். இந்த நிறுவனங்களின் உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்குச் சந்தைகள் கிடைத்தாலும் கௌரவமான/வசதிவாய்ப்புள்ள வேலைகளில் மக்களில் ஒருசிறிய பகுதியினரையே அவை ஆதரிக்கின்றன. இது மிகவும் சமமற்ற சூழ்நிலையாகும். மீதுமுள்ளவர்களுக்கு பாதுகாப்பற்ற, குறைவாக ஊதியம் வழங்கப்படும் பணிகளே கிடைக்கிறது. அல்லது குறைந்த வருவாய் கொண்ட சுயவேலைசெய்பவர்களாகவும் அல்லது குறைவேலைவாய்ப்புடையவர்களாகவே உள்ளனர்.

அட்டவணை 3.2 ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்படாத துறைகளின் தொண்டு

| துறை | பங்களிப்பு (மொத்தத்தில் %) | |
|---|---|---|
| | வேலைவாய்ப்பு | மொத்த உள்நாட்டு உற்பத்தி |
| ஒழுங்கமைக்கப்பட்ட துறை | 8 | 50 |
| ஒழுங்கமைக்கப்படாத துறை | 92 | 50 |
| மொத்தம் | 100 | 100 |

### அதிக மற்றும் சிறந்த வேலைவாய்ப்புச் சூழ்நிலைகளை எவ்வாறு உருவாக்குவது

பெருமளவிலான மக்களுக்கு தொழில் மற்றும் சேவைத்துறைகளில் ஒழுங்கான வேலைவாய்ப்பு கிடைக்கவேண்டும். ஆனால் இது நடப்பதில்லை, தொழில் மற்றும் சேவைத்துறைகளில் உற்பத்தி அதிகரித்ததைப் போன்று வேலைவாய்ப்பு அதிகரிக்கவில்லை. மக்கள் எவ்வாறு வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்று நாம் பார்த்தோமானால் வேலை கிடைப்பது வெளிப்படையாக உள்ள ஒழுங்கமைக்கப்படாத துறைகளிலேயே பெரும்பாலான மக்கள் இருப்பதை நாம் காணலாம். உற்பத்தியின் அதிகரிப்பால் தொழிலாளர்களில் 8% மட்டுமே பயனடைபவர்களாக உள்ளனர். எனவே அனைத்து மக்களுக்கும் எவ்வழிகளில் வேலைவாய்ப்பினை அதிகரிக்க முடியும். இவற்றில் சிலவற்றை நாம் காணலாம்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

காயத்ரியின் நிலையை எடுத்துக்கொள்வோமானால் அவருக்கு நீர்ப்பாசன வசதியற்ற இரண்டு ஹெக்டேர் நிலப்பரப்பு உள்ளது. அவருடைய குடும்பத்திற்கு அரசாங்கம் சிறிதளவு பணத்தை செலவழித்து அல்லது வங்கிகள் கடனை வழங்கி தன் நிலத்திற்கு நீர்ப்பாசனம் செய்ய கிணறு கட்ட உதவிசெய்கிறது. பின்னர் காயத்ரி தன் நிலத்திற்கு நீர்ப்பாசனம் செய்து ரபி பருவத்தின் போது கோதுமையை இரண்டாம் பயிராக விளைவிக்கிறார். ஒரு ஹெக்டேர் கோதுமை விலை நிலத்தில் 50 நாட்களுக்கு இரண்டுபேருக்கு வேலைவாய்ப்பு (விதைத்தல், நீர்ப்பாய்ச்சுதல், உரமிடுதல் மற்றும் அறுவடை செய்தல் போன்றவை இதில் அடங்கும்) வழங்கமுடியும். எனவே தன் சொந்த நிலத்தில் குடும்பத்திலும் மேலும் இருவருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். தற்போது பல சிறிய அணைக்கட்டுகள் மற்றும் கால்வாய்கள் தோண்டப்பட்டு இதுபோன்ற விளைநிலங்களுக்கு நீர்ப்பாசனம் வழங்கப்படுகிறது. இது விவசாயத்துறையில் பேரளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்க வழிவகுத்து குறைவேலைவாய்ப்புச் சிக்கலைக் குறைக்கிறது.

தற்போது, காய்த்ரியும், பிற விவசாயிகளும் முன்பைவிட மிக அதிகளவில் உற்பத்தி செய்கின்றனர் என கருதுவோம். அவர்கள் இதில் சிறிதளவு விற்கவேண்டிய தேவையும் உள்ளது. இதற்காக அவர்கள் அருகிலுள்ள நகரத்திற்கு தங்கள் உற்பத்திகளைக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. அரசு சிறிதளவு பணத்தை போக்குவரத்திற்கும், பயிர்களைப்பாதுகாப்பதற்கும் முதலீடு செய்வதால் அல்லது சிறிய சுமைவண்டிகள் எங்கும் செல்லுமாகையால் சிறந்த சாலைவசதிகளை கிராமப்புறங்களில் அமைத்தால் தற்போது நீர்ப்பாசன வசதி பெற்ற காய்த்ரி போன்ற பல விவசாயிகள் இப்பயிர்களை தொடர்ந்து விளைவிக்கவும் விற்கவும் முடியும். இந்த செயற்பாட்டால் உற்பத்தித்திறன் கொண்ட வேலைவாய்ப்பை விவசாயிகளுக்கு மட்டுமின்றி போக்குவரத்து அல்லது வாணிகம் போன்ற சேவைகளில் உள்ளவர்களுக்கும் வழங்கமுடியும்.

காயத்ரிக்கு நீர்ப்பாசன வசதி மட்டும் இருந்தால் போதாது. நிலத்தை சாகுபடிசெய்ய அவருக்கு விதைகள், உரங்கள், விவசாயக் கருவிகள் போன்றவையும் நீரை இறைக்க நீர் இறைக்கும் இயந்திரமும் தேவைப்படுகிறது. ஏழை விவசாயியாக இருப்பதால் இவ்வசதிகளில் பலவற்றை அவரால் பெறஇயலாது. எனவே அவர் கடன் தருபவர்களிடமிருந்து பணத்தை கடன்வாங்கி உயர்ந்த வட்டிவீதத்தை செலுத்துவார். உள்ளூர் வங்கி அவருக்கு கணிசமான வட்டி விகிதத்தில் கடனளித்தால் குறித்த காலத்தில் இவையனைத்தையும் அவரால் வாங்கி தன் நிலத்தை சாகுபடி செய்ய இயலும். இதன் பொருள்யாதெனில் நீர் வசதியுடன், விவசாயத்தை மேம்படுத்த விவசாயிகளுக்கு மலிவான விவசாயக் கடன்களையும் நாம் வழங்க வேண்டும்.

இச்சிக்கலை சமாளிக்கக் கூடிய மற்றொரு வழிமுறையாதெனில் அதிக அளவில் மக்கள் பணியாற்றும் நடுத்தரமான கிராமப்புறங்களில் உள்ள தொழில்கள் மற்றும் சேவைகளை கண்டறிந்து, மேம்படுத்தி மற்றும் சுட்டிக்காட்டுதல் ஆகும். எடுத்துக்காட்டாக, பல விவசாயிகள் கம்பு மற்றும் பிற பருப்பு வகைகளை விளைவிக்க முடிவுசெய்தனர். மாவரைக்கும் ஆலைகளை ஏற்படுத்தி இவற்றை பெற்று செயல்படுத்தி நகரங்களில் அவற்றை விற்பதும் ஒரு எடுத்துக்காட்டாகும். ஒருகுளிர் சேமிப்புக்கிடங்கை திறப்பது விவசாயிகளுக்கு தங்களின் உற்பத்திப் பொருட்களான மிளகாய் மற்றும் வெங்காயம் ஆகியவற்றை சேமிக்கவும் நல்லவிலை இருக்கும் போது அவற்றை விற்கவும் ஒரு வாய்ப்பு வழங்கப்படுவதாகவும் உள்ளது. காட்டுப்பகுதிகளுக்கு அருகிலுள்ள கிராமங்களில் மக்கள் காட்டுத்தேனைக் கொண்டு வருவதால் அங்கு நாம் தேன் சேகரிப்பு மையங்களைத் தொடங்கலாம். காய்கறிகள் மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்களான தக்காளி, மிளகாய், மாங்காய், அரிசி, துவரை, பழங்கள் போன்றவற்றைப் பதப்படுத்தி வெளிப்புறச் சந்தைகளில் விற்க துணைபுரியும் தொழிற்சாலைகளையும் அமைக்க முடியும். பெரியநகர்ப்புற மையங்களில் அல்லாமல் நடுத்தரமான கிராமப்புறங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்புகளையும் இது வழங்கும்.

இன்று நாம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவது மட்டுமின்றி திறமையாக பணியாற்றுவதற்கும் இயந்திரங்களை இயக்குவதற்கும் திறமையுள்ள பல தொழிலாளர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டியுள்ளது. நாம் கிராம மற்றும் நடுத்தர நகர்ப்புறங்கள் இரண்டிலும் உள்ள பல தொழிற்சாலைகளில் முதலீடு செய்தால் நாம் அதிக அளவில் பொருட்சேவைகளை உற்பத்தி செய்யமுடியும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## முக்கிய சொற்கள்

மொத்த உள்நாட்டு உற்பத்தி, இறுதிநிலைப்பொருட்கள், துறைசார் பொருட்கள், வேலை மாற்றங்கள், ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்படாத துறைகள்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. பொருளாதார நடவடிக்கைகளை முதன்மை, இரண்டாம் நிலை, மற்றும் மூன்றாம் நிலைகள் என வகைப்படுத்துவது பயனளிக்கக்கூடியது என்று நீ கருதுகிறாயா? எவ்வாறு என விளக்குக.(AS1)

2. நாம் இப்பாடத்தில் பயின்ற ஒவ்வொரு துறைகளுக்கும் வேலை வாய்ப்பு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஏன் வலியுறுத்த வேண்டும்? ஆராய வேண்டிய பிற சிக்கல்களும் உள்ளனவா? கலந்துரையாடு.(AS4)

3. சேவைத்துறையானது பிற துறைகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது? எடுத்துக்காட்டுகளுடன் விளக்கு.(AS1)

4. குறை வேலைவாய்ப்பு என்றால் என்ன? நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களிலிருந்து ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுகள் தந்து விளக்கவும்.(AS1)

5. ஒழுங்கமைக்கப்படாத துறைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு கீழ்காணும் சிக்கல்களின் மீது பாதுகாப்பு தேவை. ஊதியங்கள், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் இவற்றை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.(AS1)

6. அகமதாபாத்தில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், நகரத்திலுள்ள 15,00,000 தொழிலாளர்களில் 11,00,000 ஒழுங்கமைக்கப்படாத துறையில் பணியாற்றுகின்றனர். 1997-98ஆம் ஆண்டில் நகரத்தின் மொத்த வருவாய் ரூ.6000கோடிகள். இதில் ரூ.3200 கோடி ஒழுங்கமைக்கப்பட்ட துறையின் மூலம் பெறப்பட்டது. இந்தபுள்ளி விவரத்தை ஒரு அட்டவணையில் தெரிவிக்கவும். நகரத்தில் அதிக வேலைவாய்ப்பை உருவாக்கும் வழிமுறைகள் யாவை?(AS3)

7. பக்கம் 33ல் 4வது பத்தியை அதாவது "கடந்த 50 ஆண்டுகளில் .................. வளர்ந்த நாடுகளில் கடைபிடிக்கும் முறையாகும்." வரை படித்து கீழ்காணும் வினாவிற்கு விடையளி.

   இந்தியாவிலும் இம்முறை கடைபிடிக்கப்படுகிறதா? உன் கருத்தை கூறுக.(AS2)

8. பக்கம் 34ல் கொடுக்கப்பட்டுள்ள வட்ட வரைபடங்களை பரிசீ-த்து கீழ்காணும் வினாக்களுக்கு விடையளி.(AS3)

   (i) 1973-74ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2015-16ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில்(GDP) எந்த துறைகளில் அதிகரித்துள்ளது?

   (ii) 1973-74ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2015-16ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில்(GDP) விவசாயத் துறையின் பங்கு எவ்வளவு குறைந்துள்ளது?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

9. மொத்த உள்நாட்டு உற்பத்தியை(GDP) மதிப்பீடு செய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய அம்சங்கள் யாவை?(AS1)

10. மொத்த உள்நாட்டு உற்பத்தியில்(GDP) பல்வேறு துறைகளின் பங்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து கலந்துரையாடு.(AS1)

11. மொத்த உள்நாட்டு உற்பத்தியில்(GDP) ஒழுங்கமைக்கப்படாத துறையின் பங்கை பரிசீ-த்து கூறுக.(AS1)

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்

4

# இந்தியாவின் காலநிலை

**வானிலை மாற்றத்தால் விளைந்த இயற்கைக்கு மாறான வானிலை : நிபுணர்கள்**

ஐதராபாதில் விட்டுவிட்டுப் பெய்தமழையால் வானிலை ஆராய்ச்சி மைய அலுவலர்களை குழப்பமடையச் செய்துள்ளது. வானிலை நிபுணர்கள் நாட்டில் எதிர்கால காலநிலை மாற்றத்தைக் கணிப்பது மிகவும் சிரமமாக மாறிவருகிறது என்று கூறுகின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளில் கால நிலை அமைப்புகள் அதிசயிக்கத்தக்க முறையில் மாற்றமடைந்து அசாதாரண **வானிலை** நிகழ்வுகள் ஏற்படுவதை நாம் கவனித்து வருகிறோம். இதுபோன்ற ஊகிக்க இயலாத சூழ்நிலைகளான நாட்டின் தீவிர கோடைகாலம், ரங்காரெட்டி மாவட்டத்தில் திடீரெனப் பெய்யும் பனி மற்றும் ஆலங்கட்டி மழை, உத்தரகண்டின் மேகமூட்டங்கள், குறித்து காலத்திற்கு முன்பாகவே தொடங்கும் தென் மேற்குப் பருவக்காற்று, மற்றும் தாமதமாக பின்வாங்கும் காற்றுகள் ஆகியவற்றை உற்றுநோக்கிய பின், நிபுணர்கள் வானிலை முறைகள் இதுபோன்ற அதிசயமான முறையில் மாறுகின்றன என்று கூறியுள்ளனர். ஓங்கோலில் 341மிமீ மழை பொழிகிறது. இது நம்மாநிலத்தில் பொழியும் மொத்த ஆண்டு மழை பொழிவில் மூன்றில் ஒரு பாகத்தை விட அதிகம். இந்த பலத்த மழையால் மாநிலத்தில் பல ஏக்கர் பயிர்கள், குறிப்பாக பருத்தி பயிர்கள் அழிகின்றன. ஒரு நற்செய்தி என்னவெனில் ஆந்திரப்பிரதேசத்திலுள்ள 80,000 ஏரிகளில் 75% ஏரிகளில் நீர் நிரம்பிவிட்டது. *( 2013, அக்டோபர் 25ல் டைம்ஸ் ஆப் இந்தியா )*

- இவ்வாறான செய்தித்தாள் தகவல்களை சேகரி

இவை சில மாற்றங்களுக்கான அறிகுறிகளா அல்லது நீண்ட கால இடைவெளியில் நிகழும் வெறும் ஒரு மாறுபாடா? சில வானிலை ஆராய்ச்சி அலுவலர்களை அல்லது கல்லூரி பேராசிரியர்களை அழைத்து இந்த மாற்றங்களைக் குறித்து கலந்துரையாடு.

## காலநிலை மற்றும் வானிலை

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு பகுதியில் நிலவும் வளிமண்டல நிலைகளை வானிலை என்பர். இக்காலநிலைகள் ஒரு குறுகிய காலத்தில் கூட மாறுபட்டு காணப்படும் ஒரு பெரிய நிலப்பரப்பில் இதுபோன்ற நிலைகளை காலநிலை குறிப்பிடுகிறது. பல ஆண்டுகளுக்கு இதே போன்ற பொதுவான அமைப்பு தொடரும். இப்பொதுவான நிலைகள் முப்பது ஆண்டுகள் அல்லது அதற்கும் மேலான ஒவ்வோராண்டிற்கு பிறகும் தொடர்வதை இக்கால நிலை நமக்குத் தெரிவிக்கிறது. ஒவ்வோராண்டிலும் சிறு மாற்றங்கள் காணப்பட்டாலும் அடிப்படை காலநிலை அமைப்பு ஒரேவிதமாக இருக்கும். இந்த பொதுவான நிலைகளின் அடிப்படையில் ஓர் ஆண்டு பல பருவகாலங்களாக பிரிக்கப்படுகிறது. வானிலை மற்றும் காலநிலையின் கூறுகளாவன : வெப்பநிலை, வளிமண்டல அழுத்தம், காற்று, ஈரப்பதம் மற்றும் ஈரம்வடிதல் படங்களைக் கொண்டு ஓரிடத்தின் காலநிலை அமைப்புகளைக் காட்டுவதை காலநிலை வரைபடம் (climatography) என்பர். காலநிலை வரைபடங்கள் ஓரிடத்தின் அதிகபட்ச வெப்பநிலை, குறைந்தபட்ச வெப்பநிலை மற்றும் மழைபொழிவுகளின் சராசரி மாத அளவுகளைக் காட்டுகின்றன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

### இந்தியாவில் சில இடங்களின் காலநிலை வரைபடங்கள்

கீழே தரப்பட்டுள்ள காலநிலை வரைபடங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளின் வெப்பநிலை மற்றும் மழைபொழிவின் மாறுபாடுகளைக் காட்டுகின்றன. உங்கள் அட்லாஸ் புத்தகத்தை பார்த்து இந்த இடங்களின் இருப்பிடங்கள் எங்கு அமைந்துள்ளன என்பதை அடையாளம் காண்க. மேலும் கீழே தரப்பட்டுள்ள வரைபடங்களை படித்து பின்வரும் பக்கத்திலுள்ள அட்டவணையை நிரப்பவும்.

*படங்கள் 4.1 முதல் 4.4 காலநிலை வரைபடங்கள்*







சராசரி அதிகபட்ச வெப்பநிலை (°செ)

சராசரி குறைந்தபட்ச வெப்பநிலை (°செ)

குறைந்த பட்ச மழைப்பொழிவு (மி.மீ)







All Graphs Courtesy: The Indian Institute of Geographical Studies.(CC)2013



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

| இடம் | இயற்கை அமைப்புப் பகுதி | ஆண்டின் அதிகபட்ச வெப்பநிலை வீச்சு | ஆண்டின் குறைந்தபட்ச வெப்பநிலை வீச்சு | மழைநிறைந்த மாதத்தின் பெயர் மற்றும் அந்தமாதத்தின் மழைபொழிவு மி.மீ | மிகவும் வறண்ட மாதத்தின் பெயர் மற்றும் அந்தமாத மழைபொழிவு மி.மீ |
|---|---|---|---|---|---|
| ஜெய்ப்பூர் | | | | | |
| லே | | | | | |
| புதுடில்லி | | | | | |
| சென்னை | | | | | |

வெப்பநிலை வீச்சு : உயர்ந்த அளவு முதல் குறைந்த அளவு வரை

- லே நகரில் மிகவும் வெப்பமான மற்றும் மிகவும் குளிர்ச்சியான மாதங்கள் யாவை?
- மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வெப்பநிலை வீச்சிலிருந்து பொதுவாக ஜெய்ப்பூர், லே நகரத்தைவிட வெப்பமானதா? உங்களுடைய விடைக்கு விளக்கம் தருக.
- டில்லி மற்றும் சென்னையின் காலநிலைகளை ஒப்பிடு. அவை எவ்வாறு வேறுபட்டுள்ளன?
- லே நகரத்தின் மழைப்பொழிவு முறையினை கூர்ந்து கவனி. இது மற்றவற்றிலிருந்து எவ்வாறு வேறுபட்டுள்ளது? இதே போன்ற மழைப்பொழிவு முறையினைக் கொண்ட வேறுசில இடங்களை உன்னுடைய அட்லாஸ் புத்தகத்தில் கண்டறியவும்.

## காலநிலையையும் வானிலையையும் பாதிக்கும் காரணிகள்

சில இடங்களை உற்றுநோக்கும்போது (எ.டு சென்னை) மாதங்களின் வெப்பநிலைகளில் பெரிய வேறுபாடு ஏதுமில்லை. சில இடங்கள் (எ.டு. டில்லி) மாதங்களின் வெப்பநிலைகளில் பெரிய மாற்றங்கள் காணப்படுகிறது. இந்தியாவின் வெப்பநிலைகளில் பேரளவு மாற்றங்கள் காணப்படுகின்றன. வடக்குப் பகுதி இமயமலைகளாலும் தென்னிந்திய தீபகற்பம் கடல்களாலும் சூழ்ந்துள்ளன. சில இடங்களின் கடற்கரை மிக தூரத்தில் உள்ளன. அவை உள்நிலப்பகுதி. சில இடங்கள் மிகவும் உயரத்தில் அமைந்துள்ளன. மற்றவை சமவெளியின் மீது அமைந்துள்ளன. காலநிலையை பாதிக்கும் காரணிகளை காலநிலைக் கட்டுப்படுத்திகள் என்பர். இவற்றில் 1. அட்சரேகை 2. நிலநீர் தொடர்பு 3. இயற்கை அமைப்பு 4. மேல்காற்று சுழற்சி ஆகியவை அடங்கும்.

### 1. அட்சரேகை அல்லது பூமத்திய ரேகையி×ருந்து தூரம் :

பூமத்திய ரேகையிலிருந்து விலகிச்செல்ல செல்ல ஆண்டின் சராசரி வெப்பநிலைகள் குறையும். இதனடிப்படையில் பூமியின் பகுதிகளை பிரிக்கலாம்.

- பூமத்திய ரேகைக்கு அருகில் இருப்பதை வெப்பமண்டலம் என்றும்
- துருவங்களுக்கு அருகில் இருப்பனவற்றை துருவமண்டலம் என்றும்
- இந்த இரண்டு மண்டலங்களுக்கு இடையே இருப்பனவற்றை மிதவெப்ப மண்டலம் என்றும் அழைப்பர்.

நாம் இந்தோனேஷியா மற்றும் ஜப்பான் நாடுகளின் காலநிலையை ஒப்பிட்டுப்பார்க்கும்போது, நாம் வேறுபாடுகளை புரிந்துக்கொள்ளலாம்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

நீங்கள் முன் வகுப்புகளில் படித்ததைப் போன்று இவ்வேறுபாடுகளுக்குக் காரணம் பூமியின் வெப்பமடைதலில் உள்ள வேறுபாடுகளாகும். வெப்பநிலையின் பரவல் மீது ஆதாரப்பட்டுள்ளது. பூமியின் புறப்பரப்பிற்கு அருகில் உள்ள ஒருகுறிப்பிட்ட இடத்தின் வளிமண்டல வெப்பநிலை அப்பகுதியால் பெறப்படும் உள்வரும் சூரியவெப்பதின் (வெயில்) மீது ஆதாரப்பட்டுள்ளது. உயர்ந்த அட்சரேகைகளைக் காட்டிலும் குறைந்த அட்சரேகை பகுதிகளில் வெப்பநிலையின் தீவிரம் அதிகமாக இருக்கும். நாம் பூமத்திய ரேகையிலிருந்து துருவங்களை நோக்கிச் செல்லும் போது ஆண்டின் சராசரி வெப்பநிலை குறையும்.

- உலக உருண்டையை பயன்படுத்தி நீங்கள் முன்பு படித்ததை நினைவுபடுத்தி கலந்துரையாடவும். பல்வேறு அட்சரேகைகளில் சூரியக்கதிர்களின் படுகோணம் எவ்வாறு மாறுபடுகிறது? இது எந்தவிதமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது?

இந்தியாவின் தெற்குப் பகுதி பூமத்திய ரேகைக்கு அருகில் வெப்பமண்டலத்தில் அமைந்துள்ளது. எனவே இப்பகுதி வடக்குப் பகுதியை விட சராசரி உயர்வெப்பநிலைக் கொண்டுள்ளது. இதன் காரணமாகவே டில்லி அல்லது போபாலைவிட கன்னியாகுமரியின் வெப்பநிலை முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகிறது. இந்தியா சுமார் $8^{o}$ மற்றும் $37^{o}$ வடக்கு அட்சரேகைகளுக்கு இடையில் அமைந்துள்ளது. கடகரேகை இந்தியாவை இரண்டு சமபாகங்களாகப் பிரிக்கிறது. கடகரேகைக்குத் தெற்கில் உள்ள பகுதி வெப்பமண்டலத்தில் அமைந்துள்ளது. கடகரேகைக்கு வடக்கில் உள்ளப்பகுதி மிதவெப்பமண்டலத்தில் அமைந்துள்ளது.




*படம் 4.5 : காலநிலை மீது அட்சரேகையின் தாக்கம்*

### நில நீர் தொடர்பு

இந்தியாவின் நில மற்றும் நீர் பகுதிகளைக்காட்டும் புறவரிப்படத்தைப் பார்த்தால் காலநிலையை பாதிக்கும் மற்றொரு முக்கியமான காரணியான நில மற்றும் நீர் தொடர்புகளைக் காணலாம். முதலில் சூரிய ஒளி கிரகிக்கப்பட்டதன் அளவு மற்றும் அது மீண்டும் திருப்பி கதிர்வீச்சு செய்யப்பட்டது அல்லது நேரடியாக எதிரொளிக்கப்பட்டது ஆகியவை அப்புறப்பரப்பின் தன்மையை ஆதாரப்பட்டுள்ளது. பேரளவில் இயற்கை தாவரங்கள் கொண்ட பகுதிகள் போன்ற இருண்ட பகுதிகள் நன்கு கிரகிப்பவைகளாக உள்ளன. ஒளிநிறைந்தபகுதிகளான பனி மற்றும் பனிக்கட்டிகளால் மூடிய பகுதிகள் போன்றவை நன்கு எதிரொளிப்பவைகளாக உள்ளன. பெருங்கடல்கள் வெப்பத்தை நிலப்பகுதிகளைக் காட்டிலும் மிக விரைவாக கிரகித்து மிகவும் மெதுவாக வெப்பத்தை இழக்கிறது. இது காலநிலையை பலவழிகளில் பாதிக்கிறது. நில மற்றும் கடற்காற்றுகள் ஏற்படுவது இவற்றில் ஒன்று 4.6ஆம் படத்தைப் பார்த்து, இது எவ்வாறு நிகழ்கிறது என்பதை விளக்கு. ஒன்பதாம் வகுப்பில் அழுத்தம் மற்றும் கடற்காற்றுகள் ஏற்படுவது இவற்றில் ஒன்று. 4.6ஆம் படத்தைப் பார்த்து, இது எவ்வாறு நிகழ்கிறது என்பதை விளக்கு. ஒன்பதாம் வகுப்பில் அழுத்தம் மற்றும் காற்றும் வீசும் திசைக்கு இடையே உள்ள தொடர்பு பற்றி படித்ததை இங்கு நினைவுகூறவும்.




*படம் 4.6 : இது போன்ற இடத்தின் வெப்பநிலையை இது எவ்வாறு தணிக்கிறது?*

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

தென்னிந்தியாவின் பெரும்பகுதிகள் அதன் நீண்ட கடற்கரை அமைப்பால் கடலின் மிதமான தாக்கத்தின்கீழ் வருகிறது. அதேபோன்று இரவு, பகல் மற்றும் கோடை மற்றும் குளிர்கால வெப்பநிலைகளில் வேறுபாடு அதிகமாக காணப்படுவதில்லை. இதை சமமான காலநிலை என்று அழைப்பர். ஒரே விதமான அட்சரேகை மற்றும் உயரங்களில் ஒரேவிதமான இடங்களை ஒப்பிட்டால் நாம் கடலின் தாக்கத்தை உணரலாம்.

- உன் அட்லாஸ் புத்தகத்தில் கோடை மற்றும் குளிர்மாதங்களில் மும்பையிலும், நாக்பூரிலும் காணப்படும் வெப்பநிலைகளை ஒப்பிடு. அவை எவ்வாறு ஒன்றுபட்டும் வேறுபட்டும் காணப்படுகிறது? அது எவ்வாறு கடலிலிருந்து தூரத்தை விளக்குகிறது?
- காலநிலை வரைபடத்தின் துணையுடன் ஜெய்ப்பூர் மற்றும் சென்னையின் வெப்பநிலைகள் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை உன்னால் விளக்கமுடியுமா?

**நில அமைப்புகள் :**

வெப்ப நிலையானது உயரம் அதிகரிக்க அதிகரிக்க குறையும் என்று நீங்கள் படித்திருப்பீர்கள். எனவே சமவெளிகளில் அமைந்துள்ள இடங்களைவிட மலைகள் மற்றும் குன்றுகளில் வெப்பநிலை குறைவாக இருக்கும். எனவே நிலஅமைப்பு அல்லது ஒருபகுதியின் உயரம் அப்பகுதியின் காலநிலையை பாதிக்கிறது. இமயமலைப்பகுதிகளான சிம்லா, குல்மார்க், நைனிடால் மற்றும் டார்ஜிலிங் போன்ற மலைவாழிடங்களில் கோடை மாதஉச்சக்கட்டங்களிலும் குளிர்ந்த வானிலை நிலவுவதை நீங்கள் கேள்விபட்டிருப்பீர்கள். அதேபோன்று கடற்கரைப்பகுதிகளுடன் ஒப்பிடுகையில் கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் (ஊட்டி) குளிர்ச்சியான காலநிலையைக் கொண்டுள்ளன.

- சிம்லாவும் டில்லியும் மிகவும் வேறுபட்ட அட்சரேகைகளில் அமைந்துள்ளனவா? உன் அட்லாஸ் கொண்டு சரிபார். கோடைக்காலத்தில் சிம்லா டில்லியை விட குளிர்ச்சியாக இருக்குமா?
- கோடைக்காலத்தில் கொல்கத்தாவுடன் ஒப்பிடும்போது டார்ஜிலிங்கில் மகிழ்ச்சிகரமான வானிலை ஏன் உள்ளது?

**மேல் வளிமண்டல சுழற்சி**

வடக்கு அரைக்கோளத்தில் துணைவெப்ப மண்டல உயர்அழுத்த மண்டலம் நிலையான காற்றுகளை ஏற்படுத்துகிறது. அவை பூமத்திய ரேகை குறைந்த அழுத்த மண்டலத்தை நோக்கி வீசி மேற்கு நோக்கி திரும்புவதால் அவற்றை வணிகக் காற்றுகள் என்பர். ஜெர்மனி மொழியில் 'trade' என்னும் சொல்லுக்கு பாதை என்று பொருள். தொடர்ச்சியாக ஒரே திசையில் நிலையாக வீசும் காற்று என்று இது பொருள்படுகிறது. இந்தியா வறண்ட வணிகக்காற்று வீசும் மண்டலத்தின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது.

இந்தியாவின் காலநிலை ஜெட்ஓடைகள் என்று அழைக்கப்படும். மேல்காற்று ஓட்டங்களின் இயக்கத்தாலும் பாதிக்கப்படுகிறது. இவை மேல்வளிமண்டலத்தின் 12,000மீ உயரத்திலுள்ள குறுகிய மண்டலத்தில் காணப்படும் வேகமாகச் செல்லும் காற்று ஓட்டங்களாகும். இதன் வேகம் கோடையில் மணிக்கு 110கி.மீ குளிர்காலத்தில் மணிக்கு 184கி.மீ மாறுபட்டு காணப்படுகிறது. கிழக்கு ஜெட் ஓடை சுமார் $25^0$வடக்கு அட்சரேகையில் ஏற்படுகிறது. ஜெட்ஓடையானது அருகிலுள்ள வளிமண்டலத்தை குளிர்ச்சியாக்குகிறது. கிழக்கு ஜெட் ஓடையின் குளிர்விக்கும் விளைவு இந்த அட்சரேகை $(25^0$வ)யில் முன்பே இருந்த மேகங்களிலிருந்து மழையை பெய்விக்க காரணமாக உள்ளது.

**பருவ காலங்கள் : குளிர்காலம்**

இந்திய நிலப்பகுதியில் வெப்பநிலையானது நவம்பர் 15 முதல் கணிசமாக குறையத் தொடங்கி பிப்ரவரி மாதம் வரை குளிர்காலம் தொடரும். ஜனவரி மாதம் பொதுவாக மிகவும் குளிர்ச்சியான மாதமாகும். நாட்டின் பலபகுதிகளில் பகல்பொழுதின் வெப்பநிலை $10^0$சென்டிகிரேடுக்கும் கீழே குறைந்துவிடுகிறது. இருப்பினும் வடக்கு இந்தியாவில் தான் குளிர்ச்சியான வானிலை அதிக அளவில் காணப்படுகிறது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

தென்னிந்தியா, குறிப்பாக கடற்கரைப் பகுதிகள், $20^0$ C, வெப்பநிலைக்கு மேல் இருப்பதால் மிதமான காலநிலையைப் பெற்று விளங்குகின்றன.

- ஆந்திரப்பிரதேசத்தில் ஜனவரியில் சராசரி வெப்பநிலையின் வீச்சு என்ன?
- உன் அட்லாஸ் புத்தகத்தைப் பயன்படுத்தி $15^0$C வெப்பநிலையைக் கொண்ட சில இடங்களைக் கண்டறியவும்.
- $25^0$C சராசரி வெப்பநிலையைக் கொண்ட இடங்களின் கோட்டிற்கு அருகில் சிறுவளையம் உள்ள சில இடங்களில் $20^0$C வெப்பம் உள்ளது. இது எவ்வாறு சாத்தியமாகும்?

கீழே தரப்பட்டுள்ள நிலப்படத்திலுள்ள கோடுகள் ஜனவரியில் ஒரே விதமான சராசரி வெப்பநிலைகளைக் கொண்ட இடங்களைக் குறிப்பிடுகிறது.

குளிர்காலத்தில் வானிலை பொதுவாக தெளிந்த வானத்துடன் மிதமானதாகவும் குறைந்த ஈரப்பதம் மற்றும் குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருக்கும். மேற்கு சிறுபுயல்கள் என்று அழைக்கப்படும் மத்திய தரைகடலிலிருந்து உண்டாகும் குறைந்தகாற்றழுத்த காரணி தாழ்வு மண்டலங்களால் வரும் மேற்கு சிறுபுயலால் வடஇந்தியாவில் குறைவான மழைப்பொழிவிலிருந்து மிதமான மழைப்பொழிவிற்கு காரணமாக உள்ளன. இந்த மழைபொழிவு ரபிபருவத்தில் சாகுபடி செய்யப்படும் கோதுமைப் பயிருக்கு வரமாக உள்ளது.

இந்தியா வடக்கு அரைக்கோளத்தில் வணிகக்காற்று மண்டலத்தில் அமைந்துள்ளது. வடகிழக்கு வணிகக்காற்றுகள் நிலத்திலிருந்து கடலைநோக்கி வீசுவதால் வறட்சியாக உள்ளன. இருப்பினும் இக்காற்றுகள் வங்காள விரிகுடாவை கடக்கும்போது ஈரத்தை கிரகித்துக்கொள்வதால் இவற்றின் மூலம் தமிழ்நாட்டின் கோரமண்டல கடற்கரைப்பகுதிகள் சிறிதளவு மழைப்பொழிவைப் பெறுகின்றன.






SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## கோடைக்காலம்

கோடைக்காலத்தின் போது நாம் நாட்டின் தெற்குப் பகுதியிலிருந்து வடக்குப் பகுதிநோக்கிச் செல்லும்போது சராசரி வெப்பநிலை அதிகரிக்கிறது. ஏப்ரல் தொடங்கி, வெப்பநிலை உயர்ந்து மெதுவாக பகற்பொழுதின் அதிகபட்ச வெப்பநிலை $37^0$Cக்கும் மேலாக உயர்கிறது. மே மாதத்தின் பிற்பகுதியில் பகல்பொழுதின் வெப்பநிலை நாட்டின் பலபகுதிகளில் குறிப்பாக வடமேற்கு சமவெளிகளிலும் மத்திய இந்தியாவிலும் $41^0$ C முதல் $42^0$ C வரை எட்டுகிறது. குறைந்தபட்ச வெப்பநிலையும் $20^0$ Cக்கு கீழே செல்வதில்லை. வடக்கு சமவெளியில் ‘லூ’ எனப்படும் வறண்ட வெப்பமான காற்றுகள் வீசுகின்றன.




வரைபடம் 4.2
இந்தியாவின் சராசரி வெப்பநிலை ($^0$C)

கோடை காலத்தின் இறுதியில் முன்பருவகாற்று மழைபொழிவுகள் (பருவ காற்று வெடிப்புகள்) தக்காண பீடபூமியில் பொதுவாக காணப்படுகின்றன. இவை மாம்பழங்கள் வெகுவிரைவில் பழுக்கவும் தீபகற்ப இந்தியாவில் பிற தோட்டப்பயிர்களை சாகுபடி செய்யவும் துணைபுரிகின்றன. எனவே அவை ஆந்திரப்பிரதேசத்தில் உள்ளூர் வழக்கில் ‘மாம்பழச்சாரல்கள்’ (Mango Showers) என அழைக்கப்படுகின்றன.

- 45ஆம் பக்க காலநிலை வரைபடத்தில் (4.1-4) உள்ள நான்கு இடங்களுக்கு மேமாதத்தின் சராசரி வெப்பநிலையைக் குறிப்பிட்டு அவற்றை மேலே உள்ள வரைபடத்தில் குறிக்கவும்.

## பருவக்காற்று தொடக்கம்

இந்தியாவின் காலநிலை பருவக்காற்றுகளால் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. பண்டைய காலத்தில் இந்தியாவிற்கு வருகைபுரிந்த மாலுமிகள் சீரான காலஇடைவெளிகளில் காற்றுகள் திரும்பத் திரும்ப வீசுவதைக் கவனித்தனர். அவர்கள் இந்தக் காற்றுகளை இந்தியக் கடற்கரையைப் நோக்கி பயணம் செய்ய பயன்படுத்தினர். அரேபிய வணிகர்கள் இந்த பருவகால திரும்பிவீசும் காற்றுமுறையை பருவகாற்று (monsoon) என்று அழைத்தனர்.

வெப்பமண்டலப் பகுதியில் பருவகாற்றுகள் $20^0$ வ மற்றும் $20^0$ தெ. அட்சரேகைகளுக்கு இடையில் உருவாகின்றன. தென்அரைக்கோளத்திலிருந்து வீசும் தென்கிழக்கு வணிகக் காற்றுகள் இந்தியப் பெருங்கடலை கடக்கும் போது ஈரத்தை எடுத்துக்கொண்டு பூமத்தியரேகை தாழ்ந்த அழுத்த மண்டலங்களை நோக்கி வீசுகின்றன. பூமத்திய ரேகையைக் கடந்த பின் இக்காற்றுகள் இந்திய துணைக்கண்டத்தில் உருவாகும் தாழ்ந்த அழுத்தப்பகுதியை நோக்கி திரும்புகின்றன. நிலமானது வெப்பமடைவதால் இந்தியத் துணைக்கண்டத்தின் மீது குறிப்பாக மத்திய இந்தியா மற்றும் கங்கைச் சமவெளிகளில் குறைந்த அழுத்தத்தை உருவாக்குகிறது. இதனுடன் இணைந்து திபெத்



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பீடபூமியும் தீவிரமாக வெப்பமடைந்து பலமான செங்குத்து காற்று ஓட்டங்கள் ஏற்படுகின்றன. 9கி.மீ உயரத்திற்கு மேல் பீடபூமியின் மீது தாழ்ந்த அழுத்தம் உருவாகின்றது.

அவை அதன்பின் தென் மேற்குப் பருவக்காற்றாக வீசுகிறது. இந்திய தீபகற்பம் அவற்றை அரபிக்கடல் கிளை மற்றும் வங்காள விரிகுடா கிளை என இரண்டு பிரிவுகளாக பிரிக்கிறது. வங்காள விரிகுடா கிளை வங்கக் கடற்கரை மற்றும் ஷில்லாங் பீடபூமியின் தெற்கு பாகத்தைத் தாக்குகிறது. பின்னர் அது திரும்பிவளைந்து கங்கை பள்ளத்தாக்கு வழியே மேற்கு நோக்கி வீசுகிறது. அரபிக் கடல்கிளை இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் தோன்றி வடக்கு நோக்கி நகர்கின்றன. இவ்விரண்டு கிளைகளும் ஜூன் மாதத் தொடக்கத்தில் இந்தியாவை அடைகின்றன. இதை பருவக்காற்று தொடக்கம் என்பர். அவை படிப்படியாக நான்கு முதல் ஐந்து வாரங்களில் நாடு முழுவதும் பரவுகின்றன. இந்தியாவின் ஆண்டு அதிகபட்ச மழைப்பொழிவு பெரும்பாலும் தென்மேற்குப் பருவகாற்று வாயிலாகவே பெறப்படுகிறது. மேற்குத்தொடர்ச்சி மலைகளால் மேற்கு கடற்கரை பகுதியிலும், உயரமான சிகரங்களைக் கொண்டிருப்பதால் வடகிழக்கு இந்தியாவிலும் மிகவும் அதிகமான மலைப்பொழிவு உள்ளது. இருப்பினும் தமிழ்நாடு கடற்கரை (கோரமண்டல் கடற்கரை) வங்காள விரிகுடாக் கிளைக்கு இணையாகவும் அரபிக் கடல் கிளையின் மழைநிழல் பகுதியில் இருப்பதாலும் இந்த பருவகாலத்தின் போது பெரும்பாலும் வறட்சியாகவே இருக்கும்.




படம் 4.7: அழுத்தம் மற்றும் பருவகாற்று

### பின்னோக்கிச் செல்லும் பருவக்காற்று

அக்டோபர்-நவம்பர் மாதங்கள் வெப்பமான ஈரநிலையிலிருந்து வறண்ட குளிர்நிலைக்குத் திரும்பும் ஒரு காலகட்டமாகும். (படம் 4.7) பின்னோக்கும் பருவகாற்று காலத்தின் போது வானம் தெளிவாகவும் வெப்பநிலை உயர்ந்தும் காணப்படும். நிலம் ஈரமாகவே இருக்கும். உயர்ந்த வெப்பநிலை மற்றும் ஈரப்பத நிலைகளால் வானிலை கொடிதாக மாறுகிறது. இதை சாதாரணமாக அக்டோபர் வெப்பம் ("October heat") என்பர்.

ஒரு முறை வடமேற்கு இந்தியாவில் நிலவிய குறைந்த அழுத்த நிலைகள் நவம்பர் முற்பகுதியில் தெற்கின் இறுதிப் பகுதியான வங்காள விரிகுடாவின் மையப் பகுதிக்கு நகர்கிறது. இக்காலத்தின் போது அந்தமான் தீவுப்பகுதியில் குறைந்த காற்றழுத்த சூறாவளி ஏற்படும். இந்த வெப்பமண்டல சூறாவளிகள் அவ்வப்போது மிகவும் அழிவுத்தன்மை கொண்டதாக உள்ளன. மக்களடர்த்தி அதிகமாக உள்ள டெல்டாக்களான கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவேரி நதிப்பகுதிகள் அவற்றின் இலக்குகளாக உள்ளன. எந்த ஓராண்டும் அழிவிலிருந்து விடுபடுவதில்லை. அவ்வப்போது இந்த வெப்பமண்டல சூறாவளிகள் சுந்தர்பன் காடுகளையும் பங்களாதேஷ் நாட்டையும் தாக்குகின்றன. தாழ்ந்த அழுத்தங்களாலும், சூறாவளிகளாலும் கோரமண்டல கடற்கரை பகுதிகள் பெருமழைப் பொழிவைப் பெறுகின்றன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




வரைபடம் 4.3 இந்தியாவில் தென்மேற்கு பருவகாற்று தொடக்கம்




வரைபடம் 4.3: இந்தியாவில் தென்மேற்கு பருவகாற்று பின்னோக்கிச் செல்லுதல்

இந்திய மரபுப்படி, ஒரு வருடமானது ஆறு இருமாத பருவகாலங்களாக பிரிக்கப்படும். வடக்கு மற்றும் மத்திய இந்தியாவில் மக்களால் பின்பற்றப்படும் இந்த பருவகால சுழற்சி, அவர்களின் நடைமுறை அனுபவங்கள் மற்றும் பழங்கால வானிலை முறைகளைப்பற்றிய கருத்து அடிப்படையில் அமைந்துள்ளது. வடக்கு மற்றும் தென்இந்தியாவின் பருவகால நேரங்களில் சிறிய மாறுபாடு காணப்படுகிறது.

**இந்திய மரபுப்படி பருவகாலங்கள்**

| பருவ காலங்கள் | இந்தியாவின் (சந்திரன்) நாட்காட்டிப்படி மாதங்கள் | மேற்கத்திய (சூரியன்) நாட்காட்டிப்படி மாதங்கள் |
|---|---|---|
| வசந்தம் | சித்திரை – வைகாசி | மார்ச் – ஏப்ரல் |
| கோடை | ஆணி – ஆடி | மே – ஜுன் |
| மழை | ஆவணி – புரட்டாசி | ஜுலை – ஆகஸ்ட் |
| முன்பனி | ஐப்பசி – கார்த்திகை | செப்டம்பர் – அக்டோபர் |
| பின்பனி | மார்கழி – தை | நவம்பர் – டிசம்பர் |
| இலையுதிர் காலம் | மாசி – பங்குனி | ஜனவரி – பிப்ரவரி |



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## உலகம் வெப்பமயமாதல் மற்றும் காலநிலை மாற்றம்

பூமியானது ஒரு தீப்பந்து வடிவத்திலிருந்து கோளாக மாறியபோது பலவாயுக்கள் வெளியேறின. இந்த வாயுக்கள் பூமியின் சுழற்சி மற்றும் புவியீர்ப்பு விசையால் புறப்பகுதிக்குள் செல்லவில்லை. அது அவ்வாயுக்களை இன்னும் பிடித்து வைத்துள்ளது. அதன் விளைவு? பூமியைச்சுற்றி ஒரு மெல்லிய வாயுக்களின் அடுக்கு சூழ்ந்து நமக்கு பல முக்கிய நன்மைகளை வழங்குகின்றது. எடுத்துக்காட்டாக ஆக்ஸிஜன் நமக்கு சுவாசிக்கவும், ஓசோன் படலம் சூரியனிடமிருந்து வரும் தீங்கு செய்யும் புறஊதாக்கதிர்களிலிருந்தும் நம்மை பாதுகாக்கிறது. நமக்குத் தேவையான புரோட்டீன்களை தயாரிக்க தாவரங்கள் நைட்ரஜனை பயன்படுத்திக்கொள்கின்றன. மேலும் பல வழிகளில் தூயநீர் சுழற்சியடைதல், நம்மை வெப்பமாக வைத்திருத்தல் போன்ற பணிகளைச் செய்கின்றது. (ஒன்பதாம் வகுப்பில் பாடம் 4ல் உள்ள படத்தைப் பார்க்கவும்)

வளிமண்டலம் நமக்குச் செய்யும் நன்மைகளில் மிகவும் முக்கியமானது நம்மை வெதுவெதுப்புடன் வைத்திருப்பதாகும். இது ஒரு மெல்லிய ஆனால் பயன்தரும் பூமியை மூடியிருக்கும் போர்வை போன்றது. வளிமண்டலம் பூமிக்கு வரும் சூரிய ஆற்றலைத் தடுத்து விண்வெளியில் அது முழுவதுமாக தப்பித்துச் செல்லாதவாறு பிடித்து வைக்கிறது என்பதை நீங்கள் ஒன்பதாம் வகுப்பில் படித்ததை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். இதையே உலக வெப்பமயமாதல் என்பர். இது இந்த கோளில் உயிர் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையததாகவும் சிறந்ததாகவும் உள்ளது. வளிமண்டலம் நம் கோளில் இல்லாமல் போயிருந்தால் பூமியானது மிகவும் குளிர்ச்சியானதாக இருந்திருக்கும்.

இருப்பினும் 19ஆம் நூற்றாண்டிலிருந்து இந்த கோளானது மிக வேகமாக வெப்பமடைந்து வருகின்றது. இதைப்பற்றிய கவலை அதிகரித்து வருகிறது. இந்த கவலை ஏன்? பூமியானது பல ஆண்டுகளாக வெப்பமடைதல் மற்றும் குளிர்தல் சுழற்சிகளுக்கு (உண்மையில் உறைதலுக்கும்) ஆளாகி வருகின்றது. எனவே தற்போது இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது ஏன்?

முன்பெல்லாம் குளிர்தல் மற்றும் வெப்பமடைதல் சுழற்சிகள் நீண்டகால இடைவெளிகளில் நடைபெற்றன. இதனால் பூமியிலுள்ள உயிர்களுக்கு மாற்றங்களுக்கேற்ப சரிபடுத்திக்கொள்ள காலநேரம் அதிகமாக இருந்தது. தற்போதுள்ள சிக்கல் யாதெனில், வெப்பமடைதல் வேகமாக அதிகரித்து பேரழிவு மாற்றங்களுக்கு வழிவகுக்கிறது. தொழிற்புரட்சி ஏற்பட்ட காலம் முதல் வெப்பமடைதல் மனிதர்களின் செயல்முறைகளால் ஏற்பட்டு வருகிறது. எனவே தற்போதைய உலக வெப்பமயமாதல் மனிதச் செயல் முறை உலகவெப்பமயமாதல் என்று (AGW-Anthropogenic Global Warming 'Anthropogenic' என்றால் மனிதர்களால் ஏற்படக்கூடியது என்று பொருள்) மிகவும் அண்மைக்காலமாக, தொலைதூர வடக்கு அட்சரேகைகளில் உள்ள உறைந்த தூந்திரப் பகுதிகளின் கீழ்முக்கியமாக வடக்கு ரஷ்யாவின் பரந்த நிலப்பரப்புகளில் மீதேன் வாயுக்கள் பேரளவில் இருப்பதைக் அறிவியலறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். உலகத்தின் வெப்பம் அதிகரிப்பதால் தூந்திரத்தின் பனிக்கட்டி அதிகளவில் உருகுகிறது. பனிக்கட்டிகளின் அடிபாகத்தில் சிக்கியுள்ள மீதேன் வாயு வளிமண்டலத்திற்கு செல்வதால் உலகின் வெப்பநிலை அதிகரித்து வருகிறது. மாறாக, இது அதிக அளவிலான பனிக்கட்டிகளையும் உருகச் செய்து அதிகஅளவில் மீதேன் வாயுவையும் வெளியேற்றும். பசுமை இல்ல வாயுக்களில் ஒன்றான கார்பன்-டை-ஆக்ஸைடை விட மீதேன் பேரளவு ஆபத்தை உண்டாக்கும் ஆற்றல் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

## AGW மற்றும் காலநிலை மற்றும்

AGW பூமியின் வெப்பப் பகிர்வில் பல மாற்றங்களை ஏற்படுத்துகிறது. உலகில் வெப்பத்தை மறுபங்கீடு செய்வதில் வளிமண்டல மற்றும் பெருங்கடல் சுழற்சிகள் எவ்வாறு பங்குவகிக்கின்றன என்பதை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். AGW இந்த அமைப்பையும் மறுபங்கீடு முறையையும் பாதிக்கச்செய்கிறது. இந்த பாதிப்பு மட்டும் ஒரு பெரிய சிக்கல் அல்ல. இது நிகழ்வதில் ஏற்படும் வேகம்தான் பெரிய சிக்கலாக உள்ளது.

மறுபங்கீட்டு முறை பிளவுபடும்போது வானிலை மற்றும் காலநிலை முறைகள் மாறுகின்றன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

நீண்ட கால மாற்றங்கள் (காலநிலை மாற்றம்) குறுகிய கால மாற்றங்களின் வானிலை மாற்றத்திலிருந்து நிகழ்கின்றன. பசுமை இல்ல வாயுக்கள் வெளியேற்றுவதைக் குறைக்க அனைத்து நாடுகளின் ஒப்பந்தத்தை உருவாக்கும் சர்வதேச முயற்சி சாதிக்கப்படவில்லை. இந்த பிரச்சனையைக்குறித்து விவாதிக்க 'சர்வதேச அரசுகளுக்கிடையிலான காலநிலை மாற்ற அமைப்பு', (IPCC) (Inter govermental Panel of Climate Change) என்னும் சர்வதேச அமைப்பு உருவாக்கப்பட்டது. அது AGW வை குறைக்க பலநாடுகளை நடத்தி உலக நாடுகளுக்கிடையே ஒரு ஒப்பந்தத்தை உருவாக்க பணியாற்றியது. இவற்றில் எதுவும் வெற்றிபெறவில்லை. 2013ல் வார்சாவில் நடந்த IPCC மாநாடு அண்மைக்கால முயற்சியாகும். இதுவும் எந்த ஒப்பந்தத்தையும் ஏற்படுத்த தவறிவிட்டது. IPCC - 2015 பாரீஸ் மாநாட்டில் பசுமை இல்ல வாயுக்கள் வெளியிடுவதை குறைக்க ஒரு ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. இதன்படி சராசரி வெப்பநிலை உயர்வு என்பது 2°Cஐ விட குறைவாக இருக்கவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தில் மொத்தம் 195 நாடுகள் கையெழுத்திட்டன.

முக்கியமாக, வளர்ச்சியடைந்த நாடுகள் (குறிப்பாக, தொழில் மயமாக்கப்பட்ட பேரளவில் பொருளாதார வளர்ச்சி அடைந்த மேற்கு நாடுகள்) மற்றும் வளரும் நாடுகள் (தொழில்மயமாக்கப்படாத நாடுகள்) போன்றவற்றிற்கிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. வளர்ச்சி அடைந்த நாடுகள் வளரும் நாடுகளை தங்களின் நிலக்கரி எரிப்பு மற்றும் பிற நடவடிக்கைகளை குறைத்துக்கொள்ளுமாறு வலியுறுத்த விரும்புகின்றன. வளரும் நாடுகள் விவாதிப்பது யாதெனில் வளர்ந்த நாடுகள் அவர்களின் முன்னேற்றத்திற்கு படிம எரிபொருளை பயன்படுத்தியே வளர்ச்சியடைந்தன என்பதாகும். படிம எரிபொருளை (குறிப்பாக நிலக்கரியை) பயன்படுத்தாவிட்டால் தங்களின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படும் என்று வளரும் நாடுகள் கூறுகின்றன. மேலும் வளர்ச்சியடைந்த நாடுகள் வளரும் நாடுகளின் முன்னேற்றத்திற்கு மாற்று வழிமுறைகளைக் கொண்டு உதவிசெய்யவேண்டும்.

AGW என்பது உண்மையாகவும், தற்போது நிகழ்ந்து வருகிறது எனவும், அதனால் வேகமாக மற்றும் மோசமான காலநிலை மாற்றத்திற்கு வழிவகுக்கிறது, என்பதை உலகின் அனைத்து அறிவியல் அறிஞர்களும் ஒப்புக் கொள்கின்றனர். எதிர்காலத்தில் தீவிர வானிலை மற்றும் பிறமாற்றங்கள் அதிகரித்தால் நம் உயிர் வாழ்க்கைக்கும் அது அச்சுறுத்தலாக அமையும் என்று அறிவியலறிஞர்கள் எச்சரிக்கின்றனர்.

- காடுகளை அழித்தல் என்றால் என்ன?
- காடுகளை அழிப்பது என்பது காடுகள் உள்ள இடத்தில் மட்டுமே நிகழுமா? காடுகள் இல்லாமல் உனது வீட்டுப்பகுதியில் இது எவ்வாறு நிகழ்கிறது?
- காடுகளை அழித்தல் உலக வெப்பமயமாதலை எவ்வாறு பாதிக்கிறது? (உனது உயிரியல் பாடப்பிரிவில் உள்ள ஒளிச்செயற்கை பற்றி நினைவில் கொள்)
- உலக வெப்பமயமாதலுக்கு காரணமான மனிதனின் பிறச் செயல்கள் யாவை?

உலக வெப்பமயமாதலுக்கு மனித நடவடிக்கைகளில் ஒன்றான காடுகள் அழித்தலும் காரணமாக உள்ளது. உங்கள் ஆசிரியருடனும் உடன் பயில்வோருடனும் கலந்துரையாடி இந்த வினாக்களுக்கு சில வாக்கியங்களில் விடையளிக்க முயலுங்கள்.

## இந்தியாவின் மீது காலநிலை மாற்றத்தின் தாக்கம்

சராசரி வெப்பநிலை $2^0$ C உயர்வது சிறியது எனத்தோன்றினாலும் அதன் விளைவாக அடுத்த நூற்றாண்டின் முற்பகுதிக்குள் கடல் நீரின் மட்டம் ஒரு மீட்டர் உயர்ந்துவிடும். இதனால் கடற்கரைப்பகுதிகளின் பல பாகங்கள் பாதிக்கப்படும் மக்களில் இலட்சக்கணக்கானோர் குடிபெயர வேண்டியிருக்கும். அவர்கள் தங்களின் வாழ்க்கையை இழந்துவிடுவர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

சுமார் 200 ஆக்கிரமிப்புக் குடும்பங்கள் கடந்த சில ஆண்டுகளாக கிழக்கு கொல்கத்தாவில் ‘நோனதங்கா’ பகுதியில் வாழ்ந்து வருகின்றன. அவர்கள் கொல்கத்தா மாநகர வளர்ச்சி ஆணையத்தால் வெளியேற்றப்படவுள்ளனர்.

2009ல் சுந்தர்பன்ப் பகுதியை ‘ஐலா’ என்னும் புயல் தாக்கிய பின், பலகுடும்பங்கள் வேலையைத் தேடி கொல்கத்தாவிற்கு வந்தன.

மார்ச் 30ல் நகர குடிசைப்பகுதிகள் காவலர்களின் முன்னிலையில் அகற்றப்பட்டு, சில குடிசைகளுக்கு தீயிடப்பட்டன. கடந்த சிலநாட்களாக அடிக்கடி ஏற்பட்ட இடிமுழக்கங்களால் சுமார் 700 மக்கள் உறக்கமற்ற இரவுகளை அனுபவித்து வீடிழந்தவர்களாக்கப்பட்டனர். அவர்கள் வீட்டுப் பணியாட்களாகவும், ரிக்ஷா இழுப்பவர்களாகவும், வீடுகட்டும் தொழிலாளர்களாகவும் பணியாற்றுகின்றனர்.

மற்றொரு விளைவு, மழை பொழிவின் மீது இருந்தது. இது மிகவும் ஒழுங்கற்றதாக இருந்து பேரளவிலான சமமின்மைகளுக்கு வழிவகுக்கிறது. சில இடங்கள் அதிக மழையையும் மற்ற இடங்கள் சாதாரண மழைப்பொழிவைவிட குறைவாக இருக்கும். எனவே வறட்சிகளும், வெள்ளங்களும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இது விவசாய முறையையும் மக்களின் வாழ்க்கையையும் பெரிதும் பாதித்திருக்கும்.

மில்லியன் கணக்கான மக்கள் பாதிக்கப்படும் போது ஒருவர் எவ்வாறு அந்த சூழ்நிலையை சமாளிக்க முடியும்? மறு குடியமர்தலுக்கு நிலத்தை எங்கு தேடுவாய்? பாதிக்கப்பட்டவர்கள் என்ன வேலைகளை செய்வர்?

இமயமலைப் பனியாறுகள் வேகமாக உருகுவதால் நன்னீர் மீன்பிடித்தொழிலாளர்களின் வாழ்க்கை, அவர்களின் மீன்பிடிக்கும் இடங்கள் பாதிக்கப்படுகிறது. அதே போன்று, நீங்கள் முன்பு கற்ற, இயற்கைக்கு மாறான வானிலைகள் அதிகரிக்கும். காலநிலை மாற்றம் என்பது உலக அளவில் நிகழ்வதாகும். எனவே, அது நம் அனைவரையும் பாதிக்கிறது.





*படம் 4.8 : ‘ஐலா’ புயலின் தாக்கம் (மேலே) கரைஉடைப்பு (வலதுபக்கம்) கரையை பழுதுபார்த்தல்.*



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## முக்கியச் சொற்கள்

காலநிலை வரைபடம், வானிலை, பருவக்காற்று, உள்வரும் சூரியவெப்பம், ஜெட் ஓடைகள், அழுத்த மண்டலம், உலகம் வெப்பமயமாதல்.

## உனது கற்றலை மேம்படுத்துக

1. கீழ்காணும் வாக்கியங்களை பயன்படுத்தி அது வானிலை அல்லது காலநிலைக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருந்தால் அதைக் குறிப்பிடவும்.(AS1)
   a) கடந்த சில ஆண்டுகளாக இமயமலையின் பல பனியாறுகள் உருகிவருகின்றன.
   b) கடந்த சில பத்தாண்டுகளில் விதர்பா பகுதியின் வறட்சி அதிகரித்துள்ளது.
2. இந்தியாவின் காலநிலைக் கட்டுப்படுத்திகளை விவரி.(AS1)
3. குன்றுப் பகுதிகளிலும் பாலைவனங்களிலும் காலநிலை மாறுபாடுகளை பாதிக்கும் காரணிகளைக் குறித்து ஒரு சிறுகுறிப்பு வரைக.(AS1)
4. உலக வெப்பமயமாதலுக்கு மனித நடவடிக்கைகள் எவ்வாறு துணைபுரிகின்றன?(AS1)
5. AGWவைப் பற்றி வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கிடையிலான கருத்து வேற்றுமைகள் யாவை?(AS1)
6. காலநிலை மாற்றத்தால் உலகம் வெப்பமயமாதல் எவ்வாறு ஏற்படுகிறது? உலக வெப்பமயமாதலின் தாக்கத்தை குறைப்பதற்கான வழிமுறைகளை பரிந்துரைசெய்.(AS4)
7. கீழ்காணும் காலநிலை வரைபடத்தை உற்றுநோக்கி கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பதிலளி.(AS3)
   A. எந்த மாதம் அதிக மழைப்பொழிவைப் பெற்றுள்ளது?
   B. எந்தெந்த மாதங்கள் அதிக மற்றும் குறைந்த வெப்பநிலையைப் பெற்றுள்ளது.
   C. ஜுன் மற்றும் அக்டோபர் மாதங்களுக்கிடையே அதிக மழைபொழிவு ஏன் காணப்படுகிறது?
   D. மார்ச் மற்றும் மே மாதங்களுக்கிடையில் அதிக வெப்பநிலை ஏன் உள்ளது?
   E. வெப்பநிலை மற்றும் மழைப்பொழிவுகளில் மாற்றங்களை உருவாக்கும் இயற்கை அமைப்புகளை அடையாளம் காண்.
8. பக்கம் 53ல் நான்காம் பத்தியின் முன்பெல்லாம் குளிர்தல் மற்றும் வெப்பமடைதல் சுழற்சிகள் ................................ மனிதர்களின் செயல்களால் ஏற்பட்டு வருகிறது. பகுதியை படித்து, அது குறித்த உன் கருத்துகளை கூறுக. (AS2)

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




**செயல்திட்டம்**

1. உங்கள் பகுதியில் காலநிலை மற்றும் வானிலையைப் பற்றிய பழமொழிகள் மற்றும் கூற்றுகளை சேகரிக்கவும்.

- காலையில் காணும் வானவில், மாலுமிகளுக்கான எச்சரிக்கை
- மாலையில் காணும் வானவில், மாலுமிகளுக்கு மகிழ்ச்சி
- புற்கள் மீது நீர்துளிகள் இருந்தால் மழை வராது.

2. வளர்ந்து வரும் நாடுகள் மற்றும் வளர்ந்த நாடுகள் வளிமண்டலத்தில் பசுமை இல்ல வாயுக்களை வெளியிட்டு வருகின்றன. இதன் விளைவாக பேரிடர்கள் நிகழ்ந்து வருகின்றன. அவை குறித்த தகவல்கள் மற்றும் படங்கள் சேகரித்து அவற்றின் கடுமையான விளைவுகள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடு.

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்
5

# இந்தியாவின் ஆறுகளும் நீர்வளங்களும்

- இந்தியப் படத்தில் இமயமலைகளையும் மேற்குத் தொடர்ச்சி மலைகளையும் கண்டறிந்து குறிப்பிடு.
- வண்ணக் குறியீட்டிடனைப் பயன்படுத்தி சில நதிகள் எந்த மலை உச்சிகளில் தோன்றுகின்றன என்பதை அடையாளம் காண். அட்லாஸ் புத்தகத்தைப் பயன்படுத்தியும் முப்பரிமான இயற்கைஅமைப்பு படத்தைக் கொண்டும் இந்த நதிகள் பாயும் இடங்கள் மற்றும் அவை எந்த திசையில் பாய்கின்றன என்பதைக் கண்டறி.
- கலந்துரையாடு : வீட்டுப் பயன்பாடுகளுக்கு 5% நீர்மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும் மக்கள் தொகையின் சில பிரிவினருக்கு நீர் வசதி கிடைப்பதில்லை.
- இந்திய நிலப் பகுதியில் 40மில்லியன் ஹெக்டேர்கள் வெள்ளத்தாலும் அதற்குச்சமமான பெருமளவு நிலப் பகுதி வறட்சியாலும் பாதிக்கப்படுகின்றன. இதற்கான காரணங்கள் யாவை?
- நம் பூமியின் புறப்பரப்பில் உள்ள நீர்வளங்கள் மாசடைந்துள்ளன. ஏன்?




படம் 5.1 இந்தியாவின் இயற்கை அமைப்பு மற்றும் வடிகால் அமைப்பு



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இந்தியாவின் வடிகால்திட்டம் தோன்றி மூன்று இயற்கையமைப்புப் பிரிவுகளாக அடைந்து தனக்குத்தானே உருவமைத்துக்கொண்டது. 1) இமயமலைகள் 2) தீபகற்ப பீடபூமி மற்றும் 3) சிந்து கங்கை சமவெளி அதன் தோற்றத்தின் அடிப்படையில் இந்தியாவின் வடிகால் அமைப்பு முக்கியமான இரண்டு வகைகளாக பிரிக்கப்படுகிறது. i) இமயமலை நதிகள் மற்றும் ii) தீபகற்ப நதிகள்

## இமயமலை நதிகள்

இமயமலை நதிகள் மூன்று முக்கிய அமைப்புகளைச் சேர்ந்தது. சிந்து, கங்கை மற்றும் பிரம்மபுத்திரா. இந்த நதிகள் பெரும்பாலும் ஒரே பகுதியில் சில கிலோ மீட்டர் இடைவெளியில் நீர்ப்பிரிவுகளால் ஒன்றுடன் மற்றொன்று வேறுபடுத்தப்பட்டு தோன்றுகின்றன. அவை முதலில் மலைகளின் உயரத்திற்கு இணையாக பாய்கின்றன. பின்னர் அவை திடீரென தெற்கு நோக்கி வளைந்து பெரிய மலைத்தொடர் வழியாக வெட்டப்பட்டு வட இந்திய சமவெளிகளை அடைகின்றன. இந்த செயல்முறையில் அவை 'V' வடிவ ஆழமான பள்ளத்தாக்குகளை வடிவமைக்கின்றன. இது சிந்து மற்றும் பிரம்மபுத்திரா நதிகளால் நன்கு வெளிப்படுத்தப்படுகின்றன.

இமயமலை நதிகள் வற்றாத ஜீவ நதிகளாகும். ஏனெனில் இவை மழைபொழிவாலும் பனி உருகுவதாலும் நீரூட்டப்படுகின்றன.

### சிந்து நதி அமைப்பு

சிந்துநதி திபெத்தில் மானசரோவர் ஏரிக்கருகே உள்ள கைலாயமலைத் தொடரின் வடக்குச் சரிவுகளில் தோன்றுகிறது. இது திபெத் வழியே வடமேற்கு திசையில் தொடர்ந்து பாய்கிறது. அது ஜம்மு காஷ்மீரில் இந்தியாவிற்குள் நுழைகிறது. சிந்து நதியின் முக்கிய கிளை நதிகள் ஜீலம், சீனாப், ராவி, பியாஸ் மற்றும் சட்லெஜ் ஆகும். அதில் இந்தியாவின் ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப் மற்றும் இமாச்சலப் பிரதேச மாநிலங்கள் அடங்கும்.

- அட்லாஸ் உதவியுடன் சிந்து நதி இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் பாயும் இடங்களை கண்டுபிடி.

### கங்கை நதி அமைப்பு

கங்கை நதி இரண்டு பிறப்பிடங்களைக் கொண்டுள்ளது. முதலாவது, 'பகீரதி' என்று அழைக்கப்படும் இடமான 'கங்கோத்ரி பனியாறு', மற்றொன்று பத்ரிநாத்தின் வடமேற்கில் உள்ள 'அலக்நந்தா' என்று அழைக்கப்படும் இடமான 'சடோபந்த் பனியாறு'. இவை இரண்டும் 'தேவப்பிரயாகை' என்னும் இடத்தில் இணைந்து ஹரித்துவாரத்தின் குன்றுகளிலிருந்து தோன்றும் கங்கை நதியாக உருவாகிறது. கங்கை நதி பல கிளை நதிகளுடன் இணைகிறது. அவற்றுள் பெரும்பாலானவை இமயமலைகளில் தோன்றுகின்றன. ஆனால் சில நதிகள் தீபகற்ப பீடபூமியில் தங்களின் பிறப்பிடங்களைக் கொண்டுள்ளன.

- கங்கையின் படத்தைப்பார் (5.2) கங்கை நதியால் பலனைப் பெறும் மாநிலங்களின் பெயர்களைக் கூறு.
- 60ஆம் பக்கத்தில் உள்ள படத்திலிருந்து கங்கை நதியின் வடக்கு நோக்கிபாயும் கிளை நதிகளையும் தெற்கு நோக்கிப்பாயும் கிளை நதிகளையும் பட்டியலிடு

### பிரம்ம புத்திரா நதி அமைப்பு

திபெத்தில் 'சாங்போ' என்று அழைக்கப்படும் பிரம்மபுத்திரா நதி மானசரோவருக்கு அருகில் உள்ள கைலாய மலைத்தொடரின் 'செமயுங்டுங்' பனியாற்றின் மூக்குப் போன்ற வளைவில் தோன்றுகிறது. இது தென் திபெத்தில் கிழக்கு நோக்கிப் பாய்கிறது. லாட்சே ஜாங் அருகில் சுமார் 640கி.மீ நீளமுடைய படகுகள் பயணம் செய்யும் பெரிய கால்வாயாக உள்ளது. அதன்பின் இந்த நதி ஒரு தொடர்ச்சியான வேகமாகப் பாயும் கிளை நதிகளாகப் பிரிகின்றது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இது இந்தியாவில் ஒரு பெரிய சுருக்குப்பாதை போன்று அருணாசலப்பிரதேசத்தின் வழியாக தென்மேற்குப் பகுதியில் முதலில் 'சியாங்' என்னும் பெயரிலும் பின்னர் 'திஹாங் (Dihang)' என்னும் பெயரிலும் நுழைகிறது. அஸ்ஸாம் பள்ளத்தாக்கில் இது 'திபாங் (Dibang)' மற்றும் 'லோஹித்' என்னும் இரண்டு கிளை நதிகளுடன் இணைகிறது. இங்கு இந்த நதி பிரம்மபுத்திரா என்று அழைக்கப்படுகிறது.



படம் 5.2 கங்கைநதி பிரம்மபுத்திராவுடன் இணைதல்

## தீபகற்ப நதிகள்

மேற்குத் தொடர்ச்சிமலைகள் தீபகற்ப நதிகளைப் பிரிக்கும் இருபெரும் நீர் பிரிப்பானாக உள்ளன. தீபகற்ப நதிகள் தங்களின் நீரை வங்காள விரிகுடாவிலும் அவற்றின் சிறுகிளை நதிகள் அரபிக் கடலிலும் கலக்கின்றன. நர்மதை மற்றும் தபதி நதிகளைத்தவிர பெரும்பாலான தீபகற்ப நதிகள் மேற்கிலிருந்து கிழக்குநோக்கிப் பாய்கின்றன. தீபகற்பத்தின் வடக்குப் பகுதியில் தோன்றும் சம்பல், சிந்து, பெட்வா, கென், ஷோன், போன்ற நதிகள் கங்கை நதி அமைப்பைச் சேர்ந்தவை. தீபகற்ப வடிகால் அமைப்பின் பிற நதிகள் மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவேரி நதிகளாகும்.

'கோதாவரி' நதி தீபகற்ப நதிகளில் மிகப்பெரியது. இது மகாராஷ்டிரத்தில் நாசிக் அருகில் 'திரியம்பக்' என்னுமிடத்தில் தோன்றி வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

- வரைப்படத்தைப் பார்த்து உன் அட்லாஸ் புத்தக உதவியுடன் கீழ்கண்டவற்றை நிரப்பு. கோதாவரி............ அருகில்...........ல் தோன்றுகிறது.

கிருஷ்ணா தீபகற்ப இரண்டாவது பெரிய நதி. இது மகாபலேஸ்வரத்திற்கு அருகே .....................என்னுமிடத்தில் தோன்றுகிறது. மகாநதி சத்தீஸ்கர் மாநிலத்தில் சிஹாவாவிற்கு அருகில் தோன்றி ............ வழியாக பாய்கிறது. நர்மதை நதி மத்தியப்பிரதேசத்தில் அமர்கண்டக் அருகில் தோன்றி ............... வழியாக பாய்கிறது. தபதி...........ல் தோன்றி............. வழியாக பாய்கிறது.

## நீர் பயன்பாடு

நீர் என்பது ஒரு வளமாகும். வருட நீரோட்டம் என்பது ஒரு வருடத்தில் நாம் எவ்வளவு நீரைப் பயன்படுத்துகிறோம் என்பதாகும். இதை கணிக்க நாம் நீர்சுழற்சியை நினைவுபடுத்திக்கொண்டு ஓராண்டின் உள்நீரோட்டத்தையும் வெளிநீரோட்டத்தையும் கணிக்கவேண்டும். வெளிநீரோட்டம் மற்றும் உள்நீரோட்டங்களை சிறியநீர்ப்பகுதிகளுக்கும் அல்லது ஒருமுழுமையான நதிப்படுகைக்குமாக, பல்வேறு நிலைகளில் கணிக்கலாம்.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




**இந்திய தீபகற்ப நதிகள்**

© Suhas Paranjpe and KJ Joy Panlot kshetra vokassachya navya disha, Maharashtra council

நாம் தற்போது சிறிய அல்லது பெரிய பகுதிகளான கிராமம் அல்லது மாவட்டத்திற்குப் பொருந்தக்கூடிய நீர்நிலை அறிக்கை என்னும் கருத்தை ஆராய்வோம்.

- நீர்ப்பகுதி என்னும் சொல் குறித்து கலந்துரையாடு

**உள்நீரோட்டங்கள்:**

எந்தவொரு பகுதிக்கும் உள் நீரோட்டம் = ஈரம் வடிதல் + புறநீரோட்டம்+நிலத்தடி நீரோட்டம் எனப்பொருள்படும். புற நீரோட்டத்தில், நதிகள், ஓடைகள், கால்வாய்கள் மற்றும் பிற நீரோட்டங்கள் அடங்கும். நிலத்தடி நீரோட்டத்தை கணிப்பது கடினம். ஆனால் அதை கணிக்க இயலும். ஈரம் வடிதலில் பனி, பனித்துளி, ஆலங்கட்டி மழை போன்றவை அடங்கும். ஒரு பகுதியின் ஈரம் வடிதலைக் கணிக்க பல ஆண்டுகளின் சராசரியை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் ஈரம்வடிதல் ஒவ்வோராண்டும் மாறுபட்டுக்கொண்டே இருக்கும்.

**புறப்பரப்பு மற்றும் நிலத்தடி நீர்ஓட்டங்கள் :** உங்கள் பகுதி கிராமமாக அல்லது நகரமாக இருந்தாலும் நதியிலிருந்து புறப்பரப்பு ஓட்டங்கள் அல்லது நீர்ப்பாசன அணைக்கட்டுகளின் பட்டியலை தயாரிக்கவும். கிராமம் போன்ற சிறிய பகுதி, நீரை கால்வாய்கள், குழாய்கள் போன்றவை மூலமாக பெறும் அனைத்து புறவளங்களை பட்டியலிடு. இது அந்த கிராமத்தின் மொத்த உள்நீரோட்டம் என்னும் கருத்தைப்பெற ஆண்டு மழைபொழிவின் அளவுடன் இணைக்கப்பட வேண்டியிருக்கும். எனினும் நிலத்தடி நீரோட்டங்கள் என்னும் கருத்தைப் பெறுவது மிகவும் கடினம். ஆனால் நீரோட்டத்தின் சாத்தியமான திசையை ஊகிக்க நிலத்தின் பொதுவான சரிவு துணைபுரிகின்றது.

- அருகிலுள்ள மண்டல அலுவலகத்திலிருந்து கடந்த 5வருடங்களாக உங்கள் பகுதியில் பெய்த ஆண்டு மழை பொழிவினை கண்டுபிடி.

**வெளிநீரோட்டங்கள் :**

**நீராவிப் போக்கு** (Evapotranspiration)**: நீரானது நீராவியாக மாறும் செயலான நீராவியாதல் நீர்நிலைகளில் அனைத்து காலங்களிலும் நடைபெறுகிறது. இது எந்தவொரு புறப்பரப்பு நீர்நிலைகளிலும் அதாவது ஏரிகள், ஆறுகள், கடல்கள் போன்றவற்றிலும் நிகழலாம். உயிரினங்கள் தங்களின் சுவாசித்தல் செயல்முறையின் வாயிலாகவும் வளிமண்டலத்திற்குள் நீரை வெளியிடுகின்றன. இதை நீர்ப்போக்கு** (Transpiration) **என்பர். நீராவியாதல் மற்றும் நீர்ப்போக்கு வாயிலாக வளிமண்டலத்தில் சேர்க்கப்படும் நீரின் மொத்த அளவு நீராவிப்போக்கு என்று அழைக்கப்படுகிறது.**

- தாவரங்கள் தங்கள் வேர்களிலிருந்து நீரை இழுக்கும்போது என்னநிகழ்கிறது என்பதை உங்கள் அறிவியல் பாடங்களிலிருந்து நினைவு கூருங்கள்.

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**புறப்பரப்பு நீரோட்டங்கள் மற்றும் நிலத்தடிநீர் வழியாக நீர்வழிந்தோடுதல்:** கிராமம் போன்ற ஒரு பகுதியை கற்பனை செய்துகொள். ஓடைகள் வாயிலாக சிறிதளவு நீர் கிராமத்திற்கு வெளியே புறப்பரப்பு நீரோட்டமாக பாய்ந்தோடுகிறது. பருவக்காற்று மாதங்களின் போது இந்த புறப்பரப்பு நீரோட்டம் மழையின் காரணமாக கணிசமாக உயர்ந்துவிடுகிறது. மழைநீரின் ஒருபகுதி மண்ணில் ஊறி நிலத்தடி மட்டத்தில் பயணித்து நீர் நிலைகளை நிரப்புகிறது. அதன் சிறுபகுதி உள்ளே பாய்ந்து கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகள் வழியாக நம் பயன்பாட்டிற்கு கிடைக்கிறது. மேலும் ஒரு பகுதி நீர்நிலைகளின் மிகவும் ஆழமான பகுதிக்குச் சென்று நமக்கு கிடைக்காமல் போகிறது. நிலத்தடி நீரில் சிறிதளவு ஓட்டங்களின் பாகமாக மாறிஇறுதியில் நீரோடைகள் அல்லது ஆறுகளில் தோன்றும்.

- நீர் சேகரிப்பு திட்டம் (WaterShed) என்பதை குறித்து கலந்துரையாடு.

**விவசாயத்திற்கு பயன்படும் நீர் :** நீரானது மழைப்பொழிவு அல்லது சில நீர்ப்பாசன முறைகள் மூலமாக பயிர்களின் வேர்ப்பகுதியை அடைகிறது. மண்ணிற்கு ஈரத்தை தேக்கிவைக்கும் திறன் உள்ளது. வெள்ளம் போன்ற அதிகப்படியான நீர் இருந்தால் அதற்கும் கீழே இறங்காமல் வேர்களை அழிந்துவிடும். மாறாக, வறட்சி நிலையில் வேர்ப்பகுதியில் போதிய அளவு ஈரப்பதம் இல்லாவிட்டால் பயிர்கள் வாடிவிடும்.

- உங்கள் பகுதியில் கடந்த 5 ஆண்டுகளில் பொழிந்த ஆண்டு மழை பொழிவை அருகிலுள்ள மண்டல அலுவலகத்தில் இருந்து கண்டறியவும்.

**வீடுகளுக்கும் விலங்குகளுக்கும் பயன்படும் நீர் :** குடிக்கவும், சமைக்கவும், துவைக்கவும், துடைக்கவும், விலங்குகளுக்காகவும் பயன்படுத்தும் நீர் மிகவும் முக்கியமான தேவையாகும். மக்களின் வருவாயை கருத்திற்கொள்ளாமல் குறைந்தபட்ச நீர் அனைவருக்கும் கிடைக்கும்படிச் செய்ய இந்த நீருக்கான திட்டமிடுதல், கிடைக்கும் தன்மையை அதிகரிக்க வேண்டும்.

**தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் நீர் :** பொருட்களை தயாரிக்கும் செயல்முறைகளுக்கு நீர் தேவைப்படுகிறது. இதன் தேவை அவ்வப்போது வீட்டுப்பயன்பாடு மற்றும் விவசாயப் பயன்பாடுகளுடனும் போட்டியிடுகிறது. இதற்கான போட்டி அதிகரித்திருப்பதால் இதை கணக்கில் கொள்ளவேண்டியுள்ளது. தொழிற்சாலைகளுக்கு நீரை பயன்படுத்தும் பகுதிகள் நீரைமறுசுழற்சி செய்தல், மாசுக்கட்டுப்பாடு போன்ற சவால்களை எதிர்கொள்கின்றன.

ஒரு பகுதிக்கு அல்லது கிராமத்திற்கு கிடைக்கும் நீரின் அளவானது உள்நீரோட்டங்கள் மீது மட்டும் ஆதாரப்படாமல் நாம் முன்பே பயன்படுத்தும் இருப்பு நீராகவும் கிடைக்கிறது. நம் பகுப்பாய்வில் இருப்பிற்கும் நீரோட்டத்திற்கும் இடையிலான வேறுபாட்டை தெளிவாக புரிந்துவைத்திருப்பது நமக்கு அவ்வப்போது தேவைப்படும். எடுத்துக்காட்டாக ஒருநீர்த்தேக்கத் தொட்டியில் நீரை உள்ளேற்றும் குழாய் வாயிலாக தொடர்ந்து நிரப்புவதும், நீரை தொடர்ந்து ஒரு வெளியேற்றும் குழாய் வாயிலாக பயன்படுத்துவதாகவும் கற்பனை செய். உள்ளே செல்லும் நீரை ஒரு நிமிடத்திற்கு எத்தனை லிட்டர் நீர் விடப்பட்டது என்பதையும் ஒரு நிமிடத்திற்கு எத்தனை லிட்டர் வெளியேற்றப்பட்டது என்பதையும் நாம் அளக்கலாம். நீர்த்தேக்கத் தொட்டியிலுள்ள நீரின் அளவு மாறுபட்டுக்கொண்டே இருக்கும். ஆனால், ஏதோ ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எடுத்துக்காட்டாக காலை 8.30மணிக்கு நாம் அதை லிட்டரில் அளக்கலாம். இதுவே அந்த நேரத்தின் இருப்பு நீர் என்று அழைக்கப்படும்.

ஒரு ஊரில் நீர்த்தேக்கங்கள், குளங்கள், ஏரிகள் இருக்கலாம். இவை அனைத்தும் புறப்பரப்பு சேமிப்புகள் எனப்படும். இந்தியாவின் பெரும்பாலான கிராமங்கள் கிணறுகளிலிருந்தும் குழாய்க்கிணறுகளிலிருந்தும் நீரைப்பெறுகின்றன. அவை நிலத்தடிநீர் சேமிப்பின் மீது ஆதாரப்பட்டுள்ளன. இந்த உள்நீரோட்டங்களும் நீர்சேமிப்புகளும் இணைக்கப்பட்டவையாகும். பாயும் நீரில் சிறிதளவு நேரடியாக பயன்படுத்தப்படுகிறது. இதில் ஒரு பகுதி புதுப்பிக்கப்படுகிறது அல்லது இந்த சேமிப்புகளிலிருந்து நீரை இழந்து பயன்படுத்துவதால் அவற்றிலிருக்கும் நீரின் அளவு குறைகிறது. உள்மற்றும் வெளிநீரோட்டங்களின் ஒப்புவிகிதங்களின் அடிப்படையில் பலஆண்டுகளாக இருப்பு நீருக்கு என்ன நிகழ்ந்திருக்கும் என முடிவு செய்யலாம். இன்று நாம் எதிர்கொள்ளும் சிக்கல் என்னவென்றால், நிலத்தடிநீர் சேமிப்புகள் குறைந்துவிட்டன என்பதே ஆகும். மேலும் இது எதிர்கால சந்ததியினருக்கு கிடைக்காமல் போய்விடும் வாய்ப்பும் உள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கிணறுகள் மற்றும் குழாய்க்கிணறுகளில் புதுப்பிக்கப்படும் ஆண்டு நீரோட்டங்களும் இருப்புகளுமே நாம் பயன்படுத்த கிடைக்கும் நீர். நம் தேவைகளை நாம் இந்த அளவிலேயே வைத்துக்கொள்ளவேண்டும். நாம் நீர்நிரம்பிய பூமிக்குள் தோண்டுவது அங்கு பல ஆண்டுகளாக திரட்டப்பட்டிருக்கும் சுரங்க நீராகும்.

இதை நாம் தீவிரமான வறட்சிகாலத்தில் மட்டுமே செய்யவேண்டும். இந்நீர் நல்லமழைபொழிவு இருக்கும் ஆண்டுகளில் மீண்டும் நிரப்பப்படுகிறது. இந்த 'நிலைநிறுத்துதல்' சிக்கலைக்குறித்து பின்னர் பார்ப்போம்.

### துங்கபத்திரா நதிப்படுகையில் பயன்படுத்தப்படும் நீர்

தென்னிந்தியாவின் இரண்டு மாநிலங்களால் பயன்படுத்தப்படும் துங்கபத்திரா மிகப்பெரிய நதி அமைப்பான கிருஷ்ணாவின் கிளை நதியாகும். இது மேற்குத் தொடர்ச்சி மலைகளில் தோன்றி சுமார் 71,417ச.கி.மீ நீர்பாசன நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. அதில் கர்னாடக மாநிலத்தின் நிலப்பரப்பு 57,671ச.கி.மீ ஆகும். துங்கபத்திரா நதிப்படுகை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. 1. கர்னாடகத்திலுள்ள மேல் மற்றும் இடைப்பட்ட நீர்ப்பாசன நிலப்பரப்பு 2. ஆந்திரப்பிதேசத்திலுள்ள நீர்ப்பாசனப்பகுதியின் கீழ்ப்பகுதி.

- இந்திய வரைபடத்தில் துங்கபத்திரா நதி பாயும் இடங்களை குறிக்கவும்.

அதிகாரப்பூர்வமான புள்ளியியல் விவரப்படி இரண்டு மாநிலங்களிலும் விவசாய நிலங்கள் இந்நதி நீரைப் பெறும் முக்கிய நிலப்பகுதிகளாக உள்ளன. மற்ற பகுதிகளான மரங்கள், தோட்டங்கள், பயிரிடப்படாத தரிசுநிலங்கள், நிலையான புல்வெளிப் பிரதேசங்கள் மற்றும் காடுகளும் இயற்கைத் தாவரங்களும் எஞ்சிய நீரைப் பெறுகின்றன. சிறிதளவு நிலப்பரப்பு நீர்த்தேக்கங்கள் எனப்படும் மழைநீர் சேமிப்பு திட்டங்களுக்காக பயன்டுத்தப்படுகிறது. ஆந்திரப்பிரதேசத்தின் நதிப்படுகையின் தாழ்வான பகுதிகள் குறைந்த மழைபொழிவையும் வறட்சி நிலைகளையும் சிறப்புப் பண்புகளாகக் கொண்டுள்ளன. சில பகுதிகள் மழைபொழிவு மற்றும் நிலத்தடி நீரின் மீது (கிணறுகள் மற்றும் குழாய்க்கிணறுகள்) ஆதாரப்பட்டுள்ளன. பிறபகுதிகள் துங்கபத்திராவின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைக்கட்டிலிருந்து நீரைஎடுத்துச்செல்லும் கால்வாய் போன்ற புற நீரோட்டங்களின் மீது ஆதாரப்பட்டுள்ளன. இவ்விரண்டு வகையான பகுதிகளுக்கிடையே நீர்கிடைப்பதில் பலவேறுபாடுகள் உள்ளன.


படம் 5.2 : துங்கபத்திரா அணைகட்டுதல் - 1952

விவசாயத்திற்காக பொது நிலங்களை ஆக்கிரமித்தல் இயல்பான ஒன்று. இதில் மரங்கள் நிறைந்த பகுதியை அழித்து அதிக நிலப்பரப்பு சாகுபடியின் கீழ் கொண்டுவரப்படுகிறது. மரங்களை அளவு கடந்து வெட்டுவதாலும் சுரங்கச் செயல்முறை போன்றவற்றால் காடுகள் அழிக்கப்படுவதோடு விலங்குகள் மற்றும் தாவரங்கள் செழித்து வளரும் அதிகமான நிலப்பகுதி அழிக்கப்பட்டுவருகிறது. நிலத்தடி நீரோட்டமானது நதிப்படுகைகளில் மரங்களடர்ந்த நிலப்பரப்பின் மீது ஆதாரப்பட்டுள்ளது. மரங்களடர்ந்த நிலப்பரப்பு போதிய அளவில் இல்லாததால் நீரானது புறப்பரப்புகளில் வழிந்தோடி நிலத்தடி நீர் இருப்பினை புதுப்பிக்கும் வாய்ப்பினை இழந்து விடுகிறது. மேலும் இது பெரும் வெள்ளங்களையும் ஏற்படுத்துகிறது. மழைபெய்யக்கூடிய மற்றும் கால்வாய் நீர்ப்பாசனம் உடைய பகுதிகளை நாம் நல்லமுறையில் பராமரிக்க வேண்டுமெனில் நாம் நீர்பாதுகாப்பு மற்றும் நீர் பகிர்வு முறைகளுக்காக ஒரு வேறுபட்ட திட்டத்தை கையாளவேண்டும்.

சில பத்தாண்டுகளாக துங்கபத்திரா



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அணையின் நீர்இருப்புத்திறன் படிப்படியாக குறைந்துவிட்டது. சுமார் 50ஆண்டுகளுக்கு முன்பு நீர்த்தேக்கத்தின் திறன் 3,766 மில்லியன் கனமீட்டர்களாக இருந்தது. தற்போது சுரங்கச் செயல்பாடுகளால் வண்டல் மண்ணின் திரட்சி, தூசு, மண் அரிப்பு குப்பை ஆகியவற்றால் நீர்த்தேக்கத்தின் இருப்புத்திறன் 849மில்லியன் கனமீட்டர் நீராக குறைந்து விட்டது. இரும்புத்தாது வெட்டி எடுப்பதில் தகுந்த சுரங்கச் செயற்பாட்டு நியமங்கள் பின்பற்றப்படுவதில்லை. குத்ரேமுக் என்னுமிடத்தில் இரும்புத் தாது பிரித்தெடுப்பதிலும் சந்தூரில் மாங்கனீஸ் பிரித்தெடுப்பதிலும் மண்ணரிப்பு மற்றும் பல சிறிய நீர்த்தேக்கங்கள், மரபுவழி நீர்த்தேக்கங்கள் மற்றும் துங்கபத்திரா நீர்த்தேக்கங்களில் வண்டல் வீழ்படிவுகளாலும் நதிப்படுகைகளின் உறுதிச்சமநிலை மிகவும் மோசமாக பாதிப்படைந்துள்ளது என்று ஒரு ஆய்வு கூறுகிறது.

பயன்படுத்தப்படும் நீர் தொடர்பாக பொதுவாக ஆந்திரப்பிரதேசத்திற்கும் கர்னாடக மாநிலத்திற்குமிடையே சச்சரவுகள் இருந்து வருகின்றன. நீரானது ஒரு நீரோட்ட வளமாகும். மேலும் அதன் இருப்பு அல்லது மேல் நீரோடையானது கீழ் நீரோடையின் நீர் மக்களுக்கு கிடைப்பதை பாதிக்கிறது. மாநில அரசுகளுக்கிடையே ஒப்பந்தங்களின் அடிப்படையில் நீர் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

தங்களின் வாழ்வாதாரங்களுக்காக 80%மக்கள் விவசாயத்தின் மீது ஆதாரப்பட்டுள்ளனர். இந்த பண்ணை நிலப் பகுதியில் நீரைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு என்பது ஒரு முன் நிபந்தனையாகும். நீர்ப்பாசனம் கால்வாய்கள் மூலம் வழங்கப்படுகிறது. மழைபெய்யும் பகுதிகளில் விவசாயிகள் ஆழ்துளை கிணறுகள் மூலமாக நிலத்தடிநீரை எடுக்கின்றனர். இப்பகுதிகளில் நெல், சோளம், கரும்பு, பருத்தி மற்றும் கேழ்வரகு போன்ற முக்கிய பயிர்கள் விளைகின்றன.

இப்பகுதி அரைவறட்சிப் பயிர்களுக்கு ஏற்றதாக இருப்பினும் முக்கியப் பயிர்களான நெல் மற்றும் கரும்பு வளர்வதற்கு அதிகளவு நீர் தேவைப்படுகிறது. நதிப்படுகைகள் முழுவதும் இதுபோன்ற பயிர்கள் சாகுபடி செய்வதால் நீர் இருப்புச் சமநிலையை இது திடீரென மாற்றிவிடுகிறது. அனைத்துப் பகுதிகளிலிருந்து இந்த பயிர்களின் சாகுபடிக்காக நீர் அவசியமாதலால், மக்களிடையே சச்சரவு தவிர்க்க முடியாததாக மாறியுள்ளது. எனவே, நீர்ப்பாசன வசதிகளைக் கொண்ட விவசாயிகளுக்கும் அவ்வசதி பெறாதவர்களுக்குமிடையே முக்கிய கருத்து வேறுபாடுகள் உள்ளன. கணிசமான அளவு நீரை அனைவரும் பயன்படுத்த நதிப்படுகை முழுவதும் பயிரிடுமுறையில் மாற்றத்தைக் கொண்டுவரும் படி ஊக்கப்படுத்தவேண்டும்.

கடந்த இரண்டு பத்தாண்டு காலத்தில் சிறிய நகரங்கள் மற்றும் தொழிற்சாலைப் பகுதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலை இருந்து வருகிறது. இது நீர் தேவையின் போட்டியை மேலும் சிக்கலாக மாற்றியுள்ளது. தொழில்மயமாக்கலின் அதிகரிப்பு மற்றும் நகர்புற பகுதிகளின் வளர்ச்சி சிலருக்கு வாழ்க்கை தரத்தை மேம்படுத்தியுள்ளது. இதே செயற்பாடுகளால் தொழிலகப் பிரிவுகளில் மாசடைதலை உருவாக்கியுள்ளது. இந்த நதிப்படுகையில் 27பெரிய தொழிற்சாலைகள் மற்றும் 2543 சிறிய தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றின் கழிவுகளை நதிகளில் விட அனுமதிக்கப்பட்டது. ஆனால் 1984ல் 'மொலாஸ்' என்னும் கழிவுப்பொருள்களை நதி நீரில் கலந்ததால், பேரளவில் மீன்கள் கொல்லப்பட்டதை எதிர்த்து பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் தூய்மைபடுத்தப்பட்ட கழிவுப் பொருள்களை மட்டும் நதிநீரில் விட தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்க சட்டங்கள் இயற்றவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இச்சட்டங்கள் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே நதிகள் தீவிரமாக மாசடைவது தொடர்கிறது. பல்வேறு முனைகளில் முன்னேற்ற நடவடிக்கைகளுடன் நகர்வது மற்றும் சிறிய நகரம் மற்றும் கிராமப்புறங்களிலுள்ள அனைத்துப் பிரிவினருக்கும் குடிநீரை வழங்குதல், ஆரோக்கிய வசதிகளை வழங்குதல் ஆகியவற்றிற்கிடையே பொருத்தப்பாடு இல்லை. குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் அடிப்படைத் தேவைகளாகும். இவற்றிற்காக செலுத்தும் திறனை கருத்தில் கொள்ளாமல் சிறிதளவு பணத்தை வழங்கவேண்டியுள்ளது. அளக்கப்பட்ட நீருடன் நாம் பரிசோதனை செய்யும்போது நாம் அனுமதிக்கவேண்டிய சமுதாயத்தின் ஒருகுறிப்பிட்ட பிரிவினர் அடிப்படைத் தேவையாக பெற வேண்டிய நீரை வழங்க முடியாமல் போய்விடும். நகரங்களுக்கு குடிநீர் வழங்குவது நன்கு திட்டமிடப்படவில்லை. "குறிப்பாக சிறிய நகரங்களுக்கு மோசமான வாய்ப்பு மற்றும் சமநிலை தொடர்பான சிக்கல்கள் கோடை காலங்களில் மிகவும் அதிகமாக இருக்கும்"



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

- நீர்ப்பயன்பாட்டின் மொத்த திட்டமிடுதலுக்காக அரசு நதிப்படுகை ஆணையம் இருந்திருந்தால் அது எவ்வாறு உதவியாக இருந்திருக்கும்?
- துங்கபத்திரா நீர்ப்படுகைக்கான நீர்ப்பயன்பாட்டில் உள்ள வேறுபட்ட சச்சரவுகள் யாவை?

என்று இந்த நதிப்படுகையின் ஒரு அறிக்கை கூறுகிறது.

இவ்வாறு, நீர்ப்பயன்பாட்டு நிர்வாகத்திற்கு சமூக, பொருளாதாரக் கூறுகள் மிகவும் முக்கியம். விவசாயம், தொழிற்சாலை அல்லது குடிநீருக்காக நீரை பயன்படுத்துவதில் ஒரு பகுதியின் சமூகங்களுக்குள்ளேயும், துறைகளுக்கிடையேயும் சச்சரவுகள் தோன்றுவது பொதுவாக காணப்படுகிறது. இதற்கு மேலாக நதியின் எல்லையைப் பற்றி உள்மாநில சச்சரவுகள் கர்னாடகத்திற்கும் ஆந்திரப்பிரதேசத்திற்கும் இடையே தோன்றியுள்ளது.

## நியாயமான மற்றும் சமநிலை நீர் பயன்பாடு ஓர் எடுத்துக்காட்டு

நாம் நீரின் பயன்பாட்டையும் நியாயமான பயன்பாட்டையும் பாரபட்சமற்ற நிலையை செயல்படுத்துவதற்கு அனைத்து உள்நீரோட்டங்கள் மற்றும் புறநீரோட்டங்களின் தேவையையும் நாம் படித்தோம். இது ஒரு நதிப்படுகை அல்லது ஒரு கிராமத்திற்கான திட்டமாகும். இதுபோன்ற திட்டங்களையும் நடைமுறைப்படுத்துதலும் செயல்படுத்தக்கூடிய ஒன்று. ‘ஹிவாரே பஜார்’ என்னும் கிராமம் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக உள்ளது.

ஹிவாரே பஜார் மகாராஷ்டிரா அரசின் ஆதர்ஷ் கிராம யோஜனா (Adarsh Gram Yojana)வின் கீழ் நதிநீர் மூலப்பகுதி மற்றும் அனைத்து வளர்ச்சிக்காகவும் தெரிவு செய்யப்பட்ட ஒரு கிராமம் ஆகும். ஹிவாரே பஜார் மகாராஷ்டிரத்தின் அகமது நகர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது சஹயாத்திரி மலைத்தொடரின் கிழக்கு திசையில் (மழைநிழல் பிரதேசம்) அமைந்து வடதெற்கு திசைகளில் பரவி மகாராஷ்டிரத்தின் எஞ்சிய பகுதியிலிருந்து கடலோரப்பகுதியான கொங்கண கடற்கரையை வேறுபடுத்துகிறது. அகமத்நகர் மாவட்டம் சராசரி ஆண்டு மழை அளவு சுமார் 400மி.மீட்டருடன் வறட்சியால் பாதிக்கப்படும் பகுதியாக உள்ளது.

ஹிவாரே பஜாரின் பொது நிலங்களிலும் தனியார் புல்வெளிநிலங்களிலும் மண் மற்றும் நீர்ப்பாதுகாப்பு பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. தொடர்ச்சியான சமன்வரை ஆழப்பகுதிகள் (Continuous Contour Trenches) (CCTs) மலைச்சரிவுகளில் மண்ணரிப்பைத் தடுப்பதற்காகவும், மழைநீர் சேமிப்பதற்காகவும், புல்களை வளர்க்க ஊக்கப்படுத்தவும் தோண்டப்பட்டன. தடுப்பு அணைகள், கழிவு நீர்த்தேக்கங்கள் மற்றும் இளகிய பாறை அமைப்புகள் போன்ற எண்ணற்ற மழைநீர் சேகரிப்பு திட்டங்களும் கிராமத்தில் கட்டப்பட்டுள்ளன. வனப்பகுதிகளிலும் சாலையோரங்களிலும் தோட்டப்பயிர்களை நடுதலும் "இத்திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

மகாராஷ்டிரத்தில் ‘ஆதர்ஷ கிராம யோஜனாவை’ நிறுவிய போது கிராமங்களை தேர்ந்தெடுக்க சில முன் நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. ராலேகான் சித்தி அனுபவத்தால் மிகவும் முக்கியமான நான்கு தடுப்புகளை உருவாக்கி பிரபலப்படுத்தப்பட்டது. நான்கு தடுப்புகளாவன : குர்ஹத்பந்தி (மரங்களை வெட்டுவதைத் தடுப்பது, சாரை பந்தி (கால்நடைகளை தாராளமாக மேயவிடுவதை தடுப்பது), நஸ்பந்தி (குடும்பக் கட்டுப்பாடு) மற்றும் நாஷாபந்தி (மதுபானத் தடுப்பு) மக்கள் சிறிதளவு சிரமதான் (தன்னார்வ உடலுழைப்பு)னிற்கும் ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது.நிலமற்றவர்களுக்கு இதி-ருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

1980களின் பிற்பகுதியில் அக்காலத்தில் ஹிவாரே பஜாரின் நிலையை மனதிற்கொண்டு இந்த ஐந்து சீரிய குறிக்கோள்களின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. மரம் வெட்டுதல் திறந்த புல்மேய்ப்பு ஆகியவை பணக்கார மற்றும் ஏழை வீடுகளிடையேயும் பொதுவாக காணப்படுகின்றன. பல உள்ளூர் மக்களின் கருத்துப்படி சுற்றியுள்ள குன்றுகள் தரிசாக காணப்படுகின்றன, மண்ணரிப்பு வெகுவாகவும் நிலத்தடிநீர் மட்டம் குறைவாகவும் இருக்கும். இதனுடன் தீவணம் மற்றும்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

எரிவிறகுக் குறைபாடும் கிராமத்தில் பொதுவாகக் காணப்படுகிறது. தாராள மேய்ப்பு தடை செய்யப்பட்டாலும் புற்களை வெட்டி விலங்குகளுக்கு உணவாக கொண்டு செல்ல மக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

கிராமத்தில் பிற்காலத்தில் சேர்க்கப்பட்ட பிற தடைகளும் உள்ளன. நீர்ப்பாசனத்திற்காக ஆழ்துளை கிணறுகள் அமைப்பது, மது தடை, கரும்பு மற்றும் வாழை பயிரிடுதல் மற்றும் ஒருவரின் நிலத்தை கிராமத்தில் வசிக்காத பிறவெளியாட்களுக்கு விற்றல் போன்றவை பிற முக்கியமான தடைகளாகும். இந்த நடவடிக்கைகள் நீண்டகால நிலைநிறுத்தும் தன்மை (குறிப்பாக நீரைப் பயன்படுத்துவதில்) சிக்கல்களை எடுத்துக்காட்டும் உத்தியின் மையமாக உள்ளது. இத்தடைகள் வெறும் அறிவிப்புகள் மட்டுமல்ல அவை பொது நோக்கத்துடன் அடையாளம் காணும் மக்களின் சமூகத்தை உருவாக்குவதற்கான வழி முறைகளாகும். ஆனால் அது எப்போதும் அமைதியான விவகாரமாக இருந்ததில்லை.

கோடைகாலப் பயிர்களுக்கான நீர்ப்பாசனப் பரப்பு 7ஹெக்டேரிலிருந்து 72ஹெக்டேருக்கு அதிகரித்துள்ளது. சாதாரண மழைப்பொழிவு உள்ள ஆண்டில் கரீப் பருவ கம்புவிற்கு நீர்ப்பாசனம் செய்ய போதிய நீர் கிணறுகளில் இருப்பதோடு மட்டுமின்றி ரபி பயிரான சோளம் மற்றும் சில கோடைகால காய்கறிப் பயிர்களுக்கும் போதிய நீர் உள்ளது. நீர்ப்பாசனம் செய்யாத நிலத்திலும் மண்ணின் ஈரநிலையின் மேம்பாடு உற்பத்தித் திறனை அதிகரிக்க உதவியது. பணப்பயிர்களான உருளை, வெங்காயம், பழங்கள் (திராட்சை மற்றும் மாதுளை) மற்றும் பூக்கள் மற்றும் கோதுமை போன்றவற்றை மக்கள் பயிரிடுவதால் கடந்த காலத்தைவிட பயிர்களின் வீச்சு கணிசமான அளவில் மிக அதிகமாக வேறுபட்டுள்ளது. மிகவும் முக்கியமான மேம்பாடு என்னவென்றால், நீர்கிடைப்பதை அதிகரித்ததால் இரண்டாவது பயிர்விளைவிக்க முடிந்தது. அதனால் குடிபெயர்தல் குறைந்துவிட்டது. இதன்பொருள் சிறுவிவசாயிகளும் இறுதிநிலை விவசாயிகளும் தங்கள் சொந்த நிலங்களில் மட்டும் சிறு வருவாய் பெற்று தங்கள் வாழ்க்கையை காலந்தள்ளுவது என்பதல்ல ; இது அவர்களின் நிலங்களை மிகவும்




படம் 5.3 : *நிலம் மற்றும் நீர் சேமிப்பு பணிகளுக்குப் பிறகு ஹிவாரே பஜார்.*



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அதிகமான உற்பத்தித்திறன் கொண்டவையாக மாற்றியது. தாழ்வான பகுதிகளில் அவர்கள் இருப்பினும் கூலிவேலைவாய்ப்பு நிலைகள் கூலி விகித உயர்வுடன் மேம்பாடு அடைந்தது.

நிலத்தடி நீரை எடுப்பது மற்றும் பயன்படுத்துவதன் மீது சமூகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது. நீர்ப்பாசனத்திற்கு ஆழ்துளைக் கிணறுகள் இல்லை குடிநீருக்கு மட்டும் இருந்தது. அதே போன்று கரும்பு போன்ற நீர் பேரளவில் தேவைப்படும் பயிர்களுக்கும் நீர்ப்பாசன வசதிகள் இல்லை. தோண்டப்பட்ட கிணறுகள் வாயிலாகவே நீர்ப்பாசனத்திற்குத் தேவையான நீரை எடுக்க வேண்டும். நல்ல மழைப்பொழிவு இருந்தால் முழுமையான ரபி பயிர்களை விளைவிப்பது, குறைவான மழைப்பொழிவு இருந்தால் ரபி பயிர்கள் விளைவிப்பதை குறைத்துக்கொள்வது போன்ற அனுபவ விதிமுறைகளை அவர்கள் கையாண்டுவந்தனர். மழைப்பொழிவு புள்ளிவிவரத்தை அவர்கள் மிகுந்த கவனத்துடன் எடுத்து அதை பயிர்திட்டமிடுதலுக்காகவும் நீர் பயன்பாட்டு முன்னுரிமைகளுக்காகவும் பயன்படுத்தினர். இதன் விளைவால் தொடர்ச்சியான வறட்சி ஆண்டுகளிலும் குடிநீர் பற்றாக்குறை இருந்ததில்லை. நீர் கிடைப்பதற்கு ஏற்ப திட்டமிட்டதே இதன் முக்கிய காரணம்.

விலங்குச் செல்வப் பொருளாதாரத்தின் முன்னேற்றமும் இறுதிநிலை மற்றும் சிறு விவசாயிகளுக்கு அதிகஅளவில் உதவியது. ஹிவாரே பஜார் மக்கள் அனைவரின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு காரணமாக இருந்த பால்பண்ணை தொழிலை மேம்படுத்துவதற்கு ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பலசிறு விவசாயிகளுக்கு கடன்கள் வழங்கப்பட்டன. அதன் விளைவாக கிராமத்தில் பால்தரும் விலங்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. சிறந்த உற்பத்தித்திறனால் தீவனம் கிடைப்பது பெருமளவில் அதிகரிக்கப்பட்டது என்ற உண்மையுடன் இந்த முன்னேற்றங்கள் தொடர்பு கொண்டுள்ளன என்பது தெளிவாகிறது. கிராமத்தில் பால் உற்பத்தியும் 20மடங்கு உயர்ந்தது. ஒருநாளைக்கு 140லிட்டராக இருந்த பால் உற்பத்தி தற்போது 3000லிட்டராக அதிகரித்ததை இந்த கிராமம் கண்ணுற்றது.

- **ஹிவாரே பஜாரில் நீர்ப்பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளைத் தெரிவிக்கும் வாக்கியங்களை அடிக்கோடிட்டுக் காட்டுக.**
- **நீர் கிடைப்பதற்கேற்ப விவசாய திட்டமிடுதலுக்காக என்ன முயற்சி மேற்கொள்ளப்பட்டது?**
- **இணையதள வசதி உங்களுக்கு இருந்தால்** http://bit.ly/kothL1 **என்னும் வலைதளத்தில் ஹிவாரே பஜாரைப் குறித்த விளக்கப்படத்தைப் பார்.**

இருப்பினும் நிலத்தடிநீர் எடுப்பதை ஒரு சிறிய பிரிவு அல்லது ஒரு கிராமத்தின் எல்லைக்குள் மட்டும் கட்டுப்படுத்த முடியாது என்று ஆய்வுகளில் ஒன்று குறிப்பிடுகிறது. அருகிலுள்ள கிராமங்கள் ஆழ்துளை கிணறுகளை தோண்டி நிலத்தடிநீரை எடுக்கத்தொடங்கி விட்டன. ஆனால், இதற்கு ஹிவாரே பஜாருக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. எனவே நமக்கு அரசின் விதிமுறைகள் மற்றும் புரிந்துகொள்ளுதல் நதித் துணைபடுகை அல்லது நதிப்படுகைகள் போன்ற மிகவும் பெரிய பிரிவுகளுக்காகத் தேவைப்படுகிறது.

## பொதுவாக பங்கிடும் வளமாக நீர்

**கடந்த சில பத்தாண்டுகளாக நிலத்தடிநீர் வீட்டு மற்றும் விவசாய பயன்பாட்டிற்கான முக்கிய வளமாக மாறியுள்ளது. நிலத்தடிநீரை இவ்வாறு அளவுக்கதிகமாக பயன்படுத்துவதால் நீர் கிடைத்தல் மற்றும் நீர் பெறுவதற்கான வசதிவாய்ப்புகளின் மீது முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.**

**பல மாநிலங்களில் நிலத்தடி நீரைப் பற்றிய நடப்பு சட்டங்கள் பழமையடைந்தும் தகுதியற்றதுமாகவும் உள்ளன. இறுதிநிலை வளமாக நிலத்தடி நீர் இருந்த காலத்தில் அவை உருவாக்கப்பட்டன. இன்று ஆழம் குறைந்த மற்றும் ஆழ் குழாய் கிணறுகள் அதிக அளவிலான நீரை எடுக்கும் ஆற்றல் கொண்டுள்ளன. இந்தநீரை பயன்படுத்தும் நியாயமான வழிமுறை என்னவாக இருக்கவேண்டும்?**

**நிலத்தடி நீருக்கான நடப்பு சட்டங்கள் பொருந்தாதவைகளாக உள்ளன. ஏனெனில், நிலத்தடி நீருக்கான வாய்ப்பு மற்றும் நில உரிமைகளின் மீது ஆதாரப்பட்டுள்ள இந்த**



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

சட்டங்கள் குறையுள்ளவைகளாக உள்ளன. மேலே குறிப்பிட்ட நிலத்திலிருந்து நிலத்தடி நீர் எடுக்கப்படவேண்டியிருப்பதால் நில உரிமை மற்றும் கட்டுப்பாடுகளுக்கிடையே ஓர் இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நிலத்தடி அமைப்பிலிருந்து எடுக்கப்படும் நீர் நில உரிமையாளருக்கு சொந்தம் எனக் கருதப்பட்டது.

நிலஉரிமை கொண்ட தனிமனிதர்களுக்கே நிலத்தடிநீரின் மீது அதிகஅளவு கட்டுப்பாடு உள்ளது என்பதை இது தெரிவிக்கிறது. நில உரிமையாளர்கள் அவர்கள் வெளியே எடுக்கும் நீரின் அளவுக்கு கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை.

மேலே உள்ள கருத்து ஏன் குறையுள்ளதாக கருதப்படுகிறது? புறப்பரப்பில் செய்யப்பட்ட மனித நிலஉரிமை கட்டுப்பாடுகள் நிலத்தடி நீருக்கு பொருந்தாது. நீர் தொடர்ந்து கிடைக்கும் ஒரு வளமாகும். ஒரு தனிப்பட்ட குழாய்க்கிணறு அல்லது கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட நீர் பூமிக்கடியில் அமைந்துள்ள பாறை அமைப்பின் மீது ஆதாரப்பட்டுள்ளது. மழைப்பொழிவு அல்லது புறப்பரப்பு நீரால் புதுப்பிக்கப்படுகிறது. இக்காரணிகள் அனைத்தும் ஒரு பெரிய நிலப்பரப்பில் நிகழ்கின்றன. எனவே இப்பகுதியில் மற்றவர்களின் நடவடிக்கைகள் இந்த குறிப்பிட்ட கிணற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும். எடுத்துக்காட்டாக ஒரு குழாய்க் கிணற்றிலிருந்து அளவுக்கதிகமாக எடுப்பதால் சுற்றியுள்ள மற்ற குழாய்க்கிணறுகள் அடிக்கடி வறண்டுவிடும். ஒவ்வொருவரும் தன்னுடைய சுற்றத்தாரைவிட அதிக ஆழத்திற்குச் செல்லபோட்டியிடுவதால் விரைவிலேயே ஒரு குறிப்பிட்ட ஆழத்திற்குள் அனைத்துக்குழாய்க் கிணறுகளும் வறண்டுவிடும். ஏனெனில், இக்கிணறுகள் இப்பகுதியின் நிலத்தடி அமைப்புகளால் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டவை. எனவே நீரைப்போன்ற பாயும் வளத்தின் உரிமையைப் பற்றி சிந்திப்பது ஏற்றதல்ல. ஒரு நிலப்பகுதியில் உள்ள காற்றுடன் இதை ஒப்பிடு. காற்றானது எப்போதும் வீசிக்கொண்டே இருக்கும். ஆதலால், ஒருவரால் காற்றுக்கு எல்லைகளை உருவாக்கமுடியாது.

இன்று நிலத்தடிநீர் மக்களுக்கு முக்கிய வளமாக உள்ளது. அளவுக்கதிகமான நீரை வெளியே எடுப்பதால் அது இணைக்கப்பட்ட பகுதிகளில் மற்றவற்றை பாதிக்கிறது. இது எதிர்காலத் தலைமுறையினருக்கு கிடைக்கவிருக்கும் நீரின் இருப்பை பாதிக்கிறது. எனவே தனிப்பட்ட நிலஉரிமையாளர்களை அவர்களின் நிலத்திலிருந்து அவர்கள் விரும்பிய வண்ணம் அளவுக்கதிகமாக நீரை வெளியே எடுக்க அனுமதிக்கக்கூடாது. அதற்கு சில கட்டுப்பாடுகள் இருக்கவேண்டும். முதலில் நாம் நில உரிமைக்கும் நிலத்தின் மீதுள்ள குழாய்க் கிணறுகள் வாயிலாக நிலத்தடி அமைப்பிலிருந்து எடுக்கப்படும் நீருக்கும் இடையே உள்ள இணைப்பை துண்டித்தால் இக்கட்டுப்பாடுகள் ஒப்புக்கொள்ளப்படும்.

நிலத்தடிநீரின் மீது கட்டுப்பாடு நிலஉரிமைகள் மீது இணைக்கப்பட்ட இடத்தில் ஒரு சிறந்த முறையில் நீரைப் பயன்படுதத தனிப்பட்ட நில உரிமையாளர்களுக்கு எந்த அழுத்தங்களும் இருப்பதில்லை. பரந்த சமூகம் மற்றும் சுற்றுப்புறத்தின் நலத்தினை கருத்தில் கொள்ளும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தவும் எந்தவொரு வழியும் இல்லை. அனைத்து நடைமுறை நோக்கங்களுக்காகவும், எடுத்துக்காட்டாக எத்தனை கிணறுகள், கை பம்புகள் மற்றும் பிற குழாய்க் கிணறுகள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் செயல்படும் என்பதை நிர்ணயிக்க எந்த ஆணையத்தாலும் இயலாது. நிலத்தடிநீரை பயன்படுத்தும் பரந்த கூறுகளை கருத்தில் கொள்ளும் சீரமைப்புமுறை அவசியமாகிறது. எனவே, நீரை அனைத்து மக்களுக்கும் பயன்படும் பொது வளமாகக் கருதவேண்டும். சாலைகள், ஆறுகள் மற்றும் பூங்காக்களைப் போன்று நிலத்தடிநீரும் அனைவருக்கும் சொந்தமான பொதுச்சொத்து ஆகும். இது தற்போது சில மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்டு வந்தாலும் இது இன்னும் பேரளவில் பரவவில்லை.

ஒரு சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்பது எளிதான செயலல்ல. ஏனெனில், சிலவளங்களான நீர், மின்சாரம், எண்ணெய், இயற்கைவாயு போன்றவற்றை ஒருநபர் அல்லது ஒரு துறையால் பெறப்படுவது பிறருக்கு கிடைப்பதை பாதிக்கிறது. உண்மையில், பல மாநிலங்களில் நீரின் பயன்பாடு நெறிபடுத்தப்படவில்லை. இவ்வாறு மாநில அரசுகள் அவ்வப்போது மின்கட்டண மானியங்களை உயர்த்தி எப்போதும் ஆழ்ந்த அடுக்குகளில்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

உள்ள நீரினை எடுப்பதற்காக திட்டமிடுகின்றன. ஒரு அணுகுமுறையின் எல்லைகள் நிலத்தடிநீர் பெறும் வாய்ப்பின் மீது கட்டுப்பாட்டினை மறுப்பது மட்டுமின்றி, சிறப்பு மானியங்களை தெளிவாக புரியவைத்து அதை ஊக்கப்படுத்தவும் செய்கிறது. நடைமுறைப்படுத்தும் பணியைச் செய்ய அரசியல் சிந்தனையும் மாறவேண்டும்.

ஒவ்வொருவரும் பிறருக்கு முன் தங்களின் பங்கினைப் பெற முந்திக்கொள்ள விரும்புவதால் பொதுவள முறையை முடித்துவிடுவதற்கான எதிர்மறை போட்டியை நிறுத்துவதற்கு இது மட்டுமே வழிமுறையாகும். இது உண்மையான சமகால சவாலாகும்.

நீர், ஒரு பொதுவாகப் பாயும் வளமாகும் என்பதை அங்கீகரிக்க சட்டங்களும் விதிமுறைகளும் தேவைப்படுகிறது. குடிநீர் மனித உரிமையைப் போலவே முதல் முன்னுரிமையாகும். பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்கு நிலத்தடி நீரை பயன்படுத்துவதன் மீது அதிகாரம் இருக்கவேண்டும்.

கேரளாவின் 'பெருமட்டி' கிராம பஞ்சாயத்திற்கும் கொக்கோ கோலா கம்பெனிக்கும் நீர் பயன்பாட்டின் மீது ஏற்பட்ட சச்சரவைக் குறித்து காண்போம். சுற்றுப்புறப் பகுதிகளில் நீர் மட்டம் குறைந்து போனதால் நீரை வெளியே எடுக்கும் உரிமத்தை புதுப்பிக்க பஞ்சாயத்து முடிவெடுக்கவில்லை. நீரின் தரமானது உள்ளூர் அரசு முதன்மை சுகாதார மையம், இந்தநீர் குடிப்பதற்கு ஏற்றதல்ல என முடிவுசெய்யும் அளவிற்கு குறைந்துவிட்டது. இந்தப்பிரச்சனை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டு ஜனவரி 2014 நிலவரப்படி உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. கேரளாவில் நீதிபதிகளால் தரப்பட்ட இரண்டு தீர்ப்புகளும் நிலத்தடிநீர் சீரமைப்பு பற்றி இரண்டு வேறுபட்ட கருத்துக்களை தந்தன. முதல் நீதிபதி கூறிய தீர்ப்புப்படி நிலத்தடிநீர் அனைவருக்குமான பொதுவளம். அதிகமாக சுரண்டப்படுவதை எதிர்த்து அதைக்காப்பது மாநில அரசின் கடமையாகும். மேலும் குடிநீருக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் எனவும் நீதிபதி ஒரு இணைப்புக் கருத்தை வெளியிட்டார். இரண்டாவது நீதிபதி முற்றிலும் வேறுபட்ட கருத்தை கூறினார். நிலத்தடி நீரின் மீது நில உரிமையாளருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என வலியுறுத்தினார். இவ்விரு முரண்பாடான தீர்ப்புகளும் இன்று நம் சட்டங்களில் உள்ள குழப்பத்தை வெளிப்படுத்துகிறது.

## முடிவுரை

முதற்பகுதியில் நாம் இந்தியாவில் காணப்படும் நதி அமைப்புகளைப் பற்றியும் வேறுபட்ட இயற்கையமைப்பு நிலைகளைப் பற்றியும் பார்த்தோம். சிறிய நதிநீர்ப்பகுதி அல்லது நதிப்படுகை போன்ற எந்த ஒரு பகுதிக்கும் நீர்பயன்பாடு என்பது அனைத்து உள்நீரோட்டங்களையும் வெளிநீரோட்டங்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த பின்னணியுடன் திறனற்ற மற்றும் நேர்மையற்ற வழிமுறைகளில் தற்போது நீர் பயன்படுத்தப்படுவதை புரிந்துகொள்ள முடியும். துங்கபத்திரா நதிப்படுகை தனிஆய்வின் மூலமாக நாம் எவ்வாறு திறனற்ற மற்றும் நேர்மையற்ற வழிமுறைகளில் நீரை தற்போது பயன்படுத்துகிறோம் என்பதை புரிந்துகொள்ள முடியும். இது ஒரு சிக்கலான பயிற்சி. ஆனால், சாதிக்கக்கூடியது. அதேபோன்று ஒரு சிறிய சிறப்பான திட்டமிடுதல் மூலமாக மிக நேர்மையான நீர்பயன்பாட்டை அனைவருக்காவும் செய்யலாம். நாம் ஹிவாரே பஜார் மக்களின் முயற்சியைப் பார்த்தோம். அவர்களின் நிலையில் ஆக்கப்பூர்வமான செயலை நோக்கி உலகின் மக்களனைவரும் தூண்டப்படுவார்கள் என நம்புவோம். நீர் வளங்களுக்கு உள்ளூர் அளவில் ஒன்றுபட்ட செயல்பாடும் மாநில மற்றும் தேசிய அளவுகளில் தகுந்த சட்டங்களும் கொள்கைகளும் தேவைப்படுகின்றன. நிலத்தடிநீர் எடுத்துக்காட்டு வாயிலாக இன்று நாம் நமது சிந்தனைகளில் உள்ள குறைபாடுகளைப் புரிந்து கொண்டோம்.

- ஹிவாரே பஜாரில் உள்ளதைப் போன்று நிலத்தடி நீர் சீரமைப்பு சமூகத்தின் முதன்மையான வழிநடத்துதலைப்போல் இருக்கவேண்டுமா?
- "நிலத்தடிநீர் சட்டங்கள் பழமையானதாகவும் பொருத்தமற்றவையாகவும் உள்ளன." விளக்குக
- நிலத்தடிநீர் ஒரு பொதுவான வளமாக இருக்க வேண்டுமா? உன் கருத்தை விளக்கு.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## முக்கியச் சொற்கள்

வளங்கள், நிலத்தடிநீர், வடிகால், நீர்ப்பங்கீட்டுச் சட்டம், நீர்நிலை, நதிநீர்ப்பகுதி, நீர்ப்பாசன நிலப்பரப்பு, வறட்சி, நீர்கசிதல்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. கீழ்காணும் அம்சங்களுடன் இந்தியாவின் முக்கிய நதி அமைப்பை விவரிக்கும் அட்டவணையை உருவாக்கு : பாயும்திசை, அவை கடந்து செல்லும் நாடுகள் அல்லது பகுதிகள், பகுதிகளின் இயற்கைத் தன்மைகள்.(AS3)

2. பல்வேறு சூழ்நிலைகளான விவசாயம், தொழிற்சாலை போன்றவற்றிற்கு நிலத்தடிநீர் பயன்பாட்டைக் குறித்து ஆதரவு அல்லது எதிர்ப்பு விவாதங்களைக் கண்டறிந்து பட்டியலிடு.(AS2)

3. துங்கபத்திரா நதிப் படுகையில் நீர்வளங்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றிய பட்டியலைத் தயாரிக்கவும். இந்தப் பாடத்தில் அல்லது வேறு பல வகுப்புகளிலோ இப்பிரச்சனைகளுக்கு தீர்வுகாண கலந்துரையாடல் செய்யப்பட்ட கருத்துக்களை அடையாளம் காண்க.(AS4)

4. நீர்ப்பாதுகாப்பினை மேம்படுத்த ஹிவாரே பஜாரில் எந்த விவசாய நடைமுறைகளின் கூறுகள் சீரமைக்கப்பட்டன?(AS1)

5. நீர் வளச் சூழ்நிலைகளால் சட்டங்களும் மக்களின் செயல்பாடுகளும் எவ்வளவு முக்கியமானவை? இப்பாடத்தின் கடைசி இரண்டு பகுதிகளில் விவாதிக்கப்பட்ட கருத்துக்களின் மீது ஒரு சிறுகுறிப்பு வரைக.(AS1)

6. உங்கள் பகுதியில் எந்த வழிமுறைகளில் நீரை எந்த நோக்கங்களுக்காக வாங்கி விற்கிறார்கள்? இதற்கு சில கட்டுப்பாடுகள் இருக்கவேண்டும் என நீ கருதுகிறாயா? கலந்துரையாடவும்.(AS4)

7. நீர் கிடைக்கும் அளவு நாளுக்குநாள் குறைந்து வருகிறது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது. இந்நிலைமை தொடர்ந்தால் நம் வாழ்க்கை எவ்வாறு பாதிக்கும்? இக்குறைபாட்டை தவிர்க்க மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் நம் பொறுப்புகள் குறித்து கலந்துரையாடு.(AS4)

### கலந்துரையாடல் :

**நிலத்தடி நீரை இறைத்து பயன்படுத்துவதன் மீது சமூக கட்டுப்பாடு அவசியமா? இதன் மீது வகுப்பறையில் விவாதத்தை நடத்துக.**

## செயல்திட்டம்

உன் கிராமம் அல்லது இருப்பிடத்திற்கான குடிநீர், நிலத்தடி நீர் திட்டங்களைக் குறித்து சிந்திக்கவும். அவற்றில் எதனை நடைமுறைப்படுத்தினால் அனைவருக்கும் நன்மை விளையும்?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்
6

# மக்கள்




*படம் 6.1 மக்கள் தொகையின் அடிப்படையில் நாடுகளின் பரப்பளவை காட்டவேண்டியிருந்தால் அது இவ்வாறு இருந்திருக்கும். இது மற்ற உலகப்படத்திலிருந்து எவ்வாறு வேறுபட்டுள்ளது? விவாதி.*

மக்கள் தொகை சமூக அறிவியலில் முக்கியமான ஒருகூறு ஆகும். அனைவருக்கும் முன்னேற்றம் என்று நாம் குறிப்பிடும்போது மக்களை, குறிப்பாக முன்னேற்றத்தின் செயல்முறையிலுள்ள சாதாரண இறுதிநிலையிலுள்ளவர்களை மனதில் கொள்கிறோம். சமத்துவம் என்னும் எண்ணமும் மக்களை குறிப்பிட்டே பயன்படுத்தப்படுகிறது. மாறாக, நாம் எதிர்கொள்ளும் அனைத்து சிக்கல்களுக்கும் மக்கள் தொகை வளர்ச்சியே காரணம் என்று மக்கள் குறைகூறுவதை நீங்கள் அவ்வப்போது கேள்விபட்டிருப்பீர்கள். அவர்கள் வேலையின்மை, உணவு, மற்றும் வளங்களை பல மக்களுடன் பகிர்ந்துகொள்வதைக் குறை கூறுகின்றனர். இந்தியாவில் உழைக்கும் மக்களில் 92% ஒழுங்கமைக்கப்படாத துறையிலேயே உள்ளனர். அவர்கள் வேலைக்காக போராட வேண்டியுள்ளது. அவர்களுக்கு ஆதரவு அளிக்க அவர்களின் குடும்பங்களைத் தவிர வேறு சமூகப் பாதுகாப்பு ஏதுமில்லை. நாம் இந்த முரண்பாடுகளை எவ்வாறு உணர்வது? நாம் பிற கூறுகளை உணர்ந்துகொள்ளவும் புரிந்துகொள்ளவும் அடிப்படைப் பின்னணியை வழங்கும் மக்கள் தொகை எண்ணிக்கை, அதன்பகிர்வு மற்றும் குணநலன்களை புரிந்து கொள்வது முக்கியம்.

- உங்கள் சுற்றுப்புறத்தில் உள்ள பல்வேறு தொழில்களைச் செய்யும் மற்றும் வருவாயை பெறும் சில மக்களுடன் பேசு. சிறந்த சிறிய குடும்பத்தின் எண்ணிக்கை குறித்து அவர்களின் கருத்தைக் கண்டறியவும்.
- உங்களுடைய இருப்பிடம் அல்லது கிராமம் மற்றும் நாடு முழுவதும் வாழும் மக்களைப் பற்றிய தகவல்கள் எவ்வாறு சேகரிக்கப்பட்டு பதிவு செய்யப்படுகின்றன என்பதை பற்றி நீ எப்போதாவது வியப்படைந்தாயா? உங்கள் ஆசிரியரிடம் மக்கள் தொகைப்புள்ளி விவரம் சேகரித்த அனுபவத்தைக் குறித்து விளக்கச்சொல்.
- மக்கள் தொகை கணக்கெடுப்பு அல்லது மாதிரி முறையை பயன்படுத்தி தகவல் சேகரிப்பதில் உள்ள வேற்றுமை என்ன? சில எடுத்துக்காட்டுகளுடன் விவாதி.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இந்தியாவின் மக்கள் தொகை கணக்கெடுப்பு நம் நாட்டின் மக்கள் தொகையை பற்றிய தகவலை நமக்குத் தருகிறது. மக்கள்தொகைக் கணக்கெடுப்பு என்பது கொடுக்கப்பட்ட மக்கள் தொகையின் உறுப்பினர்களைப் பற்றிய தகவல்களை ஒரு ஒழுங்கான முறையில் பெறுவதையும் பதிவுசெய்வதையும் தெரிவிக்கும் ஒரு செயல்முறையாகும். இந்தியாவில் வாழும் அனைத்து மக்களின் தகவல் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை சேகரிக்கப்படுகிறது.

**இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு**

இந்தியாவில் முதன்முதலாக 1872ல் மக்கள் தொகை கணக்கெடுப்பி நடந்தது. முழுமையான கணக்கெடுப்பு 1881ல் நடந்தது. அதன்பிறகு ஒவ்வொரு பத்தாண்டும் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. 2011ல் இந்தியாவின் மக்கள் தொகை 121,01,93,422. இந்த 1210 மில்லியனில் ஆண்கள் 623,724,248 பெண்கள் 586,469,174 இருந்தனர்.

இந்த கணக்கெடுப்பை மேற்கொள்ளும் நபர் கிராமம், நகரம் மற்றும் மாநகரங்களில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று அவ்வீடுகளில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையை கண்டறிவர். இந்த கணக்கெடுப்பு நமக்கு மக்களின் வயது, அவர்களின் தொழில், வீடுகள், கல்வி, மதம் போன்ற பல தகவல்களை தருகின்றது. இந்த தகவல்களை சேகரித்தல் மற்றும் பதிவு செய்தல் ஆகியவற்றை இந்திய பதிவாளர் ஜெனரல் மற்றும் இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆணையம் (Census Commission of India) இணைந்து ஏற்பாடு செய்கிறது.

கணக்கெடுப்பு குறித்து மேலும் பல விவரங்களை நாம் அறிவதற்குமுன், நம் சொந்தப் பகுதியை கணக்கெடுப்பு செய்து, கணக்கெடுப்பால் எவ்வகையான பணி மேற்கொள்ளப்படுகிறது என்பதை ஆராயவும்.

## கணக்கெடுப்பை நடத்துதல்

- இரண்டு முதல் மூன்று மாணவர்களைக் கொண்ட ஒவ்வொரு குழுவும் அவர்களுடைய இருப்பிடங்களிலுள்ள 10 குடும்பங்களிலிருந்து புள்ளி விவரத்தை சேகரிப்பர். கணக்கெடுப்பு படிவம் கீழே தரப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு குழுவும் விவரங்களை நிரப்பி அட்டவணையை உருவாக்கு.
- ஒவ்வொரு குழுவாலும் தரப்பட்ட அட்டவணைகளின் அடிப்படையில் வகுப்பில் வினாக்களை கலந்துரையாடுவர்.

| வீடு 1<br>நபரின் பெயர் | ஆண்/<br>பெண் | வயது | திருமண தகுதி | கற்றவர்/<br>கல்லாதவர் | 6-14 வயது குழந்தைகள் பள்ளித் தகுதி | தொழில் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| வீடு 2<br>நபரின் பெயர் | | | | | | |

**கணக்கெடுப்பு செய்வதற்கு முன்:**

- கணக்கெடுப்பு படிவத்திலுள்ள அனைத்து சொற்களுக்கும் பொதுவான பொருள் வரும்படி கலந்துரையாட வேண்டும். இல்லாவிட்டால் உண்மையான கணக்கெடுப்பில் குழப்பங்கள் ஏற்படும் மேலும் ஒரு குழுவினரின் விளைவுகளோடு மற்றொரு குழுவின் விளைவுகளை நம்மால் ஒப்பிடமுடியாது. உங்கள் ஆசிரியருடன் பின்வரும் கருத்துக்களை விவாதிக்கவும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

1. ஒரு வீடு எவ்வாறு விளக்கப்படும்? யாரையெல்லாம் அதில் சேர்க்கவேண்டும்?
2. கல்விக்காக நீ எந்தெந்த வகைப்பாடுகளை பயன்படுத்துவாய்?

   எ-டு : 6வயதுக்குட்பட்ட குழந்தை: பள்ளி/கல்லூரியில் படித்துக்கொண்டிருத்தல்...வகுப்பு; பள்ளியிலிருந்தும் வருகைப் பதிவு செய்யாமல் இருத்தல்; படித்த வகுப்பு; பள்ளிக்குச் செல்லவில்லை.
3. எந்தெந்த வகைகளை தொழிலுக்காக பயன்படுத்தவாய்?

   எ-டு : வீட்டு நிர்வாகி, மாணவர், சுயவேலை செய்பவர்... வேலையற்றோர், ஓய்வுபெற்றவர், வேலை செய்யாதவர், மூத்தகுடிமகன்

**கணக்கெடுப்பிற்கு பின்**

**A)** கணக்கெடுப்பு செய்யப்பட்ட குடும்பங்களின் உறுப்பினர் எண்ணிக்கையைக் காட்டும் அட்டவணையை ஒவ்வொரு குழுவும் தயாரிக்க வேண்டும்.

| ஆண் | பெண் | மொத்த மக்கள் தொகை |
|---|---|---|
| | | |

**B)** ஒவ்வொரு குழுவின் ஆண்/பெண் விகிதம் என்ன? பல்வேறு குழுக்களுக்கிடையே உள்ள விகிதங்கள் மிகவும் வேறுபட்டுள்ளனவா?

| 6-14 வருடங்கள் நிரம்பிய அனைத்து குழந்தைகளுக்காக: | | | |
|---|---|---|---|
| குழந்தைகள் | சிறுவர்கள் | சிறுமிகள் | மொத்தம் |
| பள்ளியிலுள்ளவர்கள் | | | |
| பள்ளியிலிருந்து நின்றுவிட்டவர்கள் | | | |
| பள்ளியில் சேராதவர் | | | |

**C)** அனைத்துக்குழுவிலும் பள்ளியைவிட்டு நின்றவர்கள் மற்றும் வருகைப்பதிவு செய்யப்படாத குழந்தைகள் அனைவருடைய சதவீதம் என்ன? இவற்றுக்கான காரணங்கள் யாவை?

**D)** 20 வயது நிரம்பியவர்களுக்காக: பள்ளியில் அவர்கள் செலவிட்ட சராசரி காலம் என்ன? உன் குழுவிற்காக இதைக் கண்டறி. இப்புள்ளி விவரம் பயனுள்ளதா?

**E)** 15-59 வயதுக்குழுவில் உள்ள அனைத்து மக்களுக்காக:

| தொழில் | எண்ணிக்கை | சதவீதம் (%) |
|---|---|---|
| சுயவேலை | | |
| வீட்டு நிர்வாகி | | |
| அதிகாரி | | |
| வேலையற்றோர் | | |
| மாணவர் | | |
| மொத்தம் | | |

உன் மாதிரிப்படிவத்தில் வேலை செய்பவர்கள் மற்றும் சார்ந்திருப்பவர்களை எவ்வாறு வகைப்படுத்துவாய்?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## கணக்கெடுப்பு எதை காட்டுகிறது?

### வயது அமைப்பு

மக்கள் தொகையின் வயது அமைப்பு என்பது ஒருநாட்டின் பல்வேறு வயதுக் குழுவினரின் ஆண் மற்றும் பெண்களின் எண்ணிக்கையைக் குறிக்கும். இது மக்கள் தொகையின் தன்மைகளில் மிகவும் முக்கியமான ஒன்றாகும். குறிப்பாக ஒரு நபரின் வயது அவருக்கு என்ன தேவைப்படுகிறது, அவரின் வேலைசெய்யும் திறன், அவர் பிறர் மீது சார்ந்துள்ளவரா போன்றவற்றின் மீது ஆதாரப்பட்டுள்ளது. அதன் விளைவாக, மக்கள் தொகையிலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கையும் சதவீதமும், வேலைசெய்யும் வயதுடைய மக்கள், முதியவர்கள் ஆகியோர் மக்கள் தொகையின் சமூக மற்றும் பொருளாதார அமைப்பினை தீர்மானிக்கும் முக்கியமான அம்சங்களாகும்.

ஒரு நாட்டின் மக்கள் தொகை பொதுவாக மூன்று முக்கிய வகைப்பாடுகளாக பிரிக்கப்படுகிறது.

1. **குழந்தைகள் (பொதுவாக 15வயதுக்கு உட்பட்டவர்கள்) :** அவர்கள் குடும்பங்களால் கவனித்துக் கொள்ளப்படுகிறார்கள் மற்றும் ஒவ்வொருவரையும் அவர்களுக்கு உணவு, உடை, கல்வி மற்றும் மருத்துவ வசதியும் அவர்களின் வளர்ச்சிக்கு அனைத்துவிதமான பிற வாய்ப்புகளும் தேவைப்படுகின்றன. இருப்பினும் தங்களுக்கு தாங்களே பராமரித்துக்கொள்ள வருமானத்தை ஈட்ட அவர்களால் முடியாது. நிதிநிலைமைகளுக்காக சில குழந்தைகளை வேலை செய்யும்படி கட்டாயப்படுத்துவது விரும்பத்தக்கதல்ல.

2. **வேலை செய்யும் வயதுடையவர்கள் (15 - 59 ஆண்டுகள்):** பொதுவாக இக்குழுவினர் சமுதாயத்தில் உழைக்கும் மக்கள் தொகையாக வடிவமைந்துள்ளனர். அவர்கள் உயிரியல்ரீதியாக இனப்பெருக்கம் செய்பவர்களாகவும் உள்ளனர். இவ்வயதுக்குழுவிலுள்ள பெரும்பாலான மக்கள் ஒரு ஒழுங்கான வருமானத்தையும் பணிப்பாதுகாப்பினையும் விரும்புபவர் இவர்களின் பொருளீட்டுதலின் மீது குழந்தைகளும் முதியவர்களும் ஆதாரப்பட்டுள்ளனர்.

3. **முதியவர்கள் (59 வயதிற்கு மேற்பட்டவர்கள்) :** சம்பள வேலைவாய்ப்பில் இருப்பவர்கள் அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட துறையிலிருப்பவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கும். இருப்பினும் விவசாயக் கூலிகளில் பெரும்பாலானோர், வீட்டுப் பணியாளர்கள், வீடுகட்டும் தொழிலாளர்கள் மற்றும் பிற தொழிலாளர்கள் சாதாரணமாக தங்களின் உடல்ஒத்துழைப்பு இருக்கும்வரை வேலையில் தொடர்கின்றனர். இக்குழுவினர் முதுமையில் ஆதரவிற்காக தங்களால் வேலை செய்யமுடியாததால் தங்களின் குடும்பத்தின் மீது ஆதாரப்பட்டுள்ளனர். அவர்களின் மருத்துவ செலவுகளும் மற்ற வயதுக் குழுவினரை விட அதிகமாக உள்ளது.

*வரைபடம் 6.1: இந்திய மக்கள் தொகை பிரமீடு 2011*




- மேலே உள்ள வயது பிரமீட்டில் மக்கள் தொகையில் குழந்தைகளின் சதவீதத்தின் ஒரு தோராயமான மதிப்பினைக் கண்டறியவும்.
- உன் கணக்கெடுப்பை ஆதாரமாகக் கொண்டு அட்டவணையில் கீழ்காண்பனவற்றை குறிப்பிடு : மக்கள் தொகை, குழந்தைகள், வேலை செய்பவர்கள், முதியவர்கள்.

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

வேறுபட்ட குழுவினருக்காக பல்வேறு வழிமுறைகளில் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய சிறப்பு திட்டங்களைப் பற்றி சிந்திக்கவும். எடுத்துக்காட்டாக மதிய உணவுதிட்டம், அங்கன்வாடி திட்டங்கள் போன்றவை. அவை ஏன் அவசியம்?

## பா×ன விகிதம்

மக்கள் தொகையில் 1000 ஆண்களுக்கு உள்ள பெண்களின் எண்ணிக்கையை பாலின விகிதம் என்பர். இத்தகவல் சமுதாயத்தில் ஆண் பெண் சமத்துவம் எந்த அளவிற்கு உள்ளது என அளப்பதற்காக ஒரு முக்கியமான குறிகாட்டியாகும். நீங்கள் கணக்கெடுப்பு செய்த குடும்பங்களுக்காக இதை நீங்கள் கணக்கிட்டிருப்பீர்கள். இப்போது நாடுமுழுமைக்கும் இந்த எண்களை பரிசோதிக்கவும். இந்தியாவில் பெண்களின் எண்ணிக்கை ஒரேசீராக ஆண்களைவிட குறைவாக இருப்பதை நாம் பார்க்கிறோம். இந்த ஆண்/பெண் விகிதம், பாலின விகிதம் என்பது வேறுபாட்டின் மறைமுகவடிவமாக இருப்பதை சுட்டிக்காட்டுவதால் ஏற்பட்ட அக்கறையின் விளைவாகும். குறிப்பாக பெண்களும் சிறுமியர்களும் கல்வி மற்றும் முன்னேற்ற வாய்ப்புகளில் சமமற்ற வாய்ப்புகளை எதிர்கொள்கின்றனர். சத்துணவு, குழந்தை நலம் மற்றும் சுகாதாரம் போன்ற பெரும்பாலான அடிப்படைத் தேவைகளிலும் அவர்கள் வேறுபடுத்தப்படுகிறார்கள். ஆண்களை விட குறைவான அளவிலேயே இவற்றைப் பெறுகிறார்கள். எனவே இந்த வேறுபாடு இல்லாவிட்டால் சிறுமியர்களின் எண்ணிக்கை சிறுவர்களைவிட அதிகமாக அல்லது அவர்களுக்குச் சமமாக இருக்கும். மக்கள் தொகை கணக்கெடுப்பின் மூலம் மற்றொரு குறிகாட்டியையும் நாம் பெறுகிறோம். இந்தியாவில் 100 பெண்குழந்தைகளுக்கு 105ஆண்குழந்தைகள் பிறந்தனர். எனினும் ஆண்குழந்தைகளைக் காட்டிலும் பெண்குழந்தைகள் அதிகஅளவில் இறக்கின்றனர். 0-5 வயதுக்குழுவில் உயிர்வாழும் சிறுமியர்களின் எண்ணிக்கை சிறுவர்களின் எண்ணிக்கையை விட மிகவும் குறைவாக உள்ளது என மக்கள் தொகை கணக்கெடுப்பு காட்டுகிறது. அவர்களின் பராமரிப்பு மற்றும் சத்துணவுகளில் சில வேறுபாடுகள் காட்டப்படுவதாலேயே இது நிகழ்கிறது. இல்லையேல் உயிர்வாழும் இயற்கையான வாய்ப்பு பெண் குழந்தைகளுக்கு நன்றாகவே உள்ளது.



*Graph 2 : இந்திய மக்கள் தொகை: பா-ன விகிதம், 1951 - 2011*

ஒப்பீட்டு எண்களிலிருந்து நமக்கு மற்றொரு சான்றும் கிடைத்துள்ளது. பெண்களுக்கு சமத்துவத்தையும் சமவாய்ப்பையும் வழங்கியுள்ள சமுதாயங்களை அல்லது பகுதிகளைப் பார்த்தால் பாலின விகிதங்கள் வேறுபட்டுள்ளதைக் காணலாம். ஆண்களுக்குச் சாதகமாகவும் பெண்களை வேறுபடுத்தியும் சமமற்ற பாலினத் தொடர்புகள் கொண்ட பகுதிகள் சமமற்ற பாலின விகிதங்களைக் கொண்டுள்ளன. இது அவர்கள் உயர்ந்த வருமானத்தை பெற்ற போதிலும் நிகழ்கிறது. எடுத்துக்காட்டாக கீழ்காணும் புள்ளி விவரத்தைப் பார்.

| பகுதி | ஹரியானா | பஞ்சாப் | ஆந்திரா | கேரளா | அமெரிக்கா |
|---|---|---|---|---|---|
| பாலின விகிதம் | 870 | 880 | 970 | 1040 | 1050 |

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இந்தியாவில் கேரளா போன்ற குறிப்பிட்ட பகுதிகளில் நேரிடையான பாலின விகிதமும் மற்ற சில பகுதிகளில் பெண்களை எதிர்த்து அதிக வேறுபாடும் காட்டப்படுகின்றன. இந்தியாவில் பாலின வேறுபாட்டினைப் பற்றிய ஒருகவலையான கருத்துயாதெனில், சிறிது தூரம் சென்று படிக்க ஆண் பிள்ளைகளுக்கு முன்னுரிமை உண்டே தவிர பெண்பிள்ளைகளுக்கு இல்லை. இந்த ஆணுக்கு முன்னுரிமை வேறுபாட்டின் மோசமான நிலைகள் ஒன்று பெண்குழந்தைகளின் இறப்பு விகிதம் ஆண்குழந்தைகளின் இறப்பு விகிதத்தைவிட அதிகமாக உள்ளது. இது முக்கியமாக ஆண் குழந்தைகளின் ஆரோக்கியத்தில் செலுத்தும் கவனத்தை ஒப்பிடும் போது பெண் குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் உடல்நலக்குறைவில் மிகக் கொடிய முறையில் அலட்சியம் காட்டுவதேயாகும். பெண் கருஅழித்தல் முறையும் வழக்கில் உள்ளது. ஆண் குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்குவதால் பெற்றோர்கள் பெண்குழந்தைகளை கருவிலேயே கலைத்து விடுகின்றனர். பெரும்பாலான முதியோர் பெண்குழந்தைகளை ஒரு சுமையாகக் கருதுகின்றனர். வயது வந்தோர்களிடத்தும் ஆரோக்கியத்தில் ஆண் முன்னுரிமை காட்டப்படுவதால் வயது வந்த பெண்களிடம் இறப்பு விகிதம் ஆண் வயது வந்தோர்களை விட உயர்ந்துவிட்டது.



படம் 6.1

பெண்களுக்கெதிரான வேறுபாட்டை குறைக்கும் ஒரு ஆற்றல்மிக்க விசையாக பெண்கல்வி இருந்து வருகிறது. பெண்களின் எழுத்தறிவு மற்றும் பள்ளிக்கு அனுப்புதல் மற்றும் பெண்குழந்தைகளின் ஆரோக்கியத்தின் மீது அலட்சியப்போக்கினை எதிர்த்துக் பணியாற்றுவதாலும் பெண்களின் இறப்பு விகிதம் குறையும் என்பதற்கு உறுதியான சான்று உள்ளது. இதுபோன்ற சூழ்நிலைகளை புரிந்துகொள்ள அருகில் தரப்பட்டுள்ள வினாக்களைப் பற்றி கலந்துரையாடி இது பாலின விகிதத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறதா என்பதையும் விவாதி.

- ஆண்பிள்ளைகளைப் போலவே பெண்பிள்ளைகளும் மேற்படிப்பு படிப்பதற்கான வாய்ப்புகளைப் பெறுகின்றனரா?
- திருமணமான பெண்கள் வீட்டிற்கு வெளியே பயணம் செய்து வேலை செய்யவாய்ப்புகளைப் பெற்றுள்ளனரா?
- பெண்கள் தங்களின் பிறந்தகுடும்பத்திலிருந்து பிரிந்து இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனரா? பாதுகாப்பு மற்றும் சொத்துரிமைகளை கேட்காமல் இருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனரா?
- உங்கள் பகுதியில் ஆண் குழந்தைக்கு வலிமையான முன்னுரிமை இருக்கிறதா?

## எழுத்தறிவு விகிதம்

2011ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி 7 அல்லது அதற்கு மேல் வயதுடைய ஒரு நபர் எந்த ஒரு மொழியிலாவது எழுதவும் படிக்கவும் முடியுமானால் அவர் எழுத்தறிவுள்ளவராக கருதப்படுகிறார். எழுத்தறிவு சமூக பொருளாதார வளர்ச்சிக்கு துணைபுரிகிறது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

- உன் கிராமம் அல்லது நகரத்தில் எழுத்தறிவற்ற மக்கள் இருந்தால் கண்டறியவும். உங்கள் கணக்கெடுப்பு என்ன தெரிவிக்கிறது?
- எழுத்தறிவு முன்னேற்றத்தை எவ்வாறு பாதிக்கிறது? கலந்துரையாடு.

1947ஆம் ஆண்டில், விடுதலையின் போது மக்கள் தொகையில் 12% எழுத்தறிவு பெற்றிருந்தனர். 2001ல் எழுத்தறிவு பெற்றவர் சதவீதம் 65%. அது 2011க்குள் 74% ஆக வளர்ந்துவிட்டது. எனினும் 2011 கணக்கெடுப்பு ஆண்களின் எழுத்தறிவு விகித்திலும் (82%) பெண்களின் எழுத்தறிவு விகிதத்திலும் (65%) பெரிய வேறுபாட்டைக் காட்டுகிறது.

### உழைக்கும் மக்கள் தொகை :

*அட்டவணை 1 : 2011 கணக்கெடுப்புப்படி தொழிலாளர்களின் பகிர்வு*

| தொழிலாளிகள் | தொழிலாளிகளின் சதவீதம் |
|---|---|
| பயிர்செய்வோர் | 25 |
| விவசாயக் கூலிகள் | 30 |
| வீட்டு உபயோகப்பொருட்கள் தயாரிக்கும்தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள் | 59 |
| மற்ற தொழிலாளிகள் | 41 |
| மொத்தம் | 100 |

15-59 வயதுக்குழுவினர் உழைக்கும் மக்களாக உள்ளனர் என்பதை நாம் முன்பே அறிந்துகொண்டோம். அவர்கள் ஆண்டு முழுவதும் அல்லது ஆண்டில் சில குறிப்பிட்ட காலம் மட்டும் வேலை செய்வர். இது அவர்களுக்குக் கிடைக்கும் வேலையின்மீது ஆதாரப்பட்டுள்ளது. நாம் முன்பே விவாதித்ததைப்போல் இதில் வீட்டுநிர்வாகிகளின் ஊதியமற்ற வேலைகள் அடங்காது. (அட்டவணை 6.2ஐப் பார்)

இந்தியக் கணக்கெடுப்பு அவர்களை நான்கு பிரிவினராக பிரித்துள்ளது. பயிர்செய்பவர்கள் என்பவர்கள் விவசாயிகள். அவர்கள் நிலத்தை விவசாயம் செய்வர் அல்லது அவர்களின் சொந்தமான நிலத்தை மேற்பார்வையிடுவர் அல்லது குத்தகைக்கு எடுத்து பயிரிடுவர். விவசாயக் கூலிகள் என்போர் மற்றவர்களின் நிலங்களில் பணமாகவோ பொருளாகவோ கூலியை பெற்றுக்கொண்டு வேலை செய்வர். வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் வேலை செய்வோர் உற்பத்தி செய்தல் அல்லது வீட்டில் சில உற்பத்திப் பொருட்களை சரிசெய்தல். எ-டு: நெல்லின் உமிநீக்குதல், பீடி தயாரிப்பவர்கள், குயவர்கள், நெசவாளர்கள், செருப்பு தைப்பவர்கள், பொம்மைகளை தயாரிப்பவர், தீப்பெட்டிகளைத் தயாரிப்பவர் போன்றோர் ஆவர். மற்ற உழைப்பாளர்களில் தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள், வியாபாரிகள் ஏதோ ஒரு வேலை செய்பவர்கள், மற்ற அனைத்து தொழில் செய்பவர்களும் அடங்குவர்.

- பயிர்செய்பவர்களிலிருந்து விவசாயக் கூலி எவ்வாறு வேறுபடுகிறார்?
- மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலும், நீங்கள் மேற்கொண்ட கணக்கெடுப்பிலும் உள்ள தொழிலாளர்களின் வகைகளை ஒப்பிடு.

## மாறிவரும் மக்கள் தொகையின் அளவு

மக்கள் தொகை அதிகரிக்கக்கூடியது. மக்கள் தொகையின் எண்ணிக்கை, பகிர்வு, தொகுப்பு போன்ற அனைத்தும் எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும். மூன்று இடைவினைகளின் காரணத்தாலேயே இது நிகழ்கிறது. அவை 1. பிறப்புகள் 2. இறப்புகள் மற்றும் 3. குடிபெயர்ப்புகள்.

ஒரு மக்கள் தொகையின் அளவில் மாற்றம் என்பது ஒருகுறிப்பிட்ட காலத்தின் போது, உதாரணமாக கடந்த பத்தாண்டுகளில் ஒரு நாட்டின்/மாகாணத்தில் வாழ்பவர்களின் எண்ணிக்கையின் வேறுபாடாகும். அது போன்ற மாற்றத்தை இரண்டு வழிகளில் வெளிப்படுத்தலாம். 1. உண்மையான எண்ணிக்கை அல்லது 2. சதவீதத்தின் மாற்றம்.

ஒவ்வொரு பத்தாண்டிலும் சேர்க்கப்படும் உண்மையான எண்ணிக்கை அதிகரிப்பின் வீச்சாகும். இதைக் கடந்த மக்கள் தொகையிலிருந்து (எ-டு 2001 தற்போதைய மக்கள் தொகையை (எ-டு 2011) கழிப்பதன் மூலம் எளிதாகப்பெறலாம். முடிவானது நேர்முக எண்ணாக இருப்பின் மக்கள் தொகை அதிகரித்துள்ளது. எதிரிடையான எண்ணாக இருப்பின் மக்கள் தொகை அந்த எண் அளவிற்கு குறைந்துள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




*வரைபடம் 3 : இந்திய மக்கள்தொகை (மில்லியனில்) 1901-2011*

மக்கள் தொகை அதிகரிப்பையும் 1901-2011வரை அதன் வளர்ச்சியையும் கவனி (வரைபடம் 6.3) எந்த ஆண்டில் மக்கள் தொகை குறைந்தது? எந்த ஆண்டு முதல் மக்கள் தொகை தொடர்ந்து அதிகரித்தவண்ணம் உள்ளது? இந்திய விடுதலைக்குப் பின் மக்கள்தொகை அதிகரிப்பு வேகமடைந்ததற்கான காரணங்கள் யாவை?

மக்கள் தொகை மாற்றம் (உண்மையான எண்ணிக்கை) = (தற்கால தேதியில் மக்கள் தொகை) – (முற்கால தேதியில் மக்கள் தொகை).

ஓரிடத்தின் மக்கள் தொகை மாற்றம் = (பிறப்புகளின் எண்ணிகை + குடியேறிவந்தவர்களின் எண்ணிக்கை) – (இறப்புகளின் எண்ணிக்கை + குடியேற்றத்தை விட்டுச்சென்றவர்களின் எண்ணிக்கை). நேர்முக எண்ணிக்கை என்பது அந்த எண்ணிக்கை அளவு மக்கள் தொகை அதிகரித்துள்ளது என்று பொருள். எதிரிடையான எண்ணிக்கை அந்த எண்ணிக்கை அளவிற்கு மக்கள் தொகை குறைந்திருப்பதைக் காட்டுகிறது.

ஒரு கணம் எந்த குடிபெயர்ப்பும் இல்லை என வைத்துக்கொள்வோம். இந்த அதிகரிப்புகளைக் கணக்கிட நாம் இரண்டு விகிதங்களை ஆராயவேண்டும். (1) பிறப்பு விகிதம் என்பது ஓராண்டில் ஆயிரம் நபர்களுக்கு உயிருடன் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையாகும். 1992ல் இந்தியாவின் பிறப்பு விகிதம் 29 எனில் நாட்டில் அந்த ஆண்டில் ஒவ்வொரு 1000 நபர்களுக்கும் 29 குழந்தைகள் பிறந்தன என்று பொருள். (2) இறப்பு விகிதம் என்பது ஒவ்வொரு 1000 நபர்களுக்கும் அந்த ஆண்டில் இறந்த குழந்தைகளின் எண்ணிக்கையாகும். 1992ஆம் ஆண்டில் ஒவ்வொரு 1000 நபர்களுக்கும் அந்த ஆண்டில் 10பேர் இறந்துவிட்டனர். எனவே, ஒவ்வொரு 1000 பேருக்கும் அந்த ஆண்டு காலத்தில் 19பேர் மக்கள் தொகையில் இணைக்கப்பட்டனர். இந்த எண்ணை சதவீதத்தில் அதாவது 1.9% எனக்குறிப்பிடுவர். எனவே 1992ஆம் ஆண்டின் மக்கள் தொகை வளர்ச்சி வீதம் 1.9% ஆக இருந்தது.

மக்கள் தொகை அதிகரிப்பின் விகிதம் அல்லது வேகம் முக்கியமானது இது ஆண்டிற்கு சதவீதம் என குறிக்கப்படுகிறது. எ.டு: ஆண்டிற்கு 2% அதிகரிப்பு என்பது எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்டில் அடிப்படை ஆண்டில் ஒவ்வொரு 100 நபருக்கும் 2 பேர் அதிகரித்துள்ளனர் என்று பொருள். இது கூட்டு வட்டியைப் போல் வேலை செய்கிறது. இது ஆண்டு வளர்ச்சி விகிதம் எனக் குறிக்கப்படுகிறது. இந்தியாவின் மக்கள் தொகை நிலையாக அதிகரித்து வருகிறது.

இந்திய மக்கள் தொகையின் வளர்ச்சிக்கான காரணங்களை ஆராய்வதற்கு (வரைபடத்தில் காட்டியவாறு) நாம் பிறப்பு மற்றும் இறப்பு விகிதங்களைப் பார்க்க வேண்டியுள்ளது. அண்மைக் காலங்களில் இறப்பு விகிதத்தில் வேகமான வீழ்ச்சி இருந்து வந்தாலும் பிறப்பு விகிதங்கள் கணிசமான அளவில் குறையவில்லை 1901–21ஆம் ஆண்டிலிருந்தும் குறிப்பாக விடுதலைக்குப் பின் பஞ்சங்களின் தாக்கம் குறைந்தது. ஏனெனில் பஞ்சநிவாரணம், தானியப்புரட்சி மற்றும் மலிவு விலை ரேஷன் கடைகள் மற்றும் மக்களாட்சியில் பொது மக்களின் எழுச்சி போன்றவை நடைமுறைப்படுத்தப்பட்டன.

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அதேபோன்று தொற்று நோய்களான காலரா, கொள்ளை நோய், மற்றும் ஓரளவிற்கு மலேரியா நோயும் கட்டுப்படுத்தப்பட்டன. மாசடைந்த நீர், மிகவும் நெருக்கமான வாழ்க்கை மற்றும் விலக்கப்படாத குப்பைகள் போன்றவற்றால் பலநோய்கள் பரவின. இவற்றை சமாளிக்க சிறந்த சுகாதார வசதி, தூய்மையான நீர் மற்றும் சத்துணவு போன்றவை ஏற்றுக்கொள்ளத் தொடங்கி, பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்னர், மருத்துவத்திற்கு, குறிப்பாக எதிர் உயிரிகள் மற்றும் தடுப்பு மருந்துகள் வாங்க முன்பணம் தரப்பட்டதால் சிறந்த ஆரோக்கியத்திற்கு துணைபுரிகிறது. 1921க்கு ஒப்பிடும்போது அண்மையில் இறப்பு விகிதங்கள் வேகமாக வீழ்ச்சியடைந்தன. குறைந்துவரும் இறப்பு விகிதங்களுடன் உயர்ந்த பிறப்பு விகிதங்கள் மக்கள் தொகை வளர்ச்சியின் உயர்ந்த விகிதங்களுக்கு வழிவகுத்தது.

பிறப்பு விகிதம் நீண்ட காலமாக ஏன் உயர்ந்தே உள்ளது? கடந்த காலத்தில் நிகழ்ந்ததைத் தெரிவிக்க ஓரிரு காரணங்கள் உள்ளன. ஒட்டுமொத்த மக்கள் தொகையில் இளைஞர்களின் சதவீதம் உயர்வாக இருந்தால் பின்னர் வரும் ஆண்டுகளில் அவர்கள் வளர்ந்து திருமணம் புரிந்து, பிள்ளைகளைப் பெறுவர். அதுபோன்று இணைக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கைகளைப் பெறுவர். அதுபோன்று இணைக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையும் உயர்ந்திருக்கும். ஏனெனில் நாம் அதிக எண்ணிக்கை கொண்ட இளைஞர் மக்கள் தொகையைத் தொடங்கியுள்ளோம். மற்றொரு காரணம் தம்பதியினர் பெற்றுக் கொள்ள விரும்பும் குழந்தைகளின் எண்ணிக்கை. இது எத்தனை குழந்தைகள் உயிருடன் வாழ்வர் மக்களுக்கு எவ்வகையான சமூகப்பாதுகாப்பு உள்ளது மற்றும் சமுதாயத்தில் ஆண் குழந்தைக்கான முன்னுரிமை போன்றவற்றுடன் தொடர்பு கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக உமேத் சிங்கின் மூன்று சந்ததிகளைப் பாருங்கள்.

உமேத் சிங்கின் தாத்தாவும் தாயாரும் கொள்ளை மற்றும் காலரா போன்ற தொற்று நோய்களால் இறந்துவிட்டனர். 1900ஆம் ஆண்டில் பிறந்த அவர் தந்தையார் அவருடைய பெரியப்பாவால் வளர்க்கப்பட்டார். அவர்களுக்கு சொந்தமாக சிறிதளவு நிலம் இருந்தாலும் அது தொடர்ந்து பிரச்சனைகளை எதிர்கொண்டது. சில சமயங்களில் பயிர்விடுவதும் பஞ்சம் ஏற்படுவது போன்ற இன்னல்களை எதிர்கொண்டது. எப்போதாவது ஒருமுறை நல்ல சாகுபடி கிடைக்கும். உமேத்சிங்கின் தந்தைக்கு ஒன்பது குழந்தைகள் பிறந்தாலும் அவற்றில் 6பேர் சிறுவயதிலேயே இறந்துவிட்டனர். உயிர்வாழும் மூன்று




படம் 6.2 : பிறநாடுகளின் இரண்டு சுவரொட்டிகள் இங்கே உள்ளன அவற்றில் என்னசெய்தி தரப்பட்டுள்ளது என்பதை உன்னால் ஊகிக்கமுடியுமா? இந்தியாவில் இதுபோன்ற சுவரொட்டிகளை நீ கண்டதுண்டா? கலந்துரையாடு.






Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

குழந்தைகளில் 1935ஆம் ஆண்டில் பிறந்த உமேத் சிங் ஒருவராவார்.

அவருக்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர். உமேத்சிங் இடைநிலைப்பள்ளி வரை சென்றதால் காவலர் ஆனார். அவருடைய தந்தையைப் போலன்றி அவருக்கு சீரான சம்பளம் கிடைத்தது. அவருக்கு நிலத்திலிருந்தும் சிறிதளவு வருவாய் கிடைத்தது. உமேதுக்கு தொடக்கத்தில் இரண்டு பெண்குழந்தைகள் பிறந்தனர். ஆனால் அவர்களின் உயிர் வாழ்தலைப் பற்றி கவலைப்பட்டார். அவருக்கு மகன் வேண்டும் எனவும் விரும்பினார். பின்னர் அவருக்கு மேலும் நான்கு குழந்தைகள் பிறந்தனர். அக்குழந்தைகளில் மூவர் மகன்கள். இருப்பினும் தற்போது உமேத்தின் பெரிய மகள் ஆசிரியர் பயிற்சி பெற்ற பின்னர் மூன்று குழந்தைகளுக்குமேல் தனக்கு வேண்டாம் என்று கூறுகிறாள்.

அட்டவணை 6.3 இந்திய மக்கள் தொகை வளர்ச்சியின் வீச்சு மற்றும் விகிதம் (துவறிவிட்ட எண்களை கணக்கிட்டு அதில் எழுதவும்)

| ஆண்டு | மொத்த மக்கள்தொகை (மில்லியன்களில்) | பத்தாண்டுகளில் உண்மையான அதிகரிப்பு | பத்தாண்டுகளில் சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| 1951 | 361 | | |
| 1961 | 439 | 21.60 | |
| 1971 | 548 | ? | |
| 1981 | 683 | ? | |
| 1991 | 846 | ? | |
| 2001 | 1029 | ? | |
| 2011 | 1210 | ? | |

[439-361=78; 361ற்கு 78 உயர்ந்தது. எனவே %ல் 78×100/361=21.60%, ஆண்டு வளர்ச்சி 2.16]

1981லிருந்து பிறப்பு விகிதங்கள் படிப்படியாக வீழ்ச்சியடையத் தொடங்கி மக்கள் தொகை வளர்ச்சி விகிதமும் படிப்படியாக குறையத்தொடங்கியுள்ளது. 1951 முதல் 2011 வரையுள்ள பத்தாண்டுகளில் சதவீத மாற்றத்தைக் கணக்கிட்டு மேலே உள்ள அட்டவணையில் இது நிகழ்ந்தள்ளதா என்று பார்க்கவும்.

இப்போக்கினை நாம் எவ்வாறு புரிந்துகொள்வது? கருத்தரிப்பு விகிதம் (ஒவ்வொரு மகளிருக்கும் பிறக்கும் மொத்த குழந்தைகள்) என்னும் மற்றொரு கருத்தை நாம் பயன்படுத்துகிறோம். மொத்த கருத்தரிப்பு விகிதம் என்பது ஒரு பெண் தன் குழந்தை சுமக்கும் ஆண்டுகளின் இறுதிவரை உயிருடன் இருந்தால் அப்பெண்ணிற்கு பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை மற்றும் நடப்பு முறையில் குழந்தைகளை பெறுவதுமாகும். இந்த எண்ணிக்கை குறைந்தால் அப்போது தம்பதியினர் சில குழந்தைகளை மட்டுமே பெற்றுக்கொள்ள முடிவு செய்கின்றனர் என்று நாம் கூறலாம். இந்த முடிவுகளுக்கு குடும்பம் மற்றும் புறக்காரணிகள் இரண்டும் துணைபுரிகின்றன. வரைபடம் 6.4ஐ உற்றுநோக்கு 1960ல் இந்தியாவின் கருத்தரிப்பு விகிதம் 5.6ஐ விட அதிகமாக இருந்தது. இது சராசரியாக ஒவ்வொரு பெண்ணும் 5 அல்லது 6 குழந்தைகளைப் பெற இருந்தனர் என்பதைக் காட்டுகிறது. குடும்பம், பாதுகாப்பு,

*வரைபடம் 6.4 : இந்தியாவில் 1961-2011 ஆண்டுகளுக்கிடையே கருத்தரிப்பு விகிதம்*




SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

- கருத்தரிப்பு விகிதம் இரண்டுக்கு எட்டும் போது அது எதை உணர்த்தும்? கலந்துரையாடு.
- அண்மையில் திருமணமாகி குழந்தைகளைப் பெறாத தம்பதியினரிடம் பேசு. அவர்கள் எத்தனை குழந்தைகளை பெற திட்டமிட்டுள்ளனர்? காரணங்கள் என்ன?
- உங்களுடைய குடும்பத்தில் மூன்று தலைமுறைகளில் ஒவ்வொரு பெண்ணிற்கும் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையை கண்டுபிடி. நீங்கள் கவனித்த மாற்றங்கள் என்ன?
- நீங்கள் குழுக்களில் செய்த கணக்கெடுப்பை பயன்படுத்தி 45 மற்றும் அதற்குமேல் வயதுடைய பெண்களின் மொத்த எண்ணிக்கையையும் மற்றும் அவர்களின் குழந்தைகளின் எண்ணிக்கையையும் கண்டறி. உங்கள் மாதிரியில் ஒவ்வொரு பெண்ணிற்கும் சராசரியாக உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை என்ன?
- உமேத்சிங்கிற்கு குழந்தைகளைக் குறித்து முடிவெடுக்க தாக்கத்தை ஏற்படுத்திய காரணிகள் யாவை? அவருடைய மகளும் அதே முறையில் சிந்திக்கிறார் என நீ நினைக்கிறாயா?

குழந்தைகளுக்கான வாய்ப்பு மற்றும் சமுதாய விதிமுறைகளின் அடிப்படையில் தங்களுக்குத் தேவையான குழந்தைகளின் எண்ணிக்கையை முடிவுசெய்கின்றனர். இந்த நோக்கில் சில மாற்றங்கள் இருந்து வருகின்றன. இந்தியாவின் தற்போதைய கருத்தறிப்பு விகிதம் 2.7. ஆந்திரப்பிரதேசத்தின் கருத்தறிப்பு விகிதம் 1.9.

மக்கள் தொகை மாற்றத்தின் மூன்றாவது கூறு குடிபெயர்ப்பு. குடிபெயர்ப்பு என்பது மக்கள் பகுதிகள் மற்றும் மாகாணங்களைக் கடந்து இடம் பெயர்தல். குடிபெயர்ப்பு உள்நாட்டு (நாட்டிற்குள்ளேயே இடம் பெயர்தல்), சர்வதேச (நாடுகளுக்கிடையே) என இருவகைப்படும். உள்நாட்டு குடிபெயர்ப்பு மக்கள் தொகையின் அளவில் மாற்றம் செய்யாது ஆனால் நாட்டிற்குள்ளேயே மக்கள் தொகைப் பகிர்வை பாதிக்கிறது. மக்கள் தொகைப்பகிர்வு மற்றும் தொகுப்பினை மாற்றுவதில் குடிபெயர்ப்பு மிகவும் முக்கிய பங்கினை வகிக்கிறது. பின்வரும் பாடங்களில் குடிபெயர்ப்பு பற்றி மேலும் நீங்கள் கற்பீர்கள்.

பயந்த குரல்களில் மக்கள் தொகை வளர்ச்சியைப் பற்றி மக்கள் அடிக்கடி பேசுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். பல மக்கள் சிறிதளவு வளங்களை பகிர்ந்துகொள்ள வேண்டியிருப்பதால் இதனால் மக்களில் பலர் நன்மையடைய மாட்டார்கள் எனவும் இவர்கள் பேசிக்கொள்கின்றனர். இருப்பினும் குடும்பங்கள் தாங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் குழந்தைகளின் எண்ணிக்கையை முடிவுசெய்வது பல்வேறு எண்ணங்களான அவர்களின் சொந்த வளங்கள், முதுமையில் அவர்களுடைய பாதுகாப்பு ஆகியவற்றின் மீது ஆதாரப்பட்டுள்ளது. ஆனால், பெரும்பாலும் அதிக எண்ணிக்கையில் குழந்தைகளைக் கொண்ட குடும்பங்கள் மற்ற குடும்பங்களை விட ஏழ்மையாகவே உள்ளன. அவர்களுக்கு பல சொத்துக்கள் இருப்பதில்லை. மேலும் முதுமைக்கால பாதுகாப்பிற்காக தங்களின் குழந்தைகளையே சார்ந்துள்ளன. நாம் இந்த பல்வேறு கருத்துகளை எவ்வாறு புரிந்துகொள்வது?

## மக்கள் தொகை அடர்த்தி

மக்கள் தொகை அடர்த்தி அதன் பகிர்வை நன்கு படம் பிடித்துக்காட்டுகிறது. ஒரு சதுர கிலோமீட்டர் நிலப்பகுதியில் வாழும் மக்களின் எண்ணிக்கை மக்கள் தொகை அடர்த்தி என்று கணக்கிடப்படுகிறது.

இந்தியா உலகிலேயே அதிக மக்கள் தொகை அடர்த்தி கொண்ட நாடுகளில் ஒன்றாகும். 2011ஆம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகை அடர்த்தி ஒரு சதுரகிலோ மீட்டருக்கு 382பேர். மக்கள் தொகை அடர்த்தியானது மேற்கு வங்காளத்தில் சதுரகிலோ மீட்டருக்கு 904பேர் முதல் அருணாச்சலப் பிரதேசத்தில் சதுர கிலோ மீட்டருக்கு 13பேர் வரை மாறுபட்டுள்ளது. அஸ்ஸாமும் பெரும்பாலான தீபகற்ப மாநிலங்களும் மிதமான மக்கள் தொகை அடர்த்தியைக் கொண்டுள்ளன. இப்பகுதிகளின் மக்கள் தொகை அடர்த்தியை மலைப்பாங்கான பிளவுபட்ட மற்றும் நிலப்பரப்பின் பாறைப்பாங்கான தன்மை, குறைவான மழைபொழிவு, ஆழம் குறைந்த மற்றும் குறைந்த வளமுள்ள மண்கள் போன்றவை மாற்றச் செய்கின்றன. வடக்கு சமவெளிகள் மற்றும் தெற்கில் கேரளம் வளமான மண்களையும் அபரிமிதமான மழைபொழிவையும் கொண்டு தட்டையான சமவெளிகளைக் கொண்டுள்ளதால் அதிக மற்றும் மிக அதிக மக்கள் தொகை அடர்த்தியைப் பெற்றுள்ளன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

மிக அதிக மக்கள் தொகை அடர்த்திகளைக் கொண்ட வடக்கு சமவெளிகளில் உள்ள மூன்று மாநிலங்களை அடையாளம் காண்க. மக்கள் தொகை அடர்த்தி எவ்வாறு இவ்வளவு அதிகமாக மாறபடுகிறது? நாம் ஒரு பகுதியின் வரலாற்றையும், நில அமைப்பு மற்றும் வானிலை நிலைகளையும் அறிந்தால் இந்த மாறுபாட்டை புரிந்து கொள்ளலாம்.

எடுத்துக்காட்டாக 9ஆம் பாடமான ராம்பூர் கிராமத்தின் கதையில் ‘‘நிலமும் பிற இயற்கை வளங்களும்’’ என்னும் பாடப் பகுதியைப் படி. வளமான நிலமும் நீர்பாசனமும்

- எந்த ஆண்டிற்குள் கிராமத்தின் அனைத்து நிலங்களும் சாகுபடி செய்யப்பட்டன?
- குடும்பத்தின் எண்ணிக்கை அளவு அதிகரித்ததற்கு நிலமுள்ள மக்கள் எவ்வாறு செயல்பட்டனர்?
- குடும்பங்கள் விரிவடைந்த போது கோவிந்த் போன்ற சிறு விவசாயிகளின் பிரதிபலிப்பு என்னவாக இருந்தது? எந்த அளவிற்கு கிணற்று நீர்ப்பாசனம் பயன்மிக்கதாக இருந்தது?
- வரைபடம் 6.2ஐப் பார் இந்தியாவின் இயற்கை அமைப்புத் தன்மைகளுக்கும் மக்கள் தொகை அடர்த்திக்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா என்பதை கண்டுபிடி. நாடெங்கிலும் உள்ள முக்கிய நகர மையங்களைக் குறிப்பிடு. நகரங்களில் உள்ள அதிக மக்கள் தொகை அடர்த்தியை நீ எவ்வாறு விளக்குவாய்?




வரைபடம் 6.2 : மாவட்ட அளவில் இந்தியாவின் மக்கள் தொகை அடர்த்தி



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



பெரும்பாலான மக்களுக்கு முன்பை விட ஆதரவு தந்தாலும் ஒவ்வொரு குழுவின், குறிப்பாக சிறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயக் கூலிகளின் மீதான தாக்கம் வேறுபட்டுள்ளது.

தற்தோதைய கணக்கெடுப்புப்படி தெலங்கானாவின் மாவட்ட புறவரிப்படத்தில் அவற்றின் அடர்த்தி வீச்சுகளை குறிப்பிடு.

கீழ்காணும் கருத்துகளில் ஒரு அதிக மக்கள்தொகை அடர்த்தி மற்றும் குறைந்த மக்கள் தொகை அடர்த்தி கொண்ட மாவட்டங்களை ஒப்பிடு.

(அ) நிலப்பகுதி மற்றும் விவசாய முன்னேற்றத்திற்கான ஆற்றல்.

(ஆ) அப்பகுதியின் விவசாய வரலாறு – நிலம், நீர், மற்றும் பிற இயற்கை வளப்பயன்பாடு.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

(இ) அப்பகுதியிலிருந்து அல்லது அப்பகுதிக்கு குடிபெயர்ப்பு மற்றும் அதற்கான காரணங்கள்.

## முக்கிய சொற்கள்

மக்கள் தொகை வளர்ச்சி, மக்கள் தொகை அடர்த்தி, பாலின விகிதம், கருத்தரிப்பு வீதம், மக்கள் தொகைப் பகிர்வு, குழந்தை இறப்பு, எழுத்தறிவு வீதம்.

## உனது கற்றலை மேம்படுத்துக

1. கீழ்காணும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு கீழ்காணும் வினாக்களுக்கு விடையளி.(AS3)

**உலக வரலாற்று மற்றும் ஊகிக்கப்பட்ட மக்கள் தொகை (மில்×யன்களில்)**

| பகுதி / வருடம் | 1500 | 1600 | 1700 | 1800 | 1900 | 1950 | 1999 | 2012 | 2050 | 2150 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உலகம் | 458 | 580 | 682 | 978 | 1,650 | 2,521 | 5,978 | 7,052 | 8,909 | 9,746 |
| ஆப்பிரிக்கா | 86 | 114 | 106 | 107 | 133 | 221 | 767 | 1,052 | 1,766 | 2,308 |
| ஆசியா | 243 | 339 | 436 | 635 | 947 | 1,402 | 3,634 | 4,250 | 5,268 | 5,561 |
| ஐரோப்பா | 84 | 111 | 125 | 203 | 408 | 547 | 729 | 740 | 628 | 517 |
| இலத்தீன்அமெரிக்கா மற்றும்கரீபியன் தீவுகள் | 39 | 10 | 10 | 24 | 74 | 167 | 511 | 603 | 809 | 912 |
| வட அமெரிக்கா | 3 | 3 | 2 | 7 | 82 | 172 | 307 | 351 | 392 | 398 |
| ஓசியானியா | 3 | 3 | 3 | 2 | 6 | 13 | 30 | 38 | 46 | 51 |

- உலக மக்கள் தொகை முதன்முறையாக இருமடங்காக உயர்வதற்கு சுமார் எத்தனை நூற்றாண்டுகளாயின?
- குடியேற்ற ஆதிக்கத்தைப் பற்றி நீங்கள் முந்தைய வகுப்புகளில் படித்திருப்பீர்கள். அட்டவணையைப் பார்த்து 1800ல் எந்த கண்டத்தில் மக்கள் தொகை குறைந்தது என்பதைக் கண்டறியவும்.
- நீண்ட காலமாக அதிகமக்கள் தொகையைக் கொண்டுள்ள கண்டம் எது?
- எதிர்காலத்தில் மக்கள் தொகையானது எந்த கண்டத்திலாவது குறையும் வாய்ப்புள்ளதா?

2. பாலின விகிதம் மிகக்குறைவாக அல்லது அதிகமாக இருந்தால் அது சமுதாயத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தைப் பட்டியலிடு.(AS4)
3. மற்ற நாடுகளுடன் இந்திய எழுத்தறிவு வீதங்களை ஒப்பிடு.(AS1)

   பிரேசில், இலங்கை, தென் ஆப்ரிக்கா, நேபாளம், பங்களாதேஷ், நார்வே, சிலி, இந்தோனேஷியா,.

   நீங்கள் குறிப்பெடுத்த ஒற்றுமை மற்றும் வேற்றுமைகள் யாவை?
4. ஆந்திரப்பிரதேசத்தின் எந்தப் பகுதிகளில் அதிகமான மக்கள் தொகை அடர்த்தி உள்ளது? அதற்கான சில காரணங்களைக் கூறு.(AS1)
5. மக்கள் தொகை வளர்ச்சிக்கும் மக்கள்தொகை மாற்றத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?(AS3)
6. இந்தியாவின் மக்கள் தொகை பிரமீடை மற்ற மூன்று நாடுகளின் விவரங்களுடன் ஒப்பிடு.(AS3)



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

1. எந்த நாட்டின் மக்கள் தொகை உயரும் நிலையிலுள்ளது?
2. எந்த நாட்டின் மக்கள் தொகை குறையும் நிலையிலுள்ளது?
3. பாலினச் சமநிலையை ஒப்பிடு. ஒவ்வொரு நாட்டின் குடும்ப மற்றும் நல கொள்கைகளைப் பற்றி உனக்கு தெரிந்தவற்றைக் கூறு.







7. வரைபடப்பணி :(AS5)

a. மாநில எல்லைகளைக் காட்டும் இந்தியப்புறவரிப் படத்தில் ஐந்து வீச்சுகளின் அடிப்படையில் 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பை ஆதாரமாகக் கொண்டு மாநில வாரியாக மக்கள் தொகை அடர்த்தியைக் குறிப்பிடு.




b. மாவட்ட எல்லைகளைக் காட்டும் ஆந்திரப்பிரதேச புறவரிப்படத்தில், புள்ளிவைத்தல் முறையைப் பயன்படுத்தி மக்கள் தொகைப் பகிர்வைக் குறிப்பிடு (ஒவ்வொரு புள்ளியும் 10000 மக்கள் தொகைக்குச் சமமாகும்)

**செயல்திட்டம்**

கீழே தரப்பட்டுள்ள மக்கள் தொகை அடர்த்தியைக் காட்டும் இரண்டு படங்களையும் மக்கள் வளர்ச்சியைக் காட்டும் இரண்டு வரைபடங்களையும் பார். இப்பாடத்தில் நீங்கள் மக்கள் தொகையைப் பற்றி கற்றறிந்த பல்வேறு பண்புகளைப் பயன்படுத்தி அவற்றை விவரி.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com







காடுகள் அழிப்பு

மக்கட்தொகை வளர்ச்சி






SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்
7

# மக்களும் குடிபெயர்தலும்

## இருப்பிடம் என்றால் என்ன?

நீ வசிக்கும் மாநகரம், நகரம் அல்லது கிராமத்தை சுற்றிலும் கூர்ந்து கவனி. அங்கு கட்டிடங்கள், சாலைகள், கழிவுநீர்க்கால்வாய்கள் முதலானவை ஏதோ ஒருவகையில் ஒழுங்கமைப்புடன் உள்ளதை நீ காணலாம். இத்தகைய அமைப்பு உலகம் யாவும் பலவிதமாக வேறுபட்டுள்ளது. அதைக்குறித்து பின்னர் காண்போம்.

ஓரிடத்தில் நமக்கு நாமே ஒழுங்கமைத்துக்கொண்ட விதமும், அவ்விடத்தில் நாம் கொண்டுள்ள வசிப்பிடங்களும், இருப்பிடம் என அழைக்கப்படுகிறது. அதாவது நாம் வசிக்கக்கூடிய மற்றும் பணியாற்றக்கூடிய நிலப்பகுதி எனலாம். ஓர் இருப்பிடத்தில் கல்வி, சமயம், வர்த்தகம், போன்ற வெவ்வேறு வகையான செயற்பாடுகளை நாம் கொண்டுள்ளோம்.

இப்பாடத்தில் மனித இருப்பிடம், அதனுடன் தொடர்புடைய புவியியல் ஆகியவற்றின் சில அம்சங்களை சுருக்கமாக காண்போம்.

a


b


c


படம் 7.1 : abc பாடம்-1ல் உள்ள இமயமலைகளின் படங்கள் இவை. இமயமலைகளின் இவ்வனைத்து படங்களை கூர்ந்து கவனித்து, இருப்பிடங்களில் உள்ள வேறுபாடுகளையும் வீடுகளைகட்டும்போதும், நிலத்தை பயன்படுத்துவதிலும், குடியிருப்பு வகையை தேர்ந்தெடுப்பதிலும் மக்கள் எத்தகைய சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்பதை ஒப்புநோக்குக.

*a*. சிம்லா நகரம் - இது முதலில் 25,000 பேர் மக்கள் தொகைக்கேற்றவாறு வடிவமைக்கப்பட்டு இன்று இரண்டு இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டுள்ளது.
*b*. இமயமலையின் நிலச்சரிவுப்பகுதி
*c*. பெரிய இமயமலையில் லடாக் பகுதியில் நூப்ரா பள்ளத்தாக்கில் அமைந்துள்ள ஓர் கிராமம், பனிப்பாறைகள் உருகி ஓடும் ஓடையினால் அமையப்பெற்றது இக்கிராமம், கோடைக்காலத்தில் தான் இவ்வோடை பாய்ந்தோடும், அப்பொழுது மட்டுமே இங்கு விவசாயம் சாத்தியமாகும். பெரும்பாலும் இப்பகுதி சிறிதளவு மழைபொழிவுக்கூட பெறுவதில்லை. இம்மலைகள் வறண்டிருக்கும்.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**களப்பணி**

உனது சொந்த மாநகரம், நகரம் அல்லது கிராமத்தை கூர்ந்து கவனி. நீ ஏற்கனவே கற்ற முறையைக்கையாண்டு தேர்ந்தெடுத்த ஓர் பகுதியின் வரைப்படத்தை வரையவும். உன்னுடைய படம் கீழ்கண்டவற்றை காட்டுவதாக இருக்கவேண்டும்.

சாலைகள், வீடுகள், கடைகள் மற்றும் சந்தைகள், நீரோடைகள் மற்றும் வடிநீர்கால்வாய்கள், சில பொதுவிடங்கள் மருத்துவமனைகள், பள்ளிகள், பேருந்து நிலையம், புகைவண்டிநிலையம் முதலியவை.

- இப்பொதுவிடங்கள் அமைந்துள்ள பகுதிகள் பெரும்பாலான மக்களுக்கு வசதியுடையவைதானா?
- அங்காடிப்பகுதிகளில் ஏதேனும் சீரான அமைப்பு முறையை நீ காண்கிறாயா?
- வீடுகள் பகுதி பகுதிகளாக அமைந்துள்ளனவா? அவை முக்கிய சாலையுடன் இணைக்கப்பட்டுள்ளனவா?

தேர்ந்தெடுத்துக்கொண்ட பகுதியிலுள்ள மக்களுடன் உரையாடி அவ்விருப்பிடத்தில் கடந்த இருபதாண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்களையும், அதற்கான காரணங்களையும் கண்டறிந்துக்கொள்.

எத்தகைய வசதிகள் அளிக்கப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அளிக்கப்படவில்லை?

## இருப்பிடங்கள் எவ்வாறு துவங்கின?

ஆதிகால மனிதர்கள் வேட்டையாடி தங்களது உணவை சேகரித்தனர். ஆகையால் அவர்கள் வேட்டையாடி சேகரிப்போர் (hunter-gatheres) என அழைக்கப்பட்டனர். அவர்கள் நாடோடிகளாக இருந்தனர், அதாவது அவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு சென்றுக்கொண்டேயிருந்தனர். இச்செயல் உணவைத் தேடும் பொருட்டாக இருந்தது. அவர்கள் உணவை மரம், செடி, கொடிகளிலிருந்து சேகரித்தனர் விலங்குகளை அதன் மாமிசத்திற்காகவும், தோலுக்காகவும் மற்றும் வேறுபயன்பாட்டிற்காகவும் வேட்டையாடினர். அவர்கள் கற்கருவிகளை உருவாக்கவும் பயன்படுத்தவும் தொடங்கினர். ஆரம்பத்தில் அவை கற்களால் ஆனவையாக இருந்தன. இக்கருவிகளைக் கொண்டு மேலும் பயனுள்ளவாறும், நுட்பத்துடனும் வேட்டையாட அவர்களால் முடிந்தது.

சுமார் 1.8இலட்சம் ஆண்டுகள் மனிதர்கள் வேட்டையாடி சேகரிப்போர்களாக கூட்டம் கூட்டமாய் வாழ்ந்தனர். அவர்களுக்கு விவசாயம் தெரியாது. இருப்பினும் உணவு கிடைப்பதில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக, சில கூட்டத்தினர் மெல்ல மெல்ல உணவு உற்பத்தியை மேற்கொண்டனர். அதாவது விவசாயம் செய்யத் தொடங்கினர். இது 10,000 ஆண்டுகளுக்கு முன்புதான் ஏற்பட்டது. இது மனித வாழ்க்கை முறைகளில் பல்வேறு மாற்றங்களை கொண்டுவந்தது. மக்கள் உணவைப் பெறுவதற்காக அதிக இடங்களுக்கு செல்லவேண்டிய அவசியம் இல்லாமற்போயிற்று. அவர்களால் இப்பொழுது ஓரிடத்திலேயே அதிககாலம் தங்கியிருக்க முடிந்தது. வேட்டைக்காரர்களாக இருந்தபோது அவர்கள் நாடோடிகளாக இருந்தனர். ஆனால் விவசாயிகளாக ஆனபோனது அவர்கள் நிலையான இடத்தில் தங்கினர்.



*படம் 7.2 : மத்தியபிரதேசத்தில் பிம்பேத்கா (Bhimbetka) என்னுமிடத்தில் உள்ள ஆதிகால மனிதர்கள் பயன்படுத்திய ஒரு மலைகுகை. அதிக விவரங்களுக்கு 6ஆம் வகுப்பின் மூன்றாம் பாடத்தை படியுங்கள்.*



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

- ஒப்பிடுதல் மற்றும் வித்தியாசப்படுத்துதல் : மேற்கண்ட விவரங்களைப் பயன்படுத்தி, நாடோடி மற்றும் நிலையான வாழ்க்கை முறைகளை கீழே உள்ள அட்டவணையில் ஒப்பிடவும் மற்றும் வித்தியாசப்படுத்தவும். உன்னால் எத்தனை விஷயங்களை அடையாளம் காணமுடிகிறது என்பதைப் பார் (இவ்விடம் போதுமானதாக இல்லாவிடில் இன்னொரு அட்டவணையைத் தயாரித்துக்கொள்)

| நாடோடி வாழ்க்கைமுறை | நிலையான வாழ்க்கைமுறை |
|---|---|
| | |
| | |
| | |

## இருப்பிடங்கள் எவ்வாறு மாற்றமடைகின்றன?

இருப்பிடங்கள் பல்வேறு காரணங்களுக்காக மாற்றமடைகின்றன. டில்லியைப் பற்றிய பின்வரும் விவரத்தைப்படி.

இந்தியாவை அரசாண்ட பல பேரரசுகளுக்கு டெல்லி தலைநகரமாக விளங்கியதாக, டெல்லி உரிமைக் கொண்டாடலாம். இந்தியா சுதந்திரமடைந்தபோது இந்நரகமே அதன் தலைநகராய் இருந்தது. ஆனால், இப்புத்தகத்தின் வேறு பகுதியிலும், முந்தைய வகுப்புகளிலும் நீங்கள் படித்தறிந்ததுப் போல, சுதந்திரமடைந்த காலத்தில் நிகழ்ந்த பிரிவினையானது மக்களை பெருமளவு இந்தியாவிற்கு உள்ளும், புறமும் அதிகளவு இடம் பெயர்வு நிகழகாரணமாயிற்று. எனவே புதிய மக்களை புதிய பகுதிகளில் குடியமர்த்துதலும் வசதிகளை ஏற்படுத்துதலும் இந்நகரத்திற்கு ஓர் சவாலாகவே அமைந்தது. பிறகு பல்லாண்டுகளாக இந்நகரமானது இந்தியாவின் பல பகுதியிலிருந்தும் மக்களை தன்னகத்தே கவர்ந்திழுக்கிறது. ஏனெனில், அவர்கள் வாழ்வாதாரத்தையும் வேலைகளையும் தேடி இங்கு இடம் பெயருகின்றனர். நாட்டின் தலைநகரமாய் இருப்பதாலும், நாடாளுமன்றம் மற்றும் மத்திய அரசு அலுவலகங்கள் இருப்பதாலும் பலபகுதிகளிலிருந்து வந்துள்ள மக்கள் இந்நகரத்தில் உள்ளனர்.

இன்று டெல்லியானது 1,60,00,000க்கும் அதிகமான மக்களைக் கொண்டு மும்பைக்கு அடுத்த இரண்டாவது மிகப்பெரிய நகரமாக விளங்குகிறது. 1951-ல் இத்தொகையானது சுமார் 20,00,000ஆக இருந்தது. கடந்த 60ஆண்டு காலத்தில் இது 8மடங்காக உயர்ந்துள்ளது. இங்கு வந்து குடியேறியவர்களால்தான் மக்கள் தொகை உயர்ந்தது. இது இந்நகரத்தின் அமைப்பையும் குடியிருப்புப் பகுதிகளின் வகைகளையும் மாற்றியமைத்தது.

டில்லியில் மக்கள் வசிக்கும் பகுதிகளின் வகைகளைக்குறித்து இனி காணமுற்படுவோம். இப்புள்ளி விவரங்கள் 2000ஆம் ஆண்டுக்குரியதாக இருப்பினும், குடியிருப்புப் பகுதிகளின் மாதிரிகள் அவ்வாறே உள்ளன. பலதரப்பட்ட குடிசைப்பகுதிகளும், ஏழ்மைமக்கள் வசிக்கும் பகுதிகளும் அங்கு இருந்ததை நாம் காண்கிறோம். அவைகளனைத்தும் அதிகாரப்பூர்வமற்ற குடியிருப்புக்களாக இருக்கத் தொடங்கின. காலப்போக்கில் இப்பகுதிகள் வட்டார அதிகாரிகளால் முறைப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டவைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவைகள் பெயரிடப்பட்ட குடிசைப்பகுதிகளாகவும் அல்லது மாற்றுகுடியிருப்பு பகுதிகளாகவும் அல்லது முறைப்படுத்தப்பட்ட அதிகாரப்பூர்வமற்ற குடியிருப்புப் பகுதிகளாகவும் ஆயின. இருந்தபோதிலும் ஜுக்கி ஜோப்டி போன்ற மற்றப்பகுதிகள், சட்டப்பூர்வமான குடியிருப்புகளாக ஏற்றுக்கொள்ளப்படாமலும், அதிகாரப்பூர்வமற்ற குடியிருப்புப் பகுதிகளாகவும் தொடர்ந்து இருந்து வருகின்றன. இந்நகருக்குள்ளேயே சில கிராமங்களும் இருந்துள்ளன. மொத்தத்தில் கீழ்காணும் பட்டியலின்படி அங்குள்ள மக்கட்தொகையில் சுமார் 24% மக்கள் மட்டுமே முறைப்படி சட்டஅந்தஸ்துப்பெற்ற குடியிருப்பு பகுதிகளில் வசித்து வந்துள்ளனர்.

பலவகையான பகுதிகளை வடிவமைத்து, ஒதுக்கீடு செய்வதற்கு ஒவ்வொரு நகரமும் ஒருபெரும் திட்டத்தை வழக்கமாக தன்னகத்தே கொண்டிருக்கும். எந்நகரமாயினும் அங்கே குடியிருப்பு பகுதிகள், அங்காடிப்பகுதிகள், பள்ளிகள், தொழிற்சாலைப்பகுதிகள் அலுவலக பகுதிகள், பூங்காக்கள், பொழுதுபோக்குப் பகுதிகள் ஆகியவை இருத்தல்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

வேண்டும். இதை ஆதாரமாகக்கொண்டு எத்தகைய சாலைகள் அவசியம், எவ்வளவு நீர் அல்லது மின்சாரம் தேவை, கழிவுகளை அகற்றுவது எவ்வாறு, சாக்கடைகளை சுத்தப்படுத்துவது எவ்வாறு என திட்டமிடுபவர்கள் முடிவுசெய்வர். டில்லி மாநகரமும் இதுபோன்ற மூன்று பெருந்திட்டங்களைக் கொண்டுள்ளது. இருப்பினும் தற்போதைய காட்சிகளை நாம் காணும்போது இத்தகைய திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லையென்றே தோன்றுகிறது. உண்மையில் டில்லி மாநகரமானது ஒரு திட்டமிடப்படாத வகையில் வளர்ந்துள்ளது. ஒரு திட்டமிட்ட குடியிருப்பு பகுதி வழக்கமாக அனைத்து வசதிகளையும் தன்னகத்தே கொண்டிருக்கும். வெவ்வேறு நோக்கங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட பகுதிகளை அரசாங்கம் அறிவிக்கவேண்டும். அப்பகுதிகளில் ஏற்படும் கட்டுமானங்கள் ஒரே முறையை பின்பற்றி நடைபெறுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். இருப்பினும் அத்தகைய திட்டமிடல்கள் பின்பற்றப்படவில்லையென்பது தெள்ளத்தெளிவு.

ஒருபுறம் மக்கட் தொகை நகரங்களில் பெருகிவருகிறது. மறுபுறம் திட்டமிடுதலிலும் அப்பகுதிகளை எவ்வாறு பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதை அறிவித்தலிலும் நீண்ட காலதாமதம் ஏற்படுகிறது. வேலையைத்தேடி நகரத்திற்கு குடிபெயரும் மக்கள், தேவையான அனுமதியின்றி இடத்தை ஆக்கிரமித்து யாருடைய முன்அனுமதியுமின்றி எந்த வகையில் முடியுமோ அந்த வகையில் அவ்விடத்தில் கட்டிடத்தைக் கட்டிக்கொள்கின்றனர். அவை நீண்டகாலத்திற்கு அதிகாரப்பூர்வமற்றவையாக இருந்துவிடுகின்றன. கடைசியாக திட்டம் அறிவிக்கப்படும்போது அவை வேறொரு நோக்கத்திற்கு ஒதுக்கப்படவேண்டியவைகளாக இருந்துவிடுகின்றன.

இது தர்மசங்கடமான நிலைமைக்கு இட்டுச்செல்கிறது. மக்கள், இடத்தை காலிசெய்ய வேண்டிய நிரந்தர அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றனர். அவர்கள் தங்கள் குடும்பங்களை காலி செய்வதை எதிர்த்து அரசியல் ஆதரவை நாடுகின்றனர். பெருந்திட்டமானது அவர்கள் இருப்பதையே கவனிக்காமல் விட்டதால் இக்குடியிருப்பு பகுதிகள் அங்கீகரிக்கப்பட வாய்ப்பில்லை. இவ்வாறாக இக்குடியிருப்பு பகுதிகள் பொதுத்துறை வசதிகள் பலவற்றை பெறுவதில்லை. இங்குள்ள மக்கள் ஏழ்மையானவர்கள்தான். ஆனால், அவர்கள் அத்தியாவசிய தேவைகளை நகரத்திற்கு அளிக்கின்றனர். இவர்களை அனுமதிப்பதால் ஊழலுக்கு வழிவகுக்கின்றன.

டில்லி நகரத்தின் பகுதிகள் முன்பு கிராமங்களாக இருந்தன. அப்பகுதிகளை பெரிய கட்டுமான நிறுவனங்களோ அல்லது நிலச்சுவாந்தார்களோ தங்கள் வசமாக்கிக்கொண்டு பணத்தை முதலீடு செய்து அப்பண்ணைகளில் வீடுகளை கட்டுகின்றனர். முதன்மைதிட்டம் அனுமதித்த வழிமுறைகளுக்கு ஒத்ததாய் இது இல்லாமற் போகக்கூடும். சிலநேரங்களில் இடம்பெயர்ந்து வரும் அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு இடமளிப்பதற்காக கிராமத்தவர்கள் தாங்களே தங்கள் வீடுகளை மாற்றியமைக்கின்றனர். சில வருடங்களுக்கு பிறகு, அத்தகைய குடியிருப்பு பகுதிகள் அனுமதியைப் பெற்றுள்ளன. பாலுக்காக மாடுகளை மேய்த்தல், அல்லது மட்பாண்டங்களைச் செய்தல் போன்ற பாரம்பரிய வாழ்வாதாரங்களின் மீது ஆதாரப்பட்டுள்ள மக்கள் இன்னமும் நகரத்தில் வாழ்க்கையைத் தொடர்கின்றனர். ஏனெனில் அப்பொருட்கள் நகரத்திற்கு தேவைப்படுகின்றன.

பாரம்பரியமாக சாதாரண நிலங்களாக இருந்த நகரத்தின் பலபகுதிகள் இன்று குடிசைப்பகுதிகளாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. நதிக்கரைகளின் மீதோ அல்லது முன்பு மேய்ச்சல் நிலங்களாக இருந்தவற்றிலோ இப்பகுதிகள் உள்ளன. இவைகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமானவை. இத்தகைய பகுதிகளில் வாழும் மக்கள் பெரும்பாலும் ஏழைகளே. இப்பகுதிகள் முறைப்படியான தெருக்களையும், கழிவுநீர் சாக்கடைக் கால்வாய்களையும் பெற்றிராது மற்றும் அவை மக்கள் நெருக்கடி கொண்டதாய் இருக்கும். அவைகளில் சில குடிசைப்பகுதிகளாக சட்டப்பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கும் பல சமயங்களில் அங்கு நிலஉரிமைக்குறித்த சச்சரவுகள் காணப்படும். அவ்வப்பொழுது பெரிய கட்டுமான நிறுவனங்கள் அல்லது டெல்லி மாநகர வளர்ச்சி ஆணையமே (DDA) (Delhi Development Authority) நெடுங்காலமாக வசித்து வந்த நிலப்பகுதியிலிருந்து மக்களை வெளியேற்றுவதுண்டு. இத்தகைய சூழ்நிலையில் அவர்களுக்கு அளிக்கப்படும் இழப்பீட்டுத் தொகையானது, அவர்கள் தங்கள் ஊர்களுக்குச் சென்று மீண்டும் குடியேறவோ அல்லது நகரத்தின் திட்டமிடப்பட்ட பகுதிகளில் ஓர் வசிப்பிடத்தை பெறுவதற்கோ போதுமானதாக இல்லாமறபோகலாம்.

எனவே மக்கள் ஓர்பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு சென்று அரசால் அறிவிப்பு செய்யப்படாத ஓர் புதிய இடத்தை ஆக்கிரமிப்புச் செய்வதில் இது முடிகிறது. காலம் செல்லச்செல்ல மீண்டும் அதே போக்கு திரும்பவும் நடைபெறுகிறது. இவ்வாறாக குடியிருப்புப் பகுதிகள் ஒருதிட்டமிடப்படாத வகையில் வளர்ந்துக்கொண்டே செல்கின்றன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



படம் 7. 3 : டெல்லியில் நடுத்தர வருமானமுடையோரின் குடியிருப்புப் பகுதி. இதை டெல்லியில் குறைந்த வருமானமுடையோரின் குடியிருப்புப் பகுதியுடன் ஒப்பிடு.(பக்கம் 98)

## எத்தகையப்பகுதிகள் குடியிருப்புகளைக் கவர்கின்றன?

இதை புரிந்துகொள்ள வேண்டுமானால் இந்த அடிப்படைக் கருத்துக்களை நாம் தெரிந்துக்கொள்வது அவசியம் : (1)வீட்டு மனைப்பகுதி (2) அமைவிடம் (3) இடத்தின் வரலாறு.

வீட்டுமனைப்பகுதி என்பது இடத்தின் குணாதியங்களைக்குறிக்கிறது. அதாவது, அதனுடைய இடவிவரம், உயரம், நீர்பற்றிய சிறப்பம்சங்கள் (ஏரிகள், ஆறுகள், நிலத்தடிநீர் ஆகியவைகளைப்பெற்றுள்ளதா?) மண்களின் வகைகள், பாதுகாப்பு, இயற்கைச் சீற்றத்திலிருந்து காத்துக்கொள்ள புகலிடம் மற்றும் பிறவிவரங்கள்.

பண்டைய இருப்பிடங்கள் உருவானகாலத்தில், நீர் இருப்பும், படையெடுப்புகளிலிருந்து காத்துக்கொள்ளவும் எவ்விடங்கள் சாதகமானவையோ அவ்விடங்கள் குடியிருப்புகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டன. உதாரணத்திற்கு, சத்ரபதி சிவாஜி மகாராஷ்டிரத்தில் பிரதாப்காட் (pratapgad) என்னும் ஓர் கோட்டையைக் கட்டினார். இந்த இடத்தை தேர்ந்தெடுக்கக் காரணம், அதன் உயரம், அதாவது அங்கிருந்து அதன் சுற்றுப்புற பகுதிகள் அனைத்தையும் காணமுடியும். இது இராணுவப்பாதுகாப்பை அளித்தது.



படம் 7.4 : பிரதாப்காட்டில் உள்ள கோட்டை

இடங்கள் தனித்து இருப்பதில்லை. அவை ஏதோ ஒருவகையில் மற்றப்பகுதிகளுடன் தொடர்பு கொண்டுள்ளன. அமைவிடம் என்பது மற்ற பகுதிகளுடன் உள்ள தொடர்புகளை விவரிப்பதாகும். இது ஆந்திரப்பிரதேசத்தை இந்தியாவிற்குள்ளேயுள்ள பல பகுதிகளுடனும் வெளியேயுள்ள பல பகுதிகளுடனும் இணைக்கிறது.

விசாகப்பட்டிணத்திற்கு ஓர் நீண்ட வரலாறு உண்டு. அன்னிய குடியேற்றத்திற்கு முந்தைய காலங்களில் பல்வேறு வம்சங்கள் இதை அரசாண்டனர். 19ஆம் நூற்றாண்டுக் காலத்தில், இந்நகரத்திற்காக பிரிட்டிஷ்காரர்களும், பிரஞ்சுக்காரர்களும் ஒரு கடற்போரை நிகழ்த்தினர். அந்நிய குடியேற்ற ஆட்சியாளர்களுக்கு கடற்கரைப்பகுதிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தன. காரணம், அங்கே அவர்கள் துறைமுகங்களைக் கட்டிக்கொள்ள ஏதுவாக இருந்தது. இத்துறைமுகங்கள் மூலம் குடியேற்றிய தங்கள் நாடுகளுக்கு கச்சாப்பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு முடிந்தது.



படம் 7.5 : விசாகப்பட்டினம்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பட்டியல் 2

| விசாகப்பட்டினத்தின் மக்கட்தொகை | | |
|---|---|---|
| ஆண்டு | மக்கட்தொகை | % மாற்றம் |
| 1901 | 40,892 | |
| 1911 | 43,414 | +6.2% |
| 1921 | 44,711 | +3.0% |
| 1931 | 57,303 | +28.2% |
| 1941 | 70,243 | +22.6% |
| 1951 | 1,08,042 | +53.8% |
| 1961 | 2,11,190 | +95.5% |
| 1971 | 3,63,467` | +72.1% |
| 1981 | 6,03,630 | +66.1% |
| 1991 | 7,52,031 | +24.6% |
| 2001 | 13,45,938 | +78.97% |
| 2011 | 20,35,690 | +51.2% |

விசாகப்பட்டினத்தில் ஏற்பட்ட மக்கட்தொகை மாற்றம்

1. இங்கேயுள்ள மக்கட்தொகை விவரங்களில், ஒவ்வொரு பத்தாண்டுகளுக்கும் உரிய எண்கள் வழங்கப்பட்டுள்ளனவா. இல்லையெனில், எந்த பத்தாண்டுக்குரிய விவரம் வழங்கப்படவில்லை?
2. மிகவும் அதிகமான (சதவீதத்தில்) மக்கட்தொகை வளர்ச்சி எந்த பத்தாண்டிலிருந்து எந்த பத்தாண்டு வரை ஏற்பட்டுள்ளது?
3. மிகக்குறைவான (சதவீதத்தில்) மக்கட்தொகை வளர்ச்சி எந்த பத்தாண்டிலிருந்து எந்த பத்தாண்டுவரை ஏற்பட்டுள்ளது?
4. 1901லிருந்து 2011 வரைக்கான விசாகப்பட்டினத்தின் மொத்த மக்கட்தொகையையும் தொடர்புபடுத்தும் கோட்டு வரைபடத்தில் பதிவுசெய். ஒட்டுமொத்த மக்கட்தொகை அளவில் ஏற்பட்ட மாற்றத்தைக் குறித்து நீ கூறும் கருத்துக்கள் என்ன?

உண்மையில், இந்தியாவின் இயற்கை வளங்களை மேலும் சுரண்டுவதற்கு வசதியாக மும்பை, சென்னை போன்ற நகரங்களை அந்நிய குடியேற்ற நாட்டு ஆட்சியாளர்கள் மேலும் வளர்ச்சியடைய செய்தனர். விசாகப்பட்டினத்திற்காக நிகழ்த்திய போர் கூட இத்தகைய காரணங்களுக்காகவே. இன்று நாம் தெரிந்துவைத்துள்ள விசாகப்பட்டினம் பல்வேறு இடங்கள் ஒன்றிணைந்து உருவானதே. இந்நகரம் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்திற்கு வந்தபிறகு, இதன் எல்லைகள் பன்முறை மாற்றியமைக்கப்பட்டன. இதன் எல்லைகள் இன்னமும் விரிவடைந்தவண்ணம் உள்ளன.

பலநூற்றாண்டுகளாக, விசாகப்பட்டினத்தின் மக்கட்தொகை குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. (மேலேயுள்ள பட்டியலைக் கவனி). விசாகப்பட்டினம், ஓர் துறைமுகப்பட்டினம் என்ற முறையில் முக்கியத்துவம் பெற்றதினால் ஏற்பட்ட விளைவே விசாகப்பட்டினத்தின் இந்த வளர்ச்சி. பொருளாதார மற்றும் சமூக வாய்ப்புகளில் ஏற்பட்ட வளர்ச்சியைக் கூட இந்த மக்கட்தொகை அதிகரிப்பு சுட்டிக்காட்டுகிறது.

மற்ற இடங்களை இணைப்பதாலேயே இது ஒரு பெரிய துறைமுகமாக கருதப்படவில்லை. அனைத்து இடங்களுமே ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. ஆயின் அத்தொடர்புகள் நேரிடையானவையா அல்லது மறைமுகமானவையா என்பதே கேள்வி.

### இந்திய வசிப்பிடங்களின் படிநிலைகள்

இந்திய மக்கட் தொகை கணக்கெடுப்பு சில அளவீடுகளைக் கொண்ட குடியிருப்புப் பகுதிகளை ஒழுங்குமுறைப்படுத்துகிறது. 7.3 அட்டவணையில் பல்வேறு குடியிருப்பு பகுதியின் வகைகளைக் குறித்து மக்கட்தொகை கணக்கெடுப்பு துறையின் வரையறுப்புகள் தரப்பட்டுள்ளன. அவற்றை கவனமாக படித்தறிந்து, பயிற்சியை நிறைவுசெய்.

97ஆம் பக்கத்தில் ஒரு பிரமிடு கொடுக்கப்பட்டுள்ளது. பிரமிட்டின் கடைசி அடிப்பகுதியானது, இந்திய மக்கட்தொகை கணக்கீட்டின்படி, குடியிருப்புப்பகுதி, படிநிலைகளில் மிகவும் கீழ்நிலையைத் காண்பிக்கிறது. கடைசி மேற்பகுதியானது மிக உயர்ந்த நிலையைக் காண்பிக்கிறது. காலியாக விடப்பட்டவைகளில் விவரங்களைப் பூர்த்தி செய்.

1. குடியிருப்பு பகுதியின் குறிப்பிட்ட நிலைக்கு கொடுக்கப்பட்டுள்ள பெயர் (இரண்டு உதாரணங்கள் தரப்பட்டுள்ளன)
2. ஆந்திரப்பிரதேசத்திலிருந்து ஓர் குடியிருப்புப் பகுதியை ஒரு உதாரணமாகத்தருக. (பெருநகரங்களைத்தவிர்த்து. எதற்காக?)
3. நீ வசிக்கும் நகரத்தை அதற்குரிய சரியான நிலையில் வைக்க முயற்சி செய் (நீ கிராமத்தில் வசிப்பாயானால், உனது பள்ளி அமைந்துள்ள சிறு நகரத்தைக்காட்டு)



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

*அட்டவணை 7.3 : படிநிலை வரிசையில் இந்தியக்குடியிருப்பு இருப்பிடங்கள்*

| குடியிருப்பு இருப்பிடங்களின் வகை | பயன்படுத்திய அளவீடுகள் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| மிகப்பெரிய மாநகரங்கள் | 10 மில்லியனுக்கும் அதிகமான மக்களைக் கொண்ட நகரங்கள் | * மும்பை பெருநகர் மக்கட்தொகை 18.4 மில்லியன்<br>* டெல்லி பெருநகர ஆணையம் (மக்கட்தொகை 16.3 மில்லியன்)<br>* கொல்கத்தா பெருநகர ஆணையம் (மக்கட்தொகை 14.1மில்லியன்) |
| பெரு மாநகரங்கள் | ஒரு மிலியனிலிருந்து 10 மில்லியன் வரை மக்கட்தொகைக்கொண்ட நகரங்கள் | * சென்னை (8.6மில்லியன்)<br>* ஐதராபாத் (7.8 மில்லியன்)<br>* அகமதாபாத் (6.2 மில்லியன்) |
| மாநகரங்கள்/முதல்தர மாநகரங்கள் | 1 லட்சத்திலிருந்து 1 மில்லியன் மக்கட்தொகை கொண்ட நகரங்கள் | உனது ஆசிரியரின் உதவி கொண்டு மூன்று மாநகரங்களை அடையாளம் காண் மற்றும் ஆந்திரப்பிரதேசத்துக்குள்ளேயே மக்கட்தொகை விவரத்தை அளி. |
| நகரங்கள் | 5000க்கும் 1லட்சத்திற்கும் இடைப்பட்ட மக்கட்தொகைக் கொண்ட நகரங்கள் | உனது ஆசிரியரின் உதவி கொண்டு மூன்று நகரங்களை அடையாளம் காண். உனது பகுதியிலோ அல்லது அருகாமைப்பகுதியிலோ உள்ள மக்கட்தொகை விவரத்தை அளி. |
| வருவாய் கிராமம்/மக்கட்தொகை | வரையறுக்கப்பட்ட எல்லைகளைக் கொண்ட ஒரு கிராமம் | உனது ஆசிரியரின் உதவி கொண்டு உனது பகுதியில் அல்லது அருகாமைப்பகுதியில் உள்ள வருவாய் கிராமங்களை மூன்றை அடையாளம் கண்டு அவற்றின் மக்கட்தொகை விவரத்தை அளி. |
| குக்கிராமங்கள் | வருவாய் கிராமத்துக்குள்ளே உள்ள வீடுகளின் தொகுப்பு | உனது ஆசிரியரின் உதவி கொண்டு உனது பகுதியில் அல்லது அருகாமைப்பகுதி வருவாய் கிராமத்தில் உள்ள ஒன்று அல்லது இரண்டு குக்கிராமங்களை அடையாளம் காண். |

கீழ்கண்ட காலியிடத்தில் உனது தெரிவுக்கான ஒன்று அல்லது இரண்டு காரணங்களை எழுது.

4. மக்கட்தொகை ஒன்றை மட்டுமே ஆதாரமாகக்கொண்டு குடியிருப்பு வசிப்பிடங்களை வகைப்படுத்தவேண்டுமென்று நீ நினைக்கிறயா? ஏதேனும் வேறு வழி உள்ளதா உனக்கு புலப்படுகிறதா? உனது ஆசிரியரிடம் விவாதித்து அத்தகைய வகைப்படுத்துதலுக்குரிய அளவீடுகளை அடையாளங்காண்.

நகரமயமாதலில் முதன்மையாக திகழ்வதற்கு, எதிர்காலத்தில் பொருளாதார வகையில் முன்னேறிய நாடுகளின் போக்கைக் கடைப்பிடிக்க இந்தியா முனைந்துள்ளது.




SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## இந்தியாவில் நகரமயமாதல்

இந்தியாவில், ஏறக்குறைய 350மில்லியன் மக்கள் அதாவது மக்கட்தொகையில் மூன்றில் ஒருபகுதியினர் பெருநகரங்களிலும், சிறுநகரங்களிலும் வசிக்கின்றனர். மக்கள் விவசாயம் அல்லாத தொழில்களை மேற்கொண்டு பெருநகரங்களிலும், சிறுநகரங்களிலும் வசிக்கும் போக்கு அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இப்போக்கு நகரமயமாதல் என அழைக்கப்படுகிறது. 1950ஆம் ஆண்டுகளில் மக்கட் தொகையில் ஒரு கணிசமான பகுதியினர் 5.6இலட்சம் கிராமங்களில் வசித்தனர். மற்றும் 1மில்லியனுக்கும் அதிகமான மக்கட்தொகைக் கொண்ட பெருநகரங்கள் 5 மட்டுமே இருந்தன. அதே சமயத்தில் ஒருஇலட்சம் மக்கட்தொகைக் கொண்ட நகரங்களின் எண்ணிக்கை சுமார் 40ஆகும். இன்று கிராமங்களின் எண்ணிக்கை 6.4இலட்சமாக அதிகரித்துள்ளது மற்றும் சுமார் 850மில்லியன் மக்கள் இக்கிராமங்களில் வசிக்கின்றனர்.

மூன்று பெரும் நகரங்கள் – மும்பை, டில்லி, கொல்கத்தா ஆகியவை ஒவ்வொன்றும் 10 மில்லியனுக்கும் அதிகமான மக்களை தன்னகத்தே கொண்டுள்ளன. 1 மில்லியனுக்கும் அதிகமான மக்கட் தொகையைக் கொண்ட நகரங்கள் 50க்கும் அதிகமாக உள்ளன. நகரப் பகுதிகளில் ஏற்பட்ட இயற்கையான வளர்ச்சியின் விளைவாக பெருநகரங்களிலும், சிறுநகரங்களிலும் மக்கட்தொகை பெரும்பாலும் அதிகரித்தது. இந்த நகரப்பகுதிகளில் மக்கட் தொகை அதிகரிப்பு காலப்போக்கில் நடைபெற்றது. பழைய பெருநகரங்கள் மற்றும் சிறுநகரங்களின் விரிவாக்கமும், அதைச்சுற்றியிருந்த கிராமப்புற பகுதிகளின் சேர்ப்பும் நகர்புற குடியிருப்புகளில் சிலவற்றில் வளர்ச்சி ஏற்படக்காரணமாயிருந்தன. ஐந்தில் ஒருபங்கு மட்டுமே, கிராமப்புறத்திலிருந்து நகர்புறத்திற்கு இடம்பெயர்தல் காரணமாக ஏற்பட்ட வளர்ச்சி.

நகரமயமாதல் அதிகரித்த போதிலும், இந்த வளர்ச்சிக்கு உறுதுணையான அடிப்படை உள்கட்டமைப்புகளை வழங்க வேண்டியதின் அவசியம் அங்கே காணப்படவில்லை. நமக்கு சாலைகள், கழிவுநீர்க்கால்வாய்கள், மின்சாரம், தண்ணீர் மற்றும் இதர பொது வசதிகள் தேவை. அரசின் தலையீட்டால் நகர உள்கட்டமைப்பு வளர்ச்சியில் குறிப்பாக சாலைப்போக்குவரத்தில் சிறிது வழி பிறக்கிறது. எது எவ்வாறிருப்பினும் மின்சாரம், தண்ணீர் மற்றும் சுகாதார உள்கட்டமைப்புகள் போன்றவற்றின் ஏற்பாடுகள் போதுமானதல்ல. பெரிய மற்றும் சிறிய நகரங்களிலுள்ள ஏழை மக்களுக்கு இந்நிலைமை இன்னும் மோசமாக உள்ளது.

இந்த பொருளாதார முன்னேற்றத்திற்கு நகர்புற இந்தியா எவ்வாறு பங்காற்றுகிறது? நிதி, காப்பீடு, ரியல்எஸ்டேட் மற்றும் வணிகத்துடன் தொடர்புடைய போக்குவரத்து, உணவுதானியங்களை சேமிக்கும் வசதி மற்றும் தகவல் தொடர்பு போன்ற இத்தகைய சேவைத்துறைச் செயற்பாடுகள், தொழிற்துறை செயற்பாடுகளை விட மிக அதிகமாகவே பங்காற்றுகின்றன. கடந்த சில பத்தாண்டுகளாகவே தொழிற்துறை உற்பத்தியில் மிகப்பெரிய வளர்ச்சி ஏதுமில்லை.

பெரிய மற்றும் சிறிய நகரங்களுக்கு இடம்பெயர்தல் அல்லது அங்கே வசிப்பதென்பது ஒருசிலருக்கு மட்டுமே வரப்பிரசாதமாக அமைகிறது. நகரப்பகுதிகளில் காணப்படும் ஏழ்மை நிலைமை கிராமப்புற பகுதிகளுடன் ஒப்பிடும்போது குறைவாக இருப்பதாக காணப்பட்டாலும், குறைவான வருமானம் உடைய குடும்பத்தின் சராசரி வருமானம் ஆகியவற்றிக்கிடையே அதிக இடைவெளி உள்ளது. இவ்விடைவெளியானது சிறிய, பெரிய நகரங்களில் மேலும் அதிகரிக்கிறது. நகர்ப்பகுதிகளில் தாழ்த்தப்பட்ட, பழங்குடி இனத்தவர்கள் (SC/ST) ஈட்டும் வருமானம், இதர வகுப்பினரைவிட மிகக்குறைவாக உள்ளது. 2009-10ஆம் ஆண்டில், தாழ்த்தப்பட்ட பழங்குடி இனத்தவர் அல்லாத மற்ற இன நகரவாசிகளில் சுமார் ஆறில் ஒருபகுதியினர் மட்டுமே ஏழைகளாக இருந்தனர், அதே நேரத்தில் தாழ்த்தப்பட்ட பழங்குடி இன நகரவாசிகளின் ஏழ்மை நிலைமையோ இரட்டிப்பாக இருந்தது. இந்த ஏழைகளில் பெரும்பாலோர் பெருநகரமல்லாத சிறிய நகரங்களில் வசிப்பதுடன், முறைப்படுத்தப்படாத துறைகளில் பணியாற்றுகின்றனர்.

### விமானநிலைய மாநகரம்-நவீன கால நகரம்

இந்தியா உட்பட பல நாடுகளில் ஒரு புதுவகையான இருப்பிடம் உருவாகிக்கொண்டிருக்கிறது. இவ்விருப்பிடங்கள் பெரிய விமான நிலையங்களை மையமாகக் கொண்டு சுற்றிலும் அமைந்துள்ளன. எனவே இது விமானநிலையமாநகரம் எனப்பெயர்பெற்றது.

ஓர் வான்வழி இருப்பிடத்தில் விமான நிலையமானது தனக்கே உரித்தான முறையில் ஒருமாநகரம் போல் செயல்படுகிறது. பல வசதிகள் (தங்குமிடங்கள், அங்காடிகள், பொழுதுபோக்கு, உணவு, வணிகவிவாத மன்றங்கள் (Business conferencing) முதலியவை அங்கேயே அளிக்கப்படுகின்றன. மக்கள் இங்கு பறந்துவந்து, தன்னுடன் வியாபாரம் செய்பவர்களுடன் அங்கேயே வணிகம் நடத்தி, பறந்து சென்றுவிடலாம்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

எவ்வித போக்குவரத்து மற்றும் இதர இடைஞ்சல்களின்றி ஒரு நகரத்திலுள்ள அனைத்து வசதிகளுடன் இந்தியாவில் இவ்விடங்களில் ஒருவகையான விமானநிலைய மாநகரம் உருவாகி வருகின்றன: பெங்களூரு சர்வதேச விமானநிலையம், இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையம், புதுடெல்லி மற்றும் ராஜீவ் காந்தி சர்வதேச விமானநிலையம் (ஐதராபாத்)

வேறிடங்களில் உருவாகியுள்ள வான்வழி இருப்பிடங்களில் சில : சுவர்ணபூமி சர்வதேச விமான நிலையம் (பாங்காக், தாய்லாந்து) துபாய் சர்வதேச விமான நிலையம் (துபாய், ஐக்கிய அரபுநாடுகள்) கெய்ரோ சர்வதேச விமானநிலையம் (கெய்ரோ, எகிப்து), லண்டன் ஹீத்ரு விமான நிலையம் (லண்டன், இங்கிலாந்து)

- விமானநிலை மாநகரத்தில் என்ன உள்ளது?
- விமான நிலை மாநகரம் அல்லது அருகாமையில் உள்ள ஏதேனும் இரண்டு வசதிகளை குறிப்பிடுக.
- உலக புறவரிபடத்தில் மேலே எடுத்துக்காட்டுகளாகத் தந்த நகரங்களின் இடங்கண்டு குறிக்கவும். புறவரிப்படத்தில் அந்நாட்டையும், விமான நிலையத்தையும் பெயர் குறிப்பிடுக. நாடுகளின் பெயர்களையும் நகரங்கள் மற்றும் விமான நிலையங்களின் பெயர்களையும் அடையாளங்காண வெவ்வேறு விதமான எழுத்துக்களை பயன்படுத்த வேண்டுமென்பதை நினைவில் கொள். இதனால் நாடுகளின் பெயர்களுக்கான எழுத்துக்கள் எவை, நகரங்கள் மற்றும் விமான நிலையபெயர்களுக்கான எழுத்துக்கள் எவை என்பதை எளிதில் காணலாம்.
- இப்பாடத்தில் நீ படித்த ஓர் இருப்பிடம், ஒரு விமான நிலைய மாநகரத்தை கொண்டுள்ளதாக வைத்துக்கொள்வோம். அதனால் உனது இருப்பிடத்தின் மனைப்பகுதி சிறப்பியல்புகள் மாற்றமடையக் கூடிய மூன்று வழிகளைக் குறிப்பிடு. அதேபோன்று உனது இருப்பிடத்தின் அமைவிட சிறப்பியல்புகள் மாற்றமடையக்கூடிய மூன்று வழிகளைக்குறிப்பிடு.

## நகரமயமாதலின் பிரச்சனைகள்

நகரமயமாதலின் அதிகரிப்பு, மக்களுக்கு அதிகப்படியான வாய்ப்புகளையும், பொருளாதாரத்தில் அதிக உற்பத்தி செயற்பாடுகளையும் மட்டும் கொண்டுவந்து சேர்ப்பதில்லை. இது பலபிரச்சனைகளையும் கொண்டுவந்து சேர்க்கிறது. வளர்ந்துவரும் நகர மக்கட் தொகையை குடியமர்த்தியாகவேண்டும். தண்ணீர் வசதி, கழிவுநீர் மற்றும் இதர கழிவுகள் வெளியேற்றம், போக்குவரத்து, மற்றும் பலவகையானவைகள் தேவைப்படுகின்றன.

படம் 7.6: டெல்லியில் குறைந்த வருவாயுடையோர் வசிப்பிடப்பகுதி



இவை அனைத்தும் சுற்றுப்புற பாதிப்பில் கொண்டுபோய் சேர்க்கிறது. வாகன பயன்பாடு அதிகரிப்பதற்கேற்ப, நகர்புற காற்று மாசடைதலும் அதிகரிக்கிறது. இது சுகாதார பிரச்சனைகளுக்கும் மற்றும் உள்ளூர் வானிலை மாற்றத்திற்கும் காரணமாகிறது. கழிவுநீர் சரியான முறையில் வெளியேற்றப்படாமையானது தொற்றுநோய்களின் அச்சுறுத்தலுக்கு வழிவகுக்கிறது.

நகரமயமாதல் அதிகரிப்பின் தாக்கங்களில் ஒன்று, பொருட்களின் பயன்பாடாகும். அப்பொருட்கள் மண்ணில் மக்குவதில்லை அல்லது அவ்வாறு மக்குவதற்கு நீண்டகாலம் பிடிக்கிறது. அகற்றப்பட வேண்டிய கழிவுகளை அவை உற்பத்திசெய்கின்றன. இத்தகைய கழிவுகளை நாம் எங்கே கொண்டுபோய் சேர்ப்பது? நகர்புற பகுதிகள் விரிவடைவதால், கழிவுகளை கிராமப்புற பகுதிகளுக்கு கொண்டுபோய் தள்ளிவிடுவதென்பதும் அதிகரிக்கிறது. அங்கே அவை குவிக்கப்படுகின்றன அல்லது கழிவை தூய்மையாக்கும் சுத்திகரிப்பு ஆலைகளுக்கு எடுத்துச்செல்லப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ள ஒரு நிகழ்ச்சியின் ஆய்வைக் கவனி.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்
8

# ராம்பூர் : ஒரு கிராம பொருளாதாரம்

## ராம்பூர் கிராமத்தின் உண்மைக் கதை :

ஒரு கிராமத்தின் இந்த உண்மைக் கதையானது கிராமத்தில் நடைபெறுகின்ற பல்வேறு உற்பத்தி செயற்பாடுகளுடன் நம்மை அழைத்துச் செல்கிறது. இந்தியா முழுவதுமுள்ள கிராமங்களில் விவசாயம் தான் முக்கிய உற்பத்தி செயற்பாடாக விளங்குகிறது. சிறு உற்பத்திகள், போக்குவரத்து, கடைகளை வைத்திருத்தல் முதலிய இதர உற்பத்தி செயற்பாடுகளை விவசாயமல்லாத செயற்பாடுகளைக் குறித்துக் காண்போம். எவ்விதமான உற்பத்தி முறையிலும் பயன்படுத்தும் அடிப்படை மூலங்களைக் கருத்தில் கொண்டு அந்த உற்பத்தி அமைப்புகளைக் குறித்து அவை பண்ணைகளில் இருப்பினும், தொழிற்சாலைகளிலிருப்பினும் பகுத்துணருவோம். உற்பத்தி செயற்பாடானது மக்கள் வாழ்க்கையின் மீது எவ்வித முக்கிய தாக்கத்தைக் கொண்டுள்ளதென்பதையும் அறிந்துக் கொள்வோம்.

ராம்பூர் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) கிராமக் கதையானது ஒருவிவரமான ஆய்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டது.இவ்வாய்வறிக்கையை எழுதிய எழுத்தாளர் அப்பகுதிக்கு சென்று, அங்கேயே தங்கி, அங்கே பல்வேறு அம்சங்களை அருகிலிருந்து கவனித்துள்ளார். பலமுறை மீண்டும் மீண்டும் அவ்வூருக்குச் சென்று வந்த பிறகே இவ்வாய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் காலபோக்கில் அவ்வூரில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்ததை அவரால் கவனிக்க முடிந்தது. நீ இந்த உண்மைச் சம்பவத்தை படிக்கும்பொழுது, ராம்பூரில் காணும் அத்தகைய வினோத காட்சிகள் உன்னுடைய பகுதியிலும் இருக்கக் கூடுமோ என நீ நினைக்கக்கூடும் அல்லது விசாரித்தறிய விரும்புவாய் அல்லது அவ்வூர் எந்தவகைகளில் வேறுவிதமான நிலைமையில் இருக்கும் ?

இந்தப் பாடத்தில் அவ்வப்பொழுது உனது சொந்த இடத்தின் நிலைமை அல்லது அகில இந்திய நிலைமையைக் குறித்து குறிப்பிட்டிருப்பதைக் காண்பாய். உதாரணத்திற்கு, ராம்பூரில் உள்ள நிலப்பங்கீடு குறித்து நாம் விவாதிக்கும் பொழுது, மொத்தத்தில் இந்தியாவில் என்ன காணப்படுகிறது என்பதையும் நாம் ஆராய்கிறோம். இதில் பல ஒற்றுமைகள் இருப்பதை நாம் காண்பதுதான் ராம்பூர் சில குறிப்பிட்ட சிறப்பம்சங்களைக் கொண்டிருக்கும் அதே வேளையில், அந்த சிறப்பம்சங்களில் பல, சில மாறுதல்களுடன் இந்தியா வெங்கும் இருக்கின்றன என்பதை அறிந்துக்கொள்ள இது நமக்கு துணைபுரிகிறது. இவற்றை உன்னுடைய பகுதியுடன் ஒப்பிட்டுக் கொள்ள முடியும்.

- விவசாயத்தை குறித்து உனக்கு என்ன தெரியும்? வெவ்வேறு பருவக்காலங்களில் எவ்வாறு பயிர்கள் மாறுகின்றன? விவசாயத்தின் மீது அதிகம் ஆதாரப்பட்டவர்கள் நில உரிமையாளர்களா? அல்லது தொழிலாளர்களா?

## ராம்பூரில் பயிர்தொழில் :

ராம்பூர் கிராமம் மேற்கு உத்திரப்பிரதேச கங்கை நதிப்படுகையின் வளமான வண்டல்மண் சமவெளியில் அமைந்துள்ளது. மேற்கு உத்திரப்பிரதேசம் விவசாயத்தில் வளர்ச்சியடைந்த பகுதியைக் கொண்டு பஞ்சாப், ஹரியானாவை உள்ளடக்கிய ஒரு பொது மண்டலத்தை உருவாக்கியுள்ளது. இவ்வூர் அண்டை கிராமங்களுடனும், நகரங்களுடனும் நன்கு இணைக்கப்பட்டுள்ளது. ராய்கஞ்ச் என்னும் ஒரு பெரிய கிராமம். இது ராம்பூரிலிருந்து 3 கி.மீ.தூரத்திலுள்ளது. மிக அருகாமையிலுள்ள சிறிய நகரமான ஜஹாங்கிராபாத்தை(12 கி.மீ. தொலைவில்) எல்லா காலத்திற்கும் ஏற்ற ஒரு சாலை ராய்கஞ்சுடன் இணைக்கிறது. மாட்டு வண்டிகளில் தொடங்கி, குதிரை வண்டிகள், வெல்லம் மற்றும் இதர பொருட்களை பொதிகளாக ஏற்றிய போகிகள் (bogeys-எருமைகளால் இழுக்கப்படும் கட்டைவண்டி), இருசக்கர வாகனங்கள், ஜீப்கள், டிராக்டர்கள், சரக்கு வண்டிகள் போன்ற மோட்டார் வாகனங்கள் வரை பல வகையான போக்குவரத்து வாகனங்களை அந்த சாலையில் காணலாம்.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ராம்பூரில் முக்கிய உற்பத்தி செயற்பாடே பயிர்த் தொழில்தான். வேலை செய்யும் மக்களில் பெரும்பான்மையோர் தங்களுடைய வாழ்வாதாரத்திற்கு பயிர்த்தொழில் மீதே சார்ந்துள்ளனர். அவர்கள் விவசாயிகளாக உள்ளனர்; அல்லது விவசாய கூலிகளாக உள்ளனர். இம்மக்களின் நல்வாழ்வானது அந்நிலங்களில் கிடைக்கும் விளைச்சலுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிறது.

## நிலம் மற்றும் இதர இயற்கை வளங்கள் :

விவசாய உற்பத்தியை தீர்மானிக்கின்ற மிகத்தேவையான கருவியாக நிலம் உள்ளது. விவசாயத்திற்குரிய நிலப்பகுதியானது நிலையானது. 1921 லிருந்து ராம்பூரில் விவசாயத்திற்குரிய நிலப்பகுதியில் விரிவாக்கம் நடைபெறவில்லை. பிறகு அருகிலிருந்த காடுகள் அழிக்கப்பட்டன. கிராமத்தில் இருந்த சில வறண்ட நிலங்கள் விவசாய நிலங்களாக மாற்றப்பட்டன. வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்காக புதிய நிலங்களை விவசாயத்தின் கீழ் கொண்டு வர, மேற்கொண்டு வாய்ப்பில்லை.

ராம்பூரில் எந்தவொரு நிலமும் வீணாக விட்டுவைக்கப்படவில்லை. மழைக் காலங்களில் (குரீப் பருவம்) விவசாயிகள் கோவர், பஜ்ரா ஆகியவற்றைப் பயிரிடுவர். இத்தாவரங்கள் கால் நடைகளுக்கான தீவனங்களாகக் கூட பயன்படுத்தப்படுவதுண்டு. இதைத் தொடர்ந்து அக்டோபர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கிடையே உருளைக்கிழங்கு சாகுபடி நடைபெறும். குளிர்காலத்தில் (ரபி பருவம்) வயல்களில் கோதுமையை விதைப்பர். விளைச்சலிலிருந்து குடும்பத்தின் பயன்பாட்டிற்கு தேவையான கோதுமையை வைத்துக்கொண்டு அதிகப்படியானதை ராய்கஞ்சிலுள்ள கடைத்தெருவில் விற்றுவிடுவர். நிலத்தின் ஒரு பகுதியில் கரும்பு பயிரிடப்பட்டிருக்கும்; வருடத்திற்கொருமுறை அது அறுவடை செய்யப்படும். கரும்பை அப்படியேயாகிலும், அல்லது வெல்லமாக ஆக்கியும் அருகிலுள்ள சிறிய நகரமான ஜஹாங்கீராபாத்திலுள்ள வியாபாரிகளுக்கு விற்றுவிடுவர்.

> **நிலத்தை அளத்தல்**
>
> நிலத்தை அளக்க நிலையான அலகாக இருப்பது ஹெக்டோர். ஆயினும் கிராமங்களில் உள்ளூர் அலகு முறைகளான ஏக்கர் மற்றும் செண்ட் அல்லது குழி என்பதைக் கொண்டு நிலத்தை அளவிடுவதை கண்டிருக்கக்கூடும். ஒரு ஹெக்டோர் என்பது 10,000 சதுரமீட்டர்களைக் கொண்டதாகும். 1 ஹெக்டோர் வயல்பரப்பை உனது பள்ளி மைதான பரப்புடன் ஒப்பிட்டு பார். உனது ஆசிரியருடன் உரையாடு.

ஓராண்டில் அதே நிலத்தை ஒருமுறைக்குமேல் பயிரிட்டால் அதை பல்சாகுபடி என்பர். நிலத்திலிருந்து அதிக மகசூலை பெறுவதற்கு இதுவே சிறந்த வழக்கமான வழியாக உள்ளது. ராம்பூரிலுள்ள விவசாயிகள் அனைவரும் குறைந்த பட்சம் முக்கியமாக இரண்டு சாகுபடிகளைச் செய்கின்றனர்; பலர் மூன்றாவது சாகுபடியாக உருளைக்கிழங்கை பயிரிடுகின்றனர்.

நன்கு வளர்ச்சிப்பெற்ற நீர்பாசன அமைப்புகளுள்ளதால் ராம்பூரிலுள்ள விவசாயிகளால் ஓராண்டில் மூன்றுவகையான வெவ்வேறு பயிர்களை பயிரிட ஏதுவாகின்றது. மின்சாரவசதி ராம்பூரில் முன்பே வந்துவிட்டது. நீர்ப்பாசன அமைப்பு முறையை இது மாற்றியமைத்தது. அதுவரையில் விவசாயிகள் பெர்சியன் சக்கரங்களை உபயோகித்து கிணறுகளிலிருந்து நீரை இறைத்து சிறிய நிலப்பகுதிக்கு நீர்பாய்ச்சி வந்தனர். மின் சாரத்தால் இயக்கும் குழாய் கிணறுகளால் அதிக விவசாயமான நிலப்பரப்பிற்கு எளிதாக நீர்ப்பாய்ச்ச முடிகிறதென்பதை மக்கள் கண்கூடாக கண்டனர். முதல் சில குழாய்கிணறுகளை அரசாங்கமே ஐந்தாண்டுகளுக்கு முன் அமைத்துக் கொடுத்தது. எவ்வாறிருப்பினும், விரைவில் விவசாயிகள் தங்களுக்கென்று சொந்த குழாய் கிணறுகளை அமைத்துக்கொள்ள ஆரம்பித்தனர். இதன் விளைவாக 1970 ஆம் ஆண்டுகளின் மத்தியில், பயிரிடக்கூடிய 264 ஹெக்டேர் நிலப்பரப்பு முழுவதும் நீர்ப்பாசன வசதி பெற்றது.

இந்தியாவிலுள்ள அனைத்து கிராமங்களும் இத்தகைய அதிகபட்ச நீர்ப்பாசன வசதியைப் பெற்றிருக்கவில்லை. நதிப்படுகைகள் மட்டுமின்றி, நம் நாட்டில் கடலோரப் பகுதிகளும் சிறந்த நீர்ப்பாசன வசதியைப் பெற்றுள்ளன. மாறாக, தக்காண பீடபூமி போன்ற பீடபூமி பிரதேசங்கள் குறைந்த அளவிலான நீர்ப்பாசன வசதியைப் பெற்றுள்ளன. இன்றுகூட, நம் நாட்டில் பயிரிடக் கூடிய நிலப்பரப்பின் மொத்தத்தில் 40 சதவீதத்திற்கும் குறைவாகவே நீர்பாசன வசதி பெற்றுள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

மற்றப் பகுதிகளில் விவசாயம் பெருபாலும் மழையின் மீது ஆதாரப்பட்டுள்ளது. இந்தியாவில் இயற்கை மண்டலங்கள் என்ற ஒன்றாம் அத்தியாயத்தை பார்க்கவும்.

● அட்லாஸ் புத்தகத்தில் அதிக பாசன வசதிகொண்ட பகுதிகளை பார்த்து அடையாளம் காண. உள்ளுடைய பகுதி இவ்வகையின் கீழ்வருகிறதா?

நிலம், நீர் ஆகிய இயற்கை வளங்களை மிகுதியாக பயன்படுத்துதலென்பது அதிகபடியான உற்பத்திக்கும், விளைச்சலுக்கும் வழிவகுக்கின்ற அதே நேரத்தில், அவ்வியற்கை வளங்களை அதிகபடியாக உபயோகித்தலென்பது விவேகமானதல்ல. அளவுக்கதிகமாக இரசாயன உரங்களையும், பூச்சிக் கொல்லி மருந்துகளையும் நிலத்தில் பயன்படுத்துவதால் நிலத்தின் வளம் குன்றிவிடுகிறதென்பது அனுபவபூர்வமான உண்மை. நீரின் நிலைமையும் அதேஅளவு நம்மை அச்சுறுத்துகிறது. ராம்பூர் கிராமத்தைப் போன்று, இந்தியாவில் பெரும்பாலான நீர்ப்பாசனம் நிலத்தின் நீரை எடுப்பதின் மீதே ஆதாரப்பட்டுள்ளது. இதன் விளைவாக நாடு முழுவதும் நிலத்தடிநீர் மட்டம் வெகு விரைவாக குறைந்துவிட்டது. தாராள மழைபொழிவு மற்றும் ஈடுசெய்துக் கொள்ளக்கூடிய சாதகமான இயற்கையமைப்புகள் கொண்ட பகுதிகளில் நீர் மட்டமானது அச்சப்படும் விதமாக மிகவும் கீழே சென்றுவிட்டது. நீர்மட்டத்தின் அளவு கீழ்நோக்கி செல்வதற்கேற்ப விவசாயி முன்பைவிட இன்னும் ஆழமாக குழாய் கிணறுகளை தோண்டவேண்டியுள்ளது. அதற்கேற்ப பாசனத்திற்காக டீசல்/மின்சாரத்தை பயன்படுத்துதலும் அதிகரிக்கிறது. இப்பிரச்சனைகளைக் குறித்து "நீடிப்புத்திறன் மற்றும் நீர்வளம்" என்ற பாடத்தில் மேலும் படித்தறிவோம்.

● கீழ்கண்ட அட்டவணையானது இந்தியாவில் உள்ள சாகுபடி நிலத்தை மில்லியன் ஹெக்டேர் அலகில் காட்டுகிறது. கொடுக்கப்பட்டுள்ள வரைப்படத்தில் இதை அமைக்கவும், வரைபடம் காட்டுவதென்ன? வகுப்பில் விவாதி.

| வருடம் | சாகுபடிபரப்பு (மில்லியன் ஹெக்டேர்களில்) |
|---|---|
| 1950 | 120 |
| 1960 | 130 |
| 1970 | 140 |
| 1980 | 140 |
| 1990 | 140 |
| 2000 | 140 |
| 2010 | 140 |
| 2015 | 140 |

**Graph : 1**



● ராம்பூரில் விளையக்கூடிய பயிர்களைக் குறித்து நீங்கள் படித்தீர்கள். உன்னுடைய பகுதியில் விளையும் பயிர்களின் தகவலை ஆதாரமாகக் கொண்டு, கீழுள்ள அட்டவணையை பூர்த்தி செய்.

| பயிரின் பெயர் | விதைக்கப்படும் மாதம் | அறுவடை செய்யப்படும் மாதம் | நீராதாரம்/நீர்ப்பாசனம் (மழை, கிணறுகள், கால்வாய்கள் முதலியவை) |
|---|---|---|---|
| | | | |

● ஒரு கிராமப்புற பகுதியில் பல்பயிர்களுக்கான காரணங்கள் யாவை?



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## ராம்பூரில் நிலம் பகிர்ந்தளிக்கப்பட்ட விதம்

விவசாயித்திற்கு நிலமானது எவ்வளவு முக்கியமானதென்பதை நீ உணரவேண்டும். துரதிருஷ்டவசமாக,உழவுத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களனைவரும் விவசாயத்திற்கு தேவையான அளவு நிலத்தை பெற்றிருக்கவில்லை. ராம்பூரில் மக்கட்தொகை சுமார் 2,660 ஆகும்; பல்வேறு இனத்தைச் சார்ந்த சுமார் 450 குடும்பங்கள் அங்குள்ளன. கிராமத்தில் அதிகப்படியான நிலம் மேல் ஜாதிக்காரர் வசம் உள்ளது. அவர்களுடைய வீடுகள் செங்கற்களால் கட்டப்பட்டு சிமெண்ட் கலவை பூச்சுக்களுடன் காணப்படுகின்றன. அவைகளில் சில விவசாயமானவை. மக்கட்தொகையில் 1/3 பங்கினர் தாழ்த்தப்பட்ட இனத்தவராவர் (தலித்துகள்), அவர்கள் மிக எளிய வீடுகளில் வசிக்கின்றனர். அவற்றில் சில கூரை வீடுகளாய் உள்ளன. அவை பிரதான ஊர் பகுதிக்கு வெளியே ஓர் ஒதுக்குப்புறத்தில் அமைந்துள்ளன.

ராம்பூரில் சுமார் 1/3 பங்கினர் அதாவது 150 குடும்பங்கள் நிலமற்றவர்களாக உள்ளனர். நிலமற்றவர்களிலும் அதிகமான பேர் தலித்துகள் ஆவர். 2 ஹெக்டேர்களுக்கும் அதிகமான நிலத்தைப் பயிரிடக் கூடிய நடுத்தர மற்றும் பெரிய விவசாயிகள் 60 குடும்பத்தார்கள் ஆவர். ஒரு சில பெரிய விவசாயிகளே 10 ஹெக்டேர் அல்லது அதற்கு மேலும் நிலத்தைக் கொண்டுள்ளனர். 240 குடும்பத்தார்கள் 2 ஹெக்டேர்களுக்கு குறைவான நிலப்பகுதியை விவசாயம் செய்து வருகின்றனர். இத்தகைய சிறிய நிலப்பகுதியை பயிரிடுதலால் விவசாயினுடைய குடும்பத்திற்கு போதிய வருவாய் கிடைப்பதில்லை.

1960ல் கோவிந்தன் என்ற விவசாயி அதிகப்பகுதி பாசன வசதியற்ற 2.25 ஹெக்டேர் நிலத்தை பெற்றிருந்தார். தன்னுடைய மூன்று மகன்களின் உதவியைக்கொண்டு கோவிந்தன் நிலத்தை பயிர் செய்துவந்தார். மிக்க வசதியுடன் அவர்கள் வாழவில்லையெனினும், அக்குடும்பம் பெற்றிருந்த ஒரு எருமைமாட்டின் மூலமாக கிடைக்கப்பெற்ற சிறிதளவு வருவாயைக் கொண்டு அக்குடும்பம் வாழ்ந்துவந்தது.கோவிந்தன் சில ஆண்டுகளுக்கு பிறகு அவருடைய மகன்கள் மூவரும் நிலத்தை தங்களுக்குள் பிரித்துக்கொண்டனர். அவர்களில் ஒவ்வொருவருக்கும் இப்பொழுது தலா 0.75 ஹெக்டார் அளவில்தான் நிலப்பகுதி இருந்தது. மேம்பட்ட பாசன வசதி மற்றும் நவீன விவசாய முறைகளிலிருந்தும், கோவிந்தனின் மகன்கள் அவர்களின் நிலத்தைக்கொண்டு வாழ்க்கையை நடத்த முடியவில்லை. வருடத்தில் சில மாத காலத்திற்கு கூடுதலாக இன்னொரு வேலையை அவர்கள் தேட வேண்டியவர்களாயுள்ளனர்.

வரைபடம் 9.1 என்பது ஆந்திரப்பிரதேசத்தில் ஓர் கிராமத்தினுடைய நிலங்களின் வரைபடம். பல்வேறு அளவுகளில் நிலப்பகுதிகள் இருப்பதையும், அதற்கேற்ப சிறிய நிலப்பகுதிகள் அதிகளவில் இருப்பதையும் இப்புத்தக பின்புற அட்டையில் நீ காணலாம்.



*வரைபடம் 1 : ஆ.பி.யில் ஓர் கிராமத்தில் நிலம் பரவியிருத்தலின் காட்சி.*



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

- 9.1 வரைபடத்தில் சிறிய நிலப்பகுதிகளை கறுப்பாக்கு.
- நிறைய விவசாயக்குடும்பங்கள் இத்தகைய சிறிய நிலப்பகுதிகளை பயிரிட வேண்டிய அவசியமென்ன?
- இந்தியாவில் விவசாயகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மற்றும் அவர்கள் பயிரிடும் நிலத்தின் அளவும் கீழ்கண்ட அட்டவணையிலும், வட்டவிளக்க படத்திலுமுள்ளன.

| விவசாயிகளின் வகை | நிலப்பகுதியின் அளவு | விவசாயிகளின் சதவீதம் | பயிரிடப்படும் நிலப்பரப்பின் சதவீதம் |
|---|---|---|---|
| சிறுவிவசாயிகள் | 2 ஹெ.க்கு குறைவு | 87% | 42% |
| நடுத்தர மற்றும் பெரிய விவசாயிகள் | 2 ஹெ.விடஅதிகம் | 13% | 58% |

குறிப்பு : இங்குள்ள புள்ளிவிவரங்கள் விவசாயிகள் பயிரிடப்படும் நிலத்தைக் குறிக்கின்றன. அது சொந்தமானதாகவும் அல்லது வாட=கைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாகவும் இருக்கக்கூடும்.

- அம்புக்குறியீடுகள் தெரிவிப்பவை யாவை? இந்தியாவில் பயிரிடப்படும் நிலத்தின் பகிர்வு ஒரே சீராக இல்லையென்பதை நீ ஒப்புக்கொள்கிறாயா?

வரைபடம் : 2




## உற்பத்தியின் அமைப்பு :

ராம்பூரில் ஒட்டுமொத்த உற்பத்தி முறையை அறிந்துக் கொள்ள முயலுவோம்.

உற்பத்தியின் நோக்கமே மக்களுக்கு தேவையான பொருட்களையும், சேவைகளையும் உண்டாக்குவதே. மேலும் ஒரு பொருளையோ அல்லது சேவையையோ உண்டாக்க வேண்டுமானால் உற்பத்தியாளருக்கு பல பொருட்கள் தேவைப்படுகின்றன. இவற்றை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

முதலாவது தேவை நிலம் மற்றும் நீர், காடுகள், தாதுக்கள் போன்ற இயற்கை மூலவலங்கள். ராம்பூரில், விவசாயம் செய்ய நிலமும், நீரும் எவ்வாறு பயன்படுகின்றன என்பதை நாம் மேலே படித்துள்ளோம்.

இராண்டாவது தேவை உழைப்பை அதாவது வேலை செய்யும் மக்கள் தேவையான வேலையை செய்து முடிப்பதற்கு உயர்பயிற்சி பெற்ற, படித்த தொழிலாளர்கள் சில உற்பத்தி செயற்பாடுகளுக்கு தேவைப்படுகின்றனர். சில இதர செயற்பாடுகளுக்கு உடலுழைப்பை நல்கும் தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். ஒவ்வொரு தொழிலாளியும் உற்பத்திக்கு தேவையான உழைப்பை அளிக்கின்றனர். சாதரணவழக்கத்தில் பயன்படுத்தும் பொருளிலில்லாமல், உழைப்பு என்ற சொல்லானது வெறும் உடலுழைப்பை குறிக்காமல், உற்பத்தியில் மேற்கொள்ளப்படும் அனைத்து மனித முயற்சிகளையும் குறிக்கிறது. எனவே, உதாரணத்திற்கு, ஒருவர் பொறியாளர் மேலாளர், கணக்காளர், மேற்பார்வையாளர் இயந்திரம் இயக்குபவர், விற்பனை பிரதிநிதி, சாதாரண ஊழியர் ஆகியோராக இருக்கக்கூடும். ஆயினும் அவர்களனைவரும் பொருட்களை உற்பத்தி செய்யவும், அவற்றை விற்பனை செய்யும் ஒரு தொழிற்சாலைக்கு உழைப்பை நல்குகின்றனர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

மூன்றாவதாக தேவைப்படுவது மூலதனம், அதாவது, உற்பத்தியின் போது ஒவ்வொரு கட்டத்திலும் தேவைப்படும் உள்ளீடுகள், எந்தெந்த இனங்கள் மூலதனத்தின் கீழ் வருகின்றன.

(a) **கருவிகள், இயந்திரங்கள், கட்டிடங்கள்** :கருவிகளும், இயந்திரங்களும் என்பது உழவனின் கலப்பையிலிருந்து ஜெனரெட்டர்கள், சுழலிகள் (டர்பைன்கள்), கணினியால் இயக்கப்படும் தானியங்கி எந்திரங்கள் போன்ற நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள் வரை குறிப்பதாகும். உற்பத்தி நடைபெறும் போக்கில் இவைகள் உடனடியாக பயன்படுத்தப்படாமலும் அல்லது உட்கொள்ளப்படாமலும் இருப்பதுண்டு. பலகாலங்களுக்கு பொருட்களை உற்பத்தி செய்ய இவைகள் உதவுகின்றன. இவைகளுக்கு பழுதுபார்ப்பும், பராமரிப்பும் தேவைப்படக்கூடும். இதனால் அவை ஆண்டாண்டாக பயன்பாட்டில் இருந்து அவற்றை உபயோகிக்க முடிகிறது. இவைகளை நிரந்திர மூலதனம் [Physical capital] என அழைப்பர். எவ்வாறிருப்பினும் இயந்திரங்கள் போன்ற எல்லாவற்றையும், பல ஆண்டுகள் உபயோகத்திற்குப்பிறகு, மாற்ற வேண்டும். அதற்கு பதிலாக புதிய மற்றும் சிறந்த கருவிகளும், எந்திரங்களும் இடம்பெறச் செய்ய வேண்டும்.

(b) **மூலப்பொருட்கள் மற்றும் பணம் தேவைபடுதல்** :நெசவாளி பயன்படுத்தும் நூல், குயவன் பயன்படுத்தும் களிமண் போன்ற பல்வேறு மூலப்பொருட்கள் உற்பத்தி செயலில் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், உற்பத்திக்கு தேவையான இதர பொருட்களை வாங்கவும், உற்பத்தியை நிறைவு செய்ய பணம் தருவதற்கும் சிறிதளவு பணம் தேவையாகிறது. உற்பத்தியை செய்து முடிக்கவும், பிறகு அப்பொருட்களையோ அல்லது சேவைகளையோ சந்தையில் விற்கவும் சில காலம் பிடிக்கும். அதன் பிறகே உற்பத்தி செயற்பாட்டிற்கு பணமானது மீண்டும் வந்தடையும். மூலப்பொருட்களுக்கான மற்றும் பணத்திற்கான இந்த தேவையைத்தான் செயல்படு மூலதனம் (Working capital) என்றழைக்கின்றனர். நிரந்தர மூலதனத்திலிருந்து (Physical capital) இது வேறுபட்டது. ஏனெனில், கருவிகள், எந்திரங்கள், கட்டிடங்கள் போன்றல்லாது, உற்பத்தி சுழற்சியில் இவைகள் முழுவதுமாக உபயோகப்படுத்தப்பட்டு விடுகின்றன.

**நான்காவது தேவை அறிவு மற்றும் தொழில்முனைவு** :பொருட்களையோ அல்லது சேவைகளையோ உற்பத்தி செய்வதற்கு நிலம், உழைப்பு, நிலையான மூலதனம் ஆகியவற்றை ஏற்ற வகையில் திறமையுடன் பயன்படுத்த உற்பத்தி முறைக்குறித்த அறிவும், தன்னம்பிக்கையும் மிகவும் இன்றியமையாதது. நிரந்தர மூலதனத்தின் முதலாளி அல்லது அவற்றை வாடகைக்கு எடுத்திருக்கும் மேலாளர் உற்பத்தி முறைக்குரிய அறிவாற்றலை வழங்குகிறார். சந்தைப்படுத்துதலுக்குரிய துணிச்சலான முடிவுகளை முதலாளிகள் தான் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதாவது உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு அல்லது சேவைகளுக்கு போதுமான அளவு வாங்குவோர் உள்ளனரா என்பதை தீர்மானிப்பது. நம்முடைய சமுதாயத்தில் சந்தைகளில் விற்பதற்காகவே பெரும்பாலான பொருட்கள் அல்லது சேவைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே சந்தைப்படுத்துவதற்காக பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில் முனைவோர் திட்டமிடுதல், அமைப்பு, நிர்வாகம் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும். இத்தகைய தொழில் முனைவோர் என்போர் விவசாயிகளாகவோ, கடைக்காரர்களாகவோ, சிறு அளவு உற்பத்தியாளர்களாகவோ, சேவையை நல்கும் மருத்துவர்களாகவோ, வழக்கறிஞர்களாகவோ அல்லது பெரிய நிறுவனங்களாகவோ கூட இருக்கக்கூடும். அவர்களுடைய பொருட்களை அல்லது சேவைகளை மக்கள் வாங்கிக் கொள்கின்றனர். இதனால் அவர்கள் லாபமடையலாம் அல்லது நஷ்டமடையலாம்.

நிலம், உழைப்பு, நிரந்திர மூலதனம் ஆகிய அடிப்படை மூலங்களை ஒருங்கிணைத்து, மக்களால் அல்லது தொழில் முனைவோரால் ஒவ்வொரு உற்பத்தியும் ஒழுங்கமைக்கப்படுகிறது. இவை உற்பத்தியின் காரணிகள் எனப்படுகின்றன.

*படம் 8.1 : சிறுவிவசாயி, பெரிய விவசாயி அடுத்த பகுதியைப் படித்தப்பிறகு உற்பத்திக் காரணிகளுடன் தொடர்பு படுத்தி விவரிக்கும் ஒரு தலைப்பை எழுதுக.*






Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## விவசாயத்திற்கான உழைப்பு

நிலத்திற்கு அடுத்தப்படியாக, உற்பத்திக்குத் தேவைப்படும் காரணி உழைப்பாகும். விவசாயத்திற்கு அதிகமான கடின உழைப்பு தேவை. சிறிய விவசாயிகள் பெரும்பாலும் தங்கள் குடும்பத்தாரை வைத்துக்கொண்டு தங்களது சொந்த நிலத்தை பயிரிடுகின்றனர். பொதுவாக, விவசாயத்திற்கு தேவையான உழைப்பை அவர்களே அளிக்கின்றனர். நடுத்திர மற்றும் பெரிய விவசாயிகள் தங்கள் நிலங்களில் வேலை செய்ய விவசாய கூலியாட்களை வேலைக்கு அமர்த்திக் கொள்கின்றனர்.

நிலமற்ற குடும்பங்களிலிருந்தும் அல்லது சிறிய நிலப்பகுதியை பயிரிடும் குடும்பங்களிலிருந்தும் விவசாய கூலியாட்கள் வேலைக்கு வருகின்றனர். தங்களுடைய சொந்த நிலங்களில் வேலை செய்யும் விவசாயிகளைப் போல் அல்லாமல், விவசாய கூலியாட்களுக்கு அந்த நிலங்களில் பயிராகும் பயிர்களின் மீது உரிமை இல்லை. இதற்கு பதிலாக, எந்த விவசாயிக்காக அவர்கள் வேலை செய்கிறார்களோ அந்த விவசாயி அவர்களுக்கு கூலி வழங்குகிறார். அவர்கள் வேலை செய்வதற்காக நியமிக்கப்படுபவர்களே ஆகும்.



படம் 8.2: இமயமலையில் உருளைக்கிழக்கு அறுவடை

கூலி என்பது பணமாகவோ அல்லது பொருளாகவோ (விளைபொருள்) இருக்கும். சில சமயங்களில் கூலியாட்களுக்கு உணவு வழங்கப்படுவது உண்டு. கூலி என்பது இடத்திற்கிடம், பயிருக்கு பயிர், ஒரு விவசாய வேலைக்கும் இன்னொன்றிற்கும் (விதைத்தல் மற்றும் அறுவடை போன்றவை) வெகுவாக வேறுபடுவதுண்டு. வேலை நேரத்திலும் அதிக வித்தியாசம் இருப்பதுண்டு. ஒரு விவசாயக் கூலியாள், தினக்கூலி அடிப்படையிலும், அல்லது அறுவடை போன்ற ஒரு குறிப்பிட்ட விவசாய வேலைக்கென்று அல்லது ஆண்டு முழுவதுக்குமென்று ஒப்பந்த அடிப்படையிலும் வேலைக்கு அமர்த்தப்படுதுண்டு.

தளா(Dala) என்பவர் ராம்பூரில் தினக்கூலி அடிப்படையில் வேலை செய்யும் ஓர் நிலமற்ற விவசாயக் கூலியாள். இதன் பொருள், அவர் தினமும் வேலையை தேடிக்கொள்ள வேண்டும். உத்திர பிரதேச அரசாங்கம் கூலியாட்களுக்காக நிர்ணயித்த குறைந்த பட்ச கூலி எவ்வளவோ அதைவிட குறைவானதுதான் தளாவின் கூலித்தொகை. ராம்பூரில் விவசாய கூலியாட்களுக்கிடையே வேலை செய்வதற்கு கடும் போட்டி இருப்பதால், மக்கள் குறைந்த கூலிக்கு வேலை செய்ய சம்மதிக்கின்றனர். பெரிய விவசாயிகள் டிராக்டர், அறுவடை இயந்திரங்களின் மீது சார்ந்திருத்தல் அதிகாரித்து வருவதால், கிராமப்புறங்களில் வேலையாளுக்கு குறைவான நாட்களுக்கே வேலை கிடைக்கிறது. கடந்த ஆண்டு முழுவதிலும், தளாவுக்கு ஐந்து மாதத்திற்கும் குறைவாகவே விவசாய வேலை கிடைத்தது. எவ்வித வேலையும் இல்லாத காலத்தில், தளாவும் அவரைப்போன்று பலரும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (MNREGA-Mahatma Gandhi National Rural Employment Guarentee Act) என்ற திட்டத்தின் கீழ் வேலைக்காக ஊராட்சி மன்றத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டனர்.

- தளா போன்ற விவசாயக் கூலியாட்கள் ஏன் ஏழைகளாய் உள்ளனர் ?
- ராம்பூரிலுள்ள பெரிய மற்றும் சிறிய விவசாயிகள் தங்களுடைய விவசாய பணிகளுக்கான உழைப்பை பெற (வேலைகளை செய்துக் கொள்ள) என்ன செய்கிறார்கள் ?
- கீழ்காணும் அட்டவணையை பூர்த்தி செய் :

| **உற்பத்தி செயல் முறையில் உழைப்பு** | ஒவ்வொரு உற்பத்தி செயற்பாட்டிற்கும் மூன்று வெவ்வேறு உதாரணங்கள் தருக. |
|---|---|
| முதலாளியும்/குடும்பத்தாரும் தேவையான உழைப்பை அளித்தல் | |
| முதலாளிகள் வேலையை செய்துக்கொள்ள ஆட்களை வாடகைக்கு நியமித்துக் கொள்ளுதல் | |

- **உன்னுடைய பகுதியில் நீ கவனித்த அளவில், பொருட்கள் அல்லது சேவைகளின் உற்பத்தியில் உழைப்பு எந்தெந்த வழிகளில் அளிக்கப்படுகிறது?**



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**அட்டவணை 9.1 டிசம்பர் 2011ல் ஆந்திரப்பிரதேசத்தில் வெவ்வேறு விவசாய செயற்பாடுகளுக்கான தினச்கூலிகள் (ரூபாய் கணக்கில்)**

| வேலை யாட்கள் | உழுதல் | விதைத்தல் | களை பறிதல் | நாற்று நடுதல் | அறுவடை | தூற்றுதல் | உமி நீக்குதல் | பருத்தி பறித்தல் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண் வேலையாட்கள் | 214 | 197 | 215 | - | 164 | 168 | 152 | - |
| பெண் வேலையாட்கள் | - | 152 | 130 | 143 | 126 | 124 | 118 | 136 |

ஆந்திரப் பிரதேசத்தில் பல்வேறு விவசாய பணிகளுக்கு வேலையாட்களுக்கு அளிக்கப் படும் சராசரி தினக்கூலிகளைப் பற்றி இந்த அட்டவணை தெரிவிக்கிறது.

ஒரு நாள் முழுக்க, பருத்தியைப் பறிக்க ஒரு பெண் வேலையாளுக்கு கிடைக்கும் தொகை ரூ.136 ஆகும். உழுதல் போன்ற சில குறிப்பிட்ட வேலைகளை முக்கியமாக ஆண்கள்தான் செய்கின்றனர் என்பதை நீ கவனிக்கலாம். ஆகையால்தான் பெண்களுக் காக எந்த கூலி விவரமும் இங்கு பதியப்படவில்லை. நெல் நாற்று நடவு மற்றும் பருத்தி பறித்தல போன்ற வேலைகளை முக்கியமாக பெண்கள்தான் செய்கின்றனர். சில குறிப்பிட்ட உற்பத்தி செயல்களை ஆண்கள், பெண்கள் ஆகிய இருவருமே செய்கின்றனர். ஒரே வேலையை ஆண், பெண் இருவரும் செய்தாலும் கூட, பெண்களுக்கான கூலியை விட ஆண்களுக்கான கூலி அதிகம். மாநிலத்திற்குள் உள்ள எல்லா முதலாளிகளும் (தனியார் மற்றும் பொதுத்துறை) அளிக்க வேண்டிய பொதுவான குறைந்தபட்ச கூலியை மாநில அரசாங்கம் நிர்ணயிக்கிறது

- மேலே கொடுக்கப்பட்டுள்ள தினக் கூலிகளை உன்னுடைய பகுதியில் நடைபெறும் ஏதேனும் ஒரு செயலுக்கான நிலவும் கூலியுடன் ஒப்பிடுக.
- குறைந்தபட்ச கூலியை கண்டறிந்த இதனுடன் ஒப்பிட்டு பார்.
- ஒரே வேலைக்கு பெண்களைவிட ஆண்கள் அதிகக்கூலி பெறுவது எதனால் என நீ நினைக்கிறாய்? விவாதி.

## மூலதனம் நிரந்தர மற்றும் செயல்படு மூலதனத்தை ஏற்பாடு செய்தல்

நவீன விவசாய முறையில் அதிக மகசூல் தரும் பலவகையான விதைகள், உறுதி செய்யப்பட்ட நீர்ப்பாசனம், உரம், பூச்சிக்கொல்லிகள் ஆகியவை எவ்வாறு சம்பந்தப்பட்டுள்ளன என்பதை நீங்கள் முந்தையை வகுப்புகளிலேயே படித்தீர்கள் அல்லவா! முறையாக சொல்ல வேண்டுமானால் இதன் பொருள், உற்பத்தி செய்ய போதுமான மூலதனத் தொகையும், மற்றும் பணமும் விவசாயிகளுக்கு தேவைப்படுகின்றன. விவசாயத்திற்குத் தேவைப்படும் நிரந்தர மூலதனத்தையும், செயல்படு மூலதனத்தையும் விவசாயிகள் எவ்வாறு ஏற்பாடு செய்துக் கொள்கின்றன என்பதை இப்பொழுது காண்போம்.

பெரும்பாலான சிறிய விவசாயிகள் செயல்படு மூலதனத்தை ஏற்பாடு செய்துக் கொள்வதற்காக பணத்தை கடன் வாங்க வேண்டியவர்களாக உள்ளனர். அவர்கள் பெரிய விவசாயிகளிடமிருந்தோ அல்லது ஊரிலுள்ள வட்டிக்கு பணம் கொடுப்பவரிடமிருந்தோ அல்லது விவசாயத்திற்கு பல்வேறு உள்ளீடுகளை வழங்கும் வணிகர்களிடமிருந்தோ கடன் வாங்கிக் கொள்கிறார்கள். அத்தகைய கடனுக்கான வட்டிவீதமோ மிக அதிகம். அக்கடனைத் திருப்பிச் செலுத்த அவர்கள் மிகுந்த துயரத்திற்கு ஆளாகின்றனர்.

சவீதா என்பவர் ஒரு சிறிய விவசாயி ஆவார். 1 ஹெக்டேர் நிலத்தில் அந்த அம்மையார் கோதுமையை பயிரிட திட்டமிடுகிறார். விதைகள், உரங்கள் மற்றும் பூச்சிகொல்லிகள் ஆகியவற்றுடன், நீரை வாங்கவும், தன்னுடைய விவசாய கருவிகளை பழுது பார்க்கவும் அவருக்கு பணம் தேவைப்படுகிறது. செயல்படு மூலதனத்திற்கு மட்டும் குறைந்த பட்சம் ரூ,6000 தேவைப்படுமென அவர் உத்தேசமாக மதிப்பிடுகிறார். அவரிடம் பணமில்லை. ஆகையால் அவர் தேஜ்பால்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

என்னும் ஒரு பெரிய விவசாயிடமிருந்து கடன் வாங்க வேண்டுமென்று முடிவு செய்கிறாா். தேஜ்பால் அதிக வட்டி வீதத்திற்கு, அதாவது 36% வட்டி வீதத்தில் நான்கு மாதத்திற்கு சவீதாவுக்கு கடன் வழங்க சம்மதிக்கிறாா்.

சவீதாவும் அறுவடைக் காலத்தில் அவருடைய நிலத்தில் நாளொன்றுக்கு ரூ.100க்கு விவசாயக்கூலியாளாக வேலை செய்வதாக வாக்குறுதியளிக்க வேண்டியுள்ளது. நீயே சொல்லி விடலாம் இது மிகவும் குறைவான கூலி என்று. தன்னுடைய சொந்த நிலத்தில் அறுவடை வேலையை செய்து முடிக்க மிகவும் கஷ்டப்பட்டு உழைத்தாக வேண்டுமென்றும் பிறகு ஒரு விவசாய கூலியாளாக தேஜ்பாலுக்காக உழைக்க வேண்டியுள்ளதென்றும் சவிதாவுக்கு தெரியும். அறுவடை நேரமென்பது வேலைமிகுந்த காலமாகும். மூன்று குழந்தைகளுக்கு தாயாக இருப்பதால், அப்பெண்மணிக்கு குடும்பப் பொறுப்புகளும் அதிகம் உள்ளன. ஒரு சிறிய விவசாயியானவா் கடனைப் பெறுவதென்பது கடினமான செயல் என்பது சவீதாவுக்கு தெரிந்திருப்பதால், அவா் இத்தகைய கடினமான நிபந்தனைகளுக்கு சம்மதிக்கிறாா்.

சிறிய விவசாயிகளின் இந்த நிலைமைக்கு மாறாக, நடுத்தர மற்றும் பெரிய விவசாயிகள் பொதுவாக, விவசாயத்திலிருந்து கிடைத்த சொந்த சேமிப்பை கொண்டிருப்பா். அதனால் அவா்களால் விதைகள், உரம், பூச்சி கொல்லி, கூலியாட்களுக்கான பணம் அதாவது விவசாயத்திற்கான செயல்படு மூலதனத்தை ஏற்பாடு செய்துக்கொள்ள முடிகிறது. இந்த விவசாயிகளால் சொந்த சேமிப்பை எவ்வாறு பெற முடிகிறது அதற்கான விடையை நீங்கள் அடுத்த பகுதியில் காணலாம்.

இவ்வூரிலுள்ள அனைத்து பெரிய விவசாயகளிடத்திலும் டிராக்டா் இருக்கிறது. அவா்கள் தங்களுடைய நிலங்களை உழுவதற்கும், விதைப்பதற்கும் இதை பயன்படுத்துகின்றனா், மேலும் இதர சிறிய விவசாயிகளுக்கு இந்த டிராக்டரை வாடகைக்கு விடுகின்றனா். அவா்களில் பெரும்பாலோரிடம் மிதிக்கடிக்கும் இயந்திரமும், சிலரிடம் அறுவடை இயந்திரமும் உள்ளன. இத்தகைய எல்லா விவசாயிகளும் தங்களுடைய நிலங்களுக்காக நீா்ப்பாய்ச்சிக்கொள்ள பல குழாய்கிணறுகளை அமைத்துக் கொண்டுள்ளனா். இத்தகைய கருவிகள், இயந்திரங்கள் ஆகிய அனைத்தும் விவசாயத்திற்கான நிரந்தர மூலதனமாக விளங்குகிறது.

## விவசாயிக்கு ஏற்படும் உபரியும், நஷ்டமும்

உற்பத்தியின் மூன்று காரணிகளையும் உபயோகித்து விவசாயிகள் தங்களது நிலங்களில் கோதுமையை விளைவித்ததாக நாம் வைத்துக்கொள்வோம். குடும்பத்தின் உபயோகத்திற்காக/நுகா்வுக்காக அக்கோதுமையில் ஒரு பகுதியை அவா்கள் தம்மிடமே வைத்துக் கொண்டு மிகுதியானதை விற்றுவிடுவா். சவீதா, கோவிந்தனின் மகன்கள் போன்ற சிறிய விவசாயிகளுக்கு மிகக்குறைந்தளவே மிகுதியாகும், ஏனெனில் அவா்களின் மொத்த உற்பத்தியே குறைவானது மற்றும் அதிலிருந்து பெரும்பகுதியை தங்களின் சொந்த குடும்பத் தேவைக்காக வைத்துக்கொள்வா். ஆகவே, பொதுவாக, மொத்தவிற்பனை மண்டிகளுக்கு கோதுமையை அனுப்பி அவற்றை நிறைவு செய்பவா்கள் நடுத்தர மற்றும் பெரிய விவசாயிகள் தான். சந்தை வளாகத்திலுள்ள வியாபாரிகள் கோதுமையை வாங்கி, அதை சிறு நகரங்களிலும், பெரு நகரங்களிலுமுள்ள கடைக்காரா் களுக்கு மீண்டும் விற்பா்.


படம் 8.4. தானியங்கள் விற்பனைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

பெரிய விவசாயியான தேஜ்பால் என்பவருக்கு தனது எல்லா நிலங்களிலிருந்தும் 350 குவிண்டால் கோதுமை உபரியாக கிடைக்கிறது. அவா் தனது உபரி கோதுமையை ராய்கஞ்சிலுள்ள சந்தை வளாகத்தில் விற்று நல்ல வருவாயைப் பெறுகிறாா்.

தேஜ்பால் தனது வருவாயைக் கொண்டு என்ன செய்கிறாா்? சென்ற வருடம் தேஜ்பால் அதிகமான பணத்தை தனது வங்கி கணக்கில் சேமித்து வைத்தாா். பிறகு, சவிதா போன்ற



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கடன் தேவைப்படும் விவசாயிகளுக்கு கடன் கொடுக்க அந்த சேமிப்பை அவர் பயன்படுத்திக் கொண்டார். மேலும் அடுத்தாண்டு விவசாயத்திற்கு தேவைப்படும் செயப்படு மூலதனத்தின் ஏற்பாட்டிற்காக கூட அவர் அந்த சேமிப்பைப் பயன்படுத்திக்கொண்டார். இவ்வாண்டு தேஜ்பால் தனது வருவாயைக் கொண்டு மற்றொரு டிராக்டரை வாங்க திட்டமிட்டுள்ளார். அண்டை கிராமங்களில் டிராக்டர்களை வாடகைக்கு விடுவதென்பது ஒரு நல்ல தொழிலாக உள்ளது. இன்னொரு டிராக்டரால் அவரது நிரந்தர மூலதனமும் அதிகரிக்கும்.

தேஜ்பால் போன்ற இதர பெரிய மற்றும் நடுத்தர விவசாயிகளும் உபரி விவசாய உற்பத்திகளை விற்கின்றனர். அவ்வருவாயின் ஒரு பகுதியை அடுத்த பருவத்திற்கான மூலதனமாக உள்ளீடுகளை வாங்குவதற்காக, சேமித்துவைத்துக் கொள்கின்றனர். கால்நடைகள், சரக்கு வண்டிகள் ஆகியவற்றை வாங்கவும், கடைகளை வைக்கவும். சில விவசாயிகள் சேமிப்பைப் பயன்படுத்துவதுண்டு. இவைகள் விவசாயமல்லாத செயல்களுக்கு மூலதனமாக அமைகின்றன.

### உற்பத்திக்கான உபரியும், மூலதனமும்

- மூன்று விவசாயிகளை எடுத்துக் கொள்வோம். அவர்கள் ஒவ்வொருவரும் தன்னுடைய நிலத்தில் கோதுமையைப் பயிரிடுகின்றனர். ஆயினும் 2-வது கட்டத்தில் காட்டியபடி விளைச்சலானது வேறுபடுகிறது.

வெவ்வேறு விவசாயிகள் எதிர்க்கொள்ளும் நிலைமைகளை அலசி ஆராயும்போது, சில நிலைமைகள் மாறாமல் அதே வகையில் இருப்பதாக நாம் நினைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

1. ஒவ்வொரு விவசாய குடும்பமும் நுகரும் கோதுமையின் அளவு ஒன்றே (3வது கட்டம்)
2. எல்லா விவசாயிகளும், இவ்வாண்டின் உபரி கோதுமை மொத்தத்தையும் அடுத்த ஆண்டு உற்பத்தியின் செயல்படு மூலதனமான விதையாக பயன்படுத்திக் கொள்கின்றனர். ஏனெனில் அவ்வாறு செய்ய அவர்கள் அனைவருக்கும் நிலமுள்ளது.
3. எல்லா நிலங்களிலும் உற்பத்திக்காக பயன்படுத்திய செயல்படு மூலதனத்திற்கு இரட்டிப்பாக உற்பத்தி விளைச்சல் இருப்பதாகக் கொள்வோம். அதேபோல் உற்பத்தியிலும் திடீர் நஷ்டம் இல்லையென நினைப்போம்.

**விவசாயி 1**

| ஆண்டு | உற்பத்தி | நுகர்வு | உபரி= உற்பத்தி நுகர்வு | அடுத்த ஆண்டுக்கான மூலதனம் |
|---|---|---|---|---|
| ஆண்டு1 | 100 | 40 | 60 | 60 |
| ஆண்டு 2 | 120 | 40 | | |
| ஆண்டு 3 | | 40 | | |

**விவசாயி 2**

| ஆண்டு | உற்பத்தி | நுகர்வு | உபரி | அடுத்த ஆண்டுக்கான மூலதனம் |
|---|---|---|---|---|
| ஆண்டு 1 | 80 | 40 | | |
| ஆண்டு 2 | | 40 | | |
| ஆண்டு3 | | 40 | | |

**விவசாயி 3**

| ஆண்டு | உற்பத்தி | நுகர்வு | உபரி | அடுத்த ஆண்டுக்கான மூலதனம் |
|---|---|---|---|---|
| ஆண்டு 1 | 60 | 40 | | |
| ஆண்டு 2 | | 40 | | |
| ஆண்டு 3 | | 40 | | |

- கடந்த ஆண்டுகளில் மூன்று விவசாயிகளும் உற்பத்தி செய்த கோதுமையை ஒப்பிடு
- 3-வது விவசாயிக்கு 3ஆம் ஆண்டில் என்ன நேரிட்டது? அவர் உற்பத்தியை தொடர இயலுமா? உற்பத்தியை தொடர வேண்டுமானால் அவர் என்ன செய்தாக வேண்டும்?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com





*படம் - 8.5 தேயிலையும், இரப்பரும். இப்பண்ணைப் பகுதிகள் தேயிலை, காபி, ரப்பர் தோட்டங்களையும், பழத்தோட்டங்களையும் கொண்டுள்ளன.*

அவர்கள் இன்னும் கூடுதலாக நிலத்தை வாங்கவும் கூடும்.

நிலத்தின் செயற்பாடுகளில் முக்கியமாக வெள்ளம், பூச்சித்தாக்குதல் ஆகிய காரணங்களால் பயிர்கள் சேதமடையும் போது அவ்வப்போது நஷ்டம் ஏற்படுவதுண்டு. அடுத்த அபாயம் வேளாண் உற்பத்திகளின் விலையில் ஏற்படும் திடீர் சரிவாகும். அத்தகையை நிலைமைகளில் விவசாயிகள் தாங்கள் செலவிட்ட பணிசெய் மூலதனத்தை திரும்பப் பெறுவதென்பது கடினமாகும்.

### ராம்பூரில் விவசாயமல்லாத செயற்பாடுகள்

முதன்மை உற்பத்தி செயலான விவசாயத்துடன் சில விவசாயம் சாராத உற்பத்தி செயற்பாடுகளும் உள்ளன. ராம்பூரில் வேலை செய்வோரில் 25 சதவீத மக்கள் மட்டும் வேளாண் தொழில் அல்லாத வேறு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

### பால்பண்ணை - பொதுவான மற்றொரு தொழில்

ராம்பூரிலுள்ள பல குடும்பங்களில் பால் உற்பத்தியென்பது பொதுவாக காணப்படும் ஒரு தொழிலாகும். பல்வேறு வகையான புற்கள், ஜோவர் மற்றும் மழைக்காலங்களில் பயிராகும் பாஜ்ரா தீவனங்கள் ஆகியவற்றைக் கொடுத்து மக்கள் எருமைமாடுகளை வளர்க்கின்றனர், கிடைக்கும் பாலை ராய்கஞ்சில் விற்கின்றனர். ஜஹாங்கிராபாத்தைச் சேர்ந்த இரு வியாபாரிகள் சேமிப்புடன் கூடிய குளிர்விப்பு மையங்களை ராய்கஞ்சில் நிறுவியுள்ளனர். அங்கிருந்து புலந்த்சார், புது டில்லி போன்று தொலைதூர இடங்களுக்கு பால் அனுப்பிவைக்கப்படுகிறது. இச்செயற்பாட்டின் உற்பத்திக்காரணிகள் சுருக்கமாக இவ்வாறு விவரிக்கப்படுகிறது.

**நிலம் :** ஊரிலுள்ள சொந்த கொட்டகை

**உழைப்பு :** குடும்ப உழைப்பு, குறிப்பாக பெண்கள் எருமைகளை கவனித்துக் கொள்கின்றனர்.

**நிரந்தர மூலதனம் :** மாட்டுத் சந்தையில் வாங்கப்பட்ட எருமை மாடுகள்.

**செயல்படு மூலதனம் :** அவர்களுடைய நிலத்திலிருந்து தீவனம், சில மருந்துப் பொருட்களை வாங்குதல்.

### ராம்பூரில் சிறிய அளவு உற்பத்தி பொருட்கள் :

தற்சமயம், ராம்பூரில் ஐம்பதுக்கும் குறைவான மக்களே பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். நகரங்களிலும், பெருநகரங்களிலுமுள்ள பெரிய தொழிற்சாலைகளில் நடைபெறும் பொருள் உற்பத்தியைப் போல் அல்லது, ராம்பூரில் பொருள் உற்பத்தியானது எளிய உற்பத்தி முறைகளைக் கொண்டும், சிறிய அளவிலும் நடைபெறுகிறது. அவைகள் பெரும்பாலும் வீடுகளிலும், வயல்பகுதிகளிலும் குடும்ப உழைப்பின் உதவியைக் கொண்டு



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

நடைபெறுகின்றன. கூலியாட்களை வேலைக்கு அமர்த்திக் கொள்வதென்பது அபூர்வம்.

மிஸிரிலால் என்பவர் மின்சாரத்தால் இயங்கக்கூடிய கரும்பு பிழியும் இயந்திரமொன்றை வாங்கியுள்ளார். அதைக்கொண்டு அவர் வெல்லம் தயாரிக்கிறார். முன்பெல்லாம் எருதுகளைப் பயன்படுத்தி கரும்பு பிழிந்தெடுக்கப்பட்டது. ஆனால் இந்நாட்களில் மக்கள் இயந்திரங்களைக் கொண்டு அதை செய்துக் கொள்ளவே முற்படுகின்றனர்.

- மிஸிரிலாலுக்கு இந்த தொழில் முறைக்கு எவ்வித நிரந்தர மூலதனம் தேவைப்பட்டது?
- இதற்கு உழைப்பை அளிப்பவர் யார்?
- மிஸிரிலால் தனது இலாபத்தை எதற்காக அதிகரித்துக் கொள்ள முடியவில்லை? அவர் எப்பொழுது நஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அதற்கான காரணங்களைக் குறித்து யோசி.
- மிஸிரினால் வெல்லத்தை தன்னுடைய ஊரில் இல்லாமல் ஜவராங்கீராபாத்தில் எதற்கு விற்கிறார்?

மிஸிரிலால் தான் பயிரிட்ட கரும்பை தானே பயன்படுத்திக்கொள்வதுடன், மற்ற விவசாயிகளிடமிருந்தும் கரும்பை வாங்கி வெல்லம் தயாரிக்கிறார். பிறகு அவ்வெல்லத்தை ஜஹாங்கீராபாத்திலுள்ள வியாபாரிகளுக்கு விற்கிறார். இந்த தொழில் முறையில் மிஸிரிலால் சிறிது இலாபம் ஈட்டுகிறார்.

**ராம்பூரின் கடைக்காரர்கள் :**

பண்டமாற்று வணிகத்தில் ஈடுபடும் மக்கள் ராம்பூரில் அதிகம்பேர் இல்லை. ராம்பூர் வணிகர்கள் பெருநகரங்களிலுள்ள மொத்த வியாபார அங்காடிகளிலிருந்து பல்வேறு சரக்குகளை வாங்கி வந்து அவற்றை கிராமத்தில் விற்பர். அரிசி, கோதுமை, சர்க்கரை, தேயிலை, எண்ணெய், பிஸ்கட்டுகள், சோப்பு, பற்பசை, பேட்டரிகள், மெழுகுவர்த்திகள், நோட்டு புத்தகங்கள், பேனா, பென்சில், சிலவகை துணி ஆகிய பலதரப்பட்ட பொருட்களை பேனா, பென்சில், சிலவகை துணி ஆகிய பலதரப்பட்ட பொருட்களை அக்கிராமத்திலுள்ள சில சிறிய பல சரக்கு கடைகள் விற்று வருகின்றன.

பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் வீடுகளை வைத்துள்ள சில குடும்பங்கள், சிறிய கடைகளை வைத்துக்கொள்வதற் கேற்றவாறு ஒரு பகுதியை பயன்படுத்திக் கொண்டுள்ளன. தேநீர், சமோசா, பஜ்ஜி, வடை, சில இனிப்புவகைகள், மிட்டாய்கள், குளிர்பானங்கள் போன்ற திண்பண்டங்களையும், நொறுக்குத்தீனிகளையும், அவர்கள் விற்கின்றனர். பெண்கள், குழந்தைகளென குடும்பத்திலுள்ள அனைவரும் வேலையில் பங்கெடுத்துக் கொள்கின்றனர். நம் நாட்டில் பெரும்பாலான மக்கள் விவசாயிகளாகவும், கடை வைத்திருப்போராகவும், தள்ளுவண்டி விற்பனையாளராகவும் என சொந்த தொழில் செய்பவராக உள்ளனர். அவர்களும் முதலாளிகளே, ஏனெனில், உற்பத்தி செய்ய பொருட்களை அல்லது சேவையை அவர்கள் திட்டமிட வேண்டியுள்ளது. நிர்வகிக்க வேண்டியுள்ளது. ஆபத்தைக் எதிர்க்கொள்ள வேண்டியுள்ளது. அதே நேரத்தில் அவர்கள் அவ்வுற்பத்தி செயல் முறையை நிர்வகிக்க தங்கள் சொந்த உழைப்பையும் அளிக்கின்றனர்.

- யாருடைய இடத்தில் இந்தக்கடைகள் அமைந்துள்ளன?
- திண்பண்டங்களை விற்கும் இத்தகைய சிறிய கடைகளுக்கு உழைப்பை நல்குபவர் யார்?
- இவ்வகை கடைகளுக்கு தேவைப்படும் செயல்படும் மூலதனம் என்ன என்பதை ஆலோசனை செய்
- நிரந்தர மூலதன இனங்களை பட்டியலிடு.
- உன்னுடைய பகுதியிலுள்ள ஒரு தள்ளுவண்டி விற்பனையாளரிடம் அவரின் தினசரி விற்பனையை அறிந்துக்கொள். ஏதேனும் சேமிப்பு இருப்பின் அதை எவ்வாறு அறிவாய்? உனது ஆசிரியரிடம் விவாதி.

சில கடைக்காரர்கள், கிராமத்திலுள்ளவர்கள் தயாரிக்கும் பொருட்களை வாங்கி அவற்றை பேரூர்களிலும், சிறுநகரங்களிலும் உள்ள அங்காடிகளுக்கு அனுப்பி வைக்கின்றனர். உதாரணத்திற்கு மாவுமில் வைத்திருக்கும் நபர் கிராமத்திலுள்ள சிறிய விவசாயிடமிருந்து கோதுமையை வாங்கி அதை ராய்கஞ்ச் கடைத்தெருவில் விற்பனை செய்வதுண்டு. மாவு அரவையும், வணிகமும் இருவேறு தொழில்களாகும்.

**போக்குவரத்து: வேகமாக வளர்ந்துவரும் ஒரு துறை**

பல்வேறு சாலை போக்குவரத்து வாகனங்கள், ராம்பூரை ராய்கஞ்சுடன் இணைக்கின்றன. ரிக்ஷாக்காரர்கள், குதிரைவண்டிக்காரர்கள், ஜீப், டிராக்டர், சரக்கு வண்டி ஆகியவற்றின் ஓட்டுநர்கள்,



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

மற்றும் பாரம்பரிய மாட்டு வண்டி, போகி போன்றவற்றை ஓட்டும் மக்கள் ஆகியோர் போக்குவரத்து சேவைகளில் ஈடுபட்டிருக்கும் மக்களாவர். அவர்கள் ஆட்களையும், பொருட்களையும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு ஏற்றிச் செல்வர். அதற்கு ஈடாக அவர்கள் கூலி பெற்றுக்கொள்வர். கடந்த பல ஆண்டுகளாக போக்குவரத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களின் எண்ணிக்கையானது அதிகரித்துள்ளது.

- கிஷோராவின் நிரந்தர மூலதனம் யாது?
- அவருடைய செயல்படு மூலதனம் எதுவாக இருக்குமென் நீ நினைக்கிறாய்?
- கிஷோரா எத்தனைவிதமான உற்பத்தி செயல்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்?
- ராம்பூரிலுள்ள மேலான சாலைகளினால் கிஷோரா பயனடைந்தாரென நீ கூறுகிறாயா?

கிஷோரா என்பவர் ஒரு விவசாய கூலியாள். தன்னையொத்த இதர கூலியாட்களைப் போன்று, தனக்கு கிடைக்கும் கூலியைக் கொண்டு, தனது குடும்பத்தின் தேவையை ஈடுசெய்வதற்கு கிஷோரா மிகவும் சிரமப்பட்டார். சில ஆண்டுகளுக்கு முன்பு கிஷோரா வங்கியிலிருந்து கடன் பெற்றார். நிலமற்ற ஏழை குடும்பங்களுக்கு எளிய கடன்களை வழங்கும் ஒரு அரசு திட்டத்தின் கீழ் இது வழங்கப்பட்டது.

இப்பணத்தைக் கொண்டு கிஷோரா ஒரு எருமையை வாங்கினார். அவர் இப்பொழுது எருமையை பால் கறந்து விற்கிறார். மேலும் அவர் கட்டை வண்டி ஒன்றுக்கு அவ்வெருமை மாட்டைப் பூட்டி பல்வேறு பொருட்களை கொண்டுச் செல்வதற்காக அதைப் பயன்படுத்திக் கொள்கிறார். வாரத்திற்கு ஒருமுறை கங்கையாற்றிற்கு வண்டியை ஓட்டிச் சென்று குயவர்களுக்காக களிமண்ணை கொண்டு வந்து சேர்க்கிறார். அல்லது சில சமயங்களில் வெல்லம் அல்லது இதர சரக்குககளின் பொதியுடன் ஜவராங்கீராபாத்திற்கு செல்கிறார்.

ஒவ்வொரு மாதமும் ஏதோ ஒரு போக்குவரத்து வேலையை அவர் பெறுகிறார். அதன் விளைவாக, சில ஆண்டுகளுக்கு முன்பு அவர் சம்பாதித்ததைவிட கிஷோராவால் இப்பொழுது அதிகம் சம்பாதிக்க முடிகிறது.

**பாடச்சுருக்கம் :**

விவசாயம் என்பது கிராமங்களில் முதன்மையான உற்பத்திச் செயலாக விளங்குகிறது. ஆண்டுகள் செல்லச்செல்ல விவசாயம் செய்யும் முறைகளில் பல்வேறு முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. இம்மாற்றங்களினால் விவசாயி அதே அளவு நிலத்திலிருந்து அதிகபடியான விளைச்சலை பெற்றுவருகிறான். இதுவே ஒரு முக்கியமான சாதனையாகும், ஏனெனில், நிலமானது நிலையானது மட்டுமின்றி அரிதானதும் கூட ஆயின் உற்பத்தியை அதிகரிக்க நிலமும், இதர இயற்கை வளமூலங்களும் மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுகின்றன. எனவே, உற்பத்தி முறைகளைக் குறித்து மறு பரிசீலனை செய்ய வேண்டியதும், மூலவளங்களை நிலையாக தொடர்ந்து பயன்படுத்திக்கொள்வதை, உறுதி செய்ய வேண்டியதும் உடனடியாக அவசியமாகிறது.

விவசாயத்திற்கு இப்பொழுது அதிக முதலீடு தேவைப்படுகிறது. நடுத்தர மற்றும் பெரிய விவசாயிகளால் முந்தைய உற்பத்தியின் வாயிலாக கிடைத்த தம் சொந்த சேமிப்பைக் கொண்டு அடுத்த பருவதற்கான முதலீட்டை ஏற்பாடு செய்துக்கொள்ள முடிகிறது. இன்னொரு புறம், இந்தியாவிலுள்ள மொத்த விவசாயிகளில் 87 சதவீதமாக அமைந்துள்ள சிறிய விவசாயிகள் முதலீட்டைப் பெற மிகுந்த சிரமப்படுகின்றனர். அவர்களுடைய சிறிய அளவு நிலத்தின் காரணமாக, அவர்களுடைய உற்பத்தியும் போதுமானதாக இல்லை. உபரியில்லாமைக்குக் காரணம் அவர்களால் தங்களுடைய சொந்த சேமிப்பிலிருந்து முதலீட்டை பெற இயலாமையாலும் மற்றும் அவர்கள் கடன் வாங்க வேண்டியவர்களாக உள்ளதாலும் மற்றும் அவர்கள் கடன் வாங்க வேண்டியவர்களாக உள்ளதாலும் ஆகும். கடனுக்காகவும் குறைந்த வருமானத்தின் காரணமாகவும், சிறிய விவசாயிகளில் பலர் விவசாய கூலியாட்களாக கூடுதலாக வேலை செய்ய வேண்டிய நிர்பந்தத்தில் உள்ளனர்.

உற்பத்தியின் காரணியான உழைப்பு மிக அபரிமிதமாக இருக்கிறது. எனவே புதிய வழிமுறைகளைக் கொண்ட விவசாயம், மிக அதிகளவில் உழைப்பை பயன்படுத்திக்கொள்ளும் விதமாக இருப்பின் அது உயர்வானதாக இருக்கும்.

துரதிருஷ்டவசமாக, அத்தகையது நடைபெறவில்லை. விவசாய வேலைகளில் பயன்படுத்தப்படும் உழைப்போ ஒரு வரம்புக்குட்பட்டது. இதனால் வாய்ப்புகளை எதிர்நோக்கியுள்ள உழைக்கும் வர்க்கத்தினர் பக்கத்து கிராமங்களுக்கோ, சிறு நகரங்களுக்கோ, பெருநகரங்களோ குடிபெயருகின்றனர். சில வேலையாட்கள் கிராமங்களில் உள்ள விவசாயம் சாராத துறையில் நுழைந்துள்ளனர்.

தற்பொழுது, கிராமங்களில் விவசாயம் சாராத துறையாக மிகப்பெரிய அளவில் ஏதும் இல்லை. கிராமங்களில் விவசாயம் சாராத தொழில்களை பலவாறாக இருப்பினும் (ஒருசில உதாரணங்களையே நாம் கண்டோம்), அவை ஒவ்வொன்றிலும் வேலையில் ஈடுபட்டிருப்போரின் எண்ணிக்கை மிகக்குறைவு. 2009-2010ஆம் ஆண்டில் இந்தியாவில் கிராமப்புற பகுதிகளில் ஒவ்வொரு 100 தொழிலாளர்களில் 32 பேர் விவசாயம் சாராத தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். இவ்வெண்ணிக்கையானது பல்வேறு திட்டங்களின் ஒரு பகுதியான MNREGA வின் கீழ் பணியாற்றும் தொழிலாளர்களையும் உள்ளடக்கியதாகும். கிராமப்புற தொழிலாளர்களின் வருமானத்திற்கு MNREGA சிலவகையில் உறுதுணையாக உள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

எதிர்காலத்தில், கிராமங்களில் மேலும் அதிகமான விவசாயமல்லாத உற்பத்தி செயல்கள் நடைபெற வேண்டுமென விரும்புகின்றனர். விவசாயம் போன்றல்லது, விவசாயமல்லாத தொழில்களுக்கு சிறிதளவே இடம் தேவைப்படுகிறது. சிறிதளவு மூலதனத்தைக் கொண்டுள்ள மக்கள் விவசாயமல்லாத தொழில்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இந்த முதலீட்டை அவர்கள் எவ்வாறு பெறுகின்றனர்? தனது சொந்த பணத்தை இதற்கு ஒருவர் உபயோகித்துக் கொள்வர். ஆனால் பெரும்பாலும் கடன் வாங்கிக்கொள்ள வேண்டியவர்களாயுள்ளனர். குறைந்த வட்டி வீதத்தில் கடன் கிடைக்க வேண்டுமென்பது மிக முக்கியமானது. அப்பொழுது தான் சொந்த கைப்பணம் இல்லாத மக்கள் கூட விவசாயமல்லாத தொழிலை ஆரம்பிக்க முடியும். விவசாயமல்லாத தொழில்களை விரிவாக்கம் செய்வதற்கும், தயாரித்த பொருட்களையும், சேவைகளையும் விற்பதற்குரிய சந்தைகள் இருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததென்பது இன்னொரு முக்கியமான விஷயமாகும். ராம்பூரில் தயாராகும் பால், வெல்லம், கோதுமை இவைகள் விவசாயம் சார்ந்த பொருட்கள் முதலியவைகளுக்கு அண்டை கிராமங்களும், சிறு நகரங்களும், பெரு நகரங்களும் விற்பனைக்குரிய சந்தைகளை அளிக்கிறது. மேலும் பல கிராமங்கள், நல்ல சாலை வசதிகளாலும், போக்குவரத்தாலும் மற்றும் தொலைப்பேசிகளாலும் சிறு நகரங்களுடனும், பெரு நகரங்களுடனும் இணைக்கப்பட்டிருப்பதால், வருங்காலங்களில் கிராமங்களில் விவசாயமல்லாத தொழில்களின் உற்பத்தி அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் சாத்தியமாகும்.

## முக்கியச் சொற்கள்

உற்பத்தி காரணிகள், நிலம் உழைப்பு    செயல்படு    மூலதனம்

நிரந்தர மூலதனம்    உபரி விவசாய செயற்பாடுகள்    விவசாயம் சாரா செயற்பாடுகள்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. பத்தாண்டுகளுக்கொருமுறை மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்போது இந்தியாவிலுள்ள ஒவ்வொரு கிராமத்தில் பொதுவான நிலைமைகள் ஆராயப்பட்டு, அவ்விவரங்கள் கீழ்கண்ட படிவத்தில் அளிக்கப்படுகின்றன. ராம்பூரைக் குறித்த தகவலின் அடிப்படையில் கீழ்கண்டவற்றை நிரப்பு.(AS3)
   a. இருப்பிடம்
   b. கிராமத்தின் மொத்த பரப்பு
   c.உபயோகத்திலுள்ள நிலப்பகுதி (ஹெக்டேர்களில்)

| பயிரிடப்படும் நிலப்பகுதி | | விவசாயத்திற்கு உட்படாத நிலம்பகுதி (வசிப்பிடங்கள், சாலைகள், குளம், குட்டைகள், மேய்ப்பிடங்கள் உள்ளடக்கிய பகுதி) |
|---|---|---|
| நீர்ப்பாசனம் உடையது | நீர்ப்பாசனம் அற்றது. | |
| | | 26 ஹெக்டேர்கள் |

| வசதிகள் | |
|---|---|
| கல்வி | |
| மருத்துவம் | |
| சந்தை | |
| மின்சாரம் | |
| தகவல் தொடர்பு | |
| அண்டை சிறுநகரம் | |



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

2. ராம்பூரில் விவசாய கூலியாட்களுக்கான கூலிகள் குறைந்த பட்ச கூலிகளை விட குறைவாக இருப்பதேன்?(AS1)
3. உனது பகுதியிலுள்ள இரண்டு கூலியாட்களிடம் உரையாடு.

   விவசாய கூலியாட்கள் அல்லது கட்டுமான இடத்தில் வேலை செய்யும் கூலியாட்கள் ஆகிய இவர்களின் யாரையாவது தேர்ந்தெடுத்துக்கொள். அவர்கள் பெறும் கூலி என்ன? அவர்களுக்கு கூலியானது பணமாக அல்லது பொருளாக வழங்கப்படுகிறதா? அவர்கள் கடனில் உள்ளனரா?(AS3)
4. அதே நிலப்பகுதியைக் கொண்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கான பல்வேறு வழிமுறை யாவை? உதாரணங்களைக் கொண்டு விளக்கு.(AS1)
5. நடுத்தர மற்றும் பெரிய விவசாயிகள் விவசாயத்திற்கான முதலீட்டை எங்ஙனம் பெறுகின்றனர்? சிறிய விவசாயிகளிடமிருந்து இது எவ்வகையில் வேறுபட்டது?(AS1)
6. எந்த நிபந்தனைகளின் பேரில் சவீதா, தேஜ்பாலிடமிருந்து கடன் பெற்றார்? வங்கியிடமிருந்து குறைவான வட்டிவீதத்திற்கு சவீதாவுக்கு கடன் கிடைத்திருந்தால், அவருடைய நிலைமை வேறுவிதமாக இருந்திருக்குமா?(AS1)
7. உனது பகுதியிலுள்ள பெரியவர்களிடம் உரையாடி, கடந்த 30 ஆண்டுகளாக நீர்ப்பாசனங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் உற்பத்தி முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியவற்றைக் குறித்து ஒரு சிறு அறிக்கையாக எழுதுக.(AS3)
8. உனது பகுதியில் நடைபெறும் விவசாயமல்லாத முக்கியமான உற்பத்தி தொழில்கள் யாவை? அத்தகைய ஒரு தொழிலைக் குறித்து சுருக்கமான அறிக்கையொன்றை எழுது.(AS3)
9. நிலத்தை தவிர்த்து, உழைப்பு பற்றாக்குறையாக, உள்ள ஒரு தயாரிப்பின் நிலைமையை கற்பனைச் செய்துக்கொள். ராம்பூரின் கதை வேறுவிதமாக உள்ளதா? எவ்வாறு? வகுப்பில் விவாதி.(AS1)
10. கோசைப்பூர் மற்றும் மஜவுலி ஆகியவை வடக்கு பீகாரில் உள்ள இரண்டு கிராமங்கள். அவ்விருகிராமங்களிலுள்ள 850 குடும்பங்களின் மொத்தத்திலிருந்து 250க்கும் மேற்பட்ட ஆண்கள் பஞ்சாப் மற்றும் அரியானா கிராமப்பகுதிகளிலும், அல்லது டில்லி, மும்பை, சூரத், ஐதராபாத், நாகபூர் ஆகிய இடங்களிலும் வேலையில் உள்ளனர். இந்தியா முழுவதும் பெரும்பாலான கிராமங்களில் இத்தகைய இடப்பெயர்ச்சி என்பது சர்வ சாதாரணம் ஆகும். மக்கள் எதற்காக இடம் பெயருகின்றனர்? முந்தையை பாடத்தையும் உனது கற்பனையையும் அடிப்படையாகக் கொண்டு இடம்பெயர்ந்து கோசைப்பூர், மஜவுலி மக்கள் தாங்கள் சென்றுள்ள இடங்களில் எத்தகைய வேலைகளில் ஈடுபட்டிருப்பரென்பதைக் குறித்து விவரிக்க இயலுமா?(AS4)
11. நகர்புற பகுதிகளில் பொருட்களைத் தயாரிக்க நிலம் கூட அவசியமாகிறது. இங்கு நிலத்தின் பயன்பாடு கிராமப்புற பகுதியிலிருந்து எவ்வகைகளில் வேறுபட்டது?(AS1)
12. உற்பத்தி செயல்முறையில் நிலம் என்பதன் பொருள் குறித்து மீண்டும் படித்தறி. தயாரிப்பு செயல்முறையில் இதன் தேவை எங்கு முக்கியமானதாக உள்ளேதா, அதைக்குறித்த (விவசாயத்தை தவிர்த்து)மூன்று உதாரணங்களைத் தருக.(AS1)
13. உற்பத்தி செயல்முறையில் குறிப்பாக விவசாய உற்பத்தியில் இயற்கை நீருக்கு தற்காலத்தில் அதன் பயன்பாட்டிற்காக அதிக மூலதனம் தேவைப்படுகிறது. இக்கூற்றை விவரிப்பாய்.(AS2)



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்

9

# உலகமயமாதல்







a & b) பள்ளிக்கு சென்று கொண்டிருக்கின்றனர். c) பள்ளிக்கூடத்தின் நுழைவாயில் d) வகுப்பறையில் e) கரும்பலகை அருகே ஆசிரியை. இணையதளம் வசதி உங்களுக்கு கிடைப்பதாக இருந்தால், கீழ்காணும் இணைப்பு மூலம் இவ்விளம்பரம் முழுவதையும் கவனமாய் பாருங்கள்.

http://www.youtube.com/watch?v=VHYtShXI510

மேலே நீங்கள் பார்க்கும் படங்கள், லண்டனில் வெளியாகும் ஒரு செய் வாரஇதழுக்கான விளம்பரமாகும். இவ்வார இதழ் இந்தியாவில் அதிக சந்தாக்காரர்களை பெறுவதற்கு முயற்சித்து வருகிறது. இந்திய வாசகர்களை ஈர்ப்பதற்கு, சீனா போன்ற நாடுகள், இந்தியாவை நோக்கி கவனத்தை திருப்பியிருக்கின்றன என்றும், இந்திய மொழிகளை கற்று வருகின்றன என்னும் எண்ணத்தை பரிந்துரைப்பதைப் போல் உள்ளது. இந்திய வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்களுடன் தகவல் பரிமாற்றத்திற்கும் இந்தியாவிற்கு வந்து வேலை செய்ய விரும்பும் தொழிலாளிகளுக்கு பயிற்சி கொடுக்கும் நோக்கமாகவும் இருக்கலாம். இவ்வாறாக, இந்த விளம்பரத்தில் நீங்கள் பல்வேறு பரிமாணங்களை காணமுடியும். சீனர்கள் இந்திய மொழியை கற்றிட முயற்சிக்கின்றனர் என்றும், சீனர்கள் இந்தியாவில் தங்கள் பொருட்களை விற்றிட விரும்புகின்றனர் என்றும், அவர்களுடைய தொழிலாளிகளை இந்தியாவிற்கு அனுப்புகின்றனர் என்றும், இந்திய கூட்டாளிகளுடன் வியாபாரம் செய்கின்றனர் என்றும், பல்வேறுபட்ட பரிமாணங்களை அது காட்டுகிறது.

உலகமயமாதல் என்பது, இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட மிகப்பெரிய உலக அளவிலான மாற்றம் ஆகும். இதற்கு அரசியல், கலாச்சார பொருளாதார பரிமாணங்கள் உள்ளன. இந்த அம்சங்களில் சிலவற்றை குறித்து IX மற்றும் VIII ஆம் வகுப்புகளில் சேவைத்துறை குறித்து படித்தபோது கற்றுக்கொண்டீர்கள். சேவைத்துறையை சேர்ந்த அழைப்பு மையங்கள் போன்றவற்றில் புதுவேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன.



Downloaded from https:// www.studiestoday.com

SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

இதன் அம்சங்கள் குறித்து, நீங்கள் 8 & 9ஆம் வகுப்புகளில் சேவைத்துறை குறித்து பாடப்பகுதியில் கற்றுக்கொண்டீர்கள். இச்சேவைத்துறையில் அழைப்புமையங்கள் நிறுவப்படும் இடங்களில் புதிய வேலைவாய்ப்புகள் தோன்றுகின்றன என்றும் கற்றுக்கொண்டீர்கள். நாட்டின் பொருளாதார சந்தையில் பெருமளவு எண்ணிக்கையில் நுகர்வோரின் பொருட்கள் கிடைக்கின்றன என்பதையும் அறிவீர்கள்.

- கைபேசி அல்லது வாகனம் போன்ற ஏதாவது ஒரு தனித்த பொருளை தேர்ந்தெடுங்கள். அப்பொருளைத் தயாரிக்கும் பல்வேறு கம்பெனிகள் மற்றும் அவற்றின் பெயர்களை அடையாளம் காணுங்கள். அவற்றை இந்திய நிறுவனம் தயாரிக்கிறதா அல்லது வெளிநாட்டில் தயாரிக்கப்படுகிறதா, என்பதை கண்டறியுங்கள்.

பன்னாட்டு பொருளாதார பரிமாற்றத்தில், நாம் மூன்று வகையான இயக்கங்களை காணமுடியும். முதலாவது, பொருட்கள் மற்றும் சேவைகளின் வாணிபம் நடைபெறுதல். இரண்டாவது உழைப்பு அதாவது வேலைவாய்ப்பைத் தேடிச் செல்லும் மக்கள் இடப்பெயர்ப்பு. மூன்றாவது, முதலீட்டின் இயக்கம். இது தொலைதூரங்களில் இருந்து பெறும் குறுகிய கால மற்றும் நீண்டகால முதலீடுகளை குறிக்கிறது. இவற்றுடன் உலகமயமாதலின் அரசியல் மற்றும் கலாச்சார பரிமாணங்களும் உள்ளன. எடுத்துக்காட்டாக, சென்ற ஆண்டு, டுனீஷியா மற்றும் எகிப்து போன்ற மேற்கு ஆசியா, வடக்கு ஆப்பிரிக்காவின் பல நாடுகள், ஒன்றுக்கொன்று புரட்சிகளாலும், சர்வாதிகாரத்தை வேருடன் களைவதிலும் ஊக்கமும், செல்வாக்கும் பெற்றன. ஊடகங்களில் இது 'அரேபியரின் வசந்தம்' என குறிப்பிடப்பட்டது. இந்நாடுகளில் ஊடகங்கள் புரட்சிக்கு மிகவும் முக்கிய பங்காற்றின. இதர நாடுகளில், மக்களுக்கு சொந்தமான மற்றும் நிர்வகிக்கப்பட்ட தொலைக்காட்சி அலைவரிசைகள் புரட்சி கருத்துக்கள் பரவிட ஆதரவு கொடுத்தன. இது உள்நாட்டு தலைவர்களின் அதிகாரங்களை ஒழுங்கமைக்க வழிவகுத்தது. உள்நாட்டுப்போர் போன்ற நிகழ்வுகள், சுனாமி போன்ற இயற்கை பேரிடர்கள் குறித்து தேசிய எல்லைக்குள் விவாதிக்கப்பட்டபோது, அவற்றிற்கு உலகெங்கிலும் இருந்து ஆதரவும், அனுதாபமும் கிடைத்தன.

## 19ஆம் நூற்றாண்டில் உழைப்பு இடம்பெயர்தல்

உலகமயமாதல் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உண்டான சம்பவம் என்று பலர் கருதுகின்றனர். தற்போதுள்ள உலகமயமாதல் கடந்த முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளில் உருவானது. உலகின் நாடுகள் இணைக்கப்பட்ட போது, உலக வரலாற்றில் முக்கிய கட்டங்கள் நிகழ்ந்தன. இவற்றின்படி அவர்கள் கருத்து உண்மையானதே. 19ஆம் நூற்றாண்டு, விரைவான வெளிநாட்டு வாணிபம், வெளிநாட்டு முதலீடு மற்றும் உழைப்பு இடம்பெயர்தல் முதலியவற்றை கண்டது. பொருட்கள் மற்றும் முதலீட்டின் இயக்கத்தைப் போன்று உழைப்பின் இடமாற்றம் அவ்வளவு சுலபமானது அல்ல என்றாலும், ஐரோப்பாவில் இருந்து அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவிற்கு 50மில்லியன் மக்கள் குடிப்பெயர்ந்து சென்றனர் என மதிப்பீடு செய்யப்பட்டது. உலகம் முழுவதும் 150மில்லியன் மக்கள், தங்களின் தாய்நாடுகளை விட்டு வெளியேறினர் எனவும் மதிப்பிடப்பட்டது. லட்சக்கணக்கான இந்தியர் மற்றும் சீன தொழிலாளிகள், குடியேற்ற ஆட்சி திட்டத்தின் பகுதியாக, உலகெங்கும் அமைந்திருந்த தோட்டங்கள், சுரங்கங்கள், சாலை மற்றும் இருப்புப்பாதை கட்டுமான திட்டங்கள் போன்றவற்றில் வேலை செய்திட இடம் பெயர்ந்து சென்றனர். இவர்களில் பெரும்பாலோர் ஒப்பந்தமுறையில் குடிபெயர்ந்தவர்களாக இருந்தனர். ஒப்பந்த முறையில் குடிபெயர்ந்தவர்கள் கொத்தடிமை தொழிலாளர்களாக கருதப்பட்டனர். ஒப்பந்தத்தின்படி ஒரு முதலாளியிடம், அவர்கள் ஒருகுறிப்பிட்ட காலத்திற்கு, புதிதாக குடியேற நாட்டிற்கு வந்திடவும் அல்லது தாய்நாட்டிற்கு சென்றிடவும் செலுத்தவேண்டிய தொகைக்கு வேலை செய்ய வேண்டியிருந்தது. இந்தியாவில் இருந்து குடிபெயர்ந்து சென்றவர்கள் முக்கியமாக கரீபியன் தீவுகள், மொரீசியஸ்தீவு, பிஜி, மலாயா மற்றும் இலங்கை முதலிய இடங்களில் வேலை செய்து பிழைத்தனர். அப்பகுதிகளில் வாழும் மற்றும் வேலைசெய்யும் சூழ்நிலைகள் பலசமயங்களில் கடுமையாக இருந்தன. சட்டப்படியான சில உரிமைகள் இருந்தன. பெரும்பாலான குடிபெயர்ந்தோர், தாங்கள் சென்ற நாடுகளிலேயே நிரந்தரமாக தங்கிவிட்டனர். இவ்வாறாக, பல்வேறு கலாச்சாரங்களின் கலவைகள் உருவாயின.

தற்போதைய உலகமயமாதலில், அப்போதிருந்த பெருமளவு தொழிலாளர்களின் இடப்பெயர்ப்பு போல ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். தற்போது, தொழில்செய்வோரின் குடிபெயர்ப்பு தேவையாக உள்ளது. ஆனால், இது பல சமயங்களில் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்படுவதால், சர்ச்சைக்குரியதாகி உள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**இந்த பாடத்தில் உலகமயமாதலின் பொருளாதார அம்சங்கள் மீது பெரும்பாலான நமது கவனம் செலுத்தப்பட உள்ளது. உலகமயமாதல் கடந்த முப்பது முதல் நாற்பது ஆண்டுகளாக சிறகை விரித்து பரவி வருகிறது.**

## உலக நாடுகளில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி

இருபதாம் நூற்றாண்டின் பாதிவரை உற்பத்தி, நாடுகளுக்குள் செய்யப்பட்டன. கச்சாப்பொருட்கள், உணவு தானியங்கள் மற்றும் இறுதியாக்கப்பட்ட பொருட்கள் மட்டுமே நாடுகளின் எல்லைகளை தாண்டிச் சென்றன. இந்தியா போன்ற குடியேற்ற நாடுகள் கச்சாப் பொருட்கள் மற்றும் உணவு தானியங்களை ஏற்றுமதி செய்தன. இறுதியாக்கப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்து கொண்டன. தொலைதூரத்து நாடுகளை இணைக்கும் பாதையாக வாணிபம் விளங்குகிறது. இந்த நிலை, பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் தோன்றுவதற்கு முன்பு இருந்தது. பன்னாட்டு வர்த்தக நிறுவனம் என்பது சொந்தமாக உற்பத்தி நிலையங்களையும், ஒன்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள அவற்றின் உற்பத்தியை கட்டுப்படுத்தும் அமைப்பு ஆகும். இப்பன்னாட்டு நிறுவனங்கள் தங்களுடைய அலுவலகங்கள் மற்றும் தொழிலகங்களை எங்கெல்லாம் மலிவான தொழிலாளிகள் மற்றும் இதர வளங்கள் கிடைத்தனவோ, அங்கெல்லாம் நிறுவி இயக்கின. இதனால், உற்பத்திச் செலவுகள் குறைந்தது. பன்னாட்டு நிறுவனங்கள் அதிக லாபம் ஈட்ட முடிந்தது.

கீழ்காணும் எடுத்துக்காட்டை கவனியுங்கள். ஒரு பன்னாட்டு வர்த்தக நிறுவனம் தொழிற்சாலை உபகரணங்கள் உற்பத்தி செய்யும் தன் பொருட்களின் வடிவமைப்பு குறித்து அமெரிக்காவில் உள்ள ஆராய்ச்சி மையங்களில் மேற்கொள்கிறது. இயந்திர பாகங்களை சீனாவில் தயாரிக்கிறது. பின்பு அவற்றை மெக்ஸிகோ மற்றும் கிழக்கு ஐரோப்பிய பகுதிகளுக்கு அனுப்புகிறது. அங்கு அவை இணைக்கப்படுகின்றன. இறுதியாக்கப்பட்ட பொருட்கள், உலகம் முழுவதும் அனுப்பப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இதனுடன் இந்நிறுவனத்தின் வாடிக்கையாளருக்கான சேவை, இந்தியாவில் உள்ள அழைப்பு மையங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. உலக வரைபடத்தில் இந்நாடுகளை அடையாளம் காணுங்கள்.

மேற்கண்ட எடுத்துக்காட்டில், பன்னாட்டு வர்த்தக நிறுவனம் இறுதியாக்கப்பட்ட பொருட்களை உலகளவில் விற்பனை செய்வது மட்டுமின்றி, மிகவும் முக்கியமாக பொருட்களும், சேவைகளும் உலகளவில் உற்பத்தியாகின்றன என்பதை கண்டோம். இதன் விளைவாக, உற்பத்தி பல்வேறு சிக்கலான முறைகளில் நிர்வகிக்கப்படுகின்றன. உற்பத்தி முறைகள் பல்வேறு சிறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு, உலகம் முழுவதும் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்கண்ட எடுத்துக்காட்டில், மலிவான உற்பத்தி இடத்தை அளித்தது. மெக்ஸிகோ மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள், உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிற்கு அருகில் அமைந்துள்ளன. வாடிக்கையாளர் சேவை செய்திட, ஆங்கிலம் பேசும் இளைஞர்கள் இந்தியாவில் உள்ளனர். இவை அனைத்தும், பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் உற்பத்தி செலவை 50 முதல் 60 விழுக்காடு சேமித்து தருகின்றன. உற்பத்தியை நாட்டின் எல்லை தாண்டி பல நாடுகளுக்கு பரப்புவதால் ஏற்படும் நன்மை உண்மையிலேயே பெருமளவில் விளைகின்றது.

## உலக நாடுகளை உற்பத்தி மூலம் இணைத்தல்

பொதுவாக, பன்னாட்டு நிறுவனங்களின் செயல்பாடுகளை மேற்கொள்ள, இடத்தை தேர்ந்தெடுக்க பின்பற்றப்படும் திட்ட அளவைகளாவன: சந்தைகளுக்கு சமீபத்தில் இருத்தல், மலிவான விலையில் திறனுள்ள மற்றும் திறனற்ற தொழிலாளிகள் கிடைக்கும் அளவு, உற்பத்தியின் இதர காரணிகள் கிடைப்பதன் உத்தரவாதம், அவற்றின் நலனைகாக்கும் அரசாங்க கொள்கைகள் முதலியனவாகும். பன்னாட்டு வர்த்தக நிறுவனம், நிலம், கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கிட செய்யும் செலவை வெளிநாட்டு முதலீடு எனப்படும். எந்த ஒருமுதலீடும், அச்சொத்துக்களால் லாபம் ஈட்டமுடியும் என்னும் நம்பிக்கையுடன் செய்யப்படுகின்றன.

பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள், இந்நாடுகளின் உள்ளூர் நிறுவனங்களுடன் கூட்டாக உற்பத்தியை மேற்கொள்கின்றன. உள்ளூர் நிறுவனங்கள் கூடுதலான முதலீடுகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் கொண்டு வரும் நவீன தொழில் நுட்பம் போன்றவற்றால் பயனடைகின்றன. ஆனால் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் முதலீட்டை பெறும் மிகவும் பொதுவான வழி, உள்ளூர் தொழிலகங்களை விலைக்கு வாங்குதல், அதன்பின்பு உற்பத்தியை விரிவுபடுத்துதல் முதலியனவாகும். பெருஞ்செல்வத்தை கொண்ட பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் இதை மிகவும் எளிதாக செய்திடமுடியும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




எடுத்துக்காட்டாக, கார்கில் புட்ஸ் ஒரு மிகப்பெரிய அமெரிக்க பன்னாட்டு வர்த்தக நிறுவனமாகும். இந்நிறுவனம், இந்தியாவில் உள்ள பரக்புட்ஸ் போன்ற சிறு நிறுவனங்களை விலைக்கு வாங்கி கொண்டது. பரக்புட்ஸ் நிறுவனத்திற்கு நான்கு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் மற்றும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பெரிய அளவில் விற்பனை அமைப்பை கொண்டிருந்தது. இந்நிறுவனத்தின் பொருட்களுக்கு நன்மதிப்பும் இருந்தது. இந்நிறுவனத்தை சொந்தமாக்கி கொண்டதால், கார்கில் நிறுவனம் தற்போது இந்தியாவில் மிகப்பெரிய சமையல் எண்ணெய் உற்பத்தி நிறுவனமாகி உள்ளது.

பல்வேறு முன்னணி பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள், வளர்ந்து வரும் நாடுகளின் அனைத்து செலவு திட்டங்களின் மதிப்பை காட்டிலும் அதிக செல்வத்தை கொண்டுள்ளன. அவ்வாறான பெருமளவு செல்வத்தை கொண்ட பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் அதிகாரம் மற்றும் செல்வாக்கு குறித்து கற்பனை செய்து பாருங்கள்.

பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் உற்பத்தியை கட்டுப்படுத்தும் மற்றொரு வழியும் உள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ள பெரிய பன்னாட்டு நிறுவனங்களை சிறிய உற்பத்தியாளர்களுக்கு பணி உத்தரவுகளை அளிக்கின்றன. ஆடைகள், காலணிகள், விளையாட்டு பொருட்கள் போன்றவற்றை தயாரிக்கும் தொழிலகங்கள் பெருமளவு உற்பத்தியை உலகம் முழுவதும் செய்து தருகின்றன. இந்த உற்பத்தி பொருட்கள் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களுக்கு அளிக்கப்படுகின்றன. பிறகு அவை தங்கள் நிறுவனங்களின் பெயர்களில் வாடிக்கையாளர்களுக்கு விற்கப்படுகின்றன. இப்பெரிய பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் உற்பத்தியாளர்களுக்கு விலை, தரம், கொண்டு சேர்த்தல் மற்றும் தொழிலாளர் நிலைமைகள் போன்றவற்றை நிர்ணயிக்கும் அதிகளவு அதிகாரத்தை பெற்றுள்ளன. இதன் விளைவாக, பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் உற்பத்திகள் பரவலாக அனுப்பப்படுகின்றன. பல்வேறு இடங்களிலுள்ள தொழிலகங்கள் இணைக்கப்படுகின்றன.

ஃபோர்டு மோட்டார்ஸ், ஒரு அமெரிக்க நிறுவனம், இது உலகிலேயே வாகனங்களை பெருமளவு தயாரிக்கும் நிறுவனங்களில் ஒன்று. இந்நிறுவனத்தின் உற்பத்தி 26 நாடுகளில் பரவியுள்ளது. ஃபோர்டு மோட்டார்ஸ் நிறுவனத்தின் மிகப்பெரிய தொழிலகம் இந்தியாவில் 1995ஆம் ஆண்டு, 1700கோடி ரூபாய் செலவில் சென்னைக்கு அருகே நிறுவப்பட்டது. இது இந்தியாவில் ஜீப்புகள் மற்றும் ட்ரக்குகளை தயாரிக்கும் பெரிய நிறுவனமான மஹேந்திரா & மஹேந்திரா என்னும் நிறுவனத்துடன் கூட்டாக நிறுவப்பட்டதாகும். ஃபோர்டு மோட்டார்ஸ் நிறுவனம் 2004ஆம் ஆண்டில் 27000கார்களை இந்திய சந்தையில் விற்பனை செய்தது. மேலும், இந்தியாவில் இருந்து 24,000 கார்கள் தென்ஆப்பிரிக்கா, மெக்ஸிகோ மற்றும் பிரேஜில் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்நிறுவனம் ஃபோர்டு இந்தியா கிளையை, கார்பாகங்களை உற்பத்தி செய்து உலகம் முழுவதும் அமைந்துள்ள அதன் இதர தொழிலகங்களுக்கு விநியோக மையமாக மேம்படுத்த விரும்புகிறது.



- ஃபோர்டு மோட்டார்ஸ் நிறுவனத்தை ஒரு பன்னாட்டு வர்த்தக நிறுவனம் என்று நீங்கள் கூறமுடியுமா? ஏன்?
- வெளிநாட்டு முதலீடு என்றால் என்ன? ஃபோர்டு மோட்டார்ஸ் இந்தியாவில் எவ்வளவு முதலீடு செய்தது?



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

- ஃபோர்டு மோட்டார்ஸ் போன்ற பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள், அவற்றின் தொழிலகங்களை இந்தியாவில் அமைப்பதன் மூலம், இந்தியாவின் மாபெரும் சந்தையை பெறுவது மட்டுமின்றி குறைவான உற்பத்தி செலவையும் தட்டிச்செல்கின்றன. இக்கூற்றை விவரியுங்கள்.
- இந்த கார் உற்பத்தி நிறுவனம், இந்தியாவை கார் பாகங்களை தயாரிக்கும் அடிப்படை பகுதியாக உலகளாவிய செயல்களுக்காக அபிவிருத்தி செய்ய விரும்புவது ஏன்? கீழ்காணும் காரணிகளை விவாதியுங்கள்.

  (a) இந்தியாவில் உழைப்பாளர் மற்றும் வளங்களின் விலை.

  (b) ஃபோர்டு மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு இயந்திர பாகங்களை தயாரித்து வழங்க பல்வேறு உள்நாட்டு தயாரிப்பாளர்கள் இருப்பது.

  (c) இந்தியா மற்றும் சீனாவில் வாங்குவோருக்கு அருகாமையில் இருத்தல்.
- இந்தியாவில் ஃபோர்டு மோட்டார்ஸ் கார்களை உற்பத்தி செய்வது, எவ்வழிகளில் நாட்டின் உற்பத்தியோடு தொடர்புடையது?
- பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் எவ்வாறெல்லாம் இதர வர்த்தக நிறுவனங்களில் இருந்து வேறுபடுகின்றன?
- பெரும்பாலான பன்னாட்டு நிறுவனங்களின் நைக், கொக்கோ– கோலா, பெப்சி ஹோண்டா, நோக்கியா போன்றவை அமெரிக்கா, ஜப்பான் அல்லது ஐரோப்பிய நாடுகளை சேர்ந்தவையே உள்ளன. இது ஏன் என்று உங்களால் யூகிக்க முடிகிறதா?

## வெளிநாட்டு வாணிபம் மற்றும் சந்தைகளின் ஒருங்கிணைப்பு

நீண்ட காலமாக, நாடுகளை இணைக்கும் முக்கிய சாதனமாக வாணிபம் விளங்குகிறது. இந்தியா, தெற்கு ஆசியாவின் கிழக்கு மற்றும் மேற்கு திசைகளில் உள்ள சந்தைகளை இணைக்கும் வணிகப் பாதைகளை குறித்து நீங்கள் வரலாற்றில் படித்திருப்பீர்கள். இவ்வணிகப் பாதைகள் வழியாக பரவலாக வாணிபம் நடந்தது என்று அறியமுடிகிறது. வாணிப ஆர்வத்தின் காரணமாக, கிழக்கிந்திய கம்பனி போன்ற பல்வேறு வாணிப நிறுவனங்கள் இந்தியாவுடன் வர்த்தக தொடர்பை ஏற்படுத்தி கொண்டன என்பதை நீங்கள் நினைவு படுத்திக்கொள்ளுங்கள். வெளிநாட்டு வாணிபத்தின் அடிப்படை செயல் என்னவாக அப்போது இருந்திருக்கும்?

வெளிநாட்டு வாணிபம் உற்பத்தியாளர்களுக்கு உள்நாட்டு சந்தையை கடந்து இதர நாடுகளின் சந்தையை அடைய வாய்ப்புகளை உருவாக்கி தருகிறது. அதைப்போலவே, வாங்குபவர்களுக்கு உள்நாட்டில் உற்பத்தியான பொருட்கள் மட்டுமின்றி வெளிநாட்டு பொருட்களும் தேர்ந்தெடுத்து பயன்படுத்த வெளிநாட்டு வாணிபம் விரிவான வாய்ப்பை தருகிறது. இவ்வாறாக, வெளிநாட்டு வாணிபம் மற்றும் பன்னாட்டு சந்தைகள் இணைக்கப்படுகின்றன அல்லது பல்வேறு நாடுகளில் சந்தைகளின் ஒருங்கிணைப்பிற்கு வழிவகுக்கிறது.

- பண்டைக் காலத்தில் நாடுகளை இணைத்திடும் முக்கியமான வழி யாது? தற்போது அது எவ்வாறு வேறுபட்டுள்ளது?
- வெளிநாட்டு வாணிபம் மற்றும் வெளிநாட்டு முதலீடு இடையேயுள்ள வேறுபாடு யாது?
- சமீப ஆண்டுகளாக, இந்தியாவில் இருந்து இரும்பு எஃகை சீனா இறக்குமதி செய்து வருகிறது. இரும்பு எஃகை, சீனா இறக்குமதி செய்வதால் பின்வரும் கருத்துமீது ஏற்படும் பாதிப்பு யாது?

  (a) சீனாவில் உள்ள இரும்பு எஃகு தொழிற்சாலைகள்

  (b) இந்தியாவில் உள்ள இரும்பு எஃகு தொழிற்சாலைகள்

  (c) இரும்புஎஃகை வாங்கி இதர தொழிற்சாலைகளுக்கு தேவையான பொருட்களை தயாரிக்கும் சீன தொழிற்சாலைகள்.
- இந்தியாவில் இருந்து இரும்பு எஃகு சீனாவிற்கு ஏற்றுமதி செய்தல் எவ்வாறு இரு நாட்டுச்சந்தைகளை ஒருங்கிணைத்திட வழிவகுக்கும்?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

சீன உற்பத்தியாளர்கள் பிளாஸ்டிக் பொம்மைகளை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்ய தொடங்கிவிட்டனர். இந்தியாவில் உள்ள நுகர்வோருக்கு இந்திய மற்றும் சீன பொம்மைகளை தேர்ந்தெடுத்து பயன்படுத்தும் வசதி ஏற்பட்டுள்ளது. புதிய வடிவமைப்புகள் மற்றும் மலிவான விலைகளாலும், இந்திய சந்தையில் சீன பொம்மைகள் பிரபலமாகி விட்டன. ஒரு வருடத்திலேயே, 70 முதல் 80 சதவீத பொம்மைக்கடைகள், இந்திய பொம்மைகளுக்கு பதிலாக சீன பொம்மைகளை விற்க முனைந்துள்ளனர். முன்பைவிட, தற்போது இந்திய சந்தையில் பொம்மைகள் மிகவும் மலிவாக கிடைக்கின்றன. சீனநாட்டின் பொம்மை தயாரிப்போருக்கு இவ்வியாபாரம், அவர்களின் விற்பனையை விரிவுபடுத்த வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு எதிர்மாறாக, இந்திய பொம்மை தயாரிப்போர் நிலை உள்ளது. போட்டியின் விளைவாக, சில இந்திய உற்பத்தியாளர்கள் புதியவற்றை உருவாக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வேறு சிலரோ நசிந்துவிட்டனர்.

### பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் மற்றும் உலகமயமாதல்

கடந்த முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளாக, அதிகமான பன்னாட்டு நிறுவனங்கள், உலகம் முழுவதும் தங்கள் கிளைகளை நிறுவ இடங்களை தேடிவருகின்றன. அவர்களின் உற்பத்தியை மலிவாக செய்திட ஏற்ற பகுதிகளை நாடின. அதற்கேற்ற நாடுகளில், பன்னாட்டு நிறுவனங்களின் வெளிநாட்டு முதலீடு விரைவாக அதிகரித்து வருகிறது. அதே சமயத்தில் நாடுகளிடையே வெளிநாட்டு வாணிபமும் விரைவாக உயர்ந்து வருகிறது. வெளிநாட்டு வாணிபத்தின் பெரும்பகுதி பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக, இந்தியாவில் உள்ள ஃபோர்டு மோட்டார்ஸ் (ford motors) நிறுவனத்தின் உற்பத்தி கிளை, இந்திய சந்தைக்கு தேவையான கார்களை உற்பத்தி செய்வது மட்டுமின்றி, இதர வளர்ந்துவரும் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறது. உலகம் முழுவதும் உள்ள அதன் உற்பத்தி கிளைகளுக்கு கார் பாகங்களையும் ஏற்றுமதி செய்கிறது. இதைப்போன்றே, பெரும்பாலான பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள், பொருட்கள் மற்றும் சேவைகளின் கணிசமான வாணிப செயல்களில் ஈடுபட்டுள்ளன.




அதிக அளவிலான வெளிநாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டு வாணிபம் முதலியவை பெருமளவு உற்பத்தி மற்றும் நாடுகளின் சந்தைகளை ஒன்றுபடுத்தும் விளைவை ஏற்படுத்தி உள்ளன. உலகமயமாதல் என்பது இவ்வாறான முறையில் நாடுகளை விரைவாக ஒன்று திரட்டுதல் (அ) நாடுகளிடையே இணைப்பை உண்டாக்குவதாகும். பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் உலகமயமாதல் ஏற்படுவதில் பெரும்பங்கை வகிக்கின்றன. உலக நாடுகளிடையே பெருமளவில் பொருட்களும், சேவைகளும், முதலீடுகள் மற்றும் தொழில்நுட்பமும் பரிமாற்றம் நடக்கின்றது. கடந்த சில பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட, உலகின் பெரும்பாலான பகுதிகள் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருக்கின்றன. முதலீடு, மக்கள், தொழில்நுட்பம் போன்றவற்றின்பரவல் எல்லையற்ற உலகை உருவாக்கியுள்ளன. இதன் விளைவாக, நாடுகள், வாழ்வின் பல்வேறு அம்சங்கள் குறித்து முடிவுசெய்து அதிகாரத்தை இழந்துவிட்டன. எடுத்துக்காட்டாக, பணத்தின் மதிப்பு குறித்து முக்கிய முடிவுகளை அந்தந்த நாடுகள் செய்ய வேண்டியதை வல்லரசுகள் செய்கின்றன. பணத்தின் மதிப்புஅரசின் கட்டுபாட்டுக்கு வெளியே செய்யப்படுகின்றன. பலசமயங்களில் பன்னாட்டு சந்தைகளை கையாள்வோராலும் சந்தை விசைகளாலும் நிர்ணயிக்கப்படுகின்றன. இதில் நாடுகளின் கட்டுப்பாடு மிகவும் குறைவு.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

- உலகமயமாதல் ஏற்படுவதில் பன்னாட்டு நிறுவனங்களின் பங்கு யாது?
- உலக நாடுகளை இணைத்திடும் பல்வேறு வழிமுறைகள் யாவை?
- சரியான விடையை தேர்ந்தெடு.

நாடுகளை இணைத்து உலகமயமாதல் ஏற்படுவதன் விளைவுகள் பின்வருமாறு.

(a) உற்பத்தியாளர்களிடையே குறைவான போட்டி.

(b) உற்பத்தியாளர்களிடையே மிக அதிகமான போட்டி.

(c) உற்பத்தியாளர்களிடையே எந்த மாற்றமும் இருக்காது.

## உலகமயமாதலை உருவாக்கிய காரணிகள்

### தொழில்நுட்பம்

உலகமயமாதல் நிகழ்வதற்கு ஊக்கப்படுத்திய, பெரும் காரணிகளில் விரைவான தொழில்நுட்ப முன்னேற்றம் ஒன்றாகும். எடுத்துக்காட்டாக, கடந்த ஐம்பது ஆண்டுகளில் போக்குவரத்து தொழில்நுட்பத்தில் பல்வேறு முன்னேற்றங்களை காணமுடிந்தது. அதன் விளைவாக, பொருட்களை நீண்ட தூரங்களுக்கு குறைவான செலவில் கொண்டு போய் சேர்த்திட முடிந்தது.

தகவல் மற்றும் செய்தி தொடர்பு துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் மிகவும் விரைவாகவும், குறிப்பிடதக்கதாகவும் உள்ளது. தொலைத்தொடர்பு தகவல் வசதிகள், (தந்திமுறை, தொலைபேசி, கைப்பேசி, ஃபேக்ஸ்) உலகம் முழுவதும் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளவும், தகவல்களை உடனுக்குடன் பெறவும், தொலைதூரத்தில் இருந்தும் தகவல்களை பரிமாறிக்கொள்ளவும் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வசதிகள் செயற்கைக்கோள் தகவல் தொடர்பு கருவிகள் மூலம் செய்துதரப்பட்டுள்ளன. தற்போது எல்லா துறைகளின் செயல்களிலும் கணினிகள் பரவலாக பயன்படுத்தப்படுகின்றன. இணையதளம் என்னும் பிரமிப்பூட்டும் உலகோடு நீங்கள் தொடர்புகொண்டிருப்பீர்கள். இதன் மூலம் நீங்கள் அறிய விரும்புகின்ற எந்த தகவலாக இருந்தாலும், தகவல்களை பெறவும், பகிர்ந்து கொள்ளவும் முடிகிறது. இணையதளம் வாயிலாக நாம் உடனடியாக மின்னஞ்சல் (E-mail) அனுப்பவும் முடிகிறது. உலகம் முழுவதும் உள்ளவர்களோடு மிகக்குறைந்த செலவில் குரல்அஞ்சல் மூலம் பேசவும் (Voice mail) முடிகிறது.




*இருபது ஆண்டுகளுக்கு முன்பு :*
*நகர்புற இந்தியா : கணினி மூலம் நாம் விரைவான தொடர்புகளை பெற்றோம்.*
*கிராமப்புற இந்தியா : இன்னமும் மின்சாரவெட்டு உள்ளது.*
*தற்போது : நகர்புற இந்தியா : நாங்கள் இணையதளத்தை கைப்பேசிகளிலும் பெறமுடிகிறது.*
*கிராமப்புற இந்தியா : 3ஜி மற்றும் 4ஜி என்றால் என்ன? நிலையான தொடர்புகளை பெறுவதற்கு இன்னமும் போராடிவருகிறது.*



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

லண்டன் வாசகர்களுக்காக வெளியாகும் ஒரு செய்தி வாரப் பத்திரிக்கை, டில்லியில் வடிவமைக்கப்பட்டு, அச்சடிக்கப்படுகிறது. இதில் அச்சாக வேண்டிய அம்சங்கள் இணையதளம் வழியாக, டில்லியில் உள்ள அலுவலகத்திற்கு அனுப்பப்படுகின்றன. இவ்வாரப்பத்திரிக்கையை எவ்வாறு வடிவமைக்கவேண்டும் என்பது குறித்த வழிமுறைகள், லண்டனில் உள்ள அலுவலகத்திலிருந்து, டில்லியிலுள்ள வடிவமைப்போருக்கு, தகவல் தொடர்பு வசதியை பயன்படுத்தி அனுப்பப்படுகிறது. வடிவமைப்பு கணினியின் உதவியால் செய்யப்படுகிறது. அச்சடித்தல் முடிந்தபிறகு, அவ்வாரப் பத்திரிக்கைகள் விமானம் மூலம் லண்டனுக்கு அனுப்பப்படுகின்றன. வடிவமைத்தல் மற்றும் அச்சடித்தல் பணிகளுக்கான பணம் லண்டனில் உள்ள வங்கியில் இருந்து, டில்லியிலுள்ள வங்கிக்கு உடனடியாக மின்வங்கியியல் மூலம் செய்யப்படுகிறது.

- இந்த எடுத்துக்காட்டில் உற்பத்தி செயலில் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டதை விவரிக்கும் சொற்களை கோடிட்டு காட்டு.
- தகவல் தொழில்நுட்ப அறிவு எவ்வாறு உலகமயமாதலோடு தொடர்புடையது? தகவல்தொழில் நுட்பத்தின் பரவல் இல்லாமல், உலகமயமாதல் சாத்தியமாகி இருக்குமா?

## வெளிநாட்டு வாணிபம் மற்றும் வெளிநாட்டு முதலீட்டு கொள்கைகளை தாராளமயமாக்கல்

சீனநாட்டின் பொம்மைகளின் இறக்குமதி குறித்து மீண்டும் பரிசீலிப்போம். இந்திய அரசாங்கம் பொம்மைகள் இறக்குமதி மீது வரிவிதிக்கிறது என்று உத்தேசமாக எண்ணுவோம். வரிவிதிக்கப்படுவதால், இறக்குமதி செய்யப்பட்ட பொம்மைகளை வாங்குவோர், அதிக விலை செலுத்த வேண்டியிருக்கும். இந்திய மார்க்கெட்டில், சீன பொம்மைகளை மலிவாக விற்கமுடியாது. சீனாவில் இருந்து இறக்குமதி தானாகவே குறைந்துவிடும்.

இறக்குமதி மீது வரிவிதித்தல் என்பது வாணிப தடைக்கு ஒரு எடுத்துக்காட்டு. இதை வியாபார தடைஎனக்கூற காரணம், சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதே ஆகும். வெளிநாட்டு வாணிபத்தை அதிகரிக்க அல்லது குறைக்க, ஒழுங்குமுறைபடுத்த அரசாங்கம் வாணிபதடை முறைகளை பயன்படுத்தலாம். பொருட்கள் ஒவ்வொன்றையும் எந்த அளவிற்கு நாட்டிற்குள் வரவிட வேண்டும் என்பதையும் நிர்ணயிக்கும்.

இந்திய அரசாங்கம் விடுதலைக்குபின், வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளின் மீது தடைவிதித்தது. உள்நாட்டு உற்பத்தியாளர்களை வெளிநாட்டு போட்டியில் இருந்து பாதுகாக்க, இத்தடைகள் அவசியமானதாக கருதப்பட்டன. தொழிற்சாலைகளை 1950 மற்றும் 1960 ஆண்டுகளில் வளர்ச்சியடைய தொடங்கின. இறக்குமதியால் ஏற்படும் போட்டியை, அத்துவக்க நிலையில் இருந்த தொழிற்சாலைகள் தாக்கு பிடித்திருக்கமுடியாது. எனவே, இந்திய அரசாங்கம் அத்தியாவசிய பொருட்களான இயந்திரங்கள், உரங்கள், பெட்ரோலியம் முதலியவற்றின் இறக்குமதியை அனுமதித்தது. வளர்ச்சியடைந்துள்ள எல்லா நாடுகளும், மேம்பாட்டின் துவக்க நிலைகளில், அவற்றின் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு பல்வேறு குறைகளில் பாதுகாப்பை அளித்தன.

1991ஆம் ஆண்டு துவக்கத்தில், இந்திய அரசின் கொள்கையில் மாற்றங்கள் செய்யப்பட்டன. இந்திய உற்பத்தியாளர்கள், உலகின் இதர உற்பத்தியாளர்களோடு போட்டியிடவேண்டிய நேரம் வந்துவிட்டது என்று இந்திய அரசாங்கம் முடிவுசெய்தது. போட்டி சூழ்நிலை உள்நாட்டில் உற்பத்தியாளர்களின் செயல்திறனை மேம்படுத்தும் என்று கருதப்பட்டது. அவர்கள் தங்கள் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இம்முடிவை சக்தி வாய்ந்த பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் ஆதரித்தன.

இவ்வாறாக, வெளிநாட்டு வாணிபம் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டன. இதன்படி, பொருட்களை சுலபமாக இறக்குமதி, ஏற்றுமதி செய்திடலாம். வெளிநாட்டு வர்த்தக நிறுவனங்கள் நம் நாட்டில் தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்களை அமைத்திட முடியும்.

அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட தடைகள் அல்லது கட்டுப்பாடுகளை நீக்குவதை தாராளமயமாக்கல் என்பர். தாராளமயமாக்கியதால், வர்த்தகம் செய்வோர், எவற்றை



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

உற்பத்தி செய்யவேண்டும் அல்லது ஏற்றுமதி செய்யவேண்டும் அல்லது இறக்குமதி செய்யவேண்டும் என்பவை குறித்து சுதந்திரமாக முடிவுகள் எடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கம் முன்பை விட தற்போது மிகவும் குறைவான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இதனால் மிகவும் தாராளமயம் பின்பற்றப்படுகிறது எனலாம்.

உலகமயமாதலுக்கு உண்மையில் எது தூண்டுதலாக உள்ளது என்று நம்மை நாம் கேட்டுக்கொள்ளவேண்டும். இது ஒரு அரசியல் முடிவா? அல்லது பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ரீதியான புரட்சியா? உலகமயமாதலை ஆதரிக்கும் பொருளாதார துறையினர், பொருளாதார சக்திகள் தான் உலகமயமாதலுக்கு பொறுப்பாகின்றன என்கின்றனர். அவையே அதனுடைய தடுப்பணைகளாகவும் எல்லைகளாகவும் உள்ளன என்று வாதாடுகின்றனர். அரசியல் துறையை சேர்ந்தோர், உலகமயமாதல் என்பது அரசாங்கத்தின் முடிவுகள் தான், அவை உலகமயமாதலை முன்னிலை இயக்கமாக மாற்றியுள்ளது என வாதாடுகின்றனர். அரசாங்கம் இதன்மீது கட்டுப்பாடுகளையும், விதிமுறைகளையும் விதிக்கின்றன. அரசியல் சூழ்நிலைகள் தான் உலகமயமாதலை கவரும்படியாக அல்லது வெறுக்கக்கூடியதாக செய்கின்றன. பொருளாதார சந்தையின் நிலைமைகள் மட்டுமே காரணமாக உள்ளன என்பதல்ல. எனவே, நாடுகளின் எல்லைகள் இன்னமும் நீடிக்கின்றன என்று கூறலாம். உண்மையில், அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலைகள் இரண்டுமே ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. அரசியல் முடிவுகள் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஏற்கனவே பொருளாதார மற்றும் தொழில்நுட்ப மாற்றங்கள் ஏற்பட்ட சூழ்நிலையில் உலகமயமாதலுக்கு சாதகமாக எடுக்கப்படுகின்றன என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

- வெளிநாட்டு வாணிபத்தில் தாராளமயமாக்கல் குறித்து நீ புரிந்துகொண்டது என்ன?
- இறக்குமதி மீதான வரிவிதிப்பு என்பது ஒரு வகையான வாணிபவரம்பு. இறக்குமதி செய்யக்கூடிய பொருட்களின் எண்ணிக்கையிலும் அரசாங்கம் வரம்பை விதிக்கலாம். இதை ஒதுக்கப்பட்டபங்கு என்பர். சீன பொம்மைகள் இறக்குமதியை எடுத்துக்காட்டாக கொண்டு, ஒதுக்கப்பட்ட பங்கு எவ்வாறு வாணிப வரம்பாக பயன்படுத்தபடலாம் என்பதை நீங்கள் விவரிக்க முடியுமா? இதை பின்பற்றலாம் என்று நீ கருதுகிறாயா? விவாதியுங்கள்.

## உலகளாவிய நிர்வாகத்திற்கான அமைப்புகள்

உலகளாவிய நிர்வாக அமைப்புகள், முக்கியமான அம்சங்கள் குறித்து எடுக்கும் பல்வேறு முடிவுகள் உலகின் பெரும்பான்மை நாடுகள் மீது விளைவை ஏற்படுத்துகின்றன. காலநிலை மாற்றம் இதற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு.

காற்று மண்டலத்திற்குள் கார்பன்களை வெளியிடுவதை குறைக்க மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு துவக்கத்தில் தனிப்பட்ட முறையில் நாடுகளுக்கு ஒதுக்கப்பட்டது, காற்று மண்டலத்திற்குள் கார்பன்கள் வெளியிடப்படுவதை தடுக்க, ஒருநாடு முயற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது, தொழிற்சாலைகள் குறைவான கட்டுபாடுகள் உள்ள வேறு இடங்களுக்கு மாற்றபடலாம் என்று கண்டறியபட்டது. இதன் விளைவாக, காற்றில் வெளியிடப்படும் மாசுக்கள் மற்றும் காலநிலை மாற்றங்கள் போன்ற பிரச்சனைகளை நாடுகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் நிர்வாகம் செய்யும் மற்றொரு நிறுவனமாகிய உலக வர்த்தக நிறுவனத்தை (world trade organization) குறித்து விவரமாக தெரிந்துக்கொள்ளுங்கள்.

## உலக வர்த்தக அமைப்பு [World Trade Organisation (WTO)]

வெளிநாட்டு வாணிபம் மற்றும் முதலீடு மீது இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட தாராமயமாக்கல் நடவடிக்கைகளுக்கு சக்தி வாய்ந்த பன்னாட்டு நிறுவனங்களால் ஆதரித்தன. இந்நிறுவனங்கள் கருத்துப்படி வெளிநாட்டு வாணிபம் மற்றும் முதலீட்டிற்கு தடைகள் தீங்கு விளைவிக்கும். நாடுகளிடையே வாணிபம் தடைகளின்றி சுதந்திரமாக மேற்கொள்ளப்படவேண்டும். உலகவர்த்தக அமைப்பு பன்னாட்டு வணிகத்தை தாராளமயமாக்க வேண்டும் என்பதை இலட்சியமாக கொண்ட அமைப்பாகும். வளர்ச்சியடைந்த நாடுகளின் முன்முயற்சியால் உலகவர்த்தக அமைப்பு துவங்கப்பட்டது. இது பன்னாட்டு வணிகம் தொடர்பான விதிமுறைகளை இயற்றி, அவை எல்லாநாடுகளும் பின்பற்றுமாறு பார்த்துக்கொள்கிறது. தற்போது, உலக வர்த்தக அமைப்பில் ஏறத்தாழ 150நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

உலக வர்த்தக அமைப்பு எல்லா நாடுகளிடையேயும் சுதந்திர வர்த்தகத்தை அனுமதிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தது. ஆனால், நடைமுறையில் வளர்ச்சியடைந்த நாடுகள் நியாயமற்ற முறையில் வர்த்தக தடைகளை தங்களிடமே நிலைநிறுத்திக் கொண்டன. மறுபுறத்தில் உலக வர்த்தக அமைப்பின் விதிமுறைகள், வளர்ந்து வரும் நாடுகள் வாணிப தடைகளை நீக்கிட வேண்டும் என்று வலியுறுத்தின. தற்போது விவாதத்தில் உள்ள விவசாய பொருட்களின் வாணிபம் குறித்த பிரச்சனை இதற்கு ஒரு எடுத்துகாட்டு.

இந்தியாவில், விவசாயத்துறை பெருமளவு வேலைவாய்ப்பை தருகிறது, இதை அமெரிக்கா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளோடு ஒப்பிட்டு பாருங்கள். அமெரிக்க பொருளாதாரத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP)1% கொண்டுள்ளது. அந்நாட்டின் வேலை வாய்ப்பில் விவசாயத்துறையின் பங்கு 0.5% தான் உள்ளது. இச்சிறு எண்ணிக்கை உடைய விவசாயத்துறையினர், அமெரிக்க அரசாங்கத்திடம் இருந்து பெருமளவு நிதியுதவியை பெறுகின்றனர். இது அத்துறையின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கு ஊக்கமளிக்கின்றன. அமெரிக்க விவசாயிகள் இதன் காரணமாக அவர்களின் பண்ணைப் பொருட்களை, வெளிநாடுகளில் மிகுந்த மலிவான விலைகளுக்கு விற்க முடிகிறது. உபரியாக விளையும் பண்ணைப் பொருட்களை மலிவான விலைகளுக்கு விற்பதால், வெளிநாடுகளிலுள்ள விவசாயிகளின் நலன் மோசமாக பாதிக்கப்படுகிறது.

எனவே, வளர்ந்து வரும் நாடுகள், வளர்ச்சியடைந்த நாடுகளிடம் இவ்வாறு கேட்டுவருகின்றன.

நீங்கள் WTOவின் விதிமுறைகளின் படி வியாபாரத் தடைகளை நீக்கிவிட்டோம். ஆனால், நீங்கள் WTOவின் விதிமுறைகளை ஊதாசீனபடுத்திவிட்டு, உங்கள் நாடுகளின் விவசாயிகளுக்கு பெருமளவு நிதியுதவி செய்கிறீர்கள். எங்கள் நாட்டு விவசாயிகளுக்கு ஆதரவு தருவதை நிறுத்தக்கூறினீர்கள். ஆனால் உங்கள் நாட்டு விவசாயிகளுக்கு நிதியுதவி செய்துவருகிறீர்கள். இது சுதந்திரமான (அ) நியாயமான வாணிபமா?

- கோடிட்ட இடங்களை நிரப்புக.
  WTO __________ நாடுகளின் முன்முயற்சியால் துவங்கப்பட்டது. WTO வின் குறிக்கோள் ______. WTO எல்லா நாடுகளிடையேயும் __________ குறித்த விதிமுறைகளை இயற்றுகிறது. நடைமுறையில், நாடுகளிடையேயான வர்த்தகம் ______ஆக இல்லை. இந்தியா போன்ற வளர்ந்த நாடுகள் ______களை நீக்கிவிட்டன. ஆனால், வளர்ச்சியடைந்த நாடுகள் பல்வேறு விஷயங்களில், தங்கள் நாடுகளின் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து பின்பற்றிவருகின்றன.
- நாடுகளிடையே வாணிபம் மிகவும் நியாயமானதாக இருக்கவேண்டுமானால், என்னசெய்யவேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்.
- மேற்கண்ட எடுத்துக்காட்டில், அமெரிக்க அரசாங்கம் விவசாயிகளுக்கு பெருமளவு பணத்தை உற்பத்திக்காக வழங்குகிறது. சில சமயங்களில், சிலவகையான பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்த அரசாங்கம் ஆதரவு தருகிறது. அவை சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பானதாக இருக்கின்றன. இச்செயல்கள் நியாயமானதா, இல்லையா என்பது குறித்து விவாதியுங்கள்.

## இந்தியாவில் உலகமயமாதலால் ஏற்பட்ட தாக்கம்

உலகமயமாதல் மக்களின் வாழ்க்கை மீது ஏற்படுத்தியுள்ள விளைவுகள் யாவை? உலகமயமாதல் நுகர்வோருக்கு நன்மையளிப்பதாக உள்ளது. குறிப்பாக, நகர்புறங்களிலுள்ள செல்வந்த வகுப்பினருக்கு நன்மை தரக்கூடியதாக உள்ளது. இந்நுகர்வோர் முன்பு, பெருமளவு பொருட்கள் தேர்ந்தெடுக்கட குவிந்துள்ளன. தங்களுக்கு தேவையான பொருட்களை மேலான தரமுள்ளவையாகவும், மலிந்த விலைகளிலும் பெற்றிட முடிகிறது. இதன் விளைவாக தற்போது மக்கள் முன்பைவிட உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை பெற்றுள்ளனர். உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிலாளர்களிடையே உலகமயமாதலின் தாக்கம் ஒரே மாதிரியானதாக இல்லை.

முதலாவதாக, பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடுகளை அதிகரித்தது. இந்தியாவில் முதலீடு செய்வது, அந்நிறுவனங்களுக்கு லாபகரமானதாக இருக்கும் என கருதபட்டது. பன்னாட்டு நிறுவனங்கள், கைபேசிகள், வாகனங்கள், மின்சார பொருட்கள், குளிர்பானங்கள், துரித உணவு, தொழிற்சாலைகள் மற்றும் வங்கிகள் போன்ற சேவைத் துறையை நகர்புறங்களில் துவங்கிட ஆர்வம் கொண்டுள்ளன. இப்பொருட்கள், செல்வந்த குடும்பத்தை சேர்ந்த அதிக எண்ணிக்கையிலான வாங்குவோரை பெற்றிருக்கின்றன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இத்தொழிற்சாலைகள் மற்றும் சேவைத்துறைகளில், புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கபட்டன. அத்துடன், இத்தொழிற்சாலைகளுக்கு கச்சாப்பொருட்களை அளித்த உள்நாட்டு தொழிற்சாலைகள் நன்கு வளர்ச்சியடைந்தன.

இரண்டாவதாக, பல்வேறு உயர்ந்த, தலையாய தொழிற்சாலைகள், போட்டி அதிகரித்ததால் பயன்பெற முடிந்தது. அவை புதிய தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தி முறைகள், மீது முதலீடு செய்தன. அவை தங்களின் உற்பத்தி தரத்தை உயர்த்திக்கொண்டன. சில தொழிற்சாலைகள் வெளிநாட்டு நிறுவனங்களோடு கூட்டாக உற்பத்தி செய்தலுக்கு வெற்றிகரமான ஒப்பந்தங்களை பெற்றன.

மேலும், உலகமயமாதலால் இந்தியாவின் சில பெரிய நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்களாக உருவெடுத்தன. டாடா மோட்டார்ஸ் (வாகனங்கள்), இன்போசிஸ் (தகவல் தொழில்நுட்ப அறிவு), ரேன்பாக்ஷி (மருந்து தயாரிப்பு) ஏசியன் பெயிண்ட்ஸ் சுந்தரம், ஃபாஸ்ட்னர்ஸ் (மரைகள் மற்றும் தாழ்ப்பாள்கள்) முதலிய சில இந்திய நிறுவனங்கள், உலகளவில் தங்கள் செயல்களை பரவலாக்கி வருகின்றன.

உலகமயமாதல் சேவைகளை தரும் நிறுவனங்களுக்கு குறிப்பாக தகவல் தொழில் நுட்ப அறிவுத்துறையில் ஈடுபட்டோருக்கு புதுவாய்ப்புகளை உருவாக்கித்தந்தன. லண்டன் நகரை சேர்ந்த நிறுவனத்திற்கு, இந்திய நிறுவனம் செய்தி வாரப்பத்திரிக்கையை உற்பத்தி செய்து தருவது மற்றும் அழைப்பு மையங்கள் முதலியவை சில எடுத்துக்காட்டுகளாகும். இவற்றுடன் தகவல்பதிவு, கணக்கிடுதல், நிர்வாக பணிகள், பொறியியல் பணிகள், முதலியவை தற்போது மலிவான விலைகளுக்கு இந்தியா போன்ற நாடுகளில் இருந்து செய்யப்பட்டு வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்படுகின்றன.

சமீப ஆண்டுகளாக, மத்திய மாநில அரசுகள், இந்தியாவில் வெளிநாட்டு நிறுவனங்கள் முதலீடு செய்வதை கவர்ந்திட சிறப்பு நடவடிக்கைகள் எடுத்துவருகின்றன. தொழிற்சாலை மண்டலங்கள் எனப்படும் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் [Special Economic Zones (SEZs)] அமைக்கப்பட்டுள்ளன. இச்சிறப்பு பொருளாதார மண்டலங்களில் உலகதரம் வாய்ந்த வசதிகள், மின்சாரம், தண்ணீர், போக்குவரத்து, சேமிப்புகிடங்குகள், பொழுதுபோக்கு அம்சங்கள், கல்வி வசதிகள் முதலியவை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். சிறப்பு பொருளாதார மண்டலத்தில் உற்பத்தி தொழிலகங்களை அமைத்திடும் நிறுவனங்கள் துவக்கத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு வரிகள் செலுத்த தேவையில்லை.

வெளிநாட்டு முதலீட்டை கவர்ந்திட, அரசாங்கம் தொழிலாளர் சட்டங்களை தளர்த்திட அனுமதித்துள்ளது. தொழில்நிறுவனங்கள் நிரந்தர அடிப்படையில் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு பதிலாக, குறுகிய காலத்திற்கு ஒப்பந்த தொழிலாளிகளை பணிக்கு அமர்த்திக் கொள்ளலாம். வேலையின் அளவு அதிகமாக இருக்கும்போது, நிறுவனத்திற்கு உழைப்பின்மீதான செலவை குறைத்திட இவ்வாறுசெய்யப்படுகிறது.

- நிறுவனங்களிடையே ஏற்பட்டுள்ள போட்டிகளால் இந்திய மக்கள் எவ்வாறுபயன்அடைந்துள்ளனர்?
- இந்திய நிறுவனங்கள் அதிகளவு பன்னாட்டு நிறுவனங்களாக உருவாக வேண்டுமா?
- வெளிநாட்டு முதலீடுகளை அதிகளவு கவர்ந்திட அரசாங்கங்கள் முயன்றுவருவதேன்?
- ஒரு பிரிவு மக்களுக்கு மேம்பாடாய் இருப்பது மற்றொரு பிரிவு மக்களுக்கு அதுவே, அழிவை ஏற்படுத்துகிறது என்று இதற்கு முன் படித்துள்ளீர்கள். சிறப்பு பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்படுவதற்கு, இந்தியாவில் சிலர் எதிர்க்கின்றனர்? இவர்கள் யார் என்பதை கண்டறியவும். இவர்கள் ஏன் SEZ அமைக்கப்படுவதை எதிர்கின்றனர் என்பதை கண்டறியவும்.

*இங்குள்ள படத்திற்கு ஏற்ற கற்பனையான தலைப்பை எழுதுக. உலகமயமாதலை குறித்து இது கூறுவது என்ன?*




SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

### சிறு உற்பத்தியாளர்கள் : போட்டியிடுவர் அல்லது நசித்துபோவர்

உலக மயமாதல் பெருமளவு எண்ணிக்கையில் சிறிய உற்பத்ததியாளர்கள் அல்லது தொழிலாளிகளுக்கு சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையை ஏற்படுத்தியது.

ஒரு தொழிலதிபராக, குறைந்த காலத்தில், நெருக்கடியான சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. ரவி வங்கியிடம் இருந்து கடனுதவி பெற்று மின்சாரம் சேகரிக்கும் கருவி உற்பத்தி செய்யும் சொந்தமான ஒரு உற்பத்தி கூடத்தை, 1992ல் தமிழ் நாட்டில் ஓசூர் என்னும் தொழில் நகரத்தில் துவக்கினார். இக்கருவி பல்வேறு மின்னணு வீட்டு உபயோக பொருட்களில் அதாவது குழல் விளக்குகள், தொலைக்காட்சி பெட்டிகளில், பயன்படுத்தப்படுகின்றன. மூன்றாண்டுகளில், ரவி தனது தொழில்கூடத்தின் உற்பத்தித்திறனை அதிகரித்துக்கொண்டார். அவர் தலைமையின் கீழ் 20 தொழிலாளர்கள் வேலை செய்தனர்.



2001ஆம் ஆண்டு, அரசாங்கம் உலகவர்த்தக அமைப்புடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, மின்சாரம் சேகரிக்கும் கருவி இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை நீக்கிவிட்டது. இதனால் ரவி தனது தொழிற்சாலையை நடத்துவதில் போராட்டம் துவங்கினார். இவரது முக்கிய வாடிக்கையாளர்களான தொலைக்காட்சி பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகள், பல்வேறு உறுப்பு பாகங்களை மின்சாரம் சேகரிக்கும் கருவிகள் உள்பட பெருமளவு கொள்முதல் செய்து வந்தனர். இருப்பினும், பன்னாட்டு நிறுவனங்களின் போட்டியால், இந்திய நிறுவனங்கள் அவற்றிற்கு பாகங்களை இணைத்து தரும் வேலையை செய்யவேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டன. சில தயாரிப்பு நிறுவனங்கள் மி.சே.கருவிகளை வாங்கின. இறக்குமதி செய்யப்பட்ட மி.சே. கருவிகளின் விலை, ரவி போன்ற உற்பத்தியாளர்களின் விற்பனை விலையில் பாதியாகவே இருந்ததால், அவற்றை வாங்கிட முன்வந்தனர்.

தற்போது ரவி, 2000ஆம் ஆண்டில் தயாரித்த கருவிகளின் பாதியளவு தான் உற்பத்தி செய்து வருகின்றார். இவர் தொழிற்சாலையில் ஏழு தொழிலாளிகள் மட்டுமே வேலைசெய்து வருகின்றனர். இதே தொழிலை செய்து வந்த இவரது ஐதராபாத் மற்றும் சென்னை நண்பர்கள் அவர்களின் தொழிற்கூடங்களை மூடிவிட்டனர்.

- ரவியின் சிறுஅளவு உற்பத்தி பிரிவு எவ்வழிகளில், போட்டி உயர்த்தப்பட்டதால் பாதிக்கப்பட்டது?
- இதரநாடுகளில் ஏற்படும் உற்பத்திச் செலவுகளை விட, ரவியின் உற்பத்தி செலவு அதிகமாய் இருப்பதால், அவரைப்போன்ற சிறு உற்பத்தியாளர்கள், உற்பத்தியை நிறுத்த வேண்டுமா? நீ என்ன கருதுகிறாய்?
- சமீப காலத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகள் இந்தியாவின் சிறுஅளவு உற்பத்தியாளர்கள் உலகசந்தையில் போட்டியிட மூன்று அம்சங்கள் தேவைபடுகின்றன என்பதை குறிப்பிட்டு காட்டுகின்றன. அவை (a) நல்ல சாலைகள், மின்சாரம், தண்ணீர், கச்சாப் பொருட்கள், சந்தைவசதி, தகவல் பரிமாற்ற அமைப்பு. (b) மேம்பாடுகள் மற்றும் நவீன மயமாக்கப்பட்ட தொழில் நுட்பம் (c) நியாயமான வட்டி வீதத்தில் உரிய காலத்தில் கடன்வசதி, இவை மூன்றும் இந்திய உற்பத்தியாளர்களுக்கு எவ்விதங்களில் உதவிடும் என்பதை விவரியுங்கள்.
- பன்னாட்டு நிறுவனங்கள் இவற்றின் மீது முதலீடு செய்ய ஆர்வம் கொண்டுள்ளனவா? ஏன்?
- இவ்வசதிகளை கிடைக்கச் செய்வதில் அரசாங்கத்தின் பங்கு உள்ளது என கருதுகிறீர்களா? ஏன்?
- அரசாங்கம் மேற்கொள்ள கூடிய வேறு இதர நடவடிக்கைகள் ஏதாவது உள்ளனவா என்பதை யோசித்து பாருங்கள். கலந்துரையாடுங்கள்.

### நியாயமான உலக மயமாதலுக்குகான போராட்டம்

மேற்காணும் சான்றுகள், உலகமயமாதலால் அனைவரும் பயனடையவில்லை என்பதை காட்டுகின்றன. கல்வி, திறமைகள் மற்றும் சொத்துக்கள் பெற்றுள்ள மக்கள், புதிய வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டனர். ஆனால், உலகமயமாதலின் பயன்களை பங்கிட்டுக் கொள்ளாதவர்கள் அதிகமாக உள்ளனர். உலகமயமாதல் தற்போது ஏற்பட்டுள்ள உண்மை நிகழ்வு ஆகும். இதன் பயனை நியாயமான முறையில் அனைவரும் எவ்வாறு பெறுவது என்பதே கேள்விக்குறியாக உள்ளது. நியாயமான உலகமயமாதலின் பயன்கள் மேலான முறையில் பங்கிடப்படுவதற்கும் உத்தரவாதம் அளிக்கும்.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இதை சாத்தியப்படுத்துவதில் அரசாங்கம் முக்கிய பங்கு வகிக்கமுடியும். அரசின் கொள்கைகள், செல்வந்தர்கள் மற்றும் அதிகாரம் படைத்தோர் மட்டுமின்றி, நாட்டின் எல்லா மக்களின் நலனை பாதுகாப்பதாக இருக்கவேண்டும். அரசாங்கம் மேற்கொள்ளக்கூடிய சில சாத்தியமான நடவடிக்கைகள் குறித்து நீங்கள் படித்தீர்கள். எடுத்துக்காட்டாக, தொழிலாளர் சட்டங்களை முறையாக செயல்படுத்தி, தொழிலாளர்கள் அவர்களின் உரிமைகளை பெறுவதற்கு அரசாங்கம் உத்திரவாதம் அளிக்க வேண்டும். சிறு உற்பத்தியாளர்கள் தங்களுடைய உற்பத்தி திறனை அதிகரித்துக்கொண்டு, பெரிய உற்பத்தியாளர்களோடு போட்டியிடும் வலிமையை பெறுவதற்கு அரசாங்கம் ஆதரவு அளிக்கலாம். தேவைப்பட்டால் வாணிபம் மற்றும் முதலீட்டு வரம்பு தடைகளை பின்பற்றலாம். உலக வர்த்தக அமைப்பின் நியாயமான விதிமுறைகளை பின்பற்ற பேச்சுவார்த்தை நடத்தலாம். இதைப்போன்ற அக்கரை உடைய, இதர வளர்ந்து வரும் நாடுகளுடன் உடன்படிக்கை செய்துகொண்டு, உலகவர்த்தக அமைப்பின் மீது ஆதிக்கம் செலுத்தும் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு எதிராக போராட முடியும்.

கடந்த சில ஆண்டுகளில், மக்கள் அமைப்புகளால் மாபெரும் போராட்டங்கள் மற்றும் பிரதிநிதித்துவம் போன்றவை, உலகவர்த்தக அமைப்பில் வர்த்தகம் மற்றும் முதலீடு குறித்து எடுக்கப்பட்ட முக்கியமான முடிவுகள் மீது செல்வாக்கு செலுத்தின. இதன்மூலமாக, நியாயமான உலகமயமாதலை சாதிக்க நடத்தப்படும் போராட்டத்தில், மக்களும் முக்கிய பங்குவகிக்கமுடியும் என்பது செய்து காட்டப்பட்டது.

## இதரபிரச்சனைகள்

உலகமயமாதல் நாடுகளின் எல்லைகளை நீக்கிட முடிந்ததா இல்லையா என்பது குறித்து விவாதம் உள்ளது. நாடுகளின் எல்லைகளை நீக்கிட முயன்ற போதெல்லாம், எல்லைக்குட்பட்ட மக்களைக்கொண்ட நாட்டரசுகள் அரசியல் நிறுவனங்களாக பெரும்பாலான சமயங்களில் விளங்கின. எல்லைகளால் பிரிக்கபட்டிருக்கும் போது, நமக்கும் பிற மக்களுக்கும் நாட்டிற்கும் உள்ளேயும், வெளியேயும் உளவியல் ரீதியாக தங்களுடைய சொந்த நாடு என்னும் தேசியவாத எண்ணத்தை வளர்த்தது. உலகமயமாதலின் ஒரு மிக முக்கியமான விளைவுயாதெனில், இந்த தேசியவாத எண்ணத்தை படிப்படியாக பலவீனபடுத்தலே ஆகும்.

அனைவரின் கவனத்தையும் பெற்ற மற்றொரு அம்சம் யாதெனில், உலகமயமாதல் ஒரே மாதிரியான கலாச்சாரத்திற்கு வழிவகுத்ததா அல்லது கலாச்சார வேற்றுமையை அதிகரித்து விட்டதா? என்பதாகும். நவீன தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பம், சிலகுறிப்பிட்ட கலாச்சாரம் மற்றும் கருத்துகளை பரப்பியுள்ளது. அவை ஏற்கனவே நிலவிய உள்ளூர் மற்றும் சிறிதளவான கலாச்சாரங்களை ஒதுக்கிவிட்டன என்று சிலர் வாதாடுகின்றனர். வேறுசிலர், உலகமயமாதல் வேறுபட்ட கலாச்சாரத்தை பரப்புவதற்கு இடமளித்துள்ளது. மேலும் பல சமயங்களில் நடைமுறையில் உள்ள கலாச்சார பழக்கங்களை சிறிதாக்கி ஒதுக்கிவிட்டன என்று வாதாடுகின்றனர். உலகமயமாதலால் சில மொழிகள் பரவலாக பயன்படுத்தபடுகின்றன. உலக நாடுகளிடையே தகவல் தொடர்புக்கான மொழிகளாக விளங்குகின்றன. பிற மொழிகள் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் சில மறையும்படியான விளிம்பில் உள்ளன.

**உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதி அமைப்பும் அவற்றின் அதிகாரங்களும்**

பன்னாட்டு மறுசீரமைப்பு மற்றும் வளர்ச்சி வங்கி [International Bank for Reconstruction and Development (IBRD)] மற்றும் பன்னாட்டு வளர்ச்சிச் அமைப்பு முதலியவை உலகவங்கி என்று குறிப்பிடப்படுகின்றன. இவ்விரண்டு அமைப்புகள் ஒவ்வொன்றிலும் 170க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். இந்நிதி அமைப்புகளின் செயல்களை அமெரிக்கா போன்ற நாடுகள் கட்டுப்படுத்துகின்றன. தற்போதும் அமெரிக்க நாட்டின் வாக்களித்தலின் மதிப்பு 16% என கணக்கிடப்படுகிறது. ஜப்பான், ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற சில நாடுகள் 3% முதல் 6%க்கும் மேல் வாக்குமதிப்பை பெற்றுள்ளன. ஏழை நாடுகளின் வாக்கு மதிப்பு மிகவும் குறைவாக இருக்கும். தற்போது இந்தியா மற்றும் சீனாநாடுகளின் வாக்கு மதிப்பு ஏழை நாடுகளை விட அதிகமாக உள்ளது. உலக நாடுகளின் அரசாங்கங்கள் வகுக்கும் கொள்கைகளை உருவாக்குவதில் அறிவுரை வழங்கவும், விளைவை ஏற்படுத்தவும் உலக வங்கியால் சாத்தியமாகிறது.

## முடிவுரை

உலகமயமாதல் என்பது விரைவான முறையில் நாடுகளை ஒருங்கிணைத்தலே ஆகும். இது 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட மாபெரும் மாற்றமாகும். இதற்கு பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார பரிமாணங்கள் உள்ளன. பெருமளவு செல்வம் மற்றும் திறன் கொண்ட பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடு மற்றும்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

வாணிபம் மூலம் பல்வேறு நாடுகளின் சந்தைகள் மற்றும் உற்பத்தியை ஒன்றுதிரட்டி கட்டுபடுத்தப்படுவதே, தற்போதுள்ள உலகமயமாதலின் சிறப்பான அம்சமாகும். வாணிபம் மற்றும் முதலீடு மீதான தடைகளை நீக்கி தாராளமயமாக்கியதால், பொருளாதாரங்கள் உலகமயமாதலின் பலனை அடைய ஆயத்தப்படுத்தப்பட்டன.

உலகமயமாதலின் பயன்கள் உலக நாடுகளிடையே சமமின்றி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. உலகமயமாதல் செல்வந்த வகுப்பை சேர்ந்த நுகர்வோர், திறமை, கல்வி, பெரும் செல்வம் படைத்த உற்பத்தியாளர்கள் ஆகியோர் பயனடையச் செய்துள்ளது. தொழில் நுட்பத்தின் உதவியால் சில குறிப்பிட்ட சேவைகள் பரவலாக வளர்ந்துள்ளன. அதே சமயத்தில், ஆயிரக்கணக்கான சிறிய உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் தங்களின் வேலைவாய்ப்பு மற்றும் உரிமைகள் அரித்துப்போயின என்று வருந்துகின்றனர்.

பணக்கார நாடுகளின் ஆதிக்க போக்கால், அவை பின்பற்றும் கொள்கையால் சமமற்ற நிலை நிலவுவது, உலகமயமாதலின் மற்றொரு பரிமாணம் எனலாம். பன்னாட்டு பொருளாதார பரிமாற்றங்களான வாணிபம், முதலீடு, இடம்பெயர்ந்து செல்ல அல்லது உள்நாட்டு விஷயங்களில் மேற்கத்திய பணக்கார நாடுகள் உலகின் மீதமுள்ள நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. பன்னாட்டு அமைப்புகளான உலக வர்த்தக அமைப்பு மற்றும் பன்னாட்டு நிதிஅமைப்பு (IMF) போன்றவை வளர்ச்சியடைந்த நாடுகளின் நலனுக்கு பிரதிநிதித்துவம் வகிக்கின்றன. வளர்ந்து வரும் நாடுகளின் நலனுக்கு அதிக முக்கியத்துவம் தருவதில்லை. இவ்வாறாக, உலகமயமாதலை ஆதரிப்பவர்கள், உலகநாடுகளின் ஒருங்கிணைப்பால் உண்டாகும் நன்மைகள் குறித்து எடுத்துரைக்கின்றனர். உலகமயமாதல் வளர்ச்சி மற்றும் செல்வசெழிப்பிற்கு ஏற்ற வாய்ப்பு என்பது அவர்களின் கருத்து. இதைகுறை கூறுபவர்கள் கருத்துப்படி, உலகமயமாதல் என்பது சில மேற்கத்திய நாடுகளின் மேன்மைக்கும், உலகின் இதர நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தவும் ஒரு முயற்சி என்பதாகும். உலகமயமாதல் மக்களாட்சி, தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் ஏழை நாடுகளின் சுற்றுச்சூழல் போன்றவற்றிற்கு தீங்கு விளைவிக்கும் என்றும் அவர்கள் வாதாடுகின்றனர்.

**முக்கிய சொற்கள்**

பன்னாட்டு நிறுவனங்கள் நட்டரசுகள் தொழில்நுட்பம் வெளிநாட்டு முதலீடு வெளிநாட்டு வாணிபம் தாராளமயமாக்கல்

## கற்றலை மேம்படுத்துக

1. இந்திய அரசாங்கம் வெளிநாட்டு வாணிபம் மற்றும் வெளிநாட்டு முதலீடு மீது தடைகள் விதித்ததின் காரணங்கள் யாவை? தடைகளை நீக்கிட அது ஏன்விரும்பியது?(AS1)
2. தொழிலாளர் சட்டங்களில் ஏற்படுத்தப்படும் சலுகை நடவடிக்கைகள் தொழிற்சாலைகளுக்கு எவ்வாறு உதவுகின்றன?(AS1)
3. பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் கிளை நிறுவனங்களை இதர நாடுகளில் நிறுவ, கட்டுப்படுத்த பொருட்களை உற்பத்தி செய்ய பின்பற்றும் பல்வேறு வழிமுறைகள் யாவை?(AS1)
4. வாணிபம் மற்றும் முதலீட்டின் மீதுள்ள கட்டுப்பாடுகளை வளர்ந்து வரும் நாடுகள் தாராளமயமாக்க வேண்டும் என்று வளர்ச்சியடைந்த நாடுகள் கோருவது ஏன்? இதற்கு பதிலாக வளர்ந்து வரும் நாடுகள், வளர்ச்சியடைந்த நாடுகளிடம் இருந்து எவற்றை கேட்டுப் பெற வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?(AS4)
5. உலகமயமாதலின் தாக்கம் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியாக காணப்படவில்லை. இக்கூற்றை விவரியுங்கள்.(AS1)
6. வாணிபம் மற்றும் முதலீட்டு கொள்கைகளை தாராளமயமாக்கியது எவ்வாறு உலகமயமாதலுக்கு உதவியது?(AS1)
7. உலகமயமாதல் எதிர்காலத்திலும் தொடரும். அடுத்த இருபது ஆண்டுகளுக்கு பிறகு, உலகம் எவ்வாறு இருக்கும் என்பதை உன்னால் கற்பனை செய்து பார்க்கமுடியுமா? உன் பதிலுக்கான காரணங்களை தருக.(AS4)
8. கீழ்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறித்துக் காட்டுக.(AS5)

(i) சீனா (ii)ஜப்பான் (iii)பிரேசில் (iv)தென் ஆப்பிரிக்கா



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்
10

# உணவுப் பாதுகாப்பு

இந்தியா சுதந்திரம் அடைவதற்குமுன், தீவிர உணவு பற்றாக்குறையால் பட்டினியாலும் ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தனர்.

உதாரணத்திற்கு வங்காள பஞ்சத்தினால் (1943-1945) ஏறக்குறைய 3 முதல் 5 மில்லியன் மக்கள் வங்காளம், மற்றும் அஸ்ஸாம் மற்றும் ஒடிசாவைச் சேர்ந்தவர்கள் இறந்து விட்டனர். கீழ் காணும் பத்திகளை படிக்கவும்.

“எங்கள் வீட்டில் நான் எல்லோரையும் விட பெரியவன். நான் வாழ்வதற்காக வேலைசெய்கிறேன். நான் தினக்கூலியாக வேலைசெய்கிறேன். அந்த நேரத்தில் நான் என் தந்தையை, என் கிராமத்தில் விட்டு, என் சகோதரனையும், சகோதரிகளையும் அழைத்துக்கொண்டு கோல்கத்தா சென்றேன். அவர்களிடம் உண்பதற்கு சிறிதளவு மாவு மட்டுமே இருந்தது. நாங்கள் உணவு கிடைக்கும். இடங்களுக்கு சென்று எங்கள் பசியைக் போக்கி கொள்வோம். நான் கோல்கத்தாவில் பசியால் வாடும் மக்களை அதிக அளவு கண்டேன். சில தாய்மார்கள் இறந்தவர்களின் மேல் நீரைத்தெளித்து அவர்களை பிழைக்கவைத்துக்கொள்ள முயற்சி செய்கின்றனர். இவ்வாறான எத்தனையோ நிகழ்ச்சிகளை நான் பார்த்தேன். சிலர் புற்களையும் பாம்புகளையும் உண்டனர். நான் என் இரு சகோதரிகளையும், ஒரு சகோதரனையும் இழந்துவிட்டேன்”.







படம் 10.1 : மேலே கொடுக்கப்பட்ட படங்கள் LIFE எனும் மாத இதழிலிருந்து சேகரிக்கப்பட்டவை. a) சிறுவர்கள் சரக்குவண்டியில் இருந்து உணவு தானியங்களை சேகரிக்க முயற்சி செய்கின்றனர். (b) ஒரு பெண் தரையில் இருக்கும் தானியங்களை சேகரிக்கின்றார்.

படத்தில் காட்டியுள்ளவர்கள் விவசாயிகள் மற்றும் விவசாய தொழில் செய்துகொண்டு வாழ்க்கையை நடத்துபவர்கள். அவர்கள் பிச்சைக்காரர்கள் அல்ல. இவர்களுக்கு பிச்சை எடுக்கக்கூட தெரியாது. இவர்கள் கோல்கத்தாவின் தேசிய நெடுஞ்சாலைக்கு இருபுறமும் அமர்ந்துகொண்டு அங்கேயே இறந்து விடுகின்றனர். இந்தப்படம் கோல்கத்தாவின் மொத்தமக்களின் தீவிரமான உணவு பற்றாக்குறை விபத்தாக அனைவரும் அறிந்துகொள்ளுமாறு செய்தது. இவ்வாறான பல நிகழ்ச்சிகளை நாம் பாரததேச வரலாற்றில் காணலாம். உணவுபற்றாக்குறைக்கு காரணம் முக்கியமாக ஆட்சியாளர்கள் உணவுதானியங்களை மக்களுக்கு பங்கீடு செய்ய முடியாமை மற்றும் சாதாரண மக்களுக்கு உணவை சரியான முறையில் பங்கீடு செய்வதில் தோல்வி அடைந்தவை ஆகியவையாகும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

சுதந்திரம் அடைந்தபிறகு, இந்திய அரசு உணவுதானியங்களை சாதாரண மக்களிடம் சேர்க்க பல முறைகளை அமுல்படுத்தியது. நியாயவிலைக் கடைகள் மூலம் மிகக் குறைந்த விலைக்கு மக்கள் உணவுதானியங்களை வாங்கிக்கொள்கின்றனர். மதிய உணவுத்திட்டம் மூலம் உங்களில் பலர் பயனடைகின்றனர். அங்கன்வாடி மையங்கள் மூலம் குழந்தைகள் பாதுகாக்கப் படுவதோடு, ஊட்டச்சத்தும் வழங்கப்படுகிறது. இவ்வாறான வழிகள் மூலம் இந்திய அரசு தற்போது உணவுபாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளது என கட்டாயமாக கூறலாம். இந்தப் பாடத்தில் நாம் உணவுபாதுகாப்பு தொடர்பான அம்சங்களைக் குறித்து தெரிந்துகொள்ளலாம்.

## நாட்டின் உணவு பாதுகாப்பு :

### உணவு தானியங்கள் உற்பத்தியை அதிகரித்தல் :

**உணவு பாதுகாப்பை அளிக்க தேவையான அளவு உணவுதானியங்களை உற்பத்தி செய்தல் மிக முக்கியமாகும். எடுத்துக்காட்டாக இந்தியாவில் அரசாங்கத்தின் உதவியோடு விவசாயிகள் அதிக அளவில் உணவுதானியங்களை விளைவிக்கின்றனர். கோட்டுவரைபடம் 11.1 ஐ பரிசீலித்து கோடிட்ட இடங்களை நிரப்புக. (சரியான விலையை தெரிந்துகொள்ள X-அச்சின் மீதுள்ள அளவுகோலை பயன்படுத்துங்கள்)**

கடந்த சில பத்தாண்டுகளாக விவசாயத்திற்காக பயன்படுத்தப்படும் நிலப் பரப்பு மாறாமலிருப்பதை நாம் கவனிக்கிறோம். ஆனால் உற்பத்தி மட்டும் வேறுபட்டுள்ளது. கோட்டு வரைபடம் 11.2-ஐ கவனி. ஒவ்வொரு ஹெக்டேருக்கும் உற்பத்தியை அதிகரிக்க தேவையான அனைத்து வசதிகளையும் நியாயமான முறையில் ஏற்படுத்தியிருக்கின்றனர். நீர்ப்பாசன வசதியை அதிகரித்தல் இதற்கு ஒரு உதாரணம். ஆனால் நீர் முக்கிய ஆதாரமாக இருப்பதினால் இதை சமமாக பங்கிட்டு அனைவரும் பயன்பெறுமாறு செய்கின்றனர்.

- உணவு தானியங்கள் உற்பத்தி 1970-71முதல் ______. ஆண்டுவரை அதிகரித்தது. நெல் உற்பத்தி 1970-71 ல் 40 மில்லியன் டன்னில் இருந்து 2011 ல்______டன்களுக்கு அதிகரித்தது. கடந்த 40 ஆண்டுகளில் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட மற்றொரு முக்கிய உணவுப்பயிர் ______. நெல் மற்றும் கோதுமை உற்பத்திகளை ஒப்பிட்ட ______உற்பத்தி 1970-2011 ஆண்டுகளில் அதிகரிக்கவில்லை. இதற்கு காரணம்______.
- பாடம்:9-ல் “பூமி மற்றும் மற்ற இயற்கை வளங்கள்” எனும் கருத்தை படியுங்கள். உணவு தானியங்களை உற்பத்திசெய்வதற்கான மற்ற வழிமுறைகளை விவரிக்கவும்.

Graph 1 : Production of select Foodgrains (in million tonnes)




SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

*கோட்டு வரைபடம் 10.2 : முக்கியமான உணவு தானியங்கள் விளைச்சல்(கிலோகிராம் ஒரு ஹெக்டேருக்கு)*




வரைபடத்தில் குறைந்த விளைச்சலைத் தந்த பயிர்கள் வறண்ட நிலங்களில் வளர்ந்தவை. இவற்றிக்கு தற்போது மற்றும் வருங்காலத்தில் குறைந்தளவு நீர்ப்பாசன வசதியே கிடைக்கின்றது.மழையில்லாத இடங்களில் வறட்சியை தாங்கும் செடிகளை நட்டு மழைநீரை சேமித்தல் விவசாயம் முறை மூலம் உற்பத்தியை அதிகரிக்கலாம்.

ஆனால், மேற்சொன்ன முறைகளை பின்பற்றுவதனால் மண் மற்றும் மற்ற இயற்கை வளங்களுக்கு நஷ்டம் எற்படாமல் மற்றும் குறைந்து விடாமல் பார்த்து கொள்ளவேண்டும். சில விஞ்ஞானிகள் மற்றும் விவசாய நிபுணர்கள் கூறியபடி இந்தியாவில் நெல் மற்றும் கோதுமையை பயிரிடும் முறையில் அதிக ரசாயனதன்மை கொண்ட உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துகின்றனர். இதன் மூலம் தொடர் உற்பத்தி நிகழும். ஆனால், பயிர்கள் உற்பத்தியின் அளவு நிலையானதாக இருக்காது உண்மையில் மேற்கூறிய முறைகள் மூலம் மண்வளம் மற்றும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துவிடும். இதே முறை தொடர்ந்தால் மிக விரைவில் உற்பத்தி அதிகரிப்பதற்கு பதில் குறைந்துவிட வாய்ப்பதிகம்.

- கீழே கொடுக்கப்பட்ட பத்தியை நிரப்புவதன் மூலம் ஒரு ஹெக்டேரில் எவ்வளவு நெல் மற்றும் கோதுமை விளையும் என விவரி.
- நெல் மற்றும் கோதுமை விளைச்சலை ஒப்பிடும்போது ____________ மற்றும் ____________ பயிர்கள் எப்பொழுதும் குறைவான உற்பத்தியை காட்டுகின்றன..
- சோளம் பயிரிட எதற்காக அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர் ? விவரி.
- நீண்ட காலமாக நெல் மற்றும் கோதுமை அதிகமாக உற்பத்தியாக காரணமான அம்சங்களை விவரி.

**உணவு தானியங்கள் கிடைத்தல் :**

ஒரு நாடு, நாட்டின் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு தானியங்களை பயிரிடுதலின் அவசியம் மிக முக்கியமான ஒன்று. உணவை எவ்வாறு அளப்பர்?இந்த உணவு குடும்பங்களை அடைகிறதா, இல்லையா என பிறகு பரிசீலிக்கலாம். முதலில் நாம் நமக்கு கிடைக்கும் உணவு தானியங்களை மதிப்பிடுவோம். அதாவது ஒவ்வொருவருக்கும் தேவையான உணவு தானியங்கள் கிடைக்கவேண்டும் மற்றும் உற்பத்தி அதிகரிக்க வேண்டும். உண்மையில் தேவையான அளவு உணவுதானியங்கள் கையிருப்பில் உள்ளனவா ?



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

உணவுதானியங்கள் உற்பத்தி மற்றும் கையிருப்புக்கு இடையே வேறுபாடு உள்ளது. இதை கீழேகொடுக்கப்பட்டுள்ளவாறு மதிப்பீடு செய்வர். ஒரு வருடத்தில் கிடைக்கும் உணவு தானியங்கள்=உற்பத்தி (உற்பத்திகள்– விதைகள், களைகள் மற்றும் சேதாரம்)+ நிகர இறக்குமதி (இறக்குமதி – ஏற்றுமதி ) – அரசாங்க கையிருப்பு மாற்றம் ( ஆண்டு இறுதியின் இருப்பு – ஆண்டுதொடக்கத்தின் இருப்பு)

ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு தேவையான உணவு தானியங்கள்= (ஒரு வருடத்திற்கு தேவையான உணவுதானியங்கள் ÷ மக்கள் தொகை)/ 365.

உற்பத்தி, இறக்குமதி மற்றும் அரசாங்கத்தின் கையிருப்புகளில் மாற்றங்கள் 1971,1991 மற்றும் 2011 ஆண்டுகளுக்கான விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. உணவு உற்பத்தி மட்டுமல்லாமல் இறக்குமதியும் உணவு தானியங்களின் தேவைக்கு காரணமாகின்றது. அரசாங்கத்தின் கையிருப்புகளில் உள்ள மாற்றங்களும் உணவு தானியங்களின் தேவைக்கு காரணம். எடுத்துக்காட்டாக, அரசாங்கம் தன் கையிருப்பில் உள்ள நெல்லை விற்பதால் மக்களுக்கு அதிக நெல் கிடைக்கிறது. அதாவது அரசாங்கத்தின் கையிருப்பு குறைந்தால், அந்த ஆண்டில் மக்களுக்கு அதிக அளவு நெல் கிடைக்கும். (அரசாங்க கையிருப்புகள் குறித்து வரும் பாடங்களில் மேலும் கற்கலாம்)

1971 ஆம் ஆண்டில் கணக்கிட்டதுபோல் 1991 மற்றும் 2011 ஆம் ஆண்டிற்கு ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கும் உணவு தானியங்களை கணக்கிடுக.

***அட்டவணை 10.1: ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கும் உணவு தானியங்கள்***

| ஆண்டு | மக்கள் தொகை (மில்லியன் கள்) | உணவு தானியங்களின் நிகர உற்பத்தி # | நிகர இறக்கு மதி # | அரசாங்க கையிருப்புகளில் மாற்றம் # | உணவு தானியங்களின் நிகர இருப்பு # | ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு கிடைக்கும் உணவு தானியங்கள் (கிராம்கள்) |
|---|---|---|---|---|---|---|
| col (1) | col (2) | col (3) | col (4) | col (5) | col (6) | col (7) |
| 1971 | 551 | 94.9 | 2 | 2.6 | col (3) + col (4) – col (5) = 94.3 | ={col (6)/col (2)}/365}<br>= (94.3/551)/365<br>= 0.000469 டன்*<br>= 0.000469 x 1000<br>= 0.469 கிலோகிராம் *<br>= 0.469 x 1000<br>= 469 கிராம் |
| 1991 | 852 | 154.3 | –0.1 | –4.4 | | |
| 2011 | 1202 | 214.2 | –2.9 | 8.2 | | |

** குறிப்பு: 1 டன் =1000 கிலோகிராம்; 1 கிலோகிராம் = 1000 கிராம்*
*# மில்லியன் டன்கள்*

- நீங்கள் கணக்கிட்டதை ஆதாரமாக கொண்டு கீழே உள்ள கோடிட்ட இடங்களை நிரப்புக :
  1971 மற்றும் 1991 ஆண்டுகளுக்கு ஒரு மனிதனுக்கு தேவையான உணவு தானியங்கள் ______ (அதிகரித்தது/குறைந்தது). ஆனால், இது 2011 ஆம் ஆண்டை விட______ (அதிகம்/குறைவு). மக்கள்தொகை குறைந்தாலும் மேலே கூறப்பட்ட மாற்றங்கள் நிகழ்கின்றன. வருங்காலங்களில் அரசாங்கத்திற்கு கிடைப்பது __________



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**உணவு தானியங்கள் வகைகள் :**








சாதாரண தானியங்கள் தரம் குறைந்தவை எனவும், ஆரோக்கியத்திற்கு கெடுதல் எனவும் மக்கள் நினைத்துகொண்டிருக்கின்றனர். ஏனெனில் அவை கடினமாக இருப்பதால் அவ்வாறு நினைகின்றனர். ஆனால், இவை அதிக ஊட்டச்சத்து உடைய முழுமையான தானியங்கள். இவை நாட்டின் வறண்ட நிலப்பகுதியில் வாழும் மில்லியன் மக்களுக்கு முக்கியமான உணவாக உள்ளது. இந்தியாவில் வாழும் அதிகமான மக்கள் சாதாரண தானியங்களை பல்வேறு புதிய முறைகளை பயன்படுத்தி இவற்றை வெள்ளை அரிசியாகவும்,கோதுமையாகவும் மாற்றிகொள்கின்றனர். சூழ்நிலைக்கேற்ப பயன்படுத்தப்படும் சாதாரண தானியங்களை தரம் குறைவாக பார்க்கின்றனர். இவற்றை இப்பொழுது நாம் 'ஊட்டச்சத்து தானியங்கள்' (Nutri- cereals) என அழைக்கிறோம். ".

**மற்ற உணவுப் பொருட்கள் கிடைத்தல் :**

தற்போது மக்களின் உணவுமுறைகளில் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பெரும்பாலானோர் பழங்கள், காய்கறிகள், பால், மாமிசம் மற்றும் மீன்கள் போன்றவற்றை உணவாக எடுத்துக்கொள்கின்றனர். நுகர்வோர் விதவிதமான உணவு பொருட்கள் மற்றும் சரிவிகித உணவை விரும்புகின்றனர். உணவு தானியங்களை பயிரிடும் விவசாயிகள் தங்கள் வருமானத்தை பெருக்கிக்கொள்ள புதியவகை பயிர்களை பயிரிடுகின்றனர். கடந்த இரண்டு பத்தாண்டுகளிலிருந்து ஆந்திர பிரதேசத்தில் உணவு பயிர்கள் விளைவிக்கும் நிலங்களில் பணப் பயிர்களான பருத்தி போன்ற பயிர்களை பயிரிடுகின்றனர். விவசாயிகள் தற்கொலைசெய்து கொள்ள இதுவும் ஒரு காரணம். விவசாயிகள் விவசாயம் மட்டுமல்லாமல் கோழிகள், மீன்கள் மற்றும் பால் உற்பத்தி போன்றவைகள் மீது அதிக அக்கறைகாட்டுவதன் மூலம் புதிய வாய்ப்புகளை பெறலாம்.

பல ஆண்டுகளாக பல்வேறு விதமான உணவு தானியங்களின் உற்பத்தி அதிகரித்திருந்தாலும் குறைந்தபட்ச உணவு பற்றாக்குறையை தீர்க்கமுடியாமல் உள்ளது. ஊட்டச்சத்து நிபுணர்கள் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மனிதனும் 300 கிராம் காய்கறிகள் மற்றும் 100 கிராம் பழங்கள் சாப்பிடவேண்டுமென கூறுகின்றனர். தற்போது 180 கிராம் காய்கறிகள், 58 கிராம் பழங்கள் மட்டுமே கிடைக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு வருடத்திற்கு 180 முட்டைகள் தேவை ஆனால் 30 முட்டைகள் கிடைக்கிறது. ஒரு மனிதனுக்கு ஒரு வருடத்திற்கு 11 கிலோகிராம் மாமிச உணவு தேவைப்படுகிறது. ஆனால், 3.2 கிலோகிராம் மட்டுமே கிடைக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு நாளைக்கு 300 மி.லி. பால் தேவைப்படுகிறது ஆனால் 210 மி.லி. மட்டுமே கிடைக்கிறது.

எனவே, விவசாயிகள் புதிய பயிர்களை பயிரிடுதலை பின்பற்ற தேவையான வருமான முறைகளை, அதாவது சந்தையின் முக்கியத்துவத்தை அதிகரிக்க வேண்டும். அவ்வாறே விவசாயிகளுக்கு சந்தைகளில் விலை குறையும்போது தேவையான ஆதரவு மற்றும் பாதுகாப்பை அளிக்கவேண்டும்.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## விவசாயத்தில் புதிய வகைகள்

மிட்னபூர் கிராமம் செம்மண் நிலத்தை கொண்டது இந்த கிராமம் போர்கொல்லா கிராம பஞ்சாயத்தின் கீழ் உள்ளது. அனைவருக்கும் ஆழ்துளைக் கிணறுகள் உள்ளன. ஹரிபிரசாத், சமந்தா, சிட்டோமைதி மற்றும் ஜாத்லென்கா போன்றவர்களிடம் பேசியதில், அவர்களிடம் இரண்டு ஏக்கர் நிலத்திற்கு மேல் இல்லை என தெரிந்துகொண்டேன். தொழில்நுட்பம் நன்றாக உள்ளது. தரமான விதைகள் விவசாய பல்கலைக்கழகங்களில் இருந்து வந்தாலும் அவை சிறிதளவு கலப்படம் செய்யப்படுகின்றன. ஆனால், இவர்கள் பணப்பயிர்கள் மற்றும் காய்கறிகள் மூலம் அதிக பணம் சம்பாதிக்கின்றனர். உருளைக் கிழங்கு முக்கியப் பயிர். தனியார் நிறுவனங்களில் இருந்து வரும் விதைகள் மிகவும் விலை உயர்ந்தவை. இதே நேரத்தில் பால் உற்பத்தியில் பெரியமாற்றம் ஏற்பட்டது. ஒவ்வொருவரும் 3 முதல் 5 பசுக்களை வைத்திருந்தனர். பால் மையங்களை பெண்கள் நிர்வகிக்கின்றனர். இதே முறை இப்பொழுது பரவிவருகிறது. விவசாயிகளுக்கு தரமான பருப்பு விதைகள் மகாராஷ்டிரா மற்றும் மத்தியப்பிரதேசத்திலிருந்து கிடைக்கிறது. நதியிலிருந்து மேல்பகுதியில் சாய்வாக உள்ள நிலங்கள் சுமார் 200 முதல் 300 மீட்டருக்கு அடுத்து ஒரு பருவப்பயிர் மட்டுமே தருகிறது. அநேக காரணங்கள் கூறினாலும், சரியான திட்டங்கள் மற்றும் அரசாங்கத்தின் முயற்சிகள் இல்லாவிட்டால் விவசாயத்தில் புதிய பயிர்களை பயிரிடுவது கடினம்.

- விவசாய புதிய பயிர் வகைகள் தொடர்பான சொற்களையும் வாக்கியங்களையும் கோடிடவும். மேலும் அவை இந்திய விவசாயிகளுக்கு எந்த வகையில் உதவுகிறது என விவரி.
- உன் கிராமத்தில் அல்லது உனக்கு தெரிந்த கிராமத்தில் ஏற்பட்டவிவசாய பயிர் மாற்றங்கள் குறித்து விவரி.

விவசாய பயிர் வகைகள் உணவு தானியங்களின் உற்பத்தியின் மீது தாக்கத்தை காட்டுகிறது. இவை பல குழப்பங்களுக்கு வழிவகுக்கிறது. இவற்றை சிறந்த திட்டமிடுதல் மூலம் தீர்க்கலாம். ஏனெனில், வளங்களை பணப்பயிர்களுக்கு பயன்படுத்துவதால், உணவு தானியங்களின் உற்பத்தி குறைந்து விடலாம். ஐரோப்பா (700 கிராம்) மற்றும் USA (850 கிராம்) உடன் ஒப்பிட்டால் இந்தியாவின் தலைசரி தானிய நுகர்வு மிகக்குறைவு. தலைசரி உணவு தானியங்களின் தேவை இந்தியாவில் உணவு பாதுகாப்பின் மீது தாக்கத்தை காட்டுகிறது. வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்களின் உணவுக்கான எதிர்ப்பார்ப்பு அதிகமாக உள்ளது. இவர்கள் உணவு தானியங்களையே சக்தியை தரும் வளங்களாக எடுத்துக்கொள்கின்றனர். எனவே, உணவு தானியங்கள் மற்றும் உணவுப் பயிர்களை பயிரிடுதல் சமமான அளவில் நிகழவேண்டும்.

### உணவு கிடைக்கும் வழிகள் :

உணவு பாதுகாப்பில் மற்றொரு முக்கிய அம்சம் உணவு கிடைக்கும் வழிகள். இது உணவு தானியங்கள் மற்றும் மற்ற பொருட்களை உற்பத்திசெய்ய போதுமானதாக இல்லை. ஒவ்வொருவரும் உணவு தானியங்களை தேவைக்கேற்ப வாங்கிகொள்ள வேண்டும். ஒவ்வொருவராலும் அவர்களுக்கு தேவையான அளவு உணவு தானியங்களை பெறமுடிகிறதா?

எட்டாம் வகுப்பில் கற்ற ஏழ்மை குறித்து நினைவுப்படுத்தி கொள்ளவும், நாம் உண்ணும் உணவு நம் உடலில் எரிக்கப்பட்டு சக்தியை உற்பத்தி செய்கிறது. இதையே நாம் கலோரிகளாக அளிக்கிறோம். இது நம் வேலைகளை நாம் செய்து கொள்ள உதவுகிறது. நாம் குறைந்தளவு உணவு அல்லது ஊட்டச்சத்து குறைவான உணவை உட்கொண்டால் நம் உடலுக்கு தேவையான கலோரிகள் கிடைக்காது. இதனால் வேலைகளை செய்துகொள்ள சிரமப்படுவோம். மேலும் ஆரோக்கிய குறைபாடும் ஏற்படும்.

நகரத்தில் வாழும் மக்களுக்கு 2100 கலோரிகள் மற்றும் கிராமத்தில் வாழும் மக்களுக்கு 2400 கலோரிகளை அளிக்கும் உணவு பொருட்களை சாப்பிடவேண்டும். நகரம் மற்றும் கிராமங்களில் உள்ள கலோரிகள் தேசிய சராசரி கலோரிகளை



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

வரைபடம் 10.3: இந்திய கிராமங்களில் ஒவ்வொருவரும் உட்கொள்ளும் கலோரிகள்




விட குறைவாக உள்ளது. உட்கொள்ளும் கலோரிகள் அளவு 1983 முதல் 2004 ஆம் ஆண்டு வரை குறைந்துள்ளது. நம் நாடு பொருளாதார வளர்ச்சி அடைந்தாலும், இது ஒரு அதிர்ச்சிதரும் உண்மை. பொருட்களின் உற்பத்தி மற்றும் சேவைப் பயன்பாடு அதிக சதவீதம் உணர்ந்துள்ளது.

பங்கிடுதலில் வேறுபாடுகள் சாதாரணமானது. ஆனால், பொருளாதார நிலையில் வசதியுள்ளவர்கள் தேவையை விட அதிக கலோரிகள் எடுத்துக்கொள்கின்றனர். ஆனால், பலபேர் தேவையை விட குறைவான கலோரிகள் கொடுக்கும் உணவையே சாப்பிடுகின்றனர். 80% கிராமங்களில் வாழும் மக்கள் தேவையை விட குறைவாக கலோரியை எடுத்துக் கொள்கின்றனர். வரைபடம் 10.3 ல் கவனித்தால் கிராமங்களில் வாழும் மிக ஏழ்மையான மக்கள் மிகக் குறைவான கலோரி சத்துணவை உண்கிறார்கள். இது அவர்களுக்கு தேவையான 2400 கலோரிகளை விட மிகக்குறைவு. அது மட்டுமல்லாமல் இவர்கள் கடினமான மற்றும் உடல் உழைப்பு வேலைகளை செய்யும் கூலிகளாக உள்ளனர்.

குறைவான கலோரிகள் எடுத்துக்கொள்ள முக்கிய காரணம், அவர்களிடம் தேவையான உணவுபொருட்களை வாங்கும் பண வசதி இல்லாமையே. இதற்கு இன்னும் பல காரணங்கள் உண்டு. அவை, ஏழ்மை, வேலையின்மை, அரசாங்க உதவிகள் கிடைக்காமை போன்றவை. இவற்றைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள இவற்றுள் சிலவற்றை பற்றி நினைவுகூர்க.

## பொது விநியோக முறை :

நியாயவிலைக் கடை மூலம் மக்கள் உணவுப் பொருட்களை பெறுகின்றனர். 2004-05 ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் மூலம் மக்களுக்கு உணவுப் பொருட்களை விநியோகிக்கும் நிறுவனங்கள் குறித்தும் அவற்றின் விலைகுறித்தும் மேலும் பயன்படுத்தப்பட்ட மொத்த உணவுபொருட்கள் குறித்தும் விவரங்களை தெரிந்துகொண்டோம். கோட்டு வரைபடம் 11 யை கவனித்தால் அனைத்து பகுதி மக்களும் எவ்வாறு பொது விநியோக முறையின் மீது ஆதாரப்பட்டு உணவுப் பொருட்களை சேகரித்துள்ளனர் எனத் தெரிந்து கொள்கிறோம். கணக்கெடுப்பின் படி, தென்னிந்தியாவில் பொது விநியோக முறையை நன்றாக பயன்படுத்திக் கொள்கின்றனர். அதாவது அரசு, மக்களுக்கு குறைந்த விலைக்கு உணவு தானியங்களை வழங்குகிறது. ஆனால், மற்ற மாநிலங்களில் ஏழை பணக்காரர் என பிரித்து, இருவருக்கும் வெவ்வேறு விலைக்கு பொருட்களை வழங்குகிறார்கள். ஏழை மக்களில், மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள மக்கள் உணவுப் பொருட்களை பெறுவதற்கு அரசாங்கம் பல உத்திரவாதங்களை வழங்குகிறது.

- பொதுவிநியோக முறை குறித்து 8 ஆம் வகுப்பில் படித்ததை நினைவுப்படுத்தி கொள்ளுங்கள். மேலும் இது இந்தியாவின் உணவுப் பாதுகாப்பிற்கு எந்த வகையில் உதவுகிறது ?

எடுத்துக்காட்டாக, ‘அந்தியோதயா அட்டை’, உடையவர்கள் மாதத்திற்கு 35 கிலோகிராம் உணவு தானியங்களை பெறும் உரிமையை பெற்றுள்ளனர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

2013 ல் இந்திய அரசாங்கம் 'தேசிய உணவு பாதுகாப்பு சட்டம்'[National Food Security Act] மூலம் "உணவு பெரும் உரிமை" சட்டத்தை கொண்டுவந்தது.

வரைபடம் 10.4: பொதுவிநியோக முறையின் மூலம் வாங்கிகொள்ளும் சதவீதம், நெல் மற்றும் கோதுமை சதவீதம் 2009-10




- கோடிட்ட இடங்களை நிரப்புக.

இந்தியாவில் நியாயவிலைக்கடை மூலம் ____ சதவீதம் மக்கள் நெல் மற்றும் ____ சதவீதம் மக்கள் கோதுமையை வாங்கிக் கொள்கின்றனர். மக்கள் அவர்களுக்கு தேவையான உணவுப் பொருட்களை ____. மூலம் பெறுகின்றனர். இருப்பினும் ____ மற்றும் ____ மாநிலங்களில் பொதுவிநியோக முறை அதிக வளர்ச்சியடைந்துள்ளது. மேலும் சில மாநிலங்களான ________, ________ , ________ ஆகியவற்றில் பொதுவிநியோக முறை எதிர்பார்த்த அளவு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யவில்லை.

## பொது விநியோக முறையும் கையிருப்பு நிலையும் :

அரசாங்கத்தால் சேகரிக்கப்பட்ட உணவு தானியங்களான நெல் மற்றும் கோதுமையை இந்திய உணவுக்கழகம்(FCI-Food Corporation of India)மூலம் நிர்வகித்தலை கையிருப்பு நிலை என்பர். இந்திய உணவுக்கழகம்(FCI)நெல் மற்றும் கோதுமையை மக்களிடமிருந்து சேகரிக்கும். விவசாயிகளுக்கு அரசாங்கம் நிர்ணயித்த விலைக்கு உணவுக்கழகம் பணத்தை அளிக்கும். இவ்வாறு முன்னதாக நிர்ணயிக்கப்பட்ட விலையை குறைந்தபட்ச ஆதரவு விலை(MSP)எனக்கூறுவர் இந்த விலையை ஒவ்வொரு வருடமும் அரசாங்க அதிகாரிகள் நிர்ணயிப்பர்..

இவ்வாறு மாநில மற்றும் மத்திய அரசுகள் சுமார் 1/3 பாகம் உணவு தானியங்களை விவசாயிகளிடமிருந்து சேகரிக்கின்றனர். இவ்வாறு சேகரிக்கப்பட்ட உணவு தானியங்கள் வெவ்வேறு முறைகள் மூலம் மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. சமீபகாலமாக அரசு நிறுவனங்கள் பொது வினியோகத்திற்கு தேவையான தானியங்களை விட அதிக அளவு சேகரிக்கின்றன. அரசாங்க கையிருப்புகள் நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. அதாவது, மக்களுக்கு குறைந்த அளவு வழங்கப்படுகிறது. (2011 ஆம் ஆண்டிற்கான உணவு தானியங்களின் அவசியத்தை அட்டவணையில் பார்க்கலாம்). அரசாங்கம் மக்களுக்கு தேவையான உணவுதானியங்களை வழங்குவதில்லை என பலர் விமர்சிக்கின்றனர். சில நேரங்களில், அராசாங்கம் தானியங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. சாதாரண மக்கள் உணவு தானியங்கள் கிடைக்காமல் வருந்தும்போது, அரசாங்கம் வெளி நாடுகளுக்கு குறைந்த பணத்திற்காக ஏற்றுமதி செய்வதை குறித்து நீ என்ன நினைக்கிறாய் ?
இது ஏறக்குறைய 2/3 பாகம் மக்களுக்கு பயன்படுகிறது. இந்த சட்டத்தின்படி, குறைந்த வருவாய் பெறும் குடும்பங்களில் உள்ள ஒவ்வொருவருக்கும் மாதம் 5 கிலோகிராம் உணவு தானியங்களை குறைந்த மானிய விலைக்கு வழங்குகிறது.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

மிகவும் ஏழ்மையில் உள்ள மக்கள் 35 கிலோகிராம் உணவு தானியங்களை பெறுகின்றனர். சில ஆண்டுகளாக மத்திய அரசு அரிசி, கோதுமை மற்றும் மற்ற தானியங்களை ரூ.3,ரூ.2 மற்றும் ரூ.1 வீதம் மக்களுக்கு வழங்குகிறது. இந்த சட்டத்தின் படி 75% கிராம மக்கள் மற்றும் 50% நகர மக்களுக்கு உணவு தானியங்களை விநியோகிக்க முடியாமல் போனால், அதை வாங்கிக்கொள்ள தேவையான பணத்தை வழங்குகிறது. அதுமட்டுமல்லாமல், கர்பிணிப்பெண்கள், பால்கொடுக்கும் தாய்மார்கள் 1 முதல் 6 வயது நிரம்பிய அங்கன்வாடி குழந்தைகள் ஆகியோருக்கு தேவையான உணவை வழங்கவேண்டும். மேலும் மதிய உணவுத்திட்டம் மூலம் பள்ளிக்கு வரும் 5-14 வயது நிரம்பிய குழந்தைகளுக்கு உணவு வழங்கவேண்டும் எனவும் இச்சட்டம் கூறுகிறது.

இந்திய பாராளுமன்றம் தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் (NFS-National Food Security Act) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்(ICDS - Integrated Children's Development Scheme) போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. சமீபகாலத்தில், இந்திய நீதித் துறையும் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளது. தனியார் நிறுவனங்களின் ஆலோசனைப்படி, மாநில மற்றும் மத்திய அளவில் உள்ள அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கவேண்டுமென அனைத்து மாநிலங்களுக்கும் உச்சநீதிமன்றம் தீர்ப்பை வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் ஏற்கனவே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால், அதேபோல் மற்ற மாநிலங்களிலும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. ஏறக்குறைய 14 கோடி குழந்தைகள் மதிய உணவு திட்டத்தின் மூலம் பலனடைகின்றனர். இந்தத் திட்டத்தை சரியான முறையில் அமுல்படுத்த நீதித்துறை பல ஆலோசனைகள் மற்றும் வழிமுறைகளை பரிந்துரைக்கிறது. அதில் ஒன்று, தினமும் ஒரு உணவு வகையாக சுத்தமாக, சூடாக மதிய உணவை வழங்கவேண்டும். இரண்டாவதாக, தாழ்த்தப்பட்டவர்கள், விதவைகள், அனாதை பெண்கள் போன்றவர்களை சமையல் செய்யும் வேலைக்காக தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும் என்று நீதித்துறை கூறியுள்ளது.. இத்திட்டமானது உலகிலேயே பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் மிகப்பெரிய திட்டமாகும். இத்திட்டத்திற்கு தேவையான நிதியை அரசாங்கம் வரிகள் மூலம் சேகரித்துக் கொள்ள வேண்டும் என நீதித்துறை கூறியுள்ளது. தற்போது அங்கன்வாடி மையங்களிலும் சூடான உணவை குழந்தைகளுக்கு வழங்குகின்றனர்.

**ஊட்டச்சத்து நிலை :**

கடைசியாக குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் வழங்கப்படும் உணவு ஊட்டச்சத்தை அளிக்கிறதா என்பதை உறுதி செய்வோம். இதைபோன்று மேலே கூறப்பட்ட அரசாங்க திட்டங்கள், செயல்படும் முறை மற்றும் இதில் உள்ள நிறைகுறைகளையும் மதிப்பிடலாம். உடலில் நடைபெறும் அனைத்து செயல்பாட்டிற்கும் உணவு மிகவும் அவசியம். அதாவது சக்தி பெறுதல், வளர்ச்சி அடைதல், ஆரோக்கியமாக இருத்தல் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி பெறுதல் ஆகியவற்றிற்கு உணவு மிக அவசியம். நாம் உண்ணும் உணவை கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

**மாவுப்பொருட்கள் :** கோதுமை, அரிசி, கேழ்வரகு, சோளம், எண்ணெய், சர்க்கரை, கொழுப்புபொருட்கள் முதலியவை சக்தியை அளிக்கும்.

**புரதச்சத்து** : வளர்ச்சி மற்றும் உடலில் திசுக்கள் உற்பத்தியாக உதவி செய்யும் (எ-டு) பீன்ஸ், பருப்புகள், மாமிசம், கோழி முட்டை, அரிசி, கோதுமை, முதலியவை.

**விட்டமின்கள்** : உடலுக்கு பாதுகாப்பையும், முக்கியமான பாகங்கள் வேலைசெய்ய உதவுகிறது. (எ-டு) பழங்கள், கீரைகள், முளைவிட்ட தானியங்கள், மெருகேற்றப்படாத அரிசி முதலியவை.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**தாதுக்கள் :**

இது நம் உடலுக்கு குறைந்த அளவே தேவைப்படுகிறது. ஆனாலும் இரத்தம் உற்பத்தியாக தேவையான இரும்புச்சத்து அளித்தல் போன்ற முக்கியமான வேலைகளுக்கு இது உதவுகிறது. இது கீரை வகைகள், கேழ்வரகு முதலியவற்றின் மூலம் கிடைக்கிறது.

ஒரு கணக்கெடுப்பு நடத்தினால், ஒரு நாளில் மக்கள் உண்ணும் உணவு அளவுகள் குறித்து தெரிந்து கொள்ளலாம். இதன் மூலம் மேலே கூறியதுபோல் மக்கள் அனைவரும் அனைத்து ஊட்டச்சத்துக்கள் உடைய உணவை சாப்பிடுகின்றனரா இல்லையா என தெரிந்துகொள்ளலாம். நிச்சயமாக ஒருவன் எவ்வளவு மாவுச்சத்து, புரதச்சத்து, விட்டமின்கள் எடுத்துக்கொள்கின்றான் என்பதை கூறுவது கடினம். ஊட்டச்சத்து நிபுணர்கள் ஒவ்வொரு மனிதனும் ஊட்டச்சத்து உடையவரா என்பதை நிர்ணயிக்க உயரம் மற்றும் எடைசம்பந்தமான குறிப்பான்களை பயன்படுத்துகின்றனர். அதிக மக்கள் தொகைக்கு ஏற்ப பல்வேறு அளவீடுகளை, புள்ளிவிவர அறிவை ஊட்டச்சத்து நிபுணர்கள் பயன்டுத்துவதால் ஒரு நிலையான அளவை அடைய முடிகிறது. இதனால் தனிப்பட்ட மனிதனையும் ஒப்பிட முடிகிறது. இது மக்களின் உட்டச்சத்து நிலையைப் பற்றிய விவரங்களை கொடுக்கிறது.ஐதராபாத்தில் உள்ள 'தேசிய ஊட்டச்சத்து நிறுவனம்' (NIN) (National Institute Of Nutritions) நிர்வகித்த கணக்கெடுப்பின்படி, பல மாநிலங்களில் ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளது என கண்டறிந்துள்ளனர். நாம் ஒவ்வொரு குடும்பத்தையும் பார்க்கும் போது ஊட்டச்சத்துக் குறைபாடு ஒரு முக்கியக் காரணம் எனக் கூறலாம். முன் வகுப்புகளில் குறிப்பிடப்பட்ட கணக்கெடுப்பில் சத்து குறைபாடு உடைய ஏழ்மையான குடும்பத்தைப் பற்றி அதிக ஆய்வு அவசியமாகிறது. இந்த கணக்கெடுப்பு இது போன்று மறைக்கப்பட்ட உண்மைகளைப்பற்றி ஆராய உதவுகிறது.

மேலே விவரிக்கப்பட்டவாறு, குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை அறிந்துகொள்ள எடை மற்றும் உயரத்தை பயன்படுத்துகின்றனர். நீங்கள் அங்கன்வாடி மையங்களுக்கு சென்று இதை எவ்வாறு கணக்கிடுகின்றனர் என்பதை அறிந்துகொள்ளலாம். பெரியவர்களைப்போல் அல்லாமல் குழந்தைகளில் வளர்ச்சி வேகமாக நடைபெறும். எனவே அவர்களின் வயதோடு கூட எடையும் அதிகரித்து கொண்டிருக்கும். இதை சரியாக கணக்கிட எடையையும் மற்றும் வயதையும் சரியாக அளிக்கவேண்டும். இவ்வாறு கிடைத்த ஊட்டச்சத்து நிலையின் மதிப்புகளை ஊட்டச்சத்து நிபுணர்களால் தயார் செய்யப்பட்ட அட்டவணையின் மூலம் குழந்தைகளுக்கு தேவையான ஊட்டச்சத்து உணவு கிடைத்தது அல்லது ஊட்டச்சத்து குறைபாடு உள்ளது என கண்டறியலாம்.

எடுத்துக்காட்டாக குழந்தைகளின் எடையை குழந்தைகளின் வயதை ஆதாரமாகக் கொண்டு குழந்தைகள் வயதுக்கு தகுந்த எடையை பெற்றுள்ளனரா அல்லது அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கிறார்களா என தெரிந்துகொள்ளலாம்.




படம் 10.2: ஆந்திரபிரதேசத்தில் உள்ள அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளின் எடையை அறிந்துகொள்ள பயன்படுத்தப்படும் எடை அட்டவணை.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

தேசிய ஊட்டச்சத்து நிறுவனம் (NIN) கணக்கெடுப்பு எதை விவரிக்கிறது? நம் நாட்டில் பல மாநிலங்களில் ஒன்று முதல் 5 வயது குழந்தைகளில் 45% பேர் குறைவான எடையை பெற்றுள்ளனர். அதாவது அவர்களின் எடை நிர்ணயிக்கப்பட்ட எடையை விட குறைவாக உள்ளது. உண்மையில் இவர்கள் தேவையான உணவு கிடைக்காமல் பசியுடன் வாடுபவர்கள். இவர்கள் மிகக்குறைவான எடையுடன் நம்மால் அடையாளம் காண முடியாது. சராசரியாக அதிகமான குழந்தைகள் குறைவான எடையுடன் உள்ளனர் என்பதை அறியமுடியாது.இவ்வாறான குழந்தைகள் இருப்பது சாதாரணம் என நினைக்கிறோம். ஆனால், கணக்கெடுப்பு நமக்கு அதிர்ச்சியளிக்கிறது. மேலும் குறைஎடையுடைய சூழ்நிலைகள் குழந்தைகள் வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என நாமே அறியுமாறு செய்தது. ஏறக்குறைய நம் நாட்டில் உள்ள பாதி குழந்தைகள் இவ்வாறே உள்ளனர். இந்த NIN அறிக்கை தெரிவிப்பதுயாதெனில்,

“ஒன்று முதல் 3 வயது வரை உள்ள குழந்தைகளோடு 3 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளை ஒப்பிடும்போது குழந்தைகள் குறைவான எடையை பெற்றுள்ளனர். 50% க்கு மேலாக குஜராத் (58%) மத்தியப்பிரதேசம்(56.9%) உத்திரப்பிரதேசம்(53.2%) மாநிலங்களிலும் மேலும் குறைவாக கேரளாவில் (24%) உள்ளது.

மிகக்குறைவான எடைகொண்ட குழந்தைகள் இந்தியாவில் 16% உள்ளனர்”.

ஊட்டச்சத்து நிபுணர், மழலையர் பள்ளி குழந்தைகளை மூன்று அட்டவணை மூலம் ஒப்பிடுவர். கீழே கொடுக்கப்பட்டுள்ள இந்த அட்டவணை குழந்தையின் ஊட்டச்சத்து நிலையை சரியாக நிர்ணயிக்கும்.

- உங்கள் பகுதியில் உள்ள அங்கன்வாடி மையங்கள் இதை எவ்வாறு எதிர்கொள்கிறது என விவரியுங்கள் ?

வயது வந்த பெண்கள் மற்றும் ஆண்களின் உடல் எடைக் குறியீடு (BMI) மூலம் அவர்களின் ஊட்டச்சத்து நிலையை தெரிந்துகொள்ளலாம். இதைப்பற்றி முன் வகுப்புகளில் கற்றீர்கள். [BMI= (எடை கிலோ கிராமில் /உயரம் மீட்டரில்)]

| குறிப்பான் | சாதாரண எடையை விட குறைந்த எடைகொண்ட குழந்தைகளில் இது எதை குறிக்கும் | உன்னுடைய சொந்த வாக்கியத்தில் விவரி | நாட்டில் குழந்தைகளின் சதவீதம் |
|---|---|---|---|
| வயதுடன் ஒப்பிடும் போது எடை | குறைந்த எடை | | 45% |
| வயதுடன் ஒப்பிடும் போது உயரம் | வளர்ச்சி | பல காலங்களாக குழந்தை ஊட்டச்சத்து குறைபாடோடு இருந்தால் எலும்பு வளர்ச்சி குறைந்துவிடும்.அவர்கள் இருக்க வேண்டிய உயரத்தை விட குறைவாக இருப்பர்.இக்குறையை போக்குவது மிகக்கடினம். | 41% |
| உயரத்துடன் ஒப்பிடும்போது எடை | எடை குறைதல் | இது குழந்தை எடை குறைதலை குறிக்கும். சரியான உணவை அளித்தால் விரைவில் சராசரி எடையை பெறுவர். | 21% |

- மேலே குறிப்பிட்டுள்ள தகவல்களைப்பற்றி உனது கருத்தென்ன ? ஒரு பத்தி எழுதுக.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இவ்வாறு கிடைத்த BMIயை வயதுடன் ஒப்பிட்டால் அந்த மனிதன் அதிக எடையுடன் உள்ளானா? குறைவான எடையுடன் உள்ளானா? அல்லது சரியான எடையை கொண்டுள்ளானா? எனக்கூறலாம். அதிக எடை எனில் அதிக கொழுப்புப் பொருட்கள் உடலில் இருக்கிறது என்பதை நிர்ணயிக்கிறது. குறைவான எடை எனில் தேவையை விட உடலில் குறைவான கொழுப்புச்சத்து உள்ளது எனக் கூறலாம்.

NINகணக்கெடுப்பின் படி, BMIஆண்களிலும், பெண்களிலும் கீழ்கண்டவாறு உள்ளது. ஆண்களில் நீண்ட நாள் சத்து குறைபாடுடன் (BMI<18.5) 35% , பேர் உள்ளனர். அதேபோல் அதிக எடை/உடல் பருமனுடன் (BMI >25) 10%. பேர் உள்ளனர்.

பெண்கள் 35% பேர் சத்துகுறைபாடுடனும் 14% பேர் அதிக எடை / உடல்பருமனுடனும் உள்ளனர். நீண்டநாள் சத்துகுறைபாடுடையோர் அதிகமாக ஒடிசா, குஜராத் மற்றும் உத்திர பிரதேச மாநிலங்களில் உள்ளனர். அதைவிடக் குறைவாக ஆந்திரப்பிரதேஷ், மகாராஷ்டிரா, மத்தியபிரதேஷ் மற்றும் மேற்கு வங்காளத்தில் 33% முதல் 38% வரை சத்துகுறைபாடுடன் உள்ளனர்.

இது உணவு பாதுகாப்புடன் எவ்விதத்தில் தொடர்புடையது? சத்தீஸ்கரில் ஒரு மருந்துவர் ஒரு கிராமத்தில் சுகாதார மையத்தை நிர்வகிக்கிறார். இவர் தினமும் குறைந்த எடை உடைய பல நோயாளிகளை சந்திக்கிறார். இது மேலே கூறப்பட்ட பொது விநியோகமுறையின் முக்கியத்துவத்தை விவரிக்கிறது. இந்த விவரத்தின்படி பொதுவிநியோக முறை மூலம் பெறும் 35 கிலோகிராம் உணவுதானியங்கள் ஒவ்வொரு மாதத்திற்கும் 5 பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 111 நாட்களுக்கு மட்டுமே வரும். மற்ற நாட்களுக்கு அவர்கள் உணவு தானியத்தை சந்தையில் வாங்க வேண்டும். அல்லது சுய உற்பத்தி மீது ஆதாரப்படவேண்டியுள்ளது.



படம் : 10.2 பொது விநியோகக் கடை

எடுத்துக்காட்டாக, பிலாஸ் பூரில் ரிக்ஷா ஓட்டும் தொழிலாளி தினமும் 70 முதல் 80 ரூபாய் சம்பாதிக்கிறார். இவர் பொதுவிநியோக முறை மீது ஆதாரப்பட்டு வாழ்கிறார். இவர் 400 ரூபாய் வீட்டுவாடகைக்கும் 100 ரூபாய் மின்சார கட்டணத்திற்கும் கட்டுகிறார். எனவே, இவர் எடைகுறைவதிலும், காசநோயால் பாதிக்கப்படுவதிலும் ஆச்சரியமில்லை.

மேலே கூறியவை, உணவு பாதுகாப்பைப்பற்றி கூறும் குறிப்பான்கள் ஆகும். சத்தீஸ்கரில் உள்ள மருத்துவர் கீழ்கண்டவாறு கூறுகிறார்.

“உணவு தேவைக்கேற்ப கிடைப்பதாக இருந்தால் யாருடைய எடையும் குறைவதும்/அதிகரிப்பதும் நடக்காது. நாம் அனைத்து முறைகளுக்கும் தீர்வு காணலாம். அவை பொதுவிநியோக முறையின் நிர்வகிப்புத் தன்மை, உணவு உற்பத்தி பங்கீட்டின் முக்கியத்துவம் மற்றும் மக்களின் அதிக மற்றும் குறைவான எடையை கருத்தில் கொண்டு உணவை வாங்கும் சக்தி, ஒரு மனிதனின் உயரம் அவன் சிறுவயதிலிருந்து சரியான உணவை உண்டானா என்பதை தெரிவிக்கிறது. நாம் இப்பொழுதும் குறைவான எடை மற்றும் குறைவான உயரம் உள்ளவர்களை ஊட்டச்சத்து குறைபாட்டிற்கு உதாரணமாக கூறுகிறோம். ஆனால் நான் அதற்கு சரியான ஒரு வார்த்தையை கூறுகிறேன். அதுதான் ‘பசி’ என்பதாகும்”

## பாடச்சுருக்கம்:

முதல் பகுதியில் உணவுபாதுகாப்பின் ஒரு பிரிவாக இந்தியாவில் உணவு உற்பத்தி குறித்து விவரிக்கப்பட்டது. உணவு உற்பத்தியை அதிகரிக்க என்ன செய்ய வேண்டும் என்பது ஒரு பெரிய கேள்விக்குறி. இரண்டாம் பகுதியில் கிடைக்கும் பொருட்களை அளக்க வேண்டுமென தெரிந்து கொண்டோம். இதில் வருத்தப்படவேண்டிய விஷயம் என்னவெனில் மனிதனுக்கு கிடைக்கும் உணவு தானியங்கள் நாளுக்குநாள் குறைந்துவருகிறது..



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

எவ்வளவு உணவு தானியங்கள் உற்பத்திசெய்த போதிலும் அவை மக்களுக்கு கிடைக்குமாறு செய்ய வேண்டும்.சந்தையில் வாங்குதல் அல்லது நியாய விலைக்கடை மூலம் வாங்குதல் அல்லது பள்ளியில் மதிய உணவுத்திட்டங்கள் மூலம் உணவு தானியங்கள் மக்களிடம் சேர்க்கப்படும். பலர் தேவையான கலோரிகளைவிட குறைவான கலோரிகளை பயன்படுத்துவதைக் காணலாம். இது ஏழைகளில் அதிகமாக உள்ளதை பார்க்கலாம். உணவு தானியங்கள் மட்டும் அல்லாமல் மற்ற உணவு பொருட்களான பழங்கள், காய்கறிகள், மாமிசம், கோழி முட்டை முதலியவற்றை கொடுத்தாலும் கலோரி பற்றாக்குறை என்பது ஆபத்தாகவே உள்ளது. பொதுவிநியோக முறையின் தேவை அதிகமாக உள்ள இடங்களில் சரியாக நடத்தப்படுவதில்லை. இதை நாம் ஊட்டச்சத்து கணக்கெடுப்பின் மூலம் தெரிந்துகொண்டோம். கணக்கெடுப்பின்படி பல குழந்தைகள் மற்றும் பெரியவர்களும் கூட நீண்டகாலமாக ஊட்டச்சத்து உணவு இல்லாமல், இருக்கவேண்டிய எடையை விட குறைவான எடையுடன் உள்ளனர். நீண்டகாலம் முதல் 35 முதல் 45 மக்கள், அவர்களுக்கு தேவையான உணவை விட குறைவான உணவை உட்கொள்கின்றனர். இந்தியாவில் தேவையான அளவு உணவு தானியங்கள் கிடைத்தாலும் நாட்டில் பலர் ஊட்டச்சத்து குறைபாடோடு அதாவது பசியோடு உள்ளனர். இது வரவேற்கவேண்டிய விஷயம் அல்ல. உணவு பாதுகாப்பை அதிகரிக்க அனைத்து கோணங்களிலும் ஆலோசித்து முயற்சி செய்ய வேண்டிய

## முக்கியச் சொற்கள்

உற்பத்தி, கிடைக்கும் நிலை, கிடைக்கும் வழி, ஊட்டச்சத்து, கையிருப்பு நிலை, பசி, பொது விநியோக முறை

## உனது கற்றலை மேம்படுத்துக

1. இயற்கை சீற்றங்களினால் ஒரு ஆண்டில் உணவு தானியங்களின் உற்பத்தி குறைந்தால், அரசாங்கம் எந்தெந்த முறைகளை கடைபிடிப்பதால் உணவு பொருட்களை கிடைக்கச் செய்யலாம் ?(AS4)
2. உன்னுடைய பாடக் கருத்துப்படி ஒரு எடுத்துக்காட்டை கற்பனை செய்து, குறைவான எடைக்கும் உணவு கிடைக்கும் வழிக்கும் இடையே உள்ள தொடர்பை விவரி ?(AS4)
3. உன் குடும்ப உறுப்பினர்கள் ஒரு வாரத்தில் உட்கொள்ளும் உணவை பரிசீலித்து, ஒரு அட்டவணையை தயார்செய்து, அதில் உள்ள ஊட்டச் சத்துக்களை விவரி?(AS3)
4. அதிக உணவு உற்பத்தி மற்றும் உணவு பாதுகாப்பிற்கு இடையே உள்ள தொடர்பை விவரி?(AS1)
5. கீழே கொடுக்கப்பட்ட வாக்கியத்தை நிரூபிக்க, காரணங்களைக் கூறு “பொதுவிநியோக முறை மக்களின் உணவு பாதுபாப்பை அதிகரிக்கும்”.(AS1)
6. படத்தில் காட்டப்பட்டது போல் உணவு பாதுகாப்பை குறிக்கும் சுவரொட்டிகளை தயார் செய்க. (AS6)




SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

7. பக்கம் 138ல் கடைசி பத்தியில் "கணக்கெடுப்பின்படி ................ பெறுவதற்கு அரசாங்கம் பல உத்திரவாதங்களை வழங்குகிறது.". - பகுதியை படித்து உன் கருத்தை எழுதுக.(AS2)
8. கீழ்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறித்துக் காட்டுக.(AS5)
(i) கர்நாடகா (ii) ஒடிசா (iii) குஜராத் (iv) மகாராஷ்டிரா
(v) மத்திய பிரதேசம் (vi) மேற்கு வங்காளம் (vii) சத்தீஸ்கர்
(viii) தெலங்கானா (ix) உத்திர பிரதேசம் (x) பஞ்சாப்

## செயல் திட்டம்

1. கீழே கொடுக்கப்பட்ட பாடலைப் படியுங்கள். உணவு பாதுகாப்பில் உள்ள ஏதேனும் ஒரு கருத்தை எடுத்துக்கொண்டு இவ்வாறான பாடலை எழுத முடியுமா?

**அம்மா !**

பசியால் கதறும் குழந்தையைக்
கண்டு-கண்ணீர் சிந்தும்
ஏழைத் தாயே! உனது,
பசி என்று தணியும்,
உனது தாகம் என்று தீரும்,
மழை பெய்து ஏரி நிரம்பினால்,
நிலம் உழுது, பயிர் செய்து
நெல் குத்தி, உமி நீக்கி
உனது குழந்தையின் வயிறு
உணவைக் காணுமா?
நீ சேற்றில் கால் வைத்தால் தானே!
உனது குழந்தை சோற்றில் கை வைக்கும்!
தினமும் அரை வைற்றுடன்
உறங்குதே உன் பிஞ்சுக்குழந்தை!
கலங்காதே கடவுள் இருக்கிறார்!

2. உங்கள் குடும்பம் மற்றும் சுற்றுப்புறங்களில் உள்ள குடும்பத்தாரிடம் சிறுதானியங்கள் நுகர்வு குறித்து தகவல்களை சேகரித்து பரிசீலனை செய்க.

| வ. எண் | குடும்பத் தலைவரின் பெயர் | அவர்கள் உண்ணும் உணவு | | | பயன்படுத்தும் சிறுதானியங்கள் | சிறுதானிய பயன்பாட்டில் அதிக/ குறைய காரணங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | காலை | மதியம் | இரவு | | |
| | | | | | | |



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம் 11

# சமத்துவ மற்றும் நிலையான முன்னேற்றம்

## முன்னேற்றம் குறித்து மீண்டும் பார்க்கும் போது...

முன்னேற்றத்தை அளவிடும் காரணியாக மனித முன்னேற்ற குறியீடு(Human Development Index) தேசிய உள்நாட்டு உற்பத்தி மற்றும் தலைசரி வருமானம் (பாடம் 2ஐ பாருங்கள்) போன்றவற்றை விட மேம்பட்டதாகும். தேசிய உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் மொத்த மதிப்பை குறிக்கிறது. இதன் கருத்துப்படி, நாட்டின் முன்னேற்றம் பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியோடு மட்டும் வரம்புக்குட்பட்டதாகும். இந்தியாவை கருத்தில் கொண்டு பார்க்கும் போது, பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி விரைவாக அதிகரிக்கும்போது, தேசிய வருவாயும் அதிகரிக்கிறது. ஆனால் அதனுடன் ஊட்டச்சத்து குறைபாடு, கல்வியறிவின்மை, உடல் நலக் குறைவு பெரும்பான்மை மக்களிடையே இருப்பதை காண முடிகிறது. மனித முன்னேற்ற குறியீடு, முன்னேற்றத்தின் பொருளை விரிவு படுத்தியுள்ளது. இதன்படி சமூக குறிகாட்டிகளான கல்வி, உடல்நலம் போன்றவையும் முன்னேற்றத்தில் அடங்கியுள்ளன.

இந்த விரிவுபடுத்த முன்னேற்ற அளவீடு முறையில் சேர்க்கப்படாத வேறு பல காரணிகளும் உள்ளன. நம் இந்தியாவில் 90 சதவீதத்திற்கும் அதிகமான உழைப்பின் சக்தி அமைப்பு சாரா துறையில் உள்ளது. இதில் வேலை செய்திட தேவையான நிலைமைகள் ஊக்கமளிப்பதாக இல்லை. பொதுவாகவே, அமைப்பு சாராதுறையில் உள்ள சுய வேலை செய்வோர் மற்றும் கூலிக்கு வேலை செய்வோர் வருவாய் குறைவாகவும், பரிதாபகரமாகவும் உள்ளது. (பாடம் 3ஐ பாருங்கள்) இவ்வாறாக, அதிக சதவீத உழைப்பு சக்தி குறைவான ஊதியம் உள்ள வேலைவாய்ப்பில் இருக்கும் போது, தேசிய உள்நாட்டு உற்பத்தி (GDP) அதிகரிப்பு ஏற்பட்டால், பலவகைப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி, குறிப்பிட்ட குழுவினருக்கு மட்டுமே பயனை தரும். அதிக வருவாய் மற்றும் செல்வம் உடைய மக்கள், உலகிலுள்ள எதையும் தேர்வு செய்து, வாங்கி பயன்படுத்திக் கொள்ளும் எல்லா வாய்ப்புகளையும் பெற்றுள்ளவர். (பாடம் 10ஐ பாருங்கள்) மக்கள் தொகையில் சில மக்கள் உலகத்தரம் வாய்ந்த வசதிகள் பெற்று ஆடம்பர வாழ்க்கை வாழ்கின்றனர். பெரும்பான்மை பிரிவு மக்கள். போதிய வேலை வாய்ப்பு, வருவாய் இன்றி வாழ்கின்றனர். இன்னமும் சீரான வாழ்க்கைக்கு தேவையான குறைந்தபட்ச வசதிகளை பெறமுடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறாக, வருவாய் மற்றும் வேலை வாய்ப்புகளில் கணிசமான சமனின்மை மக்களிடையே காணப்படும் போது, அவற்றை சமூகநீதிகொண்ட சமத்துவ சமுதாயத்திற்கு அடிப்படையாகி கருத இயலாது.

- கோட்டு வரைபடம் மற்றும் படங்களின் ஆதாரமாக, இந்தியாவில் உள்ள சமத்துவமின்மை குறித்து ஒரு சிறு குறிப்பு எழுதுக.




*கோட்டு வரைபடம் 12.1 : ஆண்டு வருவாயை ஆதாரமாகக் கொண்டு இந்தியாவில் உள்ள குடும்பங்களின் பங்கீடு(2010 கணக்கெடுப்பு படி)*



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கோட்டு வரைபடம் 11.2 : கோடீஸ்வரர்களிடம் இருந்த மொத்த செல்வம் (பில்லியன் ரூபாய்களில்)




கோட்டு வரைபடம் 11.3: கோடீஸ்வரர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு. (பில்லியன் ரூபாய்களின்)






படம்11.1: மும்பையில் உள்ள தாரவி குடிசை வாழ் பகுதி. இது இந்தியாவில் நகர்புற ஏழை மக்கள் வாழும் மிகப் பெரிய குடியிருப்பு பகுதி.



படம் 11.2 :ஐதராபாத்தில் உள்ள உணவக அறையில் இருந்து பஞ்சாரா ஹில்ஸ் பகுதியின் தோற்றம் இது ஐதராபாத்தில் உள்ள செல்வந்தர்கள் வாழும் பகுதி.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பொருளாதார முன்னேற்றம், மற்றொரு மிகப் பெரிய விமர்சனம் யாதெனில் அது குறுகிய கண்ணோட்டத்துடன் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பு மீது அதிக கவனம் செலுத்தி, சுற்றுப்புற சூழலை உதாசீனபடுத்தி விட்டது என்பதாகும். பல்வேறு வளர்ச்சிக்கான பயணத்தின் போது சேதபடுத்தப்பட்டதை நாம் காண முடிகிறது. காடுகள் அழிக்கப்படுதல், மண் அரிப்பு, நிலத்தடி நீர் மட்டம் குறைதல், மாசடைதலின் அதிகரிப்பு, மேய்ப்பு நிலங்கள் மீதான மித மிஞ்சிய தேவை, எரிபொருளின் மீது அதிகம் சார்ந்திருத்தல், தொழிற்சாலைகளின் வெளியேற்றங்கள், இரசாயன உரங்களின் பயன்பாடு, விவசாயத்தில் பூச்சிக் கொல்லி மருந்துகளின் பயன்பாடு, வெப்பநிலை மாற்றங்கள் முதலிவை நம் முன் இருக்கும் சில முக்கியமான சுற்றுப்புற சூழல் பிரச்சனைகள் ஆகும். தொழில் மயமாதல், சமூகத்தின் ஒரு சில பிரிவினருக்கு, கணிசமான வசதி பொருட்களை உற்பத்தி செய்து அளித்துள்ளது. ஆனால், இயற்கை வளங்களுக்கு அச்சுறுத்தல் மற்றும் வானிலை மாற்றங்கள் கொண்ட உலகை ஏற்படுத்திவிட்டது. இவ்வாறான பொருளாதார வளர்ச்சி தொடர்ந்து ஏற்பட முடியாது.

இந்த பாடத்தில் நாம், பொருளாதார முன்னேற்றம், சுற்றுப்புறச் சூழல் மற்றும் மக்களிடையே உள்ள தொடர்புகளை பரிசீலித்து கண்டறியப்போகிறோம். பொருளாதார செயல்பாடுகளின் விரிவாக்கம் எவ்வாறு சுற்றுப்புறச் சூழலின் பல்வேறு அம்சங்களை பாதித்துள்ளது? மக்களுக்கு இயற்கை வளங்களின் பயன் பெறச்செய்தல், அவற்றின் மீது அவர்களுக்குரிய உரிமையை அளித்தல், அவற்றின் மீது அவர்களுக்குரிய உரிமையை அளித்தல், அவர்களுடைய வாழ்வின் வளங்கள் ஆற்றும் பங்கு குறித்து பொருளாதார முன்னேற்றம் கருதுவது என்ன? பொருளாதார முன்னேற்றம் குறித்து பல்வேறு மாதிரிகள் உள்ளனவா? இக்கேள்விகளுக்கான பதில்களை, நிகழ்கால பிரச்சனைகள் மக்களின் அனுபவங்களில் இருந்து பெறப் போகிறோம். பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியை அதிகரித்து, தற்போதுள்ள மக்கள் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கும் கிடைக்குமாறு செய்தல், உயிருள்ள மற்றும் உயிரற்ற இயற்கை வளங்கள் கொண்ட சுற்றுப்புற சூழல் மேம்பாடு– போன்றவற்றை கருத்தில் கொண்ட பரந்த நோக்கு கொண்ட பொருளாதார முன்னேற்றம் தேவை என்பதை நாம் கண்டோம்.

## சுற்றுப்புறச் சூழல் மற்றும் முன்னேற்றம் :

பொருளாதார முன்னேற்றத்தின் சுற்றுப்புற சூழலின் பங்கு குறித்து நினைவுபடுத்தி கொண்டு நாம் துவங்குவோம். இயற்கையோடு அமைந்துள்ள பொருட்களை நிலம், நீர், தாதுபொருட்கள் மற்றும் உலோக தாதுக்கள், மரங்கள் மற்றும் விலங்குகளிடமிருந்து பெறப்படும் பொருட்கள் முதலியவை உற்பத்தி முறையில் மையமானவை. விவசாயம், சுரங்கத் தொழில், கல்லெடுக்கும் சுரங்கம் போன்ற அடிப்படை துறை செயல்பாடுகளின் மற்றும் பொருட்களின் உற்பத்தி செய்யும் துறையிலும், மின் உற்பத்தி துறையிலும் உற்பத்தி அதிகமான அளவு இயற்கை வளங்களை சார்ந்துள்ளது. பொருளாதாரத்தின் இதர துறைகளும் பல்வேறு கோணங்களில் இயற்கை வளங்களை சார்ந்துள்ளன. இந்த இயற்கை வளங்களை அளித்திடும் இருப்புத் திறன் கொண்ட சுற்றுப்புறச் சூழலின் இச்செயலை சுற்றுப்புறத்தின் மூலாதாரச் செயல் (Environment Source Function) என குறிப்பிடப்படுகிறது. இச்செயல் மிகவும் குறைந்ததுள்ளது.காரணம் இவ்வளங்கள் மிகுந்தளவில் பயன்படுத்தபட்டுள்ளது அல்லது மாசடைதல் வளங்களை நச்சுத்தன்மை உடையாதாக்கிவிட்டது.

- . இந்திய விவசாயம் மற்றும் தொழிற்சாலைகள் தொடர்புடைய IX ஆம் வகுப்பு பாடங்களை மீண்டும் படித்திடுக.
- அப்பாடங்கள், பங்கீடு மற்றும் வித்தியாசங்கள் மற்றும் இயற்கை வளங்களை பயன்படுத்தி கொள்ளுதலில் உள்ள பிரச்சனைகள் குறித்து அப்பாடங்கள் எவ்வாறு (சுற்றுப்புறச் சூழல் முன்னேற்றம் அம்சம் தொடர்பாக)
- பொருளாதார முன்னேற்றம் என்றும் கருத்து, எவ்வாறு சுற்றும்புறச் சூழல் பிரச்சனைகளோடு போட்டியிடுகிறது என்பதை அடையாளம் காண்க.
- பசுமை புரட்சி திட்டம் பரவல்கள் எவ்வகையான சுற்றுப்புறச் சூழல் பிரச்சனைகளை உருவாக்கின? இது நம் எதிர்காலத்திற்கு எந்த படிப்பினையை தருகிறது?

சுற்றுப்புறச் சூழல் மற்றுமொரு செயலையும் செய்கிறது. பல்வேறு செயல்பாடுகளால் வெளிப்படும் கழிவுகளை உட்கிரகித்து, மாசடைதல் தீங்கு விளைவிக்காத வண்ணம் செய்தலாகும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பொருட்கள் எரிதலால் வெளியிடப்படும் வாயுக்கள் பொருட்களை சுத்தப்படுத்தி பயன்படாத பொருட்கள் போன்ற தேவையில்லாத உற்பத்தி மற்றும் நுகர்வு கழிவுகள் போன்றவை சுற்றுப்புற சூழலால் உட்கிரகிக்கப் படுகின்றன. இதுவும் மூலாதார செயலுக்கு சமமான முக்கியத்துவம் வாய்ந்தது. சுற்றுப்புறச் சூழலின் திறனை 'உட்கிரகித்தல் மற்றும் தீங்கில்லாத கழிவு மற்றும் மாசடைதலை அளித்தல் திறனை உட்கிரகித்தல் செயல்' (sink function) என்பர். கழிவுகளின் உற்பத்தி, சுற்றுப்புற சுழலின் உட்கிரகித்தல் திறனைக்காட்டிலும் அதிகமானால் சுற்றுப்புற சூழலுக்கு நீண்ட கால சேதத்தை ஏற்படுத்தும்.

பொருளாதார முன்னேற்றத்தின் கடந்த ஐம்பது ஆண்டுகளில் சுற்றுப்புற சூழலின் மேற்கூறப்பட்ட இரண்டு செயல்களும், வரம்புக்கு மீறி பயன்படுத்தப்பட்டுள்ளது. இது 'சுற்றுபுறச் சூழலின் தாங்கும்' திறனை (carrying capacity of the environment) பாதிக்கும் எனக் கூறப்படுகிறது. (எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி மற்றும் நுகர்வு செயலுக்கு சுற்றுப்புறச் சூழல் ஆதரவளிக்கும் திறன்). இதற்கான சில எடுத்துக் காட்டுகளை காண்போம். எடுத்துக்காட்டு : பாரம்பரிய முறைப்படி, நீரை இறைத்தல் சிறு நிலப்பகுதிக்கு மட்டும் வரம்புக்குட்பட்டிருந்தது. எடுத்துக்காட்டாக, திறந்த கிணறின் நீரால் 2 முதல் 3 ஏக்கர்களுக்கு நீர்பாசனம் செய்ய முடியும். விவசாயம் மழைக்காலங்களின் மேற்கொள்ளப்பட்டன. பெரும் நிலப்பகுதிகள் மழை சார்ந்த வறண்ட நிலங்களாய் இருந்தன. காலப்போக்கில், புதிய சக்தி வளங்களால், பெட்ரோல், டீசல் மற்றும் மின்சாரத்தால் இயங்கும் பம்பு செட்டுகள் பயன்பாட்டுக்கு வந்தன. இதன் விளைவுகள் இரண்டு நிலைகளில் ஏற்பட்டன. துவக்கத்தில், பழைய முறைப்படி நீரை இறைப்பதில் இருந்த கடினமான வேலையில் இருந்து விடுபட்டனர். பம்பு செட்டுகள் மூலம் நீரை இறைத்தல் மிகவும் எளிதானது. தண்ணீரும் மிகுதியான அளவு கிடைத்தது. திறந்த வெளி கிணறுகளில் 10 முதல் 15 அடி ஆழத்திற்கு நீர்வளம் இருந்தது. அதிகபட்சமாக 100 அடி ஆழம் வரை நீர்வளம் இருந்தது. இருப்பினும், மின்சாரம் மற்றும் மோட்டார் பம்புகள் மூலம் நிலத்தடி நீர் பயன்படுத்தபட்டதால், நீர்மட்டம் குறையத் தொடங்கியது. சில இடங்களில் நிலத்தடி நீர் சில நூறு அடி ஆழத்தில் இருந்து இறைக்கப்பட்டது. தண்ணீர், நிலத்தடிக்குள் செல்ல வேண்டும். மீண்டும் மீண்டும் இறைக்கப்பட்டு பயன்படுத்த பட வேண்டும். இச்செயல் மீண்டும் புதுப்பித்தல் (Recharge) எனப்படுகிறது. தரைக்கு அடியில் தண்ணீர் மண் மற்றும் பாறைகளின் ஊடே பாதை அமைத்துக் கொண்டு பாய்ந்து கொண்டிருக்கும். பூமிக்குள் புதுப்பிக்கப்படும் நீரைக்காட்டிலும் அதிகமாக இறைக்கப்பட்டால், சிறிது காலம் கழித்து, நிலத்தடி நீர் எதுவும் மீதமிருக்காது.



படம் 11.3 : 1957ல் ஐ.நா.சபை எடுத்த புகைப்படம் ராஜஸ்தானில் விவசாயமும் நீர்பாசனமும்.

இந்தியாவின் நிலத்தடி நீர்வளம் குறித்த சமீபகால புள்ளியியல் தகவலின் படி நாட்டின் பல்வேறு பகுதிகளின் அளவுக்கு மீறிய நிலத்தை பயன்பாட்டால், தீவிரமான நீர் பற்றாக்குறை உருவாகி உள்ளது. நாட்டில் பரப்பளவில் மூன்றில் ஒரு பாகத்தில், புதுப்பிக்கப்படும் நீரை காட்டிலும் அதிகமான நிலத்தடிநீர் இறைக்கப்படுகிறது. நாட்டின் 300 மாவட்டங்களில், நீர்மட்டம் 4 மீட்டர்கள் குறைந்துள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி அபாயகாரமான நிலையை காட்டுகிறது. அளவுக்கு மீறிய நிலத்தடி நீரை பயன்படுத்துதல், விவசாய வளம் மிகுந்த பகுதிகளான பஞ்சாப், மேற்கு உத்தரபிரதேசம், கடினபாறைகள் கொண்ட பீடபூமி பகுதிகளான மத்திய மற்றும் தென் இந்தியா, சில கடலோர பகுதிகள் மற்றும் விரைந்து வளர்ந்து வரும் நகர்புறங்கள் போன்றவற்றில் காணப்படுகிறது.

- நவீன முறையில் நீரை இறைத்தல் நிலையற்றதன்மையுடையது என நிரூபிக்கப்பட்டுள்ளது என நீ ஏன் கருதுகிறாய்?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

நிலத்தடி நீர் மிக அதிக அளவில் பயன்படுத்துதல், நிலத்தடி நீரின் இருப்பு காலியாகி வருகிறது என்பதை குறித்து காட்டுகிறது. நிலத்தடி நீரின் மட்டம் மிகவும் விரைவாகி குறைவான மற்றும் மிக குறைவான மட்டங்கள் வரை வீழ்ச்சியடைந்து வருகிறது.

நிலத்தடி நீரின் அளவோடு, அதன் தரமும் சீர்கெட்டு வருகிறது. இந்தியாவிலுள்ள 59% மாவட்டங்களில், குழாய், கிணறுகள் மற்றும் கிணறுகளின் தண்ணீர் குடிப்பதற்கு பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. இதன் காரணம், விவசாயம் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் இரசாயன கழிவுகளால் நிலத்தடி நீர் அசுத்தமடைந்துள்ளது.நீர்நிலைகள் எல்லா வகையான கழிவு, நச்சுப்பொருட்களை கொட்டி வைக்கும் அழுக்கு தொட்டி போல் பயன்படுத்தபடுகின்றன. இவற்றை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவருதல் எளிதானது அல்ல. இதன் விளைவுகளை அடுத்து வரும் எடுத்துக் காட்டில் காண்போம்.

முன்னேற்றத்தின் வடிவமைப்பு, நிலையான முன்னேற்றத்துடன் எதிர்மாறான கருத்தை உடையதாக உள்ளது. நிலையான முன்னேற்றம் என்பது மக்களின் தற்போதைய தேவைகளை ஈடுகட்டுவதுடன், எதிர்கால சந்ததியினருக்கும் தேவையானவற்றை குறைவின்றி வழங்கும் திறனை பெற்றிருப்பதை குறிக்கிறது. சுருங்க கூறின், நாட்டு மக்கள் அனைவருக்கும் மேலான தரம் வாய்ந்த வாழ்க்கைதருவதாகும், அதாவது, தற்போதுள்ள மற்றும் வருங்கால தலைமுறைக்கு தரமான வாழ்வை வழங்குதலாகும்.

இருப்பினும், தற்போது நாம் இயற்கை வளங்களை பயன்படுத்தும் அளவை கருத்தில் கொண்டு பார்க்கும் போது, வருங்கால சந்ததியினர் இந்த அரிய வளங்களின் நியாயமான பங்கை பெறுவதற்கான வாய்ப்புகளுக்கு ஆபத்தாகி உள்ளது எனலாம், மேலும், நம் இயற்கை வளங்களின் பயன்பாடு, சுற்றுப்புற சூழலுக்கு தீவிர சேதத்தை விளைவிக்கும் அளவிற்கு உள்ளது. சுற்றுப்புற சூழ்நிலையின் தாங்கும் திறனை விட மிக அதிக அளவில் ஏற்பட்டுவருகிறது.

எடுத்துக்காட்டு 2: பூச்சிக் கொல்லி மருந்துகள் நவீன கால விவசாயத்தின் முக்கிய மூலமாக விளங்குகிறது. இவை பூச்சிகளிலிருந்து பயிர்களை காத்திடவும், அதிக அளவு விளைச்சல் பெறவும் பயன்படுத்தப்படுகின்றன. பல ஆண்டுகளுக்கு பிறகு சுற்றுப்புற ஆய்வாளர்கள், பூச்சிக் கொல்லி மருந்துகளின் பயன்பாடு, சுற்றுப்புற சூழலின் மீது மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை உணர்ந்தனர். சுற்றுப்புறச் சூழல், நச்சுதன்மை கொண்ட பொருட்களை, ஒரு குறிப்பிட்ட நிலைக்கு மேல் உட்கிரகிக்க முடியாது.

'ரேச்சல் கார்சன்' என்பவர் 1962 ஆம் ஆண்டு, அமைதியான வசந்தம் (silent spring) என்னும் புத்தகத்தில், கொசுக்களை கட்டுப்படுத்த D.D.T மருந்தை அடிப்பதால், பறவைகள் மற்றும் மனிதர்கள் மீது ஏற்படுத்தும் தீய விளைவுகள் குறித்து எழுதியுள்ளார்.




அமைதியான வசந்தம்
ரேச்சல் கார்சன்

பூச்சிக் கொல்லி மருந்துகளில் இருந்த கடினமான உலோகங்கள், சுற்றுப்புற சூழலில் இருந்து மறைவதில்லை. ஆனால், அதற்கு பதிலாக உயிரினங்களில் ஒன்று திரள்கின்றன. இவ்வாறாக, D.D.Tபூச்சிக்கொல்லி மருந்திலுள்ள நச்சுப்பொருள் கலந்துள்ள தண்ணீர், ஏரிகளில் கலந்திடும் போது, அவற்றில் வாழும் மீன்களின் உடலுக்குள் சேருகினறன. நச்சுத் தன்மை மிக சிறிதளவு இருக்குமென்பதால், மீன்களை கொல்லாது. ஆனால், ஒரு பறவை, பல மீன்களை உண்ணும் போது, மீன்களுக்குள் உள்ள ரசாயனப் பொருளான 'லேதால்' அப்பறவையை கொல்ல போதுமானதாகும். கொசுக்கள், D.D.Tமருந்திற்கு எதிரான தாங்கும் சக்தியை விரைவாக தங்களுக்குள் வளர்த்துக் கொள்கின்றன என்பதையும் ரேச்சல்கார்சன் நிரூபித்துக் காட்டினார். அவருடைய கண்டு பிடிப்புகள், எவ்வாறு மனிதனின் செயல்கள் , இயற்கையையும், மனிதர்களையும் மீண்டும் பழைய நிலைக்கு மீளாத அளவிற்கு அழித்து விடுகின்றன என்பதற்கு தெளிவான எடுத்துகாட்டுகளாகும்.

இந்தியாவில், எண்டோ சல்பான் பூச்சிக் கொல்லி மருந்தில் உள்ள லேத்தால் நச்சுப் பொருளின் தீய விளைவு, 1976 ஆம் ஆண்டு காணப்பட்டது. முந்திரி செடிகளை பூச்சிகளிடமிருந்து காத்திட, அரசாங்கம் எண்டோசி சல்மான் பூச்சிக் கொல்லி மருந்தை 15,000 ஏக்கர்கள் நிலப்பகுதியில் தெளிக்கும் சிகிச்சை நடவடிக்கையை மேற்கொண்டது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இது கேரளாவின் வடக்கு பகுதியில் உள்ள காசர் கோட் என்னுமிடத்தில் நடந்தது. இந்நோய் தடுப்பு முறை, அங்கு 25 ஆண்டுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதால், காற்று நீர் மற்றும் சுற்றுச்சூழல் முழுவதும் இப்பூச்சிக் கொல்லி மருந்து பரவியது. இம்மருந்து தெளிக்கப்பட்டதால், உள்ளூர் மக்களின் குறிப்பாக விவசாய தொழிலாளர்களின் உடல் நிலையில் அபாயகரமான பாதிப்பை உண்டாக்கி விட்டது. 5000 பேர் இறந்தனர் புற்று நோய் மற்றும் உடல் ஊனங்கள் பரவலாக காணப்பட்டது.

சமீப ஆண்டுகளாக எண்டோ சல்பான் தெளித்தல் , நீதிமன்றத்தின் உத்தரவும்படி தடை செய்யபட்டுள்ளது. இதனால் படிப்படியாக நோய் தாக்குல் குறைந்துள்ளது. மேலும் மக்களின் ஆரோக்கிய நிலை மேம்பட்டுள்ளது.

இது அந்த பகுதிக்கு சம்பந்தபட்டதனிப்பட்ட சம்பவம் அல்ல. வரம்புக்கு மீறி பூச்சிக் கொல்லி மருந்துகள் நவீன விவசாயத்தில் பயன்படுத்தப்படுவது குறித்தும், சுற்றுச் சூழல் மற்றும் மக்கள் மீது அதன் தீய விளைவுகள் குறித்தும் எண்ணற்ற ஆய்வுகள் குறிப்பிட்டு கூறுகின்றன. ஒரு சதவீத பூச்சி கொல்லி மருந்து மட்டுமே, பூச்சிகள் மீது செயல்படுகின்றன. மீதமுள்ள மருந்துகள் உணவு, தண்ணீர் மற்றும் சுற்றுச் சூழல் வாயிலாக நம் உடலமைப்புக்குள் செல்கின்றன.

- சுற்றுச் சூழல் இயற்கை முதலீடு எனவும் அழைக்கப்படுகிறது. ஒன்பதாவது பாடத்தில் முதலீட்டின் வரையறையை நினைவு படுத்திக் கொள்ளுங்கள். சுற்றுச் சூழல் இயற்கை முதலீடு எனஅழைக்கப்படுவது ஏன் என்று நீங்கள் கருதுகிறீர்கள் ?
- தண்ணீர் பொதுசொத்தாக ஏன் கருதப்பட வேண்டும் ?
- எண்டோ சல்பான் பயன்படுத்துவதை நிறுத்த நீதிமன்றத்தை அணுகுவது அவசியம் என்று ஏன் கருதப்பட்டது?
- எண்டோ சல்பான் என்னும் பூச்சிக் கொல்லி மருந்து மக்களின் உயிர் வாழும் உரிமையை மீறுவதாக உள்ளது(அரசியலமைப்புச் சட்டத்தின் சட்டப்பிரிவு 21 என வாதிபட்டு, அதன் பயன்பாட்டை நீதிமன்றம் தடை செய்தது. எண்டோ சல்பான் பயன்படுத்துவது, எவ்வாறு மக்களின் உயிர் வாழும் உரிமையை மீறுவதாக உள்ளது என்பதை உன்னால் விவரிக்க முடியுமா?

### சுற்றுச் சூழல் மீது மக்களின் உரிமைகள் :

தற்போது, நவீன முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளால் பெரிய அளவில் சுற்றுச்சூழல் பிரச்சனைகள் ஏற்பட்டதை காண முடிகிறது. பெரிய அணை திட்டங்கள் அமைக்கப்படுவது குறித்த பிரச்சனை பழமையானது மட்டுமல்ல. மிகவும் துன்பகரமான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

'நர்மதை பள்ளத்தாக்கு மேம்பாட்டு அணை திட்டம்', இந்தியாவின் ஒரே ஒரு மிகப் பெரிய நதி மேம்பாட்டு திட்டமாகும்.இது உலகிலுள்ள மிகப் பெரிய நீர் மின்திட்டங்களில் ஒன்றாகும். நீர் மின்சாரம் உற்பத்தி செய்திடவும், நீர்பாசனம் அளித்திடவும், வெள்ளக்கட்டுப்பாட்டுக்கு உதவிடவும், இந்த அணை திட்டம் கட்டப்பட்டது. இது போன்ற அணை திட்டத்தின் சுற்றுச் சூழலின் மதிப்பு மூவாயிரம் பெரிய மற்றும் சிறு அணை திட்டங்களின் கட்டுமான மதிப்புக்கு ஈடாக பெருமளவில் உள்ளது. சர்தார் சரோவரில் அமைக்கப்பட்ட இந்த அணை 37000 ஹெக்டார் காட்டு மற்றும் விவசாய நிலங்களில் வெள்ளப்பெருக்கை உண்டாக்கி, அரை மில்லியன் மக்களை இடம் பெயர்ந்து செல்லுமாறு செய்துள்ளது. இத்திட்டம் மனித வாழ்க்கை மற்றும் உயிரி வேற்றுமையையும், பாழாக்கியுள்ளது. இது ஆயிரக்கணக்கான ஏக்கர் காட்டுப்பரப்பு மற்றும் விவசாய நிலங்களை மூழ்கடித்ததின் விளைவாகும். ஆதிவாசிகளும், தலித்துகளும் பொருத்தமில்லாத முறையில் இடம்பெயர்ப்பு செய்யப்பட்டனர்.

கீழ்காணும் கடிதம் 'ஜாபுவா' மாவட்டத்தை சேர்ந்த ஜல்சிந்தி கிராமத்தை சேர்ந்த 'பாவா மஹாலியா' என்பவரால், 1994 ஆம் ஆண்டு மத்திய பிரதேச முதலமைச்சருக்கு எழுதப்பட்டதாகும். இது பிலாலாவில் பதிவு செய்யப்பட்டது. இந்தி மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. அதன் ஒரு பகுதி தரப்பட்டுள்ளது. இது மேம்பாட்டு கருத்தை வினவுகிறது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அன்புடைய திக்விஜய்சிங் அவர்கள்,

"ஜாபுவா மாவட்டத்தின், ஜல்சிந்தி கிராமம் மக்களாகிய நாங்கள், மத்தியப் பிரதேசத்தின் முதல் மந்திரியாகிய உங்களுக்கு இக்கடித்தை எழுமுகிறோம்".

"நாங்கள் சிறந்த நதியான மகாநதியின் நதிக் கரைகளின் வாழ்ந்து வருகிறோம். இந்த ஆண்டு (1994), எங்களின் ஜல்சிந்தி கிராமம், சர்தார் சரோவர் அணைதிட்டத்தால், மூழ்கும் மத்திய பிரதேச கிராமங்களிடையே முதலில் மூழ்கும் கிராமமாகும். எங்களுடன் நான்கு அல்லது ஐந்து கிராமங்கள் சகர்ஜா, ககர்சிலா, அகாடியா போன்றவையும் மூழ்க உள்ளன. எங்களுடைய கிராமத்துக்குள் தண்ணீர் வரும் போது, எங்கள் வீடுகளும், நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கிடும். நாங்களும் அவற்றுடன் மூழ்க போகிறோம். இது எங்களுடைய உறுதியான தீர்மானமாகும்".

"இந்த அணை திட்டத்தால், மூழ்கப் போகும் ஜல்சிந்தி கிராமத்தின் ஆதிவாசி இன பழங்குடி விவசாயிகள் கிராமத்துடன் மூழ்கிட தயாராகிக் கொண்டிருக்கின்றனர் என்பதை எங்களுக்கு தெரியப்படுத்தவே, நாங்கள் இந்த கடிதத்தை எழுதிக் கொண்டிருக்கிறோம்".

"நீங்களும், நகரங்களில் வாழ்பவர்களும், நாங்கள் மலைப் பகுதிகளில் வாழ்கிறோம் என்றும், ஏழைகள் என்றும், மனித குரங்குகள் போல் பின்தங்கியவர்கள் என்றும் கருதுகிறீர்கள். குஜராத்தின் சமவெளி பகுதிகளுக்கு செல்லுங்கள். உங்கள் நிலைமை மேம்படும். நீங்கள் முன்னேறுவீர்கள், இது தான் நீங்கள் எங்களுக்கு கூறிடும் அறிவுரை. ஆனால், நாங்கள் எட்டு ஆண்டுகளாகி போராடி வருகிறோம். அஞ்சன்வாரா கிராமத்திற்குள் காவல் துறையினர் புகுந்து, எங்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தினர். எங்கள் நிலைமை மேம்படும் என்றால், நாங்கள் இப்பொழுதும் ஏன் அங்கு சென்றிட தயாராக இல்லை".

"உங்களுக்கும், அதிகாரிகளுக்கும், நகர மக்களுக்கும் எங்கள் நிலப் பகுதி, மலைப்பாங்கானதாகவும், ஆதரிக்காததாகவும் காணப்படும், ஆனால், நாங்கள் இப்பகுதியில் திருப்திகரமாக வாழ்ந்து வருகிறோம். நர்மதை நதியின் கரை மீது எங்கள் நிலப்பகுதியில் மற்றும் காடுகளில் வாழ்கின்றோடம். நாங்கள் இங்கு பல தலைமுறைகளாக வாழ்ந்து வருகிறோம். இந்த நிலப்பகுதியில், எங்களுடைய முன்னோர்கள் காடுகளை அகற்றி, விவசாயம். செய்தனர். கடவுள்களை வழிப்பட்டனர். மண் வளத்தை மேம்படுத்தினர், விலங்குகளை வளர்த்தவர். கிராமங்கள் அமைத்து வாழ்ந்தனர். இந்த நிலப்பகுதியில் நாங்கள் நிலங்களை உழுது வாழ்ந்தோம். நாங்கள் ஏழைகள் என்று நீங்கள் கருதுகிறீர்கள். நாங்கள் ஏழைகள் அல்ல. இங்கு நாங்கள், எங்களுக்கு சொந்தமான வீடுகளை கட்டிக் கொண்டோம். நாங்கள் விவசாயிகள். இங்கு விவசாயம் செழிப்பாக உள்ளது". நிலத்தை உழுவதால் நாங்கள் சம்பாதிக்கின்றோம். மழையை கொண்டு, நாங்கள் விளைவித்ததை கொண்டு வாழ்கிறோம்.சோளக்கதிர் கடவுள் எங்களுக்கு உணவளிக்கிறார். எங்கள் கிராமத்தில் உழுவதற்கு ஏற்ற நிலப்பகுதியை பெற்றுள்ளோம். இதில் சில நாட்டுப்பகுதியில் உள்ளது. அதில் நாங்கள் கம்பு, சோளம், மக்காச்சோளம், பாடி, பட்டே, சான்வி, கத்ரி, சான்னா, மோத்,உர்டி, எள் மற்றும் வேர்க்கடலை போன்றவற்றை பயிரிடுகிறோம். பல வகையான பயிர்களை நாங்கள் பெற்றிருக்கிறோம். அவற்றை வேறுபடுத்தி உண்ணுகிறோம்".

"குஜராத்தில் என்ன பயிராகிறது? கோதுமை, உண்பதற்கு சில பயிர்களும், விற்பதற்கு பல பயிர்களும் விளைவிக்கின்றனர். நாங்கள் உண்பதற்காக விவசாயம் செய்கிறோம். உபரியாக இருப்பவற்றை, ஆடைகள் போன்றவற்றை வாங்குவதற்காக விற்கின்றோம். சந்தையில் விலைகள் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம். ஆனால், எங்களுக்கு உண்ண உணவு கிடைக்கிறது".



"பல வகையான உணவுப்பயிர்களை நாங்கள் விளைவிக்கின்றோம். ஆனால், அவை அனைத்தும் சொந்த முயற்சியால் விளைந்தவை. பணத்தால் எங்களுக்கு எங்கள் சொந்த விதைகளை பயன்படுத்துகிறோம்".



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

"எங்கள் கால்நடைகளிடமிருந்து பெறப்படும் உற்பத்தி பயன்படுத்துகிறோம். இவற்றில் இருந்து நல்ல விளைச்சலை பெறுகிறோம். வேறு பகுதிக்கு இடம் பெயர்த்தால், நாங்கள் எங்கிருந்து அதிக அளவு பணத்தை பெறமுடியும்? அங்கு எங்களுக்கு யாரை தெரியும்? எந்த வட்டி வியாபாரி எங்களுக்கு கடன் தருவார்? நல்ல விளைச்சல் கிடைக்கவில்லை என்றால், எங்களிடம் எந்த பணமும் இல்லையெனில், நாங்கள் எங்கள் நிலத்தை அடமானம் வைக்க வேண்டியிருக்கும்".

"இங்கு நாங்கள் நீரோடைகளில் இருந்து வாய்க்கால்கள் வெட்டி, எங்கள் நிலங்களுக்கு நீரை கொண்டு வருகிறோம். எங்களிடம் மின்சாரம் இருந்திருந்தால் நர்மதை நதியில் இருந்து நீரை இறைத்து கொண்டிருப்போம். குளிர்கால பயிரையும் விளைச்சல் செய்திருப்போம். ஆனால், சுதந்திரம் பெற்று நாற்பது ஐம்பது ஆண்டுகள் கடந்தாலும், நதிக்கரை நெடுக உள்ள எங்கள் கிராமத்தில் மின்சாரம் இல்லை. நதி நீர்பாசனமும் கிடையாது".

"எங்களுக்கு பாயும் நீரும், விலங்கு தீனியும் காடுகளில் இருந்து கிடைக்கிறது. விவசாயத்தை விட விலங்கு வளர்ப்பு மூலமாக அதிகம் பயன் பெற்று நாங்கள் வாழ்ந்து வருகிறோம். நாங்கள் கோழிகள், ஆடுகள், பசுக்கள், மற்றும் எருமைகளை பெற்றுள்ளோம். சிலரிடம் 2 முதல் 4 எருமைகள், வேறு சிலரிடம் 8 முதல் 10 எருமைகள் உள்ளன. பெரும்பாலோரிடம் 10 அல்லது 20 அல்லது 40 ஆடுகள் உள்ளன. குஜராத்தில் இருந்து, மக்கள் விலங்குகளை மேய்த்திட எங்கள் மலைப் பகுதிகளுக்கு வருகின்றனர். எங்கள் பகுதியில் கணிசமான அளவு விலங்கு தீனியும், தண்ணீரும் கிடைக்கிறது".

"எங்கள் காடு தான் வட்டி வியாபாரி அல்லது கடன் தரும் நிறுவனம். கடினமான காலங்களில் நாங்கள் காடுகளுக்கு செல்வோம். எங்ள் வீடுகளை மூங்கில் மற்றும் தேக்கு மரக்கட்டைகளால் கட்டிக் கொள்கிறோம். நின்கோடி, ஹையாலி வகை மூங்கில்களை பயன்படுத்தி தடுக்குகள் தயாரிக்கிறோம். காடுகளிலிருந்து பெறும் மரக்கட்டைகள் கொண்டு கூடைகள், கட்டில்கள், ஏர்கலப்பைகள், மண்வெட்டிகள் போன்றவற்றை தயாரிக்கிறோம். காடுகளிலிருந்து கிடைக்கும் இலைகளையும் உண்ணுகிறோம். ஹெக்வா, மஹியா, அம்ரி கோயிண்டி, பஞ்சன் முதலிய இலைகளை உண்ணுகிறோம். பஞ்சம் ஏற்பட்டால், வேர்கள் மற்றும் கிழங்குகளை உண்போம். நாங்கள் நோய்வாய் படும்போது, எங்கள் மருத்துவர்கள் காட்டிலிருந்து கிடைக்கும் இலைகள், வேர்கள், மரப்பட்டைகள் கொடுத்து, எங்களை குணப்படுத்துவர். காட்டிலுள்ள ஒவ்வொரு மரம், புதர், மூலிகைச் செடி ஆகியவற்றின் பெயர்கள் எங்களுக்குத் தெரியும்.காடுகள் இல்லாத நிலப்பகுதிக்கு எங்களை இடம் பெயரச்செய்தால், தாங்கள் எங்கள் மூதாண்டியர்களிடம் இருந்து விரும்பி கற்றவை எல்லாம் பயனற்று போய் விடும். அவற்றை காலப் போக்கில் மெல்ல மெல்ல மறந்துவிடுவோம்".

"நாங்கள் எங்கள் கடவுள்களை, நதியின் பாடலாகிய கயானா பாடலைப் பாடி வழிபடுகிறோம். நாவல் மற்றும் திவசா பண்டிகையின் போது, நாங்கள் 'கயானா' பாடலை பாடுவோம். இப்பாடல் உலகம் எவ்வாறு ஏற்பட்டது, மனிதர்கள் எவ்வாறு பிறந்தனர், மிகப் பெரிய இந்த நதி எங்கிருந்து வந்தது, என்பவற்றை வர்ணிக்கிறது. நாங்கள் அடிக்கடி மீன்களை உண்ணுகின்றோம். எதிர்பாராமல் விருந்தினர்கள் வந்தால், மீன்கள் தான் உடனடி உணவாகும். நர்மதை நதி எங்களுக்கு வண்டல் மண்ணை, கரையோரங்களில் சேர்க்கின்றது. எங்களுடைய குழந்தைகள் இந்த நதிக்கரையில் விளையாடி மகிழ்கின்றனர்.நீச்சலடித்து குளித்து மகிழ்கின்றனர். இந்நதி நீரை குடித்து, தாகத்தை தணித்து கொள்கின்றன. இந்நதியின் வயிற்றில் நாங்கள் திருப்தி கரமான வாழ்க்கை வாழ்ந்து வருகிறோம். இங்கு பல தலைமுறைகளாக வாழ்ந்து வருகிறோம். இப்பெரும் நதி, காடுகள் மீது எங்களுக்கு உரிமை உள்ளதா? இல்லையா? அரசாங்க அதிகாரிகளாகிய நீங்கள் இந்த உரியை அங்கீகரிக்கிறீர்களா? இல்லையா?"

"நகர மக்களாகிய நீங்கள் தனித்தனி வீடுகளில் வாழ்கிறீர்கள். பிறருடைய மகிழ்ச்சி மற்றும் துக்கத்தை கவனிப்பதில்லை. நாங்கள் எங்கள் இனத்தவர், உறவினர்கள், உடன் பிறப்புகளுடன் வாழ்கின்றோம். நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, உழைப்பை செலுத்தி, ஒரே நாளில் வீட்டை கட்டிக் கொள்கிறோம். எங்கள் நிலங்களில் களையெடுக்கிறோம். அவ்வப்போது வரும் சிறிய, பெரிய பணிகளை கூட்டாக செய்கிறோம். இது போல் குஜராத்தில், எங்கள் வேலைகளை செய்வதில் யார் எங்களுக்கு உதவி செய்து எளிதாக்குவர்? பெரிய விவசாயிகள் எங்கள் நிலங்களில் களையெடுக்க வருவார்களா? அல்லது வீடுகள் கட்ட உதவுவார்களா?"



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

"இங்கு எங்கள் கிராமங்களில்,எங்கள் கிராமவாசிகளிடம் இருந்து, எங்களுக்கு ஏன் மிக அதிகமான ஆதரவு கிடைத்துள்ளது? இது ஏனெனில், இங்கு நாங்கள் அனைவரும் ஒன்று, நாங்கள் பொதுவான கருத்தைக் கொண்டிருக்கிறோம். குத்தகைக்கு நிலம் பெற்றிருப்போர் ஒரு சில விவசாயிகளே, ஒவ்வொருவரும் சொந்த நிலத்தை சொந்தமாக கொண்டுள்ளனர். யாருக்கும் அதிக அளவு நிலம் கிடையாது. ஆனால், ஒவ்வொருவரும் சிறு அளவு நிலத்தை பெற்றுள்ளனர். நாங்கள் குஜராத்துக்கு சென்றால் பெரிய நிலக்கிழார்கள் எங்களை நசுக்கி விடுவர். நாற்பது அல்லது ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அவர்கள் அங்கு வாழ்ந்து வந்த ஆதிவாசிகளிடம் இருந்து நிலங்களை பறித்துக் கொண்டனர். இப்போதும் கூட இச் செயலை செய்து வருகின்றனர். நாங்கள் அங்கு அறிமுகம் ஆகாத புதியவர்கள். அப்பகுதி மக்களின் மொழி (அ) மரபுகள் குறித்து எங்களுக்கு தெரியாது. இது அவர்களுடைய ஆட்சி அதிகமான பணம் கொண்டு விவசாயம் செய்திட எங்களால் முடியவில்லை என்றார், எங்கள் நிலங்களை அவர்களுக்கு அடமானம் வைக்க வேண்டியிருக்கும். கடனை திரும்ப செலுத்தாத நிலையில் அவர்கள் அவற்றை சொந்தமாக்கி கொள்வர். அங்கு வாழ்ந்து வந்த ஆதிவாசிகளின் நிலங்களை அவர்கள் கைப்பற்றிக் கொண்டனர் என்றால், எங்கள் நிலங்களையும் அவர்கள் ஏன் விட்டு வைப்பார்கள்? பிறகு யார் வேறு நிலங்களை எங்களுக்கு தருவார்கள்? இது எங்களுடைய மூதாதையர்களின் நிலப்பகுதி. இதன் மீது எங்களுக்கு உரிமை உள்ளது. இதை இழந்து விட்டால், பிறகு எங்களுக்கு கிடைப்பதெல்லாம் மண்வெட்டிகளும், கடப்பாரைகளும் மட்டுமே. வேறு எதுவும் இருக்காது".

எங்கள் கிராம தெய்வங்கள் எல்லாம் இங்கு தான் உள்ளனர். எங்கள் மூதாதையர்கள் நினைவு கல்லறைகள் எல்லாம் இங்கு தான் உள்ளன. நாங்கலோ ரானோ, ராஜா பண்டோ, இன்டி ராஜா போன்றோரை வழிபடுகிறோம். மேலும் ஆய்கதா, கேதுபாய் போன்றோரையும் வழிபாடு செய்கிறோம். எங்களின் மாபெரும் தேவி ராணி கஜோல். அவருடையதும், கும்பாய் மற்றும் குண்டு ரானோ போன்றோரின் மலை மத்வாட் பகுதியில் உள்ளது. நாங்கள் இவர்களை எல்லாம் விட்டுச்சென்று விட்டால், புது கடவுள்களை எங்கிருந்து பெற முடியும்? எங்கள் பகுதியின் இண்டால், திவசா மற்றும் தீபாவளி திருவிழாக்களில் கலந்து கொள்ள எல்லா இடங்களிலும் இருந்தும் மக்கள் வருவர். பங்கோரியாவிற்காக, நாங்கள் அனைவரும் சந்தைக்கு செல்வோம். அங்கு எங்கள் இளைஞர்கள் தங்களின் வாழ்க்கைத்துணைவிகளை தேர்ந்தெடுத்து கொள்வர். குஜராத்தில் எங்களுக்காக யார் வருவார்கள் ?

குஜராத்தில் உள்ள நிலம் எங்களுக்கு சம்மதம் இல்லை. நீங்கள் வழங்கும் நஷ்டஈடும் சம்மதம் இல்லை. நாங்கள் நர்மதையின் வயிற்றில் இருந்து பிறந்தோம். அத்தாயின் மடியில் இறந்திட எங்களுக்கு அச்சம் இல்லை. நாங்கள் மூழ்குவோம். ஆனால் நபங்கள் நகர மாட்டோம்."

இப்படிக்கு பாவா மஹாலியா.

- முன்னேற்றம் மீதான கருத்துக்கள் என்னும் பாடத்தில், ஒரு பிரிவினருக்கு முன்னேற்றம் என்பது, மற்றொரு பிரிவினருக்கு முன்னேற்றமாக இருக்காது என்று படித்தறிந்தோம். பாவா மஹாலியா வின் கடிதத்தை இக்கூற்றை விவரிக்க பயன்படுத்துக.
- பழங்குடி மக்கள் வேறொரு மாநிலத்திற்கு குடிபெயர்ப்பு செய்யப்பட்டால், தற்போதுள்ள வாழ்வின் கீழ்காணும் அம்சங்களை கண்டறிந்து, அவர்களின் வாழ்வில் ஏற்படும் மாற்றங்களை விளக்கும் அட்டவணையை உருவாக்குக.[உணவு பழக்கங்கள், விவசாயம், கடனுதவி, காடுகளுடன் உள்ளதொடர்பு, மதபழக்கங்கள், வீடு கட்டுதல், சமுதாய தொடர்புகள்.]
- உயிரி வேறுபாட்டின் இழப்பு குறித்து கடித்தில் எவ்வாறு தெரிவக்கப் பட்டுள்ளது?
- வாழ்வாதாரங்கள், கலாச்சார பழக்கங்கள், சமுதாய தொடர்புகள் போன்றவை உள்ளூர் சுற்றுப்புற சூழலுடன் மிகுந்தளவு பிணைக்கப்பட்டுள்ளன என்பது பழங்குடி மக்களின் எண்ணம். இதனை உங்களால் விவரிக்க முடியுமா?
- ஜல்சந்தி கிராமத்தில் மக்கள் தற்போது உள்ள இருப்பிடத்தில் உணவு பாதுகாப்பை பொற்றுள்ளனர் என நீங்கள் கருதுகிறீர்களா?
- மேற்கண்ட சூழ்நிலையில் நீ வாழ்பவராக இருந்தால், வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்து செல்ல வேண்டுமானால், நீ எவ்வாறு செயல்படுவாய்?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

சர்தார் சரோவர் போன்ற மேம்பாட்டு அணை திட்டங்கள் மக்களின் உயிர்களையும், வாழ்வாதாரங்களையும் தகர்த்து விட்டன. இத்திட்டங்களால் நீர்பாசனம் மற்றும் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டன என்பது உண்மை மட்டுமல்ல அவை இரண்டும் நவீன மேம்பாட்டின் மையக் காரணிகளாகும். ஆனால், இத்திட்டங்களால் இடமாற்றம் செய்யப்பட்ட லட்சகணக்கான மக்களுக்கு நீதியற்றது மற்றும் அழிவை உண்டாக்க கூடியவை. நவீன மேம்பாட்டு திட்டங்களால், அம்மக்கள் அவர்களின் மிகச் சிறந்த வளங்கள் மற்றும் உள்ளூர் சுற்றுச்சூழல் போன்றவற்றை பெற முடியாமல் போனது. இது குறித்து தான் பாவா மஹாலில்யா கடிதம் மீண்டும், மீண்டும் குறிப்பிட்டு கூறுகிறது. உள்ளூர் சுற்றுச்சூழல் இல்லாமல் அம்மக்களின் வாழ்க்கை ஒன்றுமில்லாததாகி விடும். தன்னிறைவுள்ள நிலையில் இருந்து பற்றாக்குறை நிலைக்கு தள்ளப்படுவர். தற்போது அவர்கள் ஒரு பயிர் சாகுபடி செய்திட முடிகிறது. எதிர் காலத்தில் நீர்பாசனம் பெறுவதால் பல்வகை சாகுபடி செய்திட முடியும் என்று நம்பினர், ஆனால், அவர்களின் வாழ்விடங்கள் இடமாற்றம் செய்யப்படுவதால், அவர்கள் வெளிப்புற சக்திகள் மீது சார்ந்திருக்க வேண்டியதாகி விடும் அவர்கள் வறுமையில் வீழ்ந்து விடுவர்.

கிராம சமுதாயங்களுக்கு, சுற்றுச் சூழல் மற்றும் மக்களின் வாழ்க்கைக்கு இடையே உள்ள தொடர்பு மிகவும் உறுதியானது. சுற்று சூழல் அவர்களுக்கு கிடைக்கச் செய்யும் போது, அவர்களின் தேவைகளில் பெருமளவு உணவு, விறகு, காலந்டை தீவணம் பொருளாதார ரீதியில் மதிப்புடைய பொருட்கள் போன்றவை கிடைக்கின்றன. இவை பெற முடியாத போது, அவற்றை பணம் செலுத்தி வாங்க வேண்டியிருக்கும். இடப்பெயர்ப்பு செய்யப்படுவதால் அல்லது சுற்றுச்சூழல் அழிக்கப்படுவதால் அல்லது மாசுபடுத்தப்படுவதால் அதிகமான அளவு ஏழை மக்கள் தான் பாதிக்கப்படுகின்றனர். சுற்றுசூழல் மற்றும் நிலையான தன்மை சமத்துவத்துடன் நெருங்கிய தொடர்புடையவை.

மக்களை உள்ளூர் சுற்றுப்புற சூழலில் இருந்து வெளியேற்றுவதால், அம்மக்களுக்கு இழப்புகள் ஏற்படுவது மட்டுமன்றி, சுற்றுப்புறச் சூழலும் தன் செழிப்பான இயற்கை வளங்கள் மற்றும் உயிர் வேற்றுமைகளை இழந்து சமமான அளவு பாதிப்பை எதிர்கொள்கின்றன. சுற்றுப்புறச்சூழல் குறித்த பாரம்பரிய அறிவு கொண்ட மக்கள் இடம் பெயரும் போது, அவர்களோடு அந்த அறிவும் சென்றுவிடுகிறது. ஒரு பகுதியின் சுற்றுப்புறச் சூழல் குறித்த அறிவு பல தலைமுறைகளாக தோன்றி வளம் பெறுகிறது. பாவா மஹாலியா போன்றவர்கள் பாரம்பரிய அறிவின் பாதுகாவலர்கள் ஆவர். எங்களுக்கு ஒவ்வொரு மரம் புதர், மூலிகை செடிகள் போன்றவற்றின் பெயர்கள் தெரியும். அவற்றின் பயன்களும் தெரியும். காடுகள் இல்லாத பகுதியில் எங்களை வாழச் செய்தால், நாங்கள் அவை குறித்த பல தலைமுறைகளாக கற்றவை பயனற்று போகும். காலப்போக்கில், நாங்கள் அவற்றை முழுவதும் மறந்து விடுவோம்.




*படம் 11-4 படத்தை பாருங்கள் சுற்றுப்புறச் சூழல் தொடர்புடைய உங்கள் தலைப்பை எழுதுங்கள்*

தற்போது, சுற்றுப்புறச் சூழல் பல்வேறு விஷங்களில் ஆபத்துக்கு உட்படும் போது, இப்படி பட்ட அக்கறை கொண்ட சமூகத்தினர் ஆக்கப்பூர்வமாக பங்காற்ற முடியும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்பது முக்கியமானது.

சர்தார் சரோவர் ஆணை திட்டத்திற்கு எதிராக நடத்திய போராட்டத்தை தொடர்ந்து, நர்மதை நதி பள்ளத்தாக்கு பகுதியின் வேறு அணை திட்டங்கள், ஒரே மாதிரியான விளைவுகள் கொண்ட பகுதிகளில், சமூக இயக்கமாக உருவெடுத்தது. இதர நர்மதா பச்சாவோ போராட்டம், (Narmada Bachaaoi Adan) என்று அழைப்பர். இடப்பெயர்ப்பு பிரச்சனை, சுற்றுப்புறச் சூழலுக்கான போராட்ட இயக்கங்கள் குறித்து சமூக இயக்கங்கள் என பாடத்தில் நாம் படித்தறியலாம்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## சிப்கோ போராட்டம்

உத்தரகாண்ட் மாநிலத்தின் கார்வால் இமயமலை பகுதியில், 1970களின் துவக்கத்தில், துவக்கப்பட்ட சிப்கோ போராட்டம், சுற்றுபுறச் சூழல் பாதுகாப்புக்காக செய்யப்பட்ட மற்றொரு முக்கியமான இயக்கமாகும். நர்மதை நதி பள்ளத்தாக்கு பகுதியின் மலைவாழ் மக்கள் போலவே, குன்றுகள் மற்றும் மலைகளில் வாழும் மக்களின் வாழ்விற்கு ஆதாரமாக விளங்குவன காடுகள். இதன் காரணம், அவை மக்களுக்கு நேரிடையாக உணவு, எரிபொருள் மற்றும் கால்நடை தீவனம் போன்றவற்றை அளித்து உதவுகின்றன. மேலும் மண் மற்றும் நீர் வளங்களை நிலைப்படுத்துவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இக்காடுகள் வாணிபத்திற்காகவும், தொழிற்சாலை தேவைகளுக்காகவும் அதிகளவில் வெட்டி சாய்க்கப்பட்டன. இதனால் இப்பகுதி மக்கள் தங்கள் வாழ்க்கை ஆதாரங்கள் காத்துக் கொள்ள அகிம்சை முறையில் எதிர்ப்பை தெரிவித்தவர். இந்த இயக்கத்தின் பெயர் 'சிப்கோ' என பெயரிடப்பட்டது. இதன் பொருள் 'அரவணைத்தல்'. இப்பகுதியை சேர்ந்த கிராமவாசிகள் மரங்களை கட்டிப்பிடித்து நின்று, ஒப்பந்தகாரர்கள் மரங்களை வெட்ட கோடாரிகளை ஓங்கும்போது தடுத்து காத்தனர். கிராமங்களை சேர்ந்த பெண்கள் இந்த இயக்கத்தின் முக்கிய படை வீரர்கள் போல் செயல்பட்டனர். இந்த இயக்கம் பல்வேறு மக்களை, சுற்றுப்புற சூழலை நிலை நிறுத்த வேண்டிய விஷயத்தை குறித்து சிந்திப்பதற்கு ஊக்கமளித்தது.


படம்: 12.6

மேற்கண்ட இரண்டு இயக்கங்களின் நோக்கம் சிறிதளவு வேறுபட்டாலும், அவை சுற்றுப்புற சூழல் மீது உள்ளூர் சமுதாயங்களுக்கு உரிமைகளை அடிப்படையாக கோருகின்றன. சிப்கோ இயக்கம் மரங்கள் வெட்டப்படுவதை தடுத்திட செயல்பட்டது. மேலும் காட்டுப் பகுதிகள் மீதிருந்த தங்களின் பரம்பரை உரிமைகளை பெறுவதில், ஒப்பந்தக்காரர்களால் ஏற்பட்ட அச்சுறுத்தல்களை நீக்கி, மீண்டும் அவற்றை சாதித்திட நடத்தப்பட்டது. நர்மதா பச்சாவோ போராட்டம், அப்பகுதி மக்களுக்கு நிலம், காடுகள் மற்றும் நதியின் மீது உரிமைகளைப் பெற்றுத் தர நடத்தப்பட்டது.

- முன்னேற்றம் மீதான கருத்துக்கள் (Ideas on Development) என்னும் அத்தியாத்தில் கூடங்குளம் அணு மின் நிலையம் அமைப்பதற்கு எதிரான போராட்டம் குறித்து நீங்கள் படித்தீர்கள். இந்த பாடத்தில் நீங்கள் படித்த போராட்டங்கள் குறித்து விளக்கிட முடியுமா?
- சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு என்பது நேரிடையாக பாதிக்கப்பட்ட சமுதாயத்தினருக்கு மட்டுமல்ல நம் அனைவருக்கும் முக்கியமான அம்சமாகும். சில எடுத்துக் காட்டுகளுடன் விவரியுங்கள்.
- எட்டாம் வகுப்பில் உள்ள ஆந்திரபிரதேசத்தின் சுரங்கத் தொழிலும், தாதுப் பொருட்களும், மீண்டும் படியுங்கள். தாதுப்பொருட்கள் கிடைத்திடும் பகுதிகளில் வாழும் மக்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் இடையே சர்ச்சைக்குரிய விவகாரங்கள் யாவை?
- நம் இந்திய பொருளாதாரத்தில் தாராள மயமாதல் மற்றும் உலகமயமாதலுக்கு அங்கீகாரம் கொடுத்தலில் இருந்து, தாதுப் பொருட்களை உள்நாட்டு தேவைக்கும், இதர நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திடவும், பிரித்தெடுக்கும் செயலில் விரைவான அதிகரிப்பு காணப்படுகிறது. இங்கு அட்டவணையில் தரப்பட்டுள்ள விவரங்களை பயன்படுத்தி அதனை நிரூபியுங்கள்.

இந்தியாவில் முக்கியமான சில தாதுப் பொருட்களின் பிரித்தெடுத்தலின் வளர்ச்சி (ஆயிரம் டன்களில்)

| தாதுப்பொருள் | 1997-8 | 2008-9 |
|---|---|---|
| பாக்ஸைட் | 6108 | 15250 |
| நிலக்கரி | 297000 | 493000 |
| இரும்புத் தாது | 75723 | 225544 |
| குரோமைட் | 1515 | 3976 |

- இது போன்று சுரங்கத் தொழிலின் விரைவான வளர்ச்சியால் மனித சமுதாயம் மற்றும் சுற்றுப்புற சூழலுக்கும் ஏற்படும் நஷ்டங்கள் குறித்து நீங்கள் கருதுவன யாவை?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## சமத்துவத்தை கூடிய நிலையான முன்னேற்றத்தை நோக்கி :

அரசாங்கத்தின் கொள்கை உருவாக்குபவர்கள், திட்டம் தீட்டும் போது, நீண்ட காலமாக அக்கறையின்றி இருந்து விட்டனர். இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டிய அவசியம் உள்ளது. எவ்வித இழப்பையும் ஏற்று கொண்டு, வளர்ச்சியை சாதிக்க வேண்டி உள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி மற்றும் நவீன தொழில் துறை முன்னேற்றம் முதலியவை நாட்டு மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும், வறுமையை குறைத்திடவும், அவசியமாகின்றன என்று வாதிடப்படுகிறது. நீவன தொழிற்சாலைகள் மற்றும் விவசாயப்பயிர்கள் இயற்கை வளங்கள், மின்சாரம் ஆகியவற்றை மிகுந்த அளவில் பயன்படுத்துகிறது. இதன் விளைவாக இயற்கை வளங்கள் தீர்ந்து போதல் மற்றும் சுற்றுப்புற சூழல் மாசடைதல் போன்றவை நிகழும், உயர்வான பொருளாதார வளர்ச்சி மற்றும் செல்வ செழிப்பை சாதித்த பிறகு, மாசடைதல் மற்றும் புறங்களின் தரம் சரிதல் போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும். பணத்தை செலவு செய்து காற்று மற்றும் நீரை தூய்மைப்படுத்தவும். பாட்டில்களில் அடைக்கப்பட்ட நீரை அருந்தலாம். எரி பொருள் திறன் கொண்ட கார்களை உற்பத்தி செய்யலாம். வளர்ச்சியடைந்த நாடுகள் கடந்த சென்ற பாதையும் இவ்வாறானதே.

இந்த தர்க்கம் பல்வேறு காரணங்களால் தவறானது. நம் சுற்றுப்புற சூழ்நிலைகள் ஏற்கனவே பல்வேறு அம்சங்களில் ஆபத்தான நிலையில் உள்ளது என்பதை நீங்கள் இப்போது உணர்ந்திருப்பீர்கள். நம் இந்தியா மிக அதிகமான மக்கள் தொகையை கொண்ட பெரிய நாடு. வளர்ச்சியடைந்த நாடுகள் செய்தது போல், நம் மக்கள் தொகையை தொடர்ந்து அதிகரித்து கொண்டே சென்றால், மின்சக்தி மற்றும் இதர வளங்களை அளவுக்கு மீறி பயன்படுத்தினால், சுற்றுப்புறங்களை மாசுபடுத்தி கொண்டே சென்றால் பூமிக்கு பெரும் ஆபத்தாகிவிடும். சுற்றுப்புறத்தில் ஏற்படும் சேதங்களை மீண்டும் சரிபடுத்துதல் எளிதான காரியம் அல்ல. எனவே, சுற்றுப்புற சேதங்களை சுயமாக சரிசெய்தல் என்பது தவறானது. அத்துடன், நாம் சுற்றுப்புற சூழ்நிலைகள் மீண்டும் பெறப்படுவதற்கு முன் அழிக்கப்படுவதை நிச்சயமாக விரும்பமாட்டோம். வருங்கால சந்ததியினர், சுற்றுச்சூழலின் சேதங்களை நிச்சயமாக விரும்பமாட்டோம். வருங்கால சந்ததியினர், சுற்றுச்சூழலின் சேதங்களை சீர்படுத்தி மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வந்தாலும், தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள குழப்பமான நிலைமைகளை தூண்மைபடுத்த கோடிக் கணக்கான ரூபாய்களை செலவழிக்க வேண்டியிருக்கும். எடுத்துக்காட்டாக, நமது நாட்டிலுள்ள நதிகள், வாய்கால்களை தூய்மைபடுத்தி, தற்போது நாம் பணத்தை செலவிட வேண்டியுள்ளது. அத்துடன், அவை மீண்டும் மாசுபடுத்தப்படாது என்பதை நிச்சயபடுத்திக்கொள்ள வேண்டியிருக்கும். இயற்கை வளங்களை அழித்திடும் குறைகளை பின்பற்றி, வருங்கால சந்ததியினருக்கு விட்டுச்செல்ல வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?


படம்-11.5 இப்படத்தைப் பார்த்து முன்னேற்றம் பற்றிய தலைப்பை எழுதுக

இவ்வாறு முரணாக செய்வது நியாயமா? நோயை வரவேற்கும் வாழ்க்கை முறையை முதலில் நாம் ஊக்கப்படுத்தி கொண்டாடுகிறோம். அதன் பிறகு அவற்றை குணப்படுத்த ஆயிரக்கணக்கில் செலவிடுகிறோம்.

நாம் ஏற்கனவே விரைவான பொருளாதார வளர்ச்சியால் ஏற்பட்ட எதிர்மறையான விளைவுகளை அனுபவித்து வருகிறோம். நிலத்தடி நீர் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் பிரச்சனை இதற்குரிய இரண்டு முழுமையான எடுத்துக்காட்டுகளாகும். சுற்றுப்புறச் சூழ்நிலைகளை சார்ந்து பல்லாயிரக்கணக்கான சமுதாயங்கள் வாழ்கின்றன. சுற்றுப்புறச் சூழலை அழித்தல் என்பது இச்சமுதாயங்களை அழிப்பதாகும். பொருளாதார முன்னேற்றத்தின் இழப்புகளை ஏழை மக்கள் தாங்கிட வேண்டும் என்று கேட்பது அநீதியாகும்.

இதன் பொருள், நாம் வளர்ச்சியடைய விரும்பவில்லை என்பதல்ல. ஆனால், நாம் சுற்றுப்புறம் குறித்த அக்கறைகளை, வளர்ச்சியின் கருத்துக்களோடும் ஒருங்கிணைக்க வேண்டும். அத்துடன் சமத்துவம் மற்றும் நீதி குறித்த அம்சங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

சுற்றுப்புற சூழல் ரீதியாக, வறுமையை நீக்கிட நிலையான மார்க்கங்களை கண்டறிய வேண்டும். இது சுலபமான பணி அல்ல. இருப்பினும், அதற்கான துவக்கங்கள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன.

1. சுற்றுச் சூழல் மீது உள்ளூர் மக்களின் உரிமைகளுக்காக பல்வேறு குழுக்கள் போராடி (பாடம்-21) வருகின்றன. இவை மக்களிடையே சுற்றுப்புறச் சூழல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் முக்கிய உந்து சக்தியாக விளங்குகின்றன. நிலையான முன்னேற்றம் நோக்கி நகர்ந்து சென்றிட செய்தன.

2. நீதிமன்றங்கள் ஆரோக்கியமான சுற்றுப்புற சூழலை பெற்றிருக்கும் உரிமை இயற்கையாகவே உயிர் வாழும் உரிமைக்கு தொடர்புடையது எனக் கூறி, அதற்கு ஆதரவாக பல தீர்ப்புகளை வழங்கியுள்ளன. 1991 ஆம் ஆண்டில், உச்ச நீதிமன்றம் அரசியலமைப்பு சட்டத்தின் சட்டப்பிரிவு -21 அளித்துள்ள உயிர் வாழும் உரிமையை வலியுறுத்தி கூறி, அதன்படி மாசற்ற நீர், காற்று ஆகியவற்றை பெற்று வாழ்க்கையை முழுவதுமாக அனுபவிக்கும் உரிமை குடிமக்களுக்கு உண்டு என ஊர்ஜித படுத்தியது. சுற்றுப்புற சூழல் மாசடைவதை கட்டுப்படுத்தவும், மாசடைய காரணமாக இருப்பவர்கள் மீது கணிசமான அபராதம் விதிக்கவும், தேவையான சட்டங்கள் மற்றும் விதி முறைகளை இயற்றும் பொறுப்பு அரசாங்கத்திடம் உள்ளது. பல்வேறு அரசு நிறுவனங்கள் மாசடைதலை கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தும் பங்கை ஆற்றிட துவங்கப்பட்டன.



படம் : 11.6

*படம் 12-8 வாகனங்களில் இருந்து வெளியேறும் வாயுக்கள் மற்றும் புகை சுற்றுப்புறச் சூழல் மாசடைவதற்கு முக்கியமான காரணமாகும். 1998ஆம் ஆண்டு முதல் உச்ச நீதி மன்றம் தன் தொடர்ச்சியான பல்வேறு தீர்ப்பிகளில், டீசல் பயன்படுத்தும் பொது மக்கள் போக்குவரத்து வாகங்கள், இறுக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை பயன்படுத்துமாறு மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டது. இது டீசலை விட தூய்மையான எரிபொருள். இந்த நடவடிக்கையின் விளைவாக, டெல்லி போன்ற மாநகரங்ளில் காற்று மாசடைதல் கனிசமான அளவு குறைந்துள்ளது. இருப்பினும், சமீப காலங்களில் மாசடைதலின் அளவு மீண்டும் அதிகரித்துள்ளது. தனியார் கார்களின் எண்ணிக்கை மிகவும் உயர்ந்திருப்பதே இதற்கு காரணமாகும். கார் தயாரிப்பாளர்கள், டீசலால் இயங்கும் கார்களை உற்பத்தி செய்து விற்பனை செய்ய துவங்கி உள்ளனர். நிலையான முன்னேற்றம் என்பது எளிதான ஒன்றல்ல.*

3. கால மாற்றங்கள் போன்ற விஷயங்களில் உலக நாடுகள் கூட்டான முடிவுகள் செய்திட முயன்றுள்ளன. கால நிலை மாற்றங்கள் எல்லா நாடுகளையும், மக்களையும் பாதிக்கின்றன. சில நாடுகள் மற்ற நாடுகளை விட அதிகமாக பாதிக்கப்படுகின்றன. இவ்விளைவுகளில் பலவற்றை நாம் புரிந்து கொள்ளவும் முன் கூட்டியே யூகிக்கவும் முடிவதில்லை. தனிப்பட்ட முறையில் ஒரு நாடு பசுமை இல்ல வாயுக்களை வெளியிடுவதை குறைத்திட முயற்சி நடவடிக்கைகள் மேற்கொண்டாலும், மற்ற நாடுகள் அவற்றின் பகுதிகளில் காற்று மாசடைவதை தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளாவிட்டால், சுற்றுச்சூழல் சீர்கேடு தொடர்ந்து காணப்படும். இவ்வாறக, உலகளவில் எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து, தீர்வுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியமாகிறது.

4. சமுதாய மட்டத்தில், பல்வேறு சமூக அமைப்புகள், உற்பத்தி செயலை நிலையான மற்றும் சமத்துவமான முறையில் செய்திட புதுமையான வழிகளை கண்டுபிடித்துள்ளன. அது போன்ற முன்முயற்சிகள் குறித்து பல்வேறு எடுத்துக் காட்டுகள், பல்வேறு துறைகளில் உள்ளன. அவையாவன: மீன் பிடிப்பு தொழில், சுரங்கத் தொழில், போக்குவரத்து, மின் உற்பத்தி, விவசாயம், தொழிற்சாலை முதலியனவாகும்.

விவசாய உற்பத்தியில், அங்கக பொருட்கள் மற்றும் அங்கக விவசாயம் குறித்து நீங்கள் கேள்விபட்டிருப்பீர்கள். அங்கக விவாசம் செய்திடும் விவசாயிகள் ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதில்லை. அவற்றிற்க்கு பதிலாக, அவர்கள் இயற்கை முறைகளை பயிர் சூழற்சி, கூட்டு உரம், உயிரியல் பூச்சி கட்டுப்பாட்டு, போன்றவற்றை சார்ந்துள்ளார்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அங்கக விவசாயத்தின் முக்கியமான குணாதிசயம் யாதெனில், உள்ளூர் வளங்களை பயன்படுத்தி கொள்வதாகும். இதில் பூச்சிகளை பிடித்து உண்ணும் ஊண் உன்னிகள் (பறவைகள், சிலந்திகள், பூச்சிகள்) அல்லது மண்ணில் உள்ள நுண்ணிய உயிரினங்கள் (ரிஜோபியம் மற்றும் அஜோடோ பேக்டர்) முதலியவற்றை உயிரியல் பண்ணை முறைகளில் பயன்படுத்திக் கொள்வதாகும். செயற்கை ரசாயன உள்ளீடுகளின் பயன்பாடு குறைக்கப்படும். வேளாண்மை பண்ணைகள் உயிர் வேற்றுமையை கொண்டிருக்கும். அவை ஒன்று அல்லது இரண்டு பயிர்களை விட பல்வேறு பயிர்களை விளைவிக்க முடியும். இதை விட மேலாக, நவீன விவசாய முறையில் பெறும் உற்பத்திக்கு ஈடாக அங்க விவசாயத்திலும், உற்பத்தியை பராமரிக்க முடியும்.

தற்போது, அங்கக விவசாயத்தின் தேவையையும், உற்பத்தி திறனையும் பல மாநிலங்கள் உணர்ந்துள்ளன. உள்ளூர் நிலைகளில் இதற்கு ஆதரவாக உள்ளன. முன் முயற்சிகள், அரசின் கொள்கைகள் மீது செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளன. சிக்கிம் அரசாங்கம் ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளை தடை செய்யும் துணிவான நடவடிக்கையை மேற்கொண்டது. 2015 ஆம் ஆண்டுக்குள் மாநில விவசாயத்தை முழுவதுமாக அங்கக விவசாய முறைக்கு மாற்றிட திட்டமிட்டுள்ள, இந்தியாவின் முதல் மாநில விவசாயத்தை முழுவதுமாக அங்கக விவசாய முறைக்கு மாற்றிட திட்டமிட்டுள்ள, இந்தியாவின் முதல் மாநிலமாகிட அதே வழியை பின்பற்றி வருகிறது.

நிலையான உணவுப் பொருள் உற்பத்தி மற்றும் அதன் சமமான பங்கீட்டில் மற்றொரு சுவாரசியமான தலையீடு யாதெனில் மாற்று பொது விநியோக முறையாகும். இது ஆந்திர பிரதேசத்தின் ஜகீரபாத் பகுதியில் சமூக குழுக்களால் துவங்கப்பட்டதாகும்.













1. கென்யாவிலுள்ள மாசாய் போர்வீரர்கள்
2. யுர்ட்டா-கஜகிஸ்தான்
3. திபெத்தில் உள்ள கியாங் பழங்குடிகள்
4. தென் அமெரிக்காவிலுள்ள-கச்சோக்கள்

படம்-11.7 2013ஆம் ஆண்டில் ‘அவர்கள் இறப்பதற்கு முன்பு’ என்னும் பெயரில் ஒரு புதிய புகைப்பட தொகுப்பு புத்தகம் வெளியிடப்பட்டது. இப்புத்தகம் நமக்கு கிடைக்கும்படியாக இல்லை. இதன் ஆசிரியர். மறைவின் விளிம்பு நிலையில் உள்ள நாடோடி சமூகத்தினரை அடையாளம் கண்டுள்ளார். (இங்கு நாம் காணும் படங்கள் பல்வேறு ஆதாரங்களில் இருந்து பெறப்பட்டவை) நீங்கள் இவற்றை பார்க்கும் போது, நிலையான முன்னேற்றம் குறித்த கேள்வி, ஏன்-எவ்வாறு முக்கியமானது என்று நினைத்து பாருங்கள். இந்த புத்தக ஆசிரியர், இந்த நாடோடி மக்கள் மறைந்து வருகின்றனர் என்று அடையாளம் கண்டுள்ளது ஏன் என்பது குறித்தும் சிந்தியுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## ஒரு மாற்று பொது விநியோக முறை :

இந்தியாவில் விவசாயம் செய்யப்படும் மொத்த நிலப்பரப்பில், 92 மில்லியன் ஹெக்டேர்கள் மழையை சார்ந்துள்ள பகுதி மற்றும் 51 மில்லியன் ஹெக்டேர்கள் நீர்பாசன செய்யப்படும் பகுதியாகும். இதன் பொருள் யாதெனில், இந்தியாவில் விவசாயம் செய்யப்படும் நிலப்பரப்பில் 2/3 பாகம் மழை சார்ந்த பகுதி. இது நீர்பாசனம் மூலம் விவசாயம் செய்ய ஏற்றதல்ல. பாரம்பரியமாக, வறண்ட நிலப்பகுதி நிலைமைகளுக்கு ஏற்ற கலப்பு பயிர்கள், இந்த நிலப்பரப்புகளில் விவசாயம் செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாக, வறண்ட நில விவசாயம் தக்கான பீடபூமியில் 16 வகையான பயிர்கள் ஒரே சமயத்தில் பயிரிடப்படுகின்றன. இவற்றின் முதிர்வு அடையும் காலம் வேறுபட்டவை, இதனால் நீடிக்கப்பட்ட வேலைக் காலம், தொடர்ச்சியாக வருவாய் மற்றும் உணவு விநியோகம் முதலியவை உண்டாகின்றன. இது விவாயிகளின் சுமையை குறைத்து விட்டது. மோசமான நிலைமைகளிலும் ஒரு பயிர் அறுவடையை தருகின்றன. கலப்பு பயிரிடுதல் முறை, பயிரை தாக்குதல் எந்த ஒரு பூச்சியாலும், பெருமளவு பாதிப்படையும் வாய்ப்பை குறைத்து விட்டது. நிலத்தின் மண் வளத்திற்கு ஏற்ற பயிர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சமசத்துள்ள மற்றும் ஊட்டசத்துள்ள உணவை மக்களுக்கும், விலங்குகளுக்கும் தருமாறு உள்ளன.

பசுமை புரட்சி நடைமுறைக்கு வந்தபின், நெல் மற்றும் கோதுமை பயிர்களுக்கு முக்கியத்துவம் ஏற்பட்டது. இத்தானியங்கள் பொது விநியோக முறையின் கீழ் நியாய விலை கடைகளிலும் கிடைத்தன. வீடுகளில் சமைக்கும் வேறு முக்கியமான தானியங்கள் இருந்த இடத்தில் அரிசி மற்றும் கோதுமை என்னும் நிலை உருவானது. உள்ளூர் தானிய வகைகளுக்கு தேவை வீழ்ச்சி அடைந்தது. காலப்போக்கில், பல்வேறு வறண்ட நிலப்பகுதிகள் விவசாயம் செய்யப்படாமல் கைவிடப்பட்டன. பசுமைப் புரட்சி திட்டத்தின் கீழ் நெல் மற்றும் கோதுமையின் சாகுபடி செய்வது, அரசாங்கத்தின் பல்வேறு கொள்கைகளின் படி உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய ஊக்குவிக்கப்பட்டன என்பதை நீங்கள் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். சிறு தானியங்களின் சாகுபடிக்கு ஊக்கமோ, ஆதரவோ தரப்படவில்லை. வறண்ட நிலப்பகுதிகளின் பயிர்களான சிறு தானியங்கள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் சாகுபடி இவ்வாறாக பாதிக்கப்பட்டது.

ஆந்திர பிரதேசத்தின் மெதக் மாவட்டத்திலுள்ள ஜகீராபாத் மண்டல கிராம மக்கள், கொள்முதல் செய்யப்பட்ட கோதுமை மற்றும் அரிசியின் மீது சார்ந்திருப்பதை மாற்றி அமைந்தனர். இப்பகுதியை சேர்ந்த பெண்கள் உள்ளூர் உணவு கலாச்சாரம் குறைந்ததன் மீது 2000 ஆண்டில் பிரதிபலிக்க துவங்கியதில் இருந்து, இம்மனபோக்கு ஏற்பட்டது. இப்பகுதியின் பாரம்பரிய முக்கிய உணவாக சிறு தானியங்கள் இருந்தன. இவற்றின் இடத்தில் அரிசி இடம் பெற்றது. அரிசி, சிறு தானியங்களை விட குறைவான ஊட்டச்சத்தை கொண்டது. குறைவான ஊட்டச்சத்து மட்டுமின்றி, இப்பகுதி மக்கள் தங்கள் நிலங்களில் பயிரிடும் பயிர்கள் மீது கட்டுப்பாட்டை இழந்து விட்டதை உணர்ந்தனர். பல்வேறு நிலப்பகுதிகள் தரிசாக விடப்பட்டன. தக்காண மேம்பாட்டு சங்கம் (Deecan Development Society) எனப்படும் தன்னார்வ அமைப்பின் தலைமையில், கிராம மக்கள் தரிசு நிலங்களையும், பொது நிலங்களையும் கூட்டாக விவசாயத்திற்கு பயன்படுத்த முடிவு செய்தனர். ஏனெனில், சிறுதானியங்கள் சாகுபடி அப்பகுதியின் உள்ளூர் சுற்றுப்புற சூழலுக்கு ஏற்றவை. சிறு தானியங்கள் தினை மற்றும் ஊட்டசத்து மிக்கவை.

தரிசு நிலங்களில் விவசாயம் மேற்கொண்டதால் மக்களுக்கு வேலை கிடைத்தது. மேலும், உற்பத்தியான தானியங்களை வெளியிடங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்வதற்கு பதிலாக, இப்பகுதி மக்கள், சமுதாய தானி வங்கி (Community grain Bank) துவக்கினர். இது பொது விநியோக முறை அடிப்படையில் செயல்பட்டது. (மக்கள் பல்வேறு குடும்ப அடையாள அட்டைகளை பெற்றிருத்தலும், ஒவ்வொரு வகை குடும்ப அட்டைக்கும் நிர்ணயித்த அளவு தானியங்கள் ஒதுக்கீடு இருத்தலும் போன்றவை இருந்தது) இம்முறை உள்ளூர் நிலையில் நிர்வாகிக்கப்பட்டது. விநியோகம் செய்யப்பட்டது உள்ளூர் தானியங்களாக இருந்தன. நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர்கள் தொலைவிலிருந்து கொண்டு வரப்பட்ட தானியங்களுக்கு மிகை உள்ளூர் நிலங்களில் விளைந்த தானியங்கள் தற்போது கிடைக்கின்றன. இது கிராமத்தில் உணவுப் பாதுகாப்பை ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## பாடச் சுருக்கம் :

நவீன முன்னேற்றம், சுற்றப்புற சூழலின் அழிவை உண்டாக்கும் பிரச்சனைகளை தீவிரமாக்கி உள்ளது என்பதை கண்டோம். தற்போது பல்வேறு வழிகளில் உண்டாகி வரும் பிரச்சனைகளை நாம் வெளிப்படையாக உணர்ந்து வருகிறோம். பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியின் வளர்ச்சியை மையமாக கொண்ட முன்னேற்றத்தை இலட்சியமாக கொள்வதில் இருந்து, சமத்துவத்துடன் கூடிய நிலையான முன்னேற்றத்தை நோக்கிய மாற்றம் ஏற்பட வேண்டும். இம்மாற்றத்தில் ஒவ்வொருவரும் பங்காற்ற வேண்டியுள்ளது. தனிமனிதர்கள், தொழிற்சாலைகள், விவசாயிகள், அரசாங்கங்கள், நீதி மன்றங்கள், தன்னார்வ மற்றும் சமுதாய அமைப்புகள் மற்றும் பன்னாட்டு அமைப்புகள் போன்றவை பங்காற்ற வேண்டியுள்ளது.

## முக்கியச் சொற்கள்

1. நிலையான முன்னேற்றம்
2. மக்களின் உரிமைகள்
3. சுற்றுப்புச் சூழல்
4. சமத்துவம்
5. மூலாதாரம்
6. சிப்கோ

## உனது கற்றலை மேம்படுத்துக

1. ஜல்சிந்தி கிராம மக்கள் ஏன் தங்கள் கிராமத்தை விட்டு வெளியேற மறுத்தனர்?(AS1)
2. "இது எங்களுடைய மூதாதையர்களின் நிலப்பகுதி இதன் மீது எங்களுக்கு உரிமை உள்ளது. இப்பகுதியை இழந்து விட்டால், பின்பு எங்களுக்கு மண்வெட்டிகளும், கடப்பாறைகளும் கிடைக்கும், வேறு எதுவும் மிஞ்சாது..." என்கிறார் பாவா மஹாலியா. இக்கூற்றை நீ விவரிக்க முடியுமா?(AS1)
3. "இறுதியாக, சுற்றுப்புறச் சூழல் பிரச்சனைகளின் தீர்வுக்கான வழி, நம் வாழ்க்கை முறையில் பொருட்களை வீணாக்குதல் மற்றும் மாசடைதலை குறைத்திடுதலில் இக்கூற்றின் அடிப்படையில் பின் வினாக்களும் விடையளி. சுற்றுப்புறச் சூழலை பாதிக்கும் நம் வாழ்க்கை முறையின் பல்வேறு வழிமுறைகள் யாவை? இதை விவரிக்க, உங்களுடைய சொந்த சூழ்நிலைகளிலிருந்து எடுத்துக்காட்டுகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.(AS4)
   - கழிவுப் பொருட்கள் மற்றும் தொழிற்சாலைகள் வெளியிடுனவற்றால் ஏற்படும் பிரச்சனைகளை கையாள உலகம் முழுவதும் பின்பற்றப்படும் பல்வேறு வழிமுறைகள் குறித்து கண்டறியுங்கள்?
4. விரைவான முறையில் தாதுப்பொருட்கள் மற்றும் இதர இயற்கை வளங்களை பிரித்தெடுப்பதால், எதிர்கால முன்னேற்ற அம்சங்கள் மீது எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்தும். நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?(AS4)
5. வானிலை மாற்றங்களின் விளைவுகளை எல்லா நாடுகளும் உணர முடியும் என்று நீ ஏன் கருதுகிறாய்?(AS1)
6. பூமியின் சராசரி வெப்பநிலை, எல்லா மக்களின் இயற்கை வளமாக கருதப்படவேண்டுமா?(AS1)
7. ஆந்திரபிரதேசத்தில், ஐதராபாத் மண்டலத்தில் பொது விநியோக முறையின் மாற்று ஏற்பாட்டின் துவக்கம் செய்யப்பட்டதில் இருந்து, என்னென்ன படிப்பினைகளை கண்டறியப்பட வேண்டும்?(AS4)
8. "உள்ளூர் சமூகத்தினரின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்களுக்கு சுற்றுப்புறச் சூழல் தீர்மானம் முக்கியமானது. உள்ளூர் சமூகத்தினரின் வாழ்க்கை முறை சுற்றுப்புற சூழலுடன் ஒத்துப் போனதாக உள்ளது" விவரியுங்கள்.(AS6)

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

9. இந்திய புறவரிப்படத்தில் (i) நர்மதை நதி (ii) சர்தார் சரோவர் அணைத்திட்டம் குறித்து காட்டுக.(AS5)

**கலந்துரையாடல் :**

**விவசாயத்தில் உயர்வீரிய புதுரக விதைகளை பயன்படுத்துதல் மற்றும் அதிகளவு பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளித்தல் சிறந்ததா? இது குறித்து விவாதம் நடத்துக.**

## செயல் திட்டம்

அங்கக விவசாயத்தில் நீங்கள் கூட்டு உரம் தயாரிப்பு குறித்து படித்துள்ளீர்கள். இங்கு ஒரு எளிமையான முறை தரப்பட்டுள்ளது. நீங்கள் உங்களுடைய பள்ளிக்கூடம் மற்றும் வீட்டில் முயன்று பார்க்கலாம்.

- பெரிய அளவிலான ஒரு தகர டப்பாவை எடுத்துக்கொள். அதிலிருந்து நீர் வெளியேற பல துளைகளைப்போடு.
- அதில் ஒரு அடுக்கு தேங்காய் நார் அல்லது கயிறு நனை
- பின்னர் அதை மெல்லிய மண் அடுக்கால் மூடு.
- அதன் மேல் காய்கறி கழிவுகளை ஒரு அடுக்காக மூடு
- அதன் மீது மண்ணை மூடு
- மறுபடியும் காய்கறி கழிவுகளை ஒரு அடுக்காக மூடு.
- அதன் மீது மண்ணை மூடு.
- ஒரு வாரம் கழித்து, மண் புழுக்கள் அதனுள் விடுக.
- அம் மண்ணை, நீங்கள் தேர்வு செய்து தாவரங்கள் உடைய சிறு தோட்டத்திற்கு பயன்படுத்துங்கள்.

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்

# 12 போர்களுக்கிடையே உலகம்

20 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் உலக மக்கள் தொகையின் எண்ணிக்கை 1.6 பில்லியனாக இருந்தது. தொழிற்புரட்சியும் முதலாளித்துவமும் மக்களின் வாழ்க்கை முறையை பெருமளவில் மாற்றின. ஆனால், இம்மாற்றம் மேற்கத்திய நாடுகளில் மட்டும் நடைபெற்றது. இவைகளில் சில நாடுகள், குறிப்பாக தொழில் வளம் மற்றும் காலனி ஆதிக்கம் கொண்ட இங்கிலாந்து, உலகம் முழுவதும் மாற்றத்தை கொண்டுவந்தது. பொருளாதார வளர்ச்சியடைந்தவை 'மேற்கு நாடுகள்', எனவும், மேற்கு நாடுகளால் சுரண்டப்பப்பட்டவை பின்தங்கிய 'மற்ற நாடுகள்' எனவும் உலகம் இரண்டாக பிளவுப்பட்டது.

'எரிக் ஹாப்ஸ்பாம்' எனும் வரலாற்று ஆசிரியர், 20 ஆம் நூற்றாண்டை 'வெறுப்புக் காலம்' என்று வர்ணித்தார். காரணம், மக்களின் ஜனநாயக விருப்பத்தையும், வெறுப்பையும், அதிகாரம் மிக்கோரை கேள்வி கேட்கக் கூடாது எனும் கொள்கையையும் உடைய ஃபாசிசத்தின் வளர்ச்சியையும் உலகம் கண்டது. கல்வியறிவும், மக்கள் உயிர் வாழும் காலமும் அதிகரித்தது. புதிய கலைத் துறையான திரைப்படத்துறையும் வளர்ந்தது. மனிதனின் அறிவுக்கு அப்பாற்பட்ட அணுக் கூறுகள் தொடர்பான அறிவியலும் வளர்ந்தது. உலக மக்கட்தொகையில் பாதியளவு உடைய பெண்கள் மேற்கத்திய நாடுகளிடமிருந்து ஓட்டுரிமையை பெற்றனர். நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் சுதந்திரமடைந்தன. சமத்துவம்,சகோதரத்துவம் அரசியல் சுதந்திரம், முதலாளித்துவம் போன்ற கொள்கைகளின் அடிப்படையில் மக்களின் சமூக அமைப்புகள் தோன்றியதால் இக்காலத்தை 'சோதனை மிக்க காலம்' என்பர். ஆனால், இக்காலத்தில் ஐரோப்பா கண்டத்தில் ஏற்பட்ட வேலையில்லா திண்டாட்டத்தாலும், பொருளாதார பிரச்சனைகளாலும் இரண்டு உலகப்போர்கள் நடைபெற்றதாலும் 'பொருளாதார தேக்க நிலை' [Great Depression]ஏற்பட்டது. இப்போரில் லட்சக்கணக்கான மக்கள் இறந்தனர் மற்றும் லட்சக்கணக்கான மக்கள் நாட்டை விட்டு வெளியேறினர். ஆனால், 20 ஆம் நூற்றாண்டில் பெரும் எதிர்ப்புகளும், சோதனைகளும், அபாய தொழில் வளர்ச்சியும் ஏற்பட்டன.

காலப்பட்டியல் -I

| | |
|---|---|
| முதல் உலகப் போர் துவக்கம் ஆகஸ்ட் | 1914 |
| ரஷ்யப் புரட்சி | 1917 |
| முதல் உலகப்போர் முடிவு | 1918 |
| வெர்சைல்ஸ் ஒப்பந்தம் | 1919 |
| சர்வதேச சங்கத்தின் துவக்கம் | 1919 |
| ஜெர்மனியில் இட்லரின் வளர்ச்சி | 1933 |
| இரண்டாம் உலகப் போர் துவக்கம் | 1939 |
| ஜெர்மனி ரஷ்யா மீது படையெடுப்பு | 1942 |
| ஐக்கிய நாடுகள் சபை துவக்கம் | 1945 |
| இரண்டாம் உலகப்போர் முடிவு ஆகஸ்ட் | 1945 |

இவைகளைப் பற்றிய செய்திகளை இப்பாடத்தில் உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறோம். இரண்டு உலகப் போர்கள், 1929 பொருளாதார தேக்க நிலைக்குப் பிறகு நிகழ்ந்த மூன்று நிகழ்ச்சிகள், ஐக்கிய நாடுகள் சபை போன்ற உலக நிறுவனங்களின் உலக அமைதியின் முயற்சி மற்றும் முன்னேற்றத்தைப் பற்றி இங்கு காண்போம்.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



படம் 12.1 : உலகில் முதன் முதலாக விமானத்திலிருந்து குண்டுகள் வீசப்பட்டன

## ஆக்கிரமிப்பு தேசியம் :

ஆக்கிரமிப்பு தேசியம் என்பது நேர்மறை கொள்கையாகும். இது நவீன நாட்டரசுகளுக்கு ஆரம்பமாகவும் ஜெர்மனி மற்றும் இத்தாலி ஒருங்கிணைப்பிற்கு உந்துதலாகவும் இருந்தது. இக்கொள்கை ஒருவருக்கு தேசிய உணர்வையும், அண்டை நாடுகளுக்கு வெறுப்பையும் உண்டாக்கியது. இவ்வெறுப்புணர்வு 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே பரவியது.

1923 முதல் இத்தாலியின் பாசிசமும், ஜெர்மன் நாஜிக்களின் தேசிய சோஷியலிசமும் பிறரை அழிக்கும் எண்ணத்துடன் ஆக்கிரமிப்பு தேசியக் கொள்கையினை தூண்டி, பாசிஸடுகள் ஆக்கிரமிப்பு தேசியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் பொருட்டு ஜெர்மனியின் நாசிஸ்டுகளை எதிர்க்கும் வண்ணம் ஊக்குவித்தனர்.

## ஏகாதிபத்தியம்

இங்கிலாந்து, ஜெர்மனி மற்றும் அமெரிக்காவில் தொழிற்துறை வளர்ந்ததால், தங்களின் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப்பொருட்களுக்காகவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதற்காகவும் சந்தைகளைத் தேடின. வங்கிகளிலும், நிதி நிறுவனங்களிலும் கடன்கள் கொடுக்கப்பட்டதால் காலனி நாடுகளிலும் அதிக முதலீடு செய்தனர். 19 ஆம் நூற்றாண்டில் புதிய காலனிகள் அதிகரித்தது. ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாட்டு முதலாளிகளுக்காக காலனிப் பகுதிகளை அதிகரித்தல், குறைத்தல் எனும் பணிகளை செய்தது.

புதிய தொழில் வள நாடுகள் [ஜப்பான், ஜெர்மனி,இத்தாலி] தோன்றியதால், அவைகள் காலனி நாடுகளை பிரிக்க முனைந்தன. ஆனால், பழைய வல்லரசு நாடுகள் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. இது இவைகளுக்கிடையே போர்மூள காரணமாயிற்று.

### இரகசிய ஒப்பந்தங்கள்:

1870-ல் பிரான்சை தோற்கடித்தபிறகு ஜெர்மன் சேன்சுலர் பிஸ்மார்க் அதை தனிமைப்படுத்த முடிவு செய்தார். இதற்காக பிஸ்மார்க் 1879 ல் ஆஸ்திரியாவுடனும் 1882-ல் இத்தாலியுடனும் இரகசிய ஒப்பந்தத்தை மேற்கொண்டார். இந்த இரகசிய ஒப்பந்தத்தால் ஆஸ்திரியா ரஷ்யாவிடமிருந்தும், இத்தாலி பிரான்சிடமிருந்தும் மறைமுகமாக பாது காப்பை பெற்றன. ஜெர்மனியை கோபமூட்ட பிரான்ஸ், 1891-ல் ரஷ்யாவுடனும், 1904-ல் இங்கிலாந்துடனும் இரகசிய ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொண்டன. இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ரஷ்ய நாடுகள் 'முக்கூட்டு'[Triple Entente] ஒப்பந்தத்தை 1907-ல் ஏற்படுத்திக் கொண்டன. ஜெர்மனி தலைமையில் 'மூன்று நாடுகள்'கூட்டணியில் [Triple Alliance] இத்தாலி மற்றும் ஜப்பான் சேர்ந்தது. இது இரு



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கூட்டணிகள் மத்தியிலும் பொறாமைத்தீயை வளர்த்தது. இக்கூட்டணிகள் ஐரோப்பிாவில் உண்மையான சமாதானத்திற்கு பதில் போர் மேகத்தை உருவாக்கின.

வரைபடம் 12.2: அணு ஆயுதச்செலவு




வல்லரசு நாடுகள் [ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, இங்கிலாந்து, ரஷ்யா, இத்தாலி பிரான்ஸ்]1880 முதல் 1914 வரை அணு ஆயுத தாயரிப்பிற்கு செய்த செலவு [ஆதாரம்: உலக வரலாற்று வரைபட அமைப்பு லண்டன் 1978]

## படைபலம் :

இராணுவம் மூலம் பாதுகாப்பும் பிரச்சனைகளுக்கு தீர்வும் காண முடியும் என சில நாடுகள் நம்பின. 1880 முதல் 1914 வரை ஆறு பெரிய நாடுகளின் [ஜெர்மனி, ரஷ்யா, ஆஸ்திரியா, இத்தாலி, பிரான்ஸ், இங்கிலாந்து] இராணுவச் செலவீடு 132 பவுன்டிலிருந்து 397 பவுன்டாக, அதாவது 300% உயர்ந்தது. அனைத்து நாடுகளும் படைபலத்தை பெருக்கிக்கொண்டன. படைபலத்திற்கு மூன்று முக்கியமான அம்சங்கள் உள்ளன. ஒன்று இந்நாடுகள் நிலையான ஆயுதங்களை வைத்திருந்தன. இரண்டு, அணு ஆயுதங்களை வைத்திருந்தன. மூன்று தங்கள் நாட்டு மக்களை போர்களுக்கு ஒத்துழைக்கும் மனமாற்றத்தை ஏற்படுத்தின. பல ராஜதந்திர பிரச்சனைகளை தீர்க்க போர் ஒன்றே வழி என்னும் எண்ணத்தை தொழில் மயம் ஏற்படுத்தியது. போர்கள் சில நேரங்களில் லாபத்தையும் மறைமுகமாக பெற்றுத் தந்தது.

## பால்கன் அரசியல் :

இராண்டாவது அபாயகரமான நிகழ்வு யாதெனில், உலக நாடுகள் பல நாட்டரசுகளாகவும் இவை அதிகாரக் குழுக்களாகவும் உருவாகி பல ஒப்பந்தங்கள் மூலம் போர் குழுக்களாக மாறின. தொழில் வள நாடுகளின் அதிகாரத்தால் உலகில் பல நாட்டரசுகள் தோன்றலாயின. மேலும் உலக தொழில் வள நாடுகள் தங்கள் நாட்டின் தேவைக்காக பிற நாடுகள் மீது தங்கள் ராஜதந்திரத்தை நிலைநாட்டின. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பிய நாடுகள் பல, சில ஒப்பந்தங்கள் மூலமாக ஒருவருக்கு ஒருவர் போர் எதிரிகளாயினர். இரண்டு போர் குழுக்கள் உருவாகின.ஒன்று மத்திய கூட்டணி, மற்றொன்று நேச நாடுகள் கூட்டணி. இவைகள் பிற நாடுகள் மீது அதிகாரத்தையும், சுரண்டலையும் மேற்கொண்டன. இவ்வாறு சுரண்டலின் போது பாதுகாப்பு இல்லாததால் ஒரு நாடு மற்றொரு நாட்டுக்கெதிராக ரகசிய ஒப்பந்தங்களை மேற்கொண்டன. இவை முன்பு ஆஸ்திரியா மற்றும் இத்தாலி இடையேயும், அல்லது இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் இடையேயும் ஏற்பட்டன.

அவ்வாறான போர் குழுக்கள், இராண்டாம் உலகப் போரின் போது ஜெர்மனி தலைமையில் 'அச்சு நாடுகள்' எனவும் இங்கிலாந்து தலைமையில் அமெரிக்கா ரஷ்யா சேர்ந்த 'நேச நாடுகள்' எனவும் தொடர்ந்தன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## இரண்டு உலகப் போர்களின் காரணங்களை ஒப்பிடுதல் :

இரண்டும் ஒரே வகை நிகழ்வு என யாராலும் கூற இயலாது. இரண்டு உலகப் போர்களும் 20 ஆம் நூற்றாண்டில் துவங்கினாலும், இவைகளுக்கிடையே 21 ஆண்டுகள் இடைவெளி இருந்ததால் இராணுவ தளவாடங்கள், ராஜதந்திர ஒப்பந்தங்கள், பொருளாதார நிலைகள் ஆகியவற்றில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. 20 ஆம் நூற்றாண்டின் போர்களைப் பற்றி வேறுபாடுகளை காணுதலும், ஒப்பிடுதலும் அதைப்பற்றி புரிந்துகொள்ளுதலும் எளிது. முதலில் இரண்டு உலகப் போருக்கும் காரணமான கோபத்தை தூண்டும் உடனடிக் காரணத்தையும், பிறகு முக்கியக் காரணத்தையும் காணலாம்.

### உடனடிக் காரணம்

ஒவ்வொரு போரும் நெடியக் காரணத்துடன் தொடர்புடைய கோபமூட்டும் உடனடிக் காரணத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது. 1914 ஆம் ஆண்டு ஜுன் 28 ஆம் நாள் செர்பிய நாட்டவன் ஒருவனால் ஆஸ்திரிய கோமகன் பிரான்ஞ் ஃபெர்டினான்ட் படுகொலை செய்யப்பட்டதே முதல் உலகப் போருக்கான உடனடிக் காரணமாகும். ஆஸ்திரியா செர்பியா மீது போர் தொடுத்தது. செர்பியாவிற்கு நேச நாடுகள் [இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ரஷ்யா] உதவ முன்வந்தன. மத்தியக் கூட்டணி [ஜெர்மனி மற்றும் இத்தாலி] நாடுகள் ஆஸ்திரியாவிற்கு உதவ முன்வந்தன. ஆகையால், முதல் உலகப்போர் துவங்க இவை காரணமாயின.

அவ்வாறே, ஜெர்மன் இராணுவ பீரங்கி வாகனங்கள், போலந்து நாட்டிற்குள், 1939ஆம் ஆண்டு செப்டம்பர் 1 ஆம் தேதி நுழைந்ததால் இரண்டாம் உலகப் போர் துவங்கியது. போலந்து நாடு ‘டேன்ஜிக்’ எனும் துறைமுகத்தை ஜெர்மனிக்கு ஒப்படைக்காததால் அதற்கு தண்டனையாக ஜெர்மனி, போலந்து மீது போர் தொடுத்தது. போலந்தின் நிலப்பகுதி ஜெர்மனியின் இரு புறங்களுக்கு இடையே அமைந்திருந்தது. போலந்திடம் சிறிய இராணுவப் படை உள்ளது என ஜெர்மனி எண்ணியது, ஆனால் இங்கிலாந்து போலந்திற்கு உதவியது. பிரான்ஸ் நாடு சில நாட்களுக்குப் பிறகு போலந்து நாட்டிற்கு உதவியது. இவைகள் இரண்டாம் உலகப்போர் துவங்கக் காரணமாயிற்று.

இப்பொழுது இரண்டு உலகப் போர்களின் நெடியக் காரணத்தை காண்போம். முதல் உலகப்போர் 19-ஆம் நூற்றாண்டில் துவங்கியது. முதல் உலகப்போரின் நான்கு முக்கிய நெடியக் காரணங்கள் ஆக்கிரமிப்பு தேசியம், ஏகாதிபத்தியம் இரகசிய ஒப்பந்தங்கள் மற்றும் படைபலம் ஆகியவையாகும். இக்காரணங்கள் இரண்டாம் உலகப் போருக்கான நெடியக் காரணங்களாகவும் தொடர்ந்தன.

### இரண்டாம் உலகப் போரின் சிறப்பு அமைப்புகள் :

### வெர்சைல்ஸ் ஒப்பந்தம் :

1919-ல் ஏற்பட்ட வெர்சைல்ஸ் ஒப்பந்தத்துடன் முதல் உலகப்போர் முடிவுக்கு வந்தது. இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் பெரிய அளவு மாநாடாக நடந்தது. இதில் 32 நாடுகளின் தலைவர்கள் அதாவது, நான்கில் மூன்று பங்கு உலக மக்கட் தொகையின் தலைவர்கள் கலந்துகொண்டனர். வெற்றி பெற்ற ஐந்து பெரிய நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஜப்பான் இம்மாநாட்டில் கலந்து கொண்டன. ரஷ்யா மற்றும் தோல்வியுற்ற நாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரியா மற்றும் துருக்கி இம்மாநாட்டிற்கு அழைக்கப்படவில்லை. எதிர்கால அமைதியான உலகிற்கு வல்லரசு நாடுகள் சிறந்த



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**பிப்ரவரி புரட்சியில் பெண்கள்**

பெண் தொழிலாளர்கள் புரட்சியில் சக ஆண் தொழிலாளர்களை பெரிதும் கவர்ந்தனர். லோரன்ஸ் தொலைக்காட்சி தொழிற்சாலையில் தனியாகவே போராட்டத்தை மேற்கொண்டார் 'மர்பா வாசிலேவா' எனும் பெண் தொழிலாளி. பெண்கள் தின விழா நாளில் காலையில், பெண் தொழிலாளர்கள் ஆண் தொழிலாளர்களுக்கு சிவப்பு ரிப்பன்களை பரிசளித்தனர். பிறகு ஆலை இயந்திரத்தை இயக்கும் மர்பா வாசிலேவா வேலையை நிறுத்திவிட்டு முன்னறிவிப்பில்லாமல் போராட்டத்தை துவக்கினார். மேலதிகாரி மேலாளருக்கு தகவலைக் கூறிவிட்டு அப்பெண்ணிற்கு ரொட்டித் துண்டை வழங்கினார். அப்பெண்மணி ரொட்டியை எடுத்துக்கொண்டாரே ஒழிய போராட்டத்தை கைவிடவில்லை. மேலதிகாரி "ஏன் வேலை நிறுத்தம் செய்கிறீர்கள்?" எனக்கேட்டார் அதற்கு "மற்றவர்கள் பசியோடு இருக்கும்போது, நான் மட்டும் திருப்தியடைவது சரியானது அல்ல" என பதிலளித்தார். மற்ற பிரிவுகளில் பணியாற்றிக்கொண்டிருந்த பெண்களும் வேலையை விட்டுவிட்டு மர்பா வாசிலோவாவை ஆதரித்து போராட்டத்தில் குதித்தனர். இதையறிந்த ஆண் தொழிலாளர்களும் தங்கள் கருவிகளை கீழே வீசியெறிந்துவிட்டு பெண்களுடன் வீதிக்குச் சென்று போராடினர்.

'2002-சோய் சாட்டர்ஜி பெண்கள் விழா' நூலிலிருந்து

ஆலோசனைகளை வழங்கவில்லை. ஜெர்மனி நாட்டிற்கு வெர்சைல்ஸ் ஒப்பந்தம் எவ்வகை பொறுப்பும், மதிப்பும் அளிக்கவில்லை. ஜெர்மனியை பலவீனப்படுத்த, அவற்றின் நிலப்பகுதிகளை அண்டைநாடுகள் எடுத்துக்கொண்டன. படைபலம் குறைக்கப்பட்டது. முதலாவதாக, 1880களில் ஆப்பிரிக்கா கண்டத்தில் ஜெர்மனி கைப்பற்றிய நாடுகளையும், 1871-ல் பிரான்சிடமிருந்து கைப்பற்றிய 'அல்சேஸ்' மற்றும் 'லொரைன்' பகுதிகளையும் திருப்பித்தரும்படி கட்டாயப்படுத்தப்பட்டது. இரண்டாவதாக, ஜெர்மனியின் படைபலம் 9,00,000 லிருந்து 1,00,000 மாக குறைக்க உத்தரவிடப்பட்டது. மேலும், நீர்மூழ்கிக் கப்பல்களை வைத்திருக்கக் கூடாது, கப்பல் படையில் 10,000 டன்னுக்கும் குறைவான ஆறு போர் கப்பல்களை மட்டுமே வைத்திருக்க வேண்டும். எதிரியை தாக்கி அழிக்கும் ஒரு டஜன் படகுகளை மட்டுமே வைத்திருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது.



படம் : 12.3 லெனின் தொழிலாளர்களுக்கிடையே உரையாற்றுகிறார்.

## சர்வதேச சங்கம் :

வெர்சைல்ஸ் ஒப்பந்தம் எதிர்காலத்தில் போர் நடைபெறாத வகையில் ஒரு 'சர்வதேச சங்கத்தை' தோற்றுவித்தது. ரஷ்யாவும், ஜெர்மனியும் இதில் உறுப்பினராக அழைக்கப்படவில்லை. இதை உருவாக்கிய அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன், தன் நாட்டின் பாராளுமன்றமான காங்கிரஸ் அனுமதியளிக்காததால் இதில் உறுப்பினராக சேரவில்லை. முக்கிய கட்டத்திலும் 1934-ஆம் ஆண்டிலும் அதில் 58 நாடுகளே உறுப்பினர்களாக சேர்ந்தன.இச்சங்கம் கூட்டு பாதுகாப்பு நடவடிக்கை மூலம் இரு நாடுகளுக்கிடையே நடைபெறும் பிரச்சனைகளை பேச்சுவார்த்தை அடிப்படையில் தீர்க்கலாம் என நம்பியது. இச்சங்கம் மக்களின் நல்வாழ்விற்காகவும், நாடுகளின்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

மற்றும் இரு நாடுகளின் பிரச்சனைகளை தீர்க்க சர்வதேச நீதிமன்றம் போன்ற நிறுவனங்களையும் துவக்கியது. இச்சங்கம் பல வாக்குறுதிகளையும், திட்டங்களையும் தீட்டினாலும் ஜெர்மனி மற்றும் இத்தாலி நாடுகள் சர்வதேச ஒப்பந்தங்களை மீறி, பிற நாடுகள் மீது போர் தொடுத்ததால், இதன் செயல்கள் தோல்வியில் முடிந்தன.

## பொதுவுடைமை அச்சமும் சோவியத் ரஷ்யாவும்

முதல் உலகப்போரின் அபாயகரமான விளைவின் காரணமாக ஐரோப்பா முழுவதும் சமூகக் கிளர்ச்சிகளும் தொழிலாளர்கள் பொதுவுடைமை மற்றும் கம்யூனிசத்தின் மீது ஈர்ப்பையும் அதிகரித்துக்கொண்டனர். ஐரோப்பா முழுவதும் அமைதி இயக்கங்களும் தோன்றலாயின. 1917-ல் ரஷ்யா ஒரு கம்யூனிச நாடாக மாற புரட்சி வெடித்தது. இப்புரட்சியின் விளைவாக ஆட்சியமைத்த முதல் அரசு, எதிர்காலத்தில் போர்கள் நடைபெறா வண்ணம் சமாதான நடவடிக்கைகளை மேற்கொண்டது. [இது 1924-ல் USSR சோவியத் சோஷியலிச குடியரசு என பெயர் மாறியது] இவ்வகையான புரட்சி ஐரோப்பாவிலும் ஏற்படும் என இங்கிலாந்து அச்சமுற்றது. ஆகையால் ஹிட்லர் மற்றும் நாஜிக்கட்சி சோவியத் பொதுவுடைமைக்கு எதிரான செயலில் ஈடுபடவேண்டும் என இங்கிலாந்து விரும்பியது. இதை ஹிட்லரின் 'சாந்தப்படுத்தும்' கொள்கை என்பர்

### அக்டோபர் புரட்சியும் ரஷ்ய கிராமங்களும் இரு கருத்துக்கள் :

1) 1917 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் நாள் புரட்சி ஏற்பட்டது எனும் செய்தி அதற்கு அடுத்தநாள் கிராமங்களை அடைந்ததும் மக்கள் பெரும் மகிழ்ச்சியடைந்தனர். சிறு விவசாயிகள் நிலம் இலவசமாக கிடைக்கும் எனவும் போர் முடிவடைந்தது எனவும் முடிவு செய்தனர். நில உரிமையாளர்களின் மாளிகை வீடு கொள்ளையடிக்கப்பட்டன. பண்ணைகளில் இருந்த கையிருப்பு தானியங்கள் தேவைக்கேற்ப எடுக்கப்பட்டன, அவர்களின் தோட்டங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டன, அம்மரங்கள் சிறு விவசாயிகளால் விற்கப்பட்டன, அவர்களின் வீடுகள் தகர்க்கப்பட்டன, புதிய சோவியத் நாட்டில் புதிய வாழ்க்கையை வாழ தங்களை தயார்படுத்திக்கொண்ட சிறு விவசாயிகளுக்கு நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இச்செய்தி, 'ஃபிடோர் பிளோவ்' என்பவர் எழுதிய சோவியத் ரஷ்யாவில் ஒன்றிணைக்கப் பட்ட பண்ணைகளின் வரலாறு எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

2) புரட்சியின்போது என்ன நடந்தது என நில உரிமையாளரின் குடும்ப உறுப்பினர் ஒருவர் தன் உறவினருக்கு எழுதிய கடிதம்.

"ஆட்சி மாற்றம் அதிக வன்முறையின்றி அமைதியாக நிகழ்ந்தது. ஆரம்ப நாட்களில் பொறுக்க முடியாமலிருந்தது. பிறகு பண்ணை முதலாளி மட்டும் (மிகைல் மிகைலோவிக்) அமைதியாக இருந்தார். பண்ணையிலிருந்த பெண்களும் நிதானமாக செயல்பட்டனர். நாங்கள் இரண்டு பசுக்களையும், இரண்டு குதிரைகளையும் விட்டுவிட்டோம். எங்களைப் பற்றி கவலைப்படாதீர்கள் என பணியாளர்கள் கூறினர். "அவர்கள் வாழட்டும் நாங்கள் அவர்களுக்கு பாதுகாப்பாக இருப்போம்" என பணியாளர்கள் கூறினர். முடிந்தவரை அவர்களை மனிதநேயத்துடன் நடத்தினோம்.

"பல கிராமங்களின் குழுக்கள் களைக்கப்பட்டு பண்ணைகள் மீண்டும் மிகைல் மிகைலோவிச்சிற்கு வந்து சேரும் என புகார் பரப்பப்பட்டது. இது நல்லதாக இருப்பினும், இது நடக்கும் என எனக்குத் தெரியாது. ஆனால், நமது மக்களுக்கு மனசாட்சி உள்ளது என நாங்கள் மகிழ்ந்தோம்". ('செர்ஜ் சிம்மன்' எழுதிய 'உள்நாட்டின் எதிரொலிப்பு 1997, ரஷ்ய கிராமத்தின் இரண்டு நூற்றாண்டுகள்' நூலிலிருந்து எடுக்கப்பட்டது).

- மேலே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சியில் ஒரு சாட்சியாக உன்னை நினைத்துக் கொண்டு பின்வருவன பற்றி சிறுகுறிப்பு வரைக. 1) பண்ணை முதலாளி 2) சிறு விவசாயி 3) பத்திரிகை நிருபர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

1939-ல் ஜெர்மனியும், சோவியத் ரஷ்யாவும் ஒரு நாடு மற்றொரு நாட்டின் மீது போர் தொடுக்கக்கூடாது என ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டன. இது இங்கிலாந்து மற்றும் இரண்டாம் நாடுகளின் ஒப்பந்தங்களுக்கு எதிரானதாகும். இது இரண்டாம் மேற்கு ஐரோப்பிய நாடுகளின மீது ஆதிக்கம் செலுத்த முடிந்தது.

## ரஷ்ய சோஷிய×சப் புரட்சி :

ஜார் மன்னர்களின் ரஷ்ய நாடு இரண்டு கண்டங்களில் பரந்து விரிந்து இருந்தது. இது யூரேசியப் பகுதியில் வல்லரசு நாடாகத் திகழ்ந்தது. இது சீனா, இந்தியா நாடுகளுக்குப் பிறகு 156 மில்லியன் மக்கள் தொகையுடன் மூன்றாம் இடத்திலிருந்தது. இது ரஷ்யா, உக்ரைன், உஸ்பெகிஸ்தான், கஜகிஸ்தான், தஜகிஸ்தான் மற்றும் துர்க்மேனியா போன்ற நாடுகளை உள்ளடக்கியதாக இருந்தது. ரஷ்யர்களுடைய வாழ்க்கை விவசாயத்தை ஆதாரப்பட்டிருந்தது. அதிகமான நிலம் நிலப்பிரபுக்கள் வசம் இருந்தது. சிறு விவசாயிகள் தாங்கள் உழும் நிலத்திற்கு நிலப்பிரபுக்களிடம் குத்தகையை வழங்கினர்.

இரண்டாம் ஜார் நிகோலஸ் பரந்த ரஷ்ய பேரரசை இராணுவம் மற்றும் உயரதிகாரிகளைக் கொண்டு கொடுங்கோல் ஆட்சி செய்தான். உலகப்போர்களில் அதிகப் பணத்தை இழந்ததால் ரஷ்ய பொருளாதாரம் சீரழிந்தது. முதல் உலகப்போருக்குமுன் உலகிலேயே பெரிய இராணுவத்தைக் கொண்ட நாடாக ரஷ்யா திகழ்நதது. இருப்பினும், 1917க்குள் முதல் உலகப்போரில் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான இராணுவ வீரர்களையும், உயரதிகாரிகளையும் இழந்து அதிக உயிரிழப்பை சந்தித்த நாடாக ரஷ்யா மாறியது. போர்க்களத்திற்கு உணவு உற்பத்தியை கொண்டு சென்றதால், நகரங்களில் அதிக உணவு பற்றாக்குறை ஏற்பட்டது. 1917ஆம் ஆண்டு மார்ச் 8-ஆம் நாள், ரஷ்ய தலைநகர் செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கில் 10,000த்திற்கும் மேற்பட்ட பெண்கள் “சமாதானம் மற்றும் உணவு” என குரல் எழுப்பி ஊர்வலம் சென்றனர். தொழிலாளர்களும் அவர்களுடன் சேர்ந்து போராடினர். இப்போராட்டத்தை பலவீனப்படுத்த, போராட்டக்காரர்களை கட்டுப்படுத்தவும், சுட்டுவீழ்த்தவும் மன்னர் இரண்டாம் ஜார் நிகோலஸ் உத்தரவிட்டார். இதற்கு பதிலாக, இராணுவத்தினரும் போராட்டக்காரர்களுடன் கைகோர்த்தனர். இரண்டு நாட்களில் நிலைமை மோசமானதால், ஜார் மன்னர் பதவியை துறந்தார் மேலும் கொடுங்கோன்மையற்ற தற்காலிக அரசு பதவியேற்றது. இது 1917 ரஷ்யப் புரட்சி, எனவும் “மார்ச் புரட்சி” எனவும் அழைக்கப்பட்டது.

1917, அக்டோபர் மாதத்தில் பெரிய அளவில் ரஷ்யப்புரட்சி அதிகரித்தது. இது தானாக நடந்தது கிடையாது. ஏற்படுத்தப்பட்டது. ஜார் மன்னர் பதவியிழந்த பிறகு, புதியதாக ஆட்சியமைத்த சுதந்திர உயர்குடிமக்கள் நாட்டின் கௌரவத்தையும், தாய்நாட்டின் பெருமையை பெற முதல் உலகப் போரில் தொடர்ந்து ஈடுபட முடிவு செய்தது..

இதன்மூலம் நிலபிரபுக்கள், மன்னர்கள் அல்லது முதலாளித்துவ வர்க்கத்தினர் போன்ற சுரண்டுவோர் இல்லாத நாட்டை நிர்மானிக்கும் மாபெரும் முயற்சி துவங்கியது. தொழில்மயமான மற்றும் நவீன சமுதாயத்தை உருவாக்க சோவியத் ரஷ்யா முயன்றது. இச்சமுதாயத்தில் பிறப்பு, பா-னம், மொழி அடிப்படையிலான சமமின்மை காணப்படுவதில்லை.

### அக்டோபர் புரட்சியின் மத்திய ஆசியா கருத்துகள்

கம்யூனிஸ்ட் தத்துவம் சார்ந்த சர்வதேச சங்கத்தில் முக்கிய பங்காற்றிய M.N. ராய் அவர்கள் உலகில் கம்யூனிஸ்ட் புரட்சி ஏற்பட மக்களை தூண்டினார். 1920-ல் நடந்த உள்நாட்டுப் போரின்போது இவர் மத்திய ஆசியாவில் இருந்தார். இவர் எழுதியதை இப்பொழுது காணலாம். கருணை உள்ளம் படைத்த முதியவர் ஒருவர் படைத்தலைவராக இருந்தார். இவருடைய வேலைக்காரரான ஒரு இளைஞர் ரஷ்ய மொழி பேசினார். ஜார் அரசர்களை பதவியிலிருந்து நீக்கியதையும், கிர்கிஸ் தாய் நாட்டுப்பகுதியை வென்ற தளபதிகளை விரட்டியடித்த புரட்சியைப் பற்றியும் இந்த இளைஞர் அறிந்திருந்தார். இப்புரட்சியால் கிர்கிஸ் மக்களுக்கு அவர்களின் தாய்நாட்டு பகுதி கிடைத்தது. போல்ஸ்விக் இனத்தில் பிறந்த கிர்கிஸ் இளைஞர்கள் ‘புரட்சி வாழ்க’ என குரல் எழுப்பினர். மலைவாழ் மக்களும் இவர்களுடன் இணைந்தனர்!!

M.N.ராயின் நினைவுகள் (1964).

SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**1930-ல் ரவீந்திரநாத் தாகூர் ரஷ்யாவி×ருந்து எழுதியது**

ஐரோப்பாவில் மற்ற நாடுகளின் தலைநகரங்களைவிட ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோவின் தூய்மை சிறிது குறைவாக உள்ளது. சுறுசுறுப்பாக இயங்கும் சாலைகளும் தூற்மையற்று காணப்படுகிறது. (இவ்விடங்கள் தொழிலாளர்களை சார்ந்ததாய் இருந்தது. தொழிலாளர்கள் முதலாளிகளின் வீடுகளின் பின்புறம் வாழ்ந்தனர்.) வசதியின்றி இருந்தனர். இந்தியாவிலுள்ள விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களைப்போல் ரஷ்யாவில் மக்கள் இருந்தனர். அரேபியன் இரவுகள் எனும் கதையில் வரும் ஜெனி எனும் கதாப்பாத்திரத்திரத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தேன். பத்தாண்டுக்கு முன்பாக அவர்கள் கல்வியறிவு அற்றவர்களாகவும் உதவி கிடைக்காமலும் பசியுடனும் இந்தியர்களைப் போன்று காணப்பட்டனர். ஆனால், கடைசி ஐந்தாண்டுகளில் ரஷ்யர்கள் அனைத்து துறைகளிலும் முன்னேறியிருந்தது என்னைப் போன்ற இந்தியர்களை ஆச்சரியப்பட வைத்தது.

**ஜோசப் ஸ்டாலினின் எழுச்சி :**

1924-ல் லெனின் இறந்தபிறகு ஜோசப் ஸ்டாலின் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரானார்.அடுத்த பத்தாண்டில் அனைத்து எதிரிகளையும் கட்டுப்படுத்தி வல்லமையுடைய

ஆட்சியாளர் ஆனார். அனைவரும் ஒப்புக்கொள்ளும் வகையில் தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி USSR-ல் பொருளா -தாரத்தை உயர்த்தினார்.

USSR-ன் வளர்ச்சிக்காக 1928ல் ஐந்தாண்டு திட்டங்களை புகுத்தினார் ஸ்டாலின். இத்திட்டம் தொழில் வளர்ச்சியை பெருக்கியது. விவசாயம் பொதுவுடமையாக்கப் பட்டது. ரஷ்யாவில் உள்ள அனைத்து விளை நிலங்களையும் 'ஒருங்கிணைந்த பண்ணையின்' கீழ் கொண்டுவர அனைத்து சிறு மற்றும் பெரிய விவசாயிகளை தங்களின் நிலங்களை அரசுக்கு ஒப்படைக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள நிலங்கள், பயிர்க் கருவிகள் மற்றும் விலங்குகள் ஒருங்கிணைந்த பண்ணையில் சேர்க்கப்பட்டன. விவசாயிகள் ஒன்றாக உழைத்த உற்பத்தி பொருட்களை சமமாக பகிர்ந்து கொண்டனர். இம்முறை சிறிய பண்ணை முறையிலிருந்து பெரிய பண்ணை முறைக்கு விரிவுபடுத்தப்பட்டது. ஏனெனில் புதிய நவீன உத்திகளையும், இயந்திரங்களையும் செவ்வனே பயன்படுத்த முடிந்தது. இம்முறையை தடுத்த ஆயிரக்கணக்கான விவசாயிகள் சிறையில் அடைக்கப்பட்டனர். சிலர் நாடு கடத்தப்பட்டனர். பலர் கொல்லப்பட்டனர். இதன் விளைவாய், 1929-30ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தால் அதிகமான மக்கள் மாண்டனர். சில ஆண்டுகளின் வீழ்ச்சிக்குப் பிறகு இப்பண்ணை முறைக்கு பதில் மீண்டும் பழைய விவசாய முறை தழைத்தோங்கியது. தொழில் வளர்ச்சி முன்பைவிட பன்மடங்கு அதிகரித்து ரஷ்ய நாடு வளர்ச்சியடைந்தது. அனைத்து தொழிற்சாலைகளும் அரசால் ஏற்று நடத்தப்படுவதால் பொருட்கள் வெளிச்சந்தையில் கிடைப்பதில்லை. அனைத்தும் நுகர்வோர்களுக்கு நேரிடையாக விற்கப்பட்டன. வேகமான தொழில் கட்டுமானத்தால் தொழிலாளர்களின் நிலை கவலை அளிப்பதாக இருந்தது. மேக்னிடோ கோர்ஸ்க் மாநகரில் மூன்று ஆண்டுகளில் இரும்பு எஃகு தொழிற்சாலை கட்டப்பட்டது. தொழிலாளர்கள் மிகவும் கடினமான சூழ்நிலையில் பணியாற்ற வேண்டியிருந்தது. இதன் விளைவாக 550க்கும் மேற்பட்ட முறை வேலை நிறுத்தம் ஏற்பட்டது. தொழிலாளர்கள் 40 டிகிரிக்கும் குறைவான வெப்ப நிலையில் உள்ள வீடுகளில் வாழ்ந்தனர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**உலகளவில் ரஷிய புரட்சியின் தாக்கம் :**

உலகளாவிய அளவில் சமத்துவத்தையும் தேசிய சுதந்திரத்தையும் எதிர்பார்க்கும் மக்களுக்கும் USSRன் செயல்பாடு ஊக்கமளிப்பதாக இருந்தது. பல நாட்டு மக்கள் கம்யூனிஸ்டுகளாக மாறினர். அவர்களுடைய நாட்டில் கம்யூனிஸ்ட் புரட்சி ஏற்படுத்த முயன்றனர். M.N. ராய், ஜவஹர்லால் நேரு மற்றும் ரவீந்திரநாத் தாகூர் ஆகியோர் கம்யூனிஸ்ட் தத்துவத்தால் உந்தப்பட்டாலும், அது எதிர்கட்சித் தலைவர்களை நசுக்குவதை ஒப்புகொள்ளவில்லை.

USSRல் பல கட்சி முறையையும், சுதந்திரத்தையும் மறுத்தாலும் எதிர்கட்சிகளை அழித்தாலும் கம்யூனிஸ்ட் கட்சியைக் கண்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் அச்சமுற்றனர். 'ஜார்ஜ் ஆர்வெல்' என்பவர் சோவியத் ரஷ்யாவில் ரஷ்யப்புரட்சியின் கொள்கைகளை விட்டுக்கொடுக்காமல் இருக்கும் நிலையை கேலி செய்து 'விலங்குகள் பண்ணை' எனும் தலைப்பில் கவிதை பாடினார்.

**புகழ்பெற்ற பொருளாதார தேக்கம் :**

புகழ்பெற்ற பொருளாதார தேக்கம் 1929-ல் துவங்கி இரண்டாம் உலகப்போர் தொடங்கிய 1939 வரை தொடர்ந்தது. பொருட்களின் விலை வீழ்ச்சியாலும் தேவையின் வீழ்ச்சியாலும் உலகம் முழுவதும் இப்பத்தாண்டில் பொருளாதார தேக்கம் ஏற்பட்டது. தேவைகள் குறைந்ததால், உற்பத்தி குறைந்தது. மக்களிடம் பணமில்லாததால், வாங்கும் சக்தி குறைந்தது. ஆதலால், தேவை மேலும் குறைந்தது. இவ்வாறு ஏற்பட்ட சுழற்சியான பொருளாதார விளைவால் உலகம் முழுவதும் வேலைவாய்ப்பின்மை அதிகரித்தது. அதே நேரத்தில் நாட்டின் உள்நாட்டு வருவாயும் குறைந்தது. இத்தேக்கம் முதலாவதாக அமெரிக்காவில் ஏற்பட்ட பங்குச்சந்தையின் வீழ்ச்சியில் துவங்கி, உலகம் முழுவதும் பரவியது.




*படம் 12.4 : பங்குச்சந்தையில் இழந்த பணத்துக்காக, தன்னுடைய காரை விற்கும் நியூயார்க் நகரவாசி*

அமெரிக்காவில் 25% ம் பிற நாடுகளில் 33% ம் வேலையின்மை அதிகரித்தது. தொழிற்சாலைகள் மூடப்பட்டதாலும், வர்த்தகம் முடங்கியதாலும் நகரங்களின் வளர்ச்சியும் குறைந்தது. இதனால் விவசாய விளைச்சலின் விலைகள் 60%, வீழ்ச்சி கண்டது. இதன்பலனாக, மில்லியன்கணக்கான விவசாயிகள் பயிரிடுதலை நிறுத்தியதால் பரம ஏழையாயினர். நவீன



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

உலகில் ஏற்பட்ட மிகக்கடுமையான மற்றும் இன்று வரை அதிக நாட்கள் நீடித்த பொருளாதார தேக்க நிலையாகும். இது சமூக விளைவை ஏற்படுத்தும் ஏழ்மை, வீடுகளை இழத்தல் போன்ற அழிவுகளை ஏற்படுத்தியது.

இந்த பொருளாதார தேக்கத்திலிருந்து மீளவும், மறுபடியும் நிகழாமல் இருக்கவும் பொருளாதார நிபுணர்களும், அரசியல்வாதிகளும் பலவகைகளை கையாண்டனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுகள் இப்பொருளாதார தேக்கத்திற்கு முதலாலித்துவமே காரணமென்றும் இதிலிருந்து மீள சோஷியலிச பொருளாதாரத்தால் மட்டுமே முடியும் எனவும் வாதிட்டனர். மற்றொரு புறம் பொருளாதார நிபுணர்கள் கீன்ஸ் போன்றோர் நாடு தீவிரமாக உழைத்தால் ஒழிய, இத்தேக்கத்திலிருந்து மீளமுடியாது எனக் கூறினார். பொருளாதார வீழ்ச்சியுற்றால், அரசாங்கம் வேலைவாய்ப்பை வழங்கி,மக்களின் வாங்கும் சக்தியை அதிகரித்து, சந்தைகளுக்கு பொருட்கள் வந்துசேர உதவி செய்ய வேண்டும். அரசின் நடவடிக்கைகள் மூலம் தேவைகள் அதிகரித்தால் பொருளாதாரம் மீளும் என மக்கள் நம்பினர். 1920 முதல் 1930கள் வரை முதலாளித்துவ நாடுகள் பொருளாதாரத்தை மீட்க எவ்வகையிலும் முயலாததால், இச்சிக்கல் மேலும் தீவிரமாகியது.



படம் 12.5 : பொருளாதார தேக்கநிலையின்போது போலந்து நாட்டின் புகைப்பட நிபுணர் பிளாரன்ஸ் ஓவன்ஸ் எடுத்த புகழ்பெற்ற புகைப்படம்.
1936ல் க-போர்னியாவில் பட்டாணி சேர்க்கும் ஆதரவற்ற பெண்மணி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்?

ரூஸ்வெல்ட் அமெரிக்க ஜனாபதியாக பதவியேற்ற பிறகு 'புதியக் கொள்கை' [New Deal] எனும் கொள்கையை கொண்டுவந்தார். தேக்கநிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதல் [Relief], நிதி நிறுவனங்களில் சீர்திருத்தம் [Reform]மற்றும் பொருளாதார மீட்சியடைதல்[Recovery] [The Three Rs]போன்ற மக்கள் நலத்திட்டங்களை வழங்கினார். உலகப்போர்கள் நடந்ததால் அமெரிக்கா அதிகப்பணத்தை இராணுவத்திற்கும், அணு ஆயுத உற்பத்திக்கும் செலவு செய்ததால் தொழிற்துறை உற்பத்தி பாதிக்கப்பட்டது. இவர் அமெரிக்காவில் பாதுகாப்பு முறைகளை அறிமுகப்படுத்தினார்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அனைவருக்கும் ஒய்வூதியம், வேலைவாய்ப்பில்லாதோருக்கு காப்பீட்டுத்திட்டம், உடல் ஊனமுற்றோருக்கு நலத்திட்டம், பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு நிதி உதவி என நலத்திட்டங்களை வழங்கினார். உலக போர் நடந்தபோது பொருளாதார தேக்கத்திற்கு முன்பே, இங்கிலாந்தும் இவ்வாறான நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தியது. இது ஆரம்பத்தில் ஊனமுற்றவர்கள் மற்றும் முதியோர் ஓய்வூதியத்திட்டமாக துவக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போருக்கு பிறகு, இங்கிலாந்து வேலையின்மையை குறைத்தல், உடல் நல உதவி, மருத்துவ உதவி, குழந்தைகளை காத்தல் போன்ற சமூக பாதுகாப்பு முறைகளை கையாண்டது. இவ்வாறான நலத்திட்டங்களால் குடிமக்களின் குறைந்தபட்ச தேவைகள் பூர்த்தி செய்யபட்டன. மேலும் அத்தியாவசிய தேவைகளான உணவு, உடை, இருப்பிடம், உடல்நலம், குழந்தைகள் மற்றும் முதியோர் நலம் மற்றும் கல்வி ஆகியவை விரிவாக வழங்கப்பட்டன. பெரும்பான்மையான திறன்வாய்ந்த குடிமக்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டன. இவ்வாறு, சந்தைச்சார்ந்த முதலாளித்துவ ஏற்ற இறக்கங்களை அரசு சாந்தப்படுத்தியது.

**ஜெர்மனியில் பொருளாதார தேக்கம் :**

இரண்டாம் உலகப்போரினால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய ஜெர்மனி பொறுப்பேற்க வேண்டியிருந்ததால், இதற்கு அதிக பொருளாதார இழப்பு ஏற்பட்டது. ஆகையால், ஜெர்மனி நாடு தன் நாட்டின் வளர்ச்சிக்காக பணத்தை அச்சிட துவங்கியது. இதன் விளைவாய் பணவீக்கம் கணக்கிட முடியாத அளவிற்கு அதிகரித்தது. ஒரு ரொட்டித் துண்டு வாங்க, “ஒரு வண்டி நிறைய பணம் கொண்டுச் செல்லவேண்டும்”. எனக் கூறப்பட்டது. நிராயுதபாணியாக நிற்கும் ஜெர்மனி போர் நஷ்ட ஈட்டை வழங்க கால அவகாசம் கொடுக்க அமெரிக்கா கோரியது. இவ்வுதவியால் 1928-க்குள், தற்சார்பு பெற ஜெர்மனி முயன்றது. இவ்வாறு 1929 பொருளாதார தேக்கத்தால் அமெரிக்கா பாதிக்கப்படும் வரை உதவி கிடைத்தது. பிறகு இவ்வுதவி கிடைக்கவில்லை.

ஆதலால், பொருளாதார தேக்கத்தால் ஜெர்மனி நாடு பெரிதும் பாதிப்படைந்தது.. 1932-க்குள் தொழிற்துறை 1929-ல் இருந்த நிலையை விட 40% குறைந்தது.பல தொழிலாளர்கள் வேலையிழந்தனர் பலர் குறைவான ஊதியம் பெற்றனர். வேலையில்லா திண்டாட்டம் முன்பு எப்பொழுதும் இல்லாத அளவில் ஆறு மில்லியனை தாண்டியது.’எவ்வேலையும் செய்யத்தயார்’ என அட்டையில் எழுதி கழுத்தில் தொங்கவிட்டுக் கொண்டு ஜெர்மன் வீதிகளில் பலர் அலைந்தனர். வேலையில்லா இளைஞர்கள் பலர் தெரு முனைகளில் சீட்டு விளையாடியும், சிலர் வெருமனே பொழுதை கழித்தும், பலர் வேலைவாய்ப்பு அலுவலகம் முன்பு வரிசையில் நின்றும் காலம் கடத்தினர் வேலை கிடைக்கும் எனும் நம்பிக்கையை இழந்த பலர் குற்றச் செயல்களில் ஈடுபட்டனர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பொருளாதார நெருக்கடி மக்களிடம் கவலையையும், அச்சத்தையும் ஏற்படுத்தியது. பணத்தின் மதிப்பு குறைந்ததால், நடுத்தர மக்கள், ஓய்வூதியக்காரர்கள், மாதச்சம்பளம் பெறுவோர், தங்களின் சேமிப்பு குறைவதைக் கண்டு அச்சமடைந்தனர். சிறுவியாபாரிகள், சுய தொழில் செய்வோர் மற்றும் சில்லரை வியாபாரிகள் பாதிப்புக்குள்ளாயினர். சமூகத்தின் பலப்பிரிவு மக்கள் ஏழ்மையாலும்,தொழிலாளர்களின் தரச்சம்பளம் குறைவதாலும் பாதிப்புக்குள்ளாயினர். பதற்றமடைந்தனர். ஒழுங்கமைக்கப்பட்ட துறைச்சார்ந்த தொழிலாளர்கள் மட்டுமே இப்பாதிப்பிலிருந்து தப்பினர்.

**ஜெர்மனியில் நாஜிசத்தின் எழுச்சி :**பெரிய அளவு வியாபாரங்கள் தடைபட்டன. விவசாய விளைப்பொருட்களின் விலை வீழ்ச்சியடைந்ததால் சிறு விவசாயிகள் பெரிதும் அவதியுற்றனர். பெண்கள் பசியை போக்கமுடியாமல் நம்பிக்கையை இழந்து வாழ்ந்தனர். ஆட்சிகள் மாறிக்கொண்டே இருந்தால் நிலையான அரசியல் ஸ்திரத்தன்மையின்றி வளர்ச்சி குன்றியது.

இத்தருணத்தில், நாஜிகட்சியின் பிரச்சாரத்தால் மக்களிடம் எதிர்கால நம்பிக்கை ஏற்பட்டது. ஹிட்லர் அசைக்கமுடியாத தலைவரானார். 1928-ல், ஜெர்மன் பாராளுமன்றமான ரிச்ஸ்டாக்குக்கான தேர்தலில், நாஜிக்கட்சி ஆறு சதவிகித வாக்குடன் இரண்டு இடங்களை மட்டுமே பெற்றது. ஆனால், 1932-க்குள், 37 சதவிகித வாக்குகளை பெற்று இக்கட்சி பெரிய கட்சியாக மாறியது.

ஹிட்லர் மிகச்சிறந்த பேச்சாளர். இவருடைய உணர்ச்சி பெருக்கான சொற்பொழிவு மக்களை பெரிதும் கவர்ந்தது. வெர்சைல்ஸ் உடன்படிக்கையின் அநீதியை தகர்க்கவும், நாட்டின் புகழ் பரவவும், வலிமையான நாட்டை உருவாக்கவும் முடியும் என மக்களுக்கு உறுதியளித்தார். வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை அளிப்பதாக உறுதியளித்தார். வெளிநாட்டின் செல்வாக்கை களையெடுக்கவும், ஜெர்மனிக்கு எதிரான இரகசிய ஒப்பந்தங்களை தடுக்கவும் உறுதியளித்தார்.

ஹிட்லர் அரசியலில் புதிய முறையை புகுத்தினார். இவர் மக்கள் கூட்டத்தின் அவசியத்தை அறிந்திருந்தார். ஹிட்லருக்கு ஒத்துழைப்பு கொடுக்க, நாஜிக் கட்சி பல வகையில் மக்கள் இயக்க ஊர்வலத்தையும், பொதுக் கூட்டங்களையும் நடத்தியது. இதன்மூலம் மக்கள் ஒருகிணைக்கப்பட்டனர். ஹிட்லரின் சொற்பொழிவிற்கு பிறகு சிவப்பு அலங்காரத் துணிகளின் அணிவகுப்பு, ஸ்வஸ்திக் சின்னம், நாஜிக்களின் வணங்கும் முறை, மக்களின் கரகோஷம் ஆகியவை பார்வையாளர்களை கவர்ந்தன. ஆரியன் ஜெர்மனிய இனத்தை உலகலாவிய அளவிற்கு உயர்த்தவும் தன்னுடைய கட்சி தொண்டர்களுக்கு உறுதியளித்தார். மேலும், ஜெர்மனியின் அனைத்து பிரச்சனைகளுக்கும் யூதர்களைப் போன்ற சிறுபான்மையினரே காரணம் எனக் கருதினார்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

யூதர்கள் கம்யூனிஸ்ட் மற்றும் முதலாளித்துவத்துடன் இரகசிய தொடர்பு கொண்டிருப்பதாகக் கூறி, அவ்விரண்டையும் வீழ்த்தி ஒரு வலிமையான நாட்டை உருவாக்குவேன் என சூளுரைத்தார். முதலாளித்துவத்தாலும், பொருளாதாரத் தேக்கத்தாலும் கலக்கமுற்ற நடுத்தர வகுப்பினருக்கு இவர் உதவ முன்வந்தார். மேலும், கம்யூனிஸ்டுகளும், சோஷிய-ஸ்டுகளும் தொழிலாளர்களை வழிநடத்துவதை இவர் எதிர்த்தார்.

ஹிட்லர் பதவியேற்றவுடன் ஜனநாயத்திற்கு எதிரான, கொடுங்கோன்மை ஆட்சியை ஏற்படுத்தினார். பாராளுமன்றத்தை கலைத்தார். அரசியல் எதிரிகளை, முக்கியமாக கம்யூனிஸ்டுகளை கைது செய்து, பாதுகாப்பான முகாம்களில் அடைத்தார். விரிவுப்படுத்தப்பட்ட பள்ளிக் கல்வி முறை வளர்ச்சியடைந்து, தொழிலாளர்களும், சிறு விவசாயிகளும் பல்கலைக் கழகம் வரை படிக்க பல வசதிகள் செய்யப்பட்டன. தொழிற் சாலைகளில் பணியாற்றும் பெண்களின் குழந்தைகளுக்காக தொழிற்சாலைகளில் குழந்தை காப்பகங்கள் தொடங்கப்பட்டன.

**ஹிட்லரின் சொற்பொழிவிலிருந்து**

“உலகின் உயர்ந்த நாஜி இனத்தின் முக்கிய உரிமையே உலகை வெற்றிகொள்வதாகும். உலகம் எவருக்கும் ஒதுக்கப்பட்டதுமல்ல, பரிசளிக்கப்பட்டதுமல்ல. மக்களின் மனதில் இடம் பிடித்தவருக்கு உள்ள தைரியம், வெற்றி பெறுதல், நாட்டைகாத்தல், முன்னேற்றமடையச் செய்தல், போன்றவையாகும். உலக மக்களின் அடிப்படை உரிமையே, வாழும் உரிமையாகும். உயிருள்ளவரை வாழ்வோம், போராடுவோம். இவ்வுரிமைகளின் அடிப்படையில் நமது நாட்டின் மக்கள் தொகைக்கு ஏற்ப ஒரு சக்திவாய்ந்த தேசத்தை உருவாக்குவோம்”.

டெல்ஃபோர்ட் டேலர் எழுதிய, “ஹிட்லர், இரகசிய நூல்”, எனும் நூலிருந்து

- உலகை வெல்லவேண்டும் எனும் கொள்கையை ஹிட்லர் ஊக்குவிக்கின்றாரா? வல்லமையுடையோரிடம் மட்டுமே உலகம் இருக்கவேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்களா?



படம் 12.6 1945ல் ஜெர்மனியின் ஜெனா நகரக்கருகில் புசென்வால்ட் பகுதியில் பாதுகாப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்த யூத அடிமைத் தொழிலாளர்கள்.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## கொள்கை விளக்கம்

நாஜிக்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஒரு வழியிலேயே சிந்திக்கும் மனதை ஆரம்பம் முதலே கூறியது. நாஜிசக் கொள்கை நாஜி இனத்தை உயர்த்தி பேசுவதும், ஹிட்லரை புகழ்வதும், யூதர்கள் மற்றும் பிற இனத்தாரை வெறுப்பதும் முக்கியமான கொள்கையாக இருந்தது. இது எவ்வாறு நடந்தது.

ஆறு முதல் பத்து வயதுடைய அனைத்து மாணவர்களுக்கும் நாஜிக் கொள்கை பயிற்சியளிக்கபட்டது.இப்பயிற்சியின் இறுதியில் ஹிட்லரின் முன்பு அனைவரும் உறுதிமொழி எடுக்க வேண்டும். "எனது நாட்டின் பாதுகாவலரான ஹிட்லருக்காக எனது சக்தியையும் வலிமையையும் தருவதாக இரத்தத்தால் எழுதிக் கொடுத்து உறுதியளிக்கிறேன். அவருக்காக எனது வாழக்கையையே விட்டுவிட்டு வரத்தயார். இறைவா எனக்கு உதவுக" W. சைரெர் எழுதிய எழுச்சியும் வீழ்ச்சியும்' எனும் நூலிலிருந்து.

ஜெர்மனின் உழைப்பாளர் முன்னனியின் தலைவர் ராபர்ட் லே கூறுவதாவது,

மூன்று வயதுக் குழந்தைக்கு பயிற்சியை துவக்குகிறோம். அவன் சிந்திக்க துவங்கிய உடன், அவனிடம் ஒரு கொடியை கொடுத்து அசைக்கக் கூறுவோம். பிறகு ஹிட்லரின் இராணுவப் பள்ளிக்கு வருவான். அனைத்து பயிற்சியும் முடிந்தாலும், அவனை அனுப்ப மாட்டோம். எங்களின் உழைப்பாளர் முன்னணி, அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கல்லறைக்கு செல்லும் வரை அவர்களை விடாது பற்றிக்கொள்ளும்.

## நாஜிக்களின் கீழ் பெண்கள்

1934 ஆம் ஆண்டு செப்டம்பர், 8ஆம் நாள் நூரம் பெர்க் கட்சி ஊர்வலத்தில் பெண்களிடம் ஹிட்லர் ஆற்றிய உரை

"ஆண்களின் உலகில் பெண்கள் தலையிடுவது சரி என்று நாங்கள் கூற மாட்டோம். இரண்டு உலகங்களும் வெவ்வேறானவை. போர்க்களத்தில் ஆண்கள் தங்கள் வீரத்தை பறைசாற்றும் போது, பெண்கள் தங்கள் மனதில் வேதனையையும், கவலையையும் கொண்டு தங்களை அர்ப்பணிப்பர். பெண்கள் இவ்வுலகிற்கு வழங்கும் ஒவ்வொரு குழந்தையும் தனது சந்ததியினர் போர்க் களத்ததில் நிலைத்து நிற்பதற்காக எனலாம்". மேலும் அவர் கூறியது.

"பெண்கள் மக்களினத்தை காப்பதில் முக்கிய இடத்தை வகிக்கின்றனர். நமது மனித இனம் மறையாமல் காக்கப்படுகின்றது. ஏனெனில், குழந்தைகள் அனைத்து வகை கவலைகளாலும் பாதிப்படைகின்றனர். ஆதலால், அனைத்து பணிகளிலும் நாம் பெண்களை அரவணைத்து செல்கின்றோம்".



படம்12.7 : யூதர்களை காக்கும் பெண்கள், பொது இடத்தில் தண்டிக்கப்படுகின்றனர்.

- குழந்தைகளை வளர்ப்பதில், பெண்கள் தங்கள் சுகதுக்கங்களை அடக்கி வாழவேண்டுமத் என நீங்கள் கருதுகிறீர்களா?
- குழந்தைகளை வளர்த்தல், தொழிற்சாலைகள், அலுவலகங்களில் பணியாற்றுதல், வயல் வேலை செய்தல் ஆகியவற்றில் ஆண்களும் பெண்களும் சமமாக பணியாற்ற முடியும் என நீங்கள் நினைக்கின்றீர்களா?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## எதிர்ப்பு நிலை

நாஜி ஆட்சியில் கொடுங்கோன்மை மிக்க குற்றங்கள் மக்களுக்கு எதிராக நிகழ்ந்த வண்ணம் இருந்தது. வீரராகவும், எதிர்பாளராகவும், தெய்வீக சக்தியுடையவராகவும் ஜெர்மனியர்களில் திகழ்ந்தவர் 'நீமோலர்' எனும் கோயில் குரு இவர் கூறியதாவது. 'அவர்கள் கம்பயூனிஸ்டுகளுக்காக வந்தனர், நான் ஒரு கம்யூனிஸ்ட் அல்ல, என்று மறுத்தேன்.

சமூக ஜனநாயகவாதிக்காக வந்தனர், நான் ஒரு ஜனநாயகவாதி அல்ல என்று மறுத்தேன்.

வர்த்த சங்கத்தினருக்காக வந்தனர்,
நான் ஒரு சங்கத்தினர் அல்ல என்று
மறுத்தேன்.

யூதர்களுக்காக வந்தனர், நான் மறுத்தேன்
ஆனால், சிறிது அச்சமுற்றேன்.
பிறகு என்னைத் தேடி வந்தனர்,
அப்பொழுது என்னுடன் நிற்க யாரும்
இல்லை

- நாஜிக்களின் கொள்கை பெரும்பான்மை மக்களைச் சார்ந்திருந்தது. ஜெர்மனியில் யூதர்கள் பெறும் 75 சதவிகிதம் இருந்தனர் நாஜிக்களை எதிர்த்த யூதர் அல்லாதோரையும் அவர்கள் தண்டித்தனர். இதை கோயில் குரு எவ்வாறு கண்டறிந்தார்?

- சமத்துவம்,சுதந்திரம் மற்றும் வளர்ச்சி எனும் கொள்கைகளின் அடிப்படையில் உலகின் செயல்பாடு எவ்வாறு வெற்றியடைந்தது என சோவியத் ரஷ்யாவின் நிர்வாகத்தை கொண்டு சுருக்கமாக மதிப்பிடுக.
- இக்கொள்கைகளையும் கம்யூனிஸ்ட் சட்டங்களையும் நடைமுறைப்படுத்த ஆயிரக்கணக்கான மக்களை கொல்வது நியாயம் என நீ நினைக்கிறாயா?
- கம்யூனிஸ்ட் திட்டங்களுக்கு எதிராக எழுதப்பட்ட கண்டனங்கள் யாவை ?

1933ஆம் ஆண்டு மார்ச் மூன்றாம் நாள் ஜெர்மனியில் அதிகாரமளிக்கும் சட்டம் (Enbaling Act) நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் ஜெர்மனியில் சர்வாதிகாரத்தை புகுத்தியது. பாராளுமன்றத்தின் அனைத்து அதிகாரங்களும் ஹிட்லர் வசம் வந்தது. நாஜி கட்சி மற்றும் கூட்டணிக் கட்சிகளைத் தவிர, பிற கட்சிகள், வர்த்தக சங்கங்கள் தடைசெய்யப்பட்டன. பொருளாதாரம், ஊடகம், இராணுவம் மற்றும் நீதித்துறை ஆகியவற்றின் மீது நாட்டின் கட்டுப்பாடு முழுமையாக வந்தது.

நாஜிக்கள் விரும்பிய வழியில் சமூகத்தின் மீது கட்டுப்பாடுகளை விதிக்க சிறப்பு மேற்பார்வை குழுவும், பாதுகாப்பு படைகளும் உருவாக்கப்பட்டன. பச்சை சீருடையில் ஏற்கனவே இருந்த காவலர்களுடன் குதிரைப்படை அதிரடி வீரர்கள், 'கிஸ்டபோ' எனப்படும் இரகசிய காவலர் படை, பாதுகாப்பு கவசப்படை, குற்றவியல் காவலர் படை, மற்றும் காப்பு சேவை அமைப்பு ஆகியவையும் இதனுடன் இணைந்தது. அதிக அதிகாரங்கள் பெற்ற இவ்வமைப்புகள் நாஜிக்களுடன் அதிகாரம் மிக்க நாடாக மாற்றியது. மக்கள் கைது செய்யப்பட்டு, பாதுகாப்பு முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். பலர் நாடு கடத்தப்பட்டனர். பலர் எவ்வகை விசாரணையுமின்றி கைது செய்யப் பட்டனர். தண்டனை வழங்கும் அதிகாரத்தை காவல் படைகள் பெற்றன.

இவ்வதிகாரங்கள் மில்லியன் கணக்கான மக்கள், அரசியல்வாதிகள், வர்த்தக சங்கத்தினர். மற்றும் சிறுபான்மை மக்களை கைதுசெய்து சித்திரவதை செய்ய பயன்படுத்தப்பட்டது. மேலும் இது திகிலும் அச்சமும் நிறைந்த ஒரு நாட்டை உருவாக்கியது.

அரசின் நிதிமற்றும் வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பை அதிகரிக்கவும், உணவு உற்பத்தியை பெருக்கவும், நாட்டின் பொருளாதார மீட்சியை பெறவும் பொருளாதார நிபுணர் ஹிஜல்மார் ஷாட்சிடம் ஹிட்லர் பொறுப்புகளை ஒப்படைத்தார்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




வரைபடம்:13.1 இரண்டாம் உலகப்போரின் போது ஜெர்மனிப் பேரரசு




படம் 12.8 : ஹிட்லரை சமாதான மனிதராகவும், போர் விரும்பியாகவும் காட்டும் கேலிச்சித்திரம்.

நாஜிக்களில் பலதளபதிகளும் தலைவர்களும் கைது செய்யப்பட்டு புகழ்பெற்ற நூரம்பெர்க் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். இவர்களில் முக்கியமான பதினொன்று பேருக்கு நூரம்பெர்க் நீதிமன்றம் மரணதண்டனை விதித்தது. பலருக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது. பழிக்குப் பழியாக நடவடிக்கை எடுப்பது நாஜிக்களுக்கு எதிராக திரும்பியது. குற்றவியல் செயல்களில் ஈடுபட்ட நாஜிக்கள் கடுமையாக தண்டிக்கப்பட்டனர். முதல் உலகப் போருக்குப் பிறகு ஜெர்மனிக்கு ஏற்பட்ட அவமானம் இப்பொழுது நிகழாமல் நேசநாடுகள் நடந்து கொண்டன. ஜெர்மனி மற்றும் ஜப்பானால் ஏற்பட்ட பொருளாதார இழப்பை ஈடுகட்ட, அமெரிக்கா 'மார்ஷல் திட்டம்' மூலம் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு உதவியது. இதே போன்று, சோவியத் ரஷ்யாவும் 'மால்டோவ் திட்டம்' மூலம் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு உதவியது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## இரண்டாம் உலகப் போரின் சிறப்பு அமைப்புகள் :

### வெர்சைல்ஸ் ஒப்பந்தம் :

1919-ல் ஏற்பட்ட வெர்சைல்ஸ் ஒப்பந்தத்துடன் முதல் உலகப்போர் முடிவுக்கு வந்தது. இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் பெரிய அளவு மாநாடாக நடந்தது. இதில் 32 நாடுகளின் தலைவர்கள் அதாவது, நான்கில் மூன்று பங்கு உலக மக்கட் தொகையின் தலைவர்கள் கலந்துகொண்டனர். வெற்றி பெற்ற ஐந்து பெரிய நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஜப்பான் இம்மாநாட்டில் கலந்து கொண்டன. ரஷ்யா மற்றும் தோல்வியுற்ற நாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரியா மற்றும் துருக்கி இம்மாநாட்டிற்கு அழைக்கப்படவில்லை. எதிர்கால அமைதியான உலகிற்கு வல்லரசு நாடுகள் சிறந்த ஆலோசனைகளை வழங்கவில்லை. ஜெர்மனி நாட்டிற்கு வெர்சைல்ஸ் ஒப்பந்தம் எவ்வகை பொறுப்பும், மதிப்பும் அளிக்கவில்லை. ஜெர்மனியை பலவீனப்படுத்த, அவற்றின் நிலப்பகுதிகளை அண்டைநாடுகள் எடுத்துக்கொண்டன. படைபலம் குறைக்கப்பட்டது. முதலாவதாக, 1880களில் ஆப்பிரிக்கா கண்டத்தில் ஜெர்மனி கைப்பற்றிய நாடுகளையும், 1871-ல் பிரான்சிடமிருந்து கைப்பற்றிய 'அல்சேல்' மற்றும் 'லொரைன்' பகுதிகளையும் திருப்பித்தரும்படி கட்டாயப்படுத்தப்பட்டது. இரண்டாவதாக, ஜெர்மனியின் படைபலம் 9,00,000 லிருந்து 1,00,000 மாக குறைக்க உத்தரவிடப்பட்டது. மேலும், நீர்மூழ்கிக் கப்பல்களை வைத்திருக்கக் கூடாது, கப்பல் படையில் 10,000 டன்னுக்கும் குறைவான ஆறு போர் கப்பல்களை மட்டுமே வைத்திருக்க வேண்டும். எதிரியை தாக்கி அழிக்கும் ஒரு டஜன் படகுகளை மட்டுமே வைத்திருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது.

### சர்வதேச சங்கம் :

வெர்சைல்ஸ் ஒப்பந்தம் எதிர்காலத்தில் போர் நடைபெறாத வகையில் ஒரு 'சர்வதேச சங்கத்தை' தோற்றுவித்தது. ரஷ்யாவும், ஜெர்மனியும் இதில் உறுப்பினராக அழைக்கப்படவில்லை. இதை உருவாக்கிய அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன், தன் நாட்டின் பாராளுமன்றமான காங்கிரஸ் அனுமதியளிக்காததால் இதில் உறுப்பினராக சேரவில்லை. முக்கிய கட்டத்திலும் 1934-ஆம் ஆண்டிலும் அதில் 58 நாடுகளே உறுப்பினர்களாக சேர்ந்தன.இச்சங்கம் கூட்டு பாதுகாப்பு நடவடிக்கை மூலம் இரு நாடுகளுக்கிடையே நடைபெறும் பிரச்சனைகளை பேச்சுவார்த்தை அடிப்படையில் தீர்க்கலாம் என நம்பியது. இச்சங்கம் மக்களின் நல்வாழ்விற்காகவும், நாடுகளின் மற்றும் இரு நாடுகளின் பிரச்சனைகளை தீர்க்க சர்வதேச நீதிமன்றம் போன்ற நிறுவனங்களையும் துவக்கியது. இச்சங்கம் பல வாக்குறுதிகளையும், திட்டங்களையும் தீட்டினாலும் ஜெர்மனி மற்றும் இத்தாலி நாடுகள் சர்வதேச ஒப்பந்தங்களை மீறி, பிற நாடுகள் மீது போர் தொடுத்ததால், இதன் செயல்கள் தோல்வியில் முடிந்தன.

### ஆதிக்க சக்திகளுக்கு எதிராக ஜெர்மனியின் சவால் :

ஜெர்மனி நாடு முதல் உலகப்போரை துவக்கியதற்காகவும், அதன்செயலை முடக்குவதற்காகவும் 1919 ஆம் ஆண்டு முதல் உலகப்போர் முடிந்த பிறகு ஜெர்மனி நாட்டை தண்டிக்க வெற்றி பெற்ற நேச நாடுகள் முடிவு செய்தன. வெர்சைல்ஸ் ஒப்பந்தம்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஜெர்மானியர்களுக்கு பெருத்த அவமானமாகவும், அடிமைத்தனமாகவும் தெரிந்தது. இது ஜெர்மனியில் ஹிட்லர் நாஜிக் கட்சியை துவக்குவதற்கு தூண்டு கோலாக இருந்தது. வெர்சைல்ஸ் ஒப்பந்தத்தால் இழந்த நிலப்பகுதியை பெறவும், மத்திய ஐரோப்பிய பகுதியில் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டவும், அணு ஆயுத உற்பத்தியின் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கவும் ஜெர்மனியர் விரும்பினர். நாஜிக் கட்சியின் கீழ் தொழில்மயம் அதிகரித்து. ஆயுதம் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் அதிகரித்ததால், அவை போர்களுக்கு உதவியாக இருந்தது.

## பொதுவுடைமை அச்சமும் சோவியத் ரஷ்யாவும்

முதல் உலகப்போரின் அபாயகரமான விளைவின் காரணமாக ஐரோப்பா முழுவதும் சமூகக் கிளர்ச்சிகளும் தொழிலாளர்கள் பொதுவுடைமை மற்றும் கம்யூனிசத்தின் மீது ஈர்ப்பையும் அதிகரித்துக்கொண்டனர். ஐரோப்பா முழுவதும் அமைதி இயக்கங்களும் தோன்றலாயின. 1917-ல் ரஷ்யா ஒரு கம்யூனிச நாடாக மாற புரட்சி வெடித்தது. இப்புரட்சியின் விளைவாக ஆட்சியமைத்த முதல் அரசு, எதிர்காலத்தில் போர்கள் நடைபெறா வண்ணம் சமாதான நடவடிக்கைகளை மேற்கொண்டது. [இது 1924-ல் USSR சோவியத் சோஷியலிச குடியரசு என பெயர் மாறியது] இவ்வகையான புரட்சி ஐரோப்பாவிலும் ஏற்படும் என இங்கிலாந்து அச்சமுற்றது. ஆகையால் ஹிட்லர் மற்றும் நாஜிக்கட்சி சோவியத் பொதுவுடைமைக்கு எதிரான செயலில் ஈடுபடவேண்டும் என இங்கிலாந்து விரும்பியது. இதை ஹிட்லரின் ‘சாந்தப்படுத்தும்’ கொள்கை என்பர்

1939-ல் ஜெர்மனியும், சோவியத் ரஷ்யாவும் ஒரு நாடு மற்றொரு நாட்டின் மீது போர் தொடுக்கக்கூடாது என ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டன. இது இங்கிலாந்து மற்றும் இரண்டாம் நாடுகளின் ஒப்பந்தங்களுக்கு எதிரானதாகும். இது இரண்டாம் மேற்கு ஐரோப்பிய நாடுகளின மீது ஆதிக்கம் செலுத்த முடிந்தது..

## உலகப் போர்கள் : அபாய நிகழ்வுகள்

20 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், உலக நாடுகளில் தொழிற்துறையில் வளர்ந்த நாடுகள் [இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான்]ஒரு புறமாகவும், ஆசிய மற்றும் ஆப்ரிக்க காலனி நாடுகள் ஒரு புறமாகவும் பிரிந்திருந்தன. காலனி நாடுகள் சுதந்திரத்திற்காக போராடிக் கொண்டிருக்கையில் தொழிற்துறையில் வளர்ச்சியடைந்த நாடுகள் தங்களுக்குள் சண்டையிட்டு வந்தன. இவர்களிடையே சண்டையிடும் இரண்டு குழுக்கள் [ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி X இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா] தங்களுடைய உற்பத்தி பொருட்களுக்கான சந்தைகள் மீது அதிகாரத்தை செலுத்த பிற நாடுகள் மீது ஆதிக்கத்தை செலுத்தின. 1914-ல் முதல் உலகப்போர் துவங்கியது. இதில் கிழக்கில் ஜப்பான், சீனா முதல் மேற்கில் அமெரிக்கா வரை அனைத்து நாடுகளும் தீவிரமாக அதன் கூட்டு நாடுகளும் தோல்வியுற்றதுடனும் இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகள் 1918-ல் வெற்றியடைந்ததுடனும் முடிவுக்கு வந்தது. 1939 முதல் 1945 வரை இரண்டாம் உலகப்போர் முடிந்த பிறகு, உலக அமைதிக்கு பல சூழ்நிலைகள் வித்திட்டன. இப்போரிலும் ஜெர்மனி மற்றும் அதன் கூட்டு நாடுகளான இத்தாலி, ஜப்பான் ஒரு புறமும், இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா, ரஷ்யா மற்றும் அமெரிக்கா போன்ற நேச நாடுகள் ஒரு புறமும் இருந்து போரிட்டன. இறுதியில் ஜெர்மனி சரணடைந்ததும் இராண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்தது. இருப்பினும், ஜெர்மனியால் பிற நாடுகளில் அதிக அழிவு ஏற்பட்டது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




மற்றொரு நிபுணரான *J.M.*கீன்ஸின் பொருளாதார நடவடிக்கைகளை நினைவில் கொள்ள வேண்டும். அரசின் நிதி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டத்தின்படி தேசிய நெடுஞ்சாலைகள் உருவாயின. மேலும் மக்களின் காரண 'வோல்க்ஸ் வேகன்' கார் உற்பத்தி அதிகரித்தது. ஜெர்மனி அல்லாத பிற இன மக்களின் கண்டனத்திற்குள்ளானாலும், இத்திட்டத்தால் ஜெர்மனி மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. இத்திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பை அதிகரிக்க ஆயுத உற்பத்தி தொழிற்சாலைகள் துவக்கப்பட்டன. இத்தொழிற்சாலைகளால் அண்டை நாடுகளுடன் தொடர்ச்சியான போர்கள் நடைபெற்றன. முதல் உலகப்போருக்குப்பின் இழந்தஅனைத்து நிலப் பகுதிகளையும் திரும்பப் பெறும் பொருட்டு, ஹிட்லர் ஆக்கிரமிப்பு கொள்கையை தன்னுடைய வெளிநாட்டு கொள்கையாக அறிவித்தார். இதன் விளைவாய், 1939-ல் ஜெர்மனி போலந்து நாட்டின் மீது படையெடுத்து இரண்டாம் உலகப் போரை துவக்கியது.


படம் 12.9

இரண்டாம் உலகப்போரின் போது ஜெர்மன் இனத்தின் புகழைப்பரப்பி ஒரு புறம் ஜெர்மனி முயற்சியை மேற்கொண்டு மறுபுறம் சிறுபான்மை யூதர்களை கூண்டோடு அழிக்க நாஜிக்களை கட்டவிழ்த்து விட்டது.

இரண்டாம் உலகப்போர் நடந்தபொழுதே, ஒன்றும் அறியா அப்பாவி யூத இனத்தை அழிக்க அவர்களை கொன்று குவித்தது ராஜிப்படைகள். 60 லட்சம் யூதர்கள், இரண்டு லட்சம் நாடோடிகள், ஒரு லட்சம் ஊழியர்கள் பத்து லட்சம் போலந்து நாட்டவர், உடல் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களான ஜெர்மானியர் 70,000 பேரும், தவறான பாலினத் தொடர்புடைய



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



படம் 12.10 : 1945, ஆகஸ்ட் 9ஆம் நாள் ஜப்பானின் நாகசாகி நகரின் மீது அணு குண்டு வீசுவதற்கு முன்பும் பின்பும்

ஆண்கள் 10,000 பேரும் மிகக் கொடூரமாக கொல்லப்பட்டனர். இதில் எதிர்கட்சியினரும், பிற மதத்தினரும் அடங்குவர். விஷவாயு செலுத்துதல் போன்று பல வழிகளில், ஆஸ்விட்ச் போன்ற மையங்களில் மக்கள் நாஜிக்களால் கொல்லப்பட்டனர்.

இரண்டாம் உலகப்போரின் துவக்கத்தில் தொடர் வெற்றியை பெற்று வந்த ஜெர்மனி, 1943-ன் துவக்கத்தில் ஸ்டாலின் கிரேட் போரில் ஏற்பட்டத் தோல்வியைத் தொடர்ந்து இறங்கு முகத்தை சந்தித்தது. சோவியத் ரஷ்யாவும் நேச நாடுகளும் ஜெர்மனியை நாலாப்புறமும் சூழ்ந்துக்கொண்டன. நாஜிக்களின் கட்டுப்பாட்டிலிருந்த நாடுகளும், பெர்லின் எதிரியின் கையில் வந்ததால் விடுதலை அடைந்த மகிழச்சியில் திளைத்தன. ஹிட்லரும் அவரின் கூட்டாளிகளும் 1945-ல் எதிரிகளிடம் மாட்டாமலிருக்க தற்கொலை செய்துக் கொண்டனர்.

இரண்டாம் உலகப்போர் 1945-ல் முடிந்த பிறகு, ஜெர்மனி இரண்டாக பிரிக்கப்பட்டது. கிழக்கு ஜெர்மனி, ஜெர்மனி ஜனநாயகக் குடியரசு (GDR) எனவும், மேற்கு ஜெர்மனி, ஜெர்மனியின் கூட்டாட்சி குடியரசு (FRG) எனவும் பிரிக்கப்பட்டது. GDR சோவியத் ரஷ்யாவின் ஆதிக்கத்தின் கீழும் FRG அமெரிக்காவின் ஆதிக்கத்தின் கீழும் செயல்பட்டது.

ஜப்பானின் நகரங்களான ஹிரோஷிமா மற்றும் நாகசாகி மீது அமெரிக்கா அணுகுண்டுகளை வீசியதால், ஜப்பான் 1945, ஆகஸ்ட் 15ஆம் நாள் சரணடைந்தது. அமெரிக்க இராணுவம் ஜப்பானைக் கைப்பற்றியது. இருப்பினும், ஜப்பானின் மரபின்படி ஜப்பானிய பேரரசர் தொடர்ந்து பதவியில் இருக்க அனுமதிக்கப்பட்டார். ஆனால் ஜப்பானில் இங்கிலாந்தில் உள்ளபடி, அரசியலமைப்பின் கீழ் பேரரசாட்சி முறை நடைமுறைக்கு வந்தது. ஜப்பான் பாராளுமன்றமான டயட் (DIET) க்கு பொறுப்பான அரசு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## உலகப்போர்களின் விளைவுகள் :

உலகப் போர்கள் என்றும் நிறைவு பெறாத தாக்கத்தை அரசியல், சமூகம், மற்றும் பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்தின. இதை பின்வருமாறு விளக்கலாம்.

### அதிகமான உயிரிழப்பு :

அதிகமான எண்ணிக்கையில் ஏற்பட்ட உயிரிழப்பைபே முதன்மையான போர் விளைவாகும். ஏற்கனவே குறிப்பிட்டபடி, முதல் உலகப்போரில் 10 மில்லியன் மக்களும், இரண்டாம் உலகப்போரில் 20 முதல் 25 மில்லியன் மக்களும் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பெரும்பான்மையினர் ஆண்களாகும். அவர்களின் வயது 40 வயதை விட குறைவாய் இருந்தது. இப்போர்கள் ஆயுதப் போட்டியை அதிகரித்தன. முக்கியமாக, அணு மற்றும் இரசாயண ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. இது போன்ற அபாயகரமான ஆயுதங்களை எதிர்நோக்கியே இன்றைய உலக மக்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள்.

### இறப்பும் அழிவும்

இரண்டு உலகப்போர்களும் அதற்கு முன்பு நிகழ்ந்த போர்களைவிட மிகவும் வேறுபட்டது. இவைகளால் ஏற்பட்ட உயிரிழப்பும் அழிவும் கணக்கிட முடியாதது. முதல் உலகப்போரில் பத்து மில்லியன் மக்கள் [இதில் இங்கிலாந்து சார்பாக ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பாவில் போரிட்ட இந்திய ராணுவ வீரார்கள் 75,000 பேரும் அடங்கும்] இறந்தனர். இரண்டாம் உலகப்போரின் நிகழ்வுகள் மிகவும் கொடூரமானது இதில் 22 முதல் 25 மில்லியன் இராணுவ வீரர்கள் ஆறு மில்லியன் யூதர்கள், அழிவால் இறந்தோர், ஜப்பானிள் ஹீரோஷிமா மற்றும் நாகசாகி நகரங்கள் மீது அமெரிக்கா வீசிய அணுகுண்டால் உடனடியாக இறந்த 1,50,000 முதல் 2,46,000 பேர் ஆகிய அனைவரையும் சேர்த்து மொத்தம் 40 முதல் 52 மில்லியன் மக்கள் இறந்தனர்.

**போரால் ஏற்பட்ட இறப்புகள் 1500-1999**




ஆதாரம் : 1999-ல் உலக நிலையான வளர்ச்சி அமைப்பின் அறிக்கை [லண்டன் எர்தஸ்கேன் வெளியீடு-1999]

மேல் வரிசையில் போரில் ஏற்பட்டுள்ள உயிரிழப்பு காட்டப்பட்டுள்ளது. 16 ஆம் நூற்றாண்டில் 1000 த்திற்கு நான்கு பேருக்கு குறைவாகவும் 20ஆம் நூற்றாண்டில் 44 பேரும் அதாவது 4.5 சதவிகித மக்களும் இறந்துள்ளனர்.

மக்கள் மீது குண்டு வீசப்பட்டதால் இரத்த புற்றுநோய் மற்றும் புற்றுநோய் போன்ற பாதிப்புகள் பல புத்தாண்டுகளுக்கு தொடர்ந்தன. இரண்டு உலகப் போர்களுக்கு முன்பு பல நாடுகள் பல ஆண்டுகள் போர் செய்தன. இருப்பினும், 20 ஆம் நூற்றாண்டு போர்களைப் போன்று, அவை அபாயகரமானது மற்றும் உலகம் முழுவதும் பரவிய போர்கள் அல்ல.

### ஜனநாயகக் கொள்கைகளை வலியுறுத்தியது :

ஜனநாயகத்தை பின்பற்றாத அரசுகளுக்கு அபாயமாகவும், ஜனநாயகத்தின் அதிகாரத்தை அதிகரிப்பதாகவும் இரண்டு உலகப் போர்கள் திகழ்ந்தன. முதல் உலகப்போர் ஆஸ்திரோ ஹங்கேரியன் பேரரசு, ரஷ்யப் பேரரசு, ஒட்டோமன் பேரரசு, ஜெர்மனியப் பேரரசு ஆகியவற்றிற்கு சாவு மணியடித்தது.ரஷ்யநாடு சோஷியலிச புரட்சியை எதிர்கொண்டது. ஜெர்மனி நாடு வெய்மர் குடியரசாக மாறியது. துருக்கி நாட்டில் ஒட்டோமன் பேரரசு வீழ்த்தப்பட்டு ஜனநாயக மற்றும் மதச்சார்பற்ற அரசு ஆட்சியை பிடித்தது. முதல் உலகப் போரின்போது, மக்களின் விருப்பத்திற்கு



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஏற்ப, காலனிகளை ஏற்படுத்திய நாடுகள் அவற்றின் சுய ஆட்சிக்கு ஒப்புக்கொண்டன. இரண்டாம் உலகப்போர் முடிந்தபிறகு பல நாடுகள் காலனிகளை துறந்து சுதந்திரம் பெற்றன. ஆசியா மற்றும் ஆப்ரிக்க கண்டங்களில் அதிகமான நாடுகள் சுதந்திரமடைந்தன.

### அதிகாரமிக்க புதிய நாடுகள் :

முதல் உலகப்போருடன் ஜெர்மனி, ஆஸ்திரோ-ஹங்கேரி, ரஷ்யா மற்றும் துருக்கி பேரரசுகள் முடிவுக்கு வந்தன. கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பிய நாடுகள் தேசியம், பொருளாதர நிலை மற்றும் இராணுவப் பாதுகாப்பு அடிப்படையில் புதிய எல்லையுடைய அதிகாரமிக்க நாடுகளாக மாறின. இரண்டாம் உலகப் போருக்கு பின், உலக நாடுகளின் வரைபடம் மாறியது. மேலும். முன்னாள் காலனி நாடுகள் சுதந்திர நாடுகளாயின.

### பெண்கள் வாக்குரிமை :

அரசியல் உரிமையான, வாக்குரிமைக்காக நடந்த தொடர் போராட்டத்திற்கு பிறகு இங்கிலாந்துப் பெண்கள் 1918-ஆம் ஆண்டு வாக்குரிமையைப் பெற்றனர். உலகப்போர்கள் நீடித்து நிகழ்ந்தாலும், தொழிற் உற்பத்தியும் பிற சேவைத்துறையும் அவசியமாயிருந்தது. ஆண்கள் யுத்தக்களத்தில் இருந்ததால், பெண்கள் தொழிற்சாலைகள், கடைகள், அலுவலகங்கள், சமூக சேவைகள், மருந்துவமனைகள் மற்றும் பள்ளிகளில் வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. சுயமாக சம்பாதித்து குடும்பத்தை காப்பாற்றுவதால், அனைத்துத் துறைகளிலும் சமத்துவத்திற்காக குரல் எழுப்பினர். வாக்குரிமையே பெண்கள் வளர்ச்சியில் முதல் மைல் கல்லாகும்

### சர்வதேச புதிய நிறுவனங்கள் :

உலக நாடுகளுக்கிடையே ஏற்படும் பிரச்சனைகளை சுமூகமாகத் தீர்க்க முதல் உலகப்போருக்குப் பிறகு சர்வதேச சங்கமும், இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு ஐக்கிய நாடுகள் சபையும் துவக்கப்பட்டன. ஐக்கிய நாடுகள் சபை உலகில் அமைதியை நிலைநாட்டல், மனித உரிமைகளைக் காத்தல், சர்வதேச சட்டங்களை மதித்தல் மற்றும் சமூக வளர்ச்சியை அதிகரித்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு அரசாங்கம் போன்று செயல்படுகிறது. இது UNICEF, UNESCO, WHO, ILO போன்ற அமைப்புகள் மூலம் உலகிற்கு பல நன்மைகளைச் செய்கின்றது. இதனுடைய சிலப் பணிகளைப் பற்றி அறிந்திருக்கலாம் அல்லது பார்த்திருக்கலாம்.

**ஐக்கிய நாடுகள் சபை வல்லரசு நாடுகளான அமெரிக்கா மற்றும் ரஷ்யாவிற்கு ஒரு கைப்பாவையாக செயல்படுகிறது எனும் குற்றச்சாட்டு இருப்பினும், இது இரண்டாம் உலகப்போர் போன்று மற்றொருப் போர் ஏற்படுவதை தடுத்து வருகின்றது.**

உலகப் போருக்கு முன்பு உலகப்புகழ்பெற்ற முதன்மை நாடாக திகழ்ந்த, இங்கிலாந்து, தற்போது இரண்டாம் நிலை நாடாக மாறியது. அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா புதிய வல்லரசு நாடுகளாக தோன்றின. ஹிட்லரின் முழு பலத்தின் தாக்குதலுக்கு ஆட்பட்டு, அதிக பொருளாதார அழிவை எதிர்நோக்கிய சோவியத் ரஷ்யா இப்பொழுது தன்னுடைய பொருளாதார மறு சீரமைப்பிற்கு முயற்சித்தது. ரஷ்யாவின் வெற்றி அதனுடைய புகழை உயர்த்தி, கிழக்கு ஐரோப்பா, சீனா ஆகியவற்றை சேர்த்து 'சோஷியலிஸ்ட் முகாமை', ஏற்படுத்த முயன்றது.

- முதல் உலகப்போருக்குப் பிறகு சோவியத் ரஷ்யாவும், ஜெர்மனியும் எதிர்கொண்ட சிக்கல்களை ஒப்பிடுக. இவ்விரு நாடுகளுக்கிடையே உள்ள ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை குறிப்பிடுக.
- போர்களும், பொருளாதார தேக்கமும் பல நாடுகளின் முன்னேற்றத்திற்கு புதிய வழிமுறைகளை உருவாக்கியது. அவ்வழி முறைகள் என்ன? அவைகளுடைய வரம்பு என்ன?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## முக்கியச் சொற்கள்

சோஷியலிசம் கம்யூனிசம் புரட்சி மையப்படுத்தப்பட்ட அதிகாரம்
போல்ஸ்விக் இடதுசாரிகள் உதவுதல்-சீர்த்திருத்தம்-மீட்சியடைதல்
மக்கள் நல அரசு கொள்கை விளக்கம் பிரச்சாரம் இனப்புகழ்ச்சி

## உனது கற்றலை மேம்படுத்துக

1. நேச நாடுகள், அச்சு நாடுகள், மைய நாடுகள் என உலகப் போர்களில் பங்கேற்ற நாடுகளை காட்டும் ஒரு அட்டவணையை உருவாக்குக. (ஆஸ்திரியா, ரஷ்யா, ஜெர்மனி, பிரிட்டன், ஜப்பான், பிரான்ஸ், இத்தா-, அமெரிக்கா)(AS3)
2. தேசிய நாடுகள், தேசியவாதம் போன்ற கருத்துகள் யுத்தம் செய்வதற்கான விருப்பத்தை உலகப்போர்களின் போது ஏற்படுத்துவதில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தின?(AS1)
3. இரண்டு உலகப் போர்களுக்கான காரணங்களை குறித்து சிறு குறிப்பு வரைக. அவைபோன்ற அம்சங்கள் உலக நாடுகளிடையே தற்போதும் நிலவுகிறது என நீங்கள் கருதுகிறீர்களா? எவ்வாறு?(AS4)
4. ரஷ்யப் புரட்சி சமூகத்தில் பல மாற்றங்களை கொண்டுவந்தது. அம்மாற்றங்கள் யாவை? சமூகம் எதிர்கொண்ட சவால்கள் யாவை?(AS1)
5. மாபெரும் பொருளாதார தேக்கம் குறித்து பல்வேறு கருத்துகளை ஒப்பிடுக. அவற்றில் எந்த ஒரு கருத்தை நீ ஏற்றுக்கொள்கிறாய்? ஏன்?(AS1)
6. ஜெர்மனியில் யூதர்கள் எவ்வழிகளில் துன்புறுத்தப்பட்டனர்? சில நாடுகளில் மக்களின் அடையாளங்களின் அடிப்படையில் அவர்கள் வேறுபடுத்தப்படுகிறார்கள் என நீங்கள் கருதுகிறீர்களா?(AS4)
7. பொருளாதார தேக்கத்தின்போது மக்கள் நல அரசுகள் மேற்கொண்ட மீட்பு நடவடிக்கைகளை பட்டியலிடுக.(AS1)
8. பொருளாதார தேக்கத்தின்போது ஜெர்மனி எதிர்கொண்ட சவால்கள் யாவை? நாஜி ஆட்சியாளர்களும் ஹிட்லரும் இவற்றை எவ்வாறு பயன்படுத்திக்கொண்டனர்?(AS1)
9. பக்கம் 169ல் "இதன் மூலம் ........... மொழி அடிபடபடையிலான சமமின்மை காணப்படுவதில்லை." எனும் பத்தியை படித்து உன் கருத்தை எழுது.(AS2)



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

10. பக்கம் 169ல் உள்ள படத்தைப் பார்த்து கீழுள்ள வினாக்களுக்கு விடையளி.

(i) ஜப்பான் நாட்டின் கட்டுப்பாட்டில் இல்லாத இரண்டு நாடுகளை குறிப்பிடுக.

(ii) ஜப்பான் நாட்டிற்கு மேற்கு திசையில் அதன் கட்டுப்பாட்டில் இருந்த நாடுகளை குறிப்பிடுக.(AS5)

11. உலக வரைபடத்தில் கீழ்காணும் இடங்களை குறித்திடுக.(AS5)

(i) ஜெர்மனி (ii) இத்தா- (iii) ஆஸ்திரியா (iv) அமெரிக்கா (v) சீனா (vi) ரஷ்யா (vii) பிரிட்டன்

12. போர்களை தடுத்தல் மற்றும் அமைதியை மேம்படுத்துதல் குறித்து வ-யுறுத்தும் சில முழக்கங்களை தயார் செய்திடுக.(AS6)

**கலந்துரையாடு :**

போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நிலைமைகள் மற்றும் அவர்களின் துன்பங்கள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்
13

# குடியேற்ற நாடுகளில் தேசிய விடுதலை இயக்கங்கள்

கீழ் தரப்பட்டுள்ள குடியேற்ற நாடுகளின் வரைப்படத்தைப் பாருங்கள். 19ஆம் நூற்றாண்டுக்குள் ஐரோப்பிய நாடுகள் லத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசிய நாடுகளின் மீது எவ்வாறு தம் கட்டுப்பாட்டை கொண்டு வந்தது என்பதை நீங்கள் 8ஆம் வகுப்பில் தெரிந்துக் கொண்டீர்கள். இப்பாடத்தில் நாம், சுதந்திரத்திற்காக எவ்வாறு போராடினோம் என்பதைப்பற்றித் தெரிந்துக் கொள்வோம். பிரிட்டனின் குடியேற்ற நாடுகள் இளஞ்சிவப்பு நிறத்திலும், பிரான்ஸின் குடியேற்ற நாடுகள் நீல நிறத்திலும் ஹாலந்தின் குடியேற்ற நாடுகள் மாநிறத்திலும் உள்ளதை நீங்கள் காணலாம். ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் சில நாடுகள் தொடர்ந்து சுதந்திர நாடுகளாகவே இருந்தன. இவை சாம்பல் நிறத்தில் காட்டப்பட்டுள்ளன. இந்த அனைத்து நாடுகளையும், நவீன உலக வரைப்படத்தைக் கொண்டு அடையாளம் காண்க.

- பிரிட்டனின் குடியேற்ற நாடுகளில் ஆசியாவில் ஒன்றையும், ஆப்பிரிக்காவில் ஒன்றையும் அடையாளம் காண்க.
- ஹாலந்தின் குடியேற்ற நாடுகளில் ஆசியாவில் ஒன்றையும், ஆப்பிரிக்காவில் ஒன்றையும் அடையாளம் காண்க.
- பிரான்ஸின் குடியேற்ற நாடுகளில் ஆசியாவில் ஒன்றையும், ஆப்பிரிக்காவில் ஒன்றையும் அடையாளம் காண்க.
- எந்த நாட்டுக்கும் குடியேற்ற நாடாக இல்லாத நாடுகளில் ஆசியாவில் இரண்டையும் ஆப்பிரிக்காவில் ஒன்றையும் அடையாளம் காண்க.
- ஆப்பிரிக்காவில் எந்த நாட்டின் குடியேற்ற நாடாக இருந்தது?



வரைபடம் 1: 1914ல் குடியேற்ற நாடுகள்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பெயரளவுக்கு மட்டுமே சுதந்திர நாடாக இருந்த சீனா போன்ற சுதந்திர நாடுகள், உண்மையில் பல்வேறு ஆதிக்க சக்திகளின் கட்டுப்பாட்டில் இருந்தன. இப்பாடத்தில் நாம், குடியேற்ற நாடுகளில் நிலவிய மோசமான நிலைமைகளையும், அந்நாடுகள் ஐரோப்பிய ஆதிக்கசக்திகளை எதிர்த்து எவ்வாறு போராட ஆரம்பித்தன என்பதையும் படித்தறிவோம். இக்குடியேற்ற நாடுகளில் வசித்த மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசக்கூடியவர்களாகவும், பல்வேறு மதங்களை பின்பற்றுபவர்களாவும் இருந்ததனர். தாங்கள் அனைவரும் ஒரே நாட்டினர் என்ற நினைப்பு மிக அரிதாகத் தோன்றுவதாக இருந்தது. இந்நாடுகளின் பழைய ஆட்சியாளர்கள் அரசர்களாகவும், பேரரசர்களாகவும் இருந்ததால் அவர்களுக்கு மக்களாட்சி மற்றும் சுதந்திரத்தின் மீது பற்று இல்லாமல் இருந்தது.புதிய இயக்கங்கள் பல உருவானதால், ஐரோப்பாவில் நிலவிய புதிய சிந்தனைகளான தேசிய மக்களாட்சி, பொதுவுடைமை போன்றவற்றின் பால் இவர்கள் ஈர்க்கப்பட்டனர். இக்குடியேற்ற நாடுகளில் வசித்த பல மில்லியன் மக்களின் வாழ்க்கை மாற்றத்தை அறிந்துக்கொள்ளும் பொருட்டு , நம் நாட்டின் சூழ்நிலையை ஒப்பிட்டுப் பார்போம்.

- தேசிய சிந்தனைக்கான காரணம் மற்றும் தோன்றிய முறையை 9ஆம் வகுப்பு புத்தகத்தைப்பார்த்து அல்லது நினைவு கூர்ந்துத் தெரிந்துக்கொள்.
- இந்நாடுகளின் பழைய ஆட்சியாளர்கள் சுதந்திரத்திற்காகப் போராடியிருந்தால் எந்த முறையிலான அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கும்?
- குடியேற்ற நாடுகளின் எந்த சமுதாய குழுக்குள் சுதந்திரத்திற்காகப் போராடின? சமுத்துவம் மற்றும் மக்களாட்சியின் சிந்தனைகள் அவர்களுக்கு ஏன் அவசியமாக இருந்தது?

## சீனா: இரண்டு வெவ்வேறு கட்டங்கள் :

20 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், மஞ்சு வம்சத்தினர்(Manchu Dynasty) சீனாவை ஆண்டனர். இவர்கள் மேற்கத்திய ஆதிக்கச் சக்திகளுக்கு எதிராக, தங்கள் நாட்டு நலன்களைக் காப்பதில் வலுவற்றவர்களாக இருந்தனர். இவர்கள் ஆதிக்க சக்திகளால் நாட்டின் பல பகுதிகளில் செல்வாக்கு இழந்த நிலையில் குறைந்த இறக்குமதி வரி, சீன நாட்டு சட்டங்களிலிருந்து விதி விலக்கு, ஆயுதப்படைகள் பராமதிப்பு போன்ற பொருளாதார அரசியல் சலுகைகளை அவர்களுக்கு அளித்தனர். மகிழ்ச்சியற்ற நிலையில் இருந்தனர். மக்களால் பல புரட்சிகள் நிகழ்த்தப்பட்ட நிலையில், சீர்திருத்தங்களுக்கான முயற்சிகள் ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டன.

## குடியரசை நிறுவுதல் :

மஞ்சு பேரரசு நீக்கப்பட்டவுடன் 1911 ஆம் ஆண்டில், நவீன சீனாவின் நிறுவனர் என அழைக்கப்படும் சன் யாட் சென்(1866-1925) தலைமையில் குடியரசு நிறுவப்பட்டது. ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்த இவர், மக்களாட்சி மற்றும் கிறிஸ்துவம் பற்றி, தான் படித்த கிறிஸ்துவப்பள்ளியில் அறிந்துக்கொண்டார். மருத்துவத்தைப் படித்த அவர், சீனாவின் எதிர்காலத்தைப் படித்தறிந்து, செயல் திட்டத்தையும் வகுத்தார். அருடைய செயல்திட்டங்கள் “மூன்று சூத்திரங்கள்” (san min chvi) என்று அழைக்கப்பட்டன. வெளிநாட்டு ஆட்சியாளராக கருதப்பட்ட மஞ்சு வம்சத்தினர் மற்றும் குடியேற்ற ஆதிக்க சக்திகளை வெளியேற்றுவது மக்களாட்சியை ஏற்படுத்துவது; தொழிற்சாலைகளை ஒழுங்குப்படுத்தி, நிலமற்ற ஏழைகளுக்கு விவசாய நிலங்களை அளிப்பது போன்றவை வம்சத்தினர் (Nationalism) பொருளாகக் கருதப்பட்டது. மஞ்சு வம்சத்தினர் நீக்கப்பட்டு, குடியரசு அறிவிக்கப்பட்டாலும், சன் யாட் சென் அவர்களால் வழி நடத்தப்பட்ட குடியரசு



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அரசாங்கம் தன்னை பலப்படுத்திக் கொள்ளவில்லை. மாறாக "போர் பிரபுக்கள்" (war lords) என அழைக்கப்படும் வட்டார போர் சக்திகளின் கட்டுப்பாட்டில் நாடு இருந்தது.



படம் 13.1 : மே 4 போராட்டத்தில் மாணவர்களின் பங்கு

சமூக பொருளாதார சூழ்நிலைகளில் நிலையற்ற தன்மை தொடர்ந்தது. 1919 ஆம் ஆண்டு, மே 4 ஆம் நாள் வெர்சைல்ஸ் அமைதி மாநாட்டு முடிவுகளை எதிர்த்து கடும் ஆர்ப்பாட்டம் நிகழ்ந்தது. முதல் உலகப்போரில் வெற்றி பெற்ற பிரிட்டன் அணியின் நட்புறவு நாடாக சீனா விளங்கிய போதும், ஜப்பானால் ஆக்கிரமிப்புக்கு உள்ளான பகுதிகள், சீனாவுக்குத் திரும்பக் கிடைக்கவில்லை. இந்த எதிர்ப்புப் போராட்டமாக உருவாகி "மே 4 போராட்டம்" என அழைக்கப்பட்டது. பழைய சம்பிராதாயங்களை எதிர்த்துப் போராடவும், நவீன அறிவியல் மூலம் சீனாவைக் காப்பாற்றவும், மக்களாட்சி,
தேசியம் மூலமாக சீனா முன்னேற வேண்டும் என அனைத்துத்தரப்பினருக்கும் இந்த இயக்கம் அறைகூவல் விடுத்தது. நாட்டின் வளங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வெளிநாட்டவரை வெளியேற்றவும், வறுமையை விரட்டவும், சமத்துவத்தை ஏற்படுத்தவும் புரட்சியாளர்கள் அழைப்பு விடுத்தனர். எளிமையான மொழி மற்றும் எழுத்துக்களைப் பயன்படுத்துதல், பாதங்களைக்கட்டிப் போடுதல்(பெண்களின் பாதங்கள் முழுமையாக வளரவிடாமல் கட்டுப்படுத்தும் கடுமையான சம்பிரதாயம்) பெண்களின் தாழ்த்தப்பட்ட நிலை போன்றவற்றை எதிர்ப்பது, திருமணத்தில் சமத்துவம், ஏழ்மையை அகற்ற பொருளாதார சீர்திருத்தங்கள் போன்றவற்றை அவர்கள் முன்மொழிந்தனர்.

- இளஞ்சீனர்கள் பழைய சம்பிரதாயங்களையும் வெளிநாட்டு சக்திகளையும் ஏன் விரட்டினர் ?
- இதுபோன்றவை ஏதேனும் இந்தியாவில் நிகழ்ந்ததா?

குடியரசுப் புரட்சிக்குப் பிறகு நாடு ஒரு குழப்பமான வன்முறைக்காலத்தை நோக்கி நகர்ந்தது. நாட்டை ஒற்றுமைப்படுத்திவதற்கும், நிலையான தன்மையைக் கொண்டு வருவதற்கும் பாடுபடும் முக்கிய சக்திகளாக கோமின்டாங் (தேசிய மக்கள் கட்சி, இதையே KMT என்பர்) மற்றும் சீன கம்யூனிஸ்டுக் கட்சி(CCP) உருவெடுத்தன.கோமின்டாங்கின் அரசியல் அடிப்படையாக இருந்தன. உணவு, உடை, இருப்பிடம், போக்குவரத்து போன்றவற்றை "நான்கு முக்கியத் தேவைகளாக" அவர்கள் அடையாளம் கண்டனர். சன் மறைவுக்குப் பிறகு, சியாங் கேஷேக் (1887-1975)கொமின்டாங் கின் புதிய தலைவராக உருவெடுத்தார். அதிகாரங்களைத் தன் வசம் பெற்றிருந்த போர் பிரபுக்களுக்கும் வட்டார தலைவர்களுக்கும் எதிராகவும், கம்யூனிஸ்டுகளை அகற்றவும் அவர் ராணுவ நடவடிக்கையை மேற்கொண்டார். நாட்டை, இராணுவ நாடாக மாற்ற அவர் முயற்சித்தார். மக்கள் தங்களுக்கிடையே ஒற்றுமை உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும் என அவர் வற்புறுத்தினார்.




படம் 13. 2 : பிற்காலத்தின் சுவரொட்டி. "பழைய உலகை அழித்து புதிய உலகை படைப்போம்".

கொமின்டாங்கின் சமூக அடித்தளம் நகரப்பகுதிகள் இருந்தது. தொழிற் வளர்ச்சி மந்தமாகவும், குறைவாகவும்



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

காணப்பட்டது. நவீன வளர்ச்சிக்கு மையங்களாகத் திகழ்ந்த ஷாங்காய் போன்ற நகரங்களில் 1919 க்குள் லட்சம் தொழிலாளர்களைக் கொண்ட வகுப்பு உருவானது.

ஆனால், இவர்களில் மிகவும் குறைந்த சதவீதத்தினரே கப்பல் கட்டுதல் போன்ற நவீன தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பைப் பெற்றனர். இவர்களில் அதிக சதவீதத்தினர் நடுத்தர வகுப்பு நகர்ப்புற மக்களான (ஷியோவோ ஷிமின்) வியாபாரிகள் மற்றும் கடைக்காரர்கள் ஆவர். நகர்ப்புற தொழிலாளர்கள் குறிப்பாகப் பெண்கள் குறைந்த ஊதியங்களையே பெற்றனர். அவர்கள் தங்களைத் தற்போது தொழிற்சங்களுடன் இணைத்துக்கொண்டனர். வேலை நேரம் அதிகமாக இருப்பது மட்டுமின்றி, பணியிட சூழ்நிலைகள் மிகவும் மோசமான நிலையில் இருந்தது. சுதந்திரச் சிந்தனை மக்கள் ஆதரவைப் பெற்றதால் பெண்கள் உரிமைகள், சமத்துவ அடிப்படையில் குடும்பங்களை அமைத்துக்கொள்ளுதல், அன்பு, காதல் போன்றவற்றின் மீதான கலந்துரையாடல் ஆகியவற்றில் அதிக ஈடுபாடு காணப்பட்டது. பள்ளிகள் பல்கலை கழகம் பரவலாக ஏற்படுத்தப்பட்டதால் ( பீகிங் பல்கலைக் கழகம் 1902 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது) சமூக பொருளாதார மாற்றங்களுக்கு இது உதவியாக அமைந்தது.

சீயாங் கேஷேக் பழமை வாதியாக இருந்தார். பெண்களின் பங்கு வீடு வரை மட்டுமே இருத்தல் வேண்டும் என்றும் "கற்பு, தோற்றம், பேச்சு, வேலை என்னும் நான்கு நற்குணங்களை அவர்கள் பெற்றிருக்க வேண்டும்" என்றும் கூறினார், பெண்கள் அணியும் குட்டைப்பாவாடை எவ்வளவு நீளம் இருக்கவேண்டும் என்பதையும் அவர் சிபாரிசு செய்தார். தொழிலதிபர்களுக்கு ஆதரவாக தொழிற்சங்கங்களையும் இவர் முடக்க நினைத்தார். கொமின்டாங்கட்சி சமூக அடித்தளத்தைக் கொண்டக் காரணத்தாலும், குறுகிய அரசியல் தொலைநோக்காலும் நாட்டை ஒருங்கிணைக்கும் முயற்சியில் தோல்வியுற்றது. சன்யாட்-சென் செயல்திட்டத்திலுள்ள முக்கிய கருத்தான முதலீடு, கட்டுப்பாடு, சம அளவிலான நிலப்பகிர்வு போன்றவற்றை அமுலாக்கவில்லை. அதிகரிக்கும் சமூக சமத்துவமற்ற நிலையையும், விவசாயிகளையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ளவில்லை. மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பதிலாக, இராணுவம் மூலம் அமைதியை ஏற்படுத்த முயற்சித்தனர்.

- இக்காலத்தில் தோன்றிய முக்கிய அரசியல் கட்சி எது?
- இது போன்ற மக்கள் ஒருங்கிணைப்பில் உறுப்பினர்கள் யார்?
- அவர்கள் காண விரும்பிய சமூக, பொருளாதார மாற்றத்தின் இயல்புகள் யாவை?

**சீன கம்யூனிஸ்டு கட்சியின் தோற்றம் :**

1937ல் சீனா மீது ஜப்பான் போர் தொடுத்த போது, கொமின்டாங் கட்சியின் பின்வாங்கினர். நீண்டப் போர்களால் சீனா வலுவிழந்தது. 1945-1949 க்கு இடைப்பட்ட மாதங்களில் விலைகள் மாதத்திற்கு 30 சதவீதம் வரை உயர்ந்தது. இதனால் சாதாரண மக்களின் வாழ்க்கை முற்றிலுமாக அழிந்தது. கிராமப்புற சீனா இரண்டு நிலத்தின் சாரத்தை இழத்தல், காடுகள் அழிப்பு, வெள்ளங்கள் போன்றவையாகும். இரண்டாவதாக சுரண்டலான நில குத்தகை முறை, கடன் சுமை பழைய கால தொழில்நுட்பம், வளர்ச்சியடையாத தகவல் தொடர்பு முறை போன்ற சமூக,பொருளாதார நெருக்கடியாகும்.

ரஷ்ய புரட்சிக்கு பிறகு, 1921 ஆம் ஆண்டில், சீன கம்யூனிஸ்டு கட்சி தோற்றுவிக்கப்பட்டது. ரஷ்யா பெற்ற வெற்றி, உலக நாடுகளின் மீது அரசாங்கத்தை உருவாக்குவதற்கு உதவும் கோமின்டர்ன் (Comintern) கட்சியை லெனின் போன்ற தலைவர்கள் 1918 ஆம் ஆண்டில் நிறுவினர். வெவ்வேறு நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டு கட்சிகளுக்கு., கோமின்டர்ன் மற்றும் சோவியத் யூனியன் ஆதரவளித்தன. ஆனால் நகர்ப்புறங்களிலுள்ள தொழிலாளர்கள் வகுப்பு மூலமே புரட்சி தோன்றும் எனக் கருதும் மார்க்ஸிச கொள்கையை அவர்கள் நம்பினர். CCP தலைவராக விளங்கிய மாவோ ஜெடாங்க் (1893-1976) தன் புரட்சிகர செயல்திட்டத்திற்கு விவசாயிகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வித்தியாசமான பாதையை தேர்ந்தெடுத்தார். நிலபிரபுக்கள் முறையை ஒழிக்க விவசாயிகளைத் தூண்டியதோடு மட்டுமின்றி விவசாயிகளின் படைகளையும் அமைத்தார். CCP சைனிஷ் கம்யூனிட் கட்சி யால் தலைமையேற்று நடத்தப்பட்ட



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

போராட்டங்களில் பல மில்லியன் நிலமற்ற விவசாயிகள் பங்கு பெற்றனர். அவரின் வெற்றிகள் CCP ஐ ஒரு வலுவான அரசியல் சக்தியாக மாற்றி, இறுதியில் கொமின்டாங் மீது வெற்றி பெறுமாறு செய்தது.



படம் 13.3 :1944ல் யானான் என்ற இடத்தில் மக்கள் கூட்டத்தில் பேசும் மாவோ.

கொமின்டாங் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்புத்தரும் ஜியாங்ஸி மலைகளில் 1928லிருந்து 1934 வரை மாவோ ஜெடாங்க் என்பர் முகாமிட்டுருந்தார். நில பிரபுக்களுன் நிலங்களை தன் வசப்படுத்திக் கொண்டு, அந்நிலங்களை மறு பகிர்ந்தளிப்புச் செய்ததின் மூலம் வலுவான விவசாய சங்கங்களை ( சோவியத் ) அமைத்தார். பிற தலைவர்களைப் போல் அல்லாமல், சுதந்திரமாக உள்ள அரசாங்கம் மற்றும் இராணுவத்தை அமைத்தார். பெண்களின் பிரச்சினைகளை அறிந்தவராக இருந்த மாவோ, கிராமப்புற மகளிர் சங்கங்கள் தோன்ற ஆதரவளித்தார். பெரியவர்கள் ஏற்பாடு செய்யும் திருமணங்களைத் தடை செய்து, திருமண ஒப்பந்த ஆவணங்கள் வாங்குதல், விற்றல் போன்றவற்றை நிறுத்து, விவாக ரத்து முறையை எளிமையாக்கி, புதியத் திருமண சட்டத்தை இயற்றினார்.

கம்யூனிஸ்டு சோவியத்களை, கொமின்டாங் தடை செய்ததால், அக்கட்சி தன் இடத்தை மாற்றிக் கொள்ள வேண்டியதாயிற்று. இதனால் “Long March” என்று அழைக்கப்படும் “நீண்ட எழுச்சிப்பயணம்”. (1934-35) 6000 மைல்கள் கடந்து ஷாங்காய் நகருக்குச் செல்லவேண்டியதாயிற்று. இங்கு யானானிலுள்ள புதிய இடத்தில் போர் பிரபுக்களுக்கு முடிவு கட்டவும், நில சீர்திருத்தங்களைக்கொண்டு வரவும், அந்திய ஆதிக்க சக்திகளுக்கு எதிராகப் போராடவும் தங்கள் செயல்திட்டங்களை மேலும் தீவிரமாக்கினர். நிலசீர்திருத்தங்கள், தேசிய மயம் என்னும் இந்த இரண்டு செயல் திட்டங்கள் காரணமாக, கட்சிக்கு வலுவான சமூக அடித்தளம் ஏற்பட்டது.

1937-1945 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்டக்காலத்தில் சீனா மீது போர் தொடுத்த ஜப்பான், சீனாவின் அதிக நிலப்பரப்புக்களை ஆக்கிரமித்தது. காட்டு மிராண்டித்தனமான, குடியேற்ற, இராணவ ஆட்சியை ஜப்பான் அமுலாக்கிய காரணத்தால் சீனாவின் சமூக, பொருளாதாரம் மோசமான நிலைமைக்குத் தள்ளப்பட்டது. ஜப்பான் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராட கொமின் டாங் மற்றும் CCP தங்கள் சக்திகளை ஒன்றிணைத்தன. 1945 ஆகஸ்டில் 15ல் அமெரிக்காவிடம் ஜப்பான் சரணடைந்தப்பிறகு, சீனா மீது ஆதிக்கம் செலுத்துவதற்காக கொமின்டாங் மற்றும் CCP களுக்கிடையில் முழு அளவிலான போர் நடந்தது.

## புதிய மக்களாட்சியை நிறுவுதல் : 1949-1954

1949 ஆம் ஆண்டில் சீன மக்களின் குடியரசு ஏற்பட்டது. இது புதிய மக்களாட்சி என்ற கொள்கையின் அடிப்படையில் ஏற்பட்டது. நிலபிரபுக்கள் முறை, ஏகாதிபத்யம் போன்றவற்றை எதிர்க்கும் சமூக வகுப்புக்கள் அனைத்தும் இதன் அடிப்படையில் ஒன்றுபட்டன. பொருளாதாரத்தின் முக்கிய அம்சங்களை அரசுக்கட்டுப்பாட்டில் வைத்தனர்.ஆட்சிக்கு வந்த பிறகு CCP, பெரிய அளவிலான நிலச்சீர்த்திருத்தங்களை அமுல்படுத்தியது. இதன் பொருள் என்னவென்றால் நில பிரபுக்களின் நிலங்களைப்பறித்து, ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளித்தலாகும். பெண்களின்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாதுகாப்பு, உரிமைகள் சட்டங்கள் இயற்றப்பட்டன. இதனால் பெண்கள் பல்வேறு துறைகளில் ஆண்களுக்குச் சமமான இடத்தைப் பிடிக்க முடிந்தது.



படம்13.4 : நில ஆவணங்களை எரிக்கும் மக்கள்

**நிலச்சீர்திருத்தங்கள் :**

கிராமப்புற சூழ்நிலைகளை புரிந்துக்கொள்ளுதல், விவசாய சங்கங்களை ஏற்படுத்துதல் போன்றவற்றில் இரண்டு ஆண்டுகள் அமைதியான முயற்சிக்குப் பிறகு 1950-51 ஆம் ஆண்டுகளில் நிலச்சீருத்தங்களை அமுலாக்கினர். கிராம மக்களின் வெவ்வேறு வகுப்புகளை அடையாளம் காணுதல், நிலபிரபுக்களின் நிலங்கள் மற்றும் ஆக்கப்பூர்வமான சொத்துக்கள் போன்றவற்றை அரசுடைமையாக்கி, மீண்டும் அவற்றைப்பிரித்தளித்தல் இச்சீர்திருத்தங்களின் முக்கிய நிலையாகும். இச்செயல் முறையில் முக்கிய பங்கை, "உள்ளூர் நிலச் சீர்திருத்தச்சங்கம்" அனுப்பிய வேலை குழுக்கள் வகித்தன விவசாய சங்கங்களை அமைத்தல் மற்றும் உள்ளூர் தலைமை இடங்களுக்காக செயல் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் இவற்றின் முக்கிய கடமைகளாக இருந்தன. இந்த புதிய தலைமை ஏழை, நடுத்தர விவசாயிகளிடமிருந்து ஏற்பட்டவை பல பகுதிகளில் தங்கள் செயல்திறன் காரணமாக, நடுத்தரவகுப்பு விவசாயிகள் ஆதிக்க நிலைப் பெற்றனர். இது மட்டுமின்றி மக்கள் கூட்டங்கள், வெளிப்படையான விசாரனைகள் மூலாமாக நிலபிரபுக்களுக்கு எதிராக கிராமம் முழுவதையும் ஒன்று சேர்ப்பதற்கு வேலைக் குழுக்கள் முயன்றன.

இது போன்ற முறைகளால், நிலபிரபுக்கள் மக்களின் அவமானத்துக்கு உள்ளானார்கள். வழக்கு விசாரணையின் இறுதியில் அவர்களுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டது. இது போன்ற விசாரணைகளின் மூலம் அவர்கள் 10 முதல் 20 இலட்சம் நிலபிரபுக்களை மரண தண்டனைக்கு உட்படுத்தினர்.

பொருளாதார சீர்திருத்தத்தின் விளைவாக, சீனாவின்விளை நிலங்களில் 43 சதவீதத்தை, மக்களில் 60 சதவீதத்தினருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதில் நில சீர்திருத்தங்கள் வெற்றி பெற்றன. ஏழை விவசாயிகள் தங்கள் நிலங்களை படிப்படியாக அதிகரித்துக் கொண்டனர். ஆனால் நடுத்தர விவசாயிகள் முதலிலிருந்தே வலுவான நிலையில் இருந்ததால் அதிகப்பயன்களைப் பெற முடிந்தது.

பழைய உயர் வகுப்பினரிடம் இருந்து அதிகாரம் மற்றும் பொருளாதார வளங்கள் பறிக்கப்பட்டது. ஆனால் அதே சமயத்தில் CCP மூலம் அரசியலுக்கு வந்த ஏழை மற்றும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த கிராம நிலை உறுப்பினர்களால் ஆன புதிய உயர் வகுப்புத் தோன்றியது. நில சீர்திருத்தங்களோடு அரசியல் கல்வி, கல்வியறிவு போன்றவற்றைப் பெரிய அளவில் பரப்புவதற்காக "வயது வந்தோர் விவசாயிப்பள்ளிகளை" ஆரம்பித்தனர். இதனுடன் கிராமங்களில் சிறுவர் மற்றும் பெரியவர்களுக்காகப் பள்ளிகளைத் துவக்கினர்.

புரட்சியின் துவக்ககாலங்களில் நிலச்சீர்த்திருத்தங்களை அமுல் படுத்துவதில், அனைவருக்கும் துவக்கக் கல்வியை புகட்டுதல் போன்றவற்றில் கிடைத்த வெற்றி, சீனாவின் எதிர்கால முன்னேற்றத்திற்கு வலுவான அடித்தளத்தை ஏற்படுத்தித்தந்தது என்ற கருத்தை அனைத்து அறிஞர்களாலும்

- CCP போரில் வெற்றி பெறுவதற்கு நிலசீர்திருத்தங்கள் எவ்வாறு உதவின?
- இந்தியாவில் அமுல்படுத்திய நிலச்சீர்திருந்தங்களை, சீனாவில் அமுல்படுத்திய சீர்திருத்தங்களோடு ஒப்பிட்டு, அவற்றுக்கிடையில் ஒற்றுமை வேற்றுமைகளை எழுதுங்கள்.
- நாட்டின் முன்னேற்றத்திற்கு ஆண்பெண் சமமான வாய்ப்புகள், அவர்களின் சமமான பங்களிப்பு அவசியம் என்ற கருத்தோடு நீங்கள் ஒத்துப்போகின்றனரா?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஒப்புக்கொள்ளப்பட்டதாகும். CCP ஆட்சி படிப்படியாக ஒருகட்சி ஆட்சிக் CCP யைச் சேர்ந்த உயர் தலைவர்கள் அல்லது சேர்மேன் மிகவும் சக்தி வாய்ந்தவர்களாக விளங்கினர். எதிர்க்கட்சியின் செயல்பாடுகள் அனைத்தும் முடக்கப்பட்டன.

## இரண்டு ஏகாதிபத்ய நாடுகளுக்கு எதிராக வியட்நாம்:

### குடியேற்ற அனுபவம் :

**19 ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் பிரான்ஸின் நேர்முக ஆட்சியின் கீழ் வியட்நாம் வந்தது. பிரெஞ்சு ஆட்சியாளர்கள் வியட்நாம் பேரரசரை தம் கைப்பாவையாக்கி, இந்திய நாட்டை பிரிட்டிஷ்காரர்கள் எவ்வாறு ஆண்டனரோ அதைப் போலவே ஆண்டனர். இந்திய நாட்டின் மீது பிரிட்டன் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியதோ, அதேபோல வியட்நாமியர்கள் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் பிரெஞ்சுக்காரர்கள் தாக்கத்தை ஏற்படுத்தினர்.**



*வரைபடம் 2 : வியட்நாம்*

### ஏற்றுமதிகள், நிலபிரபுக்கள் முறைமற்றும் விவசாயிகள் :

வியட்நாம் அரிசி ஏற்றுமதி செய்யும் நாடாக வளர்ச்சி செய்ய பிரெஞ்சு மிகவும் ஆர்வமாக இருந்தது. இதற்காக மூன்று உத்திகளைக் கையாண்டது – நீர்ப்பாசன முறைகளை மேம்படுத்துவது, நில பிரபுக்களை ஊக்கப்படுத்துவது நெல், ரப்பர் போன்ற விவசாயப்பொருட்களின் சந்தையிடுதலுக்கு வசதியை ஏற்படுத்தித்தருதல் ஆகும். மெகாங் டெல்டா பகுதியில் விவசாய பரப்பை அதிகமாக்குவதற்குப் பிரெஞ்சுக்காரர்கள், மானாவாரி நிலங்களில் கால்வாய்களை அமைத்தனர். கால்வாய் அமைத்தல், நிலத்தைத் தோண்டும் பணிகள் போன்ற நீர்ப்பாசனப் பணிகளுக்காக தொழிலாளர்களைக் கட்டாயப்படுத்தி வேலை வாங்கினர். அரிசியை சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்தது. 1931 ஆம் ஆண்டுக்குள்,வியட்நாம் உலகத்தின் மூன்றாவது பெரிய நெல் ஏற்றுமதி செய்யும் நாடாக உருவானது.இதையடுத்து வணிகப் பொருட்களின் போக்குவரத்துக்காகவும், இராணுவத்தளவாடங்களை அனுப்புவதற்காகவும், வியட்நாமின் அனைத்துப் பகுதிகளையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதற்காகவும், சாலை, ரயில் போக்குவரத்துப் போன்ற அடிப்படை வசதிகளை மேம்பாடு செய்தனர். வியட்நாமின் வடக்குத் தெற்கு பகுதிகளையும், சீனாவுடன் இணைக்கும் ரயில் பணிகளையும் பிரெஞ்சுக்காரர்கள் மேற்கொண்டனர்.

வியட்நாமின் குடியேற்றப் பொருளாதாரம், பிரெஞ்சு மற்றும் வியட்நாமின் உயர்தர குடிமக்களின் கட்டுப்பாட்டிலுள்ள நெல், ரப்பர், போன்றவற்றின் சாகுபடி மீது ஆதாரப்பட்டுள்ளது ரப்பர் தோட்டங்களில் பெரும்பாலும் கொத்தடிமைகளைப் பயன்படுத்தி வந்தனர். பொருளாதாரத்தைத் தொழில் மயமாக்கப் பிரெஞ்சுக்காரர்கள் எதுவும் செய்யவில்லை. கிராமப்புற பகுதிகளில் நில பிரபுக்கள் முறை பரவலாகக் காணப்பட்டது. சிறு விவசாயிகளின் நிலங்களைப் பறித்துக்கொண்ட நில பிரபுக்கள், அவர்களை குத்தகை விவசாயிகளாக மாற்றினர். அதன் விளைவாக விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் குறைந்தது..

பல ஆணடுகளாக நிகழ்ந்த நிலப்பறிப்பு, பிரெஞ்சு ஏகாதிபத்ய ஆட்சியாளர்களுக்கும், அவர்களை ஆதரித்த வியட்நாமியர்களுக்கும் அளிக்கப்பட்ட நேரடி சலுகைகளால் நிலங்கள் அனைத்தும் பெரிய, செல்வந்த நில பிரபுக்கள் வசம் இருந்தன. விவசாய நிலங்கள் மிகக்குறைவாக அல்லது இல்லாமல் இருந்த காரணத்தால் வியட்நாம் விவசாயிகள் கடன் தொல்லையில் சிக்கித்தவித்தனர். கிராம உயர் குடிமக்களாக இருந்த நிலப்பிரபுக்கள் விதிக்கும் அதிக வரிகள், அதிக குத்தகை, அதிக வட்டி போன்றவற்றால்

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

விவசாயிகள் நலிந்தனர். நிலமற்றவர்கள் மற்றும் நில பிரபுக்கள் பற்றி 1930 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்கள்,வியட்நாம் விவசாயிகள் மிக மோசமான நிலையை வெளிப்படுத்துகிறன. "அன்னாம்" என்னும் பகுதியில் ஏறக்குறைய 53% குடும்பங்களுக்கு விவசாய நிலங்கள் ஏறக்குறைய 58% மற்றும்79% சதவீத குடும்பங்களுக்கு முற்றிலும் நிலங்கள் இல்லாமல் இருந்தது.

- வியட்நாம் ரயில் போக்குவரத்தையும், கால்வாய்களையும் பிரெஞ்சுகாரர்கள் ஏன் அமைத்தனர்?
- நிலமற்ற விவசாயிக்கும் நிலமற்ற விவசாயத் தொழிலாளருக்கும் உள்ள வேறுபாடு என்ன?
- பிரிட்டிஷ் ஆட்சியில் இந்திய நாட்டு விவசாயிகளின் நிலையை விவசாயிகளின் நிலைமைக்கும், வியட்நாம் விவசாயிகளின் நிலைமைக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

1930 களில் விவசாய நிலமுள்ள குடும்பங்களில் அதிக சதவீதத்தினர் பசிக்கொடுமைக்கு ஆளானார்கள் என்றால், நிலமற்ற விவசாயிகளின் நிலைமையை நினைத்துப்பாருங்கள்.

நில பிரபுக்களிடமிருந்து குத்தகைக்கு நிலங்களைஎடுத்துக்கொண்ட விவசாயிகள், குத்தகை செலுத்துவது மட்டுமின்றி, நிலபிரபுக்களின் நிலங்களிலும், அவர்கள் வீடுகளிலும் வேலை செய்ய வேண்டும். இதைத்தவிர அவர்கள் விதிக்கும் பலவகையான வரிகளையும் அவர்கள் கட்டவேண்டும். இதன் விளைவாக விவசாயிகள் நில பிரபுக்களிடம் இருந்து அரிசி, பணம் போன்றவற்றைக் கடனாகபங் பெறும் நிலைமை ஏற்பட்டது. இதனால் விவசாயிகள் அதிகப் படியானகடன் தொல்லையில் சிக்க நேர்ந்தது.

### "நாகரிகப் பணி" :

பிரிட்டிஷ்காரர்களைப் போலவே பிரெஞ்சு குடியேற்ற ஆட்சியாளர்களும் குடியேற்றப் பகுதியின் மக்கள் நாகரிகமற்றவர்கள் என்றும், நவீன நாகரீகத்தின் பலன்களை தங்கள் ஆட்சியில் கொண்டு வருவதே தங்கள் நோக்கம் என்றும் நினைத்தனர். கல்வி மூலமே நாகரீகத்தைக் கொண்டு வர முடியும் என நினைத்தனர். பிரெஞ்சுகாரர்களுக்கு படிப்பறிவுள்ள தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். ஆனால் அதே வேளையில் கல்வியறிவால் பல பிரச்சினைகள் ஏற்படும் என அவர்கள் அச்சமுற்றனர். கல்வியறிவு பெற்ற வியட்நாமியர்கள் குடியேற்ற ஆட்சியாளர்களின் ஆதிக்கத்தைக் கேள்வி கேட்க நேரிடும். அது மட்டுமின்றி, வியட்நாம் நாட்டில் தங்கி ஆசிரியர்கள், கடைகாரர்கள், காவல் துறையினர் போன்ற வேலைகளில் ஈடுபட்டிருந்த பிரெஞ்சுகாரர்கள், படிப்பறிவு பெற்ற வியட்நாமியர்கள் தங்கள் வேலைகளுக்கு உலை வைப்பார்கள் என்று அச்சமுற்றனர். ஆகையால் இவர்கள் வியட்நாம் மக்களுக்கு பிரெஞ்சு மொழியை முழுமையாக கற்றுத்தரும் முறைகளுக்கு எதிர்ப்புத்தெரிவித்தனர். துவக்கப்பள்ளி நிலையில் வியட்நாம் மொழியைக் கற்றுத்தந்தாலும், உயர்கல்வி பிரெஞ்சு மொழியில் இருந்தது. மக்கள் தொகையில் சிறிய எண்ணிக்கையில் இருந்த வியட்நாம் உயர்குடி மக்கள் பள்ளிகளில் சேர்ந்தனர். அவ்வாறு சேர்ந்தவர்களிலும் ஒரு சிலரே பள்ளிக்கல்வியை முடித்து தேர்வில் தேர்ச்சி அடைந்தனர். பள்ளிப்புத்தகங்கள் பிரெஞ்சுகாரர்கள் புகழ்ந்தும், குடியேற்ற ஆட்சியை நியாயப்படுத்தியும் வெளியிடப்பட்டன.

- இந்தியாவில் பிரிட்டிஷ்காரர்கள் பின்பற்றிய முறையை நினைவு கொள்ள முயற்சிக்கவும். இந்தியாவில் பிரிட்டிஷ்காரர்களும், வியட்நாமில் பிரெஞ்சுகாரர்களும் பின்பற்றிய குடியேற்ற ஆட்சி முறைகளை ஒப்பிடுக. அவற்றுக்கிடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளை விவரி.

### வியட்நாமியரின் தேசியவாதத் தோற்றம் :

பிரெஞ்சுக்காரர்கள் அளித்த பாடத்திட்டங்களை ஆசிரியர்களும் மாணவர்களும் கண்மூடித்தனமாக ஆதரிக்கவில்லை. சில சமயங்களில் வெளிப்படையாகவும், சில சமயங்களில் அமைதியாகவும் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். துவக்க வகுப்புகளில் வியட்நாம் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால், அவர்கள் உண்மையில் என்ன கற்றுத்தருகிறார்கள் என்பதை கட்டுப்படுத்துவதுக் கடினமாக இருந்தது. கற்றுத்தரும் சமயத்தில் வியட்நாம் ஆசிரியர்கள் பாடங்களை மாற்றி பிரெஞ்சு



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அரசாங்கத்தை விமர்சித்து வந்தனர். உயர் பதவி வேலை வாய்ப்புகளுக்கு வியட்நாம் மக்களை தகுதியற்றவர்களாக்கும் குடியேற்ற ஆட்சியின் முயற்சிகளை மாணவர்கள் எதிர்த்தனர். அவர்கள் நாட்டுப்பற்று உணர்வுகளால் தூண்டப்பட்டனர். சமுதாயத்தின் நலன்களுக்காக போராட வேண்டிய கடமை, கல்வியறிவு பெற்றவர்களுக்கு உள்ளது என அவர்கள் நம்பினர். இதனால் தங்கள் நிலைகளுக்கு ஆபத்து ஏற்படும் என அச்சமுற்ற பிரெஞ்சு ஆட்சியாளர்களுடனும், உயர் குடிமக்களுடனும் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

1920 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மாணவர்கள் "இளைய அன்னாம்" (Young Annam) எனும் கட்சியைப் போன்று. வெவ்வேறு கட்சிகளை தோற்றுவித்தனர். அதுமட்டுமின்றி அன்னாமிஸ் ஸ்டூண்ட்" போன்ற செய்தித்தாள்களையும் வெளியிட்டனர்.

20 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் வியட்நாமிய மாணவர்கள் நவீன கல்வியைக் கற்கும் பொருட்டு ஜப்பானுக்குச் சென்றனர். வியட்நாமில் இருந்து பிரெஞ்சுக்காரர்களை விரட்டுவதும், கைப்பாவை பேரரசரைக் கவிழ்ப்பதும், பிரெஞ்சுகாரர்களால் பதவி நீக்கம் செய்யப்பட்ட என்குயின் வம்ச ஆட்சியை மீண்டும் கொண்டுவருவதும் இம்மாணவர்கள் பலரின் நோக்கமாக இருந்தது.

### கலகக்காரர்களாகப் பெண்கள்

வியட்நாம் பெண்கள் குறிப்பாக கீழ் வகுப்பில் உள்ளவர்கள் வழக்கமாக மிக அதிகமான சமத்துவத்தைப் பெற்றிருப்பவர்கள் ஆனால் பொது வாழ்க்கையில் பங்கு ஏதும் இல்லை. மேலும் தங்கள் எதிர்காலத்தை முடிவு செய்யும் அதிகாரமும் அவர்களுக்கு இல்லை.

தேசிய இயக்கம் வளர்ச்சி பெற்ற தருணத்தில், பெண்களின் நிலைப்பற்றிய கேள்வி எழுந்தது. பெண்மைக்கான புதிய வடிவம் தோன்றியது. சமுதாய அவலங்களை எதிர்த்துப் போராடிய பெண்களை எழுத்தாளர்களும், அரசியல் சிந்தனையாளர்களும் போராடத் தொடங்கினர். 1930 களில் நாலின் எழுதிய நாவலில், ஒரு பெண் கட்டாயத்திருமணத்திலிருந்து வெளியேறி தான் விரும்பிய தேசிய போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒருவரை திருமணம் செய்துக்கொண்டார். சமுதாய மரபுகளை எதிர்த்துப்போராடிய இக்கலகம் வியட்நாம் சமுதாயத்தில் பெண்களில் புதிய வருகையைக் காட்டுகின்றது.

சீனாவில் சன் யாட் சென் புரட்சியால் குடியரசு ஏற்பட்டுள்ள நிலையில், வியட்நாமிலும் குடியரசு, மக்களாட்சி முறை ஆட்சியை கொண்டு வர அந்நாட்டு மக்கள் ஆர்வம் காட்டினர். புதிய அரசியல், சிந்தனைகள் பற்றி அறிந்துக் கொள்ளும் நோக்கத்துடன் பல மாணவர்கள் சீனா, பிரான்ஸ், ரஷ்யா போன்ற நாடுகளுக்குச் சென்றனர்.

1930 ஆம் ஆண்டின் பொருளாதார மந்த நிலை, வியட்நாம் மீது தீவிர தாக்கத்தை ஏற்படுத்தியது. ரப்பர், அரிசி போன்றவற்றின் விலை வீழ்ச்சி அடைந்து கிராமப்புற பகுதி மக்களின் கடன், வேலையின்மை அதிகரித்தது.கிராமப்புற மக்கள் இதை எதிர்த்து கிளர்ச்சியில் ஈடுபட்டனர். பிரெஞ்சுக்காரர்கள் இரும்புக்கரம் கொண்டு அடக்கினர். கிளர்ச்சிக்காரர்கள் மீது விமானம் மூலம் குண்டு வீசித்தாக்கினர்.

1930 ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஹோ சி மின்( இவர் சிலகாலம் பிரான்ஸிலும், ரஷ்யாவிலும் இருந்தவர்). தங்களுக்கிடையே போட்டியிட்டு கொள்ளும் தேசிய குழுக்களை ஒன்றிணைத்து வியட்நாம் கம்யூனிஸ்டுக் கட்சி (வியட்நாம் காங் சான் டாங்)யைத் தோற்றுவித்தார். பிறகு இக்கட்சிக்கு இந்தோ சீனா கம்யூனிஸ்டு கட்சிகளின் போர் ஆர்ப்பாட்டங்களால் அவர் ஈர்க்கப்பட்டார். தென் கிழக்கு ஆசியாவைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற ஏகாதிபத்ய எண்ணத்தின் பகுதியாக ஜப்பான் 1940 ஆம் ஆண்டு வியட்நாமை ஆக்கிரமித்தது. இதனால் தேசியவாதிகள் பிரெஞ்சுக்காரர்கள் மட்டுமின்றி ஜப்பானியர்களையும் எதிர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால் இரண்டாவது உலகப்போரில் ஹிட்லர்

- அரிசியின் விலை வீழ்ச்சியால் கிராம்ப்புற மக்களின் கடன்சுமை ஏன் அதிகமானது?
- வியட்நாம், சீனா ஆகிய நாடுகளில் தேசியம் உருவாகுவதில் இளைஞர்கள் மாணவர்கள் முக்கியப் பங்குவகித்தனர். இவற்றுக்கிடையில் ஒற்றுமை வேற்றுமைகளைக் கலந்துரையாடுங்கள்
- சுதந்திர வியட்நாம் அரசாங்கம் எடுத்த முதல் நடவடிக்கைகளில் நில குத்தகையை குறைத்தல் என்பது ஒன்றாகும். இந்நடவடிக்கையை ஏன் எடுத்தனர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



படம் 13.5 : ஹோ-சி-மின்

பிரான்ஸ் முழுவதையும் ஆக்கிரமித்தக் காரணத்தால் பிரெஞ்சுக்காரர்கள் வலுவற்றவர்களாக இருந்தனர். 'வியத்மின்' என்று அழைக்கப்படும் 'வியட்நாம் சுதந்திர அமைப்பு' (வியட்நாம் டாக் லாப் டாங்க் மின்) ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடி 1945 ஆம் ஆண்டு செப்டம்பரில் ஹனாய் பகுதிகளை மீண்டும் தன் வசம் பெற்றது.

மக்களாட்சி முறையிலான குடியரசு நாடாக வியட்நாம் உருவானது. ஹோ சி மின் குடியரசின் "சேர்மென்" ஆக பொறுபேற்றார்.1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் "வியத்மின்" அதிகாரத்திற்கு வந்த உடனே மறு குத்தகை முறைக்குத் தடை விதித்தார். 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அதுவரை இருந்த குத்தகைதாரர்களின் குத்தகைக் கடன்களைத் தள்ளுபடிச் செய்தார். சமுதாய நிலங்களையும் பிரெஞ்சுக்காரர்களின் கட்டுப்பாட்டிலுள்ள நிலங்களையும், வியட்நாம் துரோகிகளின் நிலங்களையும் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் கொள்கையை அவர்கள் கடைபிடித்தனர்.

## வியட்நாம் புதிய குடியரசு முறை :

புதியதாக உருவான குடியரசு நாடு பல சவால்களை எதிர்க்கொண்டது. பேரரசர் 'பாவோ டாய்' ஐ கைப்பாவையாக மாற்றி வியட்நாம் மீது கட்டுப்பாட்டை மீண்டும் கொண்டுவர பிரெஞ்சுகாரர்கள் முயற்சித்தனர். பிரான்ஸின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் "வியத்மின்" உறுப்பினர்கள் மலைகளில் ஒளிந்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. எட்டாண்டுகள் கடும் போருக்குப்பிறகு 1954 ஆம் ஆண்டில் 'டீன் பீன் பு' கடும் (Dien Bien Phu) என்ற இடத்தில் பிரெஞ்சுகாரர்கள் தோற்கடிக்கப்பட்டனர். 16000க்கும் அதிகமான இராணுவ வீரர்களையும், அதிகாரிகளையும் போர் கைதிகளாக பிடித்துக்கொண்டனர்.

பிரெஞ்சுக்காரர்களின் தோல்விக்கும் பிறகு ஜெனீவாவில் நடைபெற்ற அமைதிப் பேச்சு வார்த்தையில் நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கு வியட்நாம் மக்களை ஒப்புக்கொள்ளச் செய்தனர்.நாடு வடக்கு, தெற்கு பகுதிகளாக இரண்டாக உருவானது. ஹோ சி மின் மற்றும் கம்யூனிஸ்டுகள் வடக்குப்பகுதிகள் ஆட்சிக்கு வந்தனர். தென் பகுதிக்குப் பழைய பேரரசரை தலைமைப்பொறுப்பில் நியமித்தனர். ஆனால், அவர் உடனடியாகத் தூக்கி எறியப்பட்டு 'என் கோ டின் டீம்', ஆட்சியைக் கைப்பற்றினார்.

இதைப் போன்ற நிலச்சீர்த்திருத்தங்கள் வியட்நாம் சமுதாயத்தின் மீது எதைப்போன்ற தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கும்? கிராமப் பகுதிகளிலுள்ள வெவ்வேறு சமுதாய குழுக்களை கருத்தில் கொண்டு கலந்துரையாடுங்கள்

சீனா, வியட்நாம், இந்திய நாடுகளில் நடந்த நிலச்சீர்த்திருத்தங்களைப் பற்றி எழுதுக.

அவர் அடக்குமுறை, சர்வாதிகார அரசாங்கத்தை ஏற்படுத்தினார். அவரை எதிர்த்த அனைவரையும் சிறையில் அடைத்தார். அவரின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக தேசிய விடுதலை முன்னணி (National Liberation Front) (N.L.F) என்ற பெயரில் பெரும்பாலான எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து போராடத் துவங்கின. வடக்கு வியட்நாமில் இக்காலம் வரை நில குத்தகை குறைப்பதில், பிரெஞ்சு மற்றும் ஜப்பானியர்களுக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்த நிலபிரபுக்களின் நிலங்களை மட்டுமே கைப்பற்றுவதில் ஆர்வம் காட்டப்பட்டதால் நிலச்சீர்திருத்தங்கள் மீது அதிக ஈடுபாடு காட்டவில்லை. ஆனால் 1954 ஆம் ஆண்டுக்குப் பிறகு வடக்கு வியட்நாமில் நிலச்சீர்திருத்தங்களில் ஒரு புதிய யுகம் ஒருவானது நிலபிரபுக்களின் நிலங்களை அரசுடைமையாக்கி, நிலமற்ற விவசாயிகளுக்கும், ஏழை விவசாயிகளுக்கும் பகிர்ந்தளித்தனர். சொந்த நிலம் எனும் பல கால கனவு நினைவானதால் வியட்நாம் விவசாயிகளின் ஆதரவு அவர்களுக்குக் கிடைத்தது.

## போரில் அமெரிக்கா :

வடக்கு வியட்நாமிலுள்ள ஹோ சி மின் அரசு உதவியுடன் நாட்டை ஒருங்கிணைக்க NLF போராடியது. இதைக் கூர்ந்து கவனித்த அமெரிக்கா அச்சமுற்றது. கம்யூனிஸ்டுகள் வலுப்பெற்று வருவதைக் கண்டு வருத்தமுற்ற அமெரிக்கா, தன் படைகளையும் ஆயுதங்களையும் வடக்கு வியட்நாமுக்கு அனுப்பி நேரடியாக தலையிட முடிவுச் செய்தது.

போரில் அமெரிக்கா ஈடுபட்டதால் வியட்நாமியர்களுக்கு பெருஞ்செலவை ஏற்படுத்தியது.



SCERT TELANGANA
Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

### ஏஜென்ட் ஆரஞ்சு : மிக பயங்கர விஷம்

ஏஜென்ட் ஆரஞ்சு என்பது தாவரங்களின் இலைகளை உதிர்த்து, அவற்றைக் கொல்லும் கொடிய விஷமாகும். ஆரஞ்சு வண்ணக் கோடிடப்பட்ட தகர உருளைப்பாத்திரத்தில் இ விஷத்தைத் தேக்கி வைப்பதால் அதற்கு அப்பெயர் வந்தது. 1961–1971 க்கும் இடைப்பட்ட காலத்தில் அமெரிக்காவின் கார்கோ போர் விமானங்கள் வியட்நாம் மீது 500 லட்சம் லிட்டர் அளவிலான இந்த விஷ வேதிப்பொருளை தெளித்தன. காடுகளையும், வயல்களையும் அழிப்பதன் மூலம் மக்கள் ஒளிந்து கொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போகிறது. இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி மக்களை எளிதாகக் கொல்வதே அமெரிக்காவின் திட்டமாகும். நாட்டில் 14 விவசாய நிலங்கள் இந்த வேதிப்பொருள் தெளிப்பால் பாதிக்கப்பட்டன. இந்த வேதிப் பொருளின் பாதிப்பு மிகக்கடுமையாகக் காணப்பட்டது. இன்னும் மக்களிடையே இந்த பாதிப்பு தொடர்ந்து நீடிக்கின்றது. ஏஜென்ட் ஆரஞ்சுலுள்ள வேதிப்பொருளான டைஆக்ஸின், குழந்தைகளின் மூளை பாதிப்பிற்கும், புற்று நோய் வருவதற்கும் காரணமாகிறது. இந்த விஷப்பொருள் தெளிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள குழந்தைகளில் உடல் ஊனம் அதிக அளவில் உள்ளதை ஒரு ஆய்வு தெளிவுப்படுத்துகின்றது.

இரசாயன ஆயுதங்களுடன் சேர்த்து, அமெரிக்கத் தலையீட்டின. பகுதியாக (குறிப்பாக குடிமக்களை இலக்காக வைத்து) வியட்நாம் மீது வீசிய வெடி குண்டுகளின் மொத்த பளு, இரண்டாவது உலகப்போரின் போது பயன்படுத்தியதை விட அதிகமாகும்.

1965 லிருந்து 1972 வரையிலான இடைப்பட்ட காலத்தில் வியட்நாம் போரில் 34,00,000 அமெரிக்க படைவீரர்கள் பங்குப்பெற்றனர். அமெரிக்காவிடம் நவீன தொழில் நுட்ப அறிவு, நல்ல மருத்துவ வசதிகள் இருந்த போதிலும் படைவீரர்களின் இறப்பு மிக அதிகமாகவே இருந்தது. இப்போர் காலத்தில் மொத்தம் 47,244 படைவீரர்கள் இறந்தனர். 3,03,704 பேர் காயமுற்றனர்.(இவ்வாறு காயமுற்றவர்களில் 23,014 பேர் 100 சதம் உடல் ஊனமுற்றவர்கள் என வெடரன்ஸ் நிர்வாகம் அறிவித்தது

அமெரிக்காவுடன் நடந்த இந்த போர்க்காலம் மிகவும் கொடூரமானது. ஆயிரக்கணக்கான அமெரிக்க போர் வீரர்கள் சக்தி வாய்ந்த ஆயுதங்களுடனும், போர் விமானங்களுடனம் தாக்குதலில் ஈடுபட்டனர். அவர்களுக்கு ஆதாரவாக அக்காலத்தின் சக்தி வாய்ந்த குண்டு வீச்சு விமானங்களான B52 விமானங்கள் இருந்தன. மிகப்பெரிய அளவு பயன்படுத்தில் போன்றவற்றால் போர் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது. நாபாலம் (மனித குலத்தை அழிக்கவல்ல குண்டு, ஏஜென்ட் ஆரஞ்சு (மரம், செடிகளைக் கொன்று நிலத்தை சாரமற்றதாக்கும் விஷம் ) பாஸ்பரஸ் குண்டுகள் போன்றவை இப்போரில் பயன்படுத்தப்பட்டதால் பல கிராமங்களும், காடுகளும் நாசமாயின. அதிக எண்ணிக்கையிலான குடிமக்கள் இறந்தனர்.





*படம் 13. 6 : (அ) காடுகளின் மீது விஷ வேதிப்பொருளைத் தெளிக்கும் அமெரிக்கப் போர் விமானங்கள் (ஆ) இப்படத்தின் உட்கருத்து ஒவ்வொன்றுக்கும் ஒரு பயன் உருளைப்பாத்திரத்தை உருட்டும் சிறுமி இந்த உலோகம், சிறிய தகரப்பெட்டிகளை தயார் செய்வதற்கும் சிறு கரண்டிகளை (spoon)தயார் செய்வதற்கும் பிறகு பயன்படுத்தபட்டது.*



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பதிலடி தருவதற்கும், வீடு, குடும்பங்களைத் தியாகம் செய்ததற்கும், மோசமான சூழ்நிலையில் வாழ்க்கை நடத்துவதற்கும், சுதந்திரத்திற்காக போராடுவதற்கு ஏதுவாக, மக்களுக்கு தேசியப்பற்று தரும் ஊக்கத்தை அமெரிக்கக் கொள்கை திட்டமிடுபவர்கள் குறைத்து மதிப்பிட்டனர். உலகத்திலேயே தொழில்நுட்பத்தில் முன்னேறிய நாடான அமெரிக்காவுடன், போரிடும் சிறிய நாட்டின் சக்தியை அவர்கள் குறைத்து மதிப்பிட்டனர். நிலப்பிரபுக்களின் பிடியில் பல காலங்களாக சுரண்டலுக்கு உள்ளாகி, தற்போது சிறிதளவு நிலத்தைப் பெற்ற லட்சக்கணக்கான ஏழை விவசாயிகளின் பொறுப்புக்களையும் அவர்கள் குறைத்து மதிப்பிட்டனர். தேசிய எண்ணத்துடன் ஈர்க்கப்பட்டு, நிலச்சீர்த்திருத்தங்கள் மூலம் ஊக்கம் பெற்ற ஏழை விவசாயிகள் உலகத்திலேயே பலம் வாய்ந்த இராணுவத்தை தோற்கடிப்பதில் முக்கியப்பங்கு வகித்தனர்.

போரின் தாக்கம் அமெரிக்காவிலும் காணப்பட்டது. தமக்கு தொடர்பில்லாத போரில் அமெரிக்கா தலையிட்டதை பலரும் விமர்சித்தனர். போருக்காக இராணுவத்திற்கு ஆள் சேர்த்ததில் எதிர்ப்பு இன்னும் அதிகமானது. போர் நீண்ட காலம் நீடித்ததால், போரின் மீது அமெரிக்காவில் பலமான எதிர்ப்புத் தோன்றியது. அரசின் வெளியுறவுக் கொள்கைகள் மீது எழுப்பப்பட்ட பரவலான கேள்விகள் போர் முடிவுக்கான பேச்சுவார்த்தைக்கு வலுவூட்டியது. 1974 ஆம் ஆண்டு பாரீஸ் நகரத்தில் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டது. இதன் மூலம் அமெரிக்காவுடனான போர் முடிவுக்கு வந்தது. ஆனால் சைகான் அரசு மற்றும் NLF களுக்கிடையே தொடர்ந்து சண்டை நீடித்தது. 1957ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் நாள், தேசிய விடுதலை முன்னணி (NLF) சைகானிலுள்ள அதிபர் மாளிகையை கைப்பற்றியது. இதன் மூலம் வியட்நாம் ஒருங்கிணைக்கப்பட்டது.

- குடிமக்கள் மீதும், காடுகளின் மீதும் நாபாலம், ஏஜெண்ட் ஆரஞ்ச் போன்ற ரசாயன ஆயுதங்களை அமெரிக்கா பயன்படுத்தியதை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா?
- அமெரிக்கா போன்ற பலம் வாய்ந்த நாட்டை வியட்நாம் போன்ற சிறிய நாடு எவ்வாறு எதிர்க்க முடிந்தது?
- வியட்நாமிலிருந்து வெளியேறும் முடிவை அமெரிக்க அரசாங்கம் எடுத்ததில், அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட அமைதி இயக்கத்தின் பங்கு என்ன?

வரைப்படம் 3: நைஜீரியா




### நைஜீரியா குடியேற்ற ஆட்சியாளர்களுக்கு எதிராக ஒன்றுபடுதல்

இப்பொழுது ஆப்பிரிக்காவிலுள்ள குடியேற்ற ஆட்சி, தேசிய சிந்தனைப் பற்றித் தெரிந்துக்கொள்வதற்கு அக்கண்ட மேற்கு கரையிலுள்ள நைஜீரியாவைப் பற்றித் தெரிந்துக்கொள்வோம். இந்நாட்டை வரைப்படத்தில் அடையாளம் காணுங்கள் இந்நாட்டைப்பற்றி 8ஆம் வகுப்பில் நீங்கள் கற்றதை நினைவில் கொள்ளுங்கள்.

### பிரிட்டிஷ் குடியேற்ற ஆட்சி மற்றும் நாட்டை உருவாக்குதல் :

உலகத்திலுள்ள மற்றப் பகுதிகளைப் போலவே, ஆப்பிரிக்காவிலும், நாட்டரசுகள் என்னும் சிந்தனை புதுமையானது. பழங்குடிகள் இருப்பிட அடையாளம் சாதாரண மக்களை ஒன்றிணைத்தது. குடியேற்ற ஆட்சியாளர்கள் சர்வாதிகாரப் போக்கில் சில பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். தற்போது நைஜீரியா என்று நாம் அறியும் நாடு பிரிட்டிஷ்காரர்கள் ஏற்படுத்தியதே. நைஜர் நதி முனையின் கீழ் பகுதிகளை ஒன்று சேர்த்ததன் மூலம் இந்நாட்டை உருவாக்கினர். வடக்கு நைஜீரியாவில் ஹௌசா-புலானி மக்கள் அதிக அளவில் வசித்து வந்தனர்.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

நைஜீரியாவின் தென்கிழக்குப் பகுதியில் ஈபோ பழங்குடியினரும் தென்மேற்குப் பகுதியில் யொருபா பழங்குடியினரும் அதிக அளவில் வசிக்கின்றனர். பல ஆண்டுகால கிறுஸ்துவ மதப் பிரச்சாரத்தின் காரணமாக, தென் பகுதிகளில் மலைவாழ் மக்களுக்கான மத நம்பிக்கை உள்ளவர்களும் அதிகமாகவே உள்ளனர். இந்த மூன்று பகுதி மக்களிடையேயான மோதல்களும், பொதுவான மக்களாட்சி அரசியல் முறை ஏற்படுத்த வேண்டும் என்ற முயற்சிகளுமே நவீன நைஜீரியா-வின் கதையாக உள்ளது. அந்நாட்டின் இயற்கை வளங்கள் மீதும், குறிப்பாக பெட்ரோலியப் பொருட்களின் மீது குடியேற்ற ஆட்சியின் தாக்குதல் தொடர்ந்து நிகழ்ந்த வண்ணம் உள்ளது.

ஆப்பிரிக்காவில் அதிக மக்கள் அடர்த்தி உள்ள நாடுகளில் நைஜர் நதிப்பகுதியும் ஒன்று. இது குடியேற்ற ஆட்சியின் பல வகையான சுரண்டலுக்கு ஆளானது. 16வது நூற்றாண்டிலிருந்து ஆப்பிரிக்காவின் உட்பகுதிகளிலிருந்து மலைவாழ் மக்களாக இருந்த விவசாயிகளால் அடிமைகள் வியாபரம் தடை செய்யப்பட்டதால், இப்பகுதியின் விவசாயப் பொருட்களான குறிப்பாக பாமாயில், கோகா போன்றப் பொருட்களின் மீதான வியாபாரம் செய்ய ஆர்வம் ஏற்பட்டது. 1961ஆம் ஆண்டில் பிரிட்டிஷ், நைஜீரியா கரையோரப்பகுதிகளில் தங்கள் ஆட்சியை நிலை நிறுவியது. மேற்கு ஆப்பரிக்காவிலுள்ள லாகோஸ்-ஐ கல்வி, வியாபாரம், அரசு நிர்வாகம் போன்றவற்றிற்கான மையமாக உருவாக்கப்பட்டது. அது குடியேற்ற ஆட்சியின் எதிர்ப்புக்கும், நைஜீரிய தேசிய உணர்வுக்கும், ஆப்பிரிக்கா வாதத்திற்கும் கூட மையமாக உருவானது.

19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20-ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும் பிரிட்டிஷ் குடியேற்றப் பேரரசில் இனப்பற்று மீண்டும் எழுந்தது. கல்வியறிவு பெற்ற ஆப்பிரிக்ககாரர்களுக்கு அரசு வாய்ப்பு வழங்கப்படவில்லை, ஆப்பிரிக்க வியாபாரிகளிடம் பாரபட்சம் காட்டப்பட்டது. ஆனால் அதே சமயத்தில் குடியேற்ற ஆட்சி, மக்களை மேலும் கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக, மலைவாழ் மக்களின் தலைவர்கள் மற்றும் உயர் குடியினருக்கு அதிகச்சலுவைகள் தந்தது. குடியேற்ற ஆட்சியாளர்களின் கொள்கையால், தெற்குப் பகுதியில் நவீனக்கல்வி, நிர்வாகப்புதுமைக்கு ஊக்கம் கிடைத்தது. ஆனால் வடக்குப் பகுதியில் பழைய மரபுகள் தொடர்ந்து நீடித்த வண்ணம் இருந்தது. அதன் விளைவாக, 20ஆம் நூற்றாண்டின் இறுதிவாக்கில் வட்டார சமத்துவமின்மை அதிகமானது. வடப்பகுதி நவீனக்கல்வி பெற்ற சமுதாயப் பிரிவை பெற முடியாமல் போனது. 1939ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மேற்கு, கிழக்கு நைஜீரியா பகுதிகளை ஏற்படுத்தி, யொருபா, ஈபு என்னும் இனங் களுக்கு கொள்கைக்கிணங்க மூன்று முக்கிய மலைவாழ் மக்களிடையே போட்டி, மற்றும் எதிர்ப்புக்களை ஊக்கப்படுத்தினர்.

இதை எதிர்த்து மேற்கத்திய கல்வி பெற்ற சில அறிஞர்கள் ஒருங்கிணைந்த நைஜீரியா என்னும் எண்ணத்தை உண்டாக்கி, பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினர். நைஜீரியாவில் முதல் அரசியல் கட்சியான நைஜீரியா தேசிய ஜனநாயகக் கட்சியை (Nigerian National Democratic Party) 1923ல் ஹெர்பர்ட் மெக்காலே நிறுவினார். 1923, 1928, 1933ஆம் ஆண்டு தேர்தல்களில் NNDP எல்லா இடங்களையும் கைப்பற்றியது. 1930 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் குடியேற்ற ஆட்சியின் மீது நிகழ்ந்த தீவிரவாத தாக்குதல்களை இவர் ஆதரித்தர்.

**ஆப்பிரிக்கவாதம்**

நாடு அல்லது மலைவாழ் மக்கள் என்ற வேறுபாடின்றி அனைத்து மக்களிடையேயும் ஒற்றுமையை மேம்படுத்தும் சிந்தனையே ஆப்பிரிக்காவாதமாகும். இந்த ஒற்றுமையுடன் குடியேற்ற ஆட்சி, இன வேறுபாடுகளை எதிர்ப்பது மட்டுமின்றி, சமத்துவம் சமூக நீதி, மனித மாண்பு என்னும் விதிகளின் அடிப்படையில் ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள எல்லா மலைவாழ் மக்கள், மற்றும் சமுதாயத்தினர் இடையே ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சிக்கின்றது. கானா நாட்டு சுதந்திரப் போராட்ட வீரர் கிவாம் நிக்ருமா இவற்றில் முக்கியப் பங்கு வகித்தனர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

1936ஆம் ஆண்டில் நம்டி அஜிகிவ் என்பவர் நைஜீரியா இளைஞர் இயக்கத்தைத் (NYM) தோற்றுவித்தார். கலாச்சாரப் பின்னணியுடன் தொடர்பின்றி, அனைத்த நைஜீரியா மக்களையும் கவர்ந்தது. மிகக் குறுகிய காலத்திலேயே அது வலுவான அரசியல் இயக்கமாக உருவெடுத்தது. 1944ஆம் ஆண்டில் மெகாலே மற்றும் (NYM) தலைவரான நம்டி அஜிகிவ் ஆகிய இருவரும் சேர்ந்து நைஜீயா மற்றும் கேமரூன்களின் தேசிய சங்கத்தை (Natinal council of Nigeria and the cameroons) உருவாக்க ஒப்புக்கொண்டனர். நைஜீரியா தேசிய தலைவராக வளர்ச்சிப்பெற்ற நம்டி அஜிகிவ் ஆப்பரிக்க மற்றும் நைஜீரிய ஒற்றுமையை ஆதரித்தார்.



படம்-13.7 நம்டி அஜிகிவ்

இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு நைஜீரியப் பொருளாதாரம் மோசமடைந்ததைத் தொடர்ந்து, நைஜீரியா தேசியம் தீவிரவாத எண்ணங்களாக உருவவெடுத்து மக்கடளின் ஆதரவைப் பெற்று வலுவான நிலையில் இருந்தது. இரண்டாவது உலகப்போரில் பிரிட்டன் சார்பில் போரிட்டுத் திரும்பிய இராணவத்தினர். தொழிலாளர் சங்கத் தலைவர்கள் இந்த போராட்டத்தின் முதுகெலும்பாக இருந்தனர். 1945 ஆம் ஆண்டில், தீவிர தேசிய சிந்தனையுள்ள தொழிலாளர் சங்க தலைவர்கள் தலைமையில் தேசிய பொது முழு அடைப்பு நடத்தப்பட்டது.

நைஜீரிய தேசிய எண்ணத்தின் முன்பு இரண்டு கடமைகள் இருந்தன. பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடுதல், மோதலில் ஈடுபட்டுள்ள வெவ்வேறு மலைவாழ் மக்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துதல் போன்றவையாகும். வடப்பகுதியை விட நன்றாக முன்னேற்றம் அடைந்த தெற்குப்பகுதியில் தேசியப் போராட்டம் வலுவான நிலையில் இருந்ததால் வடக்கு, தெற்கு பகுதிகளுக்கு இடையில் வேறுபாடுகள் உண்டானது. தெற்குப் பகுதியிலும் யோரோபு, ஈபு மலைவாழ் மக்களிடையே நிகழ்ந்த மோதல்களால் தேசியம் போராட்டம் வலுவிழந்த நிலையில் இருந்தது. 1950ஆம் ஆண்டின் இறுதியில் இந்த மூன்று பகுதிகளிலும் மூன்ற வட்டாரக்கட்சிகள் தோன்றின. வடக்குப் பகுதியில் சம்பிரதாய எண்ணங்களுடன் கூடிய வடக்கு மக்கள் காங்கிரஸ் (Northern people) கட்சியும் கிழக்குப் பகுதியில் நைஜீரியா கெமரூன்களின் தேசிய சங்கம் (National council for Nigeria and the cameroons) என்னும் கட்சியும், மேற்குப் பகுதியில் நடவடிக்கை குழு என்ற கட்சியும் தோன்றின.

- தேசியத்திற்கு ஆப்பிரிக்க ஒற்றுமை எண்ணத்திற்கும் (Pan Africa) இடையேயான வேற்றுமைகளைக் கலந்துரையாடுகள் தேசியத் சிந்தனை என்பது குறியது என நீங்கள் நினைக்கின்றீர்களா?
- ஒரு நூற்றாண்டு கால குடியேற்ற ஆட்சியின் காரணமாக வட்டாரங்களுக்கு இடையில் சமத்துவ மின்மைத் தோன்றியது. இந்தியாவிலும் பிரிட்டிஷ் ஆட்சியில் கடலோரப் பகுதிகளான வங்காளம், சென்னை, பம்பாய் போன்றவை வேகமாக வளர்ச்சிப்பெற்றன. வளர்ச்சியில் இதுபோன்ற சமத்துவமின்மை எதனால் ஏற்படுகின்றது?

## சுதந்திரம் மற்றும் வலுவற்ற மக்களாட்சி

தேசியப் போராட்டத்தின் தீவிர வடிவத்தை உணர்ந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள், நைஜீரியர்களுக்கு அதிகாரத்தை ஒப்படைக்க முடிவு செய்தனர். இதற்காக முப்பெரும் பகுதிகளின் சுயாட்சிக்கு வழி வகுக்கும் கூட்டாட்சி முறையை ஏற்படுத்தினர். 1963 ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் நாள் நைஜீரியா சுதந்திரம் அடைந்தது. துரதிஷ்டவசமாக மக்களாட்சி சமத்துவம் அடைய முடியாதக்காரணத்தில் குறுகிய காலத்திலேயே நைஜீரியாவில் உள்நாட்டுப் போர் (Civil War) ஏற்பட்டது. வடப்பகுதியின் ஆதிக்கம் தொடர்ந்தவண்ணம் இருந்தது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

குடிமக்கள் மற்றும் மக்களாட்சி அரசுகளை ஏற்படுத்துவதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இவை தோல்வியில் முடிந்தன. இராணுவ ஆட்சியில் ஊழல், மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தன. ஊழல் ஆட்சியாளர்களுக்கு நிதியுதவி தரும் பன்னாட்டு எண்ணெய் நிறுவனங்கள், இராணுவ ஆட்சியாளர்கள் ஒத்துழைப்பு இருந்தது.

நீண்ட இராணுவ சர்வாதிகார ஆட்சிக்குப்பிறகு, 1999ல் நைஜீரியா மக்களாட்சி அரசைத் தேர்ந்தெடுத்து மக்களாட்சி நைஜீரியாவை தொடர்வதில் அந்நாடு எதிர்கொள்ளும் சவால்களை பொறுத்திருந்துப் பார்க்க வேண்டும்.



படம் : 13.8 பைபாரியன் போர்

## எண்ணெய், சுற்றுப்புற சூழல், அரசியல்

நைஜர் டெல்டாவில் 1950களில் எண்ணெய் வளத்தைக் கண்டுபிடித்தனர். இந்த எண்ணெயை வெளிக்கொண்டு வரும் உரிமையை டச் ஷெல் கம்பெனி தலைமையிலான பல பன்னாட்டு நிறுவனங்கள் பெற்றன. தற்போது இது நைஜீரியாவின் முக்கிய இயற்கை வளமாகும். எண்ணெய் கிணறுகளில் பல, பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. இவை எண்ணெயை வெளியில் எடுப்பதன் மூலம் கிடைக்கும் இலாபத்தில் சிறு சதவீதத்தை இராணுவ ஆட்சியாளர்களுக்கும் பகிர்ந்தளித்தன. சாதாரண மக்களுக்கு இதனால் எந்தவிதப் பயனும் ஏற்படவில்லை. அது மட்டுமின்றி வெளிநாட்டு எண்ணெய் நிறுவனங்கள், சுற்றுப்புறசூழலைக் கணக்கில் கொள்ளாமல், தான்தோன்றித் தனமாக எண்ணெயை வெளியில் எடுப்பதால் கடலோரப்பகுதியின் சுற்றுப்புச் சூழலில் பலப்பிரச்சினைகள் ஏற்பட்டன. எண்ணெய்க் கிணறுகளிலிருந்து கடல்களில் கலக்கும் எண்ணெயால் அங்குள்ள வாழ்வாதார முறை மோசமான நிலைக்குதள்ளப்பட்டது. குறிப்பாக சதுப்பு நிலக்காடுகள் எண்ணெயால் எளிதில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடியவையாகும். இந்த எண்ணெய் நிலங்களில் ஊறி, வெள்ளம் வரும் போது மீண்டும் நீரில் மிதப்பதால் பரந்த அளவிலிருந்து சதுப்பு நிலக்காடுகள் அழிவுற்றன. நைஜிரியாவிலுள்ள சதுப்பு நிலக்காடுகளின் வாழ்வாதார முறையில் 5.10 சதவீதம் வெட்டப்படுவதாலும், எண்ணெய் ஊற்றுக்களாலும், அழிந்தன என்பதை ஆய்வுகள் கூறுகின்றன. இந்த எண்ணெயால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு, பயிர்கள், மீன் வளர்ப்பு போன்றவை கடுமையாக பாதிக்கப்பட்டன. குடிநீர் கூட அடிக்கடி மாசடைந்தது. உள்ளூர் நீர் நிலைகளில் எண்ணெய் மிதப்பதைக் காண முடிகிறது. நாளடைவில் இது புற்றுநோய் வர காரணமாக அமைந்தது கடல் நீரில் எண்ணெய் ஊற்றுகள் அதிகமாக இருப்பதால், கடலோரப் பகுதிகள் மாசடைந்து மீன் வளர்ப்பு பாதிக்கப்பட்டது.



படம் 13.9 எண்ணெயால் மாசடைந்த நீர் நிலைகள்



படம் 13.10 கென் சாரோ விவா

1990ஆம் ஆண்டில் குறிப்பாக நைஜர் டெல்டாப்பகுதியில் மக்களின் போராட்டம் படிப்படியாகத் தொடர்ந்தது. உள்ளூர் மலைவாழ் மக்கள், பல ஆண்டுகளாக நிகழ்ந்த வாழ்வாதார இழப்பிற்கு நஷ்ட ஈடு செலுத்த வேண்டும் எனவும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

தம் பகுதியிலுள்ள எண்ணெய் வளங்கள் தம் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும் எனவும் போராடினார்.

- நைஜீரியாவிலுள்ள எண்ணெய் வளங்களில் அதிகளவு தென்கிழக்குப் பகுதியில் உள்ளது. எண்ணெயால் கிடைக்கும் இலாபத்தில் பெரும் பகுதி தமக்குக் கிடைக்க வேண்டும் என்று ஈபுறு மக்கள் நினைத்தனர். எண்ணெய் வளத்தால் கிடைக்கும் லாபத்தில் வடக்குப் பகுதியை முன்னேற்றம் அடையச் செய்ய அவர்கள் எதிர்க்கின்றனர். இப்பிரச்சனைக்கு சரியான, நியாயமான தீர்வு என்ன?

இப்போராட்டம் முதலில் இன அடிப்படையில் உறுப்பினர்களை ஒற்றுமைப்படுத்தி அமைதியாக நடந்தது. பிரபல மனித உரிமை மற்றும் சுற்றுப்புறச் சூழல் ஆர்வலர் கென் சாரோ விவா வை சர்வதேச எதிர்ப்புகளுக்கிடையில் 1990ஆம் ஆண்டு, இராணுவ அரசாங்கம் மரண தண்டனை அளித்ததால் பிரச்சினை தீவிரமானது.

ஒரு நாடாக உருவாகுவதற்கும், நிலையான மக்களாட்சி முறையை நிறுவுவதற்கும், தன் இயற்கை வளங்கள் மீது கட்டுப்பாட்டை பெறுவதற்கும், நைஜீரியா தொடர்ந்து முயற்சிகள் செய்த வண்ணம் உள்ளது.

## முக்கிய சொற்கள்

நிலச்சீர்திருத்தம், நிலபிரபுக்கள் முறை, புதிய மக்களாட்சி, கட்டாயப்படுத்தி வேலை வாங்குதல் ரசாயண ஆயுதங்கள் பலவீன மக்களாட்சி ஆப்பிரிக்கா ஒற்றுமை

## உனது கற்றலை மேம்படுத்துக

1. பொருத்துக(AS1)
   - o சன்யாட்-சென் — நாட்டை இராணுவ ஆட்சியாக மாற்றினார்
   - o சீயாங்கசோ ஷேக் — சுற்றுப்புற சூழல் இயக்கம்
   - o மாவோ ஜெடாங்க் — தேசியம், மக்களாட்சி, பொதுவுடமை
   - o கென் சாரோ விவா — விவசாயப் புரட்சி
2. பல பத்தாண்டு காலங்களில் சீனாவில் பெண்களின் பங்கில் வந்த மாற்றங்களை எழுதுங்கள் ரஷ்யா, ஜெர்மனி நாடுகளில் நிகழ்ந்த மாற்றங்களுக்கும், இவற்றுக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை எழுதுக.(AS1)
3. முடியாட்சி கவிழ்க்கப்பட்ட பிறகு, இரண்டு வகையான ஆட்சிகள் ஏற்பட்டன. இவற்றுக்கிடையே இருந்த ஒற்றுமை மற்றும் வேற்றுமைகள் என்ன?(AS1)
4. இப்பாடத்தில் நாம் அறிந்த நாடுகள் அனைத்தும் விவசாயத்தின் மீது ஆதாரப்பட்டவையே. இம்முறைகளை மாற்ற இந்நாடுகளில் என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன?(AS1)
5. மேலே குறிப்பிட்ட நாடுகளில் தொழிற்சாலைகள் யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றன? இம்முறைகளை மாற்றுவதற்கு என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன? இவற்றை ஒப்பிட ஒரு பட்டியலைத் தயாரிக்கவும்.(AS1)
6. இந்தியா மற்றும் நைஜீரியா நாடுகளின் தேசியப் போராட்டங்களை ஒப்பிடவும் இந்தியாவில் இப்போராட்டம் ஏன் வலுவான நிலையில் இருந்தது?(AS1)
7. சுதந்திர நைஜீரியா நாடு எதிர்கொண்ட சவால்கள் என்ன? சுதந்திர இந்தியா எதிர்கொண்ட சவால்களோடு ஒப்பிட்டு, ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை எழுதுக.(AS1)
8. இந்தியா, வியட்நாமைப்போல சுதந்திரம் பெற அதிகளவு போராட வேண்டிய நிலைமை இல்லை. இதற்கு சில காரணங்களைக் கூறுக.(AS1)
9. இப்பாடத்தில் நாம் படித்தறிந்த நாடுகளின் தேசியப் போராட்டத்தில் பள்ளிக்கல்வியின் பங்கு என்ன?(AS1)
10. இந்நாடுகளின் சுதந்திரப் போராட்டங்களில் ஆட்சியாளர்கள் மீது போர் புரிய நேரிட்டது. அவற்றின் விளைவுகளை சுருக்கமாக விவரி.(AS1)
11. பக்கம் 193ல் கொடுக்கப்பட்டுள்ள "நாகரீகப் பணி" என்னும் தலைப்பின் கீழுள்ள பத்தியில் முதல் ஐந்து வரிகளை படித்து அக்கருத்தை ஏற்றுக்கொள்கிறாயா? ஏன்?(AS2)



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்
14

# இந்தியாவில் தேசிய இயக்கம் - பிரிவினை மற்றும் சுதந்திரம் 1939-1947

இப்போது நாம் தேசிய இயக்கத்தின் இறுதிக்கட்டத்தை நோக்குவோம். இதன் மூலம் நாட்டுப் பிரிவினைக்கான சூழலை அறிய முயற்சிப்போம். இக்காலம் அனைவராலும் அறியப்பட்ட காரணத்தால், சிக்கலான கேள்விகளை எதிர்கொண்ட நாட்டு மக்கள், சிக்கலான பதில்களையே ஏற்கவேண்டியதாயிற்று.

## இந்தியர்களால் போர் ஆதரிக்கப்பட வேண்டுமா? 1939-42

நீங்கள் இரண்டாம் உலகப்போரைப் பற்றி ஏற்கனவே படித்தறிந்தீர்கள். 1939 ஆம் ஆண்டு போர் துவங்கிய காலத்தில் இந்தியாவின் பல மாகாணங்கள் காங்கிரஸ் அமைச்சரவையால் ஆளப்பட்டு வந்தன. தங்களைத் தாங்களே ஆளக்கூடிய உரிமையை, கூடுமானவரை இந்தியர்களுக்குத் தரவேண்டும் என்ற கொள்கையை ஆங்கில அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. 1935 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தை (The Government of India Act) பிரிட்டீஷ் நாடாளுமன்றம் நிறைவேற்றியது. இச்சட்டத்தின் படி இந்திய மாகாணங்களில் தேர்தல்கள் நடத்தப்படும். தேர்தல்களில் வெற்றி பெறும் கட்சிகள் ஆட்சியை அமைக்கலாம். ஆனால் வாக்களிக்கும் உரிமை (Right to vote) மக்கள் தொகையில், குறிப்பிட்ட தரப்பினருக்கே அளிக்கப்பட்டது. வாக்குரிமை சதவீதம் சட்டமன்றங்களில் 12% மற்றும் மத்திய சட்டமன்றத்தில் 1% மாகவும் இருந்தது. 1937 ஆம் ஆண்டு பிரிட்டீஷ் இந்தியாவில் 11 மாகாணங்களுக்காக நடைபெற்றத்தேர்தலில் பெரும்பாலானவற்றில் காங்கிரஸ் வெற்றியை ஈட்டியது. மொத்தமுள்ள 11 மாகாணங்களில், 8 மாகாணங்கள் காங்கிரஸ் பிரதம மந்திரிகளைப் பெற்றிருந்தன. ஆங்கிலேய கவர்னரின் மேற்பார்வையில் இப்பிரதமர்கள் பணி புரிந்தனர்.

காங்கிரஸ் தலைவர்களுக்கிடையே ஒரு சிக்கலானக் கேள்வி எழுந்தது. ஜெர்மெனி, ஜப்பான், இத்தாலி போன்ற நாடுகளை எதிர்த்துப் போரிடுகின்ற இங்கிலாந்து நாட்டுக்கு உதவிபுரிய வேண்டுமா என்பதே அக்கேள்வி. போரில் இந்தியாவை பங்குபெறச் செய்வது என்ற இங்கிலாந்து நாட்டின் முடிவு காங்கிரஸ் தலைவர்களைக் கலந்து ஆலோசிக்காமல் எடுக்கப்பட்டதாகும்.

- 1935 ஆம் ஆண்டு சட்டப்படி (1935 Act) இந்தியர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்காக இந்தியர்கள் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் என நீங்கள் நினைக்கின்றீர்களா?
- ஹிட்லரின் வரவு, மனித குல சுதந்திரத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கியதால், இந்தியர்கள் சுதந்திரப் போராட்டத்தைக் கைவிட்டு, சுதந்திர உலகத்திற்காக போராடியிருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?
- உங்கள் கருத்துப்படி, இரண்டாம் உலகப்போரில் பிரிட்டிஷ் நாட்டை ஆதரிப்பதற்கான அல்லது எதிர்ப்பதற்கான காரணங்கள் என்னவாக இருக்க வேண்டும்?

இப்பிரச்சினையில் முடிவெடுக்க முடியாமல் காங்கிரஸ் திணறியது. பெரும்பாலான காங்கிரஸ் தலைவர்கள் ஹிட்லர், முசோலினி போன்றோரின் பாசிசக் கொள்கைக்கு எதிரானவர்கள். இறையாண்மை பெற்ற பிற நாடுகளை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற பாசிசக்கொள்கைக்கு இவர்கள் எதிரானவர்கள். போரில் இந்தியா தங்களை ஆதரிக்க வேண்டும் என்றும், அதே வேளையில் இந்தியாவுக்கு முழு சுதந்திரம் அளிப்பதற்கான உறுதியையும் தராத பிரிட்டீஷ் நாடு தங்கள் இரட்டை வேடத்தில் உணர வேண்டும் என்று காங்கிரஸ் எதிர்பார்த்தது.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**ஹிட்லருக்கு காந்தி எழுதிய கடிதம்**

திரு ஹிட்லர்
பெர்-ன்
ஜெர்மனி
அன்பான நண்பனுக்கு,

எனது நண்பர்கள் மனித குலத்தை காப்பதற்காக கடிதம் எழுத வ-யுறுத்தினார்கள்.ஆனால் நான் மறுத்துவிட்டேன். காரணம் என்னுடைய செயல் மதிக்கத்தக்கதாக இருக்க வேண்டும். தற்போதய உலகை காக்கவும் போரை நிறுத்தவும் உங்களால் மட்டுமே முடியும். உங்களுடைய ஒவ்வொரு நடவடிக்கைக்கும் பின்விளைவு ஒன்று உண்டு. என்னுடைய கோரிக்கைக்கு செவி மடுப்பீர்களா? போரினால் நிலையான வெற்றியை பெற முடியுமா? இக்கடிதத்தில் நான் ஏதேனும் தவறு செய்திருந்தால் என்னை மன்னிக்கவும்.

இப்படிக்கு
*M. K. GANDHI*

**Source:** The Collected Works of Mahatma Gandhi, Vol. 76 : 31 May, 1939 - 15 October, 1939.

இங்கிலாந்து இதை உணர்ந்த போதிலும், தாங்கள் கட்டிக்காத்த பேரரசு சிதைந்துவிடும் என்ற பயம் அதற்கு இருந்தது. இங்கிலாந்தில் பல அரசியல் கட்சிகள் இருந்தன. போரின் போது இங்கிலாந்தில், கன்சர்வேடிவ் கட்சியைச்சேர்ந்த வின்ஸ்டன் சர்ச்சில் தலைமையில் அனைத்துக்கட்சி அரசு, ஆட்சியில் இருந்தது. இங்கிலாந்து பேரரசு, சிதைந்து விடாமல் அதை அப்படியே கட்டிக் காக்கவேண்டும் என்று கன்சர்வேடிவ் கட்சியினர் விரும்பினர். இதற்கு மாறாக தொழிலாளர் கட்சி, இந்தியா சுதந்திரம் பெற உதவ முன்வந்தது.

போருக்குப் பிறகு, இங்கிலாந்து நாட்டுக்கு கட்டுப்பட்டு ஆட்சி நடத்தக் கூடிய அறைகுறையான சுதந்திரத்தை இந்தியாவுக்குக் கொடுக்க இங்கிலாந்து முன் வந்தது. ஆனால் காங்கிரஸ் கட்சி முழுச் சுதந்திரத்திற்கான உறுதியை எதிர்பார்த்தது. மத்திய அளவில் தேசிய அரசாங்கம் ஒன்று உடனடியாக நிறுவப்படவேண்டும் என்று காங்கிரஸ் கட்சி கோரியது. ஆனால், இந்தியாவில் வாழும் பலதரப்பட்ட மக்களின் நலன்களையும் காப்பாற்றப்பட வேண்டும் என்று கூறி இங்கிலாந்து அரசாங்கம் இக்கோரிக்கையை எதிர்த்தது. இக்கூற்றின் மூலம் காங்கிரஸ் கட்சியும், முஸ்லீம்களைப் போலவே அனைத்துத் தரப்பினருக்கும் பிரதிநித்துவம் தரவில்லை என இங்கிலாந்து நம்பியது. மேலும் அது, காங்கிரஸ் பெரும்பாலான இந்தியர்களின் நலனில் அக்கறைக் கொள்ளவில்லை, அந்நலன்களைக் காப்பது தன் கடமையாக கருதியது.

இக்கடின முடிவால் காங்கிரஸ் கட்சி ஏமாற்றம் அடைந்துது. இதன் எதிரொளியாக மாகாண அரசாங்கத்திலிருந்து வெளியேற நினைத்தது. 1937 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்து காங்கிரஸ் அமைச்சர்கள் 1939 ஆண்டு பதவி விலகினர்.

- இங்கிலாந்தின் நிலையை மாற்ற, காங்கிரஸ் கட்சி வேறு எந்த நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?
- இந்தியர்களின் முழு சுதந்திரத்திற்கு உறுதியளிக்காத இங்கிலாந்து, எவ்வாறு இந்தியர்களின் ஆதரவைப் பெற்றது? இதற்கும் மேலாக 1939 ஆம் ஆண்டு, ஒரே உறுதி மட்டும் கேட்கப்பட்டது. இவற்றை வகுப்பறையில் விவாதிக்கவும்.
- அமைச்சர்கள் பதவி விலகிய போது, நிர்வாகத்தின் அன்றாட செயல்பாடுகளை வழி நடத்தியது யார்?



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

போரின் வெற்றியை மையப்படுத்தி சட்டம் ஒழுங்கை பராமரிக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் தனக்குத்தானே போர் கால சிறப்பு அதிகாரங்களை வழங்கிக்கொண்டது. அரசை எதிர்க்கும் எவரும், விசாரணையின்றி நீண்ட காலம் சிறையிலடைக்கும் அதிகாரம் இச்சட்டம் வழங்கியது. பேச்சுச் சுதந்திரம் தடை செய்யப்பட்டது. 1940 மற்றும் 1941 ஆம் ஆண்டுகளில் காங்கிரஸ் முழுச்சுதந்திரத்தை வலியுறுத்தி பல்வேறு சத்தியாகிரகப் போராட்டங்களை நடத்தியது. ஆனால் மக்கள் பங்கு கொண்ட மிகப் பெரிய இயக்கம் எதுவும், முழுச் சுதந்திரத்தை வலியுறுத்தி நடத்தப்படவில்லை.

- இக்காலத்தில் காங்கிரஸ் தலைவர்கள் இங்கிலாந்து அரசுக்கு எதிராக செயல்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும் என்று கற்பனை செய்துப் பாருங்கள். இது சுதந்திரத்திற்கான போராட்டத்தை வலிமைப்படுத்தியிருக்குமா?

## நாட்டு மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிப்பது யார்?

ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான இந்திய மக்களின் போராட்டம், ஆங்கிலேயர்களை அச்சப்படுத்தியது. அவர்கள் காங்கிரஸை பழிவாங்கவும், பலவீனப்படுத்தவும் தகுந்த வழிகளை, ஆராய்ந்தனர். ஒட்டு மொத்த நாட்டு மக்களுக்கு பிரதிநிதித்துவம் வகிக்கும் காங்கிரஸ் கட்சியின் உரிமைப் பற்றி ஐயங்களை வெளிப்படுத்தினர். அப்போது அவர்கள் பிரித்தாளும் (Divide and Rule) கொள்கையை கையில் எடுத்தனர்.

இதன் முடிவில், முஸ்லீம் லீக்கின் கொள்கைகளுக்கு ஆங்கிலேயே அரசாங்கம் ஊக்கமும், ஆதரவும் அளித்தது. அதே வேளையில் காங்கிரஸின் முக்கியவத்துவத்தைக் குறைத்தது. இக்காலத்தில் தான் முஸ்லீம் லீக் இயக்கமும், அதன் தலைவர்களான **M.A.**ஜின்னா போன்றவர்களும் மக்கள் அரசியலில் மிகவும் சுறுசுறுப்பானார்கள்.



*படம்14.1 1945ஆம் ஆண்டில் ஐராவதி நதியைக்கடக்கும் ராயல் இந்தியப்படைகள்*



*படம் 14.2 இரண்டாவது உலகப்போரின் போது C-46 விமானங்களுக்கு சுமைகளை சுமந்து வரும் யானைகள்*

## முஸ்லீம் லீக் :

இக்கட்சி 1906 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. 1930 ஆம் ஆண்டுவரை இக்கட்சி, உத்திர பிரதேசத்தின் முஸ்லீம் நிலச்சுவாந்தார்களின் நலன்களை மட்டுமே கருத்தில் கொண்டு செயல்பட்டது. மக்கள் ஆதரவு இக்கட்சிக்கு இல்லை. அனைத்து கவுன்சில்களிலும், முஸ்லீம்கள் மட்டுமே வாக்களிக்கும் தனி இடங்கள் வேண்டும் என இக்கட்சி கோரிக்கை விடுத்தது. பெரும்பான்மையான இடங்களில் இந்துக்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், ஹிந்துக்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வாய்ப்பு உள்ளது எனவும், அரசாங்கத்தில் முஸ்லீம்கள், தங்கள் நலனை பாதுகாப்பது கடினம் எனவும் வாதிட்டனர். ஆனால் சில இடங்கள் ஒதுக்கப்பட்டு, அந்த இடங்களுக்கு ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த முஸ்லீம் மக்கள் வாக்களித்தால், கவுன்சிலுக்கு தேர்ந்தெடுக்கப்படும் முஸ்லீம் உறுப்பினர்கள் முஸ்லீம்கள் நலனில் அக்கறை செலுத்துவார்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இதை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டதால் 1909 ஆம் ஆண்டு தனி வாக்காளர் தொகுதிகள் (Electorates) அமைக்கப்பட்டன. 1937 ஆம் ஆண்டில், மாகாண அரசாங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், நாட்டில் மொத்தமுள்ள 482 முஸ்லீம் இடங்களில், 102 இடங்களைக் கைப்பற்றியது. காங்கிரஸ் கட்சி, தன்னை இந்துக்களுக்கான கட்சியல்ல என்றும், தான் ஒரு தேசிய கட்சி என்று நம்பியதால், முஸ்லீம் இடங்களிலும், காங்கிரஸ் கட்சி போட்டியிட்டது.

1937 ஆம் ஆண்டு, முஸ்லீம் லீக் கட்சி, முஸ்லீம்களுக்கென பதிவான மொத்த வாக்குகளில் 4.4 சதவீத வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது. ஐக்கிய மாகாணங்களான பம்பாய், சென்னை, போன்றவற்றில் வலிமையாகத் திகழ்ந்த முஸ்லீம் லீக், அதற்கடுத்த 10 ஆண்டுகளில் வங்காளம், வடமேற்கு எல்லைப்புற மாகாணம், பஞ்சாப் போன்ற பகுதிகளை இணைத்து உருவாக்கப்பட்ட பாகிஸ்தான் பகுதிகளில் வலிமையற்றதாக விளங்கியது. சிந்து பகுதியிலும் அக்கட்சி ஆட்சி அமைக்க முடியவில்லை. ஆனால் அதற்கடுத்த 10 ஆண்டுகளில் நிலைமை மாறியது. 1946 ஆம் ஆண்டு, மாகாண மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்கு நடைபெற்றத் தேர்தல்களில், அது பெரும்பான்மையான முஸ்லீம் இடங்களைத் தன் வசம் பெற்றது.

1937 மற்றும் 1947 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலங்களில் முஸ்லீம் விழிப்புணர்ச்சிக்கு காரணமாக அமைந்தவை எவை? பல பிரச்சனைகளை சுட்டிக்காட்டிய இக்கட்சி, இப்பிரச்சினைகளுக்கு காங்கிரஸ் கட்சிக்தான் காரணம் என குற்றம் சாட்டியது. எடுத்துக்காட்டாக, ஐக்கிய மாகாணத்தில், முஸ்லீம் லீக்குடன் கூட்டு சேர்ந்து கூட்டணி ஆட்சி அமைக்க காங்கிரஸ் மறுத்துவிட்டது. இந்த மாகாணத்தில் காங்கிரஸ் கட்சி அதிக எண்ணிக்கையிலான இடங்களில் வெற்றி பெற்று இருந்தது. தன் கட்சி உறுப்பினர்களின் முஸ்லீம் லீக்கின் உறுப்பினராவதைக் காங்கிரஸ் கட்சி தடை செய்தது. அதற்கு முன்னதாக காங்கிரஸ் உறுப்பினர்கள் இந்து மகா சபை (Hindu maha sabha) வின் உறுப்பினர்களாக இருந்தனர். ஆனால் இது, முஸ்லீம் மதத்தைச் சேர்ந்த மௌலானா அபுல்கலாம் ஆஜாத் போன்ற காங்கிரஸ் தலைவர்களின் எதிர்ப்பால் 1938 ஆம் ஆண்டியிலிருந்து தடை செய்யப்பட்டது. இதன் மூலம் காங்கிரஸ் கட்சி, இந்துக்களின் கட்சி என்ற தோற்றத்தை முஸ்லீம் லீக் உருவாக்கியது. இக்காரணத்தால் தான் முஸ்லீம் லீக் உடன் இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்கவில்லை என்று கூறியது.

- சிறுபான்மையினரின் நலனில் அக்கறை கொள்வதன் அவசியத்தை விவரி. பெரும்பான்மையினரை மையப்படுத்தி நடத்தப்படும் தேர்தல்கள் சிறுபான்மையினருக்கு உதவ போதுமானதாக இல்லை என ஏன் உணரப்பட்டது?
- தனி வாக்காளர் தொகுதி என்பது சிறுபான்மையினரின் நலன்களைக் காக்கும் ஒரு வழியாகும். இந்நோக்கத்தை நிறைவு செய்ய, வேறு முறைகளையாவது நீங்கள் அடையாளம் காண முடியுமா? எடுத்துக்காட்டாக, கவுன்சிலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முஸ்லீம் அல்லாத உறுப்பினர், முஸ்லீம்கள் தொடர்பான பிரச்சனைகளில், வாக்கெடுப்பு நடக்கும்போது முஸ்லீம்களைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்ற விதிமுறை இருந்தால் இது முஸ்லீம்களுக்கு உதவிகரமாக இருக்குமா? எப்போது அந்த முறை செயல்படும் அல்லது தோல்வியுறும்?

## இந்து மகாசபா மற்றும் ஆர்.எஸ்.எஸ். RSS

இக்காலத்தில் தான் இந்து மகாசபையும், ராஷ்ட்சீய சுயம் சேவக்கும் மக்கள் மத்தியில் வேரூன்ற ஆரம்பித்தன. இந்த அமைப்புகள், வெவ்வேறு சாதி மற்றும் பிரிவுகளாக இருந்த இந்துக்களை ஒருங்கிணைத்து, சமுதாய வாழ்க்கையில் சீர்திருத்தங்களைப் புகுத்தின.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அவை, இந்திய நாடு பெரும்பான்மையாக வசிக்கக்கூடிய இந்துக்களின் நாடு என்ற செய்தியையும் பரப்பியது. இவ்வியக்கங்களின் செயல்பாடுகள் காங்கிரஸ் தலைவர்கள் பலரையும் கவர்ந்தது.

தன் உறுப்பினர்களிடையே மத சார்பின்மையைப் புகுத்த தொடர்பு கொள்ள முயற்சி மேற்கொண்டது. முஸ்லீம் மக்களோடு தொடர்பு கொள்ள முயற்சி மேற்கொண்ட காங்கிரஸ் கட்சி, அவர்களின் அச்சத்தை போக்கியதோடு மட்டுமின்றி, முஸ்லீம் லீக், இந்து மகாசபை, ஆர்.எஸ்.எஸ் போன்ற அமைப்புகள் காங்கிரஸ் கட்சியின் மீது பரப்பிய தவறான செய்திகளைக் களைய முயற்சித்தது. இந்துக்களும், முஸ்லீம்களும் இருவேறு நாடுகளின் மக்கள் அல்ல எனவும், அவர்கள் இந்தியாவின் மக்கள் எனவும் காங்கிரஸ் கட்சி வாதிட்டது. ஆனாலும் இந்து ஆதிக்கத்தால் அச்சமுற்ற முஸ்லீம் லீக்கின் அச்சத்தை ஆர்வத்துடன் கேட்ட ஆங்கிலேய அரசு, முஸ்லீம்களின் பாதுகாப்புகான வழிகளைப் பரிந்துரை செய்தது.

## பாகிஸ்தான் தீர்மானம் :

முஸ்லீம்கள் அதிகமாக வாழக்கூடிய பகுதிகளுக்கு சிறப்பு ஏற்பாடுகளை செய்வதன் தேவையை பலர் உணர்ந்தனர். குறிப்பாக, “சாரே ஜஹா சே அச்சா இந்துஸ்தான் ஹமாரா” என்ற பாடலை எழுதிய, உருது மொழிக்கவிஞரான முகமது இக்பால், 1930 ஆம் ஆண்டு முஸ்லீம் லீக் கட்சியில் நிகழ்த்திய சிறப்புரையில் 66 வட மேற்கு இந்திய முஸ்லீம் மாநிலத்திற்கான தேவையை வலியுறுத்தினார்.

பாகிஸ்தான் அல்லது பாகிஸ்தான் (பஞ்சாப், ஆப்கான், காஷ்மீர், சிந்து, பலுஜிஸ்தான் போன்ற வார்த்தைகளின் முதல் அல்லது இறுதிச் சொற்டகளிலிருந்து எடுக்கப்பட்டது) என்ற பெயரை, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்த, பஞ்சாபைச் சேர்ந்த முஸ்லீம் மாணவரான, சௌதரி ரஹமத் அலி என்பவர் தொகுத்தார். 1933-1935 ஆம் ஆண்டுகளுக்கிடையில் இந்த இளம் மாணவர் வெளியிட்ட துண்டு பிரசுரங்களில் முஸ்லீம்களுக்கான தனி நாட்டின் அவசியத்தை வலியுறுத்தினார். 1930 ஆம் ஆண்டு வரை ரஹமத் அலியின் இந்த கருத்தை முஸ்லீம் லீக் கட்சியும், பிற முஸ்லீம் தலைவர்களும் ஒரு பொருட்டாக மதிக்காமல் இது ஒரு மாணவரின் கனவு என்று உதாசீனப்படுத்தினர்.

**பாகிஸ்தான் அல்லது இந்தியப் பிரிவினையின் முன்னுரை 1940 B.R.அம்பேத்கர்.**

பாகிஸ்தான் என்ற திட்டத்தைக் கையில் எடுக்க வேண்டுமா என்பது கேள்விக்கு அப்பாற்பட்டது. முஸ்லீம்கள் இத்திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவர். பெரும்பான்மையினரான, ஆதிக்கம் செலுத்தக் கூடிய இந்துக்களை, தங்கள் வாரிசாக்கி முஸ்லீம்களை ஆள்வதற்கு ஆங்கிலேயர் ஒப்புதல் தர மாட்டார்கள். இது ஆதிக்க சக்திகளுக்கு முடிவு கட்டுவதாக இருக்கும். ஆனால் இதுவே இன்னொரு ஆதிக்கத்திற்கு துவக்கமாக அமையும்.

ஏற்கனவே நாம் குறிப்பிட்டது போல, இந்து ஆதிக்கம் என்ற முஸ்லீம் லீக்கின் அச்சத்தை காங்கிரஸ் போக்கத்தவறியதும், ஆங்கிலேயரின் பிரித்தாளும் (Divide and Rule) சூழ்ச்சியும், இந்திய அரசியல் காலநிலையை மாற்றியது. 1940 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் நாள், இந்திய துணைக்கண்டத்தில், முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழக்கூடிய பகுதிகளில், முஸ்லீம்களுக்கு தன்னாட்சி வேண்டும் என்ற தீர்மானத்தை முஸ்லீம் லீக் இயற்றியது. இந்த முக்கிய தீர்மானம், பிரிவினை அல்லது பாகிஸ்தான் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் பிற்காலத்தில் இதுவே பாகிஸ்தான் தீர்மானம் என்று அழைக்கப்பட்டது. முஸ்லீம் லீக் எழுப்பிய பல பிரச்சினைகளுக்கு மக்கள் பல மாற்றுத்திட்டங்களை முன் வைத்தனர். பாகிஸ்தான் நாடு என்பது இம்மாற்றுத்திட்டங்களில் ஒன்றாகும். முஸ்லீம்களின் பிரச்சனைகளைத் தீர்க்கப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட போதும், நிறுத்தப்பட்டபோதும் பாகிஸ்தான் கோரிக்கைப் படிப்படியாக பலம் பெற்றது. முஸ்லீம் லீக் தலைவரான ஜின்னாவின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வது காங்கிரஸ் கட்சிக்குக் கடினமாக இருந்தது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

1940-1946 ஆம் ஆண்டுகளுக்கிடையே, முஸ்லீம் லீக், முஸ்லீம் மக்களிடையே தனி நாட்டின் தேவையையும், அதனால் ஏற்படும் நன்மைகளையும் விளக்கிக்கூறியது. விவசாயிகள், இந்து ஜமீந்தார்கள் மற்றும் அதிக வட்டிக்கு கடன் தரும், வட்டி சுரண்டல்காரர்கள் அற்ற நாட்டை நினைத்துப்பார்த்தனர். வர்த்தகர்கள், வியாபாரிகள் மற்றும் வேலை தேடி வரும் இந்துக்கள் ஆகியோரிடமிருந்து போட்டியற்ற நாட்டை நினைத்துப் பார்த்தனர். மிக அதிகமான மதச் சுதந்திரத்தை எதிர்பார்த்தனர். முஸ்லீம் மேதைகள், தாங்கள் விரும்பியவண்ணம் ஆட்சி செய்ய சுதந்திரம் இருக்க வேண்டும் எனவும் மக்கள் எதிர்பார்த்தனர். 1942-45 ஆம் ஆண்டுகளில் பெரும்பாலான காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் இருந்த காலத்தைப் பயன்படுத்திக் கொண்டு, முஸ்லீம் லீக் தன் அடித்தளத்தை வளர்த்துக்கொண்டது.

- முஸ்லீம் லீக்கின் கோரிக்கையில் மக்கள், தங்களுக்கு என்ன நன்மைகள் கிடைக்கும் என கணக்கிட்டனர்? அவர்களுக்கு ஐயங்கள் ஏதாவது இருந்ததா? எந்த வகையான கேள்விகள் அவர்களிடையே இருந்தன? விவரி.

## ஆங்கிலேயரை வெளியேற்ற யாரால் முடியும்?

1941ஆம் ஆண்டுக்குள் தன் நிலப்பகுதியை தென்கிழக்கு ஆசியா வரை பரப்பிய ஜப்பான் நாடு, இந்திய நிலப்பகுதியின் பாதுகாப்புக்கும் அச்சமாக விளங்கியது. ஜப்பானுக்கு எதிரான போரில், ஆங்கிலேயர்கள் இந்தியர்களையும் திணித்தனர். 1942ஆம் ஆண்டின் மழைக்காலத்தில், அப்போதைய இங்கிலாந்து பிரதமராக இருந்த சர்ச்சில், தன் அமைச்சர்களின் ஒருவராக இருந்த சர் ஸ்டெய்போர்டு கிரிப்ஸ் (Sir Stafford) என்பவரை காங்கிரஸ் மற்றும் காந்தியடிகளுடன், சமரசம் செய்துக்கொள்ள அனுப்பியது. பேச்சுவார்த்தை முறிந்து விட்டாலும், ஆங்கிலேய வைஸ்ராய், தன் செயற்குழுவில் இந்தியர் ஒருவர் பாதுகாப்பு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தினார்.

கிரிப்ஸ் குழு தோல்வியுற்றப் பிறகு, காந்தியடிகள் ஆங்கிலேயருக்கு எதிராக மூன்றாவது மிகப்பெரிய இயக்கத்தைத் துவக்க முடிவு செய்தார். வெள்ளையனே வெளியேறு (Quit India Movement) என்று அழைக்கப்படும் இந்த இயக்கம், 1942 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8-ஆம் நாள் துவக்கப்பட்டது. இப்போராட்டத்தின் போது காந்தியடிகள் சிறையில் அடைக்கப்பட்டாலும், முழு அடைப்பு, கடையடைப்பு போன்றவற்றை இளைய தலைவர்கள் முன்னின்று நடத்தினர். பெருமளவிலான இளைஞர்கள், சிறை செல்வதற்காக, தங்கள் கல்லூரி படிப்புகளைப் பாதியிலேயே விட்டுவிட்டனர். ஜெயபிரகாஷ் நாராயணன் போன்ற காங்கிரஸ் கட்சியின் பொதுவுடமை (Socialist Members) உறுப்பினர்கள், திரைமறைவிலிருந்து சுறுசுறுப்பாக செயல்பட்டனர். மேற்கில் சதாரா என்ற மாவட்டத்திலும், கிழக்கில் மெதினிபூர் என்ற மாவட்டத்தில் சுதந்திர அரசாங்கம் (Independent Governments) பிரகடனப்படுத்தப்பட்டன. ஆங்கிலேயர்கள் தங்கள் முழு பலத்தையும் பயன்படுத்தி கலவரத்தை அடக்க முயன்றாலும், கலவரம் அடங்க ஒருவருடக்காலம் பிடித்தது.

அதே வேளையில், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, ஆங்கிலேயரின் போர் முயற்சியை ஆதரிக்க முடிவு செய்தது. அப்போது ரஷ்யாவின் மீதான ராஜிக்களின் தாக்குதல் பற்றிய எச்சரிக்கை வெளியானது. இது உலகளவிலான ஆபத்து என்று உணரப்பட்டதால், இது ஒரு மக்களின் போர் என்றழைக்கப்பட்டது. இதற்கு மாறாக, ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு வெளியேறினால், ஜப்பான் பிரச்சினையை இந்தியா தானாகவே சமாளிக்கும் என்று காந்தியடிகள் கூறினார்.

அக்காலத்தில் அமெரிக்கர்கள் மற்றும் ஐரோப்பியர்கள் ஆகியோருக்கு எதிராக ஜப்பான் ஈட்டிய வெற்றிகள் இந்தியர்கள் மனதில் தனி முத்திரை பதித்தன. முதலாவதாக காலனி நாடுகளை ஏற்படுத்திய ஐரோப்பியர்கள் (European colovialists) விரைவில் தோற்கடிக்கப்படுவது போன்று காணப்பட்டது. இரண்டாவதாக, ஜப்பான் ஒரு ஆசிய நாடு எனபதால், காலனி நாடுகளை ஏற்படுத்திய ஐரோப்பியர்களை எதிர்த்து நிற்கும் என்று நம்பப்பட்டது. இதனால் இந்தியர்கள், தாங்களும் ஆங்கிலேயருக்கு எதிராக போரிட முடியும் என்று உணர்ந்தனர். ஆங்கிலேயரின் இன ஆதிக்கம் என்பது (racist superiority) தகர்க்கப்பட்டது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஆங்கிலேயரின் கடும் நடவடிக்கைகளைக் கண்டு சுபாஷ் சந்திரபோஸ் வெறுப்புற்றார். அவர், இந்தியாவின் சுதந்திரம் அவசரத்தேவை என்றும், ஆங்கில ஆட்சியை அகற்ற நாம் ஜப்பானியரின் உதவியைப் பெறலாம் என்றும் கூறினார். அவர் முதலில் ஜெர்மனி நாட்டுக்கும், பிறகு ஜப்பான் நாட்டுக்கும் ரகசியப் பயணம் மேற்கொண்டார். 1942 ஆம் ஆண்டு இந்திய படை வீரர்களைக் கொண்டு தனி ராணுவத்தை உருவாக்கினார். இந்த படைவீரர்கள் எல்லாம் யார்? துவக்கத்தில் பிரிட்டிஷ் ராணுத்தில் படை வீரர்களாக இருந்த இவர்கள், பர்மா, மலயா போன்ற நாடுகளில் பிரிட்டீஷ் படைகள் தோற்கடிக்கப்பட்டபோது ஜப்பானியர்களால் போர்கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்கள். சுபாஷ் சந்திரபோஸ் அவர்களைக் கொண்டு இந்திய தேசியப்படையை (Indian National Army) உருவாக்கினார். பிறகு, பெண்கள் உள்ளிட்ட பலர் அப்படையில் சேர்ந்தனர். ஆனால் போஸின் திட்டத்தை காந்தியடிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஜப்பானியர்கள் இந்தியாவை அடிமைப்பிடியிலிருந்து மீட்பவர்கள் அல்ல என்று காந்தியடிகள் கூறினார். ஆனால் தான் கண்ட பாதையில் முனைப்புடன் இருந்த சுபாஷ் சந்திர போஸ், இந்தியப் படைகளை முன்னின்று நடத்தினார். இந்தியப்படை வீரர்கள் ஜப்பான் படைகளோடு மூன்று ஆண்டுகள் போர்புரிந்தனர்.



படம் 14.3 : சுபாஷ் சந்திர போஸ்

- சுபாஷ் சந்திரபோஷ், போர்க் கைதிகளைக்கொண்டு தனிப்படை அமைப்பதற்கு ஜப்பானியர்கள் ஏன் அனுமதி அளித்தனர்?
- இந்தியப் படைவீரர்கள் INA வில் ஏன் சேர்ந்தனர்?
- போரில் தோல்வியடைவதற்கும், ஆங்கிலேயரின் கையில் பிடிபடுவதற்கும், இந்திய படைவீரர்கள் ஏன் அச்சமடையவில்லை ?

உண்மையிலேயே அக்காலம் மிகவும் தைரியமான மற்றும் கடினமானக்காலம் ஆகும். ஒரு கட்டத்தில் நேச நாடுகள் போரில் தோல்வியுறுவது போலத்தோன்றியது. ஆனால் நாஜிப்படைகளை எதிர்த்து போரிட்ட ரஷ்யா, ஸ்டாலிங்கிரேடில் ஒரு முக்கிய வெற்றியைப்பெற்றது. நேசப்படைகள் தாம் இழந்த பகுதிகளை மீண்டும் தம் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்து, இரண்டாம் உலகப்போரில் வெற்றிப்பெற்றது. சுபாஷ் சந்திர போசின் INA பிரிட்டிஷ் படையால் தோற்கடிக்கப்பட்டது. இதற்குப் பிறகு சுபாஷ் சந்திரபோஷ் காணாமல் போனாரா அல்லது இறந்து விட்டாரா என்றுத் தெரியவில்லை.

- 1942-45 வரையிலான வரலாற்றைத் மறுபரிசீலனைச் செய். ஆங்கில ஆட்சிக்கு எதிரான இந்திய மக்களின் எதிர்ப்பு இதன் முன்பு இருந்ததை விட 1946ல் பலமாக இருந்தது என்பதை எப்படிக்கூறுவாய்?

1944 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் போர் முடிவுறும் தருணத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் காந்தியடிகளை சிறையிலிருந்து விடுதலை செய்தது. இக்காலம், இந்திய சுதந்திரத்திற்கான இன்னொரு சமரச தீர்வுக்கு வாய்ப்பளித்தது?



SCERT TELANGANA
Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**புகழ்பெற்ற எழுச்சி 1946-48(The Popular Upsurge)**

INA வின் படைவீரர்கள் சிறைபிடிக்கப்பட்டனர். இவர்களைத் தண்டிக்க ஆங்கிலேய அரசு முடிவு செய்தது. வழக்கு விசாரணைக்கு வந்தது. ராணுவத்துரோகிகள் என்று குற்றம் சுமத்தப்பட்ட அவர்களுக்கு தூக்கு தண்டனை அளிக்கப்பட்டது.

INA படை வீரர்களின் நீதிமன்ற தண்டனைகளால் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் அமைதியின்மை, சோகம், அதிருப்தி போன்றவை ஏற்பட்டன. இப்புகழ்பெற்ற எழுச்சியால் ஏற்பட்ட தேசிய விழிப்புணர்வு, இந்து முஸ்லீம் பிரச்சினையை முக்கியத்துவம் இல்லாததாக மாற்றியது. எடுத்துக்காட்டாக, தண்டனை விதிக்கப்பட்ட INA வீரரர்கள் பலர் முஸ்லீம்களாவர். ஆனால் ஆங்கிலேயர் மீது இருந்த கோபமும், படைவீரர்கள் மீது இருந்த இரக்கமும், மதத்தை மறக்கச் செய்தன.

- துன்பகரமாக மாறிய சம்பவங்களை கற்பனை செய்துபார். இது மக்களின் வாழ்க்கையை எவ்வாறு பாதித்திருக்கும்?
- துரோகிகள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு தூக்கி-டப்பட்ட INA படைவீரர்களை மாவீரர்களாக நினைத்த இந்தியர்கள் இத்துன்பத்தை எவ்வாறு உணர்ந்திருப்பார்கள் ?

போர் முடிந்த பிறகு இருந்த நிலையை நீங்கள் நினைத்துப்பார்த்தால், நாட்டில் நிலவிய சூழ்நிலை உங்களுக்கு எளிதாக விளங்கும். உணவுப்பற்றாகுறை, நியாயவிலைகளில் உணவுப்பண்டங்களின் பகிர்வு, விலையேற்றம், கள்ளச்சந்தை, பதுக்கல் போன்ற பிரச்சனைகளால் மக்கள் அவதியுற்றனர். தொழிலாளர்களுக்குக் குறைந்த கூலி கொடுக்கப்பட்டதால், அவர்கள் கடுங்கோபம் கொண்டனர். ரயில்வே, தபால்துறை மற்றும் பிற அரசு ஊழியர்கள் விலை ஏற்றத்துக்கு எதிராக முழு அடைப்பு நடத்த திட்டமிட்டனர்.



படம் - 14.4 1946ல் இந்தியச் சுதந்திரத்திற்காக புரட்சி செய்த கப்பல்படை வீரர்கள் நினைவாக எழுப்பப்பட்டுள்ள நினைவுச் சின்னம்.

1946ஆம் ஆண்டு பிப்ரவரி 18ஆம் நாள், தரமற்ற உணவு மற்றும் ஆங்கிலேய அதிகாரிகளின் நடத்தையைக் கண்டித்து, பம்பாயிலிருந்த இந்தியக்கப்பல் படையைச் சேர்ந்த காவல் படையினர் உண்ணாவிரதம் இருந்தனர். இந்த முழு நிறுத்தம் பம்பாயிலுள்ள மற்ற கப்பல் காவல் படையினருக்கும், நாட்டின் பிற பகுதியிலுள்ள கப்பல் மற்றும் காவல் படையினருக்கும் பரவியது. வன்முறையில் ஈடுபட்டவர்கள் இளம்பிறை, சுத்தியல், அரிவாள் படமுள்ள மூவண்ணக் கொடியை கப்பலில் ஏற்றினர். M.S.கான் தலைமையிலான 'மத்திய முழு அடைப்புக் குழு' ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. இக்குழு நல்ல உணவு, வெள்ளையர் மற்றும் இந்திய மாலுமிகளுக்கு சமமான சம்பளம், INA மற்றும் பிற அரசியல் கைதிகளின் விடுதலை, இந்தோனேஷியாவிலிருந்து கோரிக்கைகளை முன்வைத்தது.

இந்த முழு அடைப்பில் 78 கப்பல்கள், 20 கடற்கரை நிறுவனங்கள், மற்றும் 20000 கப்பல் காவல் படையினர் பங்கு பெற்றனர். நூற்றுக்கணக்கான இந்து மற்றும் முஸ்லீம் மாணவர்கள் இவர்களுக்கு ஆதரவு தெரிவித்து காவல் துறை மற்றும் ராணுவத்தினருடன் சண்டையிட்டனர். பிப்ரவரி 22ஆம் நாள், முழு அடைப்பில் பங்கு பெற்ற மூன்று லட்சம் மில் தொழிலாளர்கள், காவல் துறையினர் மற்றும் ராணுவத்தினரோடு இரண்டு நாட்கள் சண்டையிட்டனர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

1946 ஆம் ஆண்டு, முழு அடைப்பின் வருடமாகும். நாட்டின் பல பகுதிகளிலிருந்த ஆலைகள் மற்றும் தொழிற்சாலைகளில் வேலைகள் நடைபெறவில்லை. மற்றும் CPI சோசலிசக்கட்சிகள் இந்த வேலை நிறுத்தங்களைச் சுறுசுறுப்பாக நடத்தின. கிராமப்புறங்களிலும், முழு அடைப்பின் தாக்கம் மிக அதிகமாகக் காணப்பட்டது.

வங்காளத்தில், விவசாயம் செய்வதற்காக பெரும் நிலச்சொந்தக்காரர்களிடம் நிலத்தைப் பெற்றுக்கொண்ட ஏழை சிறு விவசாயிகள், போராட்டத்தில் ஈடுபட்டனர். அறுவடை செய்யப்பட்ட விவசாய உற்பத்தியில், பாதி அல்லது அதற்குக் குறைவான பாகத்தை தங்கள் பாகமாக அக்காலத்தில் பெற்ற ஏழை சிறு விவசாயிகள், தங்கள் பாகத்தின் அளவை மூன்றில் இரண்டு பாகமாக உயர்த்தவேண்டும் என்று கோரினர். மாகாண கிசான் சபையால் நடத்தப்பட்ட இந்த இயக்கம், தெபாகா இயக்கம் (Tebhaga Movement) என்றழைக்கப்பட்டது.

ஐதராபாத்தில், தெலுங்கானாப் பகுதி விவசாயிகளை ஒன்று திரட்டிய கம்யூனிஸ்டு கட்சி, மிகப்பெரும் இயக்கத்தை நடத்ததியது. தெலுங்கானப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் நில பிரபுக்கள் முறையை எதிர்த்தனர். விவசாயக்கடன்களை ரத்து செய்யும், கொத்தடிமை முறையை நீக்கவும் உழுபவர்களுக்கே நிலம் பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற பல கோரிக்கைகளையும் வலியுறுத்தினர். ஆட்சியாளர்கள் மற்றும் படை வீரர்களுக்கு எதிராக விவசாயிகள் ஆயுதம் ஏந்திப் போராடினர். ஏறக்குறைய 3000 கிராமங்கள் இப்போராட்டத்தில் பங்கு பெற்றன. விவசாயிகளின் மற்றொரு ஆயுதப்போராட்டம் திருவிதாங்கூரில் உள்ள புண்ணப்ரா – வயலாரில் நடைபெற்றது.

- தற்போது நம் நாட்டில் சாதாரண மக்களின் செயல்பாடுகளை ஆராய்க. அவர்களின் கோரிக்கைகள் என்ன?
- இந்த மக்கள் இயக்கங்கள் பலவற்றில் மதப்பிரிவுகள் காணப்படவில்லை. இந்த இயக்கங்களில் மக்கள் ஒற்றுமைக்குக் காரணங்கள் என்னவாக இருக்கும்?

## முஸ்லீம் லீக் மற்றும் காங்கிரஸ் அதிகார மாற்றத்திற்கான சமரசப்பேச்சுவார்த்தை :

1945 ஆம் ஆண்டில், மேல்மட்டத்தலைவர்களுக்கிடையே அரசியல் சமரசப் பேச்சுவார்த்தை துவக்கப்பட போது, முழு சுதந்திரத்தின் முதல் படியாக வைஸ்ராய், ராணுவத்தளபதி போன்ற பதவிகளைத் தவிர்த்து, இந்திய மத்திய செயற்குழுவை (Indian Central Executive council) உருவாக்க பிரிட்டிஷ் அரசாங்கம் இசைந்தது. செயற்குழுவின் முஸ்லீம் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முழு அதிகாரம் முஸ்லீம் லீக் கட்சிக்கு வேண்டும் என்ற ஜின்னாவின் தொடர் கோரிக்கையால் அதிகார மாற்றத்திற்கான பேச்சுவார்த்தை முறிந்தது. இக்கோரிக்கை, மற்றவர்களுக்கு ஏற்புடையதாக இல்லை. முஸ்லீம் லிக்கின் இக்கோரிக்கையை, அதிக எண்ணிக்கையிலான முஸ்லீம்களின் ஆதரவைப் பெற்ற காங்கிரஸ் கட்சியும், பஞ்சாபின் ஐக்கிய கட்சியும் (Unionist Party of Punjab) ஏற்றுக்கொள்ளவில்லை. இப்பேச்சுவார்த்தைக்கு, காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதிகளுக்குத் தலைமை தாங்கியவர் மௌலானா அபுல்கலாம் ஆசாத் ஆவார்.

1946 ஆம் ஆண்டில் மாகாண அரசாங்கங்களுக்கான தேர்தல்கள் நடந்தன. மத்தியில், முஸ்லீம்களுக்கென ஒதுக்கப்பட்ட அனைத்து 30 தொகுதிகளிலும், மாகாணங்களுக்கென ஒதுக்கப்பட்ட அனைத்து 30 தொகுதிகளிலும், மாகாணங்களில் முஸ்லீம்களுக்கென ஒதுக்கப்பட்ட 509 தொகுதிகளில் 442 தொகுதிகளிலும் முஸ்லீம் லீக் வெற்றிப்பெற்றது. 1946 ஆம் ஆண்டில் இறுதியில், முஸ்லீம் லீக் தன்னை முஸ்லீம் வாக்காளர்களின் வலுவான கட்சியாகவும், ஒட்டு மொத்த பிரதிநிதியாகவும் ஏற்படுத்திக்கொண்டது. ஏறக்குறையை 86 சதவீத முஸ்லீம் வாக்குகளை இக்கட்சிப்பெற்றது. 1946ஆம் ஆண்டில், காங்கிரஸ் கட்சி பெரும்பாலான பொதுத் தொகுதிகளில் அமோக வெற்றிபெற்றது. முஸ்லீம் அல்லாத பிற மக்களின் 91 சதவீத வாக்குகளைப் பெற்றது.

- காங்கிரசால் ஏற்றுக்கொள்ளப்படாத முஸ்லீம் லீக்கின் கோரிக்கைகள் யாவை? இதற்கான காங்கிரசின் காரணங்களை நீங்கள் ஒப்புக்கொள்கின்றீர்களா?
- 1946ஆம் ஆண்டின் தேர்தல் முடிவுகள் மக்கள் மனநிலையை எவ்வாறு சுட்டிக்காட்டுகின்றது?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

1946 ஆம் ஆண்டு, பிரிட்டிஷ் அரசாங்கம் முஸ்லீம் லீக் கோரிக்கையைப் பரிசீலிக்கவும் சுதந்திர இந்தியாவுக்கான தகுந்த அரசியல் திட்டத்தை உருவாக்கவும் அமைச்சர்களை உள்ளடக்கிய மூவர்குழு ஒன்றை டெல்லிக்கு அனுப்பியது. நாடு முழுவதும் மூன்று மாதங்கள் பயணம் செய்த இந்த அமைச்சர்கள் குழு (மூவர் குழு) மூன்றடுக்கு கூட்டமைப்பு உள்ள ஐக்கிய இந்தியாவை சிபாரிசு செய்தது. துவகத்தில் அனைத்து முக்கியக்கட்சிகளும் இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டது. ஆனால் இந்த ஒப்புதல் சிறிது காலமே நீடித்தது. இதற்கு முக்கியக்காரணம் என்னவென்றால் இத்திட்டத்தின் அம்சங்கள் ஒன்றுக்கொன்று எதிராக இருந்ததே. இறுதியாக, அமைச்சர்கள் குழுவின் பரிந்துரையை காங்கிரஸ் கட்சியும், முஸ்லீம் லீக்கும் ஏற்றுக்கொள்ளவில்லை.



படம் 14.5 : சுதந்திர பிரகடனத்தின் போது ஜவஹர்லால் நேரு

பேச்சுவார்த்தைகள் மூலம் தங்கள் கோரிக்கைகள் நிறைவேறாது என முடிவு செய்த முஸ்லீம் லீக் மக்களை வன்முறைக்குத் தூண்டியது. பாகிஸ்தான் கோரிக்கையை நிறைவேற்ற நேரடி நடவடிக்கை (Direct Action) ல் இறங்க முடிவு செய்தது. 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு 16 ஆம் நாளை "நேரடி நடவடிக்கை நாளாக (Direct Action Day)" அறிவித்தது. அன்றைய நாள் கல்கத்தாவில் துவங்கிய பயங்கர வன்முறை பல நாட்கள் நீடித்தது. இதில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். 1947 ஆம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் இந்த வன்முறை நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவியது.

இந்த வன்முறையின் பின்னணியில் 1947 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், பஞ்சாபை இரு பாதிகளாக பிரிப்பதற்க்கு காங்கிரஸ் மேலிடம் ஒப்புதல் கொடுத்தது. இதில் ஒரு பாதி, முஸ்லீம் பெரும்பான்மையினருடனும், மறுபாதி இந்து சீக்கிய பெரும்பான்மையினருடனும் இருக்கும். வங்காளத்திலும் அதே போன்ற பிரிவினைக்கு காங்கிரஸ் ஒப்புக்கொண்டது.

1947 ஆம் ஆண்டு, வைஸ்ராயாக இருந்த வேவல்லுக்கு பதிலாக லார்ட் மௌண்ட்பேட்டன் வைஸ்ராயாக நியமிக்கப்பட்டார். லார்ட் மௌண்ட்பேட்டன் இறுதிக்கட்ட பேச்சுவார்த்தை நடத்தினார். இறுதிக்கட்டப்பேச்சு வார்த்தையும் முடிவுறாமல் முடிந்ததால் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு சுதந்திரம் அளிக்கப்படும் என்றும், ஆனால் பிரிவினை செய்யப்படும் என்றும் அறிவித்தார்.

முஸ்லீம்கள் பெருமபான்மையாக வசிக்கக்கூடிய பஞ்சாப் (NWFP) வடமேற்கு எல்லைப்புற மாகாணம், சிந்து, பலுஜிஸ்தான், கிழக்கு வங்காளம் போன்றவை புதியதாக பிரிட்டிஷ் அரசாங்கத்திலிருந்து பாகிஸ்தானுக்கு முறைப்படியான அதிகார மாற்றம் 14ஆம் தேதியும், ஆனால் இந்தியாவுக்கு ஆகஸ்டு 15ஆம் நாள் 1947ஆம் வருடம் நடைபெறும் என்றும், அறிவிக்கப்பட்டது. இந்தத் தீர்வு தான் நாட்டில் நடைபெறும் கலவரத்தையும், வெறுப்பையும் தடுக்கும் என்று நம்பப்பட்டது.

## பிரிவினை மற்றும் புலம் பெயர்தல்

முஸ்லீம்களுக்காக பாகிஸ்தான் உருவாக்கப்பட்டதும், பெரும்பான்மையான மக்களுக்கு முன்னால் கற்பனைக்கு எட்டாத, மனதைக் காயப்படுத்தும் சூழ்நிலைகள் உருவானது. புதியதாக உருவாக்கப்பட்ட நாட்டின், எல்லைப்பகுதியில் வாழும் இந்துக்கள், பாதுகாப்பற்ற சூழ்நிலைக்கருதி புலம்பெயர வேண்டியதாயிற்று. அதைப்போலவே இப்புதிய



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



The Statesman

(With which the FRIEND OF INDIA is Incorporated.)

PUBLISHED SIMULTANEOUSLY FROM CALCUTTA AND DELHI.

Vol. CXIII. No. 23112 REG. No. C193 CALCUTTA, FRIDAY, AUGUST 15, 1947. TWO ANNAS.

# TWO DOMINIONS ARE BORN

## Political Freedom For One-Fifth Of Human Race

### POWER ASSUMED BY INDIANS

Constituent Assembly Members Take The Oath

WORK FOR COMMON PROSPERITY

From Our Special Representative

NEW DELHI, Aug 15.—Two new Dominions, India and Pakistan, were born at zero hour today, ushering in political freedom to 400 million people, constituting one-fifth of the human race.

AT a special session of the Indian Constituent Assembly, the House assumed full powers for the administration of the Indian Dominion.

The Constituent Assembly tonight passed Pandit Nehru's resolution prescribing the Oath. All the members took the Oath and then Dr Rajendra Prasad and Pandit Nehru left for Government House to request Lord Mountbatten to accept the post of Governor-General.

Pandit Nehru's resolution, which was seconded by Chaudhuri Khaliq-uz-Zaman, Leader of the Muslim League Party, expressed the hope that

(Continued on page 8, col. 3)

[See Editorial Comment—Page 6.]

NO DISTURBANCE IN CALCUTTA

No incidents of a communal nature occurred in Calcutta and Howrah yesterday.

AUGUST 15, 1947.

A special Independence Day supplement is published with this issue of The Statesman.

An exclusive article by a special correspondent on the negotiations which led to India's freedom appears on Page 6.

### Close Friendship with Britain

Nehru's Reply to Mr. Attlee

NEW DELHI, Aug 15.—"My colleagues in the U.K. Government join with me in sending, on this historic day, greetings and good wishes to the Government and people of India, says a message from Mr Attlee to Pandit Nehru. He adds:

"It is our earnest wish that India may go forward in tranquillity and prosperity and, in so doing, contribute to the peace and prosperity of the world."

Pandit Nehru replied: "On behalf of my colleagues in the Government of India and myself I wish to express our grateful thanks for your message of greeting on this historic day when India emerges into freedom. That freedom means much to us, but it also means much to Asia and the world. We hope to utilize that freedom for the advancement of our own people as well as for the furtherance of the peace and prosperity of the world. In these great tasks we shall look forward to the closest co-operation with your Government."—API

VISCOUNT MOUNTBATTEN AWARDED EARLDOM

LONDON, Aug 14.—Viscount Mountbatten, Governor-General-designate of India, was today awarded an Earldom.—Reuter

### Joyful Scenes In Calcutta

Celebrations By Hindus And Muslims

By a Staff Reporter

REMARKABLE signs of a return to communal amity after a year of bloodshed were seen in Calcutta last night and early this morning. Almost unbelievable scenes of fraternity and rejoicing were witnessed in some of the hitherto worst-affected areas of Central and North Calcutta, particularly along Chittaranjan Avenue, Lower Chitpur Road, Zakaria Street, Harrison Road, Bowbazar Street and Dhurrumtollah Street.

Mr Rajagopalachari taking the Oath of Allegiance before Mr Justice Mitter.—Statesman.

Mr Rajagopalachari entering the Throne Room in procession for the office assumption ceremony.—Statesman.

### First Governor of W. Bengal

C. R. Sworn In This Morning

By a Staff Reporter

WITH the birth of the Indian Dominion His Excellency Mr C. Rajagopalachari assumed charge of the office of Governor of West Bengal at one o'clock (BT) this morning. Immediately afterwards Dr P. C. Ghosh, Chief Minister, West Bengal, and the members of his Cabinet were sworn in.

The ceremony took place in the Throne Room of Government House, Calcutta, in the presence of high-ranking civil and military officials and some distinguished citizens, the whole proceedings occupying a little over half an hour.

Mr Rajagopalachari's daughter also attended.

In order that the Calcutta ceremony should synchronize with the assumption ceremonies elsewhere in the Indian Dominion, the swearing-in was

(Continued on page 5 column 1.)

TWO HOLIDAYS

Members of The Statesman Staff will participate in the two public holidays on August 15 and 16 officially announced to celebrate the birth of the two new Dominions. There will, therefore, be no issues of the paper on August 16 and 17.

### Gandhi & Suhrawardy to Fast and Pray Today

Meeting Listens to Mahatma Without Interruption

By a Staff Reporter

### First Cabinet of India Begins to Function

Pandit Nehru Heads Dominion Ministry of Fourteen

NEW DELHI, Aug 14.—The first Cabinet of the Indian Dominion which will function from Aug 15, announced tonight, will be headed by Pandit Nehru. The Cabinet consists of the following Ministers: Pandit Nehru, Prime Minister, External and Commonwealth Relations, Scientific Research.

Sardar Patel: Home, Information and Broadcasting, States.

Dr Rajendra Prasad: Food and Agriculture.

Maulana Azad: Education.

Dr Matthai: Railways and Transport.

Sardar Baldev Singh: Defence.

Mr Jagjivan Ram: Labour.

Mr C. H. Bhabha: Commerce.

Mr Rafi Ahmed Kidwai: Communications.

Rajkumari Amrit Kaur: Health.

Dr Ambedkar: Law.

Mr Shanmukham Chetty: Finance.

Dr Shyama Prasad Mookerjee: Industries and Supplies.

Mr N. V. Gadgil: Works, Mines and Power.—API

INTERNATIONAL RIGHTS OF INDIAN DOMINION

[See Editorial Comment—Page 6.]

CALCUTTA WEATHER

It's an OMEGA

Ch. ABRECHT

D.S. CLIVE BUILDINGS CALCUTTA

படம் 16.7 இந்தியச் சுதந்திரத்தைப் பற்றிய செய்தித்தாள் அறிக்கை. இதில் நீங்கள் காணும் வேறுபாடுகள் யாவை? கலந்துரையாடு.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

நாட்டின் மற்றொரு எல்லைப்பகுதியில் வாழ்ந்த முஸ்லீம் மக்களும் பாதிக்கப்பட்டனர். அனைவரும் புலம் பெயர்தலை விரும்பாவிட்டாலும், ஏன் இவ்வாறு புலம் பெயர்கிறார்கள் என்று யாருக்கும் தெரியவில்லை. அவர்கள், ஒருவர் மீது மற்றவர் கொண்ட கோபம் மற்றும் வெறுப்பே தங்கள் வீடுகள், கிராமங்கள், நகரங்கள் போன்றவற்றை விட்டு வெளியேறுவதற்குக் காரணமாய் அமைந்தது. இவ்வாறாக, 1.5 கோடி இந்து, மற்றும் முஸ்லீம் மக்கள் இடம் பெயர்ந்தனர். ஒரு மதத்தினர் மற்ற மத்தினர் மீது கொலை, கொள்ளை, தீவைப்புப் போன்ற செயல்களில் ஈடுபட்டனர். மக்கள் அகதிகளாக முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். பலர், புதிய இருப்பிடங்கள் தேடி ரயில்களில் பயணம் மேற்கொண்டனர். காந்தியடிகள் கலவரத்தில் பாதித்த மக்களை முகாம்களிலும், மருத்துவமனைகளிலும் சந்தித்து அமைதி, சகோதரத்துவம் போன்றவற்றின்



*படம் 14.7 பிரிவினையின் வெவ்வேறுக் காட்சிகள் LIFE என்னும் இதழ் வெளியிட்டப் புகைப்படங்கள். இவை மார்கரெட் போர்க்-வைட் ஆகியோரால் எடுக்கப்பட்டது.*









SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அவசியத்தை வலியுறுத்தினார். தான் அயராது பாடுபட்டது இது போன்ற சுதந்திரம் மற்றும் சுயராஜ்ஜியத்தைப் (Swaraj) பெறுவதற்காக அல்ல என்றார்.

இந்தியாவின் முதல் சுதந்திர நாளைக்கொண்டாடாமல், நம் தேசப்பிதா உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

காந்தியடிகள் மற்றும் நேருவின் தூண்டுதல் காரணமாக காங்கிரஸ் கட்சி சிறுபான்மையினரின் உரிமைகள் *(The Rights of minorities)*மீது ஒரு தீர்மானத்தை இயற்றியது. இரண்டு நாடுகள் கோட்பாட்டை *(Two-Nation)* இதுவரை ஏற்றுக்கொள்ளாத காங்கிரஸ் கட்சி, தன் கோட்பாடுகளுக்கு மாறாக, பிரிவினையை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்ட போதும், இந்திய நாடு பல மத, இன மக்கள் வாழும் நாடு என்பதில் நம்பிக்கைப் பெற்றிருந்தது. பாகிஸ்தானில் எச்சூழல் இருந்தாலும், இந்தியாவில் எந்த மதத்தைச் சேர்ந்த குடிமக்களும் முழு உரிமைகள் சமத்துவம் அளிக்கக்கூடிய மதசார்பற்ற மக்களாட்சி நாடாக *"A democratic secular state"* இந்தியா விளங்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

### காந்தியடிகள் படுகொலை :

1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ஆம் நாள், காந்தியடிகள், வங்காளத்தில் வன்முறை நிகழ்ந்தப் பகுதியான நொக்காலியில் அமைதியைக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டார். தலைநகர் டெல்லிக்கு மீண்டும் அவர் செப்டம்பர் 9, 1947 ஆம் ஆண்டு தான் திரும்பினார். இவர் வடமேற்கு இந்தியாவில் நடைபெற்ற மத மோதல்களால் மிகவும் வருத்தத்துடன் காணப்பட்டார். அங்கே அமைதி திரும்புவதற்கான முயற்சியில் அவர் ஈடுபட்டார். ஆனால் இந்து மதத்தின் மீது தீவிர பற்றுக்கொண்ட இளைஞர்கள் சிலர் காந்தியின் மீதும், இந்திய அரசியலில் அவரின் பங்கு பற்றியும் கோபமுற்றனர். அவர்கள் காந்தியடிகளின் அனைத்து மத பிரார்த்தனைக் கூட்டங்களில் பலமுறை பிரச்சினை செய்தனர். காந்தியடிகள் 1948 ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் நாள் "நான் ஒரு பைத்தியக்காரனின் துப்பாக்கிக் குண்டால் இறக்க நேரிட்டால், அதை புன்னகைத்தபடி ஏற்பேன்" என்று கூறினார்.



படம் 14.8 : மகாத்மா காந்தி

"எனக்குள் எந்த கோபமும் இல்லை எனவும், கடவுள் என் இதயத்திலும், உதட்டிலும் உள்ளார் என்றும் கூறினார்."

இறுதியாக, இந்தியா சுதந்திரம் பெற்ற ஆறு மாதத்திற்குள் 1948ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 30ஆம் நாள், காந்தியடிகள் அனைத்து மத பிரார்த்தனைக்கு செல்லும் சமயத்தில் அவரை துப்பாக்கியின் மூன்று குண்டுகள் துளைத்தன. காந்தியடிகள் தான் விரும்பியபடியே இறப்புக்கு முன்பு "ஹே ராம்" ("Hey Ram") என்றார்.

நாதுராம் கோட்சே அங்கிருந்து தப்பிச் சென்றான். ஆனால் பிறகு அவன் பம்பாயில் பிடிபட்டான். அவன் இந்து மகாசபாவின் தீவிர உறுப்பினராக இருந்தவன். இச்செயல் இந்து மகாசபா மீது மக்களுக்கு வெறுப்புணர்வை ஏற்படுத்தியது. இதன் விளைவாக, 1948 ஆம் ஆண்டு, பிப்ரவரி 14ஆம் நாள், அனைத்திந்திய இந்து மகாசபை தன் அரசியல் செயல்பாடுகளை நிறுத்திக்கொண்டு, அதற்குப் பதிலாக மக்கள் சேவைகளில் ஈடுபட்டது. மதவெறிப் பிடித்த கோட்சே, தன் நண்பர்களையும், தன் அமைப்பையும் காயப்படுத்தினார்.

### சுதேசி சமஸ்தானங்களின் இணைப்பு :

அப்போது பிரிட்டிஷ் அதிகாரத்திற்கு உட்பட்டு வெவ்வேறு நிலையிலான இறையாண்மையைப் பெற்ற 550-க்கும் மேற்பட்ட சுதேசி சமஸ்தானங்கள் இருந்தன. இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர்கள் வெளியேறும் நிலை ஏற்பட்டதால், இந்த சுதேசி சமஸ்தானங்கள் தானாகவே சுதந்திரம் பெற்றன. அவை இந்தியா அல்லது பாகிஸ்தானுடன் இணைவதா அல்லது தனித்து இயங்குவதா என்று முடிவு செய்யும் படி கேட்டுக்கொள்ளப்பட்டது. சுதேசி சமஸ்தானங்களில் இருந்த சாதாரண மக்கள், மக்களாட்சி உரிமைகள் பற்றியும், மக்கள் இயக்கங்களைப் பற்றியும் அறிந்தவர்களாக இருந்தனர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

தங்களை அரசக்குடும்பத்தினர் ஆள்வதை அவர்கள் விரும்பவில்லை. திருவிதாங்கூர் மற்றும் ஐதராபாத்தில் ஆயுதம் ஏந்திய விவசாயிகள் தங்களை ஆளும் ஜமீந்தார்களுக்கு எதிராக கலவரத்தில் ஈடுபட்டனர்.

சுதேசி சமஸ்தானங்களில் நடைபெற்ற மக்கள் இயக்கங்களைக் காங்கிரஸ் கட்சி ஆதரித்தது. சுதேசி சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைய வேண்டும் என்று இந்தியா அறிவித்தது. 1947ஆம் ஆண்டு, ஜுலை மாதத்தில் இந்த சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைக்கும் பொறுப்பு சர்தார் வல்லபாய் படேலுக்குத்தரப்பட்டது. அவர், இந்தியாவுடன் சமஸ்தானங்கள் இணைய வேண்டியதன் அவசியத்தை சுதேச மன்னர்களிடம் விவரித்தார். சுதேச மன்னர்கள் இந்த இணைப்பை விரும்பாவிட்டாலும் ராணுவ நடவடிக்கை மூலம் இவை இணைக்கப்படும் என்பதையும் தெளிவுபடுத்தினார். 1947ஆம் ஆண்டு, ஆகஸ்டு 15ஆம் தேதிக்குள், காஷ்மீர், ஐதராபாத், ஜீனாகாத் தவிர மற்ற சுதேச சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இந்த மூன்று சமஸ்தானங்களும் அதற்கு அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்தியாவுடன் இணைக்கப்பட்டன.

சுதேசி சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைக்கப்பட்டு, அதன் மன்னர்களுக்கு மன்னர் மானியங்கள் (Privy-Purses) அளிக்கப்பட்டன. புதிய நிலப்பகுதிகளின் இணைப்புக் காரணமாக புதிய நிர்வாக பிரிவுகள் உருவாக்கப்பட்டன. புதிய மாநிலங்கள் உருவாக்குவதற்கான முதற்கட்ட பணிகள் 1956 ஆம் ஆண்டு வரை நடந்தன. 1971ஆம் ஆண்டு, இந்திய அரசாங்கம் மன்னர் மானிய முறையையும், மன்னர்கள் பயன்படுத்தி விருதுகளையும் ரத்து செய்தது.

இவ்வாறாக, நவீன இந்தியா உதயமானது. 1947ஆம் ஆண்டில், குறைந்த மனிதவள முன்னேற்றம் மற்றும் கட்டமைப்பு வசதிகள் அற்ற ஏழை நாடாக இந்தியா இருந்தது. இரண்டு நூற்றாண்டு காலமாக இந்திய முன்னேற்றத்தை தடுத்த காலனி ஆதிக்கம், மக்களின் தன்னம்பிக்கையை வீணாக்கியது. இந்தியாவை சமச்சீரான, தற்சார்பு பெற்ற நாடாக மாற்றுவது ஒரு சவாலாக இருந்தது.

## முக்கியச் சொற்கள்

1. பிற நாட்டு அரசாட்சிக்குட்பட்ட நிலை 2. பிரித்தாளுதல் 3. தனி வாக்காளர் தொகுதி

## உனது கற்றலை மேம்படுத்துக

1. இரண்டாம் உலகப்போர் பற்றி தலைவர்கள் மற்றும் வெவ்வேறு குழுக்கள் எவ்வாறு கருத்துத் தெரிவித்தன என்பதை ஒரு பட்டியல் மூலம் காட்டுக.(AS1)
2. யூதர்களும், பிறரும் ஜெர்மனியில் கடும் சித்திரவதைக்கு ஆட்படுத்தப்பட்ட நிலையில், ஜெர்மனி மற்றும் ஜப்பான் நாடுகளை இந்தியா ஆதரித்தது சரியான செயல் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?(AS1)
3. நாட்டுப் பிரிவினைக்கான பல்வேறு காரணங்களைப் பட்டியலிடுக.(AS1)
4. நாட்டுப்பிரிவினைக்கு முன்பு, வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களுக்கு எந்தெந்த வழிகளில் அதிகாரப்பகிர்வு ஏற்பட்டது?(AS1)
5. இந்தியாவில் ஆங்கிலேயர் பிரித்தாளும் கொள்கையை எவ்வாறு செயல்படுத்தினர்? இது நீங்கள் ஏற்கனவே படித்தறிந்த நைஜீரியநாட்டு வரலாறுடன் எவ்வாறு வேறுபடுகின்றது?(AS1)
6. நாட்டு பிரிவினைக்கு முன்பு, அரசியலில் மதம் எவ்வாறு பயன்படுத்தப்பட்டு வந்தது?(AS1)
7. சுதந்திரப்போராட்டத்தின் இறுதி வருடங்களில், தொழிலாளர்களும், விவசாயிகளும் எவ்வாறு போராட்டங்களில் ஈடுபட்டனர்?(AS1)
8. நாட்டுப் பிரிவினை, சாதாரண மக்களை எவ்வாறு பாதிப்புக்குள்ளாக்கியது? பிரிவினையை அடுத்து நிகழ்ந்த புலம்பெயர்தலால் ஏற்பட்ட அரசியல் விளைவுகள் என்ன?(AS1)
9. சுதேசி சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது ஒரு சவாலான வேலை. விவரி.(AS1)
10. இந்திய வரைபடத்தில் கீழ்காணும் இடங்களை குறித்திடுக.(AS5)
    (A) காஷ்மீர் (B) ஐதராபாத் (C) ஜீனாகத் (D) வங்காளம் (E) திருவாங்கூர்
11. சுபாஷ் சந்திர போஸ் குணநலன்களில் நீங்கள் விரும்புவன யாவை? ஏன்?(AS6)



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்
15

# சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குதல்

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை ஆராய்வோம் :

8–ஆம் வகுப்பின் சமூக அறிவியல் பாடநூலில் உள்ள 13–ஆம் பாடத்தைப் படித்து இந்திய அரசியலமைப்புச் சட்டத்துடன் தொடர்பான கீழ்காணும் செயல்களை நிறைவேற்று.

- செயல் 1) இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு துணைபுரிந்த முக்கியமான சிலர் : ______________; ______________; ______________; ______________
- செயல் 2) அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் இருக்கும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கிய அடிப்படைக் கருத்துக்கள் யாவை?
- செயல் 3) இந்திய அரசியல் சட்ட முகப்புரையுடன் கீழ்காணும் இரண்டு முகப்புரைகளையும் படிக்கவும். அவை எவ்விதத்தில் ஒன்றுபட்டு அல்லது வேறுபட்டு உள்ளன என்பதை கவனிக்கவும். ஒவ்வொரு அரசியலமைப்பும் அவர்களுடைய நாடு உருவாகும்போது நிகழ்ந்த அரசியல் நிகழ்வுகளை பிரதிபலிப்பவையாகவும் உள்ளதை நினைவில் கொள்ளவும். அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள சிந்தனைகளின் மீது தாக்கம் செய்த அரசியல் நிகழ்வுகளைத் தொடர்புபடுத்த முயற்சி செய். பாடம்-13ல் உள்ள ஜப்பான் பின்னணியை மீண்டும் படித்தும், நேபாளத்தின் பின்னணியைப் பற்றி புரிந்து கொள்ள 235ஆம் பக்கம் பார்க்கவும்.

### நேபாளத்தின் இடைக்கால அரசியலமைப்புச் சட்ட முகப்புரை 2007

நேபாளத்தின் இயற்கையாக அமையப் பெற்ற இறையாண்மை, அரசு அதிகாரம் கொண்ட வாரிசுகளாகிய நாம்,

2007 (1951) முன்பிருந்து இதுவரை மக்களால் மேற்கொள்ளப்பட்ட இயக்கங்கள், வரலாற்று போராட்டங்கள் மூலமாக மக்களாட்சி, அமைதி, முன்னேற்றங்களுக்குச் சாதகமாக மக்களின் ஆணையை மதித்து, வகுப்புவாத, இனவாத, வட்டார, பாலினம் போன்றவற்றுடன் தொடர்புடைய சிக்கல்களை தீர்க்க, அரசின் முன்னேற்றத்தை புனரமைக்க உறுதிகொள்ளுதல்,

போட்டி நிறைந்த பலகட்சி மக்களாட்சி முறை, குடிமக்களின் சுதந்திரங்கள், அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள், வயது வந்தோர் வாக்குரிமை, கால அடிப்படையில் தேர்தல்கள், பத்திரிகைத் துறைக்கு முழு சுதந்திரமும், சுதந்திரமான நீதித்துறை, சட்டத்தின் ஆட்சிக் கருத்துக்கள் உள்ளிட்ட மக்களாட்சி மதிப்புகள், மற்றும் விதிமுறைகளுக்கு நம் முழு அர்ப்பணத்தையும் வெளிப்படுத்துதல்,

தங்களுக்காக தாங்களே அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைத்துக்கொள்ள, பயமற்ற சுற்றுச்சூழலில் அரசியல் நிர்ணய சபையை தேர்ந்தெடுக்க, சுதந்திரமான, நேர்மையாக நடைபெறும் தேர்தல்களில் பங்குபெற நேபாள மக்களுக்கு அடிப்படை உரிமைகளை உறுதியளிப்பது.

மக்களாட்சி, அமைதி, முன்னேற்றம், வளர்ச்சியுடன் கூடிய சமூக பொருளாதார மாற்றம், நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, சுதந்திரம் மற்றும் நாட்டின் பெருமையை மையப் படுத்துதல்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

முடியாட்சிக்கு முடிவு கட்டி நேபாளத்தை ஒரு கூட்டாட்சி, மக்களாட்சிக் குடியரசாக அறிவித்தல்,

இது வரை பல்வேறு புரட்சிகள், இயக்கங்கள் வாயிலாக அடைந்தவற்றை நிறுவுவதற்கு அரசியல் புரிந்து கொள்ளுதல் வாயிலாக வடிவமைக்கப்பட்ட நேபாள இடைக்கால அரசியலமைப்புச் சட்டம் - 2063ஐ (2007) அறிவிக்கிறோம். அரசியல் நிர்ணய சபை புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் வரை இது நடைமுறையில் இருக்கும்.

## ஜப்பானின் அரசியலமைப்புச் சட்ட முகப்புரை 1946

ஜப்பான் மக்களாகிய நாங்கள் நாட்டின் பாராளுமன்றத்திலுள்ள (DIET) தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் வாயிலாக எங்களுக்கும், வருகின்ற தலைமுறையினருக்கும் அனைத்து நாடுகளுடன் அமைதியான ஒத்துழைப்புப்பலன்களைப் பெற நினைத்தோம், இந்த பூமி எங்கும் சுதந்திரம் மலரவேண்டும் என்று கருதுகிறோம், அரசு நடவடிக்கைகள் மூலம் எப்போதும் போர் பயம் நாட்டைச் சூழாது எனத் தீர்மானித்து இறையாண்மை அதிகாரம் மக்களிடையே இருக்கும் என தெரிவித்து இந்த அரசியலமைப்புச் சட்டத்தை அறிவிக்கிறோம். அரசாங்கம் என்பது மக்களின் புனிதமான நம்பிக்கை. இதற்கு அதிகாரம் மக்களிடமிருந்தே கிடைக்கிறது. இதன் அதிகாரங்களை மக்களின் பிரதிநிதிகள் மூலம் நடைமுறைப்படுத்துவர். இதன் பலன்களை மக்கள் பெறுவர், இந்த மனித இன சர்வதேச விதியின் அடிப்படையில் இந்த அரசியலமைப்புச் சட்டம் வடிவமைக்கப்பட்டது. இதற்கு எதிரான அனைத்து அரசியலமைப்புச் சட்டங்களையும், பிற சட்டங்களையும், முடிவுகளையும், அதிகார அறிவிப்புகளையும் தள்ளுபடி செய்து புறக்கணிக்கிறோம். ஜப்பான் மக்களாகிய நாங்கள் அனைத்துக் காலத்திற்கும் அமைதியை விரும்புகிறோம். மனிதத் தொடர்புகளை கட்டுப்படுத்தும் உயரிய கொள்கைகளின் மீது முழுமையான புரிந்துகொள்ளுதலை பெற்றுள்ளோம் அமைதியை விரும்பும் உலக மக்களுக்கு நீதி மற்றும் மத நம்பிக்கைகளின் மீது நம்பிக்கை வைத்து எங்கள் பாதுகாப்பையும், நிலைப்பாட்டையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்று உறுதியாக முடிவு செய்து கொண்டோம். அமைதியைக்காக்கவும், கொடுங்கோலாட்சி, அடிமைத்தனம் போன்றவற்றை தடை செய்யவும், சகிப்புத் தன்மை இன்மையை பூமியிலிருந்து நிரந்தரமாக விரட்டப்பாடுபடும் சர்வதேச சமுதாயத்தில் மதிப்புமிக்க இடத்தைப் பிடிக்க வேண்டும் என நினைக்கின்றோம். பயம், மற்றும் தேவைகளற்ற உலகில் அமைதியுடன் அனைத்து மக்களும் வாழ உரிமையைப் பெற்றுள்ளனர் என்பதை நாங்கள் அங்கீகரிக்கிறோம். எந்த ஒரு நாடாகிலும் அது தனக்கு மட்டும் பொறுப்பு வகித்தால் போதாது என்று நாங்கள் நம்புகிறோம். அரசியல் நீதிநெறிமுறைச் சட்டங்கள் சர்வதேச முக்கியத்துவம் கொண்டவை. தங்களுடைய இறையாண்மையை நீட்டித்து பிற நாடுகளுடன் இறையாண்மை உறவுகளை நியாயப்படுத்திக்கொண்டு அனைத்து நாடுகளும் இந்த சட்டங்களை மதிக்க வேண்டும். ஜப்பான் மக்களாகிய நாங்கள் எங்களுக்குச் சொந்தமான அனைத்து வளங்களுடன் இந்த உயரிய கொள்கைகளை அடைவோம் என்று எங்கள் தேசப்பெருமையை பணயமாக வைத்து உறுதிமொழி அளிக்கிறோம்.

- இந்த நாடுகளின் அரசியல் சூழ்நிலைகளில் உள்ள ஒற்றுமை மற்றும் வேற்றுமைகள் யாவை? அதற்கு முன் இருந்த உடனடி முன் நிகழ்வுகள் யாவை?
- பாலினத்தை எந்த நாட்டு அரசியலமைப்புச் சட்டம் குறிப்பிடுகிறது?
- அமைதியை விரும்புவதை எந்த நாட்டு அரசியலமைப்புச் சட்டம் பிரதிபலிக்கிறது?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

- அரசியலமைப்புச் சட்ட முகப்புரையில் மக்களின் இயக்கங்கள் எவ்வாறு பிரதிபலிக்கப்படுகின்றன?
- கடந்த காலத்தைப் பிரதிபலிப்பதில் பல்வேறு முகப்புரைகளில் உள்ள ஒற்றுமை மற்றும் வேற்றுமைகள் யாவை?
- மூன்று நாடுகளின் எதிர்கால சமுதாயத்தைப் பற்றி எவ்வாறான உறுதிமொழிகளைச் செய்தனர்?
- அரசியல் அமைப்பின் தன்மையைப் பற்றி என்ன வாக்குறுதிகள் செய்யப்பட்டன?
- இந்த நாடுகளின் குடிமக்களுக்கு என்ன வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன?

## நேபாளத்தின் பின்னணி

1959ல் மகேந்திரன் என்னும் அரசனால் வெளியிடப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் நேபாளத்தில் முதல் தேர்தல்கள் நடைபெற்றன. எனினும் ஓராண்டிற்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை வீழ்த்தி, கணிசமான அதிகாரத்தை அரசருக்கே திரும்ப வழங்கினர். மக்களாட்சி பிரதிநிதித்துவ அரசாங்கத்தை அமைக்க மக்களின் தொடர்ந்த போராட்டங்களின் விளைவால் இறுதியாக 1991-ல் தேர்தல்கள் நடைபெற்றன. இந்த தேர்தல்களில் நேபாளத்தின் காங்கிரஸ் கட்சி அதிகப் பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றியது. அரசாட்சிக்கு இன்னும் மேலாண்மை உள்ள இந்த அரசாங்க அமைப்பில் கம்யூனிசக் கட்சி தன்னிறைவு பெறவில்லை. அவர்கள் அரசியல் அமைப்பில் கம்யூனிசக் கட்சி தன்னிறைவு பெறவில்லை. அவர்கள் அரசியல் முறையை முழுவதுமாக சீர்படுத்த வேண்டும் எனவும் அரசாட்சியை ஆதரித்த மற்றும் எதிர்த்த குழுக்களிடையே ஒரு ஆயுதம் தாங்கிய போராட்டமாக மாறியது. 2007ல் அரசாட்சியை நீக்குவதற்கு இப்போராட்டம் காரணமாக அமைந்தது.

## விவாதங்களைப் அறிதல் :

அரசாங்கம் எவ்வாறு பணியாற்றுகிறது. நாட்டின் எதிர்காலத்தை எவ்வாறு வடிவமைக்கின்றனர் போன்ற கருத்துக்களுடன் தொடர்புபடுத்தி எந்த ஒரு அரசியலமைப்புச் சட்டமானாலும் சில அடிப்படை அமைப்பையும், கொள்கைகளையும் வழங்குகிறது. அதாவது அரசியலமைப்புச் சட்டம் இரண்டு கடமைகளைச் செய்கிறது.

(அ) குடிமக்களின் உரிமைகள், கடமைகளைக் கூறுதல், அரசாங்கம் அதன் உறுப்புகளான செயல்துறை, சட்டத்துறை, நீதித்துறை போன்றவற்றின் அமைப்பு, அதிகாரங்களை எடுத்துரைத்தல் (ஆ) அரசாங்கமும், சமுதாயமும் இணைந்து உருவாக்க வேண்டிய வருங்கால சமுதாயத்தின் தன்மையைக் குறிப்பிடுதல். அதாவது நாடு முன்னோக்கிச் செல்வதற்கு நடப்பு நிலைமைகளை எவ்வாறு மாற்ற வேண்டும் என்பதை அரசியலமைப்புச் சட்டம் குறிப்பிட்டு முக்கியமாக வருங்காலத்தின் வடிவமைப்பினை எடுத்துரைக்கிறது.

நேபாளத்தில் அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைக்கும் செயல்முறை 2007ல் தொடங்கப்பட்டாலும் 2014ஆம் ஆண்டு தற்போது வரை இன்னும் நிறைவு பெறவில்லை. இதற்குக் காரணம் நேபாளத்தின் பல்வேறு அரசியல் போக்குகள் பல அரசியல் பிரச்சினைகள் மீது பொதுவான கருத்திற்கு வராமல் போனதே ஆகும்.

இவ்வாறு அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைக்கும் செயல்முறை – விவாதங்கள், கலந்துரையாடல்கள், கருத்து வேறுபாடுகளை தீர்த்தல், அனைத்து முரண்பாடான கருத்துக்களையும் ஏற்றுக்கொள்வதற்கான வடிவமைப்பை செயல்படுத்துதல் போன்றவை இந்தியாவில் எவ்வாறு நிகழ்ந்தது என்பதைப் பார்ப்போம்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

### இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குதல் :

இந்திய அரசியலமைப்புச் சட்டம் அரசியல் நிர்ணய சபையால் தயாரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது பிரிட்டிஷ் குடியேற்ற ஆட்சியிலிருந்து விடுதலைக்கு இந்திய மக்களின் நீண்ட காலப் போராட்டத்தின் முடிவாகும். பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய மக்களுக்கு சுதந்திரம் தர முடிவு செய்ததால் இந்திய மக்களுக்கு தங்களை தாங்களே ஆள்வதற்கும் தங்களுக்கென நீண்ட கால நோக்கங்களை அமைத்துக் கொள்வதற்கும் ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டம் தேவைப் பட்டது.




படம் 15.1

இதற்காக 1946ல் மாகாண சட்டசபைகளுக்கு தேர்தல் நடந்த பின் அரசியல் நிர்ணய சபைக்கு தேர்தல்கள் நடந்தன. மாகாண சட்ட சபை உறுப்பினர்களால் மறைமுகமாக அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1946ல் மந்திரி சபைக்குழு நியமிக்கப்பட்டு ஒவ்வொரு மாகாணத்திற்கும், ஒவ்வொரு சுதேச சமஸ்தானங்களுக்கும் அல்லது சில மாநிலங்களடங்கிய குழுவிற்கும் இடங்களை ஒதுக்கியது. இதன்படி பிரிட்டிஷ் நேரடி ஆட்சியிலிருந்த மாகாணங்கள் மற்றும் பகுதிகள் 292 உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தன. அனைத்து சுதேச சமஸ்தானங்களும் சேர்ந்து 93 உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தன. ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் அந்த மாகாணங்களில் அந்தந்த இன மக்கள் தொகையைப் பொருத்து முஸ்லீம்கள், சீக்கியர்கள், மற்றவர்கள் இருக்கும்படி இந்த தேர்தலை நடத்தினர். அரசியல் நிர்ணய சபையில் அட்டவணை வகுப்பைச் சேர்ந்த 26 உறுப்பினர்கள் இருக்கும்படியும் செய்தனர். மாகாண சட்ட சபைகளில் தேர்தல்கள் நடத்தப்பட்ட சமயத்தில் ஆலோசனை வாயிலாக சுதேச சமஸ்தானங்களின் பிரதிநிதிகள் கண்டறியப்பட்டனர். மொத்தத்தில் அதில் 217 உறுப்பினர்கள் இருந்தாலும் அதில் ஒன்பது பேர் மட்டுமே பெண்கள் இருந்தனர். இதில் 69% இடங்களுடன் இந்திய தேசிய காங்கிரஸ் மிகப்பெரிய கட்சியாக இருந்தது. அதைத் தொடர்ந்து அதற்கு அடுத்தபடியான இடத்தில் முஸ்லீம்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் முஸ்லீம் லீக் அதிக இடங்களை வென்றது. முதலில் பிரிட்டீஷ் இந்தியாவைச் சேர்ந்த அனைத்துப் பகுதி உறுப்பினர்களும் இதில் இருந்தனர். ஆனால் 1947 ஆகஸ்ட்டு 14க்குப் பின் நாடு இந்தியா மற்றும் பாகிஸ்தான் எனப் பிரிக்கப்பட்டதால் பாகிஸ்தானின் உறுப்பினர்கள் பாகிஸ்தானுக்காக தனிப்பட்ட அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்திக் கொண்டனர்.

அரசியல் நிர்ணய சபை வயது வந்தோர் வாக்குரிமைப்படி தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். இதற்கு மறைமுகமாக தேர்தல்கள் நடத்தப்பட்டன. எனினும் இந்திய சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவினர்களுக்கும் இது பிரதிநிதித்துவம் வகிக்கவில்லை. அப்பொழுது மக்கள் தொகையில் 10% மக்களுக்கு மட்டுமே மாகாணத் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை இருந்தது. அதோடு மட்டுமின்றி, சுதேச சமஸ்தானங்களின் பிரதிநிதிகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. சம்பந்தப்பட்ட சுதேச சமஸ்தானங்களின் உறுப்பினர்கள் ஆலோசனைகளின் வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். விடுதலை பெறவிருக்கும் சமயத்தில் தீவிரமான அரசியல் செயற்பாடுகள் மக்களிடையே பெருகிவரும் பதற்றங்களுக்கிடையே இந்த முடிவுகளை எடுத்தனர். இந்தியாவுடன் இணைய வேண்டும் என்று சுதேச சமஸ்தானங்கள் இன்னும் முடிவு செய்யவில்லை. அவர்களில் பலர் தனித்த சிற்றரசுகளாகவே இருக்க விரும்பினர். எனவேதான் அவர்களுடைய பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையில் இணையும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். முதலில் முஸ்லீம் லீக் உறுப்பினர்கள் இதன் கூட்டங்களில் கலந்து கொள்ளாவிட்டாலும் பின்னர் இணைந்துவிட்டனர்.



படம் 15.2 - இப்படத்தில் உள்ள சமத்துவம் மற்றும் நீதிக் கருத்துக்களைப் பற்றி கலந்துரையாடு



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அரசியல் நிர்ணய சபை அனைவருக்கும் பிரதிநிதித்துவம் வகிக்காவிட்டாலும் அனைத்து விதமான கருத்துக்களையும் கவனத்திற்குள் கொண்டுவர மிகுந்த அக்கறையை காட்டியது கடிதங்கள், செய்தித் தாள்களில் கட்டுரைகள் மற்றும் பிற வழிகள் மூலமாகவும், அனைத்து வகையான மக்களும் தங்களுடைய சுயப்பணிக்கு பரவலான பிரச்சாரத்தை ஏற்படுத்தியது. 1946 டிசம்பர் 13ல் அரசியல் நிர்ணய சபையில் ஜவஹர்லால் நேரு இந்த முக்கிய அறிவிப்பை செய்தார்.



படம் 15.3

.......... நாம் பெறவிரும்பும் இந்தியாவின் எதிர்காலம் ஒரு குழு அல்லது ஒரு பிரிவு அல்லது மாகாணம் அல்லது மற்றவற்றுடன் வரம்புக்குட்பட்டது அல்லது. இது நாட்டின் 40 கோடி மக்களுடன் தொடர்புடையது... இங்கு இல்லாதவர்களை நினைவிற்கொள்வது நம் கடமை, இங்கு ஒரு கட்சிக்காகவோ அல்லது ஒரு குழுவிற்காகவோ பணியாற்றுவதற்கு நாம் இங்கு வரவில்லை. நாடு முழுமைக்காகவும் நாம் சிந்தனை செய்ய வேண்டும். இந்தியாவின் 40 கோடி மக்களையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். நம் சுய நலன்களிலிருந்தும், கட்சிப் பூசல்களிலிருந்தும் இயன்ற அளவில் நாம் வெளியேறி நம்முன் உள்ள மிகப்பெரிய சிக்கலைப் பற்றி மிகவும் பரந்த அளவில், மிகவும் சகிப்புத் தன்மையுடனும், மிகவும் திறமையான முறையிலும் சிந்தித்து, நாம் எதை உற்பத்தி செய்தாலும், அது இந்தியா முழுமைக்கும் பயன்படுவதாக இருக்க வேண்டும். இந்த மிகவும் பொறுப்புணர்வு மிக்க செயல்திட்டத்தில் நடந்துக் கொள்ள வேண்டிய முறையில் நாம் நடந்துக்கொண்டதாக உலகம் போற்றும்படி திகழ வேண்டும்.

டாக்டர் B.R. அம்பேத்கர் தலைமையில் ஒரு சட்ட வரைவுக்குழு அமைக்கப்பட்டது. அனைத்துக் கருத்துக் கூறுகளையும் கவனத்தில் கொண்டு ஒரு இறுதி வரைவினை தயாரிப்பது அதன் பணியாக இருந்தது. அரசியலமைப்புச் சட்டத்தின் பல்வேறுபட்ட முக்கியக் கருத்துகளை மிகவும் ஆழ்ந்து விவாதிக்கப்பட்டது. அரசியல் நிர்ணய சபை அவற்றின் மீது அகன்ற வழிகாட்டுதல் களைக் தந்தது. இதை விவாதிக்கவும் ஒப்புதலைப் பெறவும் இறுதி வரைவினை அரசியல் நிர்ணயசபையின் முன் வைத்தனர். இறுதியாக இச்சபை 1949 நவம்பர் 26 அன்று அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்டது. இது 1950 ஜனவரி 26 அன்று நடைமுறைக்கு வந்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள முக்கியக் கருத்துக்கள் தெரிந்துகொள்வதற்கு அரசியல் நிர்ணய சபையின் சில முக்கியமான விவாதங்களை இப்பொழுது காணலாம்.

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்தியாவின் மக்களாகிய நாங்கள் என்னும் வாக்கியத்துடன் தொடங்குகிறது. இந்திய மக்களனைவருக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கிறோம் என்று கூறுவது நியாயமானது என்று நீ கருதுகிறாயா?
- நாடு முழுமைக்கும் அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைப்பதில் இந்திய மக்கள் அனைவரும் கலந்துகொள்ள முடியும் என நீ கருதுகிறாயா?
- பள்ளி முழுமைக்கும் ஒரு அரசியலமைப்புச் சட்டம் வரைய வேண்டுமெனில் அதில் யாரெல்லாம் எவ்வாறு பங்குகொள்ள வேண்டும்?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

### அரசியல் நிர்ணயச்சபை விவாதங்களை அறிதல் :

1948ல் அரசியல் நிர்ணயசபையின் முன் Dr. BR அம்பேத்கர் அரசியலமைப்புச் சட்ட வரைவினை வைத்தார். அவருடைய உரையின் சிறு பகுதி இங்கு தரப்பட்டுள்ளது. இவை இந்திய அரசியல் நிர்ணய சபையின் உத்தரவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. (உரையின் குறிப்பிட்ட பகுதிகள் சுருக்கப்பட்டு.... புள்ளிகளுடன் காட்டப்பட்டுள்ளன)

டாக்டர் அம்பேத்கர் சட்ட வரைவினை தயாரித்த செயல்முறையை விவரிக்கத் தொடங்கினார். வயது வந்தோர் வாக்குரிமையுடன் அரசியல் நிர்ணய சபை தேர்ந்தெடுக்கப்படாததால் உறுப்பினர்களும், பொதுமக்களும் அதிகபட்ச அளவில் இதில் கலந்துகொள்ளுமாறு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை கவனிக்கவும்.

1948 நவம்பர் 4, வியாழக்கிழமை அரசியலமைப்புச் சட்டத்தின் வரைவு மதிப்பிற்குரிய டாக்டர் B.R. அம்பேத்கர் கூறுவதாவது ஜனாதிபதி அவர்களே! குழுவால் தயாரிக்கப்பட்ட சட்டத்தின் வரைவினை உங்கள் முன் வைத்து இதை கவனத்தில் கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறேன்.

அரசியல் நிர்ணய சபை எடுத்த பல்வேறு முடிவுகளுக்கேற்ப மத்திய அதிகாரக்குழு, மத்திய அரசியலமைப்புக் குழு, மாகாண அரசியலமைப்புக்குழு, அடிப்படை உரிமைகள், சிறுபான்மையினர், மலைவாழினப் பகுதிகள் போன்றவற்றின் மீதான ஆலோசனைக்குழு போன்ற வற்றின் அறிக்கைகளின் அடிப்படையில் அரசியலமைப்புச் சட்டத்தை தயாரிக்கும் பொறுப்பு அரசியலமைப்பு குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டது. சில கருத்துகளில் இந்திய அரசுச் சட்டம் 1935ல் உள்ள சட்ட நிபந்தனைகளை (கருத்துக்களை) பின்பற்ற வேண்டுமெனவும் அரசியல் நிர்ணய சபை வழிகாட்டியது... தனக்கு வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களை சட்ட வரைவுக் குழு நேர்மையுடன் செயல்படுத்தியது என்று நான் நம்புகிறேன்.

"சட்ட முன் வரைவு என்பது ஒரு எதிர்க்க முடியாத ஆவணமாகும். இதில் 315 சட்டப்பிரிவுகளும் 8 அட்டவணைகளும் உள்ளன. எந்த நாட்டு அரசியலமைப்புச் சட்டமும் இந்த சட்டமுன்வரைவினைப் போல் மிகப் பெரியதாக இருக்க முடியாது என்பதை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும்".

இந்த அரசியலமைப்புச் சட்ட முன்வரைவு 8 மாத காலம் வரை பொதுமக்கள் முன் வைக்கப் பட்டிருந்தது. அதிலுள்ள கருத்துக்களின் மீது தங்களுடைய கருத்துக்களை தெரிவிப்பதற்கு நண்பர்களுக்கும், திறனாய்வாளர் களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் போதிய சமயம் கிடைத்தது.

அரசியல் முறைமைக்குத் தொடர்புடைய பிற நாடுகளின் அனுபவங்களை நம் அரசியலமைப்புச் சட்டம் எவ்வாறு எடுத்துக் கொண்டது என்பதை இப்போது பார்ப்போம். இந்த உரையின் போது சட்ட வரைவுக் குழுத் தலைவரான டாக்டர் அம்பேத்கர் பிற நாட்டு அரசியலமைப்புச் சட்டங்களிலிருந்து பெற்ற செயல் முறைகளைப் பற்றி விளக்குகிறார்.

- விடுதலைக்கு முன் ஏறக்குறைய _____ நாட்களுக்கு முன்பு சட்ட வரைவுக்குழு நியமிக்கப்பட்டது.
- அரசியல் நிர்ணய சபை சிறப்புக்குழுக் களை முதலில், _____ , _____ , மற்றும் _____ சிறப்பு பிரச்சனைகளுக்காக அமைந்தது.
- இக்குழுக்களின் அறிக்கைகள் _____ ஆல் விவாதிக்கப்பட்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.
- டாக்டர் அம்பேத்கர் தலைமையிலான _____ குழு இந்த முடிவுகளை தன் சட்ட வரைவில் இணைக்க வேண்டியதாயிற்று.
- சட்ட வரைவு பிரிட்டிஷ் அரசால் இயற்றப்பட்ட_____ சட்டத்தின் நிபந்தனைகளையும் கருத்தில் கொண்டது.
- அது பொதுமக்களின் கருத்துக்களை தெரிவிப்பதற்கு _____ மாத காலம் வரை அவர்கள் முன் வைக்கப்பட்டது.
- அரசியலமைப்புச் சட்ட முன் வரைவில் _____ சட்டப் பிரிவுகளும் _____ அட்டவணைகளும் இருந்தன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அவற்றைப் படிக்கும் போது சட்ட முன்வரைவில் பாராளுமன்ற அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட நிறுவன அமைப்பைக் கண்டறிய முயற்சி செய்யவும். இந்தியா விடுதலை அடைந்த ஓராண்டிற்குப் பின் இந்த உரை வழங்கப்பட்டது என்பதை நினைவு கூர்க.



படம் 15.4
டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்

## பாராளுமன்ற அமைப்பு :

"அரசியலமைப்புச் சட்டத்தைக் கைகளில் வைத்தால் எந்த ஒரு அரசியலமைப்புச் சட்டத்தைப் பயிலும் மாணவனும் நிச்சயமாக இரண்டு வினாக்களை எழுப்புவர். முதலாவதாக அரசியலமைப்புச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அரசாங்க அமைப்பு எது? இரண்டாவதாக, அரசியலமைப்புச் சட்டத்தின் அமைப்பு என்ன? நான் இரண்டு வினாக்களில் முதல் வினாவுடன் தொடங்குகிறேன்."

அரசியலமைப்புச் சட்டத்தின் முன் வரைவில் இந்தியக் கூட்டமைப்பின் செயலாற்றும் தலைவராக குடியரசுத் தலைவர் முன் வைக்கப்பட்டுள்ளார். இந்த பட்டம் ஒருவருக்கு அமெரிக்கக் குடியரசுத் தலைவரை நினைவிற்குக் கொண்டு வரும். ஆனால், பெயரைத் தவிர அமெரிக்காவிலுள்ள அரசாங்கத்திற்கும் சட்ட முன் வரைவில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்கத்திற்கு குடியரசுத் தலைவர் முறையிலான அரசாங்கம் என்பர். அரசியலமைப்புச் சட்ட முன்வரைவு முன்மொழிவது பாராளுமன்ற முறையிலான அரசாங்கமாகும். இவை இரண்டும் அடிப்படையிலேயே வேறுபட்டவை.

அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் அரசாங்கத்தில் செயல்துறையின் தலைவராக விளங்குகிறார். நிர்வாகப் பொறுப்பு அவரிடம் உள்ளது. அரசியலமைப்புச் சட்ட முன் வரைவில் குறிப்பிடப்பட்டுள்ள குடியரசுத் தலைவர் பிரிட்டிஷ் அரசியலமைப்புச் சட்டத்தின் மன்னர் நிலையில் வைக்கப்பட்டுள்ளார். இவர் அரசின் தலைவரேயன்றி செயல்முறையின் தலைவரல்ல. அவர் நாட்டிற்குப் பிரதிநிதித்துவம் வகிக்கிறார். ஆனால் நாட்டை ஆள்வதில்லை. அவர் நாட்டின் சின்னமாக விளங்குகிறார். நிர்வாகத்தில் அவரது இடம் ஒரு சடங்குமுறையிலான கருவி அல்லது நாட்டின் முடிவுகளைத் தெரிவிக்கும் முத்திரை போன்றதாகும். அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அதிபரின் கீழ் பல்வேறு துறைகளுக்கு பொறுப்பு வகிக்கும் செயலாளர்கள் உள்ளனர். அதே போன்று இந்திய கூட்டமைப்பின் குடியரசுத் தலைவரின் கீழ் நிர்வாகத்தின் பல்வேறு துறைகளுக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர்கள் உள்ளனர். இங்கு மீண்டும் இவ்விரண்டிற்கும் அடிப்படை வேறுபாடு உள்ளது. அமெரிக்க அதிபர் தன் செயலாளர்களால் வழங்கப்படும் எந்த ஒரு அறிவுரையையும் ஏற்கவேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை. ஆனால் இந்தியக் கூட்டமைப்பின் குடியரசுத் தலைவர் அவருடைய அமைச்சர்களின் அறிவுரைக்கு மிகவும் கட்டுப்பட்டுள்ளார். அவர்களின் அறிவுரையை மீறி அவரால் ஏதும் செய்ய முடியாது அவர்களின் அறிவுரை இன்றியும் எதுவும் செய்ய முடியாது. அமெரிக்க அதிபர் எந்த சமயத்திலும் தன்னுடைய எந்த ஒரு செயலாளரையும் பதவி நீக்கம் செய்யலாம்.

- இந்தியக் குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் ________ ன் அதிகாரங்களை விட ________ அதிகாரங்களை ஒத்துள்ளது.
- இந்தியக் குடியரசுத் தலைவர்________.அறிவுரைகளை பின்பற்ற வேண்டுமென அரசியல் நிர்ணய சபைக் கூறியுள்ளது.
- பிரிட்டிஷ் மன்னருக்கும் இந்தியக் குடியரசுத் தலைவருக்குமிடையே உள்ள வேறுபாடுகள் என்ன?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு இருக்கும் வரை இந்தியக் குடியரசு தலைவருக்கு அமைச்சர்களை பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் இல்லை.

### கூட்டாட்சி அமைப்பு :

வரலாற்றில் முக்கியமாக இரண்டு வகையான அரசியலமைப்புச் சட்டம் வடிவங்கள் உள்ளன. ஒன்று ஒற்றையாட்சி முறை இரண்டாவது கூட்டாட்சி முறை. ஒற்றையாட்சி அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள இரண்டு முக்கியமான பண்புகளாவன. 1. மத்திய அரசியல் அமைப்பின் மேலாதிக்கம் (அரசியல் அமைப்பு என்பது இங்கு அரசாங்க அமைப்பு அல்லது அரசியல் நிறுவனமாகும்) (2) துணை இறையாண்மை கொண்ட அரசியல் அமைப்புகள் இல்லாமை. இதற்கு மாறாக, கூட்டாட்சி முறையிலான அரசியலமைப்புச் சட்டத்தில், (1) மத்திய அரசியல் அமைப்பும், துணை அரசியல் அமைப்புகளும் அருகருகே இருத்தல் (2) அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட துறைகளில் இவ்விரண்டும் இறையாண்மைக் கொண்டிருத்தல். வேறுவிதமாகக் கூறினால் கூட்டாட்சி முறை என்பது இரட்டை அரசியல் அமைப்பை ஏற்படுத்துதலாகும். மாநிலங்களுடன் கூடிய இரட்டை அரசாங்க முறை அரசியலமைப்புச் சட்ட முன் வரைவினை கூட்டாட்சி முறையிலான அரசியலமைப்புச் சட்டம் என்று கூறலாம். இது இரட்டை அரசியல் அமைப்பை ஏற்பாடு செய்கிறது. முன்மொழியப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் உள்ள இந்த இரட்டை அரசியல் அமைப்பு மத்திய அளவில் கூட்டமைப்பினையும் (மத்திய அரசாங்கம்), அவற்றின் சுற்றுப்புறங்களில் மாநில அரசாங்கங்களையும் கொண்டுள்ளது. அரசியல் அமைப்புச் சட்டம் இவற்றிற்காக ஒதுக்கிய துறைகளில் இறையாண்மை அதிகாரங்களை இவை கொண்டுள்ளன.

இந்த இரட்டை அரசியலமைப்பு முறை அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தைப் போன்று உள்ளது. அமெரிக்க அரசியல் அமைப்பும் இரட்டை அரசியல் அமைப்பு முறையேயாகும். இவற்றில் ஒன்றினை கூட்டாட்சி அரசாங்கம் என்றும் மற்றொன்றை மாநில அரசாங்கம் என்றும் அழைப்பர். இது நம் அரசியலமைப்புச் சட்ட முன் வரைவில் உள்ள மைய அரசாங்கத்தையும், மாநில அரசாங்கத் தையும் ஒத்துள்ளது. அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ்உள்ள கூட்டாட்சி அரசாங்கத்தின் துறைகளும் அல்ல. இந்திய, அமெரிக்க அரசியலமைப்புச் சட்டங்களுக்கி டையேயான ஒற்றுமை இத்துடன் முடிந்துவிடுகிறது. இவை இரண்டிற்குமிடையே ஒற்றுமைகளைக் காட்டிலும் வேற்றுமைகளே வெளிப் படையாகத் தெரிகின்றன.

- கூட்டாட்சி அரசியல் அமைப்பில் ஒன்றுக்கும் மேலான அரசாங்கங்கள் உள்ளன. இந்தியாவைப் பொறுத்தவரை அவை ________ ________ நிலைகளில் உள்ளன. நீங்கள் ________ மாநிலத்தையும் ________ நாட்டையும் சேர்ந்தவர்களாக இருக்கிறீர்கள்.
- எவ்வகையான அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கத்திற்கு அதிக அதிகாரங்கள் உள்ளன?
- மத்திய மாநில அரசாங்கங்களுக்கு எந்த அரசியலமைப்புச் சட்டம் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களை வழங்குகிறது?
- இந்தியாவின் மாநிலங்கள் எவ்விதத்தில் மத்திய அரசாங்கத்தின் நிர்வாகப் பிரிவுகள் அல்லது துறைகள் அல்ல?
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைத்தவர்கள் இரட்டைக் குடியுரிமை (இந்தியா மற்றும் மாநிலத்தின்) கருத்தை மறுத்தது ஏன் என நீ கருதுகிறாய்?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

முன்மொழியப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஒற்றைக் குடியுரிமை கொண்ட இரட்டை அரசியல் அமைப்பாகும். இந்தியா முழுமைக்கும் ஒரு குடியுரிமை மட்டுமே உள்ளது. இதுவே இந்தியக் குடியுரிமை மாநிலக் குடியுரிமை இல்லை ஒவ்வொரு இந்தியனும் எந்த மாநிலத்தில் இருந்தாலும் ஒரேவிதமான குடியுரிமையைக் கொண்டு விளங்குகிறான்.

இந்தியக் கூட்டாட்சி அமைப்பில் உள்ள மற்றொரு சிறப்புக்கூறு அதை மற்ற கூட்டாட்சி அமைப்புகளிலிருந்து வேறு படுத்திக் காட்டுகிறது. அதிகாரப் பகிர்வுடன், தனிப்பட்ட சட்டத்துறை, செயல்துறை, நீதித்துறைகளுடன் உள்ள இரட்டை அரசியல் அமைப்புகளுடன் கூடிய கூட்டாட்சி அமைப்பில் வேறுபட்ட சட்டங்கள், நிர்வாகம், நீதிப்பாதுகாப்பும் வழங்குவதற்கு அரசிலயமைப்புச்சட்டம் கடமைப்பட்டுள்ளது. குறிப்பிட்ட அளவு வரை இந்த வேற்றுமையை கருத்தில் கொள்ள வேண்டியதில்லை. உள்ளூர் தேவைகள், உள்ளூர் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அரசாங்கத்தின் அதிகாரங்களை மாற்றிக் கொள்ளும் முயற்சியாக இதை வரவேற்கலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட நிலைக்கு மேல் இந்த வேறுபாடு இருந்தால் அது குழப்பத்தை ஏற்படுத்தி விடும். இவ்வாறு பல கூட்டாட்சி நாடுகளில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. திருமணம், மணமுறிவு, சொத்துக்களின் வாரிசுரிமை, குடும்ப உறவுகள், ஒப்பந்தங்கள், குற்றங்கள், எடைகள் மற்றும் அளவீடுகள், மசோதாக்கள், காசோலைகள், வங்கியியல் மற்றும் வர்த்தகம், நீதியைப் பெறும் வழிமுறைகள், நிர்வாகத்தின் தரம் மற்றும் முறைகள் போன்றவற்றிற்கு – கூட்டாட்சியில் இருபது மாநிலங்கள் உள்ளன என்று வைத்துக் கொள்வோமானால், இருபது வகையான சட்டங்கள் இருந்தால் சூழ்நிலை எவ்வாறு இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். இது போன்ற விவகாரங்கள் மாநிலங்களை பலவீனப்படுத்துவது மட்டுமின்றி ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குச் செல்லும் குடிமகனை சகித்துக் கொள்ளாது. ஒரு மாநிலத்தில் சட்டதிற்குட்பட்டது மற்றொரு மாநிலத்தில் சட்டங்களுக்குட்படுவதில்லை என்று தெரிந்து கொள்கிறான். இந்தியா கூட்டாட்சி அமைப்பாக இருந்து, அதே நேரத்தில் இந்தியாவின் ஒற்றுமையைக் காக்கத் தேவையான அனைத்து அடிப்படைக் கருத்துக்களிலும் முறைகளையும் வடிவமைப்பதற்கு கொண்டிருக்கும்படி வழிமுறைகளையும் முறைகளையும் வடிவமைப்பதற்கு அரசியலமைப்புச் சட்ட முன் வரைவு முயற்சி செய்தது. இதற்காக அரசியலமைப்புச் சட்ட முன் வரைவு மூன்று வழிமுறைகளைப் பின்பற்றியது. அவை :

1. ஒற்றை நீத்துறை
2. சமூக மற்றும் குற்றவியல் தொடர்பான அடிப்படைச் சட்டங்களில் ஒத்தநிலை
3. முக்கியமான பதவிகளில் நியமிக்க நாடு முழுமைக்கும் பொதுவான அனைத்திந்திய உள்நாட்டுச் சேவைகள்.

அனைத்திந்திய அமைப்பிலுள்ள இரட்டை அரசியல் அமைப்பில் இரட்டை நீதித்துறை, இரட்டை சட்ட விதிமுறைகள், இரட்டை உள்நாட்டு சேவைகள் இயற்கையாக அமையப் பெற்றுள்ளன. அமெரிக்காவில் கூட்டாட்சி நீதிதுறையும், மாநில நீதிதுறையும் தனித்தனியே காணப்படுகின்றது.

அவை ஒன்றுக்கொன்று தனித்து சுதந்திரமாக செயல்படுபவை இந்தியக்கூட்டாட்சியில் இரட்டை அரசியல் அமைப்புகள் இருப்பினும் இரட்டை நீதிதுறைகள் இல்லை. உயர்நீதி மன்றமும், உச்ச நீதி மன்றமும் ஒருங்கிணைந்த ஒரே நீதித்துறையின் பாகமே ஆகும். அரசியலமைப்புச் சட்டம் குடியுரிமைச் சட்டம், குற்றவியல் சட்டங்களின் கீழ் அனைத்து வழக்குகளிலும் இதன் எல்லை இருந்து தீர்வுகளை வழங்க இயலும். தீர்வுகள் வழங்கும் செயல்முறையில் வேறுபாடு இல்லாமல் செய்வதற்கு இவ்வாறு செய்தனர். இதற்கு கனடா நாடு ஒன்று மட்டுமே மிகவும் நெருக்கமான இணையாக உள்ளது. ஆஸ்திரேலியாவின் முறையும் இதுவும் ஒரே மாதிரியாக காணப்பட்டாலும் இவை ஒன்றல்ல (விளக்கம் சில கூட்டாட்சி நாடுகளில் மாநிலச் சட்டங்களுடன் தொடர்புடைய மாநில நீதிமன்றங்களின் தீர்ப்புகளை உச்ச நீதிமன்றம் மாற்ற முடியாது. ஆனால் இந்தியாவில் எந்த கீழ் நீதி மன்றங்களின் முடிவுகளையும் எதிர்த்து உச்சநீதி மன்றம் மேல் முறையீடுகளைக் கேட்டு தீர்ப்பு வழங்கும்?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



*படம் 15.5 1950ஆம் ஆண்டின் குடியரசு தின விழாவின் படம்,*

உள்நாட்டு, வியாபார வாழ்க்கைக்கு அடிப்படையான சட்டங்களில் உள்ள வேற்றுமைகளைக் களைவதற்கு எச்சரிக்கை மேற்கொள்ளப்பட்டது. சமூகத் தொடர்பான செயல்முறைச் சட்டத் தொகுப்பு, குற்றவியல் சட்டத் தொகுப்பு, போன்ற சட்டங்களின் நியதிகள், சாட்சிகளின் சட்டம், சொத்து மாற்றும் சட்டம், திருமணம், மணமுறிவு, வாரிசுரிமைத் தொடர்பான சட்டங்கள் பொதுப் பட்டியலில் சேர்த்து கூட்டாட்சி முறை பாதிப்படையாமல் இந்த சட்டங்களில் ஒரே சீரான தன்மையைக் காத்தனர். (விளக்கம் : சட்டங்கள் இயற்றும்)

அம்சங்களை மத்தியப் பட்டியல், மாநிலப் பட்டியல் மற்றும் பொதுப் பட்டியல் (பொதுப்பட்டியல்) என பிரித்தனர். மத்தியப் பட்டியலில் உள்ள அம்சங்களின் மீது மத்திய அரசு மட்டுமே சட்டங்களை இயற்றும், பொதுப்பட்டியலில் உள்ள அம்சங்களின் மீது மாநில அரசும், மத்திய அரசும் சட்டங்களை இயற்றலாம், ஆனால், மத்திய அரசு இயற்றும் சட்டத்திற்கு புறம்பாக மாநில அரசு சட்டமியற்றினால் மத்திய அரசால் இயற்றப்பட்ட சட்டம் மட்டுமே செல்லுபடியாகும்.

கூட்டாட்சி முறையில் ஒரு பிரிவாக உள்ள இரட்டை அரசியல் அமைப்பில் அனைத்து நாடுகளிலும் இரட்டை சேவைகளின் முறையைப் பின்பற்றினர். அனைத்துக் கூட்டாட்சிகளிலும் கூட்டாட்சி உள்நாட்டு சேவை, மாநில உள்நாட்டு சேவை உள்ளன. இந்தியக் கூட்டமைப்பு இரட்டை அரசியல் அமைப்பாக இருந்தாலும் ஒரு விதிவிலக்குடன் இரட்டை சேவையைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் நிர்வாகத் தரத்தைக் காக்கும் நோக்கத்திலிருந்து நிர்வாக அமைப்பில் சில முக்கியமான பதவிகள் உள்ளன. மிகப்பெரிய, சிக்கலான நிர்வாக எந்திரத்தில் இதுபோன்ற பதவிகளைக் கண்டறிவது கடினமாகும். ஆனால் இதுபோன்ற முக்கிய பதவிகளில் நியமிக்கப்படும் ஊழியர்களின் திறனைப் பொறுத்து நிர்வாகத்தின் தரம் ஆதாரப்பட்டுள்ளது என்று கூறுவதில் ஐயம் ஏதுமில்லை. ஆனால் அதிர்ஷ்டவசமாக நாடு முழுமைக்கும் ஒரே விதமாக இருந்த கடந்த கால நிர்வாக அமைப்பிலிருந்து இந்த முக்கியமான பதவிகள் என்ன என்பது நமக்குத் தெரியும். மாநிலங்கள் தமக்குச் சொந்தமான உள்நாட்டு சேவைகளை ஏற்படுத்திக்கொள்ளும் உரிமைக்கு களங்கம் ஏற்படுத்தாமலேயே இந்தியா முழுவதும் இதுபோன்ற முக்கிய பதவிகளில் நியமிக்க ஒரேவிதமான தகுதி, ஒரே விதமான சம்பளத்துடன் அனைத்திந்திய அளவில் இங்கு பொதுப் பணித்துறை (IAS, IPS) ஏற்படுத்துவதைப் பற்றிக் குறிப்பிடுகிறார். மாநில, மற்றும் மத்திய அரசாங்கங்களின் முக்கியமான பதவிகளுக்கு இதன் மூலம் அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர்.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

- இந்தியக் கூட்டாட்சி முறைக்கும், அமெரிக்கக் கூட்டாட்சி முறைக்கும் இடையே உள்ள முக்கியமான வேற்றுமைகளைக் குறிப்பிடுக.
- மாநிலங்கள் தங்களின் சொந்த பொதுப்பணி ஊழியர்களை நியமித்துக் கொள்ள இந்திய அரசியலமைப்புச் சட்டம் அனுமதிக்கிறதா?
- ஒரு மாநிலத்திலுள்ள அதிகாரிகள் அனைவரும் மாநிலப் ஆட்சி பணியின் மூலம் நியமிக்கப்பட்டவர்களா?
- அமெரிக்காவில் மத்திய அரசாங்கத்தின் நீதித்துறையும், மாநில அரசாங்கத்தின் நீதித்துறையும் வெவ்வேறானவை. இந்தியாவில் மத்திய மற்றும் மாநில நீதித்துறைகள் ஒருங்கிணைந்த நீதித்துறையின் பகுதிகளாகும் – விளக்கம் தருக.

## அரசியல் நிர்ணய சபையின் விவாதங்களில் உள்ள விமர்சனங்களின் எடுத்துக்காட்டுகள் :

அரசியலமைப்புச் சட்ட முன்வரைவின் மீது பல விமர்சனங்கள் உள்ளன. 'மௌலானா ஹஸ்ரத் மொஹானி' போன்றவர்கள் அது 1935 சட்டத்தின் நகல் மட்டுமே என்று விவாதித்தனர். விடுதலைப் போராட்ட காலத்தில் இந்தியாவிற்கு மந்திரி சபைக் குழு வந்தபோது இந்திய தேசிய காங்கிரஸ் போன்ற அரசியல் குழுக்கள் வயது வந்தோர் வாக்குரிமையைக் கோரி, 1935 சட்டத்தை எதிர்த்ததை அது நினைவு படுத்துகிறது. 'தாமோதர் ஸ்வரூப் சேத்' போன்ற சோஷியலிச வாதிகள் தற்கால அரசியலமைப்புச் சட்டங்களிலிருந்து, எடுத்துக்காட்டாக, சோவியத் யூனியனிலிருந்து அரசியலமைப்புச் சட்ட முன் வரைவு எதையும் எடுத்துக் கொள்ளவில்லை என்றும், இந்தியச் சூழ்நிலையில் முக்கியமான கிராமங்களை மறந்து விட்டனர் என்று விமர்சனம் செய்தார். அரசியல் நிர்ணயம் சபை உறுப்பினர்கள் வயது வந்தோர் வாக்குரிமை மூலம் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றும் வாதித்தார். அவருடைய குற்றச்சாட்டுகளை தெரிந்து கொள்வோம்.

D.S. சேத், ஐயா, நம் இந்தியக் குடியரசு சுய அதிகாரம் கொண்ட சிறிய குடியரசுகளின் கூட்டமைப்பாக இருக்க வேண்டியிருந்தது. இந்த வகையில் நம் நாட்டில் ஏற்பட்ட கூட்டமைப்பில் அதிகாரம் மையப்படுத்துதலுக்கு கற்றறிந்த டாக்டர் அம்பேத்கர் வலியுறுத்தியது போல் அதிக முக்கியத்துவம் தேவைப்பட்டிருக்கப்போவதில்லை. சில சமயங்களில் மையப்படுத்துதல் நல்ல, பயன்மிக்கதாக இருப்பினும் மகாத்மா காந்தி தன் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்திய உண்மையான அதிகாரத்தைப் பெருமளவில் மையப்படுத்துதல் அது முடியாட்சி அதிகாரமாக மாறி பாஸிசக் கொள்கைகளை நோக்கி நம்மை அழைத்துச் செல்லும் என்பதையும் நாம் மறந்துவிட்டோம். முடியாட்சி பாஸிசம் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பைப் பெறுவதற்கான ஒரே வழி இயன்ற அளவிற்கு அதிகாரம் மையப்படுத்துதலை தளர்த்துவதே ஆகும். இவ்வாறு நாம் உலகில் வேறெங்கும் பொருந்தாத வகையில் இதயங்களை இணைத்து இது போன்ற அதிகார மையப்படுத்தினால் அது இயற்கையான சூழ்நிலையில் (இவ்வளவு காலம் வரை நம் நாடு பாஸிசக் கொள்கையை எதிர்த்து வந்தது – இன்றும் நாம் அதை உறுதியாக எதிர்க்கிறோம் என்று கூறி வருகிறோம். – பாஸிசத்தை நோக்கி படிப்படியாக இட்டுச் செல்லும்.

- சேத் மற்றும் வரைவுக் குழுவின் கருத்துக்கள் ஒரே மாதிரியாக உள்ளனவா அல்லது வேறுபட்டுள்ளனவா?
- அரசியலமைப்புச் சட்டதின் 42 திருத்தம் செய்த பின்னர் கிராமங்களுக்கு எதுபோன்ற தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட்டது என்பதை தெரிந்து கொள்ளவும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## அடிப்படை உரிமைகளின் மீதான விவாதங்களுக்கு எடுத்துக்காட்டு

சமத்துவ உரிமைச் சூழலில் தீண்டாமை என்னும் நடைமுறைக்கு சட்டப்படி முடிவு கட்ட வேண்டுமென முடிவு செய்தனர். அடிப்படை உரிமைகளின் மீதான விவாதங்களில் சில பகுதிகளைப் படித்து வேறுபட்ட கருத்துகளை புரிந்து கொள்வோம்.

1947 ஏப்ரல் 29, செவ்வாய்க்கிழமை

குடியரசுத் தலைவர் (மரியாதைக்குரிய டாக்டர் இராஜேந்திரப் பிரசாத்) கூட்டத்தில் உள்ளார்

திரு. புரோமாதா ரஞ்சன் தாகூர் ஐயா 6-வது கட்ட உட்பிரிவில் தீண்டாமையைப் பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

"தீண்டாமை எந்த வடிவத்திலிருப்பினும் அது தடை செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் விதிக்கப்படும் எந்த ஒரு வேற்றுமையும் குற்றம் எனக்கருதப்படுகிறது.

"சாதி முறையை ஒழிக்காமல் தீண்டாமையை எப்படி ஒழிக்க முடியும் என்பது எனக்குப் புரியவில்லை. தீண்டாமை என்பது சாதிமுறை என்று அழைக்கப்படும் நோயின் அறிகுறியாகும். சாதி முறையை வேரோடு சாய்த்தாலன்றி மேலோட்டமாக தீண்டாமை என்னும் சிக்கலை குணப்படுத்துவதில் பயனில்லை.

"S.C.பேனர்ஜி ஜனாதிபதி அவர்களே! தீண்டாமை என்னும் சொல்லுக்கு முதலில் விளக்கம் தரவேண்டும். கடந்த 25 வருடங்களாக இச்சொல்லை நாம் பயன்படுத்தி வருகிறோம். ஆனாலும் இன்று வரை அது எதைக்குறிப்பிடுகிறது என்பதில் பெருத்த குழப்பம் இன்னும் நீடிக்கிறது. சில வேளைகளில் இதன் பொருள் ஒரு குவளை தண்ணீர் எடுத்துக்கொள்வது என்றும், சில சமயங்களில் அரிஜன மக்களை ஆலயத்திற்குள் அனுமதிப்பது என்றும், சில வேளைகளில் சாதிபேதமின்றி உணவருந்துவது என்றும் சில வேளைகளில் கலப்புத் திருமணம் என்றும் கருதப்படுகிறது. தீண்டாமையை அழிக்க தீவிரமாக பாடுபட்ட மகாத்மா காந்தி அதை பல்வேறு வழிமுறைகளில், பல்வேறு சமயங்களில் பல்வேறு பொருள்களில் பயன்படுத்தினார். எனவே தீண்டாமை என்னும் சொல்லை நாம் பயன்படுத்தும்போது அதன் உண்மையான பொருள் என்ன என்பதை நம் மனதில் மிகவும் தெளிவாக வைத்துக்கொள்ள வேண்டும். இந்த சொல்லின் உண்மையான பொருள் என்ன?"

தீண்டாமைக்கும், சாதி வேற்றுமைக்கும் நாம் வேறுபாடு காட்டக் கூடாது. திரு.தாகூர் கூறியபடி தீண்டாமை என்பது ஒரு அறிகுறி மட்டுமே. அதன் வேறு காரணம் ஜாதி முறையாகும். வேறு காரணத்தை அதாவது சாதி முறையை அழித்தாலன்றி தீண்டாமை ஏதோ ஒரு வடிவில் அல்லது மறு வடிவில் இருக்கத்தான் செய்யும். சுதந்திர இந்தியா ஏற்பட்ட பிறகு அனைவரும் சமமான சமுதாய நிலைகளைப் பெற்று மகிழ வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

திரு.ரோகிணி குமார் சௌதரி தீண்டாமையை வரையறுப்பதற்கு தெளிவுடன் இவ்வாறு குறிப்பிட வேண்டும். மதம், சாதி அல்லது சட்டப்படியான வாழ்க்கைத் தொழில் அடிப்படையில் வேற்றுமை காட்டும் எந்த ஒரு செயலையும் தீண்டாமை என்று கூறலாம்.

திரு. **K.M.**முன்ஷி ஐயா, நான் இந்த சட்டத்திருத்தத்தை எதிர்க்கிறேன். இந்த வரையறையை ஏற்றுக்கொண்டால் பிறந்த ஊர், சாதி அல்லது பாலின அடிப்படையில் காட்டப்படும் வேறுபாடும் தீண்டாமை என்று கருதப்படும்!!



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



The Statesman

LATE CITY EDITION

Incorporating and directly descended from THE FRIEND OF INDIA —Founded 1817

PUBLISHED SIMULTANEOUSLY FROM CALCUTTA AND DELHI

REG. No. C193 CALCUTTA, THURSDAY, JANUARY 26, 1950 Price, including 28 Page Supplement, TWO ANNAS

INDIA EMERGES AS REPUBLIC TODAY

Of Significance To People, Says Nehru

CALL FOR UNITY AND TOLERANCE

Offer Of Friendship To All Nations

TODAY'S PROGRAMME IN CALCUTTA

SOEKARNO ADDRESSES INDIAN M.P.s

CONGRATULATIONS ON BIRTH OF NEW REPUBLIC

Communists Expel British Managers

BURMA OILFIELDS WORKERS' CLAIM

Gunmen Kill Two Policemen

Proclamation As Republic

Ceremony This Morning

PROVINCIAL BORDERS TO BE "RATIONALIZED"

Night Curfew In Bandoeng

2 Of Crew Killed In Plane Crash

REPUBLIC DAY HOLIDAY

THE REPUBLIC OF INDIA

26th January 1950

WE, THE PEOPLE OF INDIA, having solemnly resolved to constitute India into a SOVEREIGN DEMOCRATIC REPUBLIC and to secure to all its citizens:

JUSTICE, social, economic and political;

LIBERTY of thought, expression, belief, faith and worship;

EQUALITY of status and of opportunity; and to promote among them all

FRATERNITY assuring the dignity of the individual and the unity of the Nation;

IN OUR CONSTITUENT ASSEMBLY DO HEREBY ADOPT, ENACT AND GIVE TO OURSELVES THIS CONSTITUTION.

The preamble to the Constitution of the Republic of India.

Hallmarks of quality

"REXINE" • "VYNIDE"

படம் 17.1 1950 ஜனவரி 26ஆம் நாளின் செய்தித்தாள் அறிக்கை இந்தப் பக்கத்தில் நீங்கள் எந்தெந்த அம்சங்களை படிக்கலாம்?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

- மேலே உள்ள விவாதத்தில் என்னென்ன கருத்து வேறுபாடுகள் எழுப்பப்பட்டுள்ளன?
- விவாதித்ததில் கலந்துகொள்ள உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தால் நீங்கள் என்ன தீர்வினை வழங்கியிருப்பீர்கள்?
- அரசியலமைப்புச் சட்டத்தில் தீண்டாமை என்னும் சொல்லை வரையறுக்காமல் விட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என நீ கருதுகிறாயா? உன் வாதத்திற்கான காரணங்களைத் தரவும்.
- தீண்டாமையை மட்டுமின்றி அரசியலமைப்பு சட்டம் சாதி முறையுடன் தொடர்புடைய அனைத்து கருத்துக்களுக்கும் முடிவு கட்டியிருக்க வேண்டும் என்னும் கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? இது எவ்வாறு செய்திருக்க வேண்டுமென நீ கருதுகிறாய்?

திரு தீரேந்திரநாத் தத்தா ஐயா, திரு.ரோகிணி குமார் சௌதரியால் தரப்பட்ட வரையறையை ஏற்றுக் கொள்கிறார்களோ இல்லையோ, ஆனால் ஏதோ ஒரு வரையறை இருக்க வேண்டும் என்பது என் கருத்து. தீண்டாமை எந்த வடிவில் இருந்தாலும் அது குற்றம்தான். என்று இங்கு குறிப்பிட்டுள்ளார். குற்றங்களை ஆராயும் நீதிபதி அல்லது மேஜிஸ்ட்ரேட் வரையறையிலிருந்து பார்த்தோமானால் ஒரு மேஜிஸ்டிரேட் ஒரு தனிப்பட்ட கருத்தை தீண்டாமை எனக் கருதினால் மற்றொரு மாஜிஸ்டிரேட் வேறொரு விஷயத்தை தீண்டாமை எனக் கருதலாம். அதன் விளைவாக இந்த குற்றங்களை ஆராயும் மாஜிஸ்டிரேட் களிடையே சீரான தன்மை இருக்காது. இவ்வகையான வழக்குகளில் தீர்ப்புகள் வழங்குவது நீதிபதிகளுக்கு மிகவும் சிரமமாக உள்ளது.

அதோடு மட்டுமின்றி தீண்டாமை என்பது பல்வேறு இடங்களில் பல்வேறு பொருள்படுகின்றது. வங்காளத்தில் தீண்டாமை என்றால் ஒரு பொருள் இருந்தால் மற்ற மாநிலங்களில் முழுவதும் வேறுபட்ட பொருள் உள்ளது.

ஜனாதிபதி அவர்களே நீதி மன்றங்கள் சரியான தீர்ப்பை வழங்கும்படி தீண்டாமை என்னும் சொல்லை மத்திய சட்ட சபை வரையறுக்கும் என நம்புகிறேன்.

இறுதியாக அரசியலமைப்புச் சட்டத்தில் தீண்டாமைக்கு வரையறையை தரக்கூடாது எனவும், எதிர்காலத்தில் தேவையான சட்டங்களை இயற்றும் பொறுப்பை சட்டசபைக்கு விட்டு விட வேண்டும் எனவும் முடிவு செய்தனர்.

## அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சமுதாய அமைப்பு :

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் இந்திய சமுதாயத்தின் சமமின்மைகள், அநீதி வசதிகள் இல்லை என்றும், சிக்கல்களை எதிர்கொள்கிறது என்றும், பொருளாதாரக் சுரண்டல்களை மேற்கொண்ட குடியேற்ற ஆட்சியாளர்களின் முறைகளுக்கு பலியானது என்றும் அறிந்தனர். எனவே அரசியலமைப்புச் சட்டம் முன்னேற்றத்துடன் சமுதாய மாற்றத்திற்கும் துணை புரிய வேண்டும் எனக் கருதப்பட்டது. கடந்த கால அரசியல், சமுதாய அமைப்பை மாற்றி முன்னோக்கிச் சென்று தனக்குத்தான் புதிய ஆடைகளை வடிவமைத்துக் கொள்ளும் நாட்டிற்கு அரசியல் நிர்ணய சபை பிரதிநிதித்துவம் வகிக்கிறது என்று ஜவகர்லால் நேரு கூறினார்.

எனவே சமுதாய மாற்றத்திற்கு துணைபுரியும் பல சலுகைகள் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளன. தீண்டாமையைத் தடுப்பது பற்றி நீங்கள் படித்தீர்கள். இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு, அரசியலமைப்புச் சட்டத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைவாழ் மக்களுக்கு இட ஒதுக்கீடு ஏற்படுத்திக் தருதல், இக்குழுவினர் பரம்பரையாக எதிர்கொண்டு வரும் அநீதிகளிலிருந்து விடுபடவும், அவர்களின் வாக்குரிமைக்கு உண்மையான பொருளை வழங்கவும், சமத்துவ உரிமை மட்டும் வழங்கினால் போதாது என அரசியலமைப்புச் சட்ட சிற்பிகள் நம்பினர். அவர்களின் நலன்களை ஊக்கப்படுத்துவதற்கு தனிப்பட்ட அரசியலமைப்புச் சட்ட நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. எனவே தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களின் நலன்களைக் காக்க சட்டசபை இட ஒதுக்கீடு போன்ற பல சிறப்பு நடவடிக்கைகளை அரசியலமைப்புச் சிற்பிகள் மேற்கொண்டனர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அரசியலமைப்புச் சட்டமும், இக்குழுக்களுக்கு பொதுத்துறைப் பணிகளை இட ஒதுக்கீடு செய்யவும் வாய்ப்பளித்தது.

அரசியலமைப்புச் சட்டத்தில் "அரசின் கொள்கைகளுக்கு வழிகாட்டும் நெறி முறைகள்" உள்ளன. இவை அரசாங்கத்தின் முன் முக்கிய சமுதாய அமைப்புகளை வைத்தன. சமுதாயக் கட்டமைப்பை அடைவதில் சிறுபான்மையினரின் உரிமைகளின் சிக்கல் முக்கியமான கூறுகளில் ஒன்றாக உள்ளது. நாஜிக் ஜெர்மனியில் யூத சிறுபான்மையினரை ஒடுக்கிய சோகமான அனுபவம் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களின் மனதை நெகிழ்வித்தது. சிறுபான்மையினத்தவருக்கு சிறப்புப் பாதுகாப்பு வழங்கி பெரும்பான்மையினர் தங்களை ஓரத்திற்குத் தள்ளிவிட்டனர் என்னும் கருத்து ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்தனர். மதத் தொடர்பான சிறுபான்மையினர் தங்களின் சுயமான கல்வி நிறுவனங்களை நிர்வகித்துக் கொள்ளும் உரிமை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இதுபோன்ற நிறுவனங்களுக்கு அரசாங்கம் நிதிகளையும் ஒதுக்கலாம்.

**அரசியலமைப்புச் சட்டத்தின் இன்றைய நிலை**

சட்டங்களை அவ்வப்போது திருத்த வேண்டியிருக்கும் என அரசியலமைப்புச் சட்ட சிற்பிகள் உணர்ந்திருந்தனர். எனவே அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள சட்டங்களையும், சட்டப்பிரிவுகளையும் திருத்துவதற்கான வழிமுறைகளையும் அது நன்கு விளக்கியுள்ளது. சட்ட சபைகளில் பாதிக்கு மேலான உறுப்பினர்களின் ஒப்புதலுடன் அவ்வப்போது சட்டங்களை இயற்றலாம். ஆனால் அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள சட்டப்பிரிவுகளின் திருத்தத்தை பாராளுமன்றம் மட்டுமே மேற்கொள்ள வேண்டும். அதோடு மட்டுமின்றி இராஜ்ய சபை மற்றும் லோக்சபை இரண்டிலும் 2/3 பங்கு உறுப்பினர்களின் ஒப்புதல் இதற்கு தேவைப்படுகிறது. அதே போன்று சில சட்டப்பிரிவுகள் மாநில சட்டசபைகளின் ஒப்புதலால் மட்டுமே திருத்த முடியும். மேலும் மற்ற சட்டங்களைப் போலவே புதிய சட்டத்திருத்த மசோதாவுக்கு நாட்டின் குடியரசுத் தலைவரின் ஒப்புதலும் தேவைப்படுகிறது.




*வரைபடம் அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாளான ஜனவரி 26, 1950லிருந்து 2013 வரை சுமார் 99 சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டன.*

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைப் பண்புகளில் உன்னால் கண்டறியப்பட்ட எடுத்துக்காட்டுகளையும் விளக்கங்களையும் குறிப்பிடுக.

அரசியலமைப்புச் சட்டத்திற்கு முக்கிய மாற்றங்கள் 1970களில் செய்யப்பட்டன. இவற்றில் முதலாவதாக அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் மத சார்பற்ற மற்றும் "சோஷியலிஸம்" என்னும் இரண்டு சொற்கள் இணைக்கப்பட்டது. சமத்துவம், சுதந்திரம், நீதி போன்ற முகப்புரையில் உள்ள பல சொற்கள் மதச்சார்பின்மை மற்றும் சோஷியலிஸம் ஆகியவற்றின் மதிப்புகளை வலியுறுத்துவதால் இச்சொற்கள் இணைக்கப்பட்டன. இந்திய அரசியலமைப்புச் சட்ட வரலாற்றில் இரண்டாவது முக்கிய நிகழ்வு யாதெனில் கேசவானந்த பாரதி வழக்கு என்று புகழப்பட்ட உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பு ஆகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சில கருத்துக்களை எந்த சூழ் நிலைகளிலும் திருத்துவதற்கில்லை என்று இதில் வாதாடப்பட்டது. இவற்றில் அடிப்படை உரிமைகளும் ஒன்றாகும். உச்ச நீதிமன்றம் கேசவானந்த பாரதி வழக்கின் தீர்ப்பில் நாட்டின் நிலைப்பாடு சில அடிப்படை விதிகளின் மீது ஆதாரப்பட்டுள்ளது என்று கூறியது. அடிப்படை விதிகள் எவை என்னும் கருத்தில் நீதிபதிகளிடையே கருத்து வேற்றுமைகள் இருந்தாலும் கீழ்காணும் கருத்துக்களில் ஒருமித்த நிலை ஏற்பட்டது. அவை அரசாங்கத்தின் அமைப்பு, கூட்டாட்சிப் பண்பு, அரசியலமைப்புச் சட்டத்தின் மேலாதிக்கம், நாட்டின் இறையாண்மை, நீதிக்கான வசதி வாய்ப்புகள் மற்றும் நன்னல அரசு போன்றவையாகும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## முக்கியச் சொற்கள்

சட்ட வரைவுக் குழு, அரசியல் நிர்ணய சபை, முகப்புரை பொதுப்பட்டியல், ஒற்றையாட்சி மற்றும் கூட்டாட்சி விதிமுறைகள், குடியுரிமை, குடியரசுத் தலைவர் மற்றும் பாராளுமன்ற அரசாங்க அமைப்புகள், சட்டத்திருத்தம்.

## உனது கற்றலை மேம்படுத்துக

1. வேறுபட்ட கூற்றை கண்டறியவும்.(AS1)
   - விடுதலைப் போராட்டத்தின் அனுபவங்களிலிருந்து இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஏற்பட்டது.
   - அக்காலத்தில் வழக்கிலிருந்த அரசியலமைப்புச் சட்டங்களிலிருந்து இந்திய அரசியலமைப்புச் சட்டம், வடிவமைக்கப்பட்டது.
   - அரசியலமைப்புச் சட்டத்தில் எழுதப்பட்டதை உள்ளது உள்ளபடி ஏற்றுக்கொண்டனர்.
   - நாட்டை ஆள்வதற்கு அரசியலமைப்புச் சட்டம் விதி முறைகள் மற்றும் சலுகைகளை வழங்கியது.
2. தவறான வாக்கியங்களை திருத்தியமைக்கவும்.(AS1)
   - அரசியல் நிர்ணய சபை விவாதங்களில் சில அம்சங்களின் மீது ஒருமித்த கருத்துக்களை தெரிவித்தனர்.
   - அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் நாட்டின் சில பகுதிகளுக்கு மட்டுமே பிரதிநித்துவம் வகித்தனர்.
   - அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள சட்டப்பிரிவுகளை திருத்துவதற்கு அது வாய்ப்பை வழங்கியது.
   - அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள அடிப்படைப் பண்புகளையும் திருத்தலாம் என உச்ச நீதிமன்றம் கூறியது.
3. அரசியல் அமைப்பு சட்ட நிர்ணயசபை விவாதங்களில் உள்ளபடி இந்திய அரசாங்கத்தின் ஒற்றை மற்றும் கூட்டாட்சி பண்புகளை விவரித்து எழுதுக.(AS1)
4. அக்கால நிகழ்வுகளை அரசியலமைப்புச் சட்டம் எவ்வாறு பிரதிபலிக்கிறது? விடுதலைப் போராட்டத்துடன் தொடர்புடைய கருத்துக்களை இதற்கு முன் படித்த பாடங்களிலிருந்தும் சேகரித்துக் கொள்ளவும்.(AS1)
5. அரசியல் நிர்ணய சபையை வயது வந்தோர் வாக்குரிமை மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தால் அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைப்பதில் அது எதுபோன்ற தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும்?(AS1)
6. இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள அடிப்படை விதிமுறைகளின் மீது ஒரு சிறு குறிப்பு வரைக.(AS1)
7. சிறு குறிப்பு வரைக. அரசியலமைப்புச் சட்டம், நாட்டின் அரசியல் அமைப்புகளை எவ்வாறு வரையறை செய்து மாற்றியது?(AS1)
8. மக்கள் அரசியல் அமைப்பில் ஈடுபடும்போது மட்டுமே சமுதாய மாற்றம் ஏற்படுகிறது. இக்கூற்றினை நீங்கள் ஏற்கிறீர்களா? உங்களுடைய காரணங்களைக் கூறவும்.(AS1)
9. கீழ்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறித்துக் காட்டுக.(AS5)
   (A) நேபாள் (B) ஜப்பான் (C) டில்- (D) அமெரிக்கா
10. பக்கம் 229ல் தரப்பட்டுள்ள செவ்வக வரைபடத்தை பரிசீ-த்து கீழ்காணும் வினாக்களுக்கு விடையளி.(AS3)
    (i) எந்த பத்தாண்டில் அதிகமான அரசியலமைப்பு சட்டத்திருத்தங்கள் செய்யப்பட்டன?
    (ii) 1961-70 காலத்தில் செய்யப்பட்ட சட்டத் திருத்தங்களோடு ஒப்பிடும்போது 1971-80 காலத்தில் எத்தனை அதிகபட்ச சட்டத்திருத்தங்கள் செய்யப்பட்டன?
11. உங்கள் பள்ளியில் சமத்துவ கொள்கை அமலாக்கம் குறித்து கூட்டு கைப்பிரதியை தயாரித்திடுக.(AS6)



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்

# 16 இந்தியாவின் தேர்தல் செயல்முறை

இந்த பாடத்தில் குடியரசு நாட்டிற்கு தேர்தல் ஏன் தேவை என்பதைப் பற்றி நாம் படிக்க போகிறோம். குடியரசு நாட்டில் என்ன அதிகாரங்கள் உள்ளன மற்றும் அது தக்க நேரத்துக்கு எடுக்கும் நடவடிக்கைகளும் நம் தேர்தலை மதிப்பிட செய்கின்றன. நேர்மையான முறையில் தேர்தல் நடத்துவதற்கு தேர்தல் கமிஷன் முக்கியமான பங்கு வகிக்கிறது. நம் ஜனநாயக மாண்பை மேம்படுத்துவதற்காக தேர்தலை நடத்துகிறோமா? விவாதிக்கலாம்.


EC issues notification constituting 14th Lok Sabha

Photo I-cards not mandatory in Bihar polls

EC tightens norms for poll expenses

EC accepts new Haryana DGP

EC will seek power to censure political ads

EC to visit Gujarat again, review poll arrangements

EC says no immediate plan to ban Exit Polls

HC asks EC to bar 'criminal' netas

EC shoots down HM advice on poll reforms

EC orders repoll in 398 more booths

EC to keep closer eye on hidden poll costs

மேலே உள்ள செய்தித்தாளை படித்து அதில் உள்ள செய்திகளை பற்றி விவாதிக்க.

## இந்தியாவின் தேர்தல் அமைப்பு :

இந்தியா அதிக மக்கள் தொகை கொண்ட ஒரு நாடு. அனைத்து மக்களும் சேர்ந்து கொண்ட ஒரு நாடு. அனைத்து மக்களும் சேர்ந்து முடிவு எடுப்பது என்பது சரியான முடிவு ஆகாது. அதனால் தேர்தல் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. இந்தியா ஒரு பெரிய குடியரசு நாடு உலகத்திலேயே சுதந்திரம் அடைந்தவுடன் குடியரசு நாடாக உருவாகிய பின்னர் தேர்தலின் அவசியத்தை புரிந்திருந்தது. தேர்தல் கமிஷனே தேர்தலை நடத்தும். இந்திய நாட்டில், இந்த கமிஷன் தேர்தலை நடத்தி முடிவினை அறிவித்து புதிய ஆட்சி அமைய ஏற்பாடுகளை செய்கின்றது.



Fig: 16.1 வாக்கு பெட்டி



SCERT TELANGANA
Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## இந்தியாவின் தேர்தல் ஆணையம் :

இந்தியாவில் தேர்தல் ஆணையம் 1950ல் ஜனவரி 25ல் ஆரம்பிக்கப்பட்டது. இது தனியுரிமையுடன் செயல்பட வேண்டும் என்று சட்டத்தில் உள்ளது. இந்த தேர்தல் ராஜ்ய சபா, லோக்சபா உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கிறது. ஜனாதிபதி, துணை ஜனாதிபதி போன்றவர்களை தேர்ந்தெடுக்கிறது.



*Fig 16.2:* இந்திய தேர்தல் ஆணைய அலுவலகம்

25 ஜனவரி 2010ஆம் ஆண்டு ஜனவரி 25ல் 60 வருடங்களுக்கு பிறகு தேர்தல் ஆணையம் வைர விழா கொண்டாடியது. பின்னர் 2011ஆம் ஆண்டு ஜனவரி 25யை வாக்காளர் தினமாக அறிவித்தது.

### தன்னாட்சி அதிகாரம் பெற்ற தேர்தல் ஆணையம் :

அதிகமான மக்கள் தொகையை கொண்டு இருப்பதால் தேர்தல் நடத்துவது மிகவும் கடினமானதாக கருதப்பட்டது. பிரிட்டீஸ் ஆட்சியாளர்கள் காலத்தில் மக்கள் வாக்குரிமை பெற்றிருந்தனர். முதல் பொதுத் தேர்தல் 1952ல் நடந்தது. அதில் 17.32 கோடி மக்கள் வாக்களித்தனர். ஆனால் தற்பொழுது 67 கோடி மக்கள் வாக்காளர்களாக உள்ளனர். தேர்தல் ஆணையம் 45 லட்சம் அதிகாரிகள் உதவியுடன் நடைபெறுகிறது.




*Fig 16.3:* தேர்தல் ஆணைய *logo*

மத்திய தேர்தல் ஆணையம் மற்ற ஊழியர்களை வைத்து தேர்தல் நடத்து கூடாது என்று சட்டம் 324(6)ல் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு நடத்த வேண்டும் என்றால் ஜனாதிபதி, மாநில கவர்னர் போன்றவர்களின் அனுமதி பெற்ற பின்னரே நடத்த வேண்டும். அந்த சமயத்தில் மத்திய, மாநில அரசாங்க ஊழியர்களை பயன்படுத்தி நடத்த வேண்டும். அந்த சமயத்தில் அனைத்து அதிகாரமும் தேர்தல் ஆணையத்திடமே இருக்கும். இந்த சமயத்தில் மத்திய மாநில அதிகாரிகளை இடமாற்றம் செய்யக்கூடாது.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

### தலைமை தேர்தல் ஆணையர் :

தலைமை தேர்தல் ஆணையர் என்றால் தேர்தல் நடக்கின்ற சமயத்தில் இவரே எல்லா விதமான நடவடிக்கைகளும் எடுப்பார். தேர்தல் நடத்தக்கூடிய அனைத்து அதிகாரங்களையும் தலைமை தேர்தல் அதிகாரியிடமே உள்ளது என்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தல் நெறி தவறாமல் நடப்பதற்கு இவரே பொறுப்பானராக கருதப்படுவார். பொதுவாக இந்த அதிகாரி (ஆண்/பெண்) யாராக இருந்தாலும் இந்திய நிர்வாக சேவை (IAS) தேர்வில் வெற்றி பெற்று 6 ஆண்டுகள் சேவை அல்லது 65 வயது வரை பதவி வகிப்பர். ஆரம்ப காலத்தில் தேர்தல் ஆணையர் ஒருவர் மட்டுமே இருந்தார். ஆனால் 1993-ல் தலைமை தேர்தல் அதிகாரி ஒருவர் அவருக்கு உதவியாக 2 தேர்தல் அதிகாரிகளை நியமித்தனர். இந்தியாவில் தேர்தல் ஆணையம் ஒரு சிறப்பானதாக உருவாக்கப்பட்டது. எப்போது எனில் T.N சேஷன் என்பவர் தலைமையில் (1990-1996) தேர்தல் நடைபெற்றது. அனைவரது நினைவிலும் இருக்கக்கூடிய வகையில் செயலாற்றினார். இந்தியாவில், ஊழலை முழுவதுமாக ஒழித்தார். நாடு முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட தலைவராக விளங்கினார்.



இந்தியாவில் தன்னாட்சி அதிகாரம் பெற்ற துறைகளை பற்றிய தகவலை சேகரி.

தலைமை தேர்தல் ஆணையருக்கும் மற்ற தேர்தல் ஆணையர்களுக்கும் சம்பளத்திலோ. சலுகைகளிலோ, அதிகாரத்திலோ எவ்வித வேறுபாடுகளும் இல்லை. அனைத்து முடிவுகளும் விவாதித்த பின் எடுக்கப்படுகிறது.

### T.N சேஷனின் பரிந்துரைகள் :

* தேர்தலில் நிற்பதற்காக அறிக்கையை சமர்ப்பித்தவுடன் 14 நாட்களுக்கு பிரச்சாரம் செய்ய வேண்டும்.
* ஒரு வேட்பாளர் ஏதாவது ஒரு பதவிக்கு மட்டும் தான் வேட்புமனு தாக்கல் செய்ய வேண்டும்.
* எந்து ஒரு வேட்பாளரோ, விதிமுறைக்கு கட்டுப்பட்டு நடக்கவில்லை எனில் 6 ஆண்டுகள் தேர்தலில் நிற்க தடை.
* எந்த வேட்பாளராவது தேர்தலுக்கு முன் இறந்துவிட்டால் அந்த தொகுதியில் மட்டும் தேர்தலை தள்ளி வைப்பர்.
* தேர்தலுக்காக 48 மணி நேரத்திற்கு முன்பு மதுபான விற்பனைக்கு தடை.

### தேர்தல் ஆணையத்தின் பணிகள் :

விதி 324 ன் படி பகுதி 15ன் படி மாநிலத்தின் அனைத்து அதிகாரங்களையும் தேர்தல் ஆணையத்திடம் கொடுத்துவிட வேண்டும். தேர்தலை தேர்தல்

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஆணையமே நடத்தும்.

வேலைகளின் வகைகள் :

1. நிர்வாக செயல்பாடு

2. ஆலோசனை செயல்பாடு

3.நீதி சார்ந்த செயல்பாடு

முதலில் இந்திய அரசியல் சட்டம் 21 நிரம்பியவர்களுக்கே ஓட்டுரிமை அளித்தது. பின் 1988ல் 61வது சட்டத்திருத்தத்தின்படி ஓட்டுரிமை வயது 18ஆக குறைக்கப்பட்டது.

இவை அனைத்தையும் சரி செய்து கொண்டு கமிஷன் தேர்தலுக்கான வேலைகளை தொடங்கும். சட்டத்தின் வரையறையின்படியும் வட்டாரங்கள் எவ்வளவு என்பதையும், தெரிந்து கொண்டு அட்டவணையை தயாரிப்பார்கள். அவற்றில் வேட்பாளர்கள், எத்தனை பேர் அவரைப் பற்றி விவரங்கள், பாதுகாப்புகள், பணம் பற்றிய விவரங்கள் தேர்தல் நாள், எந்தெந்த கட்சிகள் இடம் பெறுகின்றன. அவர்களின் சின்னம் எவை என்பதையும், அவை ஒவ்வொன்றிற்கும் குறியீடு கொடுத்த அவற்றை கடைபிடிக்குமாறு வலியுறுத்துவார்கள். ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு அதிகாரி நியமிக்கப்படுவார். இவை அனைத்து மாநிலத்தில் உள்ள கவர்னர், ஜனாதிபதி அவர்களின் ஆலோசனைப்படியே நடக்கும். தேர்தலில் உள்ளவர்கள் எந்தவிதமான தண்டனைகளுக்கு ஆளாக இருக்கக்கூடாது. அவ்வாறு இருந்தால் அவர்களை தேர்தலில் இருந்து நீக்குவதற்கு அனைத்து அதிகாரமும் உள்ளது. நிர்வாகத்திற்கு இந்திய சட்டத்தில் 21 வயது நிரம்பியவர்களே ஓட்டு போட வேண்டும் என்று இருந்தது. ஆனால் 1988 61-வது சட்டதிருத்தத்தின்படி 18வயது முடிந்தவர்கள் அனைவரும் தேர்தலில் வாக்களிக்கலாம் என்று கூறப்பட்டது. அதன்படி சாதி, மதம், சமயம், பாலினம், மொழி எந்த பாகுபாடும் இன்றி அனைவரும் வாக்களிக்க வேண்டும். வாக்களிப்பது உங்களது உரிமை என்று வயது வந்தோர் வாக்குரிமை என்று கூறினர். வாக்காளர்கள் என்றும் அழைத்தனர்.




### தேர்தலில் அரசியல் கட்சிகள் :

ஒவ்வொரு அரசியல் கட்சியினருக்கும் ஒவ்வொரு விதமான சின்னங்களை கொடுத்து அவற்றை பதிவு செய்துக்கொள்ளுமாறு கூறுவார்கள். பின்னர் ஒவ்வொருவருக்கும் ஒரு சின்னம் கொடுக்கப்படும். மேலும் அரசியல் கட்சிகளின் கட்டாயங்களுக்கு செவி சாய்க்காது தேசிய கட்சிகள், மாநில கட்சிகள் என்று பிரித்து மாநில கட்சி 3%-வும் அல்லது 3 சட்டசபை இடங்களுமாக அந்த பகுதி கட்சிக்கு கொடுக்கப்படும். அந்த கட்சி

சில தேசிய மற்றும் மாநில கட்சிகளின் சின்னங்களை சேகரிக்கவும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அங்கீகாரம் பெற்றதாக இருந்தால் அடுத்து 2 மாநிலத்தில் நிற்கலாம். 6 மாநிலத்தில் அங்கீகாரம் பெற்றிருந்தால் 6 மாநிலத்திலும் நிற்கலாம். ஓட்டுகள் அல்லது 11 லோக்சபா M.P இடத்திற்கும், 4 வேறுபட்ட மாநிலத்தில் நிற்கலாம். இவற்றிற்கு தேசிய கட்சி என்பர்.

* நன்னடத்தை விதிமுறைகளை மீறியதற்காக, எந்த ஒரு வேட்பாளர் மீதாவது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதை கண்டறியவும்.

* நீதிமன்றத்தால் வேட்பாளர் யாராவது குற்றவாளியாக கண்டறியப்பட்டு தேர்த-ல் இருந்து அல்லது ஏதேனும் அரசியல் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டாரா என்பதை கண்டறியவும்.

### தேர்தல் குறியீடு தொடர்பு :

தேர்தல் ஆணையம் அட்டவணையை வெளியிட்டவுடன் மாதிரி குறியீடு கொடுப்பர். அதனுடைய விளைவுகளையும், வேட்பாளர் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் மக்களிடம் என்பதை கண்டறிய தேர்தல் நடக்கக்கூடிய இடங்களிலேயே தங்கியிருப்பார்கள். வன்முறை நிகழ்வுகள் எதுவும் நடக்காமல் இருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பர்.

1. தேர்தல் வேட்பாளர்கள் தங்களுடைய பிரச்சாரத்தில் சாதி, சமய, மதம், பகுதி போன்றவற்றை பற்றி அறிக்கை வெளியடக்கூடாது.
2. தனிப்பட்ட ஒருவரைப்பற்றி கேலி செய்யக்கூடாது.
3. ஆளும் கட்சி எந்த அறிக்கையையும் வெளியிடக்கூடாது.
4. கோயில்கள், மசூதிகள், கிருஸ்துவ தேவாலயங்கள், புண்ணிய ஸ்தலங்கள், பள்ளிகள், கல்லூரிகள் போன்ற இடங்களில் வாக்கு சேகரிக்க கூடாது.
5. வாக்காளர்களின் ஏழ்மை நிலையை பயன்படுத்தி பணம் கொடுக்கக்கூடாது.
6. அடுத்தவர்களுடைய அடையாள அட்டையை பயன்படுத்தக்கூடாது.
7. ஓட்டு போடும் இடம் அமைக்கப்பட்டிருக்கும் இடம் அருகே 100 மீட்டருக்குள் பிரச்சாரம் செய்யக்கூடாது.
8. கொடுக்கப்பட்ட நேரத்திற்கு முன்போ, பின்னரோ ஓட்டு போடக்கூடாது.
9. எந்த கட்சியினரும், ஓட்டு போடும் இடத்திற்கு அருகில் இருக்கக்கூடாது.
10. ஓட்டு பெட்டியை தேவையில்லாமல் வேறு இடங்களுக்கு தூக்கி செல்லக்கூடாது.
11. கட்சி கொடிகள், கம்பங்கள், சுவர்களில் எழுதுதல், வீடுகளில் ஒட்டுதல் போன்றவை தனிப்பட்டவர்களிடம் அனுமதி வாங்கியே ஒட்ட வேண்டும்.

சிலர் மற்றும் சில அமைப்புகள் மாதிரி தேர்தல் கட்டுப்பாடுகள் குறித்து நீதிமன்றத்தை அணுகியுள்ளன.

### பேரணிகள் மற்றும் பொது கூட்டம் :

1. அரசியல் கட்சிகள், மக்கள் முன் பொது கூட்டம் நடத்துவதற்கு காவல்துறையிடம் அனுமதி வாங்க வேண்டும். அதாவது எந்த இடத்தில் நடத்த போகிறோம். எவ்வளவு நேரம் என்பதை முதலிலேயே அனுமதி பெற வேண்டும். அதன் பின்னர் அந்த கூட்டம் நடைபெற பாதுகாப்பு வழங்குவார்கள்.





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

2. வேட்பாளர் என்னென்ன செயல்பாடுகளை மக்கள் செய்கிறார். மற்றும் குறிப்பிட்ட இடத்திலேயே நடத்துகிறார்களா என்பதனையும், மக்களுக்கு சரியான பாதுகாப்பு இருக்கிறதா என பார்க்க வேண்டும்.

- அரசியல் கட்சிகள் தங்கள் தேர்தல் பிரசாரத்திற்காக பொது கூட்டங்கள், ஊர்வலங்கள் கட்டாயம் நடத்த வேண்டுமா? தேர்தல் பிரசாரம் செய்ய வேறு வழிகள் உள்ளனவா?

3. ஒலி பெருக்கியை எவ்வளவு நேரம் பயன்படுத்த வேண்டும் என்பதனையும் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பாதுகாக்க வேண்டும்.

**தேர்தல் நடக்கும் நாள் :**

1. மக்கள் அமைதியான முறையில் தங்களுடைய வாக்குகளை அளிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கி தர வேண்டும்.
2. தலைவர்களும், அரசியல் கட்சியினரும் ஒற்றுமையுடன் இருந்து அவர்களது பணியினை தொடர வேண்டும்.
3. தேர்தல் அறையின் முன் அமர்ந்திருப்பவர் அடையாள அட்டையை சரிபார்த்து அனுப்புவார். அவர்களுடைய அட்டையில் எந்த சின்னமும் இருக்கக்கூடாது.



*Fig 16.8: வரிசையில் நிற்கும் வாக்காளர்கள்*

4. தேர்தல் நாளன்று முன் 48 மணி நேரத்திற்கு முன்பே செல்போன் மூலம் SMS அனுப்பக்கூடாது. மதுபானத்தை பயன்படுத்த கூடாது.
5. ஒரு இடத்தில் கூட்டம் அதிகமாக இருந்தால் அடுத்த இடத்திற்கு செல்லலாம்.
6. தேர்தல் நடக்கும் இடத்திற்கு அருகில் அரசியல் கட்சி கொடியோ, சின்னமோ கொண்டு வரக்கூடாது.

**தேர்தல்களும் - நீதிமன்ற தீர்ப்புகளும்:**

* 2013ஆம் ஆண்டில் Dr. சுப்பிரமணியன் சுவாமி தொடுத்த வழக்கில் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் வாக்காளர் தான் பதிவு செய்த வாக்கு சரியாக பதிவானதா என்பதை சரிபார்க்கும் வசதி வாக்கு பதிவு இயந்திரத்தில் இருக்க வேண்டும் எனக்கூறியது. வாக்காளர் சரிபார்த்த தணிக்கைத் தாள் (VVPAT) வழங்குவதால் வாக்காளர் தான் வாக்களித்ததற்கான feedback பெற முடியும்.
* சிவில் சுதந்திரங்களுக்கான மக்கள் கூட்டமைப்பு 2013ஆம் ஆண்டில் தொடுத்த வழக்கின் தீர்ப்பின்போது உச்சநீதிமன்றம் தேர்த-ல் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுக்கு எதிராக வாக்களிக்கும் சுதந்திரம் யாருக்கு உள்ளது? எனக் கூறியது. இத்தீர்ப்பை அமலாக்கம் செய்திட இந்திய தேர்தல் ஆணையம் "NOTA" ஏற்பாட்டை வாக்குப்பதிவு இயந்திரத்தில் செய்தது.
* சிவில் சுதந்திரங்களுக்கான மக்கள் கூட்டமைப்பு 2013ஆம் ஆண்டில் தொடுத்த வழக்கின் தீர்ப்பின்போது உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் "பாராளுமன்றம், மாநில சட்ட மன்ற தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் கட்டாயமாக குற்றவியல் நடத்தை இல்லை என்பதை நிரூபிக்கும் ஆதாரங்கள், மனைவி மற்றும் குழந்தைகள் பெயரிலுள்ள சொத்துகளின் விவரங்கள் மற்றும் கல்வித் தகுதிகள் முத-யவற்றை சமர்பிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

### ஆளும் கட்சி தேர்தல் நேரத்தில் :

ஆளும் கட்சி தங்களுடைய சக்தியை தவறாக பயன்படுத்தக்கூடாது. தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டே இருக்க வேண்டும்.

1. ஆளும் கட்சி தங்களுடைய அதிகாரத்துவத்தை பயன்படுத்தக்கூடாது.
2. அரசுப்பணி மேற்கொள்ள கூடாது. அது மக்களை குழப்பத்தில் ஆழ்த்திவிடும்.
3. அரசாங்க வாகனங்களை பயன்படுத்த கூடாது.
4. அதிகமான பாதுகாப்பு வாகன தேர்தல் நடக்கும் இடத்திற்கு கொண்டு செல்ல கூடாது.
5. தேர்தல் அட்டவணையை பெற்றுக்கொண்ட பின் அவர்களிடம் எதையும் செய்ய சொல்லி வற்புறுத்தக்கூடாது.
6. அரசாங்கத்திற்கு சொந்தமான கட்டிடங்களையோ, அலுவலகங்களையோ, அந்த கட்சி பயன்படுத்தக்கூடாது.
7. ஊடகங்களின் வாயிலாக எந்தவிதமான அறிக்கைகளையும் வெளியிடக்கூடாது.
8. தொலைக்காட்சிகளிலோ, அல்லது பொது கூட்டங்களிலோ எதற்கும் அனுமதி தரக்கூடாது.
9. தேர்தல் அறிவிப்பு வெளியானவும், எந்தவித செயல்பாடுகளையும் வெளியிடகூடாது, புதிய திட்டங்கள் போன்றவற்றை செய்வதாக வாக்கு கொடுக்கக்கூடாது.

> வாக்காளரின் உறுதிமொழி
> இந்திய குடிமக்களாகிய நாங்கள் மக்களாட்சி மீது நம்பிக்கை வைத்துள்ளோம். மக்களாட்சி மரபுகளை உயர்த்திடுவோம் என்று உறுதி எடுத்துக் கொள்கிறோம். சுதந்திரமான மற்றும் நியாயமான அமைதியான தேர்தலை நடத்திட ஒத்துழைப்போம். ஒவ்வொரு தேர்த-லும் அச்சமின்றி வாக்களிப்போம். மதம், இனம், ஜாதி, சமூகம், மொழி மற்றும் எவ்விதமான தூண்டுதலுக்கும் உட்படாமல் வாக்களிப்போம் என உறுதி எடுத்துக் கொள்கிறோம்.

### தேர்தலும், அதன் பல்வேறு நிலைகளும்

இந்திய தேர்தல் ஆணையம், ஒரு குறிப்பிட்ட ஆணோ, பெண்ணோ இவர்களை அதிகாரியாக தேர்ந்தெடுத்து மாநிலங்களுக்கு அனுப்புவார்கள். இந்த பதவி சட்டத்தின்படியே தேர்ந்தெடுப்பர், பெரும்பாலும் மூத்த IAS அதிகாரிகளையே நியமிப்பர். இவர்கள் பாராளுமன்ற கூட்டத்தினரினாலும், மாநில அவை கூட்டத்தினரினாலும் கண்காணிக்கப்படுவர். மாவட்ட கலெக்டரின் செயல்பாடுகளை தலைமை தேர்தல் அதிகாரி செய்வார்.

தேர்தல் அதிகாரி ஒவ்வொரு செயல்பாடுகளையும் உன்னிப்பாக கவனிப்பார். இவரை "தேர்தல் அதிகாரி" என்று அழைப்பர். இவரிடமே வேட்பாளர்கள் வேட்பு மனுவை தாக்கல் செய்ய வேண்டும். இவர்கள் எந்த கட்சி சார்பாக நிற்கிறார்? அல்லது சுயேட்சையாக நிற்கிறாரா என்பது போன்ற பதில்களை கேட்டு அதற்கு தகுந்தாற்போல் பதிவு செய்துக்கொள்வார்.

தேர்தல் அதிகாரி பரிந்துரையை ஆராய்ந்து பின்னர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலில் சேர்த்துக்கொள்வார். இறுதியாக அனைத்து வேட்பாளர்களின் பட்டியலை தயார் செய்துக்கொள்வார். பின்னர் ஒவ்வொரு கட்சிக்கும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் பெயர் அவரது சின்னம் இரண்டையும் EVM-ல் (மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம்) சேர்ப்பாளர்கள் இதே முறையில் பாராளுமன்ற தேர்தலுக்கும் மாநில தேர்தலுக்கும் பயன்படுத்துவர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**வாக்களிக்கும் இயந்திரம்**



படம் 16.9: கட்டுப்பாட்டு கருவி, வாக்குப்பதிவு கருவி

தலைமை தேர்தல் அதிகாரி மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் வாக்களிக்கும் இடம் அமைந்துள்ளது அதற்காக எந்தெந்த அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை போன்ற செயல்பாடுகளை விரிவாக பார்ப்பார். பின்னர் தேர்தல் நாள் மற்றும் ஓட்டு போடுபவர்களின் எண்ணிக்கை வாக்காளர்களின் பெயர்கள் மற்றும் சின்னங்கள் போன்றவை சரியாக உள்ளதா என்பதையும் வேட்பாளர்கள் சம்மந்தப்பட்ட அடையாளம் சரியாக உள்ளதா என்பதையும் ஓட்டு போட்டவுடன் கையில் 'மை' (இன்டெலிபுல் இங்க்) போன்றவை எந்தெந்த இடங்களுக்கு எவ்வளவு செல்கிறது போன்றவற்றையும் சரிபார்ப்பார். சில சமயங்களில் 'EVM' வேலை செய்யவில்லை எனில் காகிதம் மூலமாக போடுவதற்காக பெட்டியும், அதற்கான அச்சுவும் சரியாக உள்ளதா என பார்த்து அனுப்புவார். இவை அனைத்தும் சரியாக உள்ளதா என அறிந்து பின்னர் இந்த 'EVM'-யை சீல் செய்து ஒவ்வொரு இடத்திற்கும் அனுப்பி வைப்பார். ஓட்டு எண்ணிக்கை நடக்கக்கூடிய இடத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் அமைந்திருக்கும்.

**பொதுத் தேர்தல் :**

ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மத்திய-மாநில தேர்தல்கள் நடைபெறும் இடையில் ஏதாவது பிரச்சனையில் களைக்கப்பட்டால் இடைத்தேர்தல் நடைபெறும் இடைத்தேர்தல் நடைபெறும்.




படம் 16.10: வாக்குச்சாவடியில் பணியாற்றி கொண்டிருக்கும் ஊழியர்கள்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

### நிராகரிக்கப்பட்ட ஓட்டுகள் – NOTA (மேலே எவருமில்லை)

உச்சநீதிமன்றம் 2013-யில் இந்த தீர்ப்பை வழங்கியது. மக்கள் நீதிமன்றம் போட்ட வழக்கிற்கு இவ்வாறு தீர்ப்பு கூறியது. NOTA-வில் வாக்களிப்பது அவர்களுடைய சுதந்திரம் முதலில் டெல்லி, மிசோரம், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர் போன்ற மாநிலத்தினர் இந்த NOTA-வை பயன்படுத்தினர். அப்பொழுது அதிகமான எண்ணிக்கையில் NOTA-விற்கு வாக்கு கிடைத்தது.

### தேர்தல் சீர்திருத்தம் :

இந்தியா மக்கள் தொகையில் 2-வது பெரிய நாடு, தேர்தல் பணி தலை சிறந்ததாக இருக்க வேண்டும். ஒவ்வொரு கட்சியும் வாக்குறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். நல்ல அரசாங்கத்தையும், பொருளாதார சமத்துவத்தையும், ஊழலை ஒழிக்கவும், ஊழல் இல்லாத அரசியலையும், நியாயத்திற்கு புறம்பாக எந்த செயல்பாடுகளையும் செய்யாமல் இருத்தலையும், ஓட்டு போட்டவர்களுக்கு உதவுவேன் என்றும், குடியரசு நாட்டை முன்னேற்ற பாடுபடுவேன் என்று உறுதியளிக்க வேண்டும். ஆனால் சில ஒழுக்கமற்ற அரசியல்வாதிகள், குற்றவியல் பின்னணி கொண்டு வாழ்பவர்கள், வாக்காளர்களை தங்களுக்கு சாதகமாக வாக்களிக்க சட்ட விரோதமான முறைகளை பின்பற்றுகின்றனர். இச்செயல்கள் மக்களாட்சியை கே- கூத்தாக மாற்றியுள்ளன.




*படம் 16.11: NOTA குறியீடு*

மக்களாட்சி முறையில் சில பிரச்சனைகள் இருப்பினும், பொறுப்பும், அர்ப்பணிப்பு தன்மையும் கொண்ட அரசியல்வாதிகள் நமது மக்களாட்சியை பெருமைபடும்படி நடந்துக் கொண்ட பல எடுத்துக்காட்டுகள் பல உள்ளன.

- சிறந்த மக்களாட்சி, நீதி நெறிமுறை கொண்ட நிர்வாகம் அமைத்திட சில நடவடிக்கைகளை பரிந்துரை செய்க.
- தேர்தல்களின்போது ஒரு குடும்பத்தை சேர்ந்தோரே இட ஒதுக்கீடு பலனைப் பெற்று பலனடைந்து வந்தால் அதே சமூகத்தை சேர்ந்த வேறு உறுப்பினர்கள் எவ்வாறு வாய்ப்புகளை பெற முடியும்? உங்கள் கருத்தை குறித்து கலந்துரையாடு.
- அதிகளவு பணம் செலவழித்து தேர்த-ல் வெற்றியடையும் நபருடைய எண்ணங்கள் எவ்வாறு இருக்கும்? வாக்காளர்கள் வாக்களிக் பணத்தை பெற்றுக்கொண்டு வாக்களித்த பின், தங்கள் பிரச்சனைகள் குறித்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை தட்டி கேட்கும் தார்மீக உரிமை அவர்களுக்கு இருக்குமா? கலந்துரையாடுக.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## தபால் வாக்குசீட்டு :

தேர்தல் ஊழியர்கள், தேர்தல் வேலையில் இருக்கும்போது அவர்களுடைய வாக்ககளை வேலை செய்யும் இடத்தில் இருந்து வாக்களிப்பார்கள். இதனை தபால் ஓட்டு என்பர். இவ்வாறு போடுவது அவர்களின் உரிமை தேர்தல் நாளில் தேர்தல் பேப்பரில் அவர்களுக்கு விருப்பமானவர்களுக்கே போடுவார்.

**இவ்விரண்டு சட்டமன்ற தொகுதிகளுக்கும் தேர்தல் அறிவிப்பு ரத்து செய்யப்பட்டுள்ளளது:**

புது டெல்-: தேர்தல் ஆணையத்தின் வரலாற்றில் முதன்முறையாக, இதற்கு முன் அறிவித்த தேர்தல் அறிவிப்பை ரத்து செய்துள்ளது. பெருமளவு பணம் வாக்காளர்களுக்கு பங்கீடு செய்யப்பட்டது என்ற குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டதால், தமிழ்நாட்டில் உள்ள அரவக்குறிச்சி, தஞ்சாவூர் சட்டமன்ற இடைத்தேர்தல்களை ரத்து செய்துள்ளது. இதன்படி மே மாதம் 16ஆம் தேதி 2016 நடக்க இருந்த தெர்தல்களை தேர்தல் ஆணையம் ரத்து செய்துள்ளது.

### முக்கிய சொற்கள் :

1) வாக்கு 2) நடத்தை விதிமுறைகள் 3) EVM 4) வாக்காளர் தொகுதி 5) NOTA

### உங்கள் கற்றலை மேம்படுத்துக.

1) வாக்களிக்கும் உரிமை மக்களாட்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது என எவ்வாறு கூறுவாய்?(AS1)
2) இந்தியாவில் தேர்தல் ஆணையத்தின் பங்கை மதிப்பீடு செய்க.(AS1)
3) இந்திய தேர்தல் ஆணையத்தின் பணிகளை வரையறுத்து கூறுக.(AS1)
4) முன்மாதிரியான நன்னடத்தை விதிகள் மக்களாட்சியில் இருக்க வேண்டியதன் அவசியம் யாது?(AS1)
5) வாக்களிப்பதால் மட்டுமே நம் பொறுப்பு முடிந்து விடாது மக்களாட்சியை காத்திட நாம் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும். இக்கருத்தை ஆதரித்து கூறுக.(AS1)
6) தேர்த-ன்போது உங்கள் பகுதியில் சட்டத்திற்கு புறம்பான செயல்களை நீங்கள் கவனித்தீர்களா? எந்த நன்னடத்தை விதிமுறை மீறப்பட்டது?(AS4)
7) “தேர்தல் சீர்திருத்தங்களின் தேவை” என்ற தலைப்பின் கீழுள்ள பத்தியை படித்து உன் கருத்தை எழுதுக.(AS2)
8) வாக்களித்த-ன் முக்கியத்துவத்தை குறித்து விழிப்புணர்வு உண்டாக்கும் கைப்பிரதியை தயார் செய்திடுக.(AS6)

### செயல்திட்டம்:

- நாட்டுக்காக வாழ்க்கையை அர்பணித்த சிறப்பியல்புகள் கொண்ட அரசியல்வாதிகளை குறித்து தகவல்களை சேகரியுங்கள். அவர்களின் வாழ்க்கையில் இருந்து நாம் கற்றுக்கொள்வது யாது?
- சமீப காலத்தில் லோக்சபைக்கு நடந்த பொதுதேர்தல்கள் குறித்து தகவல்களை சேகரி. தேர்தல் முடிவுகளை காட்டும் அட்டவணையை தயாரித்து பரிசீலனை செய்திடுக



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம் 17

# சுதந்திர இந்தியா (முதல் முப்பது வருடங்கள் - 1947-77)

1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் நாம் முரண்பாடான வாழ்க்கையை துவக்கப்போகிறோம். அரசியலில் சமத்துவத்தைப் பெற்றிருந்தாலும், சமூக பொருளாதாரத்தில் சமத்துவமின்மையைப் பெற்றிருந்தோம். அரசியலில் "ஒருவருக்கு ஒரு வாக்கு" (One man One vote) மற்றும் "ஒருவருக்கு ஒரு மதிப்பு (One man One value) எனும்" கொள்கை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. சமூக பொருளாதார அமைப்பில் "ஒருவருக்கு ஒரு மதிப்பு" என்ற கொள்கை மறுக்கப்பட்டது. இதுபோன்ற முரண்பாடான வாழ்க்கையை நாம் எவ்வளவு காலம் வாழ முடியும்? சமூக மற்றும் பொருளாதார வாழ்வில் சமத்துவத்தை எவ்வளவு நாள் தொடர்ச்சியாக நமக்கு மறுப்பார்கள்? இதே நிலை நீடித்தால் மக்களாட்சி இன்னலாட்சியாக மாறும் என்பதில் ஐயமில்லை. இந்நிலையை இக்கணமே மாற்றவேண்டும். ஏனெனில் சமத்துமின்மையால் பாதிக்கப்பட்டவர்கள் "அரசியல் மக்களாட்சியை" தகர்ப்பது திண்ணம்".

- B R அம்பேத்கர்

அரசியலமைப்புச் சட்டம் எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பதைக் கடந்த பாடத்தில் நாம் படித்தறிந்தோம். மக்களாட்சி செயல்பாடு, ஒரே அரசியல் அமைப்பை ஏற்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல், சமூக பொருளாதார மாற்றம் போன்றவற்றை அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்தியது. இரண்டு நூற்றாண்டு காலம் அந்நிய ஆட்சியின் கீழ் அல்லலுற்ற மக்களுக்கு, தேசிய இலக்கை எட்டுவதும், ஏற்ற அரசியல் முறையை உருவாக்குவதும் குறுகிய கால சாதனையாக இருந்தது.

சுதந்திரம் பெற்ற துவக்க ஆண்டுகளில், மக்களிடையே ஒற்றுமை, ஒருங்கிணைப்பு, சமூக பொருளாதார மாற்றம், மக்களாட்சி முறை செயல்பாடு போன்றவை நாட்டுத் தலைமைக்கு மிக்க சவால்களாக விளங்கின. இச்சவால்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய காரணத்தால், நாட்டின் அமைப்பு முறையில் ஏற்றத்தாழ்வு இன்றி எச்சரிக்கையுடன் நடந்துக்கொள்வது மிக அவசியமாக இருந்தது. எடுத்துக்காட்டாக, மக்களாட்சி முறையை பின்பற்றாவிட்டால் வளர்ச்சி திட்டங்களையும், ஒருமைப்பாட்டையும் அடைவது மிகக் கடினமாகும். இப்பாடத்தில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய மூன்று பிரச்சினைகளான இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் மற்றும் மக்களாட்சி எவ்வாறு செயல்பட்டது என்பதையும் நாட்டின் முக்கிய பிரச்சினைகளை இந்தியா எவ்வாறு சமாளித்தது என்பதையும் ஆராய்வோம்.

- சமூக சமத்துவத்தை நாம் அடைந்தோம் என்று நீங்கள் கருதுகிறீர்களா? சமூக சமத்துவத்துக்கும், சமத்துவமின்மைக்கும் எடுத்துக்காட்டுகளை நினைவு கூர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## முதல் பொதுத்தேர்தல்கள்

புதிய அரசியல் அமைப்புச்சட்டத்தின்படி நடத்தப்பட்ட பொதுத்தேர்தல்கள் இந்திய மக்களாட்சியில் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்ற இந்தியா மக்களாட்சி பாதையை தேர்ந்தெடுத்ததையே இத்தேர்தல்கள் நமக்கு விளக்குகின்றன. சொத்துக்கள் அதிகம் பெற்ற செல்வந்தர்களுக்கும் பிறகு சமுதாயத்தின் பிற பிரிவினருக்கும் வாக்குரிமையை வழங்கிய மேற்கத்திய நாடுகளைப் போலன்றி இந்திய அரசு அனைத்து தரப்பினருக்கும் வாக்குரிமையை வழங்கியது. மேற்கத்திய நாடுகளில் ஒன்றான சுவிட்சர்லாந்தில் பெண்கள் 1971 ஆம் ஆண்டு தான் வாக்குரிமை பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



படம் 17.1 : முதல் பொதுத்தேர்தலில் வாக்களிக்கும் வாக்காளர்கள்

முதலாம் பொதுத்தேர்தல்கள் சமூக பிரச்சினைகளால் சிக்கலானதாக இருந்தன. பெரும்பான்மையான மக்கள் எழுத்தறிவும், படிப்பறிவும் அற்றவர்களாக இருந்தனர். அவர்கள் தங்கள் வாக்களிக்கும் வாய்ப்பை எவ்வாறு பயன்படுத்த முடியும்? நாட்டின் சில பகுதிகளில் பெண்கள் தங்கள் அப்பா அல்லது கணவர் பெயர்கள் மூலமே அறியப்பட்டனர். அவர்களுக்கென தனி அடையாளம் இல்லை. சமூக சமத்துவத்தை அடைய வேண்டுமானால் இந்த முறையில் கண்டிப்பாக மாற்றம் செய்யவேண்டும். பெண்களுக்கு பெயர்கள் இல்லையெனில் வாக்காளர் பட்டியலை எவ்வாறு தயார் செய்வது? நாட்டில் தேர்தல்களை நடத்த தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.

படிப்பறிவின்மையை முறியடிக்கும் நோக்கத்துடன், தேர்தல் ஆணையம் அரசியல் கட்சிகளுக்கும், வேட்பாளர் களுக்கும் சின்னங்களை வழங்கியது. படிப்பறிவு அற்றவர்களும் சின்னங்களை அடையாளம் கண்டு வாக்களிக்கும் முறை இன்றும் நடைமுறையில் உள்ளது. முதலாம் பொதுத்தேர்தல்களில், தேர்தல் முறைகளை மேலும் எளிமையாக்க ஒவ்வொரு வேட்பாளருக்கும் தனித்தனி வாக்காளர் பெட்டிகள் வழங்கப்பட்டு அவர்களின் சின்னங்கள் அப்பெட்டியின் வெளிப்பகுதியில் ஒட்டப்பட்டன. தாங்கள் விரும்பும் வேட்பாளரின் பெட்டியில் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டி இருந்தது. வாக்காளர்களை வாக்களிக்கச் செய்ய மிகப்பெரும் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- படிப்பறிவின்மை தேர்தலில் எவ்வாறு பாதிப்புக்கு உள்ளாக்குகிறது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? இப்பிரச்சினையை எவ்வாறு தீர்க்க முடியும்?
- மக்கள் அனைவருக்கும் வாக்குரிமை இல்லையென்றால் நம் நாட்டை மக்களாட்சி நாடு என்று கருத முடியுமா?
- பெண்களின் படிப்பறிவு வீதம் குறைவாக இருக்கும்போது, பெண்களுக்கு வாக்குரிமை தரவில்லையென்றால், அது நம் அரசியலை எவ்வாறு பாதிக்கும்?
- தேர்தல்களை தொடர்ச்சியாக நடத்துவது மக்களாட்சியை நிறுவியதற்கான அடையாளமாகக் கருத முடியுமா? இக்கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? காரணங்களைக் கூறுக.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

### தேர்தல்களின் விவரங்கள்

பர்தா முறை அனுசரிக்கப்பட்ட மாவட்டங்களில், பெண் தேர்தல் அதிகாரிகள் பணிபுரியும் வாக்களிப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. (5)

ஆஜ்மீரில், உடல் முழுவதும் விலை உயர்ந்த வெல்வெட் துணியால் மூடப்பட்ட ராஜபுத்திர பெண் சாரட் வண்டியில் வாக்களிப்பு மையத்துக்கு வந்து சேர்ந்தாள். அவள் தன் ஆட்காட்டி விரலை மட்டுமே வெல்வெட் ஆடையிலிருந்து வெளியே காட்டினாள். அந்த விரலில் அவளுக்கு வாக்களிப்பு அடையாள மை இடப்பட்டது. (5)

அஸ்ஸாமில் மலைவாழ் பகுதி மக்கள் வசிக்கும் கிராமத்தினர் அனைவரும் தேர்தல் நாளுக்கு முன்னரே வாக்களிப்பு மையம் இருந்த ஊருக்குச் சென்றனர். அந்த நாள் இரவை ஆடல் பாடல்களுடன் கழித்தனர். வாக்களிப்பு நேரம் வந்தவுடன் வாக்களிப்பு மையத்துக்குச் சென்று வாக்களித்தனர்.(6)

பெப்சு (PEPSU) என்ற கிராமத்தைச் சேர்ந்த மக்கள், தேர்தலில் போட்டியிட்ட இரண்டு வேட்பாளர்களில் யாரை ஆதரிப்பது என்ற முடிவை ஒரு வினோத போட்டி மூலம் தீர்மானித்தனர். "ஒரு வேட்பாளருக்கு ஒரு இளைஞர்" என இரண்டு இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மல்யுத்த போட்டியை வைத்து வெற்றி பெற்ற இளைஞர் எந்த வேட்பாளரின் பிரதிநிதியோ அவரை முழுவதுமாக ஆதரித்தனர்.

வாக்குப்பெட்டிகளைத் திறந்து பார்த்தபோது, உணவு மற்றும் உடை வேண்டிய பல கோரிக்கை மனுக்கள் அவற்றில் இடம் பெற்றிருந்தன. (6)

1958 ஆம் ஆண்டு மார்கரேட் **W.** பிஷர், ஜோன் **V.** பொண்டுரண்ட் அவர்கள் எழுதிய "The Indian Experience and Democratic Elections" என்ற புத்தகத்திலிருந்து மேற்கண்டவை எடுக்கப்பட்டன.

## இந்திய அரசியலில் ஒரே கட்சியின் மேலாதிக்கம்:

சுதந்திர இந்தியாவில் 1952, 1957 மற்றும் 1962 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் மிகப் பெரும்பாலான இடங்களில் இந்திய தேசிய காங்கிரஸ் வெற்றி பெற்றது. எதிர்கட்சிகள் மிகச்சிறு எண்ணிக்கையிலான இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றன. ஜவஹர்லால் நேரு இந்தியாவின் முதல் பிரதமரானார். போட்டியிட்ட பிற கட்சிகளில் எந்த ஒரு தனிக்கட்சியும் பதிவான வாக்குகளில் 11 சதவீத வாக்குகளை தனித்து பெற முடியவில்லை. நாட்டின் மொத்த இடங்களில் 70 சதவீத இடங்களைப் பெற்ற காங்கிரஸ் கட்சி பதிவான மொத்த வாக்குகளில் 45 சதவீத வாக்குகளைப் பெற்றது. காங்கிரஸ் கட்சியின் வாக்கு சதவீதத்தை எந்தக் கட்சியாலும் நெருங்க முடியவில்லை.

பல மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைந்தது. இதையே சிலர் காங்கிரஸ் முறை என அழைத்தனர். இக்காலம், காங்கிரஸ் கட்சி மற்றும் பிற கட்சிகளுக்கும் இடையேயான உறவை பிரதிபலிக்கும் காலமாக இருந்தது. காங்கிரஸ் கட்சிக்குள் இருந்த போட்டியின் காரணமாக பல சிறு குழுக்கள் இருந்தன. கட்சியின் இலக்கை எட்டுவதில் ஒருமித்த கருத்தை எட்டிய இவர்கள், சில கொள்கை முடிவுகளில் முரண்பட்ட கருத்துடையவர்களாக இருந்தனர்.

சிறு குழுக்களாக இருந்த காங்கிரஸ் கட்சியினர் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்ததால், முரண்பாடான கருத்துக்களின் மையமாக காங்கிரஸ் கட்சித் திகழ்ந்தது. அதே சமயத்தில், இச்சிறு குழுக்கள் தன் தலைமையிடம் அழுத்தம் கொடுப்பதற்காக மாற்றுக்கட்சியினரிடமும் தொடர்பு கொண்டவர்களாக விளங்கினர். இக்குழுக்களே, ஆளுங்கட்சிக்குள் இருந்த சீர்திருத்தக் குழுக்களாகக் கருதப்பட்டன. காங்கிரஸ் கட்சியின் ஒருகட்சி மேலாதிக்கத்தில், கட்சி தலைவர்களுக்கிடையே அரசியல் போட்டி காணப்பட்டது. பலமற்ற எதிர்கட்சிகளால் காங்கிரஸ் கட்சிக்கு அச்சுறுத்தல் ஏதும் காணப்படவில்லை.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

*வட்டவரைபடம் 1 1952 மற்றும் 1962 ஆம் ஆண்டுகளில் அரசியல் கட்சிகள் பெற்ற இடங்களின் எண்ணிக்கை*




பிற கட்சிகள் மிகக்குறைவான இடங்களே பெற்றாலும், மக்களாட்சி முறைக்கு எதிரான சூழல் நிகழவில்லை என்பதை மேற்காணும் அட்டவணை தெளிவாக்குகிறது. காங்கிரஸ் கட்சியை எதிர்த்து போட்டியிட்ட பிற கட்சிகளும் காங்கிரஸ் கட்சிக்கு சவாலாக அமையவில்லை என்பதும் தெளிவாகின்றது. படிப்படியாக தங்களை வளர்த்துக்கொண்ட பிற கட்சிகள் அதற்கடுத்த 20 ஆண்டுகளில் ஆட்சியைப் பிடிக்க போட்டியிட்டன. இது இந்திய அரசியலில் போட்டியையும், பல கட்சி முறை ஆட்சிக்கும் வித்திட்டது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில், மக்களாட்சி முறைக்கு அமைத்த அடித்தளமும், அரசியல் அமைப்புச் சட்டம் மக்களாட்சி முறைக்கு வலு சேர்த்ததாலும், இந்திய அரசியலில் பல கட்சி முறை வளர்ச்சி பெற்றது. ஆளும் கட்சிகள் எதிர்கட்சிகளை அடக்கவும், பல கட்சி முறையை தடுக்கவும் பல யுத்திகளைக் கையாண்டன.

- இந்திய அரசியலில், காங்கிரஸ் கட்சி ஆதிக்கம் செலுத்துவதற்கான இயல்புகளை தொகுத்து எழுதுக.

இந்திய அரசியல் முறை இந்தியாவுடன் சுதந்திரம் பெற்ற மற்ற காலனி நாடுகளான இந்தோனேஷியா, பாகிஸ்தான், சீனா, நைஜீரியா போன்ற நாடுகளின் அரசியலைவிட முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது.

## மாநில மறுசீரமைப்புகான கோரிக்கை

நாடு சுதந்திரம் பெற்றவுடன், மொழி அடிப்படையிலான மாநில மறுசீரமைப்புக்கு பலமான கோரிக்கை எழுந்தது. இது பெரும் சவாலாக அமைந்தது. ஆங்கிலேய ஆட்சியில் நம் நாடு பல மாகாணங்களாகப் (Presidency) பிரிக்கப்பட்டிருந்தது. (கல்கத்தா, சென்னை, பம்பாய்) மேலும் பல பகுதிகள் பெரிய மாநிலங்களாகப்(Provinces) பிரிக்கப்பட்டிருந்தது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

எடுத்துக்காட்டாக 'மத்திய மாகாணங்கள்' மற்றும் 'பேரர் மாகாணம்'. நாட்டின் பெரும்பகுதி சமஸ்தானங்களாக (Princely States) இருந்தன. இந்த சமஸ்தானங்களில் வாழும் மக்கள் பல மொழிகளைப் பேசுபவர்களாக இருந்தனர். எடுத்துக்காட்டாக, சென்னை மாகாணம் தமிழ் மலையாளம், கன்னடம், தெலுங்கு, கொண்டி மற்றும் ஒடியா மொழிகளைப் பேசும் மக்களைப் பெற்றிருந்தது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் வசிக்கும் ஒரே மொழியை பேசும் மக்கள் தனி மாநில கோரிக்கையை முன்வைத்தனர். பம்பாய், மைசூர், சென்னை, ஹைதராபாத் போன்ற பகுதிகளில் வசிக்கும் கன்னட மொழி பேசும் மக்களை ஒருங்கிணைக்க "சம்யுக்த கர்நாடகா" என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இதைத்தவிர "சம்யுக்த கர்நாடகா", "மகா குஜராத் இயக்கம்", திருவாங்கூர் மற்றும் கொச்சி சமஸ்தானங்களை இணைத்தல், சீக்கியர்களுக்காக பஞ்சாப் மாநிலம் உருவாக்குதல் போன்ற கோரிக்கைகள் மேலோங்கின. இக்கோரிக்கைகள் அனைத்தும் நாட்டை பலப்படுத்துமா அல்லது பலவீனப்படுத்துமா என்ற கவலை மக்களிடையே எழுந்தது.



படம் 17.2 : 1950 ஆம் ஆண்டின் துவக்கத்தில் சாலையை அமைக்கும் பணியை துவக்கி வைக்கும் ஜவஹர்லால் நேரு அவர்கள்

மத அடிப்படையிலான பிரிவினை இந்திய நாட்டின் பாதுகாப்புக்கும், நிலைத்தன்மைக்கும் அச்சுறுத்தலாக இருந்ததைத் தலைவர்கள் எண்ணிப்பார்த்தனர். மொழி அடிப்படையிலான மாநில மறுசீரமைப்பு நாட்டை பிளவுபடுத்தும் என அச்சம் எழுந்தது. காங்கிரஸ் பேரியக்கம் மொழி அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டாலும், மாநிலங்களின் மறுசீரமைப்புக்கு உறுதியளித்தாலும், இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு மாநில மறுசீரமைப்பில் ஆர்வம் காட்டாமல் இருந்தது.

காங்கிரஸ் கட்சி ஏற்கனவே நிறைவேற்றியிருந்த மாநில மறுசீரமைப்பு தீர்மானத்திற்கு இணங்க, தெலுங்கு மொழி பேசும் மக்களுக்காக தனி மாநிலம் உருவாக்கப்பட வேண்டும் என்று வலுவான இயக்கம் துவக்கப்பட்டது. சென்னை மாகாணத்திலிருந்த தெலுங்கு மொழி பேசும் மக்களை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட "ஆந்திர மகா சபை" முனைப்பாக இருந்தது. இந்த இயக்கம் தன் செயல்பாடுகளை சுதந்திரத்திற்குப் பிறகும் தொடர்ந்தது. தனி மாநில கோரிக்கையை அடைய கோரிக்கை மனுக்கள், உண்ணாவிரதம், தெருமுனை பிரச்சாரம் போன்றவற்றைக் கையில் எடுத்தது. இக்கோரிக்கைக்கு செவி சாய்க்காத காங்கிரஸ் கட்சி, தெலுங்கு பேசும் மக்கள் வசிக்கும் பகுதிகளில் நடந்த தேர்தலில் பெரும் தோல்வியைச் சந்தித்தது. மாநில மறுசீரமைப்பை ஆதரிக்கும் கட்சிகள் இந்த




வரைபடம் 1: மாநில மறுசீரமைப்புக்கு முன்னர் தென் தீபகற்பப் பகுதிகளைக் காட்டும் படம்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பகுதிகளில் வெற்றி பெற்றன. மாநில மறுசீரமைப்பை ஆதரித்த கம்யூனிஸ்டு கட்சிகள் 41 இடங்களைப் பெற்றன.

மாநில மறுசீரமைப்பை நேரு அவர்கள் எதிர்க்காவிட்டாலும், சீரமைப்புக்கான சரியான நேரம் இதுவல்ல என்றார். இதுவே பெரும்பாலான தலைவர்களின் ஒருமித்த கருத்தாக இருந்தது. இந்தியா வளர்ந்து வரும் வேளையில் மாநில மறுசீரமைப்பு அதற்குத் தடையாக இருக்கக்கூடாது என்று அவர்கள் எண்ணினர்.

## மாநில மறுசீரமைப்புச் சட்டம் 1956

தெலுங்கு பேசும் மக்களுக்காக தனி மாநில கோரிக்கையை முன்வைத்து 58 நாட்கள் உண்ணாவிரதம் இருந்த பொட்டி ஸ்ரீ ராமுலு 1952 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் உயிரிழந்தார். இதன் விளைவாக ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழ்நாடு என்னும் இரண்டு மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. 1953 ஆம் ஆண்டு பஜுல் அலி, K.M.பணிக்கர், ஹிரிதயநாத் குஞ்சுரு போன்றோர் உறுப்பினர்களாக இருந்த மாநில மறுசீரமைப்புக்குழு, மொழி அடிப்படையிலான மாநில மறுசீரமைபபுக்காக நியமிக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கைக்கிணங்க 1956 ஆம் ஆண்டு, மாநில மறுசீரமைப்புச் சட்டம் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டது. இச்சட்டம், 14 மாநிலங்களையும், 6 யூனியன் பிரதேசங்களையும் புதிதாக உருவாக்க காரணமாயிற்று. மொழி அடிப்படையிலான மாநிலங்கள் ஏற்படுத்தப்பட்டபோது, கொண்டி, சந்தாலி (அ) ஓரவான் போன்ற மலைவாழ் மக்களின் மொழிகள் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. தமிழ், தெலுங்கு போன்ற மொழிகளைப் பேசக்கூடிய பெரும்பான்மை மக்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டனர்.

புதியதாக உருவாக்கப்பட்ட மாநிலங்கள், மக்களின் கோரிக்கைகள் எவ்வாறு வெற்றி பெற்றன என்பதையும் இப்பிரச்சினையை அரசியல் எவ்வாறு தீர்த்து வைத்தது என்பதற்கும் எடுத்துக்காட்டாக திகழ்கின்றன. மொழி அடிப்படையிலான மாநில மறுசீரமைப்பு நாட்டை வலுப்படுத்த உதவியதே தவிர, நலிவுறச் செய்யவில்லை.

- மொழி அடிப்படை மாநிலங்கள் உருவாக்கப்படாமல் இருந்திருந்தால், இந்திய ஒருமைப்பாடு மேலும் மேம்பாடு அடைந்திருக்கும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?
- மலைவாழ் மக்களின் மொழிகள் கணக்கில் ஏன் எடுத்துக்கொள்ளவில்லை என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?
- இந்தியாவில் தற்போதுள்ள மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களின் எண்ணிக்கை உங்களுக்குத் தெரியுமா?
- இந்தியாவில் புதியதாக உருவாக்கப்பட்ட கடைசி மாநிலங்கள் எவை? அவை எப்போது உருவாக்கப்பட்டன?

## சமூக பொருளாதார மாற்றம்

இந்திய அரசியல் அமைப்புச்சட்ட நிர்ணய சபை, சமூக, பொருளாதார அரசியல் நீதிக்கும், அனைவருக்கும் சமமான நிலை மற்றும் வாய்ப்புக்கும் அறைகூவல் விடுத்தது. அது மட்டுமின்றி சமூக பொருளாதார மாற்றமே நவீன இந்தியாவின் நோக்கமாக குறிப்பிட்டது. புதிய அரசியல் அமைப்புச் சட்டம் துவக்கப்பட்ட உடனே, திடடக்குழு (Planning Commision) 1950-ல் ஏற்படுத்தப்பட்டது. திட்டமிடுதல் நல்ல பொருளாதாரத்திற்கு மட்டுமின்றி நல்ல அரசியலுக்கும் தேவை என நேரு குறிப்பிட்டு இருந்தார். திட்டமிடப்பட்ட வளர்ச்சி, ஜாதி, இனம், மதம், மொழி அடிப்படையிலான வேற்றுமைகள் மற்றும் நாட்டு ஒற்றுமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பிற பிரச்சனைகளையும் தீர்த்து வைக்கும் என அவர் நம்பினார்.

விவசாய வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்த முதலாம் ஐந்தாண்டு திட்டம், உணவு உற்பத்தி, போக்குவரத்து, தகவல் தொடர்பு, சமூக சேவை போன்றவை வளர்ச்சியடைய வேண்டியதின் அவசியத்தையும் உணர்ந்தது. இந்தியா தொழில்மயமாக வேண்டியதன் அவசியத்தையும் அது உணர்த்தியது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

*படம் 17.3: 1960 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட பாக்ரா அணைக்கட்டின் தோற்றம். இந்தியா சுதந்திரம் பெற்றவுடன் கட்டிய முதல் அணைக்கட்டுகளில் இதுவும் ஒன்றாகும்.*





- வயது வந்தோர் படிப்பறிவு பெறும் வகுப்புகளை காட்டும் படம். சமுதாயத்தில் இவை எவ்வகையான மாற்றங்கள் மற்றும் வளர்ச்சியை கொண்டு வந்தன என்பதை விவாதி.

உணவு மிக அவசியம் என்பதும், உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்பதிலும் ஒருமித்த கருத்து காணப்பட்டாலும், இந்த இலக்கை எவ்வாறு எட்டுவது என்பதில் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. இது தொடர்பான இரு முக்கிய கேள்விகளில் முரண்பாடான கருத்துக்கள் காணப்படடன. அவற்றில் முதலாவது வளர்ச்சி திட்டத்தில் விவசாயத்தின் பங்கு என்ன? இரண்டாவது தொழிற்துறைக்கும், விவசாயத்திற்கும் எவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்வது?

நேருவின் கருத்துப்படி, விவசாயத்தில் மாற்றத்தை புகுத்துவது பொருளாதாரத்திற்கு மட்டுமே தொடர்புடைய பிரச்சினை அல்ல ; இம்மாற்றம் கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களின் சமூக, அரசியல், பொருளாதார பிரச்சனைகளோடு தொடர்புடையது. நேரு விரும்பிய விவசாய மாற்றம் மூன்று அம்சங்களை உள்ளடக்கியது. அவை முறையே நிலச் சீர்த்திருத்தம், விவசாயக் கூட்டுறவு மற்றும் உள்ளாட்சி அமைப்பு ஆகியவை ஆகும். மூன்று வகையான நில சீர்த்திருத்தங்கள் அடையாளம் காணப்பட்டன. அவை ஜமீந்தாரி முறையை ஒழித்தல், விவசாய குத்தகையில் மாற்றம் செய்தல் மற்றும் நில உச்சவரம்பை கொண்டுவருதல் ஆகியவை "உழுபவருக்கே நிலம் சொந்தம்" என்பதே இச்சீர்திருத்தங்களின் முக்கிய நோக்கமாக இருந்தது.இதன் மூலம் விவசாயிகளை ஊக்கப்படுத்தி, உற்பத்தியை அதிகரிப்பது நோக்கமாக இருந்தது. கூட்டுறவு சங்கங்கள் விவசாயிகளுக்குத் தேவையான விதைகள், உரங்கள் போன்றவற்றை வழங்கின. நில சீர்த்திருத்த அமுலாக்கம், கூட்டுறவுச் சங்கங்களின், செயல்பாடு போன்றவற்றை உள்ளாட்சி அரசாங்கங்கள் மேற்பார்வையிட்டன.

நில சீர்த்திருத்தங்கள் இந்தியாவில் முழுமையாக செயல்படுத்தப்படவில்லை. ஜமீந்தாரி முறை ஒழிக்கப்பட்டாலும், நிலமற்ற விவசாயிகளுக்கு விவசாய நிலங்கள் தரப்படவில்லை. செல்வந்தர்களும், ஆதிக்க சக்திகளும் கிராமப்புறங்களில் இருந்த பெரும்பான்மையான நிலங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. நிலமற்றவர்களாக இருந்த தலித்துக்கள் அடிமை முறையிலிருந்தும், தீண்டாமையிலிருந்தும் விடுப்பட்டனர். நீர் பாசனத்திற்காக பெரிய அணைகளைக் கட்டுவதும் அவற்றிலிருந்து மின்சாரம் தயாரிப்பதும் முதல் ஐந்தாண்டு திட்டத்தின் (1951-56) நோக்கமாக இருந்தது. அணைகள் விவசாயத்துக்கும், தொழிற்சாலைக்கும் நன்மை அளிப்பவையாக இருந்தன. விவசாயத்தில்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

உற்பத்தி அதிகரிக்கப்பட்டாலும், மக்களின் உணவுத் தேவையை அது முழுமையாக பூர்த்தி செய்வதாக இல்லை.

தொழிற்சாலைகளை முன்னேற்றம் அடையச் செய்தால் தான் கிராமப்புறங்களிலுள்ள மக்கள் நகரத்திற்கு இடம் பெயர்ந்து தொழிற்சாலைகளில் பணியாற்றுவார்கள் என்று திட்ட நிபுணர்கள் எண்ணினர். ஆகவே, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் (1956-61) தொழிற்சாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இவ்வாறான பொருளாதார முன்னேற்றத்தை முன் வகுப்புகளில் நீங்கள் படித்திருப்பீர்கள்.

## வெளியுறவுக்கொள்கைகளும், போர்களும்

இந்தியா சுதந்திரம் பெற்ற காலத்தில் அமெரிக்கா மற்றும் ரஷ்யா தலைமையிலான நாடுகளுக்கிடையே பனிப்போர் துவங்கியது. ஜவஹர்லால் நேரு, இந்த இரு நாடுகளின் அணியில் சேராமல் தனித்தன்மையுடன் கூடிய சுதந்திரமான வெளியுறவுக்கொள்கையை விரும்பினார். அதே காலத்தில் சுதந்திரம் அடைந்த இந்தோனேஷியா, எகிப்து, யூகோஸ்லேவியா போன்ற நாடுகளுடன் இணைந்து 'அணி சேரா இயக்கத்தை' ஆரம்பித்தார். ஒரு நாடு இன்னொரு நாட்டின் உள் விவகாரத்தில் தலையிடக்கூடாது என வலியுறுத்தும் 'பஞ்ச சீல' கொள்கையை தன் அண்டை நாடுகளிடம் பின்பற்றினார்.ஆனாலும் இந்தியா இக்காலங்களில் காஷ்மீர் தொடர்பாக 1948 ல் பாகிஸ்தான் நாட்டுடனும், 1962 ஆம் ஆண்டு சீனா நாட்டுடனும் போர்களை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. 1962 ஆம் ஆண்டில், இந்தியா, போருக்கான ஆயத்த நிலையில் இல்லாத காரணத்தால் பெருமளவு ஆட்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டது.

- நீங்கள் வாழும் பகுதிகளில் 1970ஆம் ஆண்டுக்கு முன்னர் கூட்டுறவு சங்கங்கள் போன்ற அமைப்புகள் தோன்றியதா என அறிந்துக்கொள். அந்த அமைப்புகளின் உறுப்பினர் பெயர்களைத் தெரிவி.
- இந்திய நாட்டின் நில சீர்த்திருத்தங்களை சீனா மற்றும் வியட்நாம் நாடுகளின் நில சீர்திருத்தங்களோடு ஒப்பிடு.

## அடுத்த பிரதமர்

மே 27, 1964, ஆம் ஆண்டில், நேருவின் இறப்புக்குப் பிறகு இந்தியாவில் மக்களாட்சி தழைத்தோங்குமா அல்லது பிற நாடுகளைப்போல அழிந்துவிடுமா என்ற ஐயம் ஏற்பட்டது. ஆனால் அச்சூழ்நிலையில் காங்கிரஸ் கட்சி லால் பகதூர் சாஸ்திரியைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. இந்திய நாட்டின் நோக்கங்களும், அடிப்படை மதிப்புகளுக்குமான சவால்களை லால் பகதூர் சாஸ்திரி எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. இவற்றில் முதலாவதாக தென்னிந்தியாவில் தி.மு.க.வால் நடத்தப்பட்ட "இந்தி எதிர்ப்புப்போராட்டமாகும்". இப்போராட்டம் நாட்டின் ஒருமைப்பாட்டுக்குப் பெரும் சவாலாக விளங்கியது. இரண்டாவதாக, 1965 ஆம் ஆண்டு பாகிஸ்தானுடன் நடைபெற்ற போரும், நாட்டை அச்சுறுத்திய உணவு பற்றாக்குறையுமாகும். சாஸ்திரி அவர்கள் 1966 ஆம் ஆண்டு எதிர்பாராமல் இறந்த பிறகு இந்திரா காந்தி பிரதமரானார்.



*படம் 17.4 : திரு.லால் பகதூர் சாஸ்திரி*

## இந்தி எதிர்ப்பு போராட்டம்

1963 ஆம் ஆண்டில் ஆட்சி மொழிகள் சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன், இந்தி பேசாத மக்களின் மீது



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இந்தியைத் திணிக்கும் முயற்சியாக தி.மு.க. இதை நம்பியது. இந்தி திணிப்பை எதிர்த்து மாநிலம் தழுவிய போராட்டத்தைத் துவக்கியது. இப்போராட்டம், முழு அடைப்பு, ஆர்ப்பாட்டம், கொடும்பாவி எரித்தல், கடையடைப்பு, இந்தி புத்தகங்களையும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தையும் தீயிட்டுக் கொளுத்துதல் போன்ற பல பரிமாணங்களைப் பெற்றது. விளம்பரப் பலகைகளிலிருந்த இந்தி எழுத்துக்கள் தார் போட்டு அழித்துக் கருமையாக்கப்பட்டன. காவல் துறையினருக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே பயங்கர மோதல் ஏற்பட்டது. மத்திய அரசாங்கம் இந்த எதிர்ப்பை உடனடியாக கவனத்தில் கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டது. காங்கிரஸ் கட்சியும் இந்தி –ஆதரவு, இந்தி – எதிர்ப்பு என்ற இரண்டு குழுக்களாக உடைந்தது. சிலர் இச்சூழல் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து என உணர்ந்தனர்.

இறுதியாக, நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே, இந்தி ஆதரவு குழுவின் ஆதரவாளராக இருந்த சாஸ்திரி அவர்கள், இந்தி எதிர்ப்பு குழுவின் உணர்வுகளை மதிப்பளிக்கும் வகையில் பல சலுகைகளை வழங்கினார். அச்சலுகையில் குறிப்பாக ஒவ்வொரு மாநிலமும் தனக்கென ஒரு மொழியை பின்பற்றவும், அம்மொழி வட்டார மொழியாகவோ அல்லது ஆங்கில மொழியாகவோ இருக்கலாம் என்றும், மத்திய, மாநில அரசுகளுக்கிடையே ஆங்கிலம் தொடர்பு மொழியாக தொடரும் என்றும் சாஸ்திரி அறிவித்தார். மேலும் அனைத்திந்திய தேர்வுகள் இந்தி மொழியில் மட்டுமின்றி ஆங்கில மொழியிலும் நடத்தப்படும் என்றும் அறிவித்தார்.

மக்களின் கருத்துக்கு அரசாங்கம் எவ்வாறு செவிசாய்த்தது என்பதை நாம் இங்கும் காண முடிகின்றது. மேற்கண்ட இரண்டு பிரச்சனைகளிலும் இந்தியப் பிரதமர், தான் இந்தி ஆதரவுக் குழுவை சேர்ந்தவராக இருந்தாலும் மக்கள் கருத்துக்கு மதிப்பளித்தார். நேரு, லால்பகதூர் சாஸ்த்திரி போன்ற பிரதமர்கள் தன் சொந்த விருப்பு வெறுப்புகளை விட நாட்டின் ஒருமைப்பாடே உயர்ந்தது என எண்ணினர்.

- மொழிக்கொள்கை தேசிய ஒருமைப்பாடடை வளர்க்க எவ்வாறு உதவியது?
- தேசிய மொழி அவசியமா?
- அனைத்து மொழிகளும் சம அந்தஸ்து பெற்றிருக்க வேண்டுமா?

## பசுமைப்புரட்சி

வளர்ச்சி திட்டங்கள் தொடர்பான விவாதம் பொருளாதார பிரச்சினைகளோடு மட்டுமின்றி அரசியல் பிரச்சனைகளோடும் தொடர்புடையதாக இருந்தது. நேருவும் காங்கிரஸ் கட்சி அதிகார வர்க்க இடதுசாரி குழுவும், அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள, அரசாங்க திட்ட விவசாயக் கொள்கையை விரும்பினர். ஆனால் காங்கிரஸ் கட்சியின் அதிகார வர்க்க வலதுசாரி குழுவினர் (right of centre faction) விவசாயத்தில் அரசுக்கட்டுப்பாட்டை எதிர்த்தனர். தொடர்ந்து அரசுத் திட்டங்களை விமர்சித்து வந்த அவர்கள், இத்திட்டங்களை நீர்த்துப்போகும் முயற்சியில் ஈடுபட்டனர். தேசிய அளவில் வலுப்பெற்றுத் திகழ்ந்த இக்குழுக்கள் இதைப் போன்ற முழுமையான திட்டங்கள் அமுலாக்கப்படவில்லை என்பதை உறுதி செய்தது.

நாட்டில் நடைமுறையில் இருந்த கொள்கையில் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியாது என்பது தெளிவானதும், 1964-67 ஆம் ஆண்டுகளில் நாட்டின் கொள்கை மாற்றம் கண்டது. மாற்றம் பெற்ற புதுக்கொள்கையின் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க மாநில அரசுகளின் ஒத்துழைப்பைப் பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறாக, நேருவின் மறைவுக்குப் பிறகு பொருளாதார சிந்தனையிலும், கொள்கையிலும் மாற்றம் ஏற்பட்டது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## மாநிலக்கட்சிகள் மற்றும் வட்டார இயக்கங்களின் வளர்ச்சி

1967 ஆம் ஆண்டு நடைபெற்றத் தேர்தல்கள் இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தன. தேர்தல்கள், தங்கள் வாழ்க்கையைத் தீர்மானிக்கக் கூடியவை என்றும், தேர்தல்களை மிக எச்சரிக்கையாக அணுகவேண்டும் எனவும் மக்கள் எண்ணினர். அதே சமயத்தில் பொருளாதார முன்னேற்றம் காரணமாக பலர், லாபம் ஈட்டியவர்களாகவும், நஷ்டம் அடைந்தவர்களாகவும் இருந்தனர். இப்போக்கு அரசியல் போட்டியில் மாற்றம் ஏற்பட காரணமாயிற்று. காங்கிரஸ் கட்சி மிகப்பெரிய தோல்வியைத் தழுவியது என்பதில் வியப்பு ஏதும் இல்லை. சுதந்திரம் பெற்றவுடன் நடைபெற்ற தேர்தல்களைக் காட்டிலும் மிகக் குறைந்த இடங்களிலேயே வெற்றியைப் பெற்றது (284 இடங்கள்). இக்கட்சி பீகார், உத்திரபிரதேசம், ராஜஸ்தான், பஞ்சாப், மேற்கு வங்காளம், ஒரிஸ்ஸா, சென்னை, கேரளா போன்ற மாநில சட்டமன்றத் தேர்தல்களில் தோல்வியைக் கண்டது. இது இந்தியாவில் மிகப்பெரிய அரசியல் மாற்றமாக அமைந்தது. தொடர்ந்து 30 ஆண்டுகள் ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சி சவால்களை எதிர்நோக்க வேண்டியதாயிற்று. தோல்வியுற்ற காங்கிரஸ் கடசி, வெற்றிபெற்றவர்களை ஆட்சி செய்ய அனுமதித்தது. இது இந்தியாவில் மக்களாட்சி வேர்விடத் தொடங்கியதையும், நாடு பல கட்சி முறை (multi-party system.) நோக்கி நகர்வதையும் நமக்குக் காட்டுகின்றது.

காங்கிரஸ் கட்சிக்குத் தமிழ்நாட்டிலும், கேரளாவிலும், மிகப் பெரிய தோல்வி ஏற்பட்டது. தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் பெருமளவு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இது, வலுவான வட்டார இயக்கங்கள் மிகப்பெரிய கட்சிக்கு சவாலாக விளங்கின என்பதைக் காட்டுகின்றது. தி.மு.க. விற்கு சினிமாத்துறையோடு நெருங்கியத் தொடர்பு இருந்தது. புகழ்பெற்ற கதாநாயகனாக விளங்கிய எம்.ஜி.ஆர் எனப்படும் எம்.ஜி. ராமசந்திரனின் ரசிகர் மன்றங்கள் தி.மு.க. விற்கு ஆதரவு அளித்தன.

காங்கிரஸ் கட்சி கேரளா, மேற்குவங்காளம், ஒரிஸ்ஸா போன்ற மாநிலங்களிலும் தோல்வியைக் கண்டது. இத்தோல்விகளும், சவால்களும் காங்கிரஸ் கட்சியை மேலும் பலவீனமாக்கின. வட மாநிலத்தேர்தல்களில் சிறிதளவு வாக்கு வித்தியாசத்திலேயே வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சி எதிர்கட்சியிடம் தோல்வியைக் கண்டது. இதன் பலனாக, காங்கிரஸ் ஆட்சி வீழ்த்தப்பட்டு, சம்யுக்த விதாயக் தல் கட்சி (SVD) ஆட்சிப்பொறுப்பேற்றது. இது ஜன சங், சோஷியலிசக் கட்சி, சுதந்திரா கட்சி, உள்ளூர் கட்சிகள், காங்கிரஸ் கட்சியின் அதிருப்தியாளர்கள் போன்றோரின் கூட்டணி ஆட்சியாக இருந்தது.

புதிய அரசாங்கங்கள், இந்திய அரசியல் வரலாற்றில் மிக முக்கியச் சின்னமாக விளங்குகிறது. ஏனெனில் இது மக்களாட்சி முறையின் முதல் முன்னேற்றமாகக் கருதப்படுகின்றது. முதல் முறையாக, நிலச்சீர்த்திருத்தங்களால் பயன்பெற்று பொருளாதார வளர்ச்சி அடைந்த குறிப்பிட்ட சாதியினர் மற்றும் குழுவினர் அரசியல் அதிகாரத்தைப் பெற்றனர். இந்த ஜாதி மக்களில் குறிப்பாக அரியானா மற்றும் உத்திரபிரதேசத்தில் ஜாட் சாதியினரும், பீகாரில் குர்மிஸ் மற்றும் கோரிஸ் சாதியினரும், மத்திய பிரதேசத்தில் லோத் சாதியினரும், யாதவர்களும் அனைத்து மாநிலங்களிலும் அதிகாரத்தைப் பகிர்ந்துக்கொண்டவர்கள் பட்டியலில் அடங்குவர். இவை தவிர, ஆந்திர பிரதேசத்தில் ரெட்டி மற்றும் கம்மா சாதியினர், கர்நாடகாவில் வொக்காலிகர்கள், தமிழ் நாட்டில் வெள்ளாள சாதியினரும் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்துக்கொண்டவர்களாக இருந்தனர். இவர்கள் அந்தந்த மாநிலங்களில் அதிக எண்ணிக்கையிலான பெரும்பான்மை சாதியினராக இருந்தனர். பின்தங்கிய சாதியினரின் வாக்குகளால் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததே இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

வட மாநிலங்களில் ஆட்சி அமைத்த (SVD) கட்சியின் ஆட்சி சில காலமே நீடித்தது. ஊழலும், கட்சி தாவலும் அவர்கள் வாழ்க்கையாய் இருந்தது. ஆட்சியைப் பிடிக்கும் லட்சியமே அவர்களை ஒற்றுமைப்படுத்திய ஒரே ஒரு அம்சமாகும். இந்த அரசு மக்கள் நலனுக்காக எந்த செயல்திட்டங்களையும் நிறைவேற்றவில்லை. இன்றளவும் இந்த வட்டார கட்சிகள் இதே நிலையில் தான் உள்ளது என்று கணக்கிடப்படுகிறது.

இக்காலம், நாட்டின் பல பகுதிகளில் வட்டார உணர்வுகள் மேலோங்கியதைக் கண்டது. ஆந்திரப்பிரதேசத்தில் தனித் தெலுங்கானா மாநிலத்துக்கான கோரிக்கை



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

எழுந்தது. இப்போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்திய உஸ்மானியா பல்கலைக்கழக மாணவர்களின் கருத்துப்படி வளர்ச்சியின் பயன்கள் அனைத்தும் மாநிலத்தின் சில பகுதிகளை மட்டுமே சென்றடைகிறது என்பதே ஆகும்.



படம் 17.5 திருமதி. இந்திரா காந்தி

1969 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அஸ்ஸாமில் மேகாலயா என்ற புதிய மாநிலம், மலைவாழ் மக்கள் வசிக்கக்கூடிய மாவட்டங்களை காசி, ஜைன்தியா, கரோ மலைப்பகுதிகள் போன்றவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்டது. 1966 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பஞ்சாப் மாநிலத்திற்கு சொந்தத் தலைநகர் இல்லாமல் இருந்தது. 1968-69 ஆம் ஆண்டுகளில், பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலங்களுக்குப் பொதுத்தலைநகராக இருந்த சண்டிகர் தங்களுக்கு வேண்டுமென பஞ்சாப் மக்கள் போராடினர். மகாராஷ்ட்ராவில், பம்பாய் நகரம் மகாராஷ்டிரா மக்களுக்கு மட்டுமே சொந்தமானதாக இருக்க வேண்டும் என்ற வலுவான கோரிக்கை எழுந்தது. இதற்கான போராட்டத்தை சிவசேனா அமைப்பு நடத்தியது. இக்கட்சியின் முக்கிய குற்றச்சாட்டு என்னவென்றால் பிழைப்பைத்தேடி பம்பாய்க்கு வந்த தென்னிந்தியர்களே நகரத்தின் மொத்த வேலை வாய்ப்பையும் பறித்துக்கொண்டனர் என்பதே.

அதே வேளையில் பழைய கோரிக்கைகளும் தொடர்ந்த வண்ணம் இருந்தன. இக்காலத்தில் காஷ்மீர் மற்றும் நாகலாந்துக்கான கோரிக்கைகளும் எழுந்தன. வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஷேக் அப்துல்லா மீண்டும் மாநிலத்திற்குத் திரும்பினார். அதே போல நாகலாந்தில் நடைபெற்ற போராட்டம் ஒரு புதிய இளைய தலைமையின் கீழ் நடத்தப்பட்டது.

இது மதக்கலவரத்தின் காலமாகத் திகழ்ந்தது. நாட்டின் வெவ்வேறு பகுதிகளான ராஞ்சி (பீகார்), அகமதாபாத் (குஜராத்), ஜல்கோன் (மகாராஷ்ட்ரா), அலிகார் (உத்திரபிரதேசம்) போன்ற பகுதிகளில் மதக்கலவரங்கள் நிகழ்ந்தன. இக்காலம் மிகச் சிக்கலான காலமாகத் திகழ்ந்தது. புதிய தலைமையின் கீழ் அரசியல் மாற்றம் நிகழ்ந்தது. நாட்டில் அரசியல் விழிப்புணர்வால் ஏற்பட்ட பெரும் சிக்கல்களையும், கோரிக்கைகளையும் கையாள தங்களைத் தயார் படுத்திக்கொள் வேண்டிய அவசியம் புதிய தலைமைக்கு ஏற்பட்டது.

### ஜம்மு மற்றும் காஷ்மீர்

மற்ற மாநிலங்கள் இந்திய யூனியனில் இணைக்கப்பட்டது போலன்றி காஷ்மீர் இணைப்பு முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகும். அப்போது காஷ்மீர் மன்னராக இருந்த ஹரிசிங் காஷ்மீர் தனி நாடாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். இந்தியா மற்றும் பாகிஸ்தானுடனான இணைப்பை அவர் விரும்பவில்லை. முஸ்லீம்களை பெரும்பான்மையினராகக் கொண்ட அந்த மாநிலம், இந்து மன்னரால் ஆட்சி செய்யப்பட்டது. இந்தியா சுதந்திரம் பெற்ற காலத்தில், அரசாங்க வேலைவாய்ப்பில் முஸ்லீம்களுக்கு மிகப்பெரும் பிரதிநிதித்துவம் மற்றும் பிரதிநிதித்துவ அரசாங்கம் போன்றவற்றை வலியுறுத்தி ஷேக் முகமது அப்துல்லா தலைமையிலான அனைத்து ஜம்மு மற்றும் காஷ்மீர் முஸ்லீம் மாநாடு போராடியது. தேசிய மாநாடாக உருவெடுத்த இந்த இயக்கம் இந்துக்கள் மற்றும் சீக்கியர்களை உறுப்பினர்களாகப் பெற்றிருந்தது. தேசிய மாநாடு, மத நல்லிணக்கம், சோஷியலிசம் போன்ற கொள்கைகளில் காங்கிரஸ் கொள்கைகளை ஒத்திருந்தது.

1947 ஆம் ஆண்டின் இறுதியில், பாகிஸ்தானால் ஆதரிக்கப்பட்ட ராஜாக்களால் காஷ்மீரின் வடப்பகுதி வெளிநாட்டவரின் ஆக்கரமிப்பை சந்தித்தது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஆக்கிரமிப்பாளர்கள் ஸ்ரீநகரை நெருங்கியதும்,காஷ்மீர் மன்னர் நாட்டின் பாதுகாப்பிற்காக இந்தியப்படைகளின் உதவியை நாடினார். ஜம்மு மற்றும் காஷ்மீரை இந்தியாவுடன் இணைத்தால் மட்டுமே இந்திய படைகள் காஷ்மீருக்குள் நுழையும் என்று இந்திய கவர்னர் ஜெனரல் உறுதிபட கூறினார். அதே சமயத்தில் காஷ்மீர் நாடு தனித்து சுதந்திரமாக இயங்குவது போன்ற பல்வேறு வாய்ப்புக்கள் பரிசீலிக்கப்பட்டன.

1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், இந்தியா இப்பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச்சென்றது. இப்பிரச்சினை சரியான வகையில் கையாளப்படாததால், இது இந்தியா, பாகிஸ்தான் பிரச்சினையாக மாறியது. அதே சமயத்தில், காஷ்மீர் மக்களை முழுமையான குடிமக்களாகவும், பிற மாநிலங்களைப் போலன்றி காஷ்மீர் மாநிலத்திற்கு தனி அந்தஸ்து கொடுக்க வழிவகைச் செய்யும் டெல்லி ஒப்பந்தத்தில் ஷேக் அப்துல்லா கையெழுத்திட்டார்.இந்த ஒப்பந்தத்தின் உட்பிரிவுகள் மாநிலத்தின் முக்கிய இயல்புகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 370 வது சட்டப்பிரிவில் இடம் பெற்றது.

அவ்வேளையில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தம் அரசியல் சாயத்தைப் பூசிக்கொண்டது. நிலச்சீர்திருத்தத்தின் காரணமாக, பெருமளவு நிலங்களைப் பெற்றிருந்த இந்துக்கள், நில உச்சவரம்புக்கு உட்படுத்தப்பட்டனர். நில உச்சவரம்பால் பயன்பெற்றவர்களில் பெரும்பான்மையோர் முஸ்லீம்களே 1950 -1990 ஆம் ஆண்டுகளின் இடைப்பட்ட காலங்களில் காஷ்மீரின் தனி அந்தஸ்தைக் குறைத்து பிற மாநிலங்களைப்போல மாற்றி அமைக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இது காஷ்மீர் மக்களிடையே பெரும் கொந்தளிப்பை உருவாக்கியது. இது 1990 ஆம் ஆண்டுகளில் "சுதந்திர காஷ்மீர் நாடு" கோரி இயக்கம் தோன்ற காரணமாயிற்று. இக்காலத்தில் பெரும்பான்மையான இந்து குடும்பத்தினர் காஷ்மீர் பள்ளத்தாக்கை விட்டு நாட்டின் பிற பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துச் சென்றனர்.

1967 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் இந்திராகாந்தி உட்கட்சி மற்றும் எதிர்கட்சிகளின் சவால்களைச் சந்திக்க ஒரு திறமையான அரசியல் யுக்தியைக் கையாண்டார்.அவர் தனக்காகவும், தன் கட்சிக்காகவும் ஏழைகளையும், பின் தங்கிய மக்களையும் அடையாளம் கண்டு ஒரு புதிய சமுதாய தளத்தை ஏற்படுத்தினார். இம்முடிவு இரண்டு பக்கமும் கூர்மையான ஆயுதத்தை போன்றது. சமூக, பொருளாதார, முன்னேற்றம் தொடர்பான பழைய வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவேண்டி இருந்தால் 1967ஆம் ஆண்டு நடைப்பெற்ற தேர்தலில் காங்கிரஸ் தோல்வியடைந்தது. மேலும் புதிய வாக்குறுதிகளையும் இந்திராகாந்தி அளித்தார். அதற்கடுத்த பத்து ஆண்டுகளில் மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாததால் ஏற்பட்ட ஏமாற்றமும், அலட்சியமும் அவரச நிலை அறிவிக்கப்பட்டவுடன் (1975) உச்சகட்டத்தை அடைந்தது.

## பங்களாதேஷ் போர்

1970 ஆம் ஆண்டின் துவக்கத்தில், கிழக்கு பாகிஸ்தானில் (தற்போதைய பங்களாதேஷ்) வங்காளத்தவர் தங்களின் தனித்தன்மைக்காகவும், மேற்கு பாகிஸ்தானின் மாற்றான்தாய் போக்கை எதிர்த்தும் மிகப்பெரும் போராட்டத்தை நடத்தினர். கிழக்கு பாகிஸ்தானின் பொதுத்தேர்தல்களில் 'முஜ்பூர் ரகுமான்' தலைமையிலான கட்சி பெரும் வெற்றி பெற்றாலும், அவர் கைது செய்யப்பட்டு மேற்கு பாகிஸ்தானுக்குக் கொண்டு செல்லப்பட்டார். கிழக்கு பாகிஸ்தானில் ராணுவ அடக்கு முறையின் காலம் துவங்கியது. லட்சக்கணக்கில் இந்தியா வந்த அகதிகளுக்கு உணவும், உறைவிடமும் அளிக்கப்பட்டது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அதே சமயத்தில் பங்களாதேஷில் ஒரு விடுதலைப்போராட்ட இயக்கம் துவக்கப்பட்டது. அப்போராட்டத்திற்கு இந்தியாவின் உதவியை அது நாடியது. 1971 ஆம் ஆண்டு இந்தியா பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே போர் மூண்டது. பங்களாதேசத்தின் விடுதலைக்காகவும், அதை தனி நாடாக்கும் பொருட்டு முடிவெடுத்து போர் புரிந்தது. இந்தியா இராணுவ பலம் பெற்றதால் மட்டுமே இப்போர் புரியவில்லை. ஆனால் இந்தியா திறம்பட, அணிசேரா நிலையை எடுத்ததன் விளைவாக இருபெரும் வல்லரசுகளின் தலையீட்டைத் தடுத்தது.

## புதிய அணுகுமுறை :

இந்திராகாந்தி தனக்காகவும், காங்கிரஸ் கட்சிக்காகவும் புதிய கொள்கைகளையும், திட்டங்களையும் அறிமுகப்படுத்தி ஒரு பாதையை வகுத்துக்கொண்டார். இக்கொள்கை கட்சி அமைப்பை தன் கட்டுப்பாட்டுக்குள் அவருக்கு கொண்டுவர உதவியது.

போரில் வெற்றி பெற்ற உடனே, 1971 ஆம் ஆண்டு “ஏழ்மையை ஒழிப்போம்” (Garibi Hatao) என்ற முழக்கத்தோடு களமிறங்கிய காங்கிரஸ் கட்சி பெரும்வெற்றி பெற்றது. இது இந்திரா காந்தியின் புகழை மேலும் அதிகரித்தது. எதிர்க்கட்சிகள் இருந்த இடம் தெரியாமல் போயின. அவரின் விமர்சகர்கள் வாயடைத்துப்போயினர். இந்திரா காந்தி மக்களின் அன்புக்கு பாத்திரமானார். அதற்கடுத்து 1972 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநில சட்டமன்றத் தேர்தல்களில் இந்திராகாந்தியின் புகழ் அலைகளால் காங்கிரஸ் கட்சி பெரும் வெற்றி பெற்றது. அப்போது அவர் கட்சியையும், நாடாளுமன்றத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.

இக்காலத்தில் சமூக, பொருளாதார மாற்றத்திற்கான இலக்கை எட்டுவதற்காக கொண்டுவரப்பட்ட சட்டங்களில் முக்கியமனவை. தனியார் வங்கிகளின் தேசியமயமாக்கலும், சமஸ்தான மன்னர்களுக்கான மானிய ஒழிப்புமாகும். இந்த இரண்டு சட்டங்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகள் காரணமாக, நீதிமன்றங்கள் அரசியல் இலக்கை அடைவதில் தடையாக இருப்பது போல காணப்பட்டது.

கொள்கைகளையும், திட்டங்களையும் பொறுத்தவரை, நீதிமன்றங்கள் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தன. சமூக, பொருளாதார மாற்றம் என்ற பெயரில் அரசியல் அமைப்புச் சட்டத்தில் அடிக்கடி திருத்தம் செய்யப்படுவது அரசியல் அமைப்புச் சட்டத்தை சிதைத்துவிடும் என்றும், வெவ்வேறு அமைப்புகளுக்கிடையே ஏற்றத்தாழ்வை உருவாக்கும் என்றும் உச்சநீதிமன்றம் அச்சமுற்றது.

1973 ஆம் ஆண்டில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை அமைப்பு பற்றிய வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியது. இது அரசியல் அமைப்புச் சட்ட அடிப்படை அமைப்பு திருத்தம் தொடர்பாக அரசுக்குள்ள அதிகாரத்தைத் தடுத்தது. அப்போதைய நிகழ்வுகள் தன்




படம் 17.6 : கல்கத்தாவில் (கொல்கத்தா) குடும்பக் கட்டுப்பாடு மருத்துவமனை



SCERT TELANGANA
Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கட்டுப்பாட்டுக்கு அப்பால் சென்றதால், இந்திராகாந்தியால் தன் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது கடினமாகத் தோன்றியது. அவருடைய பதவிக்காலத்தில் சமூக, பொருளாதார நிலைகள் சிக்கலாயின. 1973 ஆம் ஆண்டு நடைபெற்ற அரபு – இஸ்ரேலியப் போரால் பெட்ரோலியப் பொருட்களின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்தது. இது அரசின் மேல் பெருஞ்சுமையை சுமத்தியது. பணவீக்கம், அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றம், உணவுப்பற்றாக்குறை, வேலைவாய்ப்பின்மை போன்றவை இப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியது. பெரும்பான்மையான மக்கள் மகிழ்ச்சியற்று கிடந்தனர். இந்த நிலை எதிர்கட்சிகளை ஒன்று திரட்டும் வாய்ப்பாக, அமைந்தது. இவர்கள் நாட்டின் வெவ்வேறு பகுதி மக்களின் அதிருப்தியையும் ஒன்றிணைத்தனர். ஜெயபிரகாஷ் நாராயண் என்பவரின் தலைமையில் ஒன்றுதிரண்ட காங்கிரஸ் கட்சியினர் காங்கிரஸ் கட்சிக்கு எதிராகவும், குறிப்பாக இந்திரா காந்திக்கு எதிராகவும் பெரும்பிரச்சாரங்களை மேற்கொண்டனர். JP இயக்கம் (JP Movement) என்னும் இந்த இயக்கம், பீகாரிலும், குஜராத்திலும் முக்கியத்துவம் பெற்றதாக விளங்கியது.

## நெருக்கடி நிலை

அரசாங்கம், சட்டம் ஒழுங்கு என்ற பெயரில் மக்கள் உரிமைகளை (civil rights) மீறக்கூடிய பல சட்டங்களை இயற்றியது. எதிர்க்கட்சிகள் பிரதமரை தனி நபர் அரசாங்கம் நடத்துவதாகக் கூறி விமர்சனம் செய்தனர். அதே வேளையில் 1971 ஆம் ஆண்டு தேர்தலில், இந்திரா காந்தி மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தை மீறியதற்காக அலகாபாத் உயர்நீதிமன்றத்தால் லோக்சபை M.P. பதவியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார். ஆனால் இந்த உத்தரவுக்கு அவர் உச்சநீதிமன்றத்தில் தடை ஆணை பெற்றார்.

அதன் பிறகு சில நாட்களில், JP இயக்கம் வலுவானதாக மாறியதால், அரசாங்கம் நெருக்கடி நிலையை அமுல்படுத்தியது. இது சட்டம் ஒழுங்கை சரிசெய்யவும், மக்களாட்சியை காக்கவும், சமூக பொருளாதார மாற்றத்தை பாதுகாக்கவும், தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தவும் அவசியம் என அரசு அறிவித்தது.

இதன் மூலம் மக்களாட்சி குழிதோண்டி புதைக்கப்பட்டது. சட்டம் ஒழுங்கு என்ற போர்வையில் அரசாங்கம் பல்வேறு அடக்குமுறை நடவடிக்கைகளை எடுத்தது. அடிப்படை உரிமைகளில் பலவற்றைத் தற்காலிகமாக பறித்தது. பலர் காரணமின்றி கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர். மக்களின் சிவில் உரிமைகள் மீறப்பட்டன. விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துதல், கள்ளச்சந்தை ஒழிப்பு, கொத்தடிமை முறை ஒழிப்பு போன்றவற்றை வரவேற்ற பொதுமக்கள், நகரப் பகுதியிலிருந்து குடிசைப் பகுதிகள் அழிப்பு, கட்டாய குடும்பக்கட்டுப்பாடு போன்றவற்றை வெறுத்தனர். குடிமக்களுக்கு சுதந்திரம் மறுக்கப்பட்டதால் அவர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த முடியவில்லை. அதனால் அரசாங்கத்தால் இதை சரி செய்யும் நடவடிக்கைகள் எடுக்க முடியவில்லை.

பல மாற்றங்களைக் கொண்டு வந்த அரசியல் அமைப்புச் சட்டம் 42 வது திருத்தம், இக்காலத்தின் மிக முக்கிய விஷயமாக கருதப்படுகின்றது. இது கீழ்கண்ட நோக்கங்களைப் பெற்றிருந்தது. a) தேர்தல் விவகாரங்களிலிருந்து நீதிமன்றங்களைப் ஒதுக்கி வைப்பது. b) மத்திய,மாநில அரசுகளை வலுப்படுத்துவது ; c) சமூக, பொருளாதார மாறுதல் தொடர்பான சட்டங்களுக்கு நீதிமன்ற குறுக்கீடுகளிலிருந்து அதிக பாதுகாப்பு தருதல்; d) நீதித்துறையை நாடாளுமன்றத்திற்கு உட்பட்ட அமைப்பாக செய்தல் போன்றவையாகும். இத்திருத்தத்தின் நோக்கம் சமூக, பொருளாதார மாற்ற சட்டங்களிலிருந்து நீதிமன்ற குறுக்கீடை தடுப்பதாகவும், தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவதாக இருந்தாலும், இது மக்களாட்சியை மிகவும் பலவீனமடையச் செய்தது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**பாடச்சுருக்கம் :**

முதல் முப்பது ஆண்டுகள் நெருக்கடி நிலையுடன் முடிவுற்றாலும், இக்காலத்தை ஒட்டுமொத்தமாக ஆராய்வோமானால் தீமைகளை விட நன்மைகளே அதிகமாக காணப்பட்டன.

நிலையான மக்களாட்சி நிறுவப்பட்டதே இக்காலத்தின் சாதனையாக் கருதப்படுகின்றது. இந்தியாவுடன் சமகாலத்தில் சுதந்திரம் பெற்ற மற்ற நாடுகளோடு இந்தியாவை ஒப்பிடும் போது, மாற்றுக்கருத்துக்கள் உடைய பல்வேறு கட்சிகளின் "பல கட்சி முறை", ஒரு உண்மையான சாதனையாகக் கருதப்படுகின்றது. மற்ற நாடுகளைப் போலன்றி, இந்தியாவில் சுதந்திரமான, நியாயமான தேர்தல்கள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. அது மட்டுமின்றி இந்தியாவில் அரசுகள் மாற்றமும், தலைவர்கள் மாற்றமும் நல்ல முறையில் நடக்கின்றன. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் மக்கள் உரிமைகளை உறுதியளிப்பதோடு மட்டுமின்றி, இவ்வுரிமைகளின் பாதுகாப்புக்கும் உறுதியளிக்கின்றது.

சுதந்திர அமைப்புகளான நீதித்துறை, தேர்தல் ஆணையம், மத்திய, மாநில கணக்குத் தணிக்கை அதிகாரி போன்ற அறிவுறுத்தும் அமைப்புகளை இந்திய அரசு ஏற்படுத்தியது. இந்தியாவில் உயர் அதிகாரிகளின் நடுநிலைத் தன்மையும் (Bureaucratic achievement), ஒரு முக்கிய சாதனையாகக் கருதப்படுகின்றன. மக்களின் கட்டுப்பாட்டிலுள்ள இராணுவப் படைகளும் ஒரு முக்கியமான சாதனையாகக் கருதப்படுகின்றது. நமது அண்டை நாடான பாகிஸ்தானோடு ஒப்பிடும் போது மக்களாட்சி அமைப்புகளின் தோற்றம் மற்றும் வளர்ச்சியில் முன்னிலை வகிக்கிறது.

நாட்டின் ஒருமைப்பாட்டை பேணிக்காப்பதில் இந்தியா மிகப்பெரிய வெற்றியைக் கண்டுள்ளது. பல்வேறு வேறுபாடுகளை களைந்து ஒற்றுமைப்படுத்துவதில், ஒரு தகுதியுள்ள நாடாக இந்தியா திகழ்கின்றது. இதில் இந்தியா பல நாடுகளுக்குப் பாடமாக உள்ளது.

திட்டக்குழுவை ஏற்படுத்துதல், ஏற்றத்தாழ்வற்ற வட்டார முன்னேற்றத்தின் நோக்கம் போன்றவை பொருளாதார இலக்கில் குறிப்பிடத்தக்கவையாகும். சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்களின் முன்னேற்றத்திற்காக மிகுந்த அக்கறைக் காட்டப்பட்டது. உணவுப் பற்றாக்குறைக்காக பிறரைச் சார்ந்திருந்த இந்தியா, உணவு உற்பத்தியில் படிப்படியாக தற்சார்பு பெற்றது. இந்தியா, மிகப்பெரும் தொழில் வளர்ச்சிக்கான அடித்தளத்தை அமைத்தது. இவ்வாறாக இருந்த போதிலும் வட்டார முன்னேற்றத்தில் ஏற்றத்தாழ்வு காணப்பட்டது. சில வட்டாரங்கள், பிற வட்டாரங்களை விட வளர்ச்சி பெற்றது. அதைப்போலவே வேலைவாய்ப்பும் அதிகரிக்கவில்லை.

துவக்கக் கல்விக்கும், மக்கள் சுகாதாரத்திற்கும் முன்னுரிமை அளிக்காதது மிகப்பெரிய பலவீனங்களில் ஒன்று என்பதில் ஐயமில்லை. இதிலிருந்து மீள இந்தியாவுக்கு பல ஆண்டுகள் ஆகும். இதே சமயத்தில் புதிய வழித்தடத்தைத் தேடி பயணிக்கின்ற நாடுகளான சீனா, கொரியா போன்றவை இந்தியாவுடன் ஒப்பிடும் போது துவக்கக்கல்விக்கும், மக்கள் சுகாதாரத்திற்கும் மிக அதிக முக்கியத்துவம் கொடுத்தன.

சாதி முறையின் கடும் விளைவாக கருதப்படும் தீண்டாமை அகற்றப்பட்டாலும், சாதிப்பாகுபாடும், மதப்பாகுபாடும் ஆண், பெண் பாகுபாடும் இன்னும் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

## முக்கியச் சொற்கள்

| | | |
|---|---|---|
| மாநில மறுசீரமைப்பு | ஒரு கட்சி ஆதிக்கம் | நெருக்கடி நிலை |
| வட்டார இயக்கங்கள் | தேசியமயம் | |



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## உனது கற்றலை மேம்படுத்துக

1. சுதந்திரம் பெற்ற துவக்கக் காலங்களில் சமூக பொருளாதார மாற்றத்திற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?(AS1)

2. ஒரு கட்சி ஆதிக்கம் பற்றி நீங்கள் என்ன அறிகிறீர்கள்? இதை நீங்கள் தேர்தலில் ஆதிக்கமாக கருதுகிறீர்களா அல்லது கொள்கையில் ஆதிக்கமாகக் கருதுகின்றீர்களா? காரணங்களைக் கலந்துரையாடுங்கள்.(AS1)

3. இந்திய அரசியலில், பல சூழ்நிலைகளில் மொழி மையப்புள்ளியாக திகழ்ந்து ஒற்றுமைப்படுத்தும் சக்தியாகவோ அல்லது பிரிவினை சக்தியாகவோ இருந்தது. இச்சூழ்நிலைகளை அடையளாம் கண்டு அவற்றை விவரிக்கவும்.(AS1)

4. 1967 ஆம் ஆண்டுத் தேர்தல்களுக்குப் பிறகு அரசியல் முறையில் ஏற்பட்ட பெரிய மாற்றங்கள் என்ன?(AS1)

5. மொழி அடிப்படை மாநில மறுசீரமைப்பு முறையை விட வேறு பிரச்சினைகளை முன் நிறுத்தி மாநிலங்கள் பிரிக்கப்பட்டிருந்தால், அது மிகச் சிறப்பானதாக அமைந்திருக்குமா?(AS1)

6. இந்திராகாந்தியின் எந்த நடவடிக்கைகள் "புதிய அணுகுமுறை" என்று அழைக்கப்படுகின்றன? இவை, ஏற்கனவே இருந்த கொள்கைகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன? உங்கள் பொருளாதாரப் பாடங்களை அடிப்படையாகக் கொண்டு அவை எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை விவரி. (AS1)

7. நெருக்கடி நிலைக் காலம் என்பது இந்திய மக்களாட்சியின் இருண்ட காலம் என ஏன் அழைக்கப்படுகின்றது?(AS1)

8. நெருக்கடி நிலை காலத்திற்குப் பிறகு ஏற்பட்ட அமைப்பு முறையிலான மாற்றங்கள் யாவை?(AS5)

9. கீழுள்ள இடங்களை இந்திய வரைபடத்தில் குறித்துக் காட்டுக.(AS5)

   (A) மகாராஷ்டிரா (B) குஜராத் (C) பீகார் (D) உத்திரப் பிரதேசம்

   (E) ஜம்மு காஷ்மீர் (F) நாகாலாந்து (G) பஞ்சாப் (H) மேகாலயா

10. இந்தியாவில் பல கட்சி ஆட்சிமுறையால் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சனைகள் மற்றும் நன்மைகள் யாவை?(AS4)

11. பக்கம் 241ல் உள்ள இரண்டாம் பத்தியை படித்து உன் கருத்தை எழுதுக.(AS2)



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்
# 18 1977-2000 ஆண்டுகளில் ஏற்பட்ட அரசியல் நிகழ்வுகள்

- சென்ற பாடத்தில், சுதந்திர இந்தியாவின் அரசியல் நிகழ்வுகளை பற்றி கலந்துரையாடியவற்றை தொகுத்து சிறு குறிப்பு வரைக.

இப்பாடத்தில் நாம் தற்போதைய இந்தியாவின் அரசியல் நிகழ்வுகளை மிகவும் ஆழ்ந்து நோக்குவோம். இந்நிகழ்வுகள் மற்றும் பிரச்சனைகளில் பல, நாட்டின் அரசியல் தோற்றத்தைப் பிரித்ததோடு மட்டுமின்றி, எதிரும் புதிருமாக்கின. போட்டியிலான பல கட்சி முறையின் தோற்றத்தால், கட்சி முறைகளில் ஏற்பட்ட மாற்றத்தை நாம் இப்போது காண்போம். கட்சி முறை மாற்றத்தின் விளைவாக, நாட்டில் எந்த ஒரு தனிக்கட்சியும் சொந்தமாக ஆட்சி அமைக்க முடியாததால், தொடர்ந்து கூட்டணி ஆட்சியைப் பெற்றிருக்கின்றோம். பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, இக்காலம் நாட்டின் முன்னேற்ற உத்தியில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்தது. இக்காலத்தில் பொருளாதாரச் சந்தைக்கும், மக்களாட்சியின் அரசியலுக்கும் இடையே முரண்பாடான சூழ்நிலை நிலவியது. அதே வேளையில், பழைய பிரச்சனைகளான சாதி, மதம் போன்றவை புதுப்பிக்கப்பட்டு அரசியல் ஆயத்தப்பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டன. இப்பாடம், தற்காலத்தின் இப்பிரச்சினைகளையும், அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை மாண்புகளான மக்களாட்சி, ஒருமைப்பாடு, சமூக பொருளாதார மாற்றம் போன்றவற்றின் மீது அவற்றின் தாக்கத்தையும் ஆராய்கிறது.

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகிய இரு தரப்பினரும் இக்கால நிகழ்வுகளைப் பற்றித்தங்கள் நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, வெவ்வேறு சொந்த கருத்துக்களைக் கொண்டிருந்தனர். ஆனால் இவர்கள் அனைவரும் திறந்த மனதுடன், மற்றவர்கள் மனம் புண்படாதவாறு, அவர்களின் மன நிலையை அறிந்து, தங்கள் கருத்துக்களை வெளியிடவேண்டியது அவசியமாகும்.

| | |
|---|---|
| 1977 | நெருக்கடி நிலை முடிவு பெறுதல்–மொரார்ஜி தேசாய் மற்றும் சரண்சிங் தலைமையில் ஜனதா கட்சி ஆட்சி அமைப்பு |
| 1980 | இந்திரா காந்தி தலைமையில் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைப்பு |
| 1982 | தெலுங்கு தேசக் கட்சி துவக்கம் |
| 1984 | ஆபரேஷன் புளூஸ்டார் என்ற ராணுவ தாக்குதல்– இந்திராகாந்தி படுகொலை |
| 1985 | பஞ்சாப் பிரச்சினையில் H.S லாங்வாலுடனும் மற்றும் அஸ்ஸாம் பிரச்சினையில் AASU வுடனும் ராஜீவ் காந்தி ஒப்பந்தம். |
| 1986 | மிஜோ தேசிய முன்னணியுடன் ஒப்பந்தம் |
| 1987 | இலங்கையுடன் ஒப்பந்தம் |
| 1989 | V. P சிங் மற்றும் சந்திரசேகருடன் ஜனதா தளத்தின் தேர்தல் வெற்றி மற்றும் ஆட்சி அமைப்பு |
| 1989 | மண்டல் கமிஷன் பரிந்துரையை அமுலாக்க முடிவு |
| 1990 | ராம ஜென்ம பூமி ரத யாத்திரை |
| 1991 | ராஜிவ் காந்தி படுகொலையும், நரசிம்மராவ் தலைமையில் காங்கிரஸ் ஆட்சியும் |
| 1990 | பொருளாதார – தாராள மயம் கொள்கை |
| 1992 | பாபர் மசூதி இடிப்பு |
| 1996 | தேவ கவுடா மற்றும் I.K. குஜ்ரால் பிரதமர்களாக கொண்ட தேசிய முன்னணி அரசாங்கம் |
| 1998 | வாஜ்பாய் தலைமையில் NDA அரசாகஙம் |

இப்பாடத்தில் நாம் விவாதிக்கும் மக்களாட்சி



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அமைப்புக்களின் வருங்காலம் மற்றும் இயல்புகள், அவற்றின் முன்னேற்றம் போன்றவை மிகவும் முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகின்றது. நம் மக்களாட்சியின் முன்னேற்றம் என்பது நாம் இவ்விவாதங்களை எவ்வாறு நடத்துகின்றோம் என்பதைப் பொறுத்தே அமைந்துள்ளது.

## நெருக்கடி நிலைக்குப்பின் மீண்டும் மக்களாட்சி

1975 லிருந்து 1985 ஆம் ஆண்டு வரையிலான காலம், மக்களாட்சிக்கான சோதனைக்காலமாகும். இக்காலம் மக்களாட்சி உரிமைகள் மறுக்கப்பட்ட நெருக்கடி நிலையுடன் துவங்கி, ராஜீவ் காந்தியின் தலைமையில் காங்கிரஸ் கட்சி பெற்ற மகத்தான வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியுடன் முடிகிறது. இக்காலத்தின் துவக்கமும், முடிவும் காங்கிரஸ் கட்சியின் ஆட்சிகளில் முடிந்தாலும், காங்கிரஸ் கட்சிக்கு மத்தியிலும், மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சிக்குத் தகுந்த மாற்று இருப்பதை இக்காலம் உணர்த்துகின்றது. பல நாடுகளில் இருந்த “ஒரு கட்சி மக்களாட்சி” முறை இந்தியாவில் தடுக்கப்பட்டது. இந்தியாவில் நிகழ்ந்த மாற்றுக் கட்சிகளின் தோற்றம், இந்திய வாக்காளர்கள், சிறந்தவர்களைத் தேர்ந்தெடுக்கும் பக்குவம் பெற்றவர்கள் என்பதை உணர்த்துகின்றது. இது வெவ்வேறு அரசியல் சிந்தனைகள் மற்றும் பலதர மக்களின் எண்ணங்கள் போன்றவை மத்திய, மாநில அளவில் விழித்தெழ வழிவகுத்தது. சோசியலிச வாதிகள், தேசிய எண்ணம் கொண்ட இந்துக்கள், கம்யூனிஸ்டுகள் போன்றோரின் அரசியல் சிந்தனைகளும், விவசாயிகள், தலித்துக்கள் பின்தங்கிய சாதியினர் மற்றும் வட்டாரத்தினர் போன்றோர் நாட்டு நடப்புகளில் முன்னிலைப் பெற்று தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தினர். அதே வேளையில், அரசியல் சிந்தனையற்ற சுற்றுப்புற பாதுகாப்பு இயக்கங்கள், பெண்களுக்கான சம உரிமை இயக்கங்கள் போன்றவை தோன்றின, சமூக மாற்றத்தில் பலம் மிக்க அமைப்புகளாக மாறின. நாம் இப்போது இவற்றை மிக விரிவாக ஆராய்வோம்.

- ஒரு கட்சி மக்களாட்சி என்பது பலகட்சி மக்களாட்சிக்கு மாற்றாக நீங்கள் நினைக்கின்றீர்களா?
- சமூக மாற்றம் அல்லது சமூக அவல எதிர்ப்பு இயக்கங்களுக்கு பலகட்சி மக்களாட்சி எவ்வாறு சாதகமான நிலைமைகளை ஏற்படுத்தியது என்பதை விவரி.

## 1977தேர்தல்கள் மற்றும் நெருக்கடி நிலையின் முடிவு

1977 ஆம் ஆண்டில் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டபோது? அது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. தேர்தல் நடத்தப்படும் என்பதை யாரும் எதிர்பார்க்கவில்லை. இந்திராகாந்தி அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தார். அது மட்டுமின்றி இயக்கங்கள், கூட்டங்கள், பிரச்சாரங்கள் போன்றவற்றின் மீதிருந்த தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளை நீக்கினார். காங்கிரஸ் கட்சியை எதிர்க்கும் நோக்கத்துடன் முக்கிய அரசியல் கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்தன. பல கட்சிகளாக இருந்த காங்கிரஸ் (O) சுதந்திர கட்சி, பாரதீய ஜன சங், பாரதீய லோக்தளம், சோசியலிசக்கட்சி போன்றவை ஒன்றிணைந்து “ஜனதா கட்சி”யை உருவாக்கின. ஜெகஜீவன் ராம் போன்ற முக்கியத்தலைவர்கள் கட்சியிலிருந்து விலகி, காங்கிரஸ் எதிர்ப்பு முன்னணியில் சேர்ந்தனர். பிற முக்கியக் கட்சிகளான DMK, SAD மற்றும் CPI (M) போன்றக்கட்சிகள் தனித் தன்மையுடன் செயல்பட விரும்பினாலும், காங்கிரஸ் கட்சியை எதிர்க்கும் பொருட்டு ஜனதாக் கட்சியை ஆதரித்தன. மூத்த தலைவர்களான ஜெயபிரகாஷ் நாரயணன், JB கிரிபாளானி போன்றோர், காங்கிரஸ் கட்சி மற்றும் நெருக்கடி நிலைக்கு எதிரான கட்சிகளை ஒன்று திரட்டி தேர்தலைச் சந்திக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இக்கட்சிகளில் பல சமூக, பொருளாதார பிரச்சனைகளில் முரண்பாடான கருத்துக்களைக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது..



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இது இந்திய மக்களாட்சிக்கான வரலாற்றுப்புகழ்மிக்க தேர்தலாகும். தேசிய அளவில் முதல் முறையாக காங்கிரஸ் கட்சி தோற்கடிக்கப்பட்டது. வெற்றி பெற்ற ஜனதா கட்சி. ஒன்பது மாநிலங்களிலிருந்த காங்கிரஸ் அமைச்சரவையை ரத்து செய்து தன்னை வளர்த்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டது. மாநிலங்களில் ஆட்சியில் உள்ள கட்சி, பாராளுமன்ற தேர்தலில் தோற்ற காரணத்திற்காக, அந்த மாநில அரசுகளை கலைக்கும் மத்திய அரசின் செயல்களை நியாயப்படுத்த முடியுமா? நாடாளுமன்ற தேர்தலில் தோற்ற காங்கிரஸ் கட்சி, ஆட்சி செய்வதற்கான மக்களின் ஆதரவை இழந்தது என்று ஜனதா கட்சி வாதிட்டது. உத்திர பிரதேசம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், பீகார் போன்ற மாநிலங்களில் ஜனதா கட்சி வெற்றி பெற்றதாலும், மேற்கு வங்காளத்தில் C.P.I(M) கட்சியும், தமிழ் நாட்டில் தி.மு.க.வும் பெற்ற வெற்றிகளாலும் தன் செயலை அது நியாயப்படுத்தியது..



*படம் 18.1 : இந்தியாவின் 6 வது ஜனாதிபதி நீலம் சஞ்சீவ ரெட்டி*

மக்களாட்சியை மீண்டும் கொண்டு வருதல், சர்வாதிகார ஆட்சியிலிருந்து விடுதலை, போன்ற உறுதிமொழிகளோடு ஆட்சிக்கு வந்த ஜனதாகட்சி, கூட்டணி தலைவர்களுக்கிடையே இருந்த இணக்கமற்ற சூழ்நிலையும், உட்கட்சி பூசல்களாலும் மிகவும் நலிவுற்றது. கோஷ்டி பூசல்களால் ஆட்சியை இழந்த இக்கட்சி, மூன்று வருடங்களுக்குள், 1980 ஆம் ஆண்டு மற்றொரு தேர்தலைச் சந்தித்தது. காங்கிரஸ் கட்சி, 1980 ஆம் ஆண்டில் மீண்டும் ஆட்சிக்கு வந்தது. ஜனதா கட்சியைப்போலவே, 9 மாநிலங்களில் ஆட்சிப்பொறுப்பில் இருந்த காங்கிரஸ் அல்லாத பிற கட்சியினரின் ஆட்சிகளைக் கவிழ்த்தது. அதற்கடுத்து நடைபெற்றத்தேர்தல்களில் தமிழ்நாடு, மேற்கு வங்காளம் தவிர மற்ற மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி, பெரும் வெற்றி பெற்றது.

### 1970 களில் சில அரசியல் கட்சிகள்

**BLD** – பாரதீய லோக்தளம் :

பொதுவுடமையின் மீது பற்று கொண்டவர்களால் துவக்கப்பட்டக் கட்சி. இக்கட்சி, இந்திய விவசாயிகள் குறிப்பாக உத்திரப்பிரதேச விவசாயிகளின் மீது சிறப்பு கவனம் செலுத்தி வந்தது.

காங்கிரஸ் **(O)** – இந்திராகாந்தியின் கொள்கைகளை எதிர்த்த, புதிய சிந்தனையுள்ள காங்கிரஸ் கட்சியின் ஒரு பிரிவினர்.

**CPI (M)** – இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) இது தேசிய அளவிலான கட்சியாகும். தீவிர நில சீர்திருத்தம், வர்த்தக சங்கங்கள், மற்றும் பொதுவுடமைக் கொள்கைகளில் ஈடுபாடு மிக்கவர்கள்.

தி.மு.க. – மாநில சுய அதிகாரம் மற்றும் அதிக அதிகாரங்களுக்காக பாடுபடும் இக்கட்சி தமிழ்நாட்டில் அடித்தளம் பெற்றது. இது இந்தி திணிப்பை எதிர்த்தது.

ஜனசங் – வட மாநிலங்களில் மட்டுமே செல்வாக்கு பெற்ற இந்து தேசியக் கட்சி.

**SAD** – சிரோமணி அகாலி தளம். பஞ்சாபில் சீக்கியர்களுக்காக உருவாக்கப்பட்ட கட்சி. இது குருத்வாராக்களைச் சுற்றி அமைக்கபட்டதாகும். இது ஒரு மதக்கட்சியாகும். இதுவும் மாநில சுயாட்சியை விரும்பும் கட்சியாகும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



படம் 18.2 : மொரார்ஜி தேசாய், காங்கிரஸ் கட்சி அல்லாத முதல் பிரதமர்

ஜனதா, காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளின் செயல்பாடுகளும் கூட்டாட்சித் தத்துவத்தை வலுவற்றதாக்குவதோடு மட்டுமின்றி, வலுவான மத்திய அரசாங்கத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. இதைப்போன்ற செயல்கள் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு பெரும் சவால்களாக விளங்குகின்றன. பல மாநிலங்களின் மக்கள் தங்களை அந்நியர்களாக உணர்ந்தனர். இவர்கள் மத்திய அரசாங்கத்திடமிருந்து மாநில சுயாட்சி கோரிக்கையை முன் வைத்தனர். இதற்கும் மேலாக தனி நாடு கோரிக்கையையும் முன் வைத்தனர். இதுமட்டுமின்றி தேசிய அளவிலான கொள்கை முடிவுகள், நிதி சுயாட்சி மாநிலப் பிரச்சினைகளில் மத்திய அரசின் மிகக்குறைந்த தலையீடு, கவர்னரின் அதிகாரங்கள் தவறாகப் பயன்படுத்துதல், சர்வாதிகார முறையில் குடியரசுத்தலைவர் ஆட்சி அமுலாக்கம் (SAD மற்றும் DMK போன்ற) முக்கியப்பிரச்சனைகளில் காங்கிரஸ் அல்லாத வட்டாரக்கட்சிகள் போன்ற ஒன்றிணைந்து பொது முன்னணியை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டன.

## வட்டார உணர்வுகளின் தோற்றம் :

இப்போது நாம், நாட்டின் வெவ்வேறு பகுதிகளான ஆந்திரப்பிரதேசம், அஸ்ஸாமி, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் அதிக அளவிளான மாநில சுயாட்சிக்காக நடத்தப்பட்ட மூன்று இயக்கங்களைப் பற்றித் தெரிந்துக்கொள்வோம். இந்த இயக்கங்களின் ஒற்றுமைகளையும், வேற்றுமைகளையும் நீவிர் அடையாளம் காண முடியுமா? அவை சுயாட்சிக்கான கோரிக்கைகளின் மூன்றில் ஒருமித்து உள்ளன.

### குடியரசுத்தலைவர் ஆட்சி

இந்திய அரசியல் அமைப்புச்சட்ட பிரிவு 356 அரசியல் அமைப்புச் சட்டப்படி ஆட்சி செய்யாத மாநில அரசைக்கலைக்கவோ அல்லது சட்டமன்றத்தை ரத்து செய்யவோ குடியரசுத் தலைவருக்கு சிபாரிசு செய்யும் அதிகாரம் கவர்னருக்கு உள்ளது. பிரதமரின் அறிவுரைப்படி, குடியரசுத்தலைவர் மாநில அரசைக்கலைப்பார். அதேபோல மாநில நிர்வாகத்தை கவர்னர் ஏற்றுக்கொள்ளவும் ஆணையிடுவார்.

இது குறித்த சரியான வழிமுறைகள் ஏதும் அரசியல் சட்டத்தில் தரப்படாத காரணத்தால், மத்திய அரசாங்கம், 356 வது பிரிவைப் பயன்படுத்தி, எதிர்க்கட்சிகள் ஆளுகின்ற மாநிலங்களை பலமுறை கலைத்தது.

1994 ஆம் ஆண்டில், உச்ச நீதிமன்றம், 356 பிரிவை மத்திய அரசாங்கம் பயன்படுத்துவதற்கான சில முக்கிய விதிகளை வரையறை செய்தது. அதிலிருந்து, இந்த அதிகாரம் தவறாகப் பயன்படுத்துவது மிகவும் அரிதாக உள்ளது.

## ஆந்திர பிரதேசம்

ஒருங்கிணைந்தஆந்திரப்பிரதேசத்தில், மத்திய காங்கிரஸ் தலைமையிடத்தால் அடிக்கடி நிகழ்த்தப்பட்ட முதல் அமைச்சர் மாற்றம் மற்றும் தலைவர்கள் திணிப்புப் போன்றவை ஒரு கசப்பான அனுபவத்தைத் தந்தன. இது மட்டுமின்றி, ஆந்திரப்பிரதேசத் தலைவர்களுக்குக் காங்கிரஸ் தலைமையிடம் தகுந்த மரியாதைத்தருவதில்லை என்ற எண்ணமும் பரவலாகக் காணப்பட்டது. இது ஆந்திர மக்களுக்கான அவமரியாதையாகக் கருதப்பட்டது. புகழ்ப்பெற்ற நடிகரான என்.டி.ராமாராவ் இப்பிரச்சினையைக் கையில் எடுத்தார். அவர், தன் 60வது பிறந்த நாளில் 1982 ஆம் ஆண்டு தெலுங்கு தேசம் கட்சியை (TDP) ஆரம்பித்தார். அவர் தன் கட்சி, தெலுங்கு பேசும் மக்களின் சுயமரியாதைக்காகப் பாடுபடும் என்றார்.

- மத்திய அரசாங்கம், பல சந்தர்ப்பங்களில் எதிர்கட்சிகள் ஆட்சி செய்கின்ற மாநில அரசாங்கங்களைக் கலைத்துள்ளது. இச்செயல் மக்களாட்சி விதிமுறைகளை எவ்வாறு மீறுகின்றது என்பதைக் கலந்துரையாடு.

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஒரு மாநிலம், காங்கிரஸ் கட்சியின் கீழ்நிலை அலுவலகமாகக் கருதப்படக் கூடாது என்றார். அவர் அளித்த முக்கிய வாக்குறுதிகளில், அரசுப்பள்ளிகளில் மதிய உணவுத்திட்டம், நியாயவிலைக்கடைகளில் ரூ 2 க்கு அரிசி விற்பனை, மது விலக்கு போன்றவைக் குறிப்பிடத்தக்கவை. இந்த வாக்குறுதிகள், 1983 ஆம் ஆண்டுத் தேர்தலில் தெலுங்கு தேசம் கட்சி மிகப்பெரிய வெற்றியை ஈட்ட உதவின. ஆனால்1984 ஆம் ஆண்டு, சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றிருந்தபோது, அவருடைய ஆட்சி தந்திரமாக கவிழ்க்கப்பட்டது. தெலுங்கு தேசக் கட்சியிலிருந்து காங்கிரஸ் கட்சிக்குத் தாவிய N.பாஸ்கர்ராவ் என்பவரை ஆளுநர் முதல் அமைச்சராக நியமித்தார். அமெரிக்காவிலிருந்து திரும்பிய NTR ஆளுநரின் செயல்பாட்டை எதிர்த்தார். தமக்கு பெரும்பான்மை MLA க்களின் ஆதரவு உள்ளதாகவும் அவர் அறிவித்தார். ஒரு மாதத்திற்கு பிறகு அப்போதைய கவர்னர் நீக்கப்பட்டு புதிய கவர்னர் நியமிக்கப்பட்டார். புதிய கவர்னர் மீண்டும் N.T.ராமாராவ் ஐ ஆந்திரப்பிரதேச முதல் அமைச்சராக நியமித்தார். இந்த சர்வாதிகார ஆட்சிக்கவிழ்ப்புக்கு எதிரானப் போராட்டத்தில் N.T. ராமாராவை பல மாநிலங்களில் ஆட்சியிலிருந்த கட்சிகளான, CPI (M), DMK, SAD மற்றும் தேசிய மாநாடு போன்றவை ஆதரித்தன.



படம் 18.3 : N.T. ராமாராவ்

## அஸ்ஸாம் போராட்டம்

மாநில சுயாட்சியை வலியுறுத்தி, ஆந்திரப்பிரதேசத்தைப்போல, ஆனால் மிகவும் வலுவான கோரிக்கை அஸ்ஸாமிலும் முன்வைக்கப்பட்டது. அஸ்ஸாமில், அஸ்ஸாமியைத் தவிர, வங்காள மொழியும் அதிக அளவில் பேசப்படுகின்ற மொழியாக இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலிருந்தே வங்காளிகள் மாநில நிர்வாகத்தின் ஆணிவேராக மைய நிலையிலும், கீழ்நிலையிலும் செல்வாக்குப் பெற்றவர்களாக இருந்தனர். வங்காள அதிகாரிகள் தங்களைச் சமமாக நடத்தாமல், இரண்டாம் தர குடிமக்களாக நடத்துகின்றார்கள் என்ற எண்ணம், அஸ்ஸாமியர்களுக்கு இருந்தது.

- NTR ன் அரசியலில் கீழ்கண்டவற்றின் முக்கியத்துவத்தை விவரி.
  - i. திரைப்பட கதாநாயகனாக பக்கபலம்.
  - ii. மாநில சுய மரியாதைக்கானப் போராட்டம்
  - iii. ஏழைகளுக்கான சிறந்த நலத்திட்டங்கள்
  - iv. மற்ற வட்டாரக்கட்சிகளுடன் உறவு

சுதந்திரத்திற்குப் பிறகு, வங்காள மொழியைப் பேசுகின்ற பலர் அஸ்ஸாமில் குடியேறினர். இதுமட்டுமின்றி, பங்களாதேஷ் எல்லையிலிருந்தும் பலர் அஸ்ஸாமில் குடியேறினர். இது நிலைமையை மேலும் சிக்கலாக்கியது. மேலும் அண்டை நாட்டில் அவ்வவ்போது ஏற்படும் இயற்கைப்பேரழிவு, அரசியல் நிலைமையாலும் ஏராளமான மக்கள் அஸ்ஸாமுக்கு புலம் பெயர்ந்து வந்த வண்ணம் இருந்தனர். இது உள்ளூர் மக்களுக்கு பெரும் அமைதியின்மையைத் தந்தது. வெளி மாநில, வெளி நாட்டு மக்களின் வரவால் தாங்கள் தங்கள் கலாச்சார அடித்தளத்தை இழந்து, காணாமல் போய்விடுவோம் என்று உள்ளூர் மக்கள் அச்சமுற்றனர்.

1970 களின் இறுதியில், மக்களின் இந்த மகிழ்ச்சியற்ற உணர்வு, சமூக இயக்கமாக மாறியது. அனைத்து அஸ்ஸாம் மாணவர் கூட்டமைப்பு (All Assam Students Union) இப்போராட்டத்தில் முன்னிலை வகித்தது. மாநிலம் முழுவதும் பரவிய இந்த அமைப்பு, குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் அதிக செல்வாக்குப் பெற்று இருந்தது. வேற்றுமக்களை அஸ்ஸாமிலிருந்து வெளியேற்ற வலியுறுத்தி இந்த அமைப்பு முழு அடைப்பு, கிளர்ச்சி, எழுச்சி நடைப்பயணம் போன்றவற்றை முன்னின்று நடத்தியது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கலாச்சார, மக்கள் தொகை பிரச்சினைகளையடுத்துப் பொருளாதாரப் பிரச்சினை மையப்படுத்தப்பட்டது. மாநிலத்தின் வர்த்தகம் மற்றும் பிற வணிக நிறுவனங்கள் அஸ்ஸாமியர் அல்லாத மக்களின் கைகளில் இருந்தன. மாநிலத்தின் முக்கிய வளங்களான தேயிலை மற்றும் எண்ணெய், உள்ளூர் மக்களுக்கு நன்மை பயக்குவதாக இல்லை. பெரும்பாலான தேயிலைத்தொழிற்சாலைகள் கொல்கத்தாவில் நிறுவப்பட்டிருந்தன. எண்ணெய் நிறுவனம் பொதுத்துறையைச் சேர்ந்ததாக இருந்தாலும், மிகக்குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளூர் மக்கள் பணியமர்த்தப்பட்டு இருந்தனர்.

மேலும் அஸ்ஸாமில் எடுக்கப்படட எண்ணெய், வேறு மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு சுத்திகரிக்கப்பட்டன. அஸ்ஸாம் இந்தியாவின் "உள் காலனி" மாநிலமாக நடத்தப்படுகின்றது என்றும், இது தடுக்கப்பட வேண்டும் என்பதே போராட்டத்தின் லட்சியமாக இருந்தது. வேலை வாய்ப்பில் உள்ளூர் மக்களுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்பதும், ஏற்கனவே பணியமர்த்தப்பட்ட வெளி மாநிலத்தவர்களை, வெளிநாட்டவர்களை பணிகளிலிருந்து நீக்கவேண்டும் என்பதும், அஸ்ஸாமின் இயற்கை வளங்கள் உள்ளூர் மக்களின் நலன்களுக்காகவேப் பயன்படுத்தப்படவேண்டும் என்பதும் முக்கிய கோரிக்கைகளான இருந்தன.

இக்கோரிக்கைகள் மக்களிடையே மதவேறுபாடுகளை வளர்த்தன. ஏனெனில் அண்டை நாட்டிலிருந்து புலம் பெயர்ந்து வந்தவர்கள் அனைவரும் முஸ்லீம்களே மேலும் இப்போராட்டம் வங்காளத்தினருக்கு மற்றும் இடதுசாரிகளுக்கு எதிரான போராட்டமாக உருவெடுத்ததால் நிலைமை மேலும் சிக்கலானது (அப்போது மேற்கு வங்காளம் இடதுசாரிகளால் ஆளப்பட்டுவந்தது) நாளடைவில் இப்போராட்டம் அஸ்ஸாமியர்கள் அல்லாதவர்களுக்கும், இந்தியர்களுக்கு எதிரானதாகவும் மாறியது. இவ்வியக்கம், வன்முறையையும், அமைதியின்மையையும் மையப்படுத்தி நகர்ந்ததால், மத்திய அரசு இந்த இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தது. மூன்று வருடங்கள் நடந்த தொடர் பேச்சுவார்த்தையின் காரணமாகவும், அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தியின் முயற்சிக்குப் பலனாகவும், 1984 ஆம் ஆண்டில் மத்திய அரசாங்கத்துக்கும், AASU க்கும் இடையே ஒரு ஒப்பந்தம் எட்டப்பட்டது. மாநிலத்தை இயல்பு நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்துடன், அம்மாநிலத்திலிருந்த காங்கிரஸ் அரசாங்கம், தன் ஆட்சிக்காலம் முடிவடையாவிட்டாலும், ஆட்சியைத் துறந்துத் தேர்தலைச் சந்தித்தது. தேர்தலில் அஸ்ஸாம் கன பரிசத் கட்சி வெற்றிப்பெற்று ஆட்சியைப் பிடித்தது. (AASUன் அரசியல் பிரிவு)

ஆனாலும், இந்த நீண்டகால பிரச்சினைகளுக்கு அரசியல் மாற்றம் தீர்வாக அமையவில்லை. வங்கள தேசத்துடனான எல்லைகள், ராஜதந்திர காரணங்களுக்காகவும், புவியியல் காரணங்களுக்காகவும் மூடப்படாமல் இருந்தது. (நீர் நிலைகள் மற்றும் மலைகள் இருந்ததால் வேலியிட முடியவில்லை). மேலும் நீண்ட காலத்திற்கு முன் வங்காள தேசத்திலிருந்து குடியேறியவர்களையும், தற்போது வங்க தேசத்திலிருந்து வந்து குடியேறியவர்களையும் வேறுபடுத்தி திருப்பி அனுப்புவது மிகக்கடினமான வேலையாக இருந்தது. அதே வேளையில், இனங்களை வேறுபடுத்தி அடையாளம் காணும் முயற்சி, போடோ, காசி, மிஜோ மற்றும் கர்பீஸ் இனத்தவர் மீது எதிர் மறையான விளைவுகளைத் தந்தது. இவர்களில் பலரும் "சுய அதிகாரத்திற்கான" கோரிக்கையை முன்வைத்தனர். தங்களுக்கு அதிக உரிமைகள், வாய்ப்புகள் வேண்டும் என்று வலியுறுத்திய அவர்கள், தங்கள் பகுதியிலிருந்து பிற சமுதாயத்தினரை வெளியேற்ற விரும்பினர். இதன் பலனாக, அஸ்ஸாமின் பல பகுதிகளில் சிறுபான்மை மலைவாழ் மக்களுக்கு எதிராக வன்முறைத்தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ஏராளமான சிறுபான்மை மலைவாழ் மக்கள் கொல்லப்பட்டனர். மேலும் அவர்கள் தங்கள் வாழ்விடங்களிலிருந்து "கட்டாய வெளியேற்றம்" செய்யப்பட்டனர். ஒரு பிரிவினர் மீது இன்னொரு பிரிவினர் நடத்தும் இந்தத் தாக்குதல் அடிக்கடி தொடர்ந்ததால், ஒரு பிரிவினரின் தாக்குதலைச் சமாளிக்க இன்னொரு பிரிவினரை அரசாங்கம் தூண்டிவிட்டது அல்லது ஆயுதம் கொடுத்தது. இதன் மூலம் அரசாங்கம் பிரச்சினைகளை வளர்த்ததே தவிர, தீர்க்கவில்லை.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைதியைக் கொண்டு வரும் நோக்கத்துடன், ஆயுதப்படைகளையும் அப்பகுதிகளில் நிறுத்தியது. நாட்டின் வடக்கிழக்குப் பகுதியில் ஆயுதப்படைகளை நிலைநிறுத்தியதற்கான காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன. முதலாவதாக, இப்பகுதி சீனா, பர்மா (இப்போது மியான்மர்) மற்றும் பங்களாதேஷ் நாடுகளுக்குப் பக்கத்தில் உள்ள பதற்றமான பகுதியாகும். இரண்டாவதாக, இப்பகுதியில் செயல்பட்டு வந்த வன்முறைக் குழுக்கள் தங்கள் பகுதிகளை இந்தியாவிலிருந்து பிரிக்கவேண்டும் என்ற பிரிவினை சக்திகளாக இருந்தனர். இதைத்தவிர இவர்கள், அந்நிய சக்திகளின் உதவியோடு ஆயுதங்களைப் பெற்று வந்தனர். மூன்றாவதாக, இந்த வன்முறை குழுக்கள் சிறுபான்மையினருக்கு எதிராக “இன வன்முறையில்” ஈடுபட்டன. இந்தியப் படைகள் இப்பகுதிக்குள் நுழைந்ததன் காரணமாக, மக்களின் சுதந்திரங்கள் பறிக்கப்பட்டன. இராணுவத்துக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட்டன. இப்பகுதியில் அமைதியைக் கொண்டுவர, இது தான் சிறந்த வழி என்று அரசாங்கம் நினைத்தது.

இவ்வாறாக, வங்காளிகளுக்கும், அஸ்ஸாமியர்களுக்கும் இடையே தோன்றிய இப்பிரச்சினை, இரு பிரிவினரிடையே ஏற்பட்ட பதற்றமான பிரச்சனையாக உருவெடுத்தது. ஆகவே, குறிப்பிட்ட இனத்தவரை அடையாளம் காணும் இச்செயல் பரந்த மனதுடன் செயல்படவேண்டுமே தவிர, குறுகிய மனதுடன் செயல்படுவதோ அல்லது உடனடித்தீர்வை எட்டுவதோ பிரச்சினைக்கு ஏறபுடையது அல்ல.

- அஸ்ஸாம் போராட்டம், ஆந்திராவில் NTR நடத்திய போராட்டத்தோடு எவ்வாறு வேறுபடுகிறது அல்லது ஒத்துள்ளது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?
- கீழ்காணும் அம்சங்களின் மீது உங்கள் வகுப்பறையில் விவாதங்களை நடத்துக. ஒரு பகுதியில், ஒரு குறிப்பிட்ட இனத்தவர் மட்டுமே வசிக்கின்றனர். வர்த்தகம், வியாபரம்முழுவதும் அந்த குறிப்பிட்ட இனத்தவரிடம் மட்டுமே உள்ளது. அல்லது இந்தியாவின் அனைத்து மக்களும் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து, இன்னொரு பகுதியில் எங்கும் செல்லும் அல்லது வசிக்கும் சுதந்திரம் உள்ளது. அதே போலத் தாங்கள் விரும்பும் இடங்களில் பணியாற்றலாம்.
- ஒரு குறிப்பிட்ட பகுதியில் வசிக்கும் மக்கள், வேறு இடங்களுக்குச்சென்று குடியேறுவதன் மூலம் பணக்காரர்களாகவும் மற்றும் அங்குள்ள நிலங்களையும், இயற்கை வளங்களையும் வாங்குவதன் மூலம் வலுமிக்க வெளிப்பகுதி மக்களாகவும், ஏற்கனவே அங்கு நிரந்தரமாக குடியிருக்கும் மக்களை ஏழைகளாக்குகின்றனர் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?

## பஞ்சாப் கிளர்ச்சி:

இந்தியாவின் மறு முனையிலுள்ள பஞ்சாபில் மாநில சுயாட்சிக்கான போராட்டம் நடந்தது. இங்கும், மொழி வேறுபாடும், பெரும்பான்மை மக்களின் மதமும் பேராட்டத்தின் மையமாகத் திகழ்ந்தது. இம்மாநிலத்தின் பங்களிப்புப் புறக்கணிக்கப்பட்டதே கிளர்ச்சியின் காரணமாகத் திகழ்ந்தது. மாநிலம் உருவாக்கப்பட்ட போது, மாநிலப்பிரிவினை சரியாக செய்யப்படவில்லை என்றும் பஞ்சாப் மக்கள் நம்பினர். அதுவரை யூனியன் பிரதேசமாக, மத்திய அரசின் நேரடி நிர்வாகத்திற்கு உட்பட்டதாக இருந்த “சண்டிகர்” பகுதியை, புதிய தலைநகராக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டது. இதைத்தவிர ‘நங்கள்’ அணைக்கட்டில் உள்ள நீரில், அதிக உரிமை கோரியும் ராணுவ ஆள்சேர்ப்பில் சீக்கியர்கள் அதிக எண்ணிக்கையில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மத்தியில் ஜனதா கட்சி ஆட்சியில் இருந்தபோது, 1978 ஆம் ஆண்டு, மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளை அமுலாக்க, அகாலி தளம் தீர்மானங்களை இயற்றியது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுக்க, அரசியல் சட்டத்தைத் திருத்த



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

வேண்டும் என்பதும், அதிக அளவிலான அதிகாரப் பகிர்வை செயல்படுத்த வேண்டும் என்பதும் அகாலி தளத்தின் கோரிக்கைகளாக இருந்தன. இதன் தீர்மானம் பின்வருமாறு. "நாட்டின் வெவ்வேறு மொழி, கலாச்சார பிரிவினர்களையும், மத சிறுபான்மையினரையும், பல மில்லியன் மக்களின் குரலாக ஏற்றுக்கொண்டு, நாட்டின் ஒற்றுமை, மற்றும் ஒருமைப்பாட்டுக்கு எந்த ஆபத்தும் நேராமல் இருக்க, நாட்டு அரசியல் அமைப்புச் சட்டத்தை கூட்டாட்சித் தத்துவங்களுக்கு இணங்க மாற்றம் செய்ய வேண்டும் என்றும், மாநிலங்கள் தங்கள் எல்லைக்குள் உண்மையான அதிகாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம், மக்களின் முன்னேற்றத்திற்காகவும், வளப்படுத்துவதற்காகவும் மாநிலங்கள் பயனுள்ள பங்காற்றவும், சீரோமணி அகாலி தளம், ஜனதா அரசாங்கத்தை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துகிறது.

சிரோமணி அகாலி தளம் மற்றும் காங்கிரஸ் கட்சிகளுக்கிடையே அதிகரித்த தேர்தல் போட்டி காரணமாக நிலைமை மேலும் சிக்கலானது. அகாலி ஆட்சி நீக்கப்பட்டதாலும், 1980 ஆம் ஆண்டில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததாலும், சீக்கியர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற எண்ணம் மேலோங்கியது.

இதையடுத்து நடந்த தொடர் வன்முறைச்சம்பவங்கள் சீக்கியர்களுக்கும், மத்திய அரசுக்குமான இடைவெளியை மேலும் பெரிதாக்கின. சீக்கியப் போராளிக் குழுவின் தலைவரான 'பிந்த்ரன் வாலே' பிரிவினையைத்தூண்டி, சீக்கியர்களுக்கு "காலிஸ்தான்" என்ற தனி நாடு கோரிக்கையை வலியுறுத்தினார். இக்காலம், மாநிலத்தில் வன்முறையும், பதற்றமும் நிகழ்ந்த காலமாகும். போராளிகள் சீக்கியர்கள் மீதும், பஞ்சாபில் வசிக்கும் சீக்கியர் அல்லாத பிறர் மீதும் தங்கள் கோட்பாடுகளைத் திணித்தனர். இப்பிரச்சினை மத மோதலாகவும் வெடிக்கத் தொடங்கியது. சீக்கியர் அல்லாத பிற மதத்தினர் மதத்தாக்குதலுக்கு ஆளானார்கள். இறுதியாக, இப்போராளி குழுக்கள் சீக்கிய பொற்கோவிலை ஆக்கிரமித்தன. அவர்களை அங்கிருந்து வெளியேற்ற பொற்கோவிலுக்குள் ராணுவம் நுழைந்துத் தாக்குதல் நடத்தியது. ராணுவ நடவடிக்கை




படம் *18.4 : 1970* மற்றும் *1980* ஆம் ஆண்டுகளுக்கிடையில் தொழில் நுட்பம் மற்றும் கூட்டுறவு முதலியவற்றில் பல சாதனைகளைச் செய்தது. ஸ்ரீஹரிகோட்டாவில் *PSLV,* ஏவப்படுவதும், அமுல் எனும் கூட்டுறவு அங்காடியும் சில எடுத்துக்காட்டுகளாகும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பொற்கோவிலை அவமதிக்கும் செயல் என்று சீக்கியர்கள் நினைத்ததால், மத்திய அரசாங்கத்துடனான சீக்கியர்கள் இடைவெளி இன்னும் அதிகமானது.

இதன் விளைவே, 1984 ஆம் ஆண்டில் பிரமர் இந்திராகாந்தி படுகொலைக்குக் காரணமாக விளங்கியது. இதையடுத்து, டெல்லியில் ஏற்பட்ட கலவரத்தில் சீக்கியர்கள் பலர் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. இந்த வன்முறையை டெல்லி நிர்வாகம் வேடிக்கைப் பார்த்தது. கலவரம் நிகழ்ந்து பல ஆண்டுகள் ஆனாலும, வன்முறையாளர்கள் சட்டததின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவில்லை.

ராஜீவ் காந்தி பிரதமர் பொறுப்பை ஏற்றதும், சிரோமணி அகாலி தளத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, அப்போதைய தலைவரான 'லாங்கோவால்' உடன் ஒப்பந்தம் செய்துக்கொண்டார். அதையடுத்து நடத்தப்பட்ட தேர்தல்களில் S.A.D வெற்றிப்பெற்றாலும், லாங்கோவால் போராளிகளால் படுகொலைச் செய்யப்பட்டார். பஞ்சாபில் மீண்டும் வன்முறை வெடித்தது.

1986 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதத்தில் 'அகால் தக்த்', என்ற இடத்தில் நடைபெற்றக் கூட்டத்தில், "காலிஸ்தான்" என்ற தனி நாடு அறிவிப்பு வெளியிடப்பட்டது. போராட்டக்காரர்களாக அறிவித்துக்கொண்ட பல குழுக்கள் ஆயுதம் ஏந்தி பயங்கரவாதச் செயல்களில் ஈடுப்பட்டன. இக்குழுக்கள் அனைத்தும் பாகிஸ்தானால் ஆதரிக்கபடுபவை என்று இந்திய அரசாங்கம் அறிவித்தது. இக்காலம் பஞ்சாபின் வன்முறைக்காலமாக விளங்கியது. அமைதியின்மைக்காலமாக விளங்கிய இக்காலத்தில் சீக்கியப் போராளிகள், போலீசாருடனும், பிற மதக்குழுக்களுடனும் சண்டையிட்டனர். போராளி குழுக்களின் நடவடிக்கையை ஆதரிக்காத பத்திரிக்கையாளர்கள், அரசியல்வாதிகள், கலைஞர்கள், தொண்டர்கள் போன்றோர் கொலை செய்யப்பட்டனர். பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தண்டவாளங்கள் தகர்க்கப்பட்டன, சந்தைகள், விடுதிகள் மற்றும் பஞ்சாப், டில்லிக்கு இடைப்பட்ட பகுதிகளில் வெடிகுண்டுகள் வெடித்தன. 1991 ஆம் ஆண்டில் மட்டும் ஏறக்குறைய ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். போராளிகள் தங்கள் குழுக்களின் நிதிவளத்தைப்பெருக்க ஆள்கடத்தல் மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டனர். இச்செயல்கள் அனைத்தும், போராளிகளை மக்களிடமிருந்து தள்ளி வைத்தன. இக்காலத்தில், திறமையான போலீஸ் நடவடிக்கை மூலம் போராளிகள் ஒழிக்கப்பட்டனர். அது மட்டுமின்றி, போராளிகள் மீது மக்களுக்கு இருந்த ஆதரவும், இரக்கமும் குறையத் தொடங்கியதால், 1990 களின் இறுதியில் பஞ்சாபில் அமைதி திரும்பியது.

பஞ்சாபில் தீவிரவாதத்தை அடக்க அரசாங்கம் எடுத்த கடும் நடவடிக்கைகளில் பல, இந்தியக் குடிமக்களின் அரசியல் அமைப்புச்சட்ட உரிமைகளை மீறுவதாக இருந்தது. இதுபோன்ற அரசின் நடவடிக்கைகள், அரசியல் அமைப்புச்சட்ட உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் மீறல்களுக்கு வித்திட்டாலும், தீவிரவாத செயல்களால் சீரழிந்த இந்திய அரசியல் அமைப்பைச் சரியாக்க, இந்நடவடிக்கைகள் அவசியமானது என்று அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்தனர். தீவிரவாதிகளால் பழிவாங்கப்படுவோம் என்ற அச்சத்தில், தீவிரவாதிகளுக்கு எதிரானத் தீர்ப்புகளைக் கூற நீதிபதிகள் அச்சமுற்றனர். ஆனால் சில அரசியல் நோக்கர்கள் மனித உரிமை மீறல்களை ஆதரிக்கவில்லை. ஏனெனில் இதுபோன்ற நடவடிக்கைகள் மக்களாட்சிக்கு எதிரான அணுகுமுறையை நாளடைவில் வலுவாக்கும் என்றனர்.

- சீக்கியர்களின் பிரிவினைவாதம் மற்றும் தீவிரவாதத்தில், 1984 ஆம் ஆண்டில் டெல்லியில் நடைபெற்ற சீக்கியர்களுக்கு எதிரான கலவரத்தின் பங்கு என்ன?
- அஸ்ஸாம் மற்றும் பஞ்சாப் போராட்டங்களுக்கு இடையேயான ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகள் யாவை? இவை நம் அரசியல் அமைப்புக்கு எவ்வகையில் சவாலாக அமைந்துள்ளது?
- இரு பிரச்சினைகளையும் அரசாங்கம் கையாண்ட முறை, நம் மக்களாட்சி முறையை வலுப்படுத்துகின்றதா அல்லது வலுவிழக்கச் செய்கின்றதா?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## ராஜீவ் காந்தி காலத்தில் புதிய துவக்கங்கள்


படம் 18.5 : ராஜீவ் காந்தி

ராஜீவ் காந்தியால் வழி நடத்தப்பட்ட காங்கிரஸ் கட்சி தேர்தல்களில் மிகப்பெரிய வெற்றியை ஈட்டியது. பஞ்சாப், அஸ்ஸாம், மிஜோராம் போன்ற மாநிலங்களிலும், அண்டை நாடான இலங்கையிலும் அமைதி பேச்சுவார்த்தைக்கான முயற்சியைத் ராஜீவ் காந்தி துவக்கினார். இலங்கையில் தமிழ் பிரிவினைவாதிகளுக்கும், சிங்கள அரசாங்கத்துக்குமிடையே அமைதியை ஏற்படுத்து நோக்கத்துடன் "அமைதி காக்கும் படையை', அனுப்பினார்.

ஆனால் இந்த அமைதி முயற்சியையும், அமைதி காப்புப் படையையும் தமிழர்களோ அல்லது இலங்கை அரசாங்கமோ ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியாக, 1989 ஆம் ஆண்டு இப்படைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.

வளர்ச்சித் திட்டங்களின் எல்லாப் பயன்களும் உண்மைப் பயனாளிகளைச் சென்றடையவில்லை என்பதை ராஜீவ் காந்தி உணர்ந்திருந்தார். தன் புகழ்ப்பெற்ற உரையில், "ஏழைகளுக்காக செலவிடப்படும் ஒவ்வொரு ரூபாயிலும், 15 பைசா மட்டுமே அவர்களைச் சென்றடைகிறது" என்று அவர் கூறினார். வளர்ச்சித் திட்டங்களுக்காக அதிக நிதிகள் ஒதுக்கப்பட்டாலும், ஏழைகள் அதே நிலையில் உள்ளனர் என்பதை இப்பேச்சு வெட்ட வெளிச்சமாக்குகின்றது. ஏழைகள் மற்றும் சமுதாயத்தில் பின் தங்கியுள்ள பெண்கள், தலித்துகள் மலைவாழ்மக்கள் போன்றோர்களுக்கு வளர்ச்சித் திட்டங்களின் பயன்கள் எட்டாக்கனிகளாக உள்ளன. இத்திட்டங்களின் செயல் ஆக்கத்தில் மிகப்பெரிய மாற்றம் செய்யப்படுவது அவசியம் என்பதை அவர் உணர்ந்தார். அவர் மேலும், பஞ்சாயத்துராஜ் அமைப்புகளில் மக்களைப் பங்குபெறச் செய்வதன் மூலம் இத்திட்டங்களின் செயலாக்கத்தை எளிதாக்கலாம் என்று உணர்ந்தார். ஆனால், எதிர்கட்சிகளால் ஆட்சி செய்யப்பட்ட பல மாநிலங்கள், தங்கள் அதிகாரங்களைக் குறைக்கும் முயற்சியாக இதை நினைத்தனர்.


படம் 18.6 : 1950 களில் புதுடெல்லியிலுள்ள தொலைபேசி அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள்.

- தற்போதைய ஆட்சியோடு ஒப்பிடும்போது, நாட்டுக்கு, ராஜிவ் காந்தி ஆட்சியின் பங்களிப்பு என்ன?
- ஏழை மக்களுக்காக தீட்டப்படும் திட்டங்கள் மூலம் ஏழைகள் பயனடைவதில்லை. இதற்கான காரணத்தை வகுப்பறையில் விவாதி. இதுபோன்ற வளர்ச்சித் திட்டங்கள், ஏழை மக்களைச் சென்றடைய எடுக்கப்பட வேண்டிய நீண்டகால நடவடிக்கைகள் என்ன?
- அரசின் திட்டங்களால், மாணவர்கள் அடையும் பயன்களைக் கண்டுபிடித்து பட்டியலிடு. அப்பயன்களை அவர்கள் முறையாகப் பெறுகின்றார்களா? இதைப்பற்றி வகுப்பறையிலும், உங்கள் வீடுகளிலும், விளையாட்டு மைதானங்களிலும் விவாதி.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பொருளாதாரத் துறையிலும், ராஜீவ் காந்தி பெரும் மாற்றத்தைக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டார். அவருடைய ஆட்சியில், 1985 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட முதல் வரவு திட்டம் தாராளமயத்தை மையப்படுத்தியது. இதற்கான தடைகளையும், கட்டுப்பாடுகளையும் அகற்றியது.

புதிய தொழில்நுட்பக் கண்டு பிடிப்புகளான கணினி மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தின் அவசியததை ராஜீவ் காந்தி அறிந்தவராக இருந்தார். அவர் இந்தியாவில் "தொலைத் தொடர்புப் புரட்சியை" ஏற்படுத்தினார். இதன் மூலம் செயற்கைக்கோள் உதவியுடன் தகவல் பரிமாற்றம் நாட்டில் மிக விரைவாகச் செயல்படுத்தப்பட்டது.

## மதவாதம் மற்றும் ஊழ×ன் வளர்ச்சி

நாட்டுப் பிரிவினைக்குப் பிறகு, மதத்தை அரசியலில் இருநது பிரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டன. இக்காலம் மதம் சார்ந்த புதிய அரசியல் அணுகுமுறையைச் சந்தித்தது.

### பிரதமரின் மன்னிப்பு

ராஜ்ய சபையில் Dr. மன்மோகன்சிங் அவர்களின் அறிக்கை. 1984 ஆம் ஆண்டில் நடைபெற்ற மிகப்பெரிய தேசிய துக்கத்தில் (national tragedy) நான்காயிரம் மக்கள் கொல்லப்பட்டனர். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து, ஒருங்கிணைந்த நாட்டை உருவாக்கவும், மீண்டும் அதைப்போன்ற பயங்கர தேசிய துக்கம் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யவும், நம்மை நாமே சுயசோதனை செய்துக்கொள்ளவும் இது சரியானத் தருணம் ஆகும். சீக்கிய மக்களிடம் மட்டுமல்ல, ஒட்டு மொத்த இந்திய மக்களிடம் மன்னிப்புக்கேட்க எனக்கு எந்த விதத் தயக்கமும் இல்லை. ஏனெனில், 1984 ல் நடைபெற்ற கலவரம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்துக்கும், இந்திய தேசியத்துக்கும் எதிரானதாகும். ஆகவே, நான் எந்தத் தவறான கௌரவத்தையும் கடைபிடிக்க விரும்பவில்லை. எங்கள் அரசாங்கத்தின் சார்பாகவும், ஒட்டு மொத்த நாட்டு மக்கள் சார்பாகவும், அதுபோன்ற சம்பவம் நடந்ததற்கு வெட்கித் தலை குனிகின்றேன். ஆனால், நாட்டின் நடவடிக்கைகளில் ஏற்ற இறக்கங்கள் உள்ளன. பழைய சம்பவம் பற்றி நாம் பேசுகின்றோம். பழைய சம்பவத்தை மறுபடியும் நாம் மாற்றி எழுத முடியாது. நமக்கான நல்ல வருங்காலத்தை ஏற்படுத்திக்கொள்ளும் ஆற்றலும், திறனும் நம்மிடம் உள்ளது". (pmindia.nic.in/RS%20speech.pdf) 11 ஆகஸ்டு 2005.

- இந்த அறிக்கையின் மிக முக்கிய செய்தி என்ன?
- இப்பேச்சு எந்த உணர்வை வெளிப்படுத்துகின்றது?
- பிரதமர் பேசிய இப்பேச்சு ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது?

அரசியல் நோக்கங்களுக்காக மதங்களை இதுபோன்று பயன்படுத்துவதும், அரசின் ஆதரவும் கடும் விளைவுகளுக்கு வழி வகுத்தது. இவை தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை கேள்விக்குறியாக்கியது.

1985 ஆம் ஆண்டு, கணவனால் விவாகரத்து செய்யப்பட்ட 'ஷபானா', என்ற பெண் தாக்கல் செய்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய உச்சநீதிமன்றம், விவாக ரத்து செய்த அப்பெண்ணின் முன்னாள் கணவன், அப்பெண்ணுக்கு ஜீவனாம்சம் தரவேண்டும் என்று ஆணை பிறப்பித்தது. முற்போக்கு எண்ணம் கொண்ட முஸ்லீம்கள் இத்தீர்ப்பை



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஆதரித்தாலும், மற்ற முஸ்லீம்கள் இத்தீர்ப்பு இஸ்லாமிய சட்டத்துக்கு எதிரானது என்று கூறி எதிர்த்தனர். இத்தீர்ப்பு செயலாக்கம் பெற்றால், மத விவகாரங்களில் அரசின் அதிக தலையீடாக விளங்கும் என்று கருதினர். தங்கள் கணவர்களால் ஒரு தலைப்பட்சமாக விவாக ரத்து செய்யப்படும் முஸ்லீம் பெண்களுக்கு எதிரான அநீதியைத் தடுக்க இத்தீர்ப்பு உதவும் என பெண்கள் இயக்கத்தினரும், சீர்திருத்த எண்ணம் கொண்ட முஸ்லீம் மக்களும் வாதிட்டனர். முஸ்லீம் பழமைவாதிகளின் வற்புறுத்தலின் காரணமாக 1986 ஆம் ஆண்டில், இந்திய அரசாங்கம் புதிய சட்டம் ஒன்றை இயற்றியது. இதன்படி, மனைவிகளைக் கைவிட்ட கணவர்களுக்குப் பதிலாக முஸ்லீம் மத அமைப்புக்கள் 3 மாத காலத்திற்கு, விவாக ரத்துச் செய்யப்பட்டப் பெண்களுக்கு ஜீவனாம்சத்தை அளிக்கும் இச்செயல் மத பழமைவாதிகளின் வற்புறுத்தலுக்கு, விட்டுக்கொடுக்கும் போக்கை கடைப்பிடித்த அரசின் அணுகுமுறையையும், பெண்கள் நலனில் அரசின் அக்கறையற்றத்தன்மையும் விளக்குவதாக உள்ளது.

அதே காலத்தில், இந்துக்களில் சில பிரிவினர் அயோத்தியில் பாபர் மசூதி இருக்கும் இடத்தில் ராமருக்கு கோயில் கட்டும் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். அது ராமரின் பிறப்பிடம் என்றும் ஏற்கனவே இருந்த ராமர் கோயில் இடிக்கப்பட்டது என்றும் வாதிட்டனர். பாபர் மசூதியின் பொறுப்பாளர்கள் இக்கூற்றை மறுத்தனர். அது முஸ்லீம்களின் வழிபாட்டுத்தலம் என்று அவர்கள் அழுத்தம் திருத்தமாகக் கூறினர். சில காலம் இப்பிரச்சினைத் தொடர்ந்தது. இப்பிரச்சினையில் தலையிட்ட நீதிமன்றம், தனது உத்தரவில் வருடத்தில் ஒரு நாளைத்தவிர அனைத்து நாட்களிலும் வழிபாட்டுத்தலம் இறுதித்தீர்ப்பு வரும் வரை மூடப்பட்டிருக்க வேண்டும் என்று கூறியது. மசூதி எல்லாநாட்களிலும் திறந்து வைக்கப்படவேண்டும் என்றும், இந்துக்களை நாள்தோறும் வழிபட வைக்கப்படவேண்டும் என்றும் 1986 ல் நீதிமன்றம் உத்தரவிட்டது. மத்திய அரசாங்கம் இந்த முடிவை ஆதரித்ததால் தான் இவ்வாறு நடந்தது என்று நம்பப்பட்டது. கோயில் நாள்தோறும் திறக்கப்பட்டதால், மசூதியை கோயிலாக்க வேண்டும் என்று விரும்பியவர்கள் பெருமளவு மக்களை ஒன்று திரட்ட ஏதுவாய் இருந்தது.

பல அரசியல் நோக்கர்களின் கருத்துப்படி, நம் நாட்டில் துவக்கப்பட்ட அரசியல் கட்சிகள், மக்களின் ஆதரவை இழந்து வந்தன. எண்ணிலடங்கா பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்டு அரசியல் சார்பற்ற தலைமையின் கீழ் பல மக்கள் இயக்கங்கள் தோன்றின. விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிகள், தங்கள் விவசாயப் பொருள்களுக்கு சந்தையில் நல்ல விலை வேண்டும் என்றும், விவசாய உள்ளீடுப் பொருட்களான டீசல், உரங்கள், மின்சாரம் போன்றவற்றிற்கு மானிய விலை கேட்டும் போராடி வந்தனர். உத்திரப்பிரதேசம் மற்றும் ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த விவசாயிகள், மகேந்திர சிங் திகாயித் தலைமையிலும், மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த விவசாயிகள், சரத் ஜோஷி தலைமையிலும் போராட்டம் நடத்தி வந்தனர். பல மாநிலங்களில் வளர்ச்சித் திட்டங்களான அணைக்கட்டுகள், அரசாங்கங்கள் போன்றவை அமைக்கப்பட்டதால் இடம் பெயர்ந்துச் செல்ல நேரிட்ட ஆதிவாசிகளும், விவசாயிகளும் போரட்டங்களை நடத்தினர். அரசியல் நோக்கர்கள் பலரின் கருத்துப்படி, இப்போராட்டங்களால் மக்கள் ஆதரவை இழந்த அரசியல் கட்சிகள், இந்து மற்றும் முஸ்லீம் மத உணர்வுகளைத் தூண்டி தேர்தலில் மீண்டும் மக்களின் ஆதரவைப் பெற முயன்றன. ஆனால், இச்செயல், இந்திய அரசியல் முறையின் மதசார்பின்மையை வலுவற்றதாக்கி, இதற்கடுத்து பத்து ஆண்டுகளில் மத அரசியல் தோன்றக் காரணமாயிற்று.

அதே காலத்தில், இந்திய இராணுவத்திற்கு, ஸ்வீடன் நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து துப்பாக்கிகள், பீரங்கிகள் கொள்முதல் செய்யப்பட்டதில் இந்தியத் தலைவர்கள் பலர் நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ லஞ்சம் பெற்றதாகக் குற்றச்சாட்டு எழுதப்பட்டது. இக்குற்றச்சாட்டுகள் முழுவதுமாக நிரூபிக்கப்படாவிட்டாலும், மத்திய அமைச்சரவையின் முன்னாள் அமைச்சர் VP. சிங் போன்றோர் வலுவான பிரச்சாரம் மேற்கொண்டனர். 1989 ஆம் அண்டு தேர்தல்களில்,



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

காங்கிரஸ் அல்லாத பிற கட்சிகளுக்கு, அரசியல் மற்றும் நிர்வாகத் துறையின் ஊழல்கள், ஆயுதமாகக் கிடைத்தன. காங்கிரஸ் அல்லாத கட்சிகள் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒன்று சேர்ந்ததால் காங்கிரஸ் கட்சியின் வெற்றி கடினமானதாக இருந்தது. காங்கிரஸ் கட்சி, தனிப்பெருங்கட்சியாக உருவெடுத்து அதிக எண்ணிக்கையிலான இடங்களை வென்றாலும் ஆட்சி அமைக்க முடியவில்லை. வி.பி.சிங் அவர்களின் ஜனதா தளம் சார்பில் முதல் கூட்டணி ஆட்சித் தோன்றியது.

### கூட்டணி அரசிய×ன் காலம்

இந்திய சுதந்திரத்துக்குப் பிறகு 1990 களில் மிக முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்திய அரசியல், பலகட்சி முறை போட்டிக்கு மாற்றப்பட்டதால், எந்த அரசியல் கட்சியாலும் தனிப்பெரும் பான்மையுடன் அதிக இடங்களில் வென்று ஆட்சி அமைப்பது என்பது இயலாதக் காரியமானது. 1989 ஆம் ஆண்டிலிருந்து தேசிய அளவில் அமைக்கப்பட்ட அரசுக் கூட்டணி ஆட்சியாகவோ அல்லது சிறுபான்மை அரசாகவோ இருந்தன. மத்தியில் ஆட்சி அமைக்க, பல தேசிய மற்றும் மாநிலக்கட்சிகள் ஒன்று சேரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. பல கட்சிகளின் கொள்கைகளையும், செயல்திட்டங்களையும் கொண்டு பொதுச்செயல் திட்டம் கொண்டுவரப்பட்டது. ஆகவே எக்கட்சியும் தன் செயல்திட்டத்தை செயல்படுத்த முடியாத சூழல் ஏற்பட்டது.



படம் 18.7= : V.P. சிங்

இதனால் மத்திய அரசு தன் அரசியல் நடவடிக்கைகளிலும், கொள்கை முடிவுகளிலும் பலதரப்பட்ட கருத்துக்களைக் கொள்ள வேண்டிய அவசியமும், அரசியலில் நிலையற்றத்தன்மையும் ஏற்பட்டது. தங்கள் ஆதரவு இல்லையெனில் அரசு கவிழ்ந்துவிடும் என்ற நிலைமையை உணர்ந்த சிறுகட்சிகள், அரசை பயமுறுத்தித் தங்கள் நலனை முன்னிறுத்தி லாபமடைந்தன. கூட்டணிக் கட்சிகளின் மிரட்டலால் சில கொள்கைகளை அமுல் செய்யமுடியாத சூழ்நிலையில் "கொள்கைத் தேக்கம்" ஏற்பட்டது.

முன்னதாக ஏற்பட்ட கூட்டணி அரசுகள் நிலையற்றதாகவும், தன் பதவி காலம் முழுவதும் ஆட்சி செலுத்த முடியாமலும் இருந்தது. அதன் பிறகு ஆட்சிக்கு வந்த கூட்டணி அரசுகள் குறைந்தபட்ச பொதுத்திட்டத்தையும், ஒருங்கிணைப்பு குழுக்களையும் அமைத்து, தங்கள் கூட்டணிக்கட்சிகளின் கொள்கைகளைப் புரிந்துகொண்டு ஆட்சி நடத்தியது. அதன் பிறகு ஆட்சிக்கு வந்த கூட்டணி அரசுகளான BJP தலைமையிலான தேசிய ஜனநாயக் கூட்டணி மற்றும் காங்கிரஸ் கூட்டணி தங்கள் பதவிக்காலத்தை நிறைவு செய்தன. மேலும் UPA அரசு நாட்டில் முதல் முறையாக மீண்டும் ஆட்சி செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாகும்.

- கூட்டணி அரசுகள் அரசாங்கத்தை வலுவற்றதாக மாற்றியது என்று சிலர் கூறும் அதே வேளையில், எந்த ஒரு கட்சியும், தன் கொள்கையை அரசாங்கம் கடைபிடிக்க வேண்டும் என்று வற்புறுத்த முடியாது என்று கூறுகின்றனர். இதை எடுத்துக்காட்டுகளுடன் கலந்துரையாடு.

### மேற்கு வங்கத்தில் இடதுசாரிகள் அரசாங்கம்:

இடது சாரி அரசியல் கட்சிகளான இந்தியக் கம்யூனிஸ்ட்டு கட்சி, பார்வார்டு பிளாக், புரட்சிகர சோசியலிசக்கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, (மார்க்ஸிஸ்ட்) போன்றக்கட்சிகள் 1977 ஆம் ஆண்டு, மேற்கு வங்காளத்தில் நடைபெற்றத் தேர்தலில் வெற்றி பெற்று, CPM கட்சியின் 'ஜோதிபாசு", தலைமையில் இடதுசாரி முன்னணி ஆட்சியை அமைத்தன. அந்த மாநிலத்தில், முழுவதுமாக செயல்படுத்தாத திட்டமான நிலச்சீர்த்திருத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவது அரசின் முக்கிய செயல்பாடாக இருந்தது. 1978 ஆம்ஆண்டு ஜூன் மாதத்தில், மேற்கு வங்க அரசு, "ஆபரேஷன் பர்கா" என்று பெயரிடப்பட்ட திட்டத்தின் மூலம் "பர்காக்கள்" எனப்படும் நிலம் உழுபவர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டது. பர்காக்கள் என்பவர்கள் நிலப்பிரபுக்களுக்குச் சொந்தமானவர்கள்.

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இவர்கள் விளைச்சலில் பெரும்பகுதியை நிலப்பிரபுக்களுக்கு தருவர். இவர்கள் மேற்கு வங்கத்திலுள்ள விவசாயிகளில் பெரும்பகுதியினர் இவர்களே. இவர்களின் உரிமையை நிலைநாட்ட மேற்கு வங்க அரசு முனைந்தது. "ஆபரேஷன் பர்கா" என்ற இத்திட்டம் நில குத்தகைதாரர்கள் மற்றும் பஞ்சாயத்துராஜ் நிறுவனங்கள் ஆகிய இரண்டின் கூட்டுறவுச் செயல்பாடுகள் மீது ஆதாரப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசு அதிகாரிகளின் காலத்தாமதத்தையும், நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தையும் தவிர்க்க முடியும் என்று அரசு கருதியது. வெவ்வேறு நடுநிலையாளர்கள் பங்கு பெறும் கூட்டம் அதிகாரிகளால் கூட்டப்பட்டது. இதில் அவர்களின் பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன. அதன் பின் நிலப்பிரபுக்களின் முன்னிலையில் பயனாளிகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டு, வெளிப்படையாக சரிபார்க்கப்படும். அப்பட்டியலில் முறைக்கேடுகள் ஏதும் இருந்தால் நிலப்பிரபுக்கள் தங்கள் எதிர்ப்பைத்தெரிவிக்கலாம். பர்கார்களின் பெயர்கள் அந்த இடத்திலேயே பதிவுசெய்யப்பட்டு, சட்டப்பூர்வ ஆவணங்கள் தரப்பட்டு, நிலங்கள் பிரித்தளிக்கப்படும்.

"ஆபரேஷன் பர்கா" மூலம் தங்கள் நிலங்களிலிருந்து நிலப்பிரப்புக்களால் பர்காக்களை கட்டாயப்படுத்தி வெளியேற்றுவது பெரும்பாலும் தடுக்கப்பட்டது. பர்காக்களின் உரிமை வம்ச பரம்பரையாளர்களின் உரிமையாக்கப்பட்டது. அது மட்டுமின்றி, பர்கதார்க்களின் அறுவடைப் பங்குக்கும் அரசு உறுதியளித்தது. விவசாய உள்ளீடுப்பொருட்களுக்குப் பர்கதார்க்கள் செலவு செய்தால், உற்பத்தியாகும் மொத்த அறுவடையில் 75 சதவீதம், விவசாய உள்ளீடுப்பொருட்களை ஜமீந்தார் செலவிட்டால் 50 சதவீதம் பங்கு பர்கதார்க்களுக் குத் தருவதாகவும் அரசு உறுதி அளித்தது. மொத்தத்தில், கிராமப்புற மக்களில் ஏறுக்குறைய 50 சதவீதத்தினர் மேற்கு வங்களாத்தில் நிலச்சீர்திருத்தப் பயனாளிகளாக இருந்தனர்.

இந்த நடவடிக்கைகளின் பலனாக, மேற்கு வங்காளத்தில் 30 சதவீத அளவுக்கு விவசாய உற்பத்தி அதிகரித்தது. அதே வேளையில் கிராமப்புற வறுமையும் குறைந்தது. ஆனால் பல விமர்சகர்களின் கருத்துப்படி, பெரும்பாலான குத்தகைதாரர்கள் 70 சதவீதம் பதிவுச் செய்யப்படவில்லை. இச்சீர்த்திருத்தம் அரைகுறையாக அமுல்படுத்தப்பட்டதன் விளைவாக கிராமப்புறச் செல்வந்தர்கள் என்ற புதிய வகுப்புத் தோன்றியது.

- மேற்கு வங்கத்தின் நிலச் சீர்திருத்தங்களை வியட்நாம் மற்றும் சீனா நாட்டு நிலச் சீர்திருத்தங்களுடன் ஒப்பிடு.அச்சீர்திருத்தங்கள் ஒன்றுக் கொன்று தொடர்புடையதா அல்லது வேறுபடுகின்றதா?
- குத்தகைதாரர்கள் பாதுகாப்புக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், எவ்வாறு விவசாய உற்பத்தியை அதிகரித்தது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?

"ஆபரேஷன் பர்கா", மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் அமுலாக்கம் மேற்கு வங்க அரசுக்கு கிராமப்புற மக்களின் மகத்தான ஆதரவைப் பெற உதவியது இதனால் இடதுசாரி அரசாங்கம் 2006 தேர்தல்கள் வரைத் தொடர்ந்து வெற்றிப் பெற்று வந்தது. ஒரு மாநிலத்தின் மக்கள் பிரச்சினைகளை ஜனநாயக முறைகளின் தீர்க்கும் வழிகளில் இதுவும் ஒன்றாகும்.

*1980 களிலிருந்து ஆட்சிப்பொறுப்பிலிருந்த கூட்டணி அரசுகளும், அரசியல் கட்சிகளும்*

| தேசிய முன்னணி 1989-1990 | ஐக்கிய முன்னணி 1996-1998 | தேசிய ஜனநாயகக் கூட்டணி 1998-2004 |
|---|---|---|
| ஆட்சிப்பொறுப்பிலிருந்த கட்சிகள் | ஆட்சிப்பொறுப்பிலிருந்தக் கட்சிகள் | ஆட்சிப்பொறுப்பிலிருந்தக் கட்சிகள் |
| ஜனதா தளம், தி.மு.க. அசாம்கண பரிவுத், தெலுங்கு தேசம், ஜம்மு, காஷ்மீர் தேசிய மாநாட்டுக்காட்சி (JKNC) | ஜம்முகாஷ்மீர் தேசிய மாநாட்டுக்கட்சி, தெலுங்குதேசம், திரினாமுல் காங்கிரஸ் இந்திய கம்யூனிஸ்டுகட்சி, அசாம் கண பரிஷித, தி.மு.க. | ஐக்கிய ஜனதாதளம், அ.தி.மு.க., ஜம்முகாஷ்மீர், தேசிய மாநாட்டுக்கட்சி, திரிணாமுல்காங்கிரஸ், பிஜு ஜனதா தளம், சிவசேனா, |
| ஆதரவுக்கட்சிகள் இந்திய கம்யூனிஷ்டு, மார்க்ஸ்சிஸ்டு கம்யூனிஸ்டு, பாரதீய ஜனதா | மகாராஷ்டிரா கோமந்தா கட்சி, சமாஜ்வாதிக்கட்சி | ஆதரவுக்கட்சிகள் தெலுகு தேசம் |

இது கூட்டணி அரசில் சங்கம் வகித்த அரசியல் கட்சிகளின் முழுப்பட்டியல் அல்ல. 5 அல்லது அதற்கு மேல் M.P.க்களை பெற்றிருந்த கட்சிகளின் விவரமாகும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## 20 ஆம் நூற்றாண்டின் கடைசி பத்தாண்டுகளில் அரசியல்

### அணுகுமுறை :

இந்திய அரசியலில் ஏற்பட்ட மாற்றம் பல துறைகளில் புதிய அணுகுமுறைக்கு வித்திட்டது. பொருளாதாரத்தில் தாராளமயத்தைக் கடைப்பிடித்தன் மூலம், அந்நிய முதலீடுகளையும், பொருட்களையும் இந்தியாவுக்குள் கொண்டு வந்த அதே வேளையில், பல புதிய சமுதாயக் குழுக்கள் தங்களை அரசியலில் முதல் முறையாக வலுவாக்கிக் கொண்டன. இறுதியாக மதவாத தேசியமும், மதவாத அரசியல் ஒருங்கிணைப்பும், நம் அரசியல் வாழ்வின் முக்கிய இயல்புகளாக உருவெடுத்தன. இவை அனைத்தும் இந்திய சமுதாயத்தைப் பெரும் வன்முறைக்குத்தள்ளின. நாம் தற்போதும் இந்த மாற்றங்களின் பிடியில் சிக்கியுள்ளோம்.

### அரசியல் அமைப்புச் சட்ட சலுகைகளின் பரவல் :

பின்தங்கிய சமுதாயத்து மக்களின், முன்னேற்றம் மற்றும் அவர்களின் வாய்ப்புக்களை உறுதி செய்வதன் அவசியத்தை ஜனதா தளம் உணர்ந்தது. அரசின் வேலை வாய்ப்புகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பின்தங்கிய மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க சிபாரிசு செய்த மண்டல் கமிஷன் அறிக்கையை அமுல்படுத்த தேசிய முன்னணி அரசு முடிவு செய்தது.

மண்டல் கமிஷனால் அடையாளம் காணப்பட்ட சமூக மற்றும் கல்வியில் பின்தங்கிய சாதியினருக்கு அரசு வேலைவாய்ப்புகளில் 27 சதவீதம் இட ஒதுக்கீடுக்கு வழி செய்யும் மண்டல் கமிஷனின் முக்கியப் பரிந்துரையை அமுல்படுத்துவதாக வி.பி.சிங் அறிவித்தார்.வட இந்தியாவில் இந்த ஆணைக்கு பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. தென்னிந்தியாவில் ஏற்கனவே, பின்தங்கிய மக்களுக்கான இட ஒதுக்கீடு முறை அமுலில் இருந்தது. பெரும்பாலான அரசியல் கட்சிகள், வி.பி. சிங்கின் இந்த அறிவிப்பை ஆதரிக்காவிட்டாலும், வெளிப்படையாக எதிர்க்கவில்லை. ஏனெனில் இந்த அறிவிப்புக்கு முந்தைய இருபது ஆண்டுகளில் பின்தங்கிய மக்கள் செல்வந்தர்களாயினர். அதே வேளையில் இட ஒதுக்கீட்டையும் வலியுறுத்தி வந்தனர். குறிப்பாக அவர்கள் நிலச்சீர்திருத்தம் மற்றும் பசுமை புரட்சியின் மூலம் பயன் பெற்றவர்களாக இருந்தனர். ஆனால் கல்வி மற்றும் அரசு வேலைகளில் வாய்ப்பு அற்றவர்களாக இருந்தனர். அதுமட்டுமின்றி அரசியலிலும் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. அவர்கள் இத்துறைகளில் தங்களுக்கான சமவாய்ப்புகளுக்குக் குரல் கொடுக்கத் துவங்கினர். இவர்களின் கோரிக்கையைத் தீர்க்க முன் வந்த வி.பி.சிங் அரசாங்கம், மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுல்படுத்த முயன்றது. இவ்வாறாக,இந்திய அரசியலில், அரசியல் கட்சிகள் படிப்படியாக பின்தங்கிய மக்களின் கோரிக்கைகளுக்கு இசைந்தது. இப்போக்கு, சாதிப்பிரச்சினைகளையும், குறிப்பாக தாழ்த்தப்பட்ட சாதியினரின் அவலங்களை முன்னிறுத்தி இந்திய அரசியல் நகர்வதை நாம் காணலாம். பகுஜன் சமாஜ் கட்சி போன்ற அரசியல் கட்சிகள்,

**பஞ்சாயத்துராஜ் 73 மற்றும் 74 வது அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம்**

1992 ஆம் ஆண்டில் பி.வி. நரசிம்மராவ் தலைமையிலான அரசாங்கம், உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசியல் சாசன அந்தஸ்து தரும்வகையில் அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்தது. 73வது அரசியல் அமைப்புச் சட்டம், கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் திருத்தம் கொண்டு வந்தது. அதேபோல 74வது அரசியல் அமைப்புச் சட்டம், நகரங்கள் மற்றும் மாநகரங்களுக்கான அமைப்புகளுக்குத் திருத்தத்தைக்கொண்டு வந்தது. இவை மிக முக்கிய அரசியல் அமைப்புச் சட்டத்திருத்தங்களாகும். வயது வந்தோர் வாக்குரிமை மூலம் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளுக்கு இத்திருத்தங்கள் வழிகாட்டியாக உள்ளன. 1/3 பாக இடங்கள் இந்த அமைப்புகளில் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இது மட்டுமின்றி தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. உள்ளாட்சி மன்றம் தொடர்பான மாநில அரசுகளின் கவலைகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன. உள்ளாட்சி மன்றங்களின் கடமைகள், அதிகாரங்கள் போன்றவற்றை நிர்ணயிக்கும் அதிகாரம் அந்தெந்த மாநில அரசுகளையேச் சேரும்.இதன் விளைவாக, உள்ளாட்சி மன்றங்களின் அதிகாரங்கள் நாடு முழுவதும் ஒரே சீரானதாக இல்லை.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

தலித்துக்களின் நலன்களை முன்னிறுத்தியும் யாதவர்கள் மற்றும் ஜாட் சாதியினரின் நலன்களை முன்னிறுத்தித் தோன்றிய அரசியல் கட்சிகள் இந்திய அரசியலில் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன.

### மதத்தைத் பயன்படுத்துதல் மற்றும் அரசியல்

நாட்டின் பெரும்பான்மை மக்களான இந்துக்களை அடிப்படையாகக் கொண்டு, தேசிய கட்டமைப்பை உருவாக்கும் அணுகுமுறை பாரதீய ஜனதா கட்சியால் தொடங்கப்படடது. மக்களாட்சி மற்றும் மதசார்பின்மையின் கொள்கைகள் மேற்கத்திய சிந்தனைகள் என்று நம்பிய இக்கட்சி, இவை போதுமானதாக இல்லை எனவும், பழைய கால இந்திய கலாச்சாரம் நமக்குத் தேவை எனவும் இக்கட்சி வலியுறுத்தியது. ஆனால் மத குருக்களால் ஆட்சி செய்யப்படும் மதவாத நாட்டை இக்கட்சி எதிர்க்கின்றது. மத சார்பற்ற நாடு, மத அடிப்படையில் சிறுபான்மையினருக்கு எந்தவித சிறப்புச் சலுகைகளையும் காட்டக்கூடாது என இக்கட்சி வாதிட்டது.

இந்த அணுகுமுறை இந்திய அரசியலில் 1980 ஆம் ஆண்டு வரைத் தொடர்ந்தது. எடுத்துக்காட்டாக, 1984 ஆம் ஆண்டு லோக்சபை தேர்தலில், இக்கட்சி இரண்டு இடங்களில் மட்டும் வெற்றி பெற்றது. ஆனால் இக்கட்சி அயோத்தி பிரச்சினையைக் கையில் எடுத்தபோது மிகப்பெரிய வெற்றியைக்கண்டது. அயோத்தியில் மசூதி இருந்த இடம், ராமரின் பிறப்பிடம் எனவும், அந்த இடத்தில் ராமர் கோவிலைக் கட்டுவதாகவும் பிரச்சாரம் மேற்கொள்ள இக்கட்சி முடிவு செய்தது. 1990 ஆம் ஆண்டில், பி.ஜே.பி. யின்தலைவரான எல்.கே.அத்வானி, தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி சோம்நாத் என்ற இடத்திலிருந்து அயோத்தி வரை ரதயாத்திரை மேற்கொண்டார். பாரதீய ஜனதா கட்சியினர், தங்கள் பிரச்சாரத்தின்போது, இந்திய மதச் சார்பின்மை அரசியல், சிறுபான்மை மக்கள் குறிப்பாக, முஸ்லீம்களுக்குச் சாதகமாக நடந்துக்கொள்கிறதே தவிர, பெரும்பான்மை இந்துக்களின் நலன்களை கருத்தில் கொள்வதில்லை என பி.ஜே.பி குற்றம் சாட்டியது. இப்பிரச்சாரம் மத வேறுபாடுகளுக்கு வித்திட்டது. நாட்டின் பல இடங்களில் மதக்கலவரங்கள் நிகழ்ந்தன. இறுதியாக இந்த யாத்திரை பீகாரில் அத்வானியின் கைதால் முடிவுக்கு வந்தது. இதற்குப்பதிலடியாக வி.பி.சிங் அரசுக்கான ஆதரவை பி.ஜே.பி. விலக்கிக்கொண்டது. தேர்தலும் முன் கூட்டியே வந்தது.

இத்தேர்தலின்போது இந்தியப் படைகளை இலங்கைக்கு அனுப்பிய ராஜீவ் காந்தியின் செயலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், இலங்கையின் பிரிவினைவாதக் குழுவான விடுதலைப்புலிகளால் ராஜீவ் காந்தி படுகொலைச் செய்யப்பட்டார். இந்த அனுதாப அலை மூலம் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தது. ஆனால் மக்களவையில் பி.ஜே.பியின் பலம் 120 ஆக உயர்ந்தது. 1992 ஆம் ஆண்டில், ராமர் கோயிலைக் கட்டுவதற்காக அயோத்தியில் ஒன்று திரண்ட மக்கள், மசூதியைத் தரைமட்டமாக்கினர். இச்செயல் நாடு முழுவதிலும் பலத்த எதிர்ப்பையும், மதக்கலவரத்தையும் தூண்டி விட்டது. இதில் ஏராளமான மக்கள் கொல்லப்பட்டனர்.

### பொருளாதார தாராளமயம் :

1991 ஆம் ஆண்டில் V.P.சிங் அவர்களின் ஆட்சி கவிழ்ந்தப்பிறகு, இந்தியா மிகவும் ஆபத்தான பொருளாதார சிக்கலில் சிக்கித் தவித்தது. தன்னிடமிருந்த அந்நியச் செலாவணியை தன்கடன்களுக்கும், இறக்குமதிகளுக்கும் செலுத்தியதால் நாட்டின் கஜானா காலியானது. இதன் பொருள் என்னவென்றால், இந்தியா அவசரமாக கடனைப் பெறாவிட்டால், அந்நிய நாடுகளுக்கு பணம் செலுத்த முடியாத சூழ்நிலை உருவானது. 1992 ஆம் ஆண்டில் P.V. நரசிம்மராவ் தலைமையில் காங்கிரஸ் அமைச்சரவை பொறுப்பு ஏற்றதும், சர்வதேச நிதி அமைப்புடன் (IMF) பேச்சுவார்த்தை நடத்தி, பொருளாதார சிக்கலில் இருந்து மீண்டது. சர்வதேச நிதி அமைப்பு, "அமைப்பு ரீதியிலான இணைக்கத் திட்டத்தின் ('structural adjustment programme'), மூலம் இந்தியாவை "தாராளமயமாக்கல்" (liberalisation) கொள்கையைக் கடைபிடிக்க வற்புறுத்தியது. இதன் மூலம்,

a. விவசாயிகளுக்கான மானியம் பொதுச்சேவைகளுக்கான செலவினங்கள், சுகாதாரச் செலவினங்கள் போன்ற அரசு செலவினங்களைப் பெருமளவு குறைத்தல்.

b. இறக்குமதிக்கான வரிகளையும், தடைகளையும் குறைத்தல்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



படம் 18.8 : P.V. நரசிம்மராவ்

c. இந்தியாவில் அந்நிய முதலீடுகள் மீது தடைகளைக் குறைத்தல்.

d. பொருளாதாரத்தின் பல துறைகளைத் தனியார்களுக்குத் தாரை வார்ப்பது (தொலைப்பேசி, வங்கி, விமான சேவை போன்றவை) முன்னதாக இவை அரசின் முழு உரிமையாக இருந்தன.

இந்நடவடிக்கைகள் அந்நியப் பொருட்களை இந்தியாவுக்குக் கொண்டுவந்து இந்தியா வியாபாரம், உலக உற்பத்தியாளர்களோடு போட்டியிட வைத்தன. இவை அந்நிய நிறுவனங்கள் இந்தியாவில் புதிய தொழிற்சாலைகளை துவங்க வழி வகுத்தது. இந்த பொருளாதாரச் சீர்திருத்தங்கள் அரசு மானியங்களை நீக்கிய காரணத்தால், சாதாரண மக்கள் கடும் அவதிக்கு உள்ளாயினர். குறைந்த விலையிலான அந்நியப் பொருட்களோடு போட்டியிட முடியாமல், பல தொழிற்சாலைகள் மூடப்பட்டன. இதன் மூலம், கல்வி, சுகாதாரம், போக்குவரத்துப் போன்றவை தனியார் மயமாயின. மக்கள் தனியார் சேவைதாரர்களுக்கு அதிகக் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. 1996 முதல் 2004 வரை இருமுறையாக வாஜ்பாய் பிரதமராக செயலாற்றினார்.

உலக சந்தையின் பால் ஈர்க்கப்பட்ட இந்தியாவுடனும் பல்வேறு தரப்பு மக்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்த்து மக்களாட்சி முறையில் முன்னேறிய இந்தியாவுடனும், சமூக அமைதியைக் கெடுத்து, மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்திய மதவாத அரசியலைப் பின்பற்றிய இந்தியாவுடனும் இருபதாம் நூற்றாண்டு முடிவடைந்தது. இது 50 ஆண்டு சோதனைக்காலத்தை நிறைவுச் செய்து, நிலையான பொருளாதாரத்தையும், வலுவாக வேரூன்றிய மக்களாட்சி முறையையும் கண்டது. ஆனால் வறுமையையும், சாதிகள், மதங்கள், வட்டாரங்கள், பாலினம் போன்றவற்றில் சமத்துவத்தையும் காண முடியவில்லை. இது 21 ஆம் நூற்றாண்டுக்கு முன்னதாக உள்ள 50 ஆண்டு கால சுதந்திர இந்தியாவின் நிலையாக உள்ளது.

**முடிவுரை ;**

இந்திய மக்களாட்சி பல சவால்களை சந்தித்து தன்னை வலுவாக்கிக்கொண்டது என்பதை ஏற்கனவே நாம் படித்தோம். இந்திய மக்களாட்சி சுதந்திரமான, நியாயமான தேர்தல்கள், வாக்காளர்கள் வாக்களிப்பு, அரசாங்க செயல்பாடுகள் புதிய குழுக்களுக்கு அதிகாரங்களை அளித்தல், மக்களுக்கு சுதந்திரங்களை அளித்தல் போன்றவற்றில் வெற்றி அடைந்துள்ளது என்று நாம் கூறலாம். இருபதாம் நூற்றாண்டு முடிவடைவதற்குள், இந்திய மக்களாட்சியைப் பற்றி பல கேள்விகள் எழுப்பப்பட்டன. இந்தியாவில் மக்களாட்சி தொடர்ந்து செயல்படுகின்ற போதிலும், குடிமக்களின் நலன்கள் பேணிகாக்கப்படாதது ஏன்? குழப்பமான கோரிக்கைகளுக்கும், வளர்ச்சிப்பாதையின் சிக்கல்களுக்கும் இடையேயான மிக அதிக பதற்றத்தை இந்தியா எவ்வாறு சமாளிக்கும்? இந்திய மக்களாட்சி சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஏன் களையவில்லை? இனி வரும் ஆண்டுகளில் இந்திய மக்களாட்சி எதிர்நோக்கும் சவால்கள் இவை. இந்தியா இவற்றிற்கு விடை காணுமா?



படம் 18.9 : H. D. தேவகவுடா



படம் 18.10 : A.B. வாஜ்பாய்

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## முக்கியச் சொற்கள்

வட்டார நலன்கள் கூட்டணி அரசுகள் மதவாதம்

பெரும்பான்மை சிறுபான்மை

## உனது கற்றலை மேம்படுத்துக

1. பொருத்துக(AS1)

| | | |
|---|---|---|
| i.பொருளாதார தாராளமையம் | ( ) | a.மாநில அரசுகளை மத்திய அரசு கவிழ்த்தல் |
| ii.தன்னிச்சையாக ரத்து செய்தல் | ( ) | b. வெவ்வேறு இனத்தைச் சேர்ந்த மக்களிடையே வேறுபாடு |
| iii.இனத்தூய்மை | ( ) | c. மாநில அரசாங்கங்களுக்கு அதிக சுய அதிகாரங்கள் அளித்தல் |
| iv.கூட்டாட்சி தத்துவம் | ( ) | d. வெளிநாட்டு இறக்குமதிக்கு வரி குறைத்தல் |

2. இந்திய சுதந்திரத்திற்கு பிறகு கட்சி முறையில் ஏற்பட்ட பெரும் மாற்றங்களை எழுதுக?(AS1)
3. மத்திய, மாநில அரசுகளில் மேற்கொள்ளப்பட்ட பெரும் பொருளாதார கொள்கைகளைப் பற்றி நாம் இப்பாடத்திலும், இதற்கு முந்தைய பாடங்களிலும்/கற்றவை எவை? அவற்றுக்கிடையே உள்ள ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகள் யாவை?(AS1)
4. மாநிலக்கட்சிகள் உருவாக வட்டார நலன்கள் எவ்வாறு காரணமாக அமைந்தன? இரண்டு கட்டங்களுக்கு இடையேயான ஒற்றுமைகள் அல்லது வேற்றுமைகள் யாவை?(AS1)
5. ஆட்சி அமைக்க, பலதரப்பு மக்களின் ஆதவைப் பெறுவது அரசியல் கட்சிகளுக்கு இன்றியமையாததாகும். சுதந்திரத்திற்குப் பிறகு, இரண்டாவது கட்டத்தில், வெவ்வேறு அரசியல் கட்சிகள் இந்த நோக்கங்களை எவ்வாறு அடைந்தன என்பதை விவரி.(AS1)
6. இந்திய அரசியலுடன் இணைந்த இயல்பை பலவீனமாக்கிய பிரச்சினைகள் யாவை? பிரிவு மக்களையும் ஒருங்கிணைத்து செல்லும் திறன் எவ்வாறு உள்ளது?(AS1)
7. கலாச்சார மற்றும் பொருளாதார பிரச்சனைகளிலிருந்து வெவ்வேறு வகையான வட்டார நலன்கள் எவ்வாறு உருவாயின?(AS1)
8. இந்திய சுதந்திரத்திறகுப் பிறகு, முதல் பாதி காலத்தில் திட்டமிட்ட வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. அதற்கடுத்த காலங்களில் தாராளமயத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டது. இவை அரசியல் சிந்தனைகளை எவ்வாறு பிரதிபலிக்கின்றது என்பதை விவரி.(AS1)
9. கூட்டணி ஆட்சிகளால் ஏற்பட்ட கொள்கைகளில் ஏற்பட்ட நவீனமயத்தை செய்தித்தாள்கள் வாயிலாகக் கண்டுபிடி. கூட்டணி ஆட்சியில் வெவ்வேறு அரசியல் கட்சிகள் வட்டார கோரிக்கைகளை எவ்வாறு முன்வைத்தன.(AS3)
10. இந்திய பிரதமர்களின் படத்தொகுப்பை தயாரித்து அவர்களின் சிறப்பியல்புகளை எழுதுக.(AS3)
11. பக்கம் 260ல் 'ஆந்திரப்பிரதேசம்' தலைப்பின் கீழுள்ள பத்தியின் ஒருங்கிணைந்த "ஆந்திரப் பிரதேசத்தில்........... மாநிலம் காங்கிரஸ் கட்சியின் கீழ்நிலை அலுவலகமாக மாறக்கூடாது" - பகுதியை படித்து அது குறித்து உன் கருத்தை எழுதுக.(AS2)
12. தொலைத்தொடர்பு புரட்சியால் இந்தியாவில் மனித வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?(AS4)

**கலந்துரையாடல் :**

தீவிரவாதம் அல்லது பயங்கரவாதத்தை எதிர்கொள்வது ஒரு அரசாங்கம் அல்லது சமுதாயத்தின் கடமையா? விவாதம் நடத்துக. மனித வாழ்க்கையின் மீது அதன் தாக்கம் யாது?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்

19

# போருக்குப் பின் உலகமும் இந்தியாவும்

## இரண்டாம் உலகப் போருக்குப்பின்



படம் 19.1 : உலகப் போரில் 85% கட்டிடங்கள் அழிக்கப்பட்டபின் வார்சா நகரத்தின் தோற்றம்.

இரண்டாம் உலகப் போரின் தாக்கமானது பல்வேறு நாடுகளில் பல்வேறு விதமாக இருந்தது. ஐரோப்பிய நாடுகள், குறிப்பாக USSR போலந்து மற்றும் யுகோஸ்லேவியா தங்களுடைய மக்கள் தொகையில் 20% இழந்து மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டன. பொருளாதார ரீதியாகவும் USSRம் மற்ற நாடுகளும், நகரங்கள், தொழிற்சாலைகள் மற்றும் சுரங்கங்கள் அழிந்து பெருமளவில் இழப்பிற்குள்ளாயின.USSR ல் சுமாராக 700 நகரங்களும் 31,000 தொழிற்சாலைகளும் முழுமையாக அழிக்கப்பட்டன. அதற்கு மாறாக அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் மாகாணங்களில் போர் நடைபெறாததால் குறைவாகவே பாதிக்கப்பட்டது. உண்மையில் பொருளாதார தேக்கத்தால் ஏற்பட்ட பொருளாதாரச் சீர் கேட்டிலிருந்து இரண்டாம் உலகப்போர் அமெரிக்காவை மீட்டு முன்னேற்றமடையச் செய்தது. போர்க்களத்திற்கு மிகவும் தூரத்தில் இருந்தமையால் அமெரிக்காவின் தொழிற்சாலைகளும் விவசாயமும் பாதிப்படையாமல் வளர்ச்சி அடைந்தன. இதனால் இரண்டாம் உலகப்போரின் போது முழுவேலை வாய்ப்பும் உயர் உற்பத்தித்திறனும் அமெரிக்காவில் உறுதியளிக்கப்பட்டன. 1945 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அமெரிக்கக் குடியரசுத்தலைவரான ஹாரி ட்ரூமன், "இப்போரிலிருந்து நாங்கள் உலகிலேயே மிகவும் வலிமை மிக்க நாடாகவும் வரலாற்றிலும் மிகுந்த ஆற்றல் மிக்க நாடாகவும் எழுச்சியுற்றோம்". என்று கூறினார்.

போரால் அழிக்கப்பட்ட நாடுகளும் தங்களுடைய நாடுகளை புணரமைப்பு செய்து கொண்டன. இதில் உலகம் சில புதிய செயல் முறைகளைக் கண்டது ஐக்கிய நாடுகள் சபை பனிப்போர் மற்றும் குடியேற்ற ஆதிக்கத்தை தளர்த்துதல் போன்ற மூன்று முக்கிய செயல்முறைகள் நடைபெற்றன. இரண்டாம் உலகப்போர் நாசிசக் கருத்துக்களான சர்வாதிகாரம் மற்றும் ஏகாதிபத்தியங்களுக்கு மாறாக அமைதி, மக்களாட்சி மற்றும் நாடுகளின் விடுதலை என்னும் கொள்கைகளுடன் போரிடப்பட்டது. இவ்வாறு அனைத்து நாடுகளிலும் அமைதி மற்றும் முன்னேற்றத்தை உறுதியளிக்கும் உலக நிறுவனத்தை உருவாக்குவதே அதன் முதல் பணியாக இருந்தது. இது ஐக்கிய நாடுகள் சபை ஏற்பட வழிவகுத்தது. குடியேற்ற நாடுகளான பிரிட்டனும் பிரான்சும் தங்களின் பழைய குடியேற்ற கொள்கைகளை நியாயப்படுத்த முடியவில்லை. பழைய குடியேற்றக் கொள்கைகளால் பழைய குடியேற்ற அரசுகளுக்கு குடியேற்றங்களின் மீது தனிப்பட்ட வசதி வாய்ப்புகள் இருந்ததை துண்டித்துக் கொள்ளும்படி அமெரிக்க ஐக்கிய நாடுகள் வலியுறுத்தி வந்தமையால் அவை அரசியல் மற்றும் பொருளாதார முறைகளிலும் வலிமை இழந்தன. USSRஆல் தூண்டப்பட்டு கம்யூனிஸ்டு கட்சிகள் பல இடங்களில் குடியேற்ற ஆட்சிகளுக்கு எதிரான போராட்டங்களுக்குத் தலைமையேற்று நடத்தியதால் USSR இப்போராட்டங்களின் தலைமை வீரனாக உருவெடுத்தது. இந்த சூழ்நிலைகளில் பழைய ஆதிக்க சக்திகளான பிரிட்டனுக்கு தங்களின் பழைய குடியேற்றப் பகுதிகளுக்கு விடுதலை அளிப்பதைத் தவிர வேறு வாய்ப்பில்லாமல் போனது. இதைப் பற்றி நீங்கள் முன் பாடத்திலேயே படித்திருப்பீர்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இந்த நாடுகள் விடுதலையடைந்தவுடன் அமெரிக்கா மற்றும் ரஷ்யாவிற்கு இடையே முதலாளித்துவம் மற்றும் பொதுவுடைமைக் கொள்கைகளுக்கிடையே பெரிதும் பாதிக்கப்பட்ட ஓர் உலகத்தை இவை சந்திக்க நேர்ந்தது. முன்னேற்றத்திற்காக தங்களின் சுய வழிமுறைகளை பின்பற்றாமல் இந்த இரண்டு நாடுகளில் ஒன்றினைத் தேர்ந்தெடுக்க தொடர்ந்து வலியுறுத்தப்பட்டன. அவற்றிற்கு ஒரு வல்லரசை எதிர்த்து மற்றொன்று செயல்படும்படி ஓர் வாய்ப்பு கிடைத்தது. இப்பிரிவில் இப்பிரச்சினைகளில் சிலவற்றைக்குறித்து விவரமாக கற்போம்.

- குடியேற்ற ஆதிக்கத்தை தளர்த்துதல் என்னும் சொல்லால் நீ புரிந்து கொண்டது என்ன?
- இரண்டு வல்லரசுகளுக்கிடையே நிலவிய போட்டி புதியதாக விடுதலை பெற்ற நாடுகள் மீது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தின ?

## ஐக்கிய நாடுகள் சபை :

முக்கிய நேச நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா போர் முடிவுற இருக்கும் தருவாயில் ஐ.நா. சபை அமைப்பதற்கான ஒரு திட்டத்தை வரைந்தன. இந்த உலகில் அமைதியைப் காப்பது மற்றும் போர்களைத் தடுப்பது ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்தியதோடு மட்டுமின்றி உலகிலுள்ள அனைத்து மக்களுக்கும் மனித உரிமைகள், மக்களாட்சி மற்றும் ஏழ்மையையும் பசியையும் விரட்டுதல் போன்றவற்றை உறுதியளிப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தியது. இவ்வாறு ஐ.நா. நீடித்த அமைதி மற்றும் மனித முன்னேற்றத்தை உறுதியளிக்கும் இரட்டை நோக்கங்களுடன் தொடங்கியது. அதே சமயம், அது நாடுகளின் தன்னதிகாரத்தையும் அங்கீகரித்து மனித உரிமைகள் தீவிரமாக மீறப்படுதல் அல்லது உலக அமைதிக்கு அச்சுறுத்தல் ஏற்படுதல் போன்ற சூழ்நிலைகளில் தவிர எந்த ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை எனவும் வாக்குறுதியளித்தது.

ஐ.நா.சபை நிறுவப்படும்போது 54 உறுப்பு நாடுகளை அது கொண்டிருந்தது. இன்று (2014) 193 நாடுகள் இதில் உறுப்பு நாடுகளாக உள்ளன. இந்த நாடுகள் ஐ.நா.வை நிறுவப்பட்ட பத்தாண்டுகளில் குடியேற்ற ஆதிக்கத்திலிருந்து தங்களை விடுதலை செய்துக் கொண்ட பின் ஐ.நா.வில் இணைந்தன. ஐ.நா. ஆறு வேறுபட்ட அங்கங்கள் வாயிலாக பணியாற்றுகிறது. இந்த அங்கங்களில் ஒவ்வொன்றும் அமைதி மற்றும் பாதுகாப்பினை நிலை நாட்டுதல், கல்வி மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல், ஏழ்மையை விரட்டுதல் சர்வதேச அளவில் குற்றங்கள் இழைக்கப்படும் தருணத்தில் நீதிவழங்குதல் போன்ற பல்வேறு முக்கிய பணிகளை இந்த அங்கங்கள் ஆற்றுகின்றன. திஹேகில் அமைந்திருக்கும் சர்வதேச நீதிமன்றம், ஜெனீவாவில் அமைந்துள்ள உலக சுகாதார நிறுவனம், பாரிசில் உள்ள ஐக்கிய நாட்டு கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார நிறுவனம், நியூயார்க்கிலிருந்து பணியாற்றும் ஐக்கிய நாட்டு குழந்தைகள் அவசர நிதி போன்ற சில அங்கங்கள் இப்பணிகளை ஆற்றுகின்றன.



படம் 19.2 : ஐ.நா.சபையின் சின்னம்.

ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய அதிகாரியான தலைமைச் செயலாளரைத் தேர்தெடுப்பதில் அனைத்து நாடுகளும் கலந்துக் கொள்கின்றன. இப்பதவி பல்வேறு கண்டங்களுக்கிடையே சுழற்சியாகவரும். நாடுகளுக்கிடையே சீரான முறையில் கலந்துரையாடல் நடைபெறும் முக்கிய அங்கமாகத் திகழ்வது பொதுச் சபை ஆகும். எனினும் போர் மற்றும் அமைதி பற்றிய தீர்மானங்கள் பாதுகாப்புச் சபையில் நடத்தப்படுகின்றன. இதில் ஐந்து நாடுகள் சிறப்புத் தகுதியான உறுப்பு நாடுகள் என்பர். அவை: சீனா, பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா,அமெரிக்க நாடுகள். இக்குழுவால் எடுக்கப்படும் எந்த ஒரு தீர்மானத்தையும் இந்த நாடுகளில் ஏதேனும் ஒரு நாட்டின் தலையீட்டால் மறுத்து வாக்களித்து செல்லாத தாக்கிவிடும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இந்த வல்லரசுகள் அடிக்கடி தங்களுக்குள்ளேயே பல சச்சரவுகளில் ஈடுபட்டு தங்களின் மறுத்து வாக்களிக்கும் அதிகாரத்தை பயன்படுத்தி ஐ.நா.சபையின் எந்த ஒரு செயலையும் தடுத்து விடுகின்றன. சில சமயங்களில் தங்களின் அதிகாரங்களைப் பயன்படுத்தி தங்களின் ஆணைகளுக்கு வளைந்து கொடுக்கும்படி ஐ.நா.சபையை வலியுறுத்துகின்றன. எனினும் ஐ.நா.போன்ற பொது நிறுவனம் வல்லரசுகளை மிதவாதத்தையும் சுயக்கட்டுப்பாட்டையும் மேற்கொள்ளும்படி வலியுறுத்துகிறது. வல்லரசுகளுக்கு சிறப்பு அதிகாரங்கள் வழங்கப்பட்டதால் அவை உலக அமைதியைக் காக்கும் பொறுப்பினையும் சிறப்புப் பங்கினையும் வகிக்கின்றன.

கல்வி, சுகாதாரம், கலாச்சாரப்பரிமாற்றம் மற்றும் பாரம்பரியப் பண்பாட்டைப் பாதுகாத்தல் போன்ற போற்றத் தகுந்த பணிகளை ஐ.நா. வெற்றிகரமாகச் செய்தாலும் போர்களைத்தடுப்பதில் அது குறைந்த அளவிலேயே வெற்றிபெற்று வருகிறது. உலகைக் கட்டுப்படுத்த விரும்பும் வல்லரசுகளின் பேராசைகளுக்கு ஐ.நா.அவ்வப்போது பிணையாளியாக வைத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.



படம் 19.3 : நியூயார்க்கிலுள்ள ஐ.நா.தலைமையகம்

- போர்கள் ஏழ்மை, சமமான முன்னேற்றமின்மை மற்றும் நாடுகளுக்கிடையே கலாச்சாரப் பரிமாற்றங்கள் போன்றவற்றுடன் தொடர்பு கொண்டுள்ளன என்று நீ கருதுகிறாயா?
- சிலரின் கருத்துப்படி ஐந்து வல்லரசு நாடுகளுக்கும் சிறப்பு அதிகாரம் வழங்குவது மக்களாட்சிக்கு முரணானது. எனவே அது அழிக்கப்பட வேண்டும் என்றும், மேலும் பலர் இவ்வல்லரசுகளுக்கு சிறப்பு அதிகாரம் இல்லையெனில் ஐ.நா.சபை சீரிய முறையில் செயல்படாது என்றும் கூறுகின்றனர். இதைப்பற்றி கலந்துரையாடு.

## இரண்டு அணிகள் மற்றும் பனிப்போர் (1945-1991)

இரண்டாம் உலகப்போருக்குபின் கொள்கை அளவிலும் அரசியல் அளவிலுமான இரண்டு முக்கிய அணிகள் எழுச்சி பெற்றன. சோவியத் ரஷ்யாவில் வழி நடத்தப்பட்ட பொதுவுடைமை கொள்கை அணி, அமெரிக்க ஐக்கிய நாடுகளால் வழிநடத்தப்பட்ட மக்களாட்சி- முதலாளித்துவ அணி. ஒரு புறம் ரஷ்யா சமத்துவக் கொள்கைகளையும் அரசால் கட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சியையும், இக்கொள்கைகளையும் தனியார் முதலாளித்துவ கட்டுப்பாட்டு வளர்ச்சிச் செயல்முறைகளையும் மேம்படுத்தியது. ரஷ்யா கிழக்கு ஐரோப்பா முழுவதையும் (போலந்து, ஹங்கேரி மற்றும் கிழக்கு ஜெர்மனி) தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தது. மேலும் விடுதலை பெற்று வரும் பல குடியேற்றப் பகுதிகளான சீனா, வியட்நாம் போன்றவற்றையும் தனக்கு நட்புறவாக வைத்திருந்தது. மேற்கு ஐரோப்பிய நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற நாடுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன. இடைநிலையிலுள்ள பிற அனைத்து நாடுகளையும் தங்களின் அணிக்குள் கொண்டுவர இரண்டு அணிகளும் தங்களுக்குள் போட்டியிட்டுக் கொண்டன.

இரண்டாம் உலகப்போருக்குப்பின் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு முற்றிலும் புதிய போர் இரண்டு அணிகளுக்குமிடையே மூண்டது.




கோட்டு வரைபடம் 1: அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் அணுஆயுத இருப்புகள்.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



படம் 19.4 : அணுகுண்டின் ஆற்றலைபற்றி புரிந்துகொள்ள இதை செயல்பட முயற்சி செய்யுங்கள். ஹிரோசீமாவில் போடப்பட்ட அணுகுண்டின் எடை 15கிலோ டன்கள் நாகசாகியில் போடப்பட்ட அணுகுண்டின் எடை 21 கிலோ டன்கள். ரஷ்யாவின் மிகவும் ஆற்றல் வாய்ந்த அணுகுண்டான ஜார் பாம்பாவின் எடை 50,000கிலோ டன்கள். ஹிரோசீமா அணுகுண்டைக் குறிப்பிட்டதுபோல் சிவப்புப் புள்ளிகளைக் கொண்டு இதைக் குறிப்பிட வேண்டுமெனில் எத்தனை பக்கங்கள் தேவைப்படும் என்பதை கற்பனை செய். மேலும் ஜார் பாம்பாவை பயன்படுத்தியிருந்தால் அதன் தாக்கம் எவ்வாறு இருந்திருக்கும் என்பதையும் கற்பனை செய்.

இப்போரில் போட்டியாளர்கள் வெளிப்படையாக ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ளவில்லை அல்லது ஒருவருடன் ஒருவர் நேரடியாக சண்டையிட்டுக் கொள்ளவில்லை. அதாவது இது ஒரு வெப்பமான போர் அல்ல மாறாக அவதூறான பிரச்சாரங்கள் மற்றும் சொற்கள் வாயிலாக மறைமுகமாக நடத்தப்பட்ட போர். இது பனிப்போர் என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் மரபுவழிப்போர்களில் நடந்தது போன்று உண்மையான சண்டை ஏற்படவில்லை. அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் தீவிரமான கருத்து வேறுபாடுகளே இப்பனிப்போரின் குணநலன்களாக இருந்தமையால் 1945 மற்றும் 1991 ஆண்டுகளுக்கிடையே உலகில் நிகழ்ந்த பெரும்பாலான அனைத்து நிகழ்வுகளும் இவற்றால் தாக்கம் செய்யப்பட்டு வடிவமைக்கப்பட்டன.

பனிப்போர் வெறும் பிரச்சாரப் போர் மட்டுமல்ல. அது உண்மையான சண்டையையும் சுமார் 20மில்லியன் மனித உயிர்கள் மறைமுகமாக அழிந்ததையும் கண்டது; இருப்பினும் இப்போரில் கொல்லப்பட்ட பெரும்பாலான அனைத்து மக்களும் குடியேற்ற ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற நாடுகளான வியட்நாம், கொரியா, அங்கோலா மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற மூன்றாம் அணி நாடுகளின் குடிமக்களேயாவர். இப்பிரிவினை ஒத்த இன மக்களின் மீதும் புவியியல் அளவில் அருகிலிருந்த மாகாணங்களிலும் பரவி அவர்களை எதிரிகளாக்கியது. மேலும் இந்த நாடுகளுக்கிடையே வீணான போர்கள் ஏற்பட வழி வகுத்தது.

இப்பனிப் போரின்போது பிரிநிதித்துவப் போர்கள், இராணுவ உடன்படிக்கைகள், மற்றும் ஆயுதப்போட்டி போன்ற சில முக்கிய தந்திரங்கள் கையாளப்பட்டன.

**பிரநிதித்துவப் போர் :**

தொடக்கத்திலிருந்தே இரு நாடுகளும் பிற நாடுகளை விடுதலைக்காகப் போராடுவதில் தங்களின் செல்வாக்கு வளையத்தின் கீழ் கொண்டுவர முயற்சி செய்தன. இது அந்த நாடுகளில் இரு எதிரணிகளுக்கு ஆதரவு தெரிவிக்க வழி வகுத்தது. 1947ல் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஹாரி ட்ரூமன் துருக்கியிலும் கிரேக்க நாட்டிலும் தெரிவித்தார். ஆப்பிரிக்காவில் பெல்ஜியக் குடியேற்ற நாடான காங்கோ 1960ல் விடுதலை பெற்றது. ஆனால் அதன் பொதுவுடைமைத் தலைவரான பாட்ரிஸ் லுமும்பா, CIA எனப்படும் அமெரிக்க உளவுத்துறை நிறுவனத்தின் ஆணைப்படி 1961ல் போர்ச்சுகல் நாட்டிடமிருந்து அங்கோலா விடுதலை பெற்றது. அங்கோலாவின் பொதுவுடைமைவாதிகள் ரஷ்யா மற்றும் கியூபாவின் உதவியுடன் அதிகாரத்தைக் கைப்பற்றினர். இலத்தீன் அமெரிக்காவில் பிடல் காஸ்ட்ரோ அமெரிக்கப் பின்னணி அரசாங்கம் ஒன்றை எதிர்த்து ஒரு புரட்சியை வழிநடத்தி ரஷ்யாவின் வழியில் சோஷியலிசத்தை உருவாக்க முயன்றார். இது இலத்தீன் அமெரிக்க நாடுகளின் எண்ணற்ற மக்களை இதே போன்ற ஒரு மாற்றத்தை தங்கள் நாட்டிலும் ஏற்படுத்துவதற்கு போரிடத் தூண்டுகோலாய் அமைந்தது சிலியின் மிகவும் பிரபலமான தலைவர்களில் ஒரு வரன 'சே கயூவெரா', கொல்லப்பட்டார் S.அல்லண்டேவால் வழி நடத்தப்பட்ட சிலியின் அரசாங்கம் போன்று சோஷியலிசவாதிகளால் வழி நடத்தப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களும் அமெரிக்கப் பின்னணியின் இராணுவத் தளபதிகளால் வீழ்த்தப்பட்டன.

ரஷ்யாவும் தன்னுடைய செல்வாக்கைப் பரப்ப முயன்றது. முதலாவதாக 1950களில்'



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஜெர்மனி, ஹங்கேரி மற்றும் செக்கோஸ்லோவேகியா போன்ற நாடுகளின் எதிர்ப்புகளை அது எதிர்கொள்ள வேண்டியிருந்தது; அது நட்புறவாக இல்லாத அரசாங்கங்களை கலைக்க தனது இராணுவங்களை அனுப்பி அந்த நாடுகளில் நட்புறவான அரசாங்கங்களை ஏற்படுத்தியது. 1960 களுக்குப் பிறகு USSRரிடமிருந்து சீனா தன்னைத்தானே துண்டித்துக் கொள்ள முடிவு செய்தது. பின்னர் ரஷ்யா சீனாவை கட்டாயப்படுத்தும் தன் முயற்சியில் தோல்வியுற்றது. 1971ல் USSR ஆப்கானிஸ்தானின் மீது படையெடுத்து அங்கு நட்புறவான ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்த விரும்பியது. மாறாக அமெரிக்கா மதத் தீவிரவாதிகளான ஆப்கனிஸ்தானின் கலகக்காரர்களுக்கு ஆயுத உதவியை வழங்கியது. அதன் பின் ஒரு நீண்ட கால உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. மேலும் 1985ல் USSR ஆப்கானிஸ்தானிடமிருந்து தனது ஆதிக்கத்தை திரும்பப்பெற முடிவுசெய்தது. தற்போது அந்த நாடு தாலிபான் என்னும் மதத்தீவிரவாதிகளினால் வழிநடத்தப்பட்டு அமெரிக்காவிற்கு எதிராக திரும்பியுள்ளது. இவற்றையெல்லாம் நாம் பார்க்கும் போது இந்த போர் மற்றும் சீரழிவுகள் குடியேற்றத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற நினைக்கும் மூன்றாம் உலக மக்களின் போர்க்களம் மற்றும் அழிவுகளாக உள்ளனவே அன்றி சோவியத் ரஷ்யா அமெரிக்கப் படைகளுக்கிடையே இப்போர்கள் நடைபெறவில்லை என்பது உறுதியாகிறது.

## இராணுவ உடன்படிக்கைகள் :

அமெரிக்காவும் ரஷ்யாவும் அணுஆயுதங்களை வைத்துக்கொள்வதில் மும்முரமாக ஈடுபட்டன. ஆனால் அணு ஆயுதம் போரில் எந்த ஒரு நாடும் வெற்றியாளராக இருக்க முடியாது என்பதை நன்கு உணர்ந்திருந்தன. இருப்பினும் அவை இராணுவ மற்றும் போர் தந்திர உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டன. மேற்கு நாடுகள் 1949ல் வட அட்லாண்டிக் ஒப்பந்த நிறுவனம் என்னும் ஓர் நிறுவனத்தின் மூலமாக தனது உடன்படிக்கைகளை வடிவமைத்துக் கொண்டன. இதற்கு எதிராக கம்யூனிஸ்ட் நாடுகள் இதே போன்ற உடன்படிக்கைகளை செய்து கொண்டு வார்ஸா உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. இதோடு மட்டுமின்றி, அமெரிக்கா தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த நிறுவனம் (SEATO) மற்றும் மத்திய ஒப்பந்த நிறுவனம் (CENTO) போன்ற வட்டார இராணுவ மற்றும் போர் தந்திர உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டது.

அவை தங்களை வலிமை படுத்திக் கொள்ள இராணுவ அணிகளை உருவாக்கிக் கொண்டாலும் போரிடுவதால் மனித உயிர்கள் பெருமளவில் சேதமடையும் என்பதையும் முழு நாகரிகங்களுக்கும் இது அச்சுறுத்தலாக அமையும் என்பதையும் அவை தெரிந்து வைத்திருந்தன. எனவே அவை ஒன்றுடன் ஒன்று எச்சரிக்கையாக செயல்பட்டு ஒரு கட்டுப்படுத்தப்பட்ட உறவு முறையை நிலைநாட்டிவந்தன. இந்த உறவுகள், கீழ்காணும் வசதி வாய்ப்புகளைப் பெற்று தங்களின் செல்வாக்கை விரிவாக்கிக் கொள்ள விரும்பிய வல்லரசுகளுக்கு பயன்பட்டது.




வரைபடம் 1: பனிப்போர் இராணுவ உடன்படிக்கைகள்

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

- முக்கிய வளங்களான எண்ணெய் மற்றும் தாதுப் பொருள்கள்
- அவற்றின் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தைகள் மற்றும் தங்களின் முதலீடுகளை பாதுகாப்பாக செய்வதற்கான இடங்கள்.
- தங்களின் படைகளையும் ஆயுதங்களையும் நிலைநிறுத்த இராணுவதளங்கள்
- தங்களுடைய கோட்பாடுகளை பரப்புதல் மற்றும்
- இராணுவத்திற்கு ஆகும் மிக அதிகமான செலவுகளை சந்திக்க பொருளாதார உதவியைப் பெறுதல்.

**ஆயுதம் மற்றும் விண்வெளிப் பயணப் போட்டி :**

ரஷ்யா மற்றும் அமெரிக்கா போன்ற இரு நாடுகளும் ஆயுதங்களில் பரிசோதனைச் செய்யவும் பேரழிவு மிக்க அணு ஆயுதங்கள் மற்றும் கண்டங்களுக்கிடையே தாக்குதல் செய்யும் ஏவுகணைக் கிடங்குகளைக் கட்டவும் பேரளவில் பணத்தை செலவிட்டன. இந்த இரண்டு நாடுகளும் சேர்ந்து பலமுறை இந்த பூமி முழுவதையும் அழிப்பதற்குப் போதுமான அணுஆயுதங்களைப் பெற்றுள்ளன. படிப்படியாக அவற்றின் நேச நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் சீனாவும் அணு ஆயுதகிடங்குகளை கட்டின. தற்போது இப்போட்டி செயற்கை கோள்கள் உளவு வேலைக்கும் ஏவுகணைகளை இயக்குவதற்கும் பயன்படும் விண்வெளிப் பயணத்திற்கும் விரிவடைந்துள்ளது. ரஷ்யா தனது முதல் செயற்கைக் கோளான 'ஸ்புட்னிக்' ஐ உருவாக்கி, யூரிககாரின் என்பவரை முதன்முதலில் விண்வெளிக்கு அனுப்பியது. இதைத்தொடர்ந்து இரு நாடுகளுக்கிடையே மேலும் பல துணைக்கோள்களை விண்ணில் செலுத்துவதில் தீவிரமான போட்டிகள் ஏற்பட்டு, இறுதியில் அமெரிக்கா 1969ல் நீல் ஆர்ம்ஸ்ட்ராங் என்பவரையும் மற்றும் இருவரையும் சந்திரனுக்கு அனுப்ப வழிவகுத்தது.




படம் 19.5: இடதுபுறம் யூரிககாரின் வலதுபுறம் நிலவில் நீல் ஆம்ஸ்டிராங்

**முக்கியக் கருத்துகள் :**

எதிரெதிர் நாடுகள் அழிவுதரும் ஆயுதங்களைத் திரட்டியதால் உலகம் தொடர்ந்து ஒரு அணு ஆயுதப் பேரழிவால் அச்சுறுத்தப்பட்டு வந்தது. அனைத்து நாட்டு மக்களும் போரின் நீடித்த பயத்தால் வாழ்ந்து வந்தனர். இரு நாடுகளுக்கிடையே பல சமயங்களில் அணு ஆயுத போர் தவிர்க்க முடியாதது போல் ஏதோ ஒரு வகையில் நிறுத்தப்பட்டு விட்டது. ரஷ்யாவின் மீது உளவு விமானம் பறக்கும் போது சுட்டு வீழ்த்தப்பட்டது கியூபாவில் உருவாக்கப்பட்ட ரஷ்யாவின் ஏவுகணைக் கண்டுபிடிக்கப்படுதல் கொரியாவுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கிடையே போர் மூண்ட பல சமயங்கள் ஆகியவை இவற்றுள் சில நிகழ்வுகளாகும்.

**அணிசேரா இயக்கம் (NAM) :**

1950களில் உலகம் பேரளவில் இராணுவமயமாக்கப்பட்டு இரண்டு எதிர் அணிகளாகப் பிரிந்தன. இராணுவ மேலாண்மை, கோட்பாட்டு முரண்பாடுகள் பொருளாதார மேலாண்மை பெறுவதில் பகைமை போன்ற இரண்டு வல்லரசுகளின் பகைமை இருதுருவ உலகத்தை நிறுவுவதற்கு வழி வகுத்தது. இந்த இரண்டு அணிகளிலும் சேர விரும்பாத நாடுகளுக்கு இந்த சச்சரவுகள் எந்த அதிக இடைவெளியையும் விட்டு வைக்காததால் புதிய அணி ஒன்று உருவாக்கும் முயற்சி



SCERT TELANGANA
Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



படம் 19.6 : 1960 அணிசேரா இயக்கமாநாட்டில் ஜவஹர்லால் நேரு கென்யாவின் குவாமேங்குருமா, எகிப்தின் கமால் அப்துல் நாசர் இந்தோனேஷியாவின் சுகர்னோ, யுகோஸ் லேவியாவின் டிட்டோ.

மேற்கொள்ளப்பட்டது. அண்மையில் குடியேற்ற ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற மக்களின் பிரச்சினைகளான ஏழ்மை, நோய், சமமின்மை, குடியேற்ற ஆதிக்கம் போன்றவற்றைக் குறித்து எதுவும் பேசப் படாமையே இவ்வணி தோன்றுவதற்கான முக்கிய காரணமாகும்..

புதியதாக விடுதலை பெற்ற நாடுகளின் தலைவர்கள் பாதுகாப்பற்ற நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து ஒரு மாற்றம் தேவை என்பதை உணர்ந்தனர். எனவே 1955ல் இந்தோனேஷியாவின் பாண்டூங்கில் ஒரு மாநாடு நடத்தப்பட்டது. இந்த முதல் ஆசிய ஆப்பிரிக்க மாநாட்டில் 29 நாடுகள் பிரதிநிதித்துவம் வகித்தன. இந்த மாநாட்டில் இந்தியாவின் அன்றைய பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேரு, எகிப்தின் தலைவரான கமால் அப்துல் நாசர் மற்றும் ஜோசப் பிராஜ் டிட்டோ என்னும் யுகோஸ்லேவியத் தலைவரும் கலந்து கொண்டனர். பண்டித ஜவஹர்லால் நேரு முதன்மைச் சபா நாயகராக அங்கீகரிக்கப்பட்டார். இது அணிசேரா இயக்கம் (NAM)ஏற்பட வழிவகுத்தது.

இவ்வாறு, புதியதாக விடுதலை பெற்ற ஆசிய, ஆப்பிரிக்க மற்றும் இலத்தீன் நாடுகளுக்கிடையே கலாச்சார மற்றும் பொருளாதார கூட்டுறவை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஒரு பன்னாட்டு நிறுவனமான கூட்டு சேரா நிறுவனம் நிறுவப்பட்டது.

இதன் முதல் உச்சி மாநாடு 1961ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் யுகோஸ்லேவியாவின் பெல்கிரேட் நகரில் நடைபெற்றது. இதில் 25 உறுப்பு நாடுகள் கலந்து கொண்டன. 2012 ஆம் ஆண்டிற்குள் இதன் உறுப்பின நாடுகளின் எண்ணிக்கை பதினேழு மேற்பார்வையாளர்களுடன் 120 ஆக உயர்ந்தது. முதல் உச்சி மாநாடு மூன்று முக்கிய நிலைகளைக் கொண்டிருந்தது

- அணிசேரா இயக்கத்தின் உறுப்பினர் நாடுகளிடையே கூட்டுறவு. அவற்றில் பெரும்பாலானவை புதியதாக விடுதலை பெற்ற நாடுகளாகும்.
- வளர்ந்து வரும் பனிப்போரின் தீவிரமான கருத்து வேறுபாடுகள் மற்றும் உலக அளவில் அதன் பெரும் தாக்கம்.
- இறுதியாக எந்த ஒரு இராணுவ அணியிலும் புதியதாக குடியேற்ற ஆதிக்கத்திலிருந்து விடுதலையான நாடுகள் இணைவதைத் தடுத்தல்.

இரண்டு வல்லரசுகளும் விலகி, நாடுகளைத் தங்கள் பக்கம் இழுக்கும்போது அணிசேரா இயக்கமானது, இந்தியா போன்ற நாடுகள் தனித்து நிற்கும் நிலையை வகிக்க உதவி செய்தது. அது புதியதாக தோன்றிய நாடுகளுக்கு வல்லரசுகளை ஒன்றுடன் ஒன்று எதிராக செயல்படச்செய்து இடத்திற்கான பேரமும் உதவியும் பெற்றுத்தரவும் உதவி செய்தது. இரு அணிகளும் கூட்டு சேரா இயக்கத்தை சந்தேகத்துடன் பார்த்தாலும் அமெரிக்கா கூட்டுசேரா இயக்கத்தை பரந்த பன்னாட்டுச் சிக்கல்களில் ரஷ்யாவுடன் நெருங்கி இருப்பதாகக் கருதுகிறது. ஆப்கானிஸ்தான் மீது சோவியத் ரஷ்யா படையெடுத்த தருணத்தில் அதன் செயலின்மை அடிக்கடி கட்சி சார்புடைய நிலைபோல் காணப்படுவது கூட்டு சேரா இயக்கத்தின் கொள்கைகளுக்கு முரண்பாடாக உள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அணிசேரா இயக்கத்தின் மற்றொரு பலவீனம் என்னவென்றால் தன் சுய உறுப்பு நாடுகளிடையே ஒன்றையொன்று போரிட்டுக் கொள்வதையும் திறமையாக அதனை நிறுத்த இயலாமையே ஆகும். இவ்வாறு ஈரானும் ஈராக்கும் ஏழு வருடங்கள் அல்லது அதற்கும் மேலாக சண்டையிட்டுக் கொண்டிருந்த காலத்திலும் அணி சேரா இயக்கம் அதைத் தடுக்க ஏதும் செய்யவில்லை. இவ்வாறான வரம்புகள் பல இருப்பினும் அணிசேரா இயக்கம், இரண்டு வல்லரசுகளுக்கிடையே சிதறிக்கிடக்கும் ஒரு உலகின் பன்னாட்டு விவகாரங்களில் தங்களின் சுய அதிகாரத்தை உறுதிப்படுத்துவதில் புதியதாக விடுதலைபெற்ற நாடுகளுக்கு உதவி செய்தது.

- 1955ல் நடைபெற்ற பாண்டுங் மாநாட்டின் முக்கிய நோக்கம் என்ன?
- அணிசேராக் கொள்கைகளுக்கு எதிராக வல்லரசுகள் எவ்வாறு செயல்படுகின்றன?
- அணிசேரா நாடுகள் மூன்றாம் உலக நாடுகள் என்று அழைக்கப்படுவதற்கான காரணங்கள் யாவை?

## மேற்காசிய பிரச்சனைகள் :

மேற்காசியா என்பது ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்கும் இடைப்பட்டபகுதியைக் குறிக்கிறது. இப்பகுதியைக் குறிப்பிட 'மத்திய கிழக்கு' என்னும் சொல்லும் பயன்படுத்தப்படுகிறது. அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையே ஏற்பட்ட சச்சரவுகள் அவ்வப்போது மேற்கு ஆசிய பிரச்சனைகள் என்று அழைக்கப்படுகின்றன.இப்பிரச்சனை பாலஸ்தீனத்தைக் கைப்பற்றுவதுடன் தொடர்புடையது. அரேபியர்களால் குடியிருந்த பாலஸ்தீனம் இரண்டாம் உலகப்போருக்கு முன் பிரிட்டனின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. இதில் யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லீம்களின் புனித நகரமாகிய ஜெருசலேமும் இருந்தது.

யூதர்கள், பண்டைய காலத்தில் நாடு கடத்தப்பட்டு தலைமறைவாக வாழ்ந்த பகுதியான பாலஸ்தீனத்தை தங்களுக்கென உறுதியளிக்கப்பட்ட நிலம் எனக் கருதினர்.அவர்கள் பின்னர் ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்கும் தள்ளப்பட்டனர். ஐரோப்பாவில், கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதற்கு யூதர்களே காரணம் என்று கருதுவதால், அவர்கள் அங்கு அடிக்கடி துன்புறுத்தப்படும் சமூகமாக இருந்தனர். ஜெர்மனியில் நாசிக்களின் கீழ் ஐரோப்பாவின் மில்லியன் கணக்கான யூதர்கள் சிறையிலடைக்கப்பட்டும் கொல்லப்பட்டும் வந்ததால் இந்த சச்சரவு ஜெர்மனியில் முக்கிய இடத்தை பிடித்தது.

உலகெங்கிலும் உள்ள யூதர்களை ஒன்றுபடுத்தவும் பாலஸ்தீனத்தை தங்களின் தாயகம் என உரிமை கொண்டாடவும் யூதர்களுக்கு தனி மாகாணம் அமைப்பதற்கும் யூதர்களிடையே ஜியான்களின் இயக்கம் (Zionist Movement) என்னும் இயக்கம் வளர்ச்சியடைந்தது.1945க்குப் பிறகு இக்கோரிக்கைக்கு மேற்கத்திய அரசுகள் ஆதரவு தெரிவித்தன. இருப்பினும் பாலஸ்தீனர்கள் (பெரும்பான்மையான மக்கள் அரேபிய முஸ்லீம்களாவர்) ஏற்கனவே அங்கு வாழ்ந்து வந்ததால் அது பிரச்சனைக்குரிய இடமாக மாறியது.

மத்திய கிழக்கு நாடுகளில் குறிப்பாக அரேபிய தீபகற்பத்தில் பேரளவில் எண்ணெய் இருப்புகள் கண்டுபிடிக்கப்பட்டவுடன் பிரச்சனை மேலும் சிக்கலாக மாறியது. அமெரிக்காவும் ரஷ்யாவும் இப்பகுதியை தங்கள் செல்வாக்கின் கீழ்கொண்டு வர விரும்பியதுடன் மற்ற எந்த ஒரு நாட்டையும் அதன் ஆதிக்கத்தைச் செலுத்த அனுமதிக்க வில்லை.

1947ல் இயற்றப்பட்ட ஐ.நா.வின் தீர்மானத்தின்படி பாலஸ்தீனம் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டது- அரேபிய மாகாணம் மற்றும் யூதர்களின் மாகாணம் 1948ல் ஆங்கிலேயர்கள் பாலஸ்தீனத்திலிருந்து தங்கள் படைகளை திரும்பப்பெற்றுக் கொள்ளப்பட்டு யூதர்களுக்காக இஸ்ரேல் உருவாக்கப்பட்டது. அரேபியர்கள் இஸ்ரேலை ஒரு சட்டப்பூர்வமான மாகாணமாக ஏற்க மறுத்தனர். இஸ்ரேல் அரசு மேற்கொண்ட கொள்கைள் கசப்புணர்வை அதிகரிக்கச் செய்தது. அரேபியர் தங்களின் இல்லங்களையும் சொத்துக்களையும் விட்டுச்செல்லும்படி வற்புறுத்தப்பட்டதால் அவர்கள் பிற அரேபிய மாகாணங்களில் அகதிகளாக அடைக்கலம் புக வேண்டியிருந்தது.

எகிப்தின் தலைவரான கமால் அப்துல் நாசர் (1918-1970) அரேபியர்களை ஒன்றுபடுத்தும் முயற்சியை மேற்கொண்டார். அவர் இஸ்ரேலின் பொது இடங்களில் குண்டுகளை வெடிக்கச் செய்யும் ஃபிடாயீன்களை (தற்கொலைப் படை) உருவாக்கினார்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

வரைபடம் 2: பாலஸ்தீன நில இழப்பு 1947 முதல் இன்று வரை




அவர் பிரிட்டன் மற்றும் பிரான்சை எதிர்த்து ஆக்ரமிப்புக் கொள்கைகளைக் கையாண்டார். சூயஸ் கால்வாய் பகுதியிலிருந்து பிரிட்டன் தனது படைகளை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார். அமெரிக்க ஐக்கிய நாடுகள் எகிப்திற்கு அஸ்வான் அணைகட்ட உதவி செய்ய மறுத்துவிட்டது. எகிப்தின் மேற்கு நாடுகளை எதிர்க்கும் போராட்டத்திற்கு ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் வழங்கிய ரஷ்யாவின் ஆதரவுடன் நாசர், சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கினார்.

1956ல் இஸ்ரேல் மேற்கத்திய நாடுகளின் ஆதரவுடன் எகிப்தைத் தாக்கியது. அமெரிக்காவும் ரஷ்யாவும் போரை முடிவுக்குக்கொண்டு வரவும் துப்பாக்கிச் சூட்டை நிறுத்தவும் கோரிக்கை விடுத்தன. இஸ்ரேல் தனது இராணுவத்தை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. தற்போது 1967ல் அரேபியர்கள் மீண்டும் ஒருமுறை இஸ்ரேலைத் தாக்கினர். அப்போது இஸ்ரேல் தன் பாதுகாப்பிற்கு திருப்பித்தாக்குவதே சிறந்த முறை என்று முடிவு செய்து எகிப்தைத் தாக்கி அதன் முழு விமானப் படையையும் அழித்து விட்டது. அதோடு மட்டுமின்றி காஸா, கோலன் ஹெய்ட்ஸ் மற்றும் 'மேற்கு கரை' என்னும் மாகாணங்களையும் கைப்பற்றியது. ஐ.நா. தீர்மானம் இயற்றியிருந்தாலும் இஸ்ரேல் தான் கைப்பற்றிய மாகாணங்களைத் திருப்பித்தர மறுத்தது. இந்த கைப்பற்றப்பட்ட மாகாணங்கள் இரு நாடுகளுக்கிடையே எல்லா சச்சரவைத் தடுக்கும் காவல் பகுதிகளாக செயலாற்றும் என இஸ்ரேல் நம்பியது அந்தப்போர் அரேபியர்களுக்கு ஒரு சீர்கேடாக இருந்தது.

இதற்குகிடையில் ஜோர்டானில் 1964ல் பாலஸ்தீன விடுதலைக் கழகம்(PLO)என்னும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இது பல்வேறு அரேபியப் பிரிவுகளை ஒன்று சேர்க்கும் ஒரு புதிய முயற்சியைக் கையாண்டது. தான் இழந்த நிலப்பகுதியை எந்த தீவிரவாதமும் இன்றி திரும்பப் பெறுவதே இதன் குறிக்கோள். பாலஸ்தீன விடுதலை அமைப்பு இருப்பினும் 1967ல் யாசர் அராபத் தலைமையின் கீழ் PLO அரேபிய அரசுகளை இஸ்ரேலைத் தாக்க கட்டாயப்படுத்தியது. எனினும் அரேபிய அரசுகள் மிகுந்த உற்சாகத்தைக் காட்ட வில்லை. எனவே அராபத்தை தலைமையாகக் கொண்ட PLOவின் ஒரு பிரிவு விமானங்களைக் கடத்துதல், 1972 செப்டம்பரில் முனிச் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் இஸ்ரேலிய ஒலிம்பிக் குழுவை பிணையாளிகளாக நிறுத்துதல் மற்றும் பல விளையாட்டு வீரர்களைக் கொல்லுதல் போன்ற தீவிரவாதத் தாக்குதல்களில் ஈடுபட்டது. இவற்றை இஸ்ரேல் தனது தாக்குதலை மேம்படுத்த பயன்படுத்திக் கொண்டதோடு இதற்கு முன் அளித்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்த மறுத்துவிட்டது.

பழி வாங்கும் மற்றும் எதிர் பழிவாங்குதல் விளைவால் இப்பகுதி தொடர்ந்து போரிடும் நிலையிலும் தீவிரவாதத் தாக்குதல் நடத்தும் நிலையிலும் இருந்து வந்தது. PLOவும் பல பரஸ்பர போராளிப்பிரிவுகளாக சிதறிவிட்டது. இறுதியில் அராபத் தீவிரவாதத்தை கைவிட்டு இஸ்ரேல் உருவாக்குவதை அங்கீகரித்து அமைதியான தீர்வுகளைக் காண ஒப்பு கொண்டார். நீண்டகாலப்போரை முடிவுக்குக் கொண்டுவர இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். பாலஸ்தீனர்களுக்கான தனி ஆட்சி குறித்து பல ஒப்பந்தங்களை செய்து கொள்ள முன் வந்தார்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இஸ்ரேல் மேற்கு கரையிலிருந்து தனது படைகளை திரும்பப் பெற்றுக் கொள்ள ஒப்புக் கொண்டதுடன் பாலஸ்தீனத்தின் அரேபியக் குடிமக்களுக்கு வாக்களிக்கும் உரிமையையும் வழங்க ஒப்புக் கொண்டது. இருப்பினும் இஸ்ரேல் தனது வாக்குறுதிகளை நடைமுறைப் படுத்தத் தவறியதால் இது தோல்வியடைந்தது. ஏதோ ஒரு சூழ்நிலையில் பாலஸ்தீனர்களை தொடர்ந்து தாக்கிக் கொண்டிருந்தது. பல நாடுகள் PLOவை ஒரு சட்டப்பூர்வமான பாலஸ்தீன அரசின் பிரநிதித்துவ அமைப்பு எனவும், யாசர் அராபத்தை அதன் தலைவராகவும் ஒப்புக் கொண்டன.அராபத் 2004 ஆம் ஆண்டு விஷமளித்துக் கொல்லப்பட்டதாக சந்தேகிக்கப்படுகிறது. பாலஸ்தீனர்கள் இன்னும் தங்கள் தாயகத்திற்காவும் அமைதிக்காகவும் நாடுகடத்தப்படுதல் மற்றும் போர்க்களம் போன்ற மிகவும் கடினமான நிலைகளின் கீழ் போராடி வருகின்றனர்.

- அரேபியர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையேயான பிரச்சனைகளுக்கு காரணங்கள் யாவை?
- பிரச்சனைகளின் போது பாலஸ்தீனர்களுக்கு எகிப்து ஏன் ஆதரவளித்தது?
- சில பாலஸ்தீனர்கள் ஏன் தீவிரவாத முறைகளைக் கையாண்டனர் என்று கருதுகிறாய்? அதன் விளைவு என்ன?
- அகதி முகாம்களிலும் தொடர்ந்து போர்களை சந்திக்கும் மற்றும் ஏழ்மையில் வாழும் பாலஸ்தீனர்களின் நிலைமைகளைக் கண்டறியவும்.

## மத்திய கிழக்கு நாடுகளில் தேசியவாத வளர்ச்சி :

இஸ்ரேலுக்கு அமெரிக்காவின் தொடர்ந்த ஆதரவும் பாலஸ்தீனர்களின் இழந்த நிலைமையும் அப்பகுதியில் அமெரிக்காவிற்கு எதிரான உணர்வை ஏற்படுத்தியது. அமெரிக்காவிற்கும் அதன் நேச நாடுகளுக்கும் எண்ணெய் வளங்கள் கிடைப்பதற்காக அமெரிக்கா மக்களாட்சியல்லாத அரசுகளையும் ஆதரித்ததால் அது இப்பகுதியில் பிரபலமற்றதாக மாறியது. மறுபுறம் மக்கள் எண்ணெய் வளங்கள் வாயிலாக வரும் வருவாய் பொதுமக்களின் நலனுக்காக பயன்பட வேண்டுமென்று விரும்பினர். 1968ல் ஈராக்கில் நடைபெற்ற இராணுவப்புரட்சியில் அரேபிய தேசியவாதம் மற்றும் சோஷியலிஸம் என்னும் இரண்டு முழக்கங்களுடன் சதாம் உசேன் ஆட்சிக்கு வந்தார். அவர்களின் கருத்துப்படி சோஷியலிஸம் என்பது எண்ணெய் வளங்கள் தேசியமயமாக்கப்படுதல் மற்றும் குடிமக்களின் நலன்களுக்கான நடவடிக்கைகளில் எண்ணெய் வருவாயை அரசு பயன்படுத்துதல் ஆகும். இதே போன்ற முன்னேற்ற ஏற்பாடுகள் 1969ல் லிபியாவிலும் நடந்தது.(இதைப்பற்றி ஒன்பதாம் வகுப்பில் 19ம் பாடத்தில் நீங்கள் கற்றிருப்பீர்கள்). இந்த ஆட்சிகள் ஒரு ஆட்சியாளர் அல்லது சிறு குழுவின் மிகவும் எதேச்சதிகார மற்றும் சர்வாதிகார ஆட்சியுடன் நலக்கொள்கைகளை இணைத்து செய்யப்பட்டன. அவர்கள் தங்களுக்கு எதிரான எந்த எதிர்ப்பு அல்லது மக்களாட்சி எதிர்ப்பு கருத்துக்களை அனுமதிக்கவில்லை. அமெரிக்காவிற்கு எதிரான படைகளும், அமெரிக்க ஒத்துழைப்பு தேசியவாதப் படைகளும் சொத்து மற்றும் வாய்ப்புகளின் சமத்துவப் பகிர்வு என்னும் கருத்துக்கு மாறாக அந்த நாடுகளில் மதத் தீவிரவாதக் கொள்கைகளை நிறுவும் எண்ணத்தை வளர்த்தது. ஈரானில் 1979ல் நடந்த ஒரு புரட்சியில் ஈரானின் பழைய அரசர் (அமெரிக்காவால் ஆதரிக்கப்பட்டவர்) நீக்கப்பட்டு ஷியா இஸ்லாமிய மதகுருக்களையும் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களையும், இணைத்து கட்டுப்படுத்தும் ஒரு புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டது.

சோவியத் ரஷ்யா படைகள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் ஆப்கானிஸ்தானின் ஆட்சியை தலிபான்கள் கைப்பற்றி இதேபோன்ற ஒரு தீவிரவாத இஸ்லாமிய அரசை ஏற்படுத்தினர். இந்த அரசுகள் அனைத்து மக்களையும் மத நூல்களில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளை கண்டிப்பாக பின்பற்றும் படி கட்டாயப்படுத்த முயன்றன. பல சமயங்களில் இதன் பொருள் அடிப்படை சுதந்திரத்தையும் மற்றும் பெண்களுக்கும் மத சிறுபான்மையினருக்கும் சமத்துவ வாய்ப்பு போன்றவற்றை மறுப்பதாக இருந்தது.

இருபத்தொன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரேபியர்களிடையே மனநிறைவின்மை வளர்ந்து மத தீவிரவாதம் வளர வழி வகுத்தது. சில அரபு



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

தீவிரவாதிகள் அமெரிக்காவில் இரண்டு விமானங்களைக் கடத்தினர் மற்றும் நியூயார்க்கிலுள்ள உலக வர்த்தக மையத்தை விமானத்தைக் கொண்டு மோதவிட்டு ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றனர். இது தலிபானுக்கு எதிரான போருக்கும் இறுதியில் ஈராக்கிற்கு எதிரான போருக்கும் வழிவகுத்தது. செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகளிலிருந்து இதற்கு தொடர்பான அண்மைகால நிகழ்வுகளைப் பற்றிய பல கருத்துக்களைக் கண்டறியவும்.

- அரபு சோஷியலிச தேசிய வாதத்திற்கும் மத தேசியவாதத்திற்குமிடையே உள்ள ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகள் யாவை?
- மதவாத அரசுகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள தலிபானின் கட்டுப்பாட்டின் கீழ் ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் வளர்ச்சியைப்பற்றி மேலும் பல கருத்துக்களை கண்டறியவும்.

## அமைதி இயக்கங்கள், USSR ன் வீழ்ச்சி மற்றும் பனிப்போரின் முடிவு:

காலப் போக்கில் பொதுமக்கள் USSR யும் அமெரிக்காவையும் அவர்களின் ஆயுதக் குவிப்பு போட்டியை குறைத்துக் கொள்ளவும் அணுஆயுதக்கிடங்குகளை அழிக்கவும் பெருமளவில் வற்புத்தினர். இந்நூலின் பிற்பகுதியில் இதைப்பற்றி நீங்கள் மேலும் கற்க உள்ளீர்கள். இது அவர்களை அணுஆயுதங்களை போட்டியிட்டு குவிப்பதை ஒருவருக்கொருவர் குறைப்பதையும் இறுதியாக 1985 முதல் 1991 வரை அணு ஆயுதப் பரிசோதனைகளை தடை செய்யவும் பேச்சுவார்த்தைகள் நடத்த வலியுறுத்தியது.




படம் 19.7 : கிழக்கு மற்றும் மேற்கு ஜெர்மனியை பிரித்த பெர்லின் சுவர் தகர்க்கப்படுதல்

USSRல் மிகைல் கோர்பச்சேவ் ஆட்சிக்கு வந்ததும் இது பெரும்பாலும் சாத்தியமானது. அவர் USSR ன் கொள்கைகளை பெருமளவில் வெளிப்படையாக்குவதன் மூலம் அவற்றை மாற்ற முயற்சி செய்து புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வந்தார். இரக்ககுணம் நிறைந்த அவர், அவர்களின் பொருளாதார புணரமைப்பிற்காகவும் மேற்கு நாடுகளுடன் ஆரோக்கியமான உறவுகளை மேம்படுத்தவும், சில சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தார். அவரின் வெளிப்படையான ஆட்சியால் அறிமுகப்படுத்தப்பட்ட சமூக மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் 'Glasnost' என்றும் 'Perestroika' என்றும் வழங்கப்படுகின்றன. ஏறக்குறைய அதே சமயத்தில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் தீவிர பொருளாதார நெருக்கடி நிலைகளை சந்தித்தாலும் USSR அவற்றிற்கு உதவும் நிலையில்லை. அதன் விளைவாக மக்களின் இயக்கங்கள் சுதந்திரம், மக்களாட்சி மற்றும் கிழக்கு ஐரோப்பாவை சீர்படுத்த பொருளாதார சீர்திருத்தங்கள் ஆகியவற்றை கோரின. விரைவிலேயே நாட்டை நிர்வகிக்க முடியாத அரசாங்கங்கள் வீழ்ச்சியடைந்தன. ஜெர்மனியின் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளை பிரிக்கும் சுவர், ஜெர்மனியின் மீது USSR ன் ஆதிக்கம் போன்றவை இந்நிலைகளை நன்கு வெளிப்படுத்துகிறது..

USSR லேயே 1991ல் கோர்பச்சேவை பதவி நீக்கம் செய்ய கம்யூனிஸத்தின் தீவிர நம்பிக்கையுடையவர்கள் சட்டத்திற்குப் புறம்பாக புரட்சி செய்யத் தூண்டினர். இது தீய விளைவுகளை ஏற்படுத்தியது. போரிஸ் எல்ஸ்டின் ரஷ்ய பாராளுமன்றத்தின் சார்பில் எதிர்த்தார். அவர் இறுதியாக அதிபர் தேர்தலில் வெற்றிபெற்று USSR கலைக்கப்படுகிறது என அறிவித்தார். 1991 ல் முன்னாள் USSRன் பகுதி நாடுகள் தனி நாடுகளாயின. மேலும் பின்னர் அவற்றில் பல நாடுகள் ரஷ்யாவுடன் கூட்டுறவை ஏற்படுத்திக் கொண்டன.

USSRன் வீழ்ச்சிக்குப் பின் உலகஅரசியலில் ஒரு புதிய சகாப்தம் தொடங்கப்பட்டது. ஒற்றை ஆட்சிமுறை மற்றும் உலகமயமாதல் போன்ற இவற்றைக் குறித்து இந்த நூலில் தனிப்பாடத்தில் கற்கப் போகிறீர்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## இந்தியாவும் அதன் அண்டை நாடுகளும்:

- நாட்டு பிரிவினை மற்றும் ஒற்றை ஆட்சி முறை என்னும் சொற்களை விளக்கு

இரண்டு வல்லரசுகளுக்கிடையே தனிப்பட்ட இடத்தைப் பிடிக்கும் நாடு இந்தியா, அணிசேரா இயக்கத்தினை தொடங்கிய நாடாகும். இந்தியா தன்னுடைய வெளியுறவுக் கொள்கைகளை காந்தியக் கொள்கைகளான அமைதி மற்றும் அகிம்சைகளை அடிப்படையாகக் கொள்ள முயற்சி செய்தது. அமைதிக்கான தனது தீர்மானத்தை வலியுறுத்த ஜவஹர்லால் நேரு சீனாவுடன் தனது புகழ்மிக்க பஞ்சசீலக் கொள்கைகளை 1954ல் வடிவமைத்தார். அவை:

1. ஒருவருக்கொருவர் தமது இறையாண்மையையும், மாகாண ஒருமைப்பாட்டையும் மதித்தல்.
2. மற்ற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமலிருத்தல்.
3. ஒருவரையொருவர் புரிந்துகொள்வதன் வாயிலாக பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ளுதல் மற்றும் ஒருவர் மற்றொருவரின் நாட்டை ஆக்கிரமிப்பு செய்யாமலிருத்தல்.
4. கூட்டுறவை சாதிக்க முயற்சித்தல் மற்றும் பன்னாட்டு உறவுகளில் ஒருவரையொருவர் மதித்தல்.
5. சமாதான சகவாழ்வினை மேம்படுத்துதல்.

இவை மற்ற நாடுகளுடனான, குறிப்பாக அதன் அண்டை நாடுகளான சீனா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் அதைத் தொடர்ந்து பங்களாதேஷ் போன்ற நாடுகளுடனான இந்தியாவின் உறவுகளை தீர்மானம் செய்தன.

அண்டை நாடுகளுடன் இந்தியாவின் உறவு பற்றிய கீழ்காணும் குறிப்பினைப் படித்து இக்கொள்கைகளின் மீது எந்த அளவிற்கு அது ஆதாரப்பட்டுள்ளது என்பதைக் கவனி.

## சீனாவுடன் இந்தியத் தொடர்பு (சீன-இந்திய உறவுகள்)

நீண்டகாலப் போராட்டம் மற்றும் தீவிரப் புரட்சிக்குப்பின்,1949ல் சீனா ஒரு கம்யூனிஸ குடியரசாக மாறியது. சீனாவின் கம்யூனிஸ அரசை அங்கீகரித்த முதன்மையான நாடுகளில் இந்தியாவும் ஒன்று. முன்னர் ‘சியாங்கே ஷேக்’, அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்ட இருப்பிடமான ஐ.நா.பாதுகாப்புச் சபையின் நிலையான இருப்பிடத்தை சீனாவிற்கு வழங்க இந்தியா ஆதரவு தெரிவித்தது. இரு நாடுகளில் கொள்கை வேறுபாடுகள் இருந்தும் பாண்டூங் மாநாட்டில் பங்குகொள்ள சீனாவிற்கு இந்தியா உதவியது. இரு நாடுகளும் 1954ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் நாளன்று பஞ்சசீல ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இரு நாடுகளின் தலைவர்களும் ஒவ்வொருவரின் நாடுகளுக்குச் சென்றபோது பெருமளவில் நட்புறவுக் கூட்டங்கள் அவர்களை வாழ்த்தி வரவேற்றன. குடியேற்ற ஆட்சியின் போது ‘மக் மஹோான் கோடு’, இந்த இரு நாடுகளிடையே எல்லைக் கோடாக இருந்தது. நேரு அதை ஏற்றுக் கொண்டார். இந்தியாவிற்கும், சீனாவிற்கும் இடையே இருந்த திபெத் ஒரு தனித்த அமைதி காக்கும் பகுதியாக இருந்தது. ஆனால் திபெத் பழைய சீனப்பேரரசின் சார்ந்த மாகாணமாக இருந்தது என்னும் கோரிக்கையின் பேரில் சீனா திபெத்தை 1950ல் தன்னுடன் இணைத்துக் கொண்டது இது இரு நாடுகளுக்குமிடையே இருந்த அமைதிகாக்கும் தன்மையை நீக்கியது. திபெத்தில் புரட்சி ஏற்பட்டாலும் சீனர்களால் அது ஒடுக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான திபெத்தியர்கள் திபெத்தின் புத்தமதத் தலைவர் ‘தலாய் லாமா’வுடன் தப்பித்துச் சென்று இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். இந்தியா தலாய் லாமாவிற்கு அடைக்கலம் தந்தது. இது ஒரு சச்சரவை விளைவித்தது. மேலும் சீனா இந்தியாவை ஒரு எதிரியாக கருதியது. இதற்கும் முன்னர் இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையே ஒரு எல்லை தகராறு ஏற்பட்டிருந்தது. சீனா லடாக் பகுதியிலுள்ள அக்சை சின் பகுதியையும், அருணாச்சலப் பிரதேசத்தின் பெரும்பகுதியையும் கோரியது. பல்வேறு முயற்சிகளும் நீண்ட பேச்சுவார்த்தைகள் நடத்தியும் இன்று வரை இந்த சச்சரவுகள் தீர்க்கப்படவில்லை.

இந்தியாவுடன் செய்து கொண்ட அமைதி ஒப்பந்தங்களையும் மீறி சீனா, இந்தியாவின் மீது 1962 அக்டோபர் மாதத்தில் படையெடுத்தது.

இந்தியா இந்த திடீர் தாக்குதலை சமாளிக்க தன்னை தயார் படுத்திக் கொள்ளாததால் பெரும் இழப்புகளை சந்தித்தது. இறுதியாக சீனா ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தத்தை



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அறிவித்து தன்னுடைய போருக்கு முன்னிருந்த நிலைக்கு தனது படைகளை திரும்பப் பெற்றுக் கொண்டது. சாதாரண நிலைக்குத் திரும்ப பத்தாண்டு காலத்திற்கும் மேலாக ஆனது. முழு இராஜதந்திர உறவுகள் 1976ஆம் ஆண்டிலேயே மீட்பு நிலைக்கு வந்தன.

தற்போது இரு நாடுகளும் யுத்த தந்திரமும், பொருளாதார முன்னேற்றமும் கொண்டு விளங்கி வருவதால் அவை ஆசியாவின் வளரும் சக்திகளாக அங்கீகரிக்கப் படுகின்றன. இன்று இவ்விரு நாடுகளும் உலகின் மிகப்பெரிய பொருளாதார மற்றும் அரசியல் சக்திகளாக உருவாக வேண்டும் என்னும் பேராவலைக் கொண்டுள்ளன. எனவே ஒன்றையொன்று பொருளாதார மற்றும் அரசியல் போட்டியாளர்களாக தங்களைக் கருதுகின்றன. எல்லைகளில் அவ்வப்போது முரண்பாடான செயல்கள் இருப்பினும் இரு நாடுகளும் அமைதியும், சலனமற்ற சாந்த நிலையும் நிலைநிறுவதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டுவருகின்றன.

- தலாய் லாமாவிற்கும் அவரது சீடர்களுக்கும் இந்தியா புகலிடமளித்தது சரி என்று நீ கருதுகிறாயா?
- சீனா திபெத்தை கட்டுப்படுத்த விரும்புவது சரி என்று நீ கருதுகிறாயா?
- இரு நாடுகளும் தங்களின் எல்லைகளைப் பற்றிய கடந்த கால சச்சரவுகளை மறந்து பொருள் மிகுந்த கூட்டுறவு மற்றும் நட்புறவுகள் எந்த அளவிற்கு வளர்க்கும் என்று நீ கருதுகிறாய்.

## பாகிஸ்தானுடன் இந்தியாவின் உறவு :

முன்னாள் பிரிட்டீஷ் இந்தியா பிரிக்கப்பட்டதால் இந்தியா மற்றும் பாகிஸ்தான் என்னும் தனிப்பட்ட சுதந்திர நாடுகளாயின என்று முன் பாடத்தில் நாம் கண்டோம். பிரிவினைக்கு பின் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையேயான சச்சரவுகள் இடைவிடாதவைகளாய் மாறியது. இரு நாடுகளுக்கிடையே பிரச்சினைக்குரிய இடமாக காஷ்மீர் உள்ளது.

காஷ்மீருக்கான முதல் போர் இரு நாடுகளுக்கிடையே 1947-48 ல் நடந்தது. ஆனால் பிரச்சனை தீர்க்கப்படவில்லை. இப்போர் காஷ்மீரை இரண்டு பகுதிகளாக்கியது. பாகிஸ்தானால் ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீர் மற்றும் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டால் பிரிக்கப்பட்ட இந்தியப் பகுதி.

1965ல் லால்பகதூர் சாஸ்திரி பிரதமராக இருந்த போது பாகிஸ்தான் அயூப்கான் என்னும் இராணுவத் தளபதியின் சர்வாதிகாரத்தின் கீழ் இருந்தது. காஷ்மீரை விடுதலை செய்கிறோம் என்னும் பெயரில் அயூப்கான் அங்கு ஒரு புரட்சியை உருவாக்கும் எண்ணத்துடன் இந்தியாவின் மீது படையெடுத்தார். இருப்பினும் காஷ்மீர் மக்கள் இதற்கு செவி சாய்க்காமல் போர் முயற்சிகளின் போது இந்திய மாநிலத்துடன் இணைந்தனர். அப்போது இந்தியா லாகூரை குறிவைத்து போரைத் தொடங்கி பதிலடி கொடுத்ததால் பாகிஸ்தான் காஷ்மீர் போர் முனையிலிருந்து தனது படைகளை பின்வாங்கிக் கொள்வதற்கு இது வற்புறுத்தலாய் அமைந்தது.

ஐ.நா.பொதுச் செயலாளரான ஊ தாண்ட் இரு நாடுகளையும் போரை

கோட்டு வரைபடம் 2 : இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் இராணுவச் செலவுகள்




SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## மதமும் போரும்

போரின் முடிவில் நடந்த ஒரு ஊர்வலத்தில் இந்துக்களை எதிர்த்து முஸ்லீம்கள் நடத்தும் போர் என்று கூறி போரில் மதச் சின்னங்களை பயன்படுத்த பாகிஸ்தான் முயன்றதை லால் பகதூர் சாஸ்திரி வன்மையாக கண்டித்தார். இந்தியா ஒரு மதசார்பற்ற நாடு என்று அவர் பெருமையுடன் குறிப்பிட்டார்.

“எங்கள் நாட்டின் சிறப்பம்சம் என்னவென்றால் இங்கு இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பாரசீகர்கள் மற்றும் பிற அனைத்து மதங்களைச் சேர்ந்த மக்களும் மசூதிகளும், குருத்வாரங்களும், மாதா கோவில்களும் உள்ளன. ஆனால் நாங்கள் இதை அரசியலுக்குக் கொண்டுவரமாட்டோம். இதுவே இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்குமிடையே உள்ள வேற்றுமை. பாகிஸ்தான் தன்னை ஒரு இஸ்லாமிய அரசு என்று அறிவித்துள்ளது. மதத்தை ஒரு அரசியல் காரணியாக பயன்படுத்தியுள்ளது. ஆனால் இந்தியர்களாகிய நாம் எந்த ஒரு மதத்தையும் பின்பற்றலாம். நாம் விரும்பும் எந்த ஒரு வழிமுறையிலாவது கடவுளை வழிபடலாம். அரசியலைப் பொறுத்தவரை நாம் ஒவ்வொருவரும் மற்றவரைப் போல இந்தியரே…”, என்று கூறினார்.

நிறுத்திக் கொள்ள ஒப்புக் கொள்ளும்படி வலியுறுத்தினார். நிறுத்தத்திற்கு பிறகு 1966ல் ரஷ்யாவில் உள்ள தாஷ்கண்டில் இரு நாடுகளுக்கிடையே இரு பிரதமர்களுக்கிடையே ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

1970 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பாகிஸ்தான் மிகப்பெரிய உள்நாட்டு நெருக்கடி நிலையை எதிர்கொண்டது. பாகிஸ்தானின் இராணுவ சர்வாதிகாரியான தளபதி யாஷ்யா கான் மக்களாட்சி அரசை ஏற்படுத்துவதாக வாக்குறுதியளித்து தேர்தல் நடத்த ஆணை பிறப்பித்தார். தேர்தல் முடிவுகள்– ஜீல்பிக்கர் அலி பூட்டோ மேற்கு, அவாமி லீக்கிற்குத் தலைமைவகித்த ஷேக் முஜிபர் ரஹ்மான் கிழக்கு பாகிஸ்தானிலும் வென்றனர், பாகிஸ்தான் அரசு இம்முடிவுகளை ஏற்க மறுத்தது; அவாமி லீக்கின் கோரிக்கையான கிழக்கு பாகிஸ்தானின் பேரளவு தன்னாட்சி உரிமையைக் கோருவதையும் மறுத்தது. மாறாக அவர்கள் ஷேக் முஜிபர் ரஹ்மானைக் கைது செய்தனர் மற்றும் அச்சுறுத்தும் ஆட்சியை கட்டவிழ்த்து விட்டனர். கிழக்கு பாகிஸ்தானிலிருந்து அகதிகள் பெருமளவில் வந்து குவிதலை இந்தியா எதிர் கொண்டது முஜிபர் ரஹ்மானின் ஆதரவாளர்கள் “முக்கி பாஹினி” என்னும் வடிவில் சுதந்திர போராட்டத்தைத் தொடங்கினர். இந்தியாவும் அதன் பிரதமரான இந்திரா காந்தியின் தலைமையில் அதற்கு ஆதரவளிக்கத் தொடங்கியது. அதற்காக பன்னாட்டு ஆதரவையும் பெற முயன்றது. இந்தியாவிற்கு USSR ஆதரவு வழங்க உறுதியளித்ததால் அதனுடன் இந்தியா ஒரு நட்புறவு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டது.

1971 ஆம் ஆண்டு டிசம்பரில் பாகிஸ்தானுடன் முழுமையான அளவில் போர் ஏற்பட்டது. கிழக்கு பாகிஸ்தான் சுதந்திரமடைந்து பங்களாதேஷ் உருவாவதற்கு வழி வகுக்கப்பட்டு இந்தியா போர் நிறுத்தத்தை அறிவித்த பின்னர் இப்போர் முடிவுக்கு வந்தது. பிறகு ஜீல்பிக்கர் அலிபூட்டோ மற்றும் பிரதமர் இந்திராகாந்தி ஆகியோரின் தலைமையின் கீழ் இந்த நாடுகளுக்கிடையே சிம்லா ஒப்பந்தம் கையெழுத்தானது.

1971ஆம் ஆண்டிலிருந்து வெளிப்படையான போர் ஏதும் நடைபெறவில்லை ஆனால் எண்ணற்ற எல்லை தகராறுகளும் போர்களும் எல்லைகளில் தங்களின் ஆதிக்கத்திற்காக நடந்துவருகிறது. நீங்கள் கார்கில் போரைப் பற்றி கேள்வி பட்டிருப்பீர்கள். அப்போரில் இந்திய இராணுவத்திற்கு எதிரான தீவிரவாதிகள் பாகிஸ்தான் இராணுவத்தின் உதவியுடன் இந்தியாவின் நிலப்பரப்பை ஆக்கிரமித்துக் கொண்டதால் 1999ல் ஒரு பெரும் இராணுவ நடவடிக்கை மூலம் அவர்களை விலக்கப்பட வேண்டியிருந்தது.

பாகிஸ்தான் கடந்த பல ஆண்டுகளாக பஞ்சாப் மற்றும் ஜம்மு காஷ்மீர் போன்ற இந்திய மாநில எல்லைகளில் பிரிவினைவாத இயக்கங்களுக்கு மட்டுமின்றி மதவாத தீவிரவாதிகளுக்கு சிறந்த பயிற்சி அளித்து அவர்களை இந்தியாவில் தொல்லைகளை உருவாக்கும் எண்ணத்துடன் அனுப்புகிறது என்று இந்தியா பாகிஸ்தானின் மீது அவ்வப்போது குற்றம் சுமத்தி வருகிறது. இதற்கு பதிலளிக்கும் விதத்தில் பாகிஸ்தானும் இந்தியா அதனை நிலைகுலையச் செய்ய முயற்சிப்பதாகவும் இராணுவ நடவடிக்கை மற்றும் அணுஆயுதக்குவிப்பு மற்றும் ஏவுகணைகளை திரட்டுவதன் மூலம் அச்சுறுத்தி வருவதாக இந்தியாவின் மீது பழிசுமத்துகிறது. இது இரு நாடுகளையும் தங்களின் பற்றாக்குறை நிதிகளிலேயே ஒரு கணிசமான தொகையை தங்களுக்குள்ளேயே ஆயுதங்களை திரட்ட ஒருவரை எதிர்த்து மற்றொருவர் செலவழித்து வருகின்றனர்.

இரு நாடுகளும் அணு ஆயுதங்களைப் பெற்றுள்ளன. அது ஒரு எச்சரிக்கையாக செயல்படுவதாகவும் நம்புகின்றனர். அதே சமயம், நீண்ட காலமாக பகிர்ந்து கொள்ளப்பட்ட கலாச்சார மற்றும் நாகரீக வரலாற்றின் காரணமாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளின்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

மக்கள் வாணிகம், விளையாட்டுகள், திரைப்படங்கள், சுற்றுலா மற்றும் கலாச்சாரப் பரிமாற்றங்களுக்காக முயற்சி செய்து வருகின்றனர். பல இந்தியர்களும், பாகிஸ்தானியர்களும் நினைப்பது யாதெனில் இரு நாடுகளிலும் மதசார்பின்மை, மக்களாட்சி முறை மற்றும் சுதந்திரம் ஆகியவை இரு நாட்டு மக்களிடையேயும் ஒரு பெரும் புரிந்துகொள்ளுதலையும், கூட்டுறவையும் சாத்தியமாக்கும் மற்றும் இரு நாடுகளுக்கிடையே சச்சரவுகளை வளர்க்க முயற்சிப்பது இந்த கொள்கைகளுக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதாகும்.

- இரு நாடுகளுக்கிடையே நீடித்த அமைதியை உருவாக்க இந்தியாவும், பாகிஸ்தானும் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நீ கருதுகிறாய்?
- இரு நாடுகளின் முன்னேற்றத்திற்கும், இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கு மிடையே அமைதி ஏன் தேவை ?

### பங்களாதேஷ் உடன் இந்தியாவின் உறவு :

1971 ல் இந்தியப் படைகளின் உதவியால் பங்களாதேஷ் பாகிஸ்தானின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டது. அது விடுதலையடைந்தவுடன் இந்தியாவுடனான 25 ஆண்டுகால ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இருப்பினும் கங்கை மற்றும் பிரம்மபுத்திரா நதிநீரைப் பகிர்ந்து கொள்வது போன்ற பல கருத்துகளில் அவை வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. இந்தியாவும் பேரளவில் சட்டத்திற்குப் புறம்பாக பங்களாதேசத்தினர் இந்தியாவிற்குள் குடியேறுவதை எதிர்த்தது. பங்களாதேஷ் அரசாங்க சட்டத்திற்குப் புறம்பான ஊடுருவலைத்தடுக்க இந்தியாவால் அமைக்கப்படும் எல்லை வேலிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறது. இப்பகுதியில் இந்தியா பெரிய அதிகாரம் கொண்ட தலைவராக நடந்துக் கொள்கிறது என அது கருதுகிறது.

இவ்வளவு வேறுபாடுகள் இருப்பினும், இரு நாடுகளும் பல முனைகளில் குறிப்பாக பொருளாதார முனையில் ஒத்துழைத்துக் கொள்கின்றன. மியான்மர் வழியாக தென்ஆசியாவை இணைக்கும் கிழக்குக் கொள்கையில் இந்தியப் பார்வையில் ஒரு ஒருங்கிணைந்த பகுதியே பங்களாதேஷ் ஆகும். பேரழிவு நிர்வாகத்தில் இரு நாடுகளுக்கும் கூட்டுறவு உள்ளது. பங்களாதேஷின் விடுதலைக்காக தங்களின் சேவைகளையும் வழங்கிய பல இந்தியர்களுக்கு பங்களாதேஷ் விருதுகளை வழங்கியது.

### இலங்கையுடன் இந்தியாவின் உறவு:

இந்தியாவின் தெற்கு திசையில் இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள தீவு நாடு இலங்கை. இது 1948ல் விடுதலை பெற்றது. நினைவுக் கெட்டாத காலத்திலிருந்து இந்தியாவும் இலங்கையும் கலாச்சார, இன மற்றும் பொருளாதார உறவுகளைக் கொண்டுள்ளன. இரு நாடுகளும் ஏறக்குறைய ஒரே சமயத்தில் குடியேற்ற ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு இன்றுவரை மக்களாட்சி நாடுகளாகவே இருந்து வருகின்றன. இவ்விரு நாடுகளுக்கு இடையேயான உறவில் மிகவும் எரிச்சலூட்டத்தக்க விஷயம் என்னவென்றால் இலங்கை அரசால் தமிழ்பேசும் சிறுபான்மையின மக்கள் நடத்தப்படும் முறையேயாகும். இது பற்றி நீங்கள் 9ம் வகுப்பில் படித்துள்ளீர்கள் அப்பாடக்கருத்தை இங்கு நினைவுகூர்க.

இந்தியாவிற்குள் பேரளவில் தமிழ் அகதிகள் உட்புகுதல் ஒரு தனிப்பெரும் பிரச்சனையாக மாறியது. இது இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் இந்தியாவின் ஆக்கப்பூர்வமான தலையீட்டிற்கும், இலங்கைத்தீவில் அமைதியை நிலை நாட்ட இலங்கை அரசுடனும் தமிழ்ப் போராளிகள் ஒரு ஒப்பந்தத்திற்குள் புகுவதற்கும் வழிவகுத்தது. இலங்கையில் அமைதியை நிலைநாட்ட தனது இராணுவத்தை அனுப்பியது பற்றியும் அதுவே தமிழ்ப்போராளிகளால் முன்னாள் பிரதமரான இராஜீவ் காந்தியின் படுகொலைக்கும் காரணமாக அமைந்தது என்பதைப் பற்றியும் நீங்கள் முன்னரே படித்திருப்பீர்கள். இறுதியாக, இலங்கை அரசு தமிழ்ப் போராளிகள் மீது ஒட்டுமொத்த






*படம் 19.8 : (இடதுபுறம்) 1958ல் சீனாவிற்கு எதிராக மக்களின் எதிர்ப்பு சிவப்பு சீனா திபெத்தைக் கைவிட்டது என்று மக்கள் கூறுகின்றனர், (வலது புறம்) 1971ல் கிழக்கு பாகிஸ்தானின் அகதிகள் இந்தியாவிற்கு வருதல்*



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

- பல சிறிய நாடுகள், பெரிய அண்டை நாடுகள் பெருந்தலைவர்களாக செயல்படுகின்றன என்று நினைக்கின்றன. இதன் பொருள் என்னவென்று நீ கருதுகிறாய்?
- இந்தியா மற்றும் பங்களாதேஷின் வரைபடங்களைப் பார்த்து இரு நாடுகளுக்குமிடையே கூட்டுறவு மிகவும் இன்றியமையாத ஒன்று என்று காண

போரைத் தொடங்கி பேரளவில் இரத்தம் சிந்துவதற்கும் மனித உரிமைகளை மீறப்படுவதற்கும் காரணமாக அமைந்தபோது இந்தியா, இலங்கை விவகாரத்தில் தலையிடுவதில்லை என்று முடிவு செய்தது. இது இறுதியாக இலங்கை அரசிற்கு அத்தீவில் போராளிகளின் சச்சரவை முடிவுக்குக் கொண்டு வர உதவியது.

- பங்களாதேஷிற்கு இந்தியாவின் ஆதரவைப்பற்றியும் இலங்கையில் அதன் பங்கினையும் ஒப்பிடு. சூழ்நிலைகள் இரு நாடுகளிலும் ஒரே மாதிரியாக இருந்தது அல்லது வேறுபட்டிருந்தது என்று நீ கருதுகிறாயா?

## முக்கியச் சொற்கள்

இராணுவ உறவுகள் பிரிதிநிதித்துவப்போர் ஆயுதப்போட்டி ஒற்றை ஆட்சிமுறை நாட்டு பிரிவினை குடியேற்ற ஆதிக்கத்திலிருந்து விடுபடுதல் அமைதி மறுத்து வாக்களிக்கும் உரிமை இனக்கலவரம் பஞ்சசீலக் கொள்கை.

## உனது கற்றலை மேம்படுத்துக

1. சரியான விடையைத் தேர்ந்தெடு. கீழ்காணும் கூற்றுகளில் பனிப்போரை பற்றிய தவறான கூற்று எது?(AS1)
   அ) அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் பகைமை
   ஆ) அமெரிக்காவும் ரஷ்யாவும் நேரடிப் போரில் ஈடுபட்டன..
   இ) ஆயுதம் குவிப்பு போட்டித் தொடங்குதல்.
   ஈ) இரண்டு வல்லரசுகளுக்குமிடையே கொள்கையளவிலானப் போர்.
2. கீழ்கண்ட மேற்கு ஆசிய நாடுகளில் பிரச்சனைகளில் ஈடுபடாத நாடு எது ?(AS1)
   அ) எகிப்து ஆ) இந்தோனேஷியா இ) பிரிட்டன் ஈ) இஸ்ரேல்
3. உலகப் போருக்குப் பின் உலகில் அதிகார மாற்றத்தின் தன்மை என்ன?(AS1)
4. உலகில் அமைதியை நிலைநாட்டுவதில் ஐ.நா.ஆற்றிய வெவ்வேறு பங்குகள் என்ன?(AS1)
5. மக்களாட்சிக் கொள்கையில் முடிவுகள் எடுப்பதில் சில நாடுகளுக்கு மட்டும் சிறப்பு அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்று நீ கருதுகிறாயா?(AS1)
6. இராணுவ உடன்படிக்கைகளால் வல்லரசுகள் எவ்வாறு நன்மை அடைந்தன?(AS1)
7. பனிப்போர், ஆயுதக்குவிப்பு போட்டியையும் ஆயுதக்கட்டுப் பாடுகளையும் எவ்வாறு உருவாக்கியது ?(AS1)
8. உலகின் பதற்ற நிலையின் மையமாக மேற்கு ஆசியா உருவானது ஏன்?(AS1)
9. 20 ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் உலகை ஆதிக்கம் செய்யும் ஒரே ஒரு ஒற்றை வல்லரசு இருக்கும். இச்சூழ்நிலையில் அணிசேரா இயக்கத்தின் பங்கு என்னவாக இருக்கும் என்று நீ கருதுகிறாய்?(AS1)
10. "இராணுவ உடன்படிக்கைச் சூழலில் மட்டுமின்றி பொருளாதாரச் சூழலிலும் அணிசேரா இயக்கம் உருவானது."எனும் கூற்றைப்பற்றி பதிலை நியாயப்படுத்து.(AS1)
11. கீழ்காணும் அம்சங்களுடன் இந்தியாவிற்கும் அதன் அண்டை நாடுகளுக்குமிடையேயான உறவுகளைக் காட்டும் அட்டவணையைத் தயாரிக்கவும். நாடுகளுக்கிடையேயான பிரச்சனைகள் போரின் நிகழ்வுகள், உதவி மற்றும் கூட்டுறவு நிகழ்வுகள்.(AS3)
12. "இனச் சச்சரவுகள் இலங்கையுடனான இந்தியாவின் உறவை பாதித்தது",இக்கூற்றை நியாயப்படுத்துக. (AS1)
13. கீழ்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறித்துக் காட்டுக.(AS5)
    (i) போலந்து (ii) U.S.S.R (iii) வியட்நாம் (iv) ஸ்பெயின்
    (v) இலத்தீன் அமெரிக்கா (vi) ஆப்கானிஸ்தான்
14. பக்கம் 287ல் உள்ள கோட்டு வரைபடத்தை பரிசீ-த்து கீழ்காணும் வினாக்களுக்கு விடையளி.(AS3) (i) எந்த நாட்டின் ராணுவச் செலவு அதிகமாக உள்ளது?
    (ii) இரண்டு நாடுகளின் ராணுவச் செலவுகள், அவற்றின் யின் சதவீதத்தில் நீங்கள் பரிசீ-த்தது யாது?
15. பக்கம் 284ல் கடைசி பத்தியை படித்து உன் கருத்தை எழுதுக.(AS2)



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்
20
# தற்கால சமூக இயக்கங்கள்

மக்கள் அதிக எண்ணிக்கையில் பங்கேற்கும் பல இயக்கங்களை நீங்கள் கண்டிருப்பீர்கள், ஒரு பிரச்சனையை தேர்ந்தெடுத்துக்கொண்டு, அதில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்துடன், இந்த இயக்கத்தை துவங்குகின்றனர். அப்படிப்பட்ட இயக்கங்களில் நீங்கள் பங்கேற்று இருக்கலாம். செய்தி தாளில் படித்த அல்லது நீங்கள் பங்கேற்ற இயக்கங்களை நினைவுப் படுத்திக் கொள்ளுங்கள். பிரச்சனைகள் எப்படிப்பட்டவை? அவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் யார்? அவர்களின் கோரிக்கைகள் யாவை? இயக்கத்திற்கு தலைமை வகித்தது யார்? இயக்கத்தில் பங்கேற்குமாறு மக்களை எவ்வாறு ஊக்கப்படுத்தினர்? இயக்கம் எவ்வாறு நடந்தது? அது தன் நோக்கங்களை எந்த அளவிற்கு சாதித்தது?

**பின்னணி :**

இருபதாம் நூற்றாண்டின் முன் பாதியில், உலகில் போர்கள், புரட்சிகள், ஜெர்மனியில் பாசிஸத்தின் தோற்றம், சோவியத் நாட்டில் சமத்துவ கொள்கை, மேற்கத்திய தாரளக் கொள்கை, தேசிய விடுதலை போராட்டங்கள், போன்ற முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்தன. 1950 ஆம் ஆண்டின் பாதியில், இரண்டாம் உலகப் போர் முடிவடைந்தது. இந்தியா, சீனா, இந்தோனேஷியா, நைஜீயா, எகிப்து போன்ற குடியேற்ற மற்றும் பாதியளவு குடியேற்ற நாடுகள் சுதந்திரம் பெற்றன. இதனால் உலகில் புதுயுகம் தொடங்கியது. பெரும்பாலான நாடுகளில் பொருளாதார வளர்ச்சி, செல்வ செழிப்பின் யுகமாக இருந்தது. ஆனால், நெடுங்காலமாக சம உரிமைகளை பெற முடியாதவர்கள், தங்கள் உரிமைகளை கோரி வெளியே வந்தனர். இதனால் பல்வேறு நாடுகளில் அல்லது சமூகப் பிரிவுகளில் பதற்றம் நிலவிய காலமாக இருந்தது.

## 1960களில் சமூக உரிமைகள் மற்றும் இதர இயக்கங்கள் :



*படம்-20.1 எலிசபெத் எக்போர்டு என்னும் கறுப்பின சிறுமி 1957 செப்டம்பர்4ல் லிட்டில் ராஜ் பள்ளிக்குள் நுழைய முயன்றபோது வில்.சி.என்பவர் எடுத்த புகைப்படம்*

அமெரிக்க சமூக உரிமைகளுக்கான இயக்கம், இப்படிப்பட்ட இயக்கங்களில் முக்கியமானது. பள்ளிக்கூடங்களில் பேருந்து பயணங்களில், பொது இடங்களில் கறுப்பின மக்களை வேறுபடுத்தி நடத்தப்படுவதற்கு எதிராகவும், வேலைவாய்ப்புகள், வீட்டு வசதிகள், வாக்குரிமை போன்றவற்றில் வேறுபாடு காட்டப்படுவதற்கு எதிராக, ஆப்பிரிக்க-அமெரிக்கர்கள் அல்லது கறுப்பின அமெரிக்கர்களின் சமத்துவத்திற்காக இப்போராட்டம் நடத்தப்பட்டது. இப்போராட்டம் 1960களில் தீவிர நிலையை அடைந்தது. பெரிய அளவில் ஆர்பாட்டங்கள், ஊர்வலங்கள், ஒத்துழையாமை (வேறுபாடு காட்டும்) சட்டங்களுக்கு அமைதியான முறையில் மீறுதல்) அல்லது வேறுபாட்டுடன் கூடிய சேவைகள் (கறுப்பர், வெள்ளையர் என வகைப்படுத்தப்பட்ட பேருந்துகள், பயணத்தை தவிர்த்தல்) போன்றவற்றால், இந்த இயக்கம் அமைதியான முறையில் நடைபெற்றது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இது போன்ற முக்கியமான போராட்ட செயல்களில் முக்கியமானது, டாக்டர். மார்ட்டின் லூதர் கிங் தலைமையில் மாண்டகோமரியின் ஒரு வருட காலம் நீடித்து நடந்த, கறுப்பின மக்களுக்கு ஒதுக்கப்பட்ட பேருந்துகளை பகிஷ்கரித்தல் போராட்டமாகும். இதனால், பேருந்துகளை நடத்தி வந்த நிறுவனத்திற்கு பெருத்த இழப்பு ஏற்பட்டது. இறுதியில், 1956ஆம் ஆண்டில், பேருந்துகளில் வேறுபாடு காட்டப்படுவதை நீதிமன்றங்கள் தடைசெய்தன. அதே சமயத்தில், கறுப்பின வெள்ளையின குழந்தைகளுக்கு தனித்தனி பள்ளிக்கூடங்கள் நடத்தப்படுவதை எதிர்த்து வலுவான போராட்டம் நடந்து வந்தது. 1963 ஆம் ஆண்டு, ஆகஸ்டு 28ன் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாஷிங்டன் நகருக்கு ஊர்வலமாக சென்று, சமூக உரிமைகள் சட்டத்தை நிறைவேற்று மாறு கோரினர். வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டங்கள், முழுமையான, நியாயமான வேலை வாய்ப்பு, நல்ல வீட்டு வசதி, வாக்குரிமை வெள்ளை மற்றும் கறுப்பின குழந்தைகள் சேர்ந்து படிக்கும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வசதி போன்றவை இவர்களின் முக்கிய கோரிக்கைகள் ஆகும். இந்த ஊர்வலத்தில் டாக்டர். மார்ட்டின் லூதர் கிங் எனக்கு ஒரு கனவு உள்ளது என்ற அவரது வரலாற்று சிறப்பு மிக உரையாற்றினார். அதன் பிறகு, கறுப்பின மக்களுக்காக பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. நீண்ட போராட்டத்திற்கு பிறகு இவை பயனளிக்கும் வகையில் அமுலாக்கப்பட்டன. சீர்திருத்தங்கள் மற்றும் மாற்றங்கள் சாதித்திட அகிம்சை முறையில் உலகம் முழுவதும் போராட்டங்கள் நடத்த இந்த உரை ஊக்கமளித்தது.

*படம் 20.2 : மார்டீன் லூதர் கிங் உரையாற்றுகிறார்*



**எனக்கு ஒரு கனவு உள்ளது**

நூறு ஆண்டுகளுக்கு முன்பு விடுதலை பிரகடனத்தில் கையெழுத்திட்ட மாமனிதரின் நிழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அநீதி தீவில் எரிந்து கொண்டிருந்த கறுப்பு இன மக்களுக்கு இது ஒரு நம்பிக்கை ஒளியாக தென்பட்டது. ஆனால், நூறு ஆண்டுகளுக்கு பிறகும் கறுப்பின மக்கள் இன்னமும் சுதந்திரத்தை பெறவில்லை. நிறவேறுபாடு என்னும் சங்கிலிகளாகவும், வேறுபடுத்தி நடத்துதல் என்னும் விலங்குகளாலும், நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் கறுப்பின மக்கள் வாழ்க்கை ஊனமுற்று காணப்படுகிறது.

என்னுடைய நான்கு குழந்தைகள் என்றாவது ஒரு நாள் அவர்களின் தோலின் நிறத்தை கொண்டு அல்லாமல், அவர்களின் குணங்களை கொண்டு மதிப்பீடு செய்யும் நாட்டில் வாழ்வார்கள் என்ற ஒரு கனவு எனக்கு உள்ளது.... டாக்டர் மாட்டின் லூதர் கிங். ஜுனியர் டாக்டர். மார்டின் லூதர் கிங்கின் இந்த புகழ் பெற்ற உரையை படித்து,. அமெரிக்க சமுதாயத்திற்கு அவர் அளித்த இலட்சியங்கள் குறித்து, அவற்றை சாதிக்க அவர் திட்டமிட்டு கொண்ட திட்டங்கள் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

இந்த இயக்கம் வலுப்பெற்று வந்து கொண்டிருந்த சமயத்தில், பல்வேறு கருத்துக்கள் உருவாயின. அமைதியான முறையில் மக்கள் அனைவருக்கும் சமத்துவம் சாதித்திட முடியும் என்றும், அதற்கு தேவையான சட்டங்களை அரசாங்கம் இயற்றுமாறு செய்ய முடியும் என்றும், பல்வேறு மக்கள் டாக்டர். மார்டின் லூதர் கிங் கருத்துக்களுக்கு ஆதரவு அளித்தனர். ஆனால், மால்கம் எகஸ் மற்றும் வேறு சிலர் கறுப்பின மக்கள் வேறு தேசியத்தினர் என்றும், வெள்ளையின தேசிய மக்களின் ஆட்சியல் இருந்து சுதந்திரம் பெறுவதற்கு போராட வேண்டும் கருதினர். அதிகாரத்தை சாதித்திட ஆயுத சண்டை உட்பட எல்லா வழிமுறைகளையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் கருதினர்.

சமூக உரிமைகள் போராட்டத்தில் கறுப்பின பெண்கள் அதிக எண்ணிக்கையில் பங்கேற்றனர். ஆனால், இப்போராட்டத்தில் ஆண்களின் ஆதிக்கம் இருந்தது என்றும், தங்களை எவரும் கருத்தில் கொள்ளவில்லை என்றும் அவர்கள் கருதினர். புகழ் பெற்ற வாஷிங்டன் ஊர்வலத்தில் ஒரு பெண்ணைக் கூட உரையாற்ற அனுமதிக்கவில்லை. அவர்கள், பெண்களின் சமத்துவத்திற்காக போராட வேண்டும் என்றும் கருதினர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இந்த மாறுபட்ட கருத்துக்கள் அனைத்தும் சேர்ந்து நவீன அமெரிக்க வரலாற்றை செதுக்கிய சக்தி வாய்ந்த சமத்துவ போராட்டத்தை ஏற்படுத்த வழி வகுத்தன.

- சமூக உரிமைகள் இயக்கத்தின் கோரிக்கைகள் அடங்கிய பட்டியலை தயார் செய்திடு, அவற்றிற்கு நீங்கள் குறிப்பிடும் தீர்வுகளை எழுதுங்கள்.
- அமெரிக்கா தன்னை மக்களாட்சி நாடு என்று கூறிக்கொள்கிறது. ஆனால், சென்ற நூற்றாண்டின் இடைக்காலம் வரை சில பிரிவு மக்களை வேறுபடுத்தி வைத்திருந்தது. இந்தியாவில் மக்களாட்சி கருத்து எல்லோரையும் சேர்த்திருக்குமாறு இருக்க வேண்டுமானால் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை குறித்து விவாதியுங்கள்.
- ஒரு போராட்டத்தை நடத்தும் போது, வேறுபட்ட கருத்துக்கள் வெளிப்படுகின்றன? அவற்றிலுள்ள கருத்து வேறுபாடுகளை அடையாளம் காணுங்கள்.

### ஐக்கிய சோவியத் சோஷியலிஸ்டு குடியரசில் மனித உரிமைகளுக்கான இயக்கம் :

அந்நாட்களில், ஐக்கிய சோவியத் சோஷியலிஸ்டு குடியரசிலும், அதன் ஆதிக்கத்தில் இருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், சுதந்திரமான, பல கட்சி தேர்தலையும், அரசு கட்டுபாடு இல்லாத சுதந்திர செய்திதாள்கள், ஊடகங்கள் மற்றும் மக்கள் தங்களின் எண்ணங்களை வெளிப்படுத்தும் சுதந்திரம், இடம் பெயர்ந்து வாழும் சுதந்திரம் போன்றவற்றை அனுமதிக்கவில்லை. இந்த அரசாங்கங்கள், தங்களை கவிழ்க்கும் சூழ்ச்சிகள் குறித்து எப்பொழுதும் அச்சப்பட்டு கொண்டே இருந்தன. மக்களின் செயல்பாடுகள் மீது கட்டுப்பாடுகள் மற்றும் கண்காணிப்புகள் இருந்தன. இப்படிப்பட்ட கட்டுப்பாடுகளால் அலுப்படைந்த மக்கள், எண்ணங்களை வெளிப்படுத்தும் சுதந்திரம், இடம் பெயர்ந்து செல்லும் சுதந்திரம், சுதந்திர செய்தித்தாள்கள், போன்ற மனித உரிமைகளுக்காக, ஐக்கிய சோஷியலிச சோவியத் குடியரசு மற்றும் கிழக்கு ஐரோப்பாவிலும் மக்கள் பல்வேறு போராட்டங்களை மேற்கொண்டனர். ஹங்கேரி, செகஸ்லோவேகியா, போலந்து போன்ற நாடுகளில் மக்கள் தங்களை ஐக்கிய சோஷயலிச சோவியத் குடியரசின் கட்டுபாட்டில் இருந்து சுதந்திரத்தை பெற்றிடவும் போராடினர். இப்போராட்டங்களில் சிலவற்றிக்கு அமெரிக்கா, இங்கிலாந்தும் மற்றும் கம்யூனிஸ்டு கொள்கைக்கு எதிரான நாடுகளின் ஆதரவும் கிடைத்தன. இங்கிலாந்தும் மற்றும் கம்யூனிஸ்டு கொள்கைக்கு எதிரான நாடுகளின் ஆதரவும் கிடைத்தன. மனித உரிமைகளுக்காக தொடர்ந்து நடந்த இந்த இயக்கங்களில் பலவகையான நிகழ்வுகள் காணப்பட்டன. சில தோரனைகள் சாதாரண மக்களுக்கு மேலும் அதிக சுதந்திரத்தை கோரின. வேறுசில இந்நாடுகளில் இருந்த சோஷியலிச அமைப்பை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என முயற்சித்தனர். புகழ் பெற்ற எழுத்தாளர் அலெக்சாண்டர் சோல்ஜ் நித்ஸின் மற்றும் அணு சக்தி அறிவியலார் ஆண்ட்ரே சகரோவ் போன்றோர் இந்த இரண்டாவது நிகழ்ச்சிக்கு முக்கிய தலைவர்களாகவர். இவையும், வேறு பேராட்டங்களும் U.S.S.R-ல் புதிய தலைமை ஜனாதிபதி கோர்ப்சேவ் கீழ் உருவெடுக்க வழி வகுத்தன. அவர் மக்களுக்கு அதிகப்படியான சுதந்திரத்தை அளிப்பதற்காக கிளாஸ் னோஸ்ட் (Glasnost) எனப்படும் சீர்திருத்த முறையை துவக்கினார்.

- அமெரிக்கா மற்றும் ஐக்கிய சோஷியலிச சோவியத் குடியரசின் அரசியல் அமைப்பின் ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளை கண்டறியும், மக்களின் உரிமைகளுக்கு அவை எவ்வாறு பிரதிபலிக்கின்றன?

### அணு ஆயுத மற்றும் போர் எதிர்ப்பு போராட்டங்கள் :

1970கள் மற்றும் 1980கள் ஒரு புது வகையான போராட்டத்தினை கண்டன. இது போர் மற்றும் அணு ஆயுதங்களுக்கு எதிரான போராட்டமாகும். 1945 ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதத்தில் ஹீரோஷி=மா மற்றும் நாகசாக்கி நகரங்கள் மீது போடப்பட்ட அனுகுண்டு தாக்குதலை உலகமெல்லாம் கண்டது. இருப்பினும், அமெரிக்கா மற்றும் ஐக்கிய சோஷியலிச சோவியத் ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற வல்லரசு நாடுகள், இதர நாடுகள் அனு ஆயுதங்களை பயன்படுத்துவதை தடை செய்யும் என்ற நம்பிக்கையுடன், அனு ஆயுத இருப்புகளை அதிகரித்துக் கொண்டே சென்றன. அது அமெரிக்கா மற்றும் ஐக்கிய சோஷியலிச சோவியத் குடியரசு நாடுகளிடையே பனிப்போர், அமெரிக்கா வியட்நாம் இடையே யுத்தம், தீவிரமாக இருந்த காலமாகும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

மற்றொரு உலகப்போர் வெடிக்கும் என்னும் தொடர்ந்த அச்சத்தில் உலக நாடுகள் இருந்தன. உலகப்போர் ஏற்பட்டு, அனு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டால், பூமியின் மீது மனித இனம் முழுவதும் அழிந்துவிடும் என்று அனைத்து நாடுகளும் அஞ்சின. உலகமெங்கும் அறிவியல் அறிஞர்கள் மற்றும் சான்றோர்களும் அணு ஆயுத தடைக்காக போராட்ட குரல் எழுப்பினர். அமெரிக்கா மற்றும் ஐக்கிய சோஷியலிச சோவியத் குடியரசு நாடுகள் இரண்டும் வீணான ஆயுதப் போட்டிக்கு முடிவு கட்டி, அதற்கான ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்று கோரினர்.

வியட்நாம் யுத்தத்தில், அந்நாட்டைச் சேர்ந்த 8,00,000 ராணுவ வீரர்கள் மற்றும் 30,00,000 குடிமக்கள், அதிக எண்ணிக்கையில் கம்போடியார்கள் மற்றும் லாவோசியர்கள் கொல்லப்பட்டனர். அமெரிக்காவில் குடிமக்களின் உயிரிழப்பு ஏற்படவில்லை. ஆனால், அதிக எண்ணிக்கையில் ராணுவ வீரர்கள் இறந்தனர். அதையும் விட அதிக எண்ணிக்கையில் உடல் ஊனமுற்றனர். அமெரிக்கா, பிரான்ஸ் நாடுகளோடு ஒப்பிடுகையில், வியட்நாம் பரந்த காட்டுப்பரப்பை கொண்ட ஏழை நாடாகும். வியட்நாமியர்கள் யுத்தத்தின் போது கொரில்லா போர்முறையை பின்பற்றினர். அமெரிக்கா இரசாயன ஆயுதங்கள், குண்டுகள் போன்ற புதிய ஆயுதங்களை பயன்படுத்தி, கிராமங்களை அடியோடு அழித்தது.

அமெரிக்காவிற்கு எவ்விதத்திலும் ஆபத்தில்லாத, அப்பாவி மக்கள் மீது குண்டுகள், வீசுதல் எந்த அளவிற்கு நியாயமானது, என்று 1970களின் துவக்கத்தில், வியட்நாமில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த, அமெரிக்க ராணுவ வீரர்களின் மனதில் சந்தேகம் மேலோங்கியிருந்தது. அதே சமயத்தில், எங்கோ தொலைதூரத்தில் உள்ள வியட்நாமிற்கு யுத்தம் செய்ய அனுப்புவதற்கு விருப்பப்படாத அமெரிக்கர்கள் எண்ணிக்கையும் அதிகரித்து வந்தது. அத்துடன், வியட்நாம் போருக்கு எதிராக அமெரிக்கா முழுவதும் எதிர்ப்புகள் பொங்கி எழுந்தன.

### "நாங்கள் செல்ல மாட்டோம்"........

அமெரிக்க நாட்டில் உடல் உறுதி படைத்தவர்கள் அனைவரும் சிறிது காலம் ராணுவத்தில் பணியாற்ற வேண்டும் என்ற சட்டம் உள்ளது. வியட்நாம் போரின் போது ஆயிரக்கணக்கான குடிமக்கள் ராணுவத்தில் சேரும் வயது இருப்பினும், வியட்நாமில் போர் செய்ய மறுத்து சேரவில்லை. இந்த போர் மறுப்பு எதிர்ப்பு குறித்த செய்தி ஒன்றை இங்கு படித்திடுவோம். இது ஹார்வார்டு கிரிம்ஸன் என்ற செய்தித்தாளில் வெளியானது.

"இராணுவத்தில் சேரும் வயதுள்ள இளைஞர்களாகிய எங்களை அரசாங்கம் வியட்நாம் யுத்தத்திற்கு அனுப்பலாம். இந்த யுத்த வரலாற்றை இயல்பை நாங்கள் ஆய்வு செய்த நாங்கள் இப்போரில் பங்கேற்பது. எங்கள் ஆத்மாவிற்கு எதிரானது என்ற முடிவுக்கு வந்துள்ளோம். அதனால், அமெரிக்கா வியட்நாமில் போரை செய்யும் வரை நாங்கள் ராணுவ சேவையில் சேருவதற்கு (சட்டப்படி அனைவரும் அவ்வாறு செய்திட வேண்டும்) மறுக்க வேண்டும் என்ற உறுதியான முடிவை பிரகடனம் செய்கிறோம். இப்பிர கடனத்தில் ராணுவத்தில் சேரும் வயதுடை இளைஞர் களோடு ஆதரவு தெரிவித்து போருக்கு எங்களுகடைய எங்களுடைய தனிப்பட்ட, அறநெறிப்படியான மறுப்பை, பலமான அரசியல் எதிர்ப்பாக மாற்ற வேண்டும் என்று எண்ணுகிறோம்.

இவர்கள் தேசபக்தி இல்லாதவர்கள் என்று சிலர் அநியாயமான போரில் பங்கேற்காமல் இருப்பது ஏற்று கொள்ள கூடியதுதான் என்று வேறு சிலர் கருதினர். இவ்விரண்டு கண்ணோடத்தைக் குறித்து வகுப்பறையில் விவாதித்து உங்கள் கருத்தையும், இரு கண்ணோட்ட கருத்துக்களையும் எழுதுங்கள்.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இதனால், இறுதியாக அமெரிக்கா 1975ல் போரை நிறுத்தி விட்டு, வியட்நாமில் இருந்து வெளியேறியது.

வியட்நாம் யுத்தம் முடிவடைந்த பிறகு, அதிகமான நாடுகள் அணு ஆயுத இருப்புகளை போட்டி போட்டுக் கொண்டு அதிகரித்து கொள்ளும் போக்கு தீவரமடைந்தது. இந்த ஆயுதங்களை உற்பத்தி செய்யும் தொழிலகங்கள் (ராணுவ-தொழிற்துறை)

அரசாங்கங்கள் பொது மக்களின் மனதில் போர் பயத்தை உண்டாக்கி, அனு ஆயுதங்கள் மீது பெருமளவு செலவு செய்வதற்கு ஆதரவை பெற்றன. காலப்போக்கில், குறிப்பாக ஐரோப்பாவில், அதிக எண்ணிக்கையிலான மக்கள் போர் ஆர்வம், அதன் விளைவாக ஆயுத போட்டியினால், உலகம் முழுவதும் பாதுகாப்பாற்ற நிலை உருவாகும் என்றும், போரில் நேரிடையாக ஈடுபடாத நாடுகளையும் சேர்த்து எல்லா உலக நாடுகள் அனைத்தும் அழிவடையும்படியான மாபெரும் யுத்தம் நடைபெறும் என்றும், உணர்ந்து கொண்டனர். அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராக பெரிய அளவில் மக்கள் எதிர்ப்பு போராட்டங்கள் இடம் பெற்றன. உலகின் இதர நாடுகளுடன், அணு ஆயுத இருப்புகளை குறைப்பதற்கான, அமைதி பேச்சுவார்த்தை நடத்திட வேண்டி வற்புறுத்தினர்.

இந்த நெருக்கடி காரணமாக, ஆயுத போட்டியில் முக்கியமான போட்டியாளர்களான அமெரிக்கா மற்றும் ஐக்கிய சோவியத் சோஷியலிச குடியரசு, தங்கள் அணு ஆயுதங்களை குறைத்துக் கொள்ள, பேச்சு வார்த்தையை துவங்கின. இதனை திட்டரீதியான ஆயுத கட்டுப்பாட்டிற்கான பேச்சுவார்த்தை (Strategic Arms Limitation Talks) என்பர். ஆனால், இப்பேச்சு வார்த்தை வெற்றியடையவில்லை. இறுதியில் 1990 ஆம் ஆண்டு, இரு நாடுகளும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதனை திட்டரீதியான ஆயுத குறைப்பு உடன்படிக்கை (Strategic Arms Kimitation Talks) என்பர்.

மிகப்பெரிய, சிக்கலான ஆயுத கட்டுப்பாட்டு ஒப்பந்தம் இதுவாகும். இதன் இறுதிகட்ட அமுலாக்கம், 2001ஆம் ஆண்டில் நடைபெற்றபோது, அந்நாடுகளிடமிருந்து 80 சதவீத அனு ஆயுதங்களை நீக்கி விட்டனர். இந்த உடன்படிக்கை கையெழுத்தான சில ஆண்டுகளில் ஐக்கிய சோவியத் சோஷியலிச குடியரசு ரத்தானது. அதன் இடத்தில் ரஷ்யா நாடு உருவானது. இத்துடன் நீண்ட காலமாக நிலவிய பனிப்போருக்கு முடிவு ஏற்பட்டது. பெரும் அழிவை ஏற்படுத்தும் உலகப்போர் எப்போது ஏற்படுமோ என்ற அச்சம் நீங்கியது.

*படம் 20.3 வியட்நாம் போருக்கு எதிராக கண்டன போராட்டக்காரர்கள். பென்டகான் பகுதியில் காவல் காக்கும் ராணுவ வீரருக்கு ஒரு பூவை தருகிறார். இப்படங்களிலுள்ள எண்ணங்களை குறித்து விவாதியுங்கள்.*









Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஆனால், நாடுகளிடையே யுத்தங்கள் அல்லது வன்முறைகள் முடிவடையவில்லை என்பதை, கிழக்கு ஐரோப்பா, ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் மிகுந்த அழிவை ஏற்படுத்திய யுத்தங்கள் நமக்கு தெரியப்படுத்துகின்றன.

ஐக்கிய சோஷியலிச சோவியத் குடியரசின் இறுதி நிலையில் ஏசர்னோபில் என்னுமிடத்தில் இருந்த அனுமின் நிலையத்தில் பெரும் விபத்து ஏற்பட்டது. இதனால் செர்னோபில் பகுதியின் தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையில் இறந்து போயினர். அது மட்டுமல்ல, ஐரோப்பாவில் உள்ள பல்வேறு நாடுகள் மற்றும் பரந்த நிலப்பரப்புகள் அனுக்கதிர் வீச்சால் பாதிப்படைந்தன. இதிலிருந்து அனுசக்தியை ஆக்க, அமைதி பணிகளுக்கு போர்களுக்கு பயன்படுத்தும்போது உண்டாகும் ஆபத்துக்கள் குறித்து மக்களுக்கு தெரிய வந்தது. இதன் விளைவாக, போர் எதிர்ப்பு ஆர்பாட்டங்கள், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பதற்கான ஆர்பாட்டங்கள் கிளர்ந்தெழுந்தன.

- ஆயுத மயமாதல் குறித்து தெரிவிக்கப் பட்டுள்ள பல்வேறு வகையான கருத்துக்கள் யாவை?
- நட்புக்கான பரஸ்பர முறைகளை, சம்பந்தப்பட்ட அந்தந்த நாடுகளின் அரசாங்கங்கள் நிர்ணயிப்பதால் மட்டுமல்ல, பல்வேறு நாட்டு மக்கள் அவ்வபோது சந்தித்துக் கொள்ளும்போது, யுத்த வாய்ப்புகள் குறைவாக இருக்கும். இந்த கருத்தோடு நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா? உங்களுடைய பதிலுக்கு காரணங்களை கூறுங்கள்.
- அனுமின் நிலையங்களையும், சுற்றுப்புற மாசு உண்டாக்கும் தொழிற்சாலைகளையும் எங்கு அமைக்க வேண்டும்? என்ற முடிவுகளோடு சம்பந்தப்படாத நாடுகள் கூட சுற்றுப்புறச் சூழல் மாசடைதலின் பாதிப்பிற்கு எவ்வாறு உள்ளாகின்றன. என்பதை விவரியுங்கள். அப்படிப்பட்ட நிலைமைகளை நாம் எவ்வாறு எதிர் கொள்ள வேண்டும்?

## உலக மயமாதல், வாழ்விடங்கள் இழந்த மக்கள், சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்க நடந்த போராட்டங்கள்:

1990ஆம் ஆண்டிலிருந்து, உலகமயமாதல் மற்றும் புதிய தாராளமய கொள்கை என்னும் போக்குகளால் உண்டாகி வரும் உலகளாவிய பொருளாதார, அரசியல், மாற்றங்களால், எந்தவிதமான வசதிகளும் இல்லாத ஏழை மக்களின் வாழ்க்கை பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளன. பழங்குடி மக்கள், ஏழை விவசாயிகள், நிலமற்ற தொழிலாளிகள், பெண்கள், அமைப்பு சாரா துறைகளில் வேலை செய்யும் நகர ஏழைகள், தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளிகள், போன்றோர் எல்லோரையும் விட மோசமாக பாதிக்கப்பட்டனர். இப்படிப்பட்ட மக்களில் பெரும்பாலோருக்கு பள்ளிக் கல்வி, போதிய சத்துணவு, மருத்துவ வசதி கிடைப்பது இல்லை, இதன் காரணமாக, புது வேலை வாய்ப்புகள், மேலான ஊதியங்கள், சட்டப்பாதுகாப்பு, அரசியலமைப்பு சட்ட நிவாரண வசதிகள் போன்றவை அவர்களுக்கு பெறும் வாய்ப்புகள் இல்லை.

கடந்த சில புத்தாண்டுகளாக, வாணிப விவசாயிகள், சுரங்கத் தொழில், மேற்கொள்ளும் நிறுவனங்கள், அணை திட்டங்கள் போன்றவற்றால் பழங்குடி மக்கள், வாழ்விடங்கள் இழந்த மக்கள், துன்பங்களை எதிர்கொண்டு வாழ்கின்றனர். கனிப் பொருட்கள், அரிதான தாவரங்கள், விலங்குகள், நீர் முதலிய மதிப்புள்ள வளங்களை, பெரிய நிறுவனங்கள் கிராமப் புறங்களில் கண்டுபிடிப்பதால், பல தலைமுறைகளாக வாழ்ந்து வரும் பகுதிகளில் இருந்து சிதறடிக்கப்பட்டு வாழ வேண்டி உள்ளது. பழங்குடி மக்களின் கலாச்சாரம் அழிந்து வருகிறது. இதன் விளைவாக, அவர்கள் சமுதாயத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களாக மாறி விட்டனர். இது மட்டுமின்றி, முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளும் செயல்களால், இயற்கை வளங்களுக்கு தீவிரமான சேதம் ஏற்பட்டு வருகிறது. இதை கட்டுப்படுத்த சுற்றுப்புறச் சூழல் பாதுகாத்திட போராட்டங்கள் மேற்கொண்டனர். இந்த முன்னேற்ற சக்திகளின் அழிவை ஏற்படுத்தும். வன்முறை-செயல்களால், பாதிக்கப்பட்டு வாழ்இடங்களை இழந்த மக்களின் எதிர்ப்பு குரலோடு, போராட்ட அமைப்புகளும் இணைந்து செயல்படுகின்றன. இந்த போராட்டங்கள் மாறுபட்ட எதிர்கால இலட்சியத்தை கோருகின்றன.

### ஐரோப்பாவின் பசுமை அமைதி இயக்கம் :

அலாஸ்கா அருகில் பெருங்கடல் அடியில் 1971ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அனு பரிசோதனைகளுக்கு எதிராக இந்த போராட்டம் துவங்கியது. அணு பரிசோதனை நடந்த பகுதிக்கு, தங்கள் எதிர்ப்பை தெரிவிக்க, தன்னார்வ செயல்வீர்கள் ஒரு சிறு கப்பலில் சென்றனர்.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இச்சிறு கப்பலின் பெயர் 'கிரீன் பீஸ்' என்பதாகும். இறுதியில் அது போராட்டத்தின் பெயராக மாறியது. தற்போது இப்போராட்டம் நாற்பது நாடுகளில் பரவி உள்ளது. இதன் தலைமையகம் ஆம்ஸ்டர் டாம் (போலாந்து) நகரில் உள்ளது. இந்த அமைப்பு உலக அளவில் செயல்பட்டு வரும் மிகப் பெரும் தன்னார்வ சேவை அமைப்புகளில் ஒன்றாகும்.

சூரியனின் தீங்கு விளைவிக்கும் ஒளிக் கதிர்களை தடுத்து காத்திடும், காற்று மண்டலத்தில் உள்ள ஓசோன் அடுக்கு, மாசடைதலால் சேதமடைந்து வருகிறது என்பதை நில புத்தாண்டுகளாக அறிவியல் வல்லுநர்கள் கண்டுபிடித்துள்ளனர். சுற்றுப்புற மாசடைதால், பூமியின் சராசரி வெப்பநிலை படிப்படியாக அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக, துருவ மண்டலங்களில் உள்ள பனித்தொப்பி பகுதிகள் (அதிக அளவில் பனிக்கட்டியாக மாறிய தண்ணீர்) கரைந்து வருகின்றன. இப்பனிக்கட்டிகள் கரைந்து பெருங்கடல்களில் கலப்பதால், அவற்றின் நீர்மட்டம் உயர்ந்து வருகின்றது. கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள பங்களாதேஷ், இலங்கை மொரிஷியஸ் இந்தியா, இந்தோனேஷியா, போன்ற நாடுகளில் வாழும் பெருமளவிலான மக்கள் வெள்ளப்பெருக்கு, நிலப்பகுதிகள் மூழ்குதல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். உலகின் வெப்பநிலை அதிகரித்து கொண்டே செல்வதால், மழைப் பொழிவில் மாற்றங்கள் (அதிக மழை, அகால மழை, பஞ்சங்கள்) ஏற்படுவதால் பயிர்கள் பாதிப்படைகின்றன. கடற்கரைக்கு தொலைவில் உள்ள மக்களும் பாதிக்கப்படுகின்றனர். வேறு விதமாக சொல்ல வேண்டுமாயின், உலகளவில் ஏற்படும் தட்பவெப்பநிலை மாற்றங்களினால், விவசாயத்தை சார்ந்த மக்கள், நாடுகள் முக்கியமாக பாதிப்புகளாகின்றன.

தட்பவெப்ப நிலை மாற்றங்கள் மீது பல நாடுகளில் கிரீன் பீஸ் போராட்டங்களை மேற்கொண்ட பல்வேறு உயிரின வேற்றுமைகளோடு கூடிய இந்த பூமிக்கு அவற்றை காத்திடும் திறனை அளிப்பது அதன் நோக்கமாகும். காலப்போக்கில், இப்போராட்டம், நிலையான முன்னேற்றம் என்னும் கருத்தை வலியுறுத்தி கூறியது. வளர்ச்சியடைந்த, வளர்ச்சியடையாத நாடுகளின் மக்கள் அனைவருக்கும், நியாயமாக உள்ள, சுற்றுப்புறச் சூழல் ரீதியாக, நீண்ட காலம் நிலைத்திருக்க கூடிய முன்னேற்றத்தை இது கோருகிறது.

- கிரீன் பீஸ் இயக்கத்தின் இணைய தளம் (http;/www.green peace.org/ international) பார்த்து அது பணியாற்றும் அம்சங்கள் குறித்தும், அது தேர்வு செய்து கொண்ட போராட்ட முறைகள் குறித்தும் தெரிந்து கொள்ளுங்கள். இப்போராட்டம் குறித்து உள்ள விவாதங்கள், விமர்சனங்கள் குறித்தும் தெரிந்து கொள்ளுங்கள்.

### போபால் விஷ வாயு பேரிடர் மற்றும் அதற்கு சம்பந்தப்பட்ட போராட்டங்கள் :

1984ஆம் ஆண்டில் போபாலில் நிகழ்ந்த விஷ வாயு கசிவு விபத்து குறித்து நீங்கள் படித்திருப்பீர்கள், போபாலில் இருந்த யூனியன் கார்பைடு கம்பனியிலிருந்து பின்பு இதை டௌ (Dove) என்னும் நிறுவனத்திற்கு விற்று விட்டனர். ஒரு நாள் இரவு விஷ வாயு வெளிப்பட்டது. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் இறந்து விட்டனர். இதன் விளைவால் இப்போதும் ஆயிரக்கணக்கானோர் துன்பப்பட்டு கொண்டிருக்கின்றனர். உலகிலேயே மிகப்பெரிய தொழிற்சாலை விபத்தாக இது கருதப்படுகிறது. துவக்கத்தில் இருந்தே போபால் நகர மக்கள் நான்கு முக்கியமான கோரிக்கைகளுக்காக போராடிக் கொண்டிருக்கின்றனர்.

பாதிப்படைந்த மக்களுக்கு போதுமான மருத்துவ வசதி அளிக்க வேண்டும். அக்கம்பனி பன்னாட்டு நிறுவனம், ஆதலால், பன்னாட்டு தரத்திற்கு ஏற்றவாறு நஷ்ட ஈடு வழங்க வேண்டும். இப்பான்னாட்டு நிறுவனத்தின் அதிபரை இந்த விபத்தின் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும். இறுதியாக வருங்காலத்தில் இப்படிப்பட்ட விபத்து ஏற்பாடமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இக்கோரிக்கைகளில் சிறிதளவு வெற்றி பெற்றிருந்தாலும், முக்கியமான கோரிக்கைகளை சாதித்திட வெகு தொலைவில் உள்ளனர் என்று கூறலாம். போபாலில் மருத்துவ வசதிகளை செய்து தர பெருமளவு பணம் ஒதுக்கப்பட்டிருந்தாலும், விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் இன்னுமும் உடல் நலக்குறைவால் தொடர்ந்து துன்பப்பட்டுக் கொண்டே இருக்கின்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு பன்னாட்டு தரத்தில் செலுத்தப்படவில்லை. நிறுவனம் செலுத்திய சிறிதளவு நஷ்ட ஈட்டுத் தொகையும் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் பங்கீடு செய்யப்படவிலலை.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இந்த விபத்துக்கள் காரணமான தொழிற்சாலை நிர்வாகத்தின் மீது விசாரணை நடத்தி, தண்டனை தருவதில் அரசாங்கம் தோல்வி அடைந்தது. தற்போது மேம்பாடான சட்டங்கள் உள்ளன என்றாலும் எதிர்காலத்தில் இது போன்ற விபத்துக்கள் நிகழாமல் பார்த்துக்கொள்ள போதுமான கொள்கை அன்று நடுநிலையான தணிக்கை அமைப்பு இல்லை. இத்துயர சம்பவத்திற்கு காரணமான, தொழிற்சாலையின் தலைமையிடம் அமெரிக்காவில் இருந்ததால், எதிர்ப்பு தெரிவிக்க சிக்கலாக இருந்தது. இத்தொழிற்சாலை காரணமாக, உண்டான சுற்றுப்புற சூழல் மாசடைதலால் பாதிக்கப்பட்ட தொழிற்சாலை ஊழியர்கள், பெண்கள் எதிர்கொண்ட பிரச்சனைகள் மீது போராட்டம் செய்திட பன்னாட்டு சட்டங்களை பயன்படுத்தி அனுக வேண்டி உள்ளது. உலகம் முழுவதும் உள்ள மக்களில் பலர், அத்தொழிற்சாலையின் பொருட்களை வாங்குவதை நிறுத்திக் கொண்டனர். தற்போது சமீப செய்தி பரிவர்த்தனை தொடர்புகள் விரைவாக உள்ளதால், அந்த தொழிற்சாலை லண்டனில் நடந்த ஒலிம்பிக் போட்டிக்கு உதவியாளராக இருக்க முன்வந்த போது, உலக அளவில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் கையெழுத்து சேகரிப்பு இயக்கம் நடத்தினர். ஒலிம்பிக் சங்கம் மற்றும் டௌ நிறுவனத்துக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை அநீதியானது என்று உலகளவில் இருந்த தொழில் நிறுவனங்கள் குறிப்பிட்டு காட்டி குறை கூறின.



*படம் 20.4 போபால் விஷவாயு கசிவு துயர சம்பவத்தில் உயிர் நீத்தோருக்கான அஞ்சலி*

**சுற்றுச்சூழல் போராட்டங்கள் :**

நம் இந்திய நாட்டிலும் சுற்றுப்புற சூழலுக்கான போராட்டம் 1970களில் நடைபெற்ற கிராம மட்டத்தில் இருந்து காடுகளின் பாதுகாப்பு போராட்டத்தோடு ஆரம்பமானது. அப்படிப்பட்ட போராட்டங்களில் ஒன்று 'சிப்கோ இயக்கம்' இது குறித்து நீங்கள் ஏற்கனவே அத்தியாயம் 12ல் படித்தீர்கள்.

**நர்மதை நதி மீது அணை திட்டங்கள் கட்டுவதை எதிர்த்த இயக்கங்கள் :**

இந்தியாவின் திட்டமிட்ட முன்னேற்றத்தில் பல்நோக்கு அணை திட்டங்களை கட்டுவது 1950களில் இருந்து ஒரு பாகமாக இருந்தது. இவ்வாறு கூட்டப்பட்ட பெரிய அணைக் கட்டுகளில் பக்ரா நங்கல், ஹிராகுட், நாகார்ஜுன சாகர் முக்கியமானவை. இப்பெரிய அணைக்கட்டுகளை மக்கள் மாபெரும் கட்டுமானங்களாக கருதினர். அவை பெருமளவு நீரை தேக்கி வைக்கும் என்றும், பரந்த நிலப்பரப்புக்கு நீர்பாசனம் அளித்திடும் என்றும், அதிகளவு மின்சாரத்தை உற்பத்தி செய்திடும் என்றும், வெள்ளப் பெருக்கு ஏற்படாமல் தடுக்கும் என்றும், வறட்சியை கட்டுப்படுத்தும் என்றும், விரும்பி எதிர்பார்த்தனர். இந்த அணைக் கட்டுகளினால் மூழ்கிய பரந்த வளமான நிலங்கள் குறித்தும், மக்கள், மரங்கள், விலங்குகளுக்கு ஏற்பட்ட விளைவுகள் குறித்தும் யாரும் கேட்கவில்லை

**படம் – நர்மதா நதி படுகையில் உள்ள நீர் மின் உற்பத்தி திட்டங்கள்**






Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஆயிரக்கணக்கான மரங்கள், விலங்குகள், ஏக்கர் நிலங்கள், அணை கட்டுகள் கட்டிய பகுதிகளில் வாழ்விடங்களை இழந்த மக்கள் உதாசினப்படுத்தப்பட்டனர். வாழ்விடங்களை இழந்த மக்கள் செல்ல வேறு எந்த இடமும் இல்லை. அவர்களுக்கு எவ்வித நஷ்ட ஈடும் தரப்படவில்லை. பெரிய அணைக்கட்டுகளால், நாட்டு மக்களுக்கு உண்டாகும பயன்களுக்கு முன்பு, இப்பிரச்சனைகள் சிறியவை என பலரும் கருதினர். ஆனால் இழந்த காடுகள், வயல்கள் மற்றும் கிராமங்கள், அணைக்கட்டு கட்டுமானத்திற்கான செலவு, போன்றவற்றின் மொத்த தொகையோடு, அவற்றால் விளைந்த பயன்களை ஒப்பிடுகையில், அணைக்கட்டுகள் நாம் எதிர்பார்த்த அளவு பலனை தரவில்லை என்பதை உணர்ந்த மக்கள் கேள்விகேட்க துவங்கினர். அணைக்கட்டுகள் கட்ட அதிகமான பண செலவு ஆகிறது. அவற்றின் கட்டுமானத்தில் ஏற்படும் தாமதத்தால், விலைகள் அதிகரிப்பால், இச்செலவு மேலும் அதிகரிக்கிறது. அது மட்டுமல்ல, இவை முன்பு எதிர்பார்த்த பரப்பளவு நிலங்களுக்கு நீர் பாசனத்தை அளிப்பத்தில்லை. நீர் மின்சார உற்பத்தியும் எதிர்பார்த்த அளவு இல்லை. அணைக்கட்டில் சேமித்து வைக்க கூடிய நீரின் இருப்பு பொறியியல் வல்லுநர்கள் மதிப்பீடு செய்ததை விட, குறைவாக இருப்பதால் இவ்வறான நிலை உள்ளது. இந்திய வரலாற்றில், நர்மதை நதி மீது மிகப் பெரிய மற்றும் சிறிய அணை திட்டங்களை அதன் பள்ளத்தாக்கு பகுதிகளில் மேற்கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் உத்தேசித்ததால் மேற்கண்ட பிரச்சனைகள் எழுந்தன.

இத்திட்டத்தினால், வாழ்விடங்களை இழந்த மக்கள், நிலங்களின் சொந்தக்காரர்களுக்கு மட்டுமின்றி, அங்கு வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கும் நியாயமான நஷ்ட ஈடு தரப்பட வேண்டும் என்று கோரினர். அது மட்டுமல்லாமல், அணை திட்டத்தால் மூழ்கிய காட்டுப் பகுதிகளுக்கு ஈடாக மரங்களை வளர்க்க வேண்டும் என்றும், நிலங்களை இழந்த மக்களுக்கு வேறு நிலங்கள் தரப்பட வேண்டும் என்றும், தகுந்த மறுவாழ்வு வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். ஆனால், மக்கள் விரைவில் இரண்டு விஷயங்களை புரிந்து கொண்டனர். இழந்த நிலங்களுக்கு ஈடிக தருவதற்கு போதிய நிலம் இல்லை என்றும், வாழ்விடங்கள் இழந்த மக்களுக்கு மறுவாழ்வு இருப்பிடங்கள் தர இயலாது என்றும், உணர்ந்தனர். அது மட்டுமின்றி, இப்பிரச்சனை நஷ்ட ஈடு மற்றும் மறு வாழ்வு ஏற்பாடுகள் குறித்த பிரச்சனையோடு,. நாட்டு முன்னேற்றத்திற்காகவும் சம்மபந்தப்பட்டுள்ளது என்பதை உணர்ந்தனர். இப்படிப்பட்ட முன்னேற்றம், விவசாயத்தையும் பழங்குடி மக்களையும் பணயமாக வைத்து, தொழிற்சாலைகள் வாணிப விவசாய பண்ணைகளையும் ஏற்பாடு செய்தல், இயற்கை வளங்களை நிலையற்ற முறையில் பயன்படுத்துதல் போன்றவற்றில் மீது ஆதாரப்பட்டுள்ளது. இது ஏழை விவசாயிகளையும், பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை எந்த முறையிலும் மேம்படுத்தாமல், அவர்களை திறமையற்ற கூலியாட்களாக மாற்றிவிட்டதும். இந்த போராட்டத்தின் தலைவர்கள் இந்த அணைதிட்ட கட்டுமானத்தை எதிர்த்து வந்தனர். அத்தியாயம் 12ல் நீங்கள் பாவா மஹாலியா குறித்து படித்தீர்கள், நர்மதை நதி பள்ளத்தாக்கு அணைதிட்டத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மக்கள் இயக்கமான நர்மதா பச்சாவோ போராட்டத்தில் (Narmada Bachao Andolan) இவரும் ஒரு பங்காற்றினார்.



படம் 20.5 நர்மதை நதி பள்ளத்தாக்கு பகுதியில் இருப்பிடங்களை காலி செய்வதற்கு எதிராக மக்கள் எதிர்ப்பு போராட்டம்.

முதலில் உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகையைக் கொண்டு சர்தார் சரோவர் அணை திட்டத்தை (Sardar Sarovas Project) கட்ட நினைத்தனர். தீவிரமான கண்டனங்கள், ஊர்வலங்கள், மக்கள் சேர்ப்பு, உண்ணாவிரதங்கள், உலக அளவிலான போராட்டங்களுக்கு பிறகு உலக வங்கி, இத்திட்டத்திற்கு நிதி உதவி வழங்கும் முடிவை வாபஸ் பெற்றுக்கொண்டது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

சர்தார் சரோவர் அணை திட்ட கட்டுமானத்தை தடுப்பதில் நர்மதா பச்சாவோ ஆந்தோளன் தோல்வியடைந்தாலும், அனைவரும் முன்னேற்றம் குறித்து சிந்திக்கச் செய்வதில், அது வெற்றி அடைந்தது. முன்னேறத்திற்கான திட்டங்கள் ஏழைகளின் பயனுக்காகவா செல்வந்தர், அதிகாரம் படைத்தோருக்காகவா, என்று நிந்திக்க வைத்தது. இயற்கைக்கு இடையூறு விளைவித்து, கட்டப்படும் மிகப்பெரும் அணை திட்டங்களால் ஏற்படும் பயன்கள் குறித்தும் அது சிந்திக்க வைத்தது. இப்படிபட்ட முன்னேற்ற திட்டங்களின் காரணமாக வாழ்விடங்களை இழந்த மக்களுக்கு போதுமான, கௌரவமான நஷ்ட ஈடு செலுத்தும்போதும், அரசாங்கம் யோசிக்கும்படி செய்தது.

- விவசாயிகள், மலைவாழ் மக்கள் போன்றோரை வாழ்விடங்கள் இழந்தவர்களாக செய்யாமல், தொழிற்சாலைகள் கட்டுதல், சுரங்கங்கள் தோண்டுதல், மின்சார உற்பத்தி நிலையங்கள் நிறுவிட இயலுமா? எப்படிப்பட்ட மாற்றுவழிகள் உள்ளன. இவ்விஷயங்கள் மீது உங்கள் வீட்டிலும், வகுப்பறையிலும் - விவாதிக்கவும்.

'நர்மதா பச்சாவோ' போராட்டத்தில் பல்வேறு பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை உள்நாட்டு மக்களின் போராட்டம், புதுதாராள கொள்கை முறைகளுக்கு எதிரான போராட்டம், நகர மயமாதலுக்கு அணை திட்டங்கள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள், போன்வற்றிற்காக நிலப்பகுதிகள் பறிக்கப்படும்.

இத்தருணத்தில், தங்கள் நிலப்பகுதிகளை காப்பாற்றிக் கொள்வதற்காக விவசாயிகள் செய்து வரும் போராட்டங்கள் முதலியன.

### இந்திய நாட்டின் சுற்றுப்புறச் சூழலின் நிலை

அறிவியல் மற்றும்சுற்றுப்புறச் சூழல் மையம் (Centre for science and environment - CSE) 1980 ஆம் ஆண்டில் அனில் அகர்வால் என்பவரால் நிறுவப்பட்டது. இந்திய நாட்டில் முன்னேற்றம், சுற்று சூழல் அம்சங்கள் மீது ஆய்வு செய்து, அவற்றின் மீது விழிப்புணர்வு ஏற்படும் படி செய்தல் இதன் நோக்கமாகும். பாரத நாட்டின் சுற்றுப்புற சூழலின் நிலை மீது குடிமக்களின் அறிக்கைகள் - 1982 என்னும் புகழ்பெற்ற வெளியீட்டில் அது துவங்கியது. தற்போது நாடு எதிர்கொண்டுள்ள சுற்றுப்புற சூழல் பிரச்சனைகளுக்கு நிலையான பணிகளுக்காக இந்த அறிக்கைகள் பயன்பட்டு வருகின்றன. இந்த அமைப்பில் பணிகள், ஆய்வு செய்த பிரச்சனைகள் குறித்து மேலும் தெரிந்து கொள்ள, அதன் இணைய தளம் http://www.csc India.org ஐ பாருங்கள்

### அமைதி பள்ளத்தாக்கு இயக்கம் ( 1973 - 85)

கேரளாவில் மேற்கு தொடர்ச்சி மலையில் அமைதி பள்ளத்தாக்கு (silent valley) பகுதியில் பாய்ந்து கொண்டிருக்கின்ற இரண்டு நதிகள் மீது அணைக்கட்டுகள் கட்ட வேண்டும் என்று உத்தேசித்த போது, இதனால் பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள அரிய வகை விலங்குகள், தாவரங்கள், மறைந்து போகும் என்று கல்வியாளர்களாகிய பலர் உணர்ந்தனர். இந்த அரிதான விலங்கினங்களில் ஒன்றான சிங்கவால் குரங்கு (Lion Tailed Macaque) படிப்படியாக அமைதி பள்ளத்தாக்கு பகுதிக்கு ஆதரவாக அணைக்கட்டு கட்டுவதற்கு எதிராக பெரியளவு இயக்கம் ஏற்பட்டது. மக்களிடையே அறிவியல் அறிவினை பரப்பவும், கல்வியை அளிக்கவும் பணி செய்து வந்த கேரளா சாஸ்திர சாஹித்ய பரிஷத் (KSSP) மாநில அளவில் மக்களை ஒருங்கிணைத்து, அணைக்கட்டு பகுதியில் மரங்களை வெட்டுவதற்கு எதிராக நீதிமன்றத்திற்கு சென்றது. கேரள உயர்நீதிமன்றம் மரங்களை வெட்டுவதை தடை செய்தது.

தீவிர எதிர்ப்புகள் காரணமாக, இறுதியில் அரசாங்கம் அணைக்கட்டு கட்டும் திட்டத்தை கைவிட்டது. அமைதி பள்ளத்தாக்கு 1985ல் தேசிய பூங்காவாக பிரகடனம் செய்தது.




*படம் - 21.6 இங்குள்ள காட்டில் துள்ளி குதித்து கூச்சலிடும் பூச்சிகள் இல்லை. எனவே, காடு அமைதியாக உள்ளது. சிங்கவால் மற்றும் பலவகை பூச்சிகள், பறவைகள் இப்பள்ளத்தாக்கின் தனித்தன்மையாகும்.*



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

### மேதா பட்கருடன் ஒரு நேர்க் காணல்

'நர்மதா பச்சாவோ ஆந்தோளன்' தலைவர்களுள் ஒருவரான மேதா பட்கர் ஒரு நேர்க்காணலில், அந்த அமைப்பை குறித்து 2010ல் இவ்வாறு கூறினார்.

**குஜராத் அரசாங்கம், தான் நினைத்ததை தொடர்ந்து செய்து கொண்டு இருக்கின்ற இப்போதும் போராட்டத்தை தொடர்ந்து செய்வதில் ஏதேனும் அர்த்தமுள்ளதா?**

"இலட்சியங்களை அடையும் வரை இப்போராட்டம் முடிவு பெறாது."

அரசாங்கம் பிரகடனம் செய்த கொள்கை மற்றும் திட்டம், வளர்ச்சியையும், விவசாயத்திற்கு சாதகமானது என்று விளம்பரம் செய்தாலும், வாழ்வாதாரங்களை இழந்தவர்களுக்கு நிலங்களை ஈடாக தரமுடியாமல் இருக்கிறது என்பதை அனைவரும் அறிந்துள்ளனர். சுற்றுச்சூழல் பாதுகாப்பு அம்சங்களை இன்னமும் அமுலாக்கவில்லை.



படம் 20.7

அணைக்கட்டுகள் அமைப்பதில் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளையும், கொள்கைளின் படி அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளையும், முழுமையாக நிறைவேற்றாமல், அணைக் கட்டுகளின் உயரத்தை அதிகப்படுத்தியது அநியாயமான செயலாகும்.

இயற்கை சூழலுடன் ஆதாரப்பட்ட மக்களின் வாழ்விடங்களை வெள்ளப்பெருக்கில் மூழ்கடிக்கச் செய்து, தீவிரமான சமூக, சுற்றுச் சூழல், பொருள் செலவுடன் சாதிக்க அபிவிருத்தி, கச் பகுதியிலுள்ள தேவைபடுகின்ற மக்களுக்கு அல்லாமல், குஜராத்திலுள்ள பெரிய நகரங்களுக்கும், பெரிய வர்த்தக குழுமங்களுக்கும் செல்கிறது – என்பதை உலகிற்கு தெரியப்படுத்தவும், இந்த போராட்டம் தொடர்ந்து நடக்க வேண்டிய அவசியம் உள்ளது. இப்படிப்பட்ட முன்னேற்றத்திற்கான வழிமுறைகள் மாறவேண்டும் என்று நர்மதா பச்சாவோ ஆந்தோளன் போராடி வருகிறது. அழிவை ஏற்படுத்துதல், ஏற்றத் தாழ்வுகள், வாழ்விடங்களை இழப்பதற்கு எதிரான எங்கள் போராட்டம் தொடர்ந்து வருகிறது. நர்மதை நதி பள்ளத்தாக்கு பகுதியில் மட்டுமின்றி நாடு முழுவதும் நடந்து வரும் மாற்று அபிவிருத்தி மறுகட்டமைப்பு பணிகளுடன் தொடர வேண்டிய அவசியம் உள்ளது.

- சமூக இயக்கங்கள் பயன்படுத்திய பல்வேறு திட்ட முறைகள் யாவை?
- மறுவாழ்வு வசதிகள் ஏற்படுத்தி தருகிறோம் என்று தரப்படும் வாக்குறுதிகளை மக்கள் எவ்வாறு காணுகின்றனர்?

## Movements against சமூக நீதி, மனித உரிமைகளுக்காக பெண்களின் போராட்டம் :

பெண்கள் எதிர்கொள்ளும் சமனின்மை குறித்து சம உரிமைகள், வாய்ப்புகள், தனிப்பட்ட பாதுகாப்பு, நீதி போன்றவற்றிற்காக அவர்கள் செய்திடும் போராட்டங்கள் குறித்து இதற்கு முந்தைய வகுப்புகளில் படித்தறிந்தோம். சமீப காலங்களில், பல்வேறு முக்கியமான சமூக போராட்டங்களில் பெண்கள் முன்னிலை வகித்து வருகின்றனர். இங்கு நாம் இரண்டு எடுத்துக்காட்டுகளுடன் மேலும் தெளிவாக புரிந்து கொள்வோம். நம் ஆந்திரப்பிரதேசத்தில், சாராயத்திற்கு எதிராக பெண்களின் போராட்டம், வடகிழக்கு மாநிலங்களின் மீது அதிகாரத்தை தவறாக ராணுவ தளங்களின் சிறப்பு அதிகாரத்திற்கு எதிராக மணிப்பூர் மகளிர் நடத்திய போராட்டம்.

பெண்கள் ஒன்று பட்டால்.....

இது கதை அல்ல, இது மாலை நேர பள்ளியில் கல்வி கற்றுக்கொண்ட பெண்களின் வெற்றி கதை எங்கள் ஊரின் பெயர் தூயகுண்டா. நாங்கள் கூலி வேலை செய்து பிழைக்கின்றோம். நாங்கள் மண்ணில் இருந்து தங்கத்தை விளைவிக்கிறோம். ஆனால், உழைத்து சம்பாதித்த பணத்தை முழுவதும், எங்களுடைய கணவன்கள் சாராயம், கள்ளு போன்றவைக்காக செலவு செய்து விடுவர்.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அவர்களிடம் பணம் இல்லாத போது, வீட்டிலுள்ள அரிசி போன்றவற்றை விற்று சாராயம் வாங்கிக்கொள்வர். அதற்காக எந்தப் பொருளை வேண்டுமானாலும் விற்று விடுவர். அவர்கள் கைக்கு கிடைக்கும் பொருட்களை எடுத்துச்செல்வர். சாராயம் குடிப்பது மட்டுமின்றி எங்களை திட்டுவர். எங்களுடன் சண்டையிடுவர். குழந்தைகளையும் அடித்திடுவர். எங்களின் அன்றாட வாழ்க்கையை துன்பகரமாக மாற்றிடுவர். எங்களிடம் இருந்த புத்தகத்தில் சீதம்ம கதை படித்தோம். அது எங்களை சிந்திக்க வைத்தது. அந்த பெண்ணின் மரணத்திற்கு யார் காரணம்? அதன் பிறகு நாங்கள், சாராயக் கடையை மூடவேண்டும் என்று கிராம சர்பஞ்ச் அவர்களைக் கேட்டுக் கொண்டோம். ஆனால், அதில் நாங்கள் வெற்றி பெற முடியவில்லை.

அதற்கு அடுத்த நாள், நாங்கள் நூற்றுக் கணக்காக ஊர்வலமாக கிராம பகுதியின் வெளியே சென்றோம். கிராமத்துக்குள் நுழைந்த சாராய வண்டியை நிறுத்தினோம். வண்டியில் இருந்த சாராயத்தை கீழே ஊற்றச் சொன்னோம். அவருக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஈடாக, நாங்கள் ஒவ்வொருவரும் ஒரு ரூபாய் தருவதாக சொன்னோம். அந்த நபர் பயந்து போனார். அன்று முதல் கள்ளுவிற்கும் வண்டி, எங்கள் ஊருக்குள் வரவில்லை. ஒரு நாள் சாராயத்தோடு ஒரு ஜீப் வண்டி கிராமத்துக்குள் வந்தது. நாங்கள் அதை சுற்றி வளைத்தோம். மாஜிஸ்ட்ரேட்டுக்கு புகார் செய்திடுவோம் என்று எச்சரித்தோம். அந்த நபர் நடுங்கிப் போனார். ஊருக்குள் இருந்த கடையை மூடிவிட்டார். அதனால் எங்களின் நம்பிக்கை அதிகரித்தது. கல்வியினால் மட்டுமே இதனை சாதிக்க முடிந்தது என்பதை உணர்ந்தோம். இந்த ஆண்டு சாராயக் கடை ஏலத்தை எடுக்கும் தைரியம் யாருக்கும் வரவில்லை.

இச்சம்பவம் 1992ல் நடந்தது. ஆனால், இதுபோன்ற சம்பவம் எங்களுடையது மட்டும் அல்ல, இச்செய்தி பரவிய உடனே, இதர கிராமங்களின் பெண்களும், சாராய விற்பனைக்கு முற்றுப்புள்ளி வைத்தனர். இறுதியாகும் அவர்கள் ஆயிரக்கணக்கில் நெல்லூர் மாவட்ட ஆட்சித் தலைவர், ஆறு முறைகள் தள்ளி வைத்து, இறுதியில் ரத்து செய்ய வேண்டியிருந்தது.

மாநிலத்தின் இதர பகுதிகளிலும் பெண்கள், சாரயக் கடைகளுக்கு எதிராக கண்டன ஆர்பாட்டங்கள் நடத்தினர். சாராயக்கடைகளை முற்றுகை செய்தனர். அக்கடைகளை மூடி வைத்திட முயன்றனர். அக்கடைகளில் சாராயத்தை வைக்காதவாறு செய்தனர். ஆண்கள் அவற்றை வாங்காதவாறு செய்தனர். சாராய விற்பனையை நிறுத்திட முயன்றனர். கடைகளை மூடுவதற்கு, அதன் எஜமானர்கள் மறுத்தால், அக்கடைகளை முற்றுகையிட்டனர். சாராய பாக்கெட்டுகளை வெளியே தூக்கி எறிந்தனர். சாராயத்தை எரித்து விட்டனர். பல ஊர்களில் சாராய குடிப்பழகத்தை நிறுத்திகொள்ளாத ஆண்களின் மீசைகளை பெண்கள் நீக்கி விட்டனர். சில சமயங்களில், அவர்களை கழுதைகள் மீது ஏற்றி ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். இத்துடன், சாராயத்தை குடிக்க மாட்டோம் என்று ஆண்களை கோவில்களில் உறுதி எடுத்துக் கொள்ளுமாறு செய்தனர். மாநிலம் முழுவதும் பெண்கள் நடத்திய ஆர்பாட்டங்கள், கூட்டங்களின் விளைவாக இறுதியில் 1993 அக்டோபரில் சாராயத்தை அதிகார பூர்வமாக தடை செய்யப்பட்டது. 1995ஆம் ஆண்டில் பூரண மது விலக்கு விதிக்கப்பட்டது.

இப்பெண்கள், மிகவும் ஏழைக்குடும்பங்களை சேர்ந்த தலித்து பிரிவை சேர்ந்தவர்கள். தங்களுடைய கணவன்கள், குடிப்பழக்கத்திற்கு அடிமைகளானதால், தீவிரமான துன்பங்களுக்கு உள்ளாயினர். இப்பெண்களில் பலர் எழுத்தறிவு பயிலும் வகுப்புகளில் சேர்ந்தனர். அங்கு பல சமங்களில் இப்பிரச்சனை குறித்து விவாதித்தனர். இம்மாலை நேர வகுப்புகளால், இப்பெண்களுக்கு, தங்கள் வாழ்க்கை குறித்து பேசிக் கொள்ளும் வாய்ப்பு கிட்டியது. புதிய தொடர்புகளை ஏற்படுத்தி கொடுத்தது. இச்சாராய எதிர்ப்பு போரட்டம் துவங்கிய பிறகு, இவற்றின் அனுபவங்கள், புத்தகங்கள் வாயிலாக, மாநிலத்திலுள்ள மகளிர் அனைவருக்கும் பரவியது. அவ்வாறாக சமுதாயத்தில் மிகவும் ஏழைப்பிரிவைச் சேர்ந்த பெண்கள், பணபலம், உடல் வலிமையோடு அரசியல் செல்வாக்கு பெற்றிருந்த சாராய தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களை தைரியமாக எதிர் கொண்டனர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

தற்போது நிலைமை மீண்டும் மாறிவிட்டது. சாராயக் கடைகள் செயல்பட தொடங்கி விட்டன. சமூக போராட்டங்களின் வெற்றிகள், நீண்ட காலம் தொடர வேண்டுமானால், நிரந்தரமான கண்காணிப்பு, செயல் திட்டங்கள் அவசியம் என்று புரிகிறது.

- சமீப காலத்தில், மேற்கு வங்காளம் (நந்திகாம்) ஒடிசா (நியமகிரி) ஆந்திரபிரதேசம் (போலவரம் மற்றும் சோம்பேட்டை) மாநிலங்களில் நடந்த இது போன்ற போராட்டங்கள் குறித்து மேலும் விரவங்களை தெரிந்துக்கொள்.
- இப்போராட்டங்களின் முக்கியமான அம்சங்களை விவரிக்கும் ஒரு சுவரொட்டி தயாரித்து பார்வைக்கு வைத்திடுக.

## மனித உரிமைகள் குறித்து சமுதாய விழிப்புணர்வு

வடகிழக்கு இந்தியாவில் அமைந்துள்ள மணிப்பூர் மாநிலப் பெண்கள், மக்களை அடக்கி கட்டப்படுத்தும் ஆயுதப் படைகளுக்கு அதிகாரம் தரும் சட்டங்களுக்கு எதிராக போராட்டம் செய்தனர் என்பதை தெரிந்து கொள்வோம். இச்சட்டங்களின்படி ஆயுதப்படைகள் எவ்வித நீதி விசாரனை இன்றி நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெற்றிருந்தன. (மக்கள் ஆயுத படைகளின் நடவடிக்கைகளை எதிர்த்து நீதி மன்றங்களை அனுக முடியாத நிலை இருந்தது)

மனித உரிமைகளின் சட்டப்பிரிவுகளில் சில கீழே பட்டியலிடப்பட்டுள்ளது இப்பாகத்தை இரண்டு முறைகள் படித்திடுங்கள். முதலில் தரப்பட்டுள்ளவற்றை படித்து மனிதர்கள் அனைவரும் இருக்க வேண்டிய உரிமைகளை கண்டு கொள்ளவும். அதன் பிறகு கீழே தரப்பட்டுள்ள மனித உரிமைகளின் மீறல் குறித்து. எந்த பத்தியில், எந்த வரியில் உள்ளது என்பதை கண்டறியுங்கள், ஒவ்வொன்றும் கிடைக்காமல் போகலாம். அவற்றை காலியாக விட்டு விடுங்கள்.

**சட்டப்பிரிவு 3** : ஒவ்வொருவருக்கும் உயிர் வாழ்தல், சுதந்திரம், தனிப்பட்ட பாதுகாப்பு உள்ளது. பத்தி _____ வாக்கியம் _____

**சட்டப்பிரிவு 5** : எந்த ஒரு நபரையும் துன்புறுத்துதல், கொடுமைப் படுத்துதல், அவமான படுத்துதல், தண்டனைக்கு உள்ளாக்குதல் கூடாது. பத்தி _____ வாக்கியம் _____

**சட்டப்பிரிவு 7** : சட்டத்தின் முன் அனைவரும் சமம். எப்படிப்பட்ட வேறுபாடும் இன்றி அனைவருக்கும் சட்டத்தின்படி சமமான பாதுகாப்பு அளிக்க வேண்டும். இப்பிரகடனத்திற்கு பங்கம் விளைவித்து, வேறுபாட்டிற்கு ஆளாகாமல் அனைவருக்கும் சம பாதுகாப்பு கிடைக்க வேண்டும். இப்படிப்பட்ட வேறுபாட்டிற்கு உந்தப்படுவதில் இருந்தும் கூட பாதுகாப்பு கிடைக்க வேண்டும். பத்தி _____ வாக்கியம் _____

**சட்டப்பிரிவு 9** : எந்த ஒரு நபரையும் காரணமின்றி கைது செய்யக் கூடாது. அடைத்து வைக்க கூடாது. விலக்கி வைக்க கூடாது. பத்தி _____ வாக்கியம் _____

**சட்டப்பிரிவு 10** : ஒரு நபர் மீது சுமத்தப்பட்ட குற்றத்திற்கு, அவர் / அவள் உரிமைகள், பொறுப்புகள் நிர்ணயிப்பதற்கு, சுதந்திரமான, நடுநிலையான தீர்ப்பு மூலம் வெளிப்படையான விசாரனைக்கு, முழு சமத்துவத்துடன் கூடிய உரிமை ஒவ்வொருவருக்கும் உள்ளது. பத்தி _____ வாக்கியம் _____

**சட்டப்பிரிவு 12** : காரணமின்றி, யாருடைய தனிமைக்கும், குடும்பத்திற்கும், இருப்பிடத்திற்கும், அல்லது கடிதப் போக்குவரத்திற்கும் இடையூறு செய்தல் கூடாது. தலையிடக்கூடாது. நபரின் கௌரவம், மானம் போன்றவற்றிக்கு பங்கம் விளைவிக்க கூடாது. இவ்விதமான தாக்குதல்கள், இடையூறு விளைவித்தல்களில் இருந்து ஒவ்வொருவருக்கும் சட்டத்தின் வாயிலாக பாதுகாப்பு பெறும் உரிமை உள்ளது. பத்தி _____ வாக்கியம் _____

**சட்டப்பிரிவு 13** : நாட்டின் எல்லைக்குட்பட பகுதியில், ஒவ்வொருவரும் சுதந்திரமாக இடம் பெயர்ந்து செல்லவும், இருப்பிடத்தை ஏற்படுத்திக்கொள்ளும் உரிமை உள்ளது. பத்தி பத்தி _____ வாக்கியம் _____

(2) ஒவ்வொருவரும் உரிமை உள்ளது. மீண்டும் தன் சொந்த நாட்டிற்கு திரும்பும் உரிமையும் உள்ளது. பத்தி _____ வாக்கியம் _____



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**வரலாற்று பின்னணி :**

மணிப்பூர் தற்போது இரண்டு வேறுபட்ட புவியியல் பிரதேசங்களை கொண்டுள்ளது. மலைகள், பள்ளத்தாக்குகள், சுதந்திரத்திற்கு முன்பு பள்ளத்தாக்குப் பகுதிகள் மன்னராட்சியின் கீழ் இருந்தது. மலைப்பகுதிகள் முக்கியமாக மலைவாழ் மக்களின் சுய அதிகாரம் படைத்த பகுதிகலாய் இருந்தன. 1891ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் இப்பகுதியின் மீது தங்கள் கட்டுபாட்டை கொண்டிருந்தனர். இருப்பினும், மன்னனிடம் தொடர்ந்து இருக்குமாறு அனுமதித்தனர். 1949 ஆம் ஆண்டில், மணிப்பூர் ராஜ்ஜியத்தை இந்திய நாட்டுடன் சேர்த்து, ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இந்த ஒப்பந்தத்தை பல்வேறு பழங்குடி இனத்தவர்கள் எதிர்த்தனர். தாங்கள் சுதந்திரத்தோடு வாழ்ந்திட்டவர்கள் என்றும், இந்திய நாட்டின் பாகமாக தங்கள் பகுதியை இணைத்திடுவதை அங்கிகரிக்க மாட்டோம் எனக்கூறி மறுத்தனர்.

இந்திய நாட்டுடன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்தவர்களை கட்டுப்படுத்துவதற்கு, இந்திய அரசு ராணுவத்தை அனுப்பியது. சட்டம்-ஒழுங்கு, அமைதி, பாதுகாப்பை நிலைநாட்ட இயற்றப்பட்ட சட்டங்களில் ஒன்று, ஆயுதப் படைகளின் சிறப்பு அதிகாரங்களின் சட்டம் 1958 ஆகும். தேச துரோக செயலில் பங்கேற்கின்றனர் என்ற சந்தேகம் ஏற்பட்டால், அந்த நபரை கைது செய்ய, சுட்டுக் கொல்ல பாதுகாப்பு படை வீரர்களுக்கு, இந்த சட்டம் அதிகாரத்தை கொடுத்தது. இச்சட்டத்திலுள்ள அம்சங்கள் தவறாக பயன்படுத்தப்பட்டன என்றும், அப்பாவி மக்கள் அடிக்கடி சித்திரவதைக்கு, கொடுமைக்கு ஆளாயினர் என்றும், கொல்லப்பட்டனர் என்ற குற்றச்சாட்டுகள் உள்ளன. அது மட்டுமின்றி, ஆயுதப்படை வீரர்கள் பெண்களிடம் கொள்ளையடித்தல் மற்றும் வரம்பு மீற நடந்து கொண்டனர் என்ற குற்றச்சாட்டுகளும் உள்ளன. தேச துரோக செயல்களில் ஈடுபடுகின்றனர் என்ற சந்தேகத்தில் தங்களின் மகன்கள், கணவன்களை பிடித்துச் சென்று, சித்தரவதை செய்கின்றனர் என்ற அச்சம் இப்பகுதி பெண்களிடம் இருந்தது. தாய்மார்களும், மகள்களும் பாலியல் பலாத்காரங்களுக்கு உள்ளாகின்றனர். தங்கஜம் மனோரமா என்னும் 32 வயதுப் பெண் போலீஸ் காவலில் இறந்து போன போது, அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. இக்கொடுமையை எதிர்த்து, பெரியளவில் கண்டன ஊர்வலங்கள் நடைபெற்றன.

## மைரா பைபீ போராட்டம் :

'மைடை' மொழியில் 'மைரா பைபீ' என்றால் 'தீவட்டிகள் ஏந்தியவர்கள்' என்று பொருள். 1970களின் இறுதி காலத்தில், மது குடித்துவிட்டு பொது இடங்களில் தகராறு செய்வதை தடுக்க மைரா பைபீ போராட்டம் துவங்கியது. 1980களின் துவக்கத்தில், மணிப்பூர் விடுதலைக்காக துவங்கிய ஆயுதப் போராட்டத்தை எதிர்கொள்ள இந்திய ராணுவத்தை பெருமளவில் அனுப்பியதால் அது மனித உரிமைகள் போராட்டமாக மாற்றம் அடைந்தது. அதே சமயத்தில், மாநிலத்தை கலவரப்பகுதியாக அறிவித்தது, ஆயுதப்படைகளின் சிறப்பு அதிகாரங்கள் சட்டத்தின் கீழ் இந்திய இராணுவத்திற்கு அளவில்லாத அதிகாரங்கள் தரப்பட்டது. இதன் விளைவாக, அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட ராணுவ மைரா பைபீ இயத்தினர் கண்டன ஊர்வலங்கள் நடத்தினர். இரவு நேரங்களில் கடைத்தெருக்களில், ரோந்து சுற்றி வந்தனர். கிராமங்கள், நகரங்கள், வார்டுகளின் பெண்கள் இந்த இரவு நேர ரோந்து பணியில் ஈடுபட்டனர். ஆனால், இவர்களின் கைகளில் ஆயுதங்கள் கிடையாது. கொம்புகளுக்கு துணி சுற்றப்பட்டு, மண்ணெணெய் கொண்டு தோய்க்கப்பட்டு, ஏற்றப்பட்ட தீவட்டிகள் மட்டுமே இருந்தன. மக்களின் அமைதிக்கு பங்கம், ஆபத்து ஏற்படாமல், பெண்கள் குழுக்கள் ஒவ்வொரு இரவிலும் ஒவ்வொரு வார்டிலும், சாலை சந்திப்புகளிலும் அமர்ந்திருப்பர். அதையான சமயங்களில், சிறிய எண்ணிக்கையில் பெண்கள் முறைப்படியாக ரோந்தில் ஈடுபட்டனர். சூழ்நிலை தீவிரமாக இருந்த சமயங்களில், பெண்கள் பெரிய எண்ணிக்கையில் காவல் இருந்தனர். இவர்களே போராட்டக்காரர்கள் அல்ல. இவர்களுக்கு அரசியல் நோக்கங்கள் கிடையாது. மக்களின் பாதுகாப்பு, நல்வாழ்விற்கு பொறுப்பை தங்கள் கைகளில் எடுத்துக்கொண்ட சாதாரண பெண்கள் இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




*படம் 20.8 ஊர்வலத்தில் பங்கேற்ற மைரா பைபீ பெண்கள்.*

ஆயுதப் படைகளின் சிறப்பு அதிகாரங்களை வழங்கும் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும் மைரா பைபீ போராட்டம் கோருகிறது. இச்சட்டத்திற்கு எதிராக போராட்டம். படிப்படியாக வலிமையைப் பெற்றது. தேர்தலை புறக்கணித்தல் முதல் தொடர் உண்ணாவிரதம் வரை, தங்களின் எதிர்ப்பை பல்வேறு வடிவங்களில் தெரியப்படுத்தினர். அவர்களில் ஒருவர் இரோம் ஷர்மிளா. இவர் வீட்டு காவலில் இருந்தாலும் 10 ஆண்டுகளை விட அதிக வருடங்களாக உண்ணாவிரம் இருக்கிறார்.

இப்பிரச்சனைக்கு தீர்வு காண பல்வேறு முயற்சிகள் நடந்தன. முன்னாள் ராணுவ அதிகாரிகள் சிலர், இப்பகுதியில் நிலவிய முரண்பாடுகள் குறித்து எழுதும்போது மேலான அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் மட்டுமே இப்பகுதி மக்களின் அங்கீகாரத்தை பெற முடியும் என்று தெரியப்படுத்தினர். இப்பகுதியில் இச்சட்டத்தை ரத்து செய்வதற்கான வாய்ப்புகளை பரிசீலிக்க, உச்ச நீதிமன்றம் நீதிபதியான திரு. B.P.ஜீவன் ரெட்டியை அரசாங்கம் நியமித்தது. இக்கமிட்டி தனது அறிக்கையை சமர்ப்பித்தாலும், இது வரைக்கும் நிரந்தர தீர்வை கண்டறியவில்லை.

### சமூக போராட்டங்கள் அனைத்திலும் காணப்படும் பொதுவான அம்சங்கள் :

சுற்றுப்புறச் சூழல், மனித உரிமைகள் என்னும் எல்லைகளை உடைத்தெறிந்து, சமூக போராட்டங்கள் பல்வேறு அம்சங்களை எழுப்பின. அவர்களின் தர்க்கங்கள் இந்த பல்வேறு கொள்கைகளில் இருந்து தோன்றின. மஹாலியா, லூதர்கிங், போன்றோர் மனித உரிமைகளின் கொள்கையுடன், சுற்றுப்புறச் சூழல், சமத்துவத்திற்கு தொடர்புடைய அம்சங்களையும் எழுப்பி போராடினர் என்பதை நீங்கள் கவனித்தீர்கள். சில சமயங்களில் தங்கள் மீது புகுத்தப்பட்ட மாற்றங்களை எதிர்த்து போராடினர். மார்ட்டின் லூதர் கிங், மைரா பைபீ போன்றவர்களின் போராட்டங்கள் சிலமாற்றத்தை கோரின. சமூகப் போராட்டங்கள் பல சமயங்களில், அரசியல் கட்சிகளுக்கு தொடர்பின்றி, ஒரு இலட்சியத்திற்காக கலந்து செயல்படுகின்றன. அதில் பங்கேற்பவர்கள் பல்வேறு கட்சிகளை சேர்ந்தவர்களாக இருக்கலாம். இப்பேராட்டங்களின் நிகழ்ச்சிகள் பங்கேற்பதாகவும், மக்களாட்சி முறைப்படி இருக்குமாறு உருவாக்கப்படுகின்றன. நாட்டில் வேரூன்றி உள்ள அரசியல் அமைப்புகள், தங்களின் தேவைகளை, எதிர்பார்ப்புகளை நிறைவேற்றதை போது அல்லது போராட வேண்டிய அம்சம் உள்ள போது சமூக போராட்டங்கள் உருவெடுக்கின்றன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## முக்கியச் சொற்கள் :

சமூக உரிமைகள் ஒத்துழையாமை மக்கள் வேறுபடுத்தல் நிலையற்றதாக்குதல்
போர் எதிர்ப்பு ராணுவத்தில் சேரும் வயது ஆயுதமயமாதல் மறுவாழ்வு ஏற்பாடு
நஷ்ட ஈடு சாராய எதிர்ப்பு மக்களாட்சி பங்கேற்றல்

## உனது கற்றலை மேம்படுத்துக

1. சமூக போராட்டங்கள் மீதான ஒரு பட்டியலை உருவாக்குங்கள். இங்கு சில அம்சங்கள் தரப்பட்டுள்ள. அவற்றை பயன்படுத்திக் கொள்ளவும். வெவ்வேறு சமூக போராட்டங்கள் இடையே உள்ள ஒற்றுமைகள், வேற்றுமைகள் கண்டறியவும். (போராட்டம் கவனம் செலுத்திய முக்கிய அம்சம் – நடைபெற்ற இடம் – அதன் முக்கியமான கோரிக்கைகள் – கண்டனம் தெரிவித்த முறைகள் – முக்கியத் தலைவர்கள் – அரசாங்கத்தின் பதில் – சமுதாயத்தின் மீது இதன் தாக்கம்)(AS3)
2. கண்ணய்யா, ரம்யா, சல்மா ஆகிய மூவரும் ஒரு விஷயம் குறித்து விவாதித்து கொண்டிருக்கின்றனர். அவர்களின் எதிர்பார்ப்புகள் வேறுபட்டவை. மனித உரிமைகள் கண்ணோட்டத்தில் நீங்கள் யாருடைய கருத்தை ஒத்துக் கொள்கிறீர்கள். காரணங்களை கூறுங்கள்.(AS2)

   நாட்டில் பத்திரிக்கை சுதந்திரத்தை கட்டுபடுத்த தேவையில்லை. மக்கள் வறுமையில் துன்புறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றார் ரம்யா. மக்களுக்கு உணவு மட்டும் இருந்தால் போதாது. செய்திதாள் சுதந்திரம் முக்கியமானது. அவ்வாறு இல்லையெனில், நாட்டின் பல்வேறு பகுதிகளில் மனித உரிமைகள் மீறப்படுகின்றவா? என்பது குறித்து தெரிந்து கொள்ளும் வழியே இருக்காது என்பது சல்மாவின் கருத்து. செய்திதாள்கள் செல்வந்தர்கள், அதிகாரம் படைத்தவர்கள் கைகளில் இருந்தால் எந்த பயன்? அவை சாதாரண மக்களுக்கு சம்மந்தப்பட்ட அம்சங்களைக் குறித்து ஏன் வெளியிடுகின்றன? என்று கண்ணய்யா கூறுகிறான்.
3. சமூகப் போராட்டத்தின் அடிப்படை அம்சங்கள் யாவை?(AS1)
4. மேற்கூறப்பட்ட நிகழ்ச்சிகளில் சாதாரண மக்களின் பங்கை எவ்வாறு விவரித்து கூறப்பட்டுள்ளது?(AS1)
5. அமெரிக்காவிலுள்ள கறுப்பின மக்கள் மற்றும் மைரா பைபீயின் போராட்டங்கள் இடையே காணப்படும் ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகள் யாவை?(AS1)




6. உலகளவில் பெரும்பான்மை நாடுகளில் காணப்படும் அரசியல் அமைப்பாக மக்களாட்சி காணப்படுகிறது. இது மக்களின் எதிர்ப்பார்ப்பு களுக்கு, முழுமையான நீதி செய்தனவா? இந்த அத்தியாயத்தில் தரப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகளின் ஆதாரமாக மக்களாட்சி மற்றும் சமூக இயக்கங்கள் என்னும் தலைப்பில் ஒரு சிறு கட்டுரை எழுதுக.(AS4)
7. போபால் விஷவாயு கசிவு போன்ற துயர சம்பங்கள் நடந்ததை கருத்தில் கொண்டு, கண்டனங்கள் மற்றும் போராட்டங்கள் நடத்திட மக்களை எவ்வாறு ஒன்று திரட்டுவார்கள் – என்பதை குறித்து விவாதியுங்கள்.(AS3)



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பாடம்

21

# தெலுங்கானா மாநிலத்தை உருவாக்கிய இயக்கம்

தெலுங்கானா இந்திய யூனியனின் ஒரு முழுமையான மாநில நிலையை 2014-ஆம் ஆண்டு ஜுன் 2-ம் தேதி அடைந்தது. நீண்ட போராட்டத்திற்கு பிறகு தெலுங்கானா கிடைத்தது. இந்த செயல்முறை பற்றி இப்பாடத்தில் கற்கலாம்.

நீங்கள் அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்கள் இந்த இயக்கத்தில் கலந்து கொண்டனரா?

- உங்கள் அனுபவங்களை பற்றி விவாதிக்க? முக்கிய காரணங்கள் என எதை நினைக்கிறீர்கள்?
- உங்கள் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் துணைக்கொண்டு போராட்டத்தில் கலந்து கொண்ட முக்கிய நபர்களின் பட்டியலை தயார் செய்து உங்கள் வகுப்பறையில் ஒரு போஸ்டர் அல்லது சுவர் செய்தித்தாளில் தங்கள் பங்களிப்பை காட்டுக.

## ஹைதராபாத் மாநிலம் இணைப்பு :

இந்திய சுதந்திர இயக்கத்தின் கடைசி கட்டத்தில் ஹைதராபாத் மாநிலம் இல்லாமல் இருந்த போது நிஜாம் ஆளுகைக்கு கவளம் வந்தது. நிஜாம் சிந்தித்து அவரது ஆட்சியின் கீழ் ஒரு சுதந்திர அரசை அமைப்பது பிரிட்டிஸ் இந்தியாவை விட்ட போது ஹைதராபாத் என்ற தேசியவாதிகள் இதற்கு எதிராக இருந்தனர். தெலுங்கு பேசும் மாவட்டங்கள் மற்றும் பழங்குடி மக்களின் பிரபலமாக இருந்து கொண்டிருந்தது. தெலுங்கு கொண்டு இந்த பாகங்கள் தெலுங்கானா என்று வந்தது. ஹைதராபாத் இருந்து தேசியவாதிகள் கிராமங்களில் பரவியது மற்றும் தெலுங்கு மொழிகளில் கல்வி விளம்பரப்படுத்தும் ஒரு சமூக சமத்தும் ஒரு ஜனநாயக வடிவம். பத்தொன்பது இருபதுகளில் மற்றும் முப்பதுகளில் ஆந்திரா மகாசபை இந்த காரணம் ஊக்குவிக்க வெளிப்பட்டது. கடலோர ஆந்திரா இருந்து தேசியவாதிகள் கூட பத்தொன்பது இந்த இயக்கத்தின் ஆதரவு நாற்பதுகளில், விரைவில் இயக்கம் நலச் சீர்திருத்தங்கள் தொடர்பான பிரச்சனைகளை எடுத்து மற்றும் நிஜாம் எழுதியிருந்த கடிதம் ஆதரவு இருந்தது. யார் தோராக்கள் ஆட்சி எதிர்த்தனர். ஆம் இந்த உள்நாட்டு கலவரத்தை இந்திய அரசு ஜவஹர்லால் நேரு கீழ் பார்வையில் பிரதமர் போலீஸ் நடவடிக்கை மேற்கொண்டு ஹைதராபாத் இணைப்பதற்கு உறுதி இந்திய யூனியன் கொண்டு மாநிலம் நீங்கள் எட்டாம்




வரைபடம் 1: ஒருங்கிணைந்த ஐதராபாத் மாநிலத்துடன் கூடிய தெலங்கானா

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

வகுப்பில் இவற்றை பற்றி படித்திருப்பீர்கள். அதில் கடலோ ஆந்திரா மற்றும் ராயலச்மா பகுதிகளில் மதராஸ் பாகங்கள் இருந்தன. விரைவில் ஒரு இயக்கம் உட்பட ஆந்திரா பிரதேசத்தில் மாநில உருவாக்கம் தொடங்கியது. அனைத்து பிரதேசங்களிலும் தெலுங்கு பேசப்பட்டது. மொழிவாரி மாநிலங்கள் அவ்வாறு பிரிக்கப்பட்டது.

## ஜென்டில் மென்ஸ் ஒப்பந்தம் மற்றும் ஆந்திர மாநிலம் உருவாக்கம்

மூன்று தனித்துவமான பகுதிகளில் மாவட்டங்களில் தெலுங்கு மொழி பேசினர். இவற்றில் தெலுங்கானா, கடலோ ஆந்திரா மற்றும் ராயல்சீமாவும் சேர்க்கப்பட்டுள்ளது. வெவ்வேறு வட்டாரம் தவிர மூன்று பகுதிகளில் வெவ்வேறு கலாச்சாரங்கள் மற்றும் அடையாளங்கள் இருந்தது. தெலுங்கு மொழி பழங்குடி மொழிகளை உள்ளடக்கிய தக்காண பீட பூமியில் வரையறுக்கப்பட்ட மொழிகளில் ஒன்றாகும். இது உருது, கன்னடம், மற்றும் மராத்தி, கடலோ ஆந்திரா மொழி போன்றவை இருந்த போதும் சமஸ்கிருத தாக்கம், தெலுங்கானா கலாச்சாரம் எனும் கலப்பு இருந்தது. ஒரு முஸ்லீம், த-த், கைவினைஞர்கள், பழங்குடி குடி பெயர்ந்த சமூகத்தினர் இருந்து வரையப்பட்ட என்று அதை ஒரு பெரிய விகிதம் இருந்தது. தெலுங்கான காரர்கள் சுய விவரத்தில் வேறுபட்டவர்கள் பழங்குடி மக்கள், மற்ற பகுதிகளில் ஒப்பிடுகையில் பிற்படுத்தப்பட்ட மற்றும் முஸ்லீம்கள் வரலாற்று ரீதியாக, கடலோர பகுதிகளில் விட சமஸ்கிருதம் கலாச்சாரத்தில் ஒரு பெரும் ஆதிக்கம் செலுத்தியது. அவர்கள் பிரிட்டிஸ் நேரடி ஆட்சிக்கு உட்பட்டு கூட இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆங்கில கல்வி, கடற்கரை பகுதியில் இருந்தது. ஒரு விரைவான நவீனமயமாக்கல் செயல்முறை பெற்றுவிட்டன. தெலுங்கானா மக்கள் நிஜாம்களின் கீழ் இருந்த போது உருது மொழி தள்ளப்பட்டது. அதே செயல்முறை ஊக்குவிப்பதில் மெதுவாக இருந்தது. நவீன கல்வியில் 1948-ல் தெலுங்கானாவில் படித்தவர்களில் எழுத்தறிவு சதவீதம் 9% ஆக இருந்தது. பெண்களின் எழுத்தறிவு சதவீதம் 4% ஆக இருந்தது.

பின்வரும் தீர்மானங்களை விளக்குக

1. இயற்கை அம்சங்கள்
2. சமூகம்
3. வரலாற்றுப் பின்னணி

கடலோர ஆந்திர இருந்த போது முக்கியமாக ஒரு டெல்டா கொண்ட வெறும் கால்வாய் பாசன அமைப்பை தெலுங்கானா வறண்ட பீட பூமியால் ஆன பகுதியாக இருந்தது. மானாவாரி விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு சார்ந்தேயிருக்கும் விலங்கு மேய்ச்சல் மற்றும் வேட்டை மற்றும் காட்டு பகுதிகளை கொண்ட பகுதியாக காணப்பட்டது. ஆங்கிலேயர்களின் ஆட்சி காலத்தில் பல்வேறு வகையான பயிர்களை பயிரிடக்கூடிய நிலமாக காணப்பட்டது. விவசாயம், வணிகம் மற்றும் தொழில் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. மேலும் பெற்றாத ஆறுகள் ஓடும் மாநிலமாக இருநதது. இங்கு கனிம வளம் நிறைந்த பணக்கார மக்கள் கடலோர வளங்களை பயன்படுத்த தெலுங்கானாவில் முதலீடு செய்ய ஆர்வமாக இருந்தனர். எனவே, விஷாலாந்திராவுக்கு தேவை ஆந்திர பிரதேசத்தில் இருந்து வந்தவர், இந்தியாவுடன் அதன் இணைப்புக்கு பிறகு ஹைதராபாத் மாநிலம் 1952-ல் புருகுலா ராமகிருஷ்ணா ராவ் முதல் அமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.பிராந்தியத்தில் 1953 மற்றும் தங்குதுர் பிரகாசத்துக்கு சென்னை மாகாண அதன் முதல்வர் ஆனார். எனினும், ஒன்றாக்க ஒரு சுறுசுறுப்பான பிரச்சாரம் இருந்தது. தெலுங்கு ஒரு பகுதிகளில் பேசும் ஆந்திர சட்டசபை ஒரு ஒருமித்த கடந்தபோது தீர்மானம் ஆதரிக்கிறீர்கள் இணைப்பு ஹைதராபாத் மாநில சட்டசபை உறுப்பினர்கள் ஒரு பெரிய எண் இணைப்பு பற்றி தீவிர இட ஒதுக்கீடு அவர்கள் மேலும் செல்வத்தர்கள் என்று கவலையடைந்த மற்றும் வளர்ந்த கடலோர ஆந்திரா உயரடுக்கு எதிர்கால மாநில ஆதிக்கம் என்று அந்த தனித்துவமான அம்சங்களை விளக்கவும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

தெலுங்கானா மக்கள் இல்லாமல் தங்கள் பகுதியில் வளங்கள் மீது இட்டுப்பாட்டை இழக்க வேண்டும். எதையும் பெற்று அவர்களின் கல்வி மற்றும் வேலை வாயப்பு பற்றி கவலை கடற்கரை பகுதியில் தங்கள் இளைஞர்கள் வாய்ப்புகளை ஆங்கிலம் ஒரு பெரிய எண் இருந்தது. படித்த இளைஞர்களுக்கு மத்திய அரசின் முயற்சியை இரு தலைவர்கள் மீது பக்கங்களிலும் தில்–, சந்தித்து 20–ம் தேதி "ஜென்டில்மென்" ஒப்பந்தம் கையெழுத்திட்ட பி.கோபால ரெட்டி, என்.சஞ்சீவி இருந்தன. ரெட்டி.ஜி Latchanna ஆந்திரா மற்றும் ந.ராமகிருஷ்ணர் ராஜ், ஏ.சத்திய நாராயண ராஜீ, M.சென்ன ரெட்டி, J.V.நரசிங்கி ராவ் மற்றும் K.V.ரொங்கி ரெட்டி தெலுங்கானா அவர்கள் 14 புள்ளிகள் அடிப்படையில் ஒப்பு இந்த இரண்டு மாநிலங்களில் இணைப்பிற்கு வழி வகுத்தார். நிபந்தனை மற்றும் தெலுங்கானா மக்களின் திருப்தி உட்பட்டு என்நாலும் இதனால் புதிய ஹைதராபாத் தலைநகரமாக்கு ஆந்திரா மாநிலத்தில் உருவானது. அதில் முக்கிய ஒப்பந்தம் இருந்தது சுட்டிக்காட்டுகிறது.

1. Administration ஆட்சி மீதான செலவினம் மூலம் விகிதாசாரத்தில் சுமக்க வேண்டியதாக இருந்தது. இரண்டு பகுதிகளுக்கும் மற்றும் தெலுங்கானா பகுதியில் இருந்து உபரி வருவாய் செலவழிக்கலாம் என்ற மட்டுமே தெலுங்கானா வளர்ச்சி.
2. தெலுங்கானா இருக்கும் கல்வி வசதிகள் ஒதுக்கப்படும். பிராந்தியத்தில் மட்டும் இருந்து மாணவர்கள்.
3. இது மட்டும் கீழ் ஒரு அந்த முல்கி விதிகள் தொடர வேண்டும் என்று ஒப்புக்கொண்டார். தெலுங்கானாவில் வகிக்கும் 12 ஆண்டுகளுக்கு குறைந்த பட்ச வேலைகள் தகுதி பெற்றனர், மற்றும் தெலுங்கானா கல்வி நிறுவனங்களில் நுழைவதில் எந்தவித பாதிப்பும் இல்லை.
4. இது போன்ற ஒரு அமைப்பை உருவாக்கி ஒரு பிராந்திய கவுன்சில் அமைப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது. தேவைக்கு ஏற்ப மேற்பார்வையிட சட்டமன்றத்தி–ருந்து 20 உறுப்பினர்களும் மற்றும் தெலுங்கானா வளர்ச்சி மற்றும் தெலுங்கு விவசாய நிலம் போன்றவற்றை விற்பனை பிராந்திய சபை மூலம் கட்டுப்படுத்த வேண்டும்.
5. தெலங்கானாவில் உள்ள விவசாய நிலங்களை விற்பது பிராந்திய அமைப்பால் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.
6. ஆந்திரப்பிரதேசம் அமைச்சகத்தி–ருந்து 40 சதவிகிதம் உறுப்பினர்களையும், தெலுங்கினா ஆந்திரா 60 சதவிகிதமும் உறுப்பினர்களை கொண்டிருக்கும்.
7. முதல் அமைச்சர்யாகி ஆந்திராவில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டால் துணை முதல்வராகி தெலுங்கானாவை சேர்ந்தவராகி இருக்க வேண்டுமென்று பிராந்திய கவுன்சில் முக்கியமாகி கடைபிடிக்கப்பெற்றது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

மற்ற பகுதிகளின் வளர்ச்சி திட்டங்களுக்கு மாநிலங்கள் வரையறையை பார்க்க வேண்டும். எனினும் அவற்றை பிராந்தியத்தின் மூலம் செய்ய வேண்டும் பிராந்திய கவுன்சில் அனைத்து சுற்றுப்புற வளர்ச்சிகளை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.




வரைபடம் 2: ஒருங்கிணைந்த ஆந்திரப் பிரதேசத்தில் தெலங்கானா

தெலுங்கானா திட்டமிடுதல் மற்றும் அபவிருத்தி தொடர்பான அனைத்து விவகாரங்களையும் பார்க்க வேண்டும்.

நீர் பாசன மற்றும் பொது திட்டம் உள்பட தொழில்துறை வளர்ச்சியில் சேவைகள், ஆட்சேர்ப்பு போன்றவற்றின் மூலம் விற்பனை கட்டுப்பகுதி கொண்டு இருந்தது. பிராந்தியத்திற்கு வெளியில் மக்கள் இருந்தனர்.

நதி ஒப்பந்தம் மூலம் அரசு வளங்களை சமமாக செலவு செய்ய உறுதிபடுத்தினர். மேலும் இளைஞர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளுக்கு உறுதி அளித்தது. தெலுங்கானா, இறுதியில் தெலுங்கானாவுடன் சேர்ந்த ஆந்திர பிரதேசம் என்ற மாநிலமாக உருவானது. மாநிலத்தை உள்ளடக்கிய மாநிலமாக உருவானது.

- தெலங்கானா வட்டார கவுன்சி-ன் உறுப்பினராக உன்னை கற்பனை செய்து கொள்க. சிறப்பு வளர்ச்சி திட்டங்களாக நீ எவற்றை பரிந்துரை செய்திடுவாய்? நீ பரிந்துரை செய்திட்ட மூன்று திட்டங்களை பட்டிய-ட்டு கூறுக.
- தெலங்கானாவின் தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மற்றும் நாடோடி மக்களுக்கு வேலைவாய்ப்புகளை நிச்சயமாக வழங்கியிருக்கும் என நீ கருதுகிறாயா?
- தெலங்கானாவின் தாது பொருட்களை சிறந்த முறையில் பயன்படுத்தும் வழிமுறைகள் எவையாக இருக்கும்?
- தெலங்கானா பகுதியின் தொழிலாளிகள் மற்றும் விவசாயிகள் எதிர்கொண்ட சவால்கள், இதர பகுதிகளோடு ஒப்பிடும்போது மிகவும் வேறுபட்டவை என நீ கருதுகிறாயா? வகுப்பறையில் கலந்துரையாடுக.
- தெலங்கானா தனி மாநில கோரிக்கையை மாணவர்கள் முன்னின்று நடத்தியதற்கான காரணங்களை கூறுக.

## 1969 போராட்டம்

ஜென்டில்மேன் ஒப்பந்தத்திற்கு மாறாக செயல்பட தொடங்கியது. தெலுங்கானா பகுதியில் உபரி வருவாய் திசை காட்டியிருந்தது. மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் வேலை பாகுபாடுதுறை இருந்தது. அரசுரிமை அந்தஸ்து அனைத்தையும் ஆந்திர பிரதேச நபர்கள் பெற்று வந்தனர். முல்கி விதிகளை மீறி தெலுங்கானா பகுதிகள் அனைத்தையும் ஆக்கிரமித்து கொண்டனர். நாட்டில் எதிர்ப்புகள் தொடங்கின. அந்த எதிர்ப்பு வெகுஜனு இயக்கமாக மாறியது. இதில் உஸ்மானிய மாணவர்கள் முக்கிய பங்கு வகித்தனர். ஆர்ப்பார்ட்டங்கள், வேலை நிறுத்தங்கள், உண்ணாவிரதத்தின்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இந்த விசயத்தில் போலீஸ் அடக்குமுறையை கையாண்டனர். அதில் துப்பாக்கி சூடு உள்ளிட்டவை நடைபெற்றன. 370 மக்கள் பெரும்பாலும் மாணவர்கள் கிளர்ச்சி சமயத்தில் உயிர்களை இழந்துள்ளார். தெலுங்கானா பகுதியை சேர்ந்த பல தலைவர்கள் ஒன்றாக சேர்ந்து தெலுங்கானா பிரஜா சமிதி எனும் இயக்கம் மூலம் தனி மாநில உருவாக்கம் வேலை புதிய அரசியல் கட்சி வடிவத்தில் உருவெடுத்தது. மத்திய அரசு நீண்ட பேச்சு வார்த்தைகள் நடத்தியதோடு எட்டு அம்சத் திட்டத்துடன் அமைக்க ஒரு குழுவை அனுப்பியது. அந்த குழுவின் அறிக்கை திருப்தி அளிக்கவில்லை என்றாலும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று கொண்டே இருந்தது. 1972-யில் “ஜெய் ஆந்திரா இயக்கம்” உருவானது. முல்கி விதிகள் அகற்றப்பட்டது தொடர்பான அரசுரிமைகள் மற்றும் மாணவர்கள் போராட்டம்




ஷம்சாபாத் போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் 6பேர் காயமடைந்தனர்





*படம் 21.1 1969ஆம் ஆண்டில் நடந்த தனி மாநில கோரிக்கையின் எதிர்ப்புகள்*

உருவாக்கப்பட்டது. வேலை வாய்ப்புகளுக்கு மிரட்டப்படுவதாகவும், நீங்கள் கற்பனையாகவும், பிராந்திய கவுன்சில் என்ற விசேட நடவடிக்கை எடுக்காமல் அமைதியாக இருக்க வேண்டும் என்று முன்மொழியப்பட்டது. மூன்று முக்கிய திட்டங்களை செய்ய முன்மொழிந்தனர். தாழ்த்தப்பட்ட பழங்குடி வாய்ப்புகளும், தெலுங்கானா நாடோடிகளும் உறுதி செய்ய வேண்டும் என்றார்.

தெலுங்கானா கனிம வளங்களை பயன்படுத்திக்கொள்கிறீர்களா, தனிம மாநிலம் கொடுத்த பின்னர் பல்வேறு விதமான சவால்களை சந்திக்க வேண்டி வரும் 1973-ல் மத்திய அரசு இயற்றியுள்ள அனைத்து பகுதிகளையும் உறுதி செய்யவும், அரசுப் பணிகளிலும் முன்னுரிமை மக்களுக்கு வழங்கப்படும் எனவும் கல்வி வாய்ப்புகள் அனைத்து பகுதிகளிலும் விரிவுப்படுத்தப்படும் எனவும் மத்திய பல்கலைக்கழம் ஒன்று அமைக்க யவேண்டும் என முல்கி விதியில் பிராந்திய குழு கூறியிருந்தது. ஆனால் அவை அனைத்தும் செய்யாமல் தெலுங்கானாவை கைவிட்டனர். இதனால் தனித்துவமான அடையாளத்தை இழந்து ஜென்டில்மென் ஒப்பந்தம் மீறியதாகவும், ஆந்திர மாநிலத்தில் அமைக்கப்பட்டதற்காகவும் புதிய அலை உருவானது. ஆளும் காங்கிரஸ் கட்சி, தெலுங்கு தேச கட்சி உருவாக்கம் மற்றும் பிராந்திய போராட்டங்கள் உருவாகின.

தெலுங்கானாவில் உள்ளவர்களுக்கு பெரும் அதிருப்தி அடைந்தனர்.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

மொத்த விளைச்சல் நிலம் - மில்-யன் ஹெக்டரின்

| பகுதி | 1955-56 | 2006-07 | வளர்ச்சி |
|---|---|---|---|
| ஆந்திரா | 4.2 | 5.3 | 20 |
| தெலுங்கானா | 4.8 | 5 | 5 |

நீர்பாசனம் லட்சத்தில் ஹெக்டரில்

| | | | |
|---|---|---|---|
| ஆந்திரா | 17 | 23 | 135 |
| தெலுங்கானா | 7 | 19 | 257 |

*Source : Sri Krishna Committee Report*

அதேபோன்று நீர்ப் பாசன வசதிகளை மேம்படுத்துத-ல் தெலங்கானா கிணற்று நீர்பாசனத்திலும் ஆந்திரம் கால்வாய் நீர்ப்பாசனத்தின் மீதும் ஆதாரப்பட்டுள்ளதை காணலாம்.

நீர் பாசனம் லட்சத்தில் ஹெக்டர் 2007

| பகுதி | கிணறு | கால்வாய் | தொட்டி | மற்றவை |
|---|---|---|---|---|
| ஆந்திரா | 5 | 13 | 2.5 | 2.5 |
| தெலுங்கானா | 14 | 2.5 | 2 | 0.5 |

## தெலுங்கானாவில் பெருகிய அதிருப்தி :

அரசியலமைப்பில் போன்ற ஜென்டில்மேன் ஒப்பந்தம் இருந்த போதிலும், பல முக்கிய புள்ளிகள் மற்றும் கவுன்சில் அமல்படுத்தப்படவில்லை. பின்னர் பிராந்திய தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரைகளை கட்டாய மற்றும் பெரும்பாலும் அரசாங்கம் அலட்சியம் செய்யக. 1956 முதல் 1990 வரை அந்திர பிரதேசத்திலேயே அனைத்து விதமான அணைகள் கட்டப்பட்டன. பாசன வசதி மற்றும் மின்சார திட்டங்கள் தொடங்கியது. பரந்த சுரங்க தொழிற்துறை வளாகங்கள் திறந்து வைக்கப்பட்டன. விவசாயத்தில் பசுமை புரட்சி மாற்றம் தொடங்கி வைக்கப்பட்டது. விவசாய உற்பத்தி பல்கலைக் கழகங்கள் மற்றம் தொழில்நுட்ப நிறுவனங்கள் பெரும் எண்ணிக்கையில் விரிவுபடுத்தப்பட்டிருந்தது. 1990-க்கு பிறகு மாநில தகவல் தொடர்பு அதிகரித்தது. தொழில்நுட்ப துறையில், குறிப்பாக ஹைதராபாத் மற்றும் தெலுங்கானாவில் வளர்ச்சி மிகவும் குறைவாகவே இருந்தது என்பதே உண்மை. தெலுங்கானா பகுதியில் வளங்கள் மிகவும் அதிகமாக இருந்தபோதும் அங்குள்ள மக்கள் நலனுக்காக பயன்படுத்தவில்லை. இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் அதிகப்படுத்தவில்லை. தெலுங்கானாவில் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 159 இருந்தன மற்றும் இரண்டிற்கும் பொதுவாக 116 மட்டுமே ஆந்திராவிற்கு மட்டும் 181 கல்லூரிகள் இருந்தன. அது போல கல்லூரி கல்வி மானியம் தெலுங்கானா 93 கோடி ஆனால் ஆந்திராவில் 224 கோடி சமச்சீரற்ற வளர்ச்சி காணப்பட்டது. மேலும் கலாச்சார ரீதியாகவும், பாரபட்டம் செய்யப்பட்டனர். மேலும் ஆந்திரா

- மொத்த பயிரிடப்படும் பரப்பின் அதிகரிப்பு, விவசாய வளர்ச்சியை எடுத்துரைக்கும் குறிப்பானாக ஏன் கருதுகிறீர்கள்?
- நீர்பாசனத்திற்காக கிணறுகளை அளவுக்கு அதிகமாக சார்ந்திருப்பதால் தெலங்கானா மாநில விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் யாவை?
- பொது நீர்பாசன அமைப்பான ஏரிகள் போன்றவை கடந்த காலத்தில் உதாசினப்படுத்தப்பட்டன. அவற்றை மீண்டும் செயல்பட செய்ய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?
- தெலங்கானாவில் தற்கொலைகள் அதிக எண்ணிக்கையில் காணப்படுவதற்கான காரணம் என்னவாக இருக்கலாம்?
- கடலோர ஆந்திரப்பிரதேசத்துடன் ஒப்பிடுகையில் தெலங்கானாவில் குறைவான எழுத்தறிவு வீதம் இருப்பதன் காரணம் என்னவாக இருக்கலாம்?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கடலோர பகுதியினருக்கு கலாச்சாரம், மொழி, பதவி, உயர்வு அனைத்தும் அவர்களே பெற்றனர். தெலுங்கானா பின்தங்கி இருப்பதாகவே நடத்தப்பட்டனர். வரலாறு, கலாச்சாரம் மற்றும் தலைவர்கள், பள்ளி பாட புத்தகங்கள், நாட்டுப்புற கலைகள், திருவிழாக்கள் போன்றவற்றில் தெலுங்கானா பகுதியினருக்கு பாரபட்சம் காட்டினர். திருவிழா போன்ற அனைத்து செயல்பாடுகளு;கும் கடலோர பகுதியினரின் கலாச்சாரமே கடைபிடிக்கப்பட்டது. படங்களில் கூட தெலுங்கானா மக்கள் பின்தங்கியவர்களாகவும், படிப்பில் மிக குறைவான தகுதியுடையவர்களாகவும் சித்தகரிக்கப்பட்டனர். ஸ்ரீ கிருஷ்ணா குழு கூறியது ஆந்திர கலாச்சார தொழில் மற்றும் ஆதிக்கம் முழுவதும் கடலோர ஆந்திராவினரிடமே உள்ளது என்று கூறினர். திரைப்படத் தொழிலை போற்று அச்சு துறையிலும், ஆடியோ காட்சி ஊடகங்கள் ஆகியவற்றில் ஆந்திர கடலோர பகுதியினரே பெரும்பான்மை பெற்று இருந்தனர். திரைப்படத் துறையிலும், வர்த்தகர்கள், தயாரிப்பாளர்கள் அனைத்திலும் ஆந்திர பகுதியினரே இருந்தனர், மற்றும் ரியல் எஸ்டேட் துறையிலும், நிலம் வாங்கவும், விற்கவும் ஹைதராபாத்தை பயன்படுத்தி கொண்டனர். அதே நேரத்தில் தொழிலாளர்கள், தெலுங்கானா ஏழை விவசாயிகள் எதிர் கொண்டது பல்வேறு வகையான அழுத்தம் அதிகரித்தது. ஒரு புறம் நிலங்கள் அனைத்தும் நீர் இல்லாமல் வறண்டு கிடந்தது. கைவினை கலைஞர்களின் உற்பத்தி திறன் மற்றும் அவற்றிற்கு போதுமான மூலதனம் இல்லாமல் பறிதவித்தனர். அதே போன்று சலவை தொழிலாளர்கள் மற்றும் நாடோடி சமூகத்தினரும் சாதி அடிப்படையில் கொடுமைக்கள்ளாயினர். தங்களுடைய வேலைகளின் மூலம் போதுமான வருமானம் அவர்களுக்கு கிடைக்கவில்லை. பணக்காரர்களுக்கே அரசாங்கம் சாதகமாக இருந்தது. ஆந்திர வணிக மக்களுக்கு கூடியவர்களாவோ அரசாங்கம் இருந்தது. ஜனநாயக கொள்கைகளுக்கு மாறாகவே இவர்களுடைய செயல்பாடுகள் இருந்தன. தெலுங்கானா மக்களுடைய கோரிக்கைகளை செவி சாய்க்கவில்லை.

## 1990-ல் இயக்கம்

உயரடுக்கு மக்களின் பிரதிநிதியான முன்னாள் நிலப்பிரபுக்கள் மற்றும் தராஸ், தொழிலதிபர்கள், சுரங்க ஒப்பந்தகாரர்கள், வர்த்தகர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் அவர்களுடைய தொடர் அதிகாரங்களை கைவிடுவதாக இல்லை.

மாநில இயற்கை வளங்களை பயன்படுத்தி கனிமங்கள், நீர் மற்றும் சக்தி போன்ற எல்லா விருப்பங்களுக்கும் மாறுபட்ட வகையில் தன்னாட்சி உரிமை வேண்டும் என்ற முறையில் தீவிரமாக மக்கள் இறங்கினார். 1990-ல் பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கைகளினால் விவசாயிகள், கைவினைஞர்கள், ஒப்பந்தகாரர்கள், முதலீட்டாளர்களிடையே கடுமையான பிரச்சனைகள் ஏற்பட்டது. விவசாயிகளிடம் அதிகமான இலாபத்தை நேரடியாக பெற்றனர். சக்தி குறைவான உரங்கள், பூச்சிக்கொல்-கள் போன்றவை இறக்குமதி செய்து தெலுங்கானாவின் நிலத்தடி நீர்வளம் குறைக்கப்பட்டது. விவசாயிகள் நீருக்காக ஆழமான கிணறுகள்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

தோண்ட வழிவகுத்தது. தெலுங்கானாவில் விவசாயின் தற்கொலை பெரிய புரட்சியை ஏற்படுத்தி விளைநிலங்களை விரைவாக விற்பனை வடிவத்தை பெற்றது.

பாரம்பரியமாக வேலை செய்பவர்களை அரசாங்கம் ஏதாவது காரணம் காட்டி வேலை வாய்ப்பை குறைக்க ஆரம்பித்தனர். இதனால் தனியார்துறை, வேலையின்மை, பாதுகாப்பற்ற வேலை வாய்ப்பு போன்றவை மக்களிடம் பிரிவினையை உருவாக்கியது. இதனால் பல்வேறு விதமான இயக்கங்கள் உருவாயின. துடும்டப்பா, லம்பாடி, நாகரபெரி, யோருகலா போன்ற பழங்குடியினருமட் சேர்ந்து ஜல், ஜங்சல், ஜமீன் என்று குரல் கொடுக்க ஆரம்பித்தனர். மடிக்கதுந்திரா, குருமகுள்ளா, டல்லுடெப்பா, முருடிப்பா போன்ற தொழில்கள் அதிகரித்தன. அவர்களின் பிரச்சனைகளை தீர்க்க தெலுங்கானா தகவல் அறக்கட்டளை கொண்டு தலைவர்களை 1989-ஆம் ஆண்டு நிறுவினர். தெலுங்கானாவிற்கு செய்த அநீதிகளை அறிக்கையாக தயாரித்து நவம்பர் 1, 1996-யில் விதாராக தினம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் அறக்கட்டளையை சார்ந்த அறிஞர்கள் பேராசிரியர் ஜெயசங்கர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இதுவே தெலுங்கானா மாநிலம் தெலுங்கானா ஜனசபா, (1997) தெலுங்கானா மகாசபை போன்றவை உருவாக காரணமாக இருந்தது. இவற்றின் மூலம் ந-வடைந்த பிரிவினரின் நிலை மிகவும் மோசமானது. ஆசிரியர்கள் உட்பட தெலுங்கானா ஊழியர்களை தவிர அனைவருக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தினர்.

- தெலுங்கானாவில் கொண்டாடப்படும் திருவிழாக்கள் யாவை? அவற்றை மாதவாரியாக அட்டவணைப்படுத்தவும்.
- தெலுங்கானாவில் உருவாக்கப்படும் படங்கள் மக்கள், மொழி, கலாச்சாரம் போன்றவற்றை பட்டிய-டுக.
- இருபது ஆண்டுகளில் தெலுங்கானா பெரிய நகரமாக மாறிவிட்டது? இருந்தபோதும் மக்கள் ஏன் திருப்தி அடையவில்லை?
- தெலுங்கானா போன்று வேறு ஏதாவது மாநிலத்தில் பிரச்சனை ஏற்பட்டதா? இல்லையெனில் அதை நிவர்த்தி செய்வதற்கான காரணங்களை கூறுக.

தெலுங்கானா அறக்கட்டளை மூலம் நியமிக்கப்பட்ட அறிஞர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு கருத்தரங்கு நடத்தினர். 1997-யில் உஸ்மானிய பல்கலைக்கழகத்தில் உள்ள பல்வேறு பிரச்சனைகளை கருத்தில் கொண்டும், ஊழியர்கள், மாணவர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கலாச்சார ஆர்வலர்களை கொண்டு நடத்தினர். இவற்றில் கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், கூட்டங்கள் 'தூம் தாம்' என்று பல எழுச்சி மிகுந்த செயல்பாடுகள் நடைபெற்றன. இடையில் ஜெட்டிலா, ஜெகந்திரா 1978-ல் நடைபெற்ற ரகுளி சங்கனம் நடந்தது போன்று 1990 ஏற்பட்டது போல இளைஞர்கள் மற்றும் கிராமபுறங்களுக்கு வழங்கினர். இந்த காலகட்டத்தில் தெலுங்கானா இன்றியமையாததாக இருந்தது. இதனை தொடர்ந்து அனைவருக்கும் புதிய உற்சாகம், புதிய நிறுவனங்கள் உருவாயின. இவ்வாறு இணைந்த இலக்கிய கலாச்சார செயற்பாட்டு வாதங்கள் உருவாயின. புதிய அரசு சூழலை மாற்ற நூறு கேசட்டுகள் சி.டிக்கள் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் தயாரிக்கப்பட்டன. தெலுங்கானா பகுதி மக்கள் சென்று வரக்கூடிய இடங்களான ஹோட்டல்கள்,



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

திருமண மண்டபங்கள், பண்டிகை நாட்கள், தெலுங்கானா மக்களின் அறைகள் மற்றும் டெ-போனின் ரிங் டோன்கள், செல்போன்கள் போன்றவற்றிலும் தெலுங்கானா பிரிவினை தூண்டக்கூடிய வகையில் செயல்பாடுகள் நடைபெற்றன. இவ்வாறாக அனைத்து துறைகளிலும் எழுச்சி ஏற்பட்டது.

### தெலுங்கானா ராஷ்டிர சமிதி :

தெலுங்கானா ஜனபரிவுத், தெலுங்கானா மகாசபா தெலுங்கானா ஜன சபா, தெலுங்கானா அக்ஷாய வேதிகா போன்றவைகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். அரசியல் கட்சிகள் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்த தொடங்கியது. இந்த சமயத்தில் ஏப்ரல் 2001-யில் தெலுங்கானா ரஷ்டிர சமிதி உருவானது. இதற்கிடையில் தெலுங்கானா இயக்கம் பல்வேறு விதமான எதிர்ப்புகளை வெளிப்படுத்தியது. தூம் தாம்ஸ் (பொது பாடல் மற்றும் நடனம் போன்ற திட்டங்கள்) கர்ஜன்ஸ் (பிரம்மாண்டமான பொது கூட்டங்கள் கோரிக்கைகளை பிரகடனம் செய்ய) பாத யாத்திரை (பேரணிகள்) பேனாலு (தெய்வத்தை வழிபடுதல்) ரங்கோரி போன்றவை கொண்டு வரப்பட்டது. தெலுங்கானர்கள் தெருவில் நின்று ஷேவிங், இயக்கம் சலவை செய்தம் சமையல் செய்து பொது கூட்டு சமையல் வன்டா போன்றவைகள் செய்தும் இயக்கங்களை நடத்தினர். இத்தகைய பிரம்மாண்ட போராட்டம் மக்களிடையே தன்னிச்சையாக ஏற்பட்டது. பின் மாணவர்கள் ஒன்றுசேர்ந்து JAC யை டிசம்பர் 2009 தொடங்கு ஏப்ரல் 2010-யில் மாணவர் இயக்கம் முன்னின்று நடத்தியது. மாணவர்களிடையே கூட்டு இயக்கம் ஏற்படுத்தப்பட்டது. குழு JAC-க்கு பின்னர் பல இயக்கங்கள் தொடங்கின. நூற்றுக்கணக்கான இளைஞர்கள் தற்கொலை செய்துக்கொண்டனர். அவர்களுடைய குடும்பங்களும் தெலுங்கானர்களுக்கும் இது நவம்பர் 2009 சோக வரலாறு ஆகும்.

சபன்டா வர்ணங்கள் (அனைத்து சாதி) சாக்க-ஸ் (சலவை தொழிலாளி) நய்பிரப்பின்ஸ் (முடி திருத்துபவர்கள்) டட்டி-டாப்பர் கட்டிக்காபரலு, வம்சராசுலு, லம்பாடஸ், எருக்கலாஸ், பட்டாஸ், போன்றவை உருவாக்கப்பட்டது. அவர்கள் அனைவரும் JAC-யில் இணைந்தனர். பல மண்டலங்களில் தலைமையகங்கள் உருவாக்கப்பட்டது. அவரவர் மரபுகளின்படி அவரவர் வழக்கங்களில் எதிர்ப்பை தெரிவித்தனர். அதாவது மரபு , ஜாதிகளின் அடிப்படையில் இல்லாமல் பல்வேறு தொழில்களை சேர்ந்தவர்களும் ஒன்று திரண்டனர். ஆசிரியர்கள், மாணவர்கள், பெண்கள், வியாபாரிகள் தொழிற்சாலை வைத்திருப்பவர்கள் அனைவரும் ஒன்று திரண்டனர்.

கே.சந்திரசேகர் ராவ் உண்ணாவிரதம் - 2009 இந்த பிரச்சனைக்கு தீர்க்கமான முடிவு எடுக்க கே.சந்திரசேகர் ராவ், தெலுங்கானா ரஷ்டிரசமிதியின் தலைவர் 29 நவம்பர் உண்ணாவிரதத்தை சிந்திபேட்டில் தொடங்கினார். அவரை கைது செய்தனர். பின்னர் சிறையில் அடைத்த பிறகும் கூட உண்ணாவிரதம் இருந்தார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். கம்மம் சிறையில் அடைக்கப்பட்ட பின்னரும் உண்ணாவிரதத்தை கைவிட மறுத்தார். உஸ்மானிய மாணவர்கள் அனைவரும்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com


படம் 21.2


படம் 21.3


படம் 21.4

*படம் 21.2, 21.3 & 21.4:*

மக்கள் அதிக எண்ணிக்கையில் பல்வேறு முறைகளில் பங்கேற்றனர். கி.பி.2000க்கு பின் அடுத்து வந்த ஆண்டுகளில் மக்கள் பங்கேற்ற இந்த நிகழ்வுகளை காட்டும் படங்களை நாங்கள் இப்பாடத்தில் கொடுத்திருக்கிறோம். அனைத்து மக்களின் போராட்டம் நடந்தபோது ஆசிரியர்கள், விவசாயிகள் மற்றும் பெண்கள் பங்கேற்று தங்களின் கோரிக்கைகளை வ-யுறுத்துகின்றனர்.

சேர்ந்து கூட்டு நடவடிக்கை எடுத்தனர். ஒரு கமிட்டி உருவாக்கி அதற்கு (TJAC) 16 நவம்பர் ஒற்றுமையை வெளிப்படுத்தினர். ககாதியா பல்கலைக்கழகம் கூட்டு நடவடிக்கை குழுக்களை (JACS) உருவாக்கியது. பின்னர் பாலமர், சாவாகனர், தெலுங்கானா, மகாத்மா காந்தி பல்கலைக்கழகம் பின்னர் ஊழியர் JACS மாவட்ட அளவில் JACS முளைத்தன.

- பல்வேறு பிரிவை சேர்ந்த மக்கள் எவ்வாறு மாநில போராட்டத்தில் பங்கேற்றனர் என்பதற்கு எடுத்துகாட்டுகள் தருக.
- தனி மாநிலம் கோரும் இப்போராட்டத்திற்கு அனைவரும் வெளியே வந்து ஆதரவு அளிக்க வேண்டியது முக்கியமானது என்று நீ ஏன் கருதுகிறாய்?

## K. சந்திர சேகர ராவின் உண்ணாவிரதம்- 2009

கே.சந்திரசேகர் ராவ் உண்ணாவிரதம் – 2009 இந்த பிரச்சனைக்கு தீர்க்கமான முடிவு எடுக்க கே.சந்திரசேகர் ராவ், தெலுங்கானா ரஷ்டிரசமிதியின் தலைவர் 29 நவம்பர் உண்ணாவிரதத்தை சிந்திபேட்டில் தொடங்கினார். அவரை கைது செய்தனர். பின்னர் சிறையில் அடைத்த பிறகும் கூட உண்ணாவிரதம் இருந்தார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். கம்மம் சிறையில் அடைக்கப்பட்ட பின்னரும் உண்ணாவிரதத்தை கைவிட மறுத்தார். உஸ்மானிய மாணவர்கள் அனைவரும் சேர்ந்து கூட்டு நடவடிக்கை எடுத்தனர். ஒரு கமிட்டி உருவாக்கி அதற்கு (TJAC) 16 நவம்பர் ஒற்றுமையை வெளிப்படுத்தினர். ககாதியா பல்கலைக்கழகம் கூட்டு நடவடிக்கை (JACS) உருவாக்கியது. பின்னர் பாலமர், சாவாகனர், தெலுங்கானா, மகாத்மா காந்தி பல்கலைக்கழகம் பின்னர் ஊழியர் JACS மாவட்ட அளவில் JACS முளைத்தன. தெலுங்கானா ரஷ்டிரிய சமிதி தலைவர் சந்திரசேகர் ராவ் 29

நவம்பரில் இருந்து 10 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். பின்னர் 9 டிசம்பர் 2009-யில் மக்கள், மாணவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி சட்டமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தினர். JAC என்ற தனிமாநில அறிவிப்பு



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

செய்யப்பட்ட அறிவிப்பு பலகையை ஊன்றினர். பல்கலைக்கழக மாணவர்கள் வீடுகளில் மறைந்து செயல்பட்டனர்.

## தெலங்கானா சாதிக்கும் முயற்சிப் பாதையில் :

மிக முக்கியமான செயல்பாடு என்னவென்றால் 10 டிசம்பர் 2009ல் சட்டசபையில் தாக்குதல் நடத்தியது பெரிய அளவில் பேசப்பட்டது. தெலங்கானா அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க மத்திய அரசு முடிவு செய்தது. ஆனால் M.P, M.L.A போன்றவர்களிடம் இருந்து எதிர்ப்பு கிளம்பியது. இதன் காரணமாகவும் சந்திர சேகர ராவ் உண்ணாவிரதமும், சட்டசபை தாக்குதலுமே தெலங்கானா உருவாவதற்கு காரணமாக அமைந்தது. தெலங்கானா மாநில அறிவிப்பை வெளியிடாவிட்டால் மாணவர்கள் சட்டசபையை முற்றுகையிடுவோம் என அறிவித்தனர்.

- தெலங்கானா மாநில ஏற்பாட்டால் சுரங்கம் மற்றும் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் எவ்வாறு பயனடைந்தனர் என நீ கருதுகிறாய்?
- ஏழை கைவினை தொழிலாளர்கள் மற்றும் பொருட்கள் தயாரிப்போர் கௌரவமான வாழ்க்கை வாழ்ந்திட எப்படிப்பட்ட கொள்கைகள் பின்பற்ற வேண்டிய அவசியம் உள்ளது?
- தேவையான நடவடிக்கைகள் என்ன?

### தெலங்கானா இயக்கத்தில் எதிர்ப்பு முறைகள் :

தெலங்கானா இயக்கம் பலவகையான எதிர்ப்பு முறைகளையும் மக்களை ஒன்று திரட்டும் வழிமுறைகளையும் உருவாக்கி செயல்படுத்தியது. தூம்தாம், கர்ஜனா, சடக்பந்த், சட்டமன்ற முற்றுகையிடுதல், பாத யாத்திரைகள், போனாலு, மில்-யன் நடைபயணம், அனைத்து மக்களின் போராட்டம் மற்றும் சாகரஹாரம் போன்றவற்றை மூலம் மக்கள் திரண்டு பங்கேற்றனர்.

'தூம்தாம்' என்பது பாடல்கள், நடனங்கள் மூலம் எதிர்ப்பை காட்டும் ஒரு வழியாகும். பல்வேறு கிராமங்களை சேர்ந்த கலைஞர்கள், பாடகர்கள் மற்றும் நடனக்காரர்கள் ஒரே மேடையில் தோன்றி, திறமைகளை காட்டினர். ஒக்கு கதா, சிறுத்தைகள், கோலாட்டம், பதுகம்மா, கொல்ல சுத்தலு, ஏகநாதம் மற்றும் உள்ளூர் பாடல்கள் இந்த தூம்தம் நிகழ்ச்சியில் பொதுவாக காணப்பட்டன. தெலங்கானா பாடல்களுக்கு அவர்கள் நடனமாடினர். தெலங்கானாவின் கலாச்சாரத்தை மக்களுக்கு அறிவூட்டி, தெலங்கானா போராட்ட இயக்கத்திற்கு மக்களின் ஆதரவை திரட்டினர்.

மக்கள் தெருக்களிலேயே சமையல் செய்து உணவை உட்கொள்ளும் 'வண்டா வார்ப்பு' நிகழ்ச்சியில் மக்கள் மொழி, மத வேறுபாடுகளை மறந்து பெருமளவில் பங்கேற்றனர். இது 'சமபந்தி போஜனாலு' என்றழைக்கப்பட்ட நிகழ்ச்சியாகும். (அனைவரும் ஒன்று சேர்ந்து உணவு உண்ணுதல்) பேருந்துகள் மற்றும் இதர வாகனங்கள் நிறுத்தப்பட்டன. பயணிகளுக்கும் இந்த வண்டா வளர்ப்பு நிகழ்ச்சியில் சமைத்த உணவு அளிக்கப்பட்டது.

படம் 21.5





படம் 21.6



படம் 21.7

*படம் 21.5, 21.6 & 21.7 எதிர்ப்பு இயக்கத்தினரின் முறைகள் தெலங்கானா மக்களின் கலாச்சார அடையாளம் மற்றும் பண்டிகைகள் குறித்த தனித்தன்மையை எடுத்துரைத்தன. இப்பகுதி மக்களின் பாடல்கள் மற்றும் நடனங்கள் போராட்டத்தின் போது காட்டப்பட்டன.*



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

மத்திய அமைச்சரவை தெலங்கானா மாநில உருவாக ஆரம்பித்தது என அறிவித்த பின்னரே சந்திர சேகர ராவ் உண்ணாவிரதத்தை நிறுத்தினார். ரேகண்ட நிலைமைகள் அனைத்தும் போராட்டத்தின் வேர் வரை வலு;படுத்தியது.ஒரு சாராரிடமிருந்து எதிர்ப்புகள் இருந்தாலும் அதற்கான கமிட்டியை மத்திய அமைச்சகம் அமைத்தது. இயக்கத்தின் முக்கிய அம்சங்களாக இருந்தது உண்ணாவிரதமும், மாணவர்களின் பங்களிப்பும், பொது மக்களின் பங்பெடுப்பும், சட்டசபை முடக்கியதும் ஆகும்

## பின் வாங்கும் அறிவிப்பு

இந்த அறிவிப்பு 23 டிசம்பர் 2009ல் ஆந்திர அரசியல் தலைவர்கள் மற்றும் ஸ்ரீகிருஷ்ணா தலைமையில் இருந்து ஆந்திர மாநிலத்தில் உள்ள முன்னேற்றங்களை குறித்து விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்த செயல்பாடு தெலங்கானா மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது. எங்களுடைய காரணங்களை கேட்ட பின்னர் நாங்கள் பின்வாங்கும் அறிவிப்பை வெளியிடுவோம் எனக் கூறினர். ஹைதராபாத் நகரம் வளர்ச்சி அடைந்த நகரம் இந்தியாவில் உள்ள முக்கியமான நகரங்களில் இதுவும் ஒன்று. வேலை தேடி வருபவர்கள் முதலீட்டாளர்கள் கடலோர கால்வாய் மூலம் நீர்பாசன வசதி மற்றும் மின்சாரம் வழங்குதல் போன்றவற்றை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் எனக்கூறியது.







*படம் 21.8, 21.9: வீதிகளிலேயே சமைத்து உண்ணுதல் போராட்டம் நடத்தப்பட்டது. தனித் தெலங்கானா மாநில ஏற்பாட்டிற்கு மக்களின் ஒற்றுமையை இது எடுத்துரைத்தது.*

தெலுங்கு மொழி மூலம் இணைந்த மாநிலம் இன்று இரண்டாக பிரிகிறது. ஒரு சில துரதிஷ்டமான காரணங்களால் இன்று தெலுங்கானா புதிய மாநிலமாக உருவாக முடிந்தது.

இதற்கிடையில் தன்னாட்சி மற்றும் இல்லாத கட்சி நிறுவனங்கள் பெரிய அளவில் தோன்றி பொதுவான மக்களை அணி திட்ட அவற்றின் செயல்பாடு தொடர்ந்து



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



படம் 21.10 : போராட்டக்காரர்கள் தடுப்புகளை அகற்றிக்கொண்டிருக்கின்றனர்



படம் 21.11 : மில்-யன் நடைபயணத்தில் போராட்டக்காரர்கள் பங்கேற்ற காட்சி

சுதந்திர அரசாக மற்றும் புதிய மாநிலமாக பிரதிநிதித்துவம் கொண்ட தெலுங்கானாவாக சமூகத்தில் பல்வேறு பிரிவுகள் கொண்ட இயக்கமாக உருவாக பின்னர் அரசியல் வடிவம் கொடுக்கப்பட்டது. சமூக அமைப்புக்கள் மற்றும் அரசியல் இயக்கம் மற்றும் வெகுஜன பலப்படுத்தி செயல்படுத்தியது இந்த இயக்கம்.

## தெலங்கானா மாநிலம் சாதிக்கப்பட்டது

தெலுங்கானா செய்துவிட்ட செயல்பாடு தொண்டர்களின் இடைவிடாத தொண்டு மற்றும் ஆர்வலர்களின் ஒற்றுமை மற்றும் தலைமை செய்து செயல்படுத்திய அமைப்புகளை ஐக்கியப்படுத்தும் பொருட்டு அனைத்து அரசியல் கட்சிகள் அமைப்புகள் தெலுங்கானா ஆறு முக்கிய போராட்டங்களின் கீழ் தொடங்கப்பட்டன. ஒத்துழையாமை இயக்கம், மில்-யன் மார்ச், சகல ஜனலு சமிதி, ஒரு நாற்பத்தி இரண்டு நாள் பொது வேலை நிறுத்தம் சாகர ஹாராம் (ஹுசைன் சாகர் சுற்றி மனித சங்கி-)

சன்சத் யாத்ரா (பாராளுமன்றத்தில் மார்ச்) சலோ அசெம்பிளி, தெலுங்கானா பிரிந்தது. மத்திய அரசு, இந்தப் பின்னணியில் தான் இந்த முயற்சியை

- பெருமளவு எண்ணிக்கையிலான கூட்டு செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் இதர அமைப்புகள் பல்வேறு நிலைகளில் அமைக்கப்பட்டன. இக்குழு ஏற்படுத்துவதன் அவசியம் என்ன? போராட்டத்தில் இதன் தாக்கம் என்ன?
- தெலங்கானா போராட்ட இயக்கத்தில் பங்கேற்றவராக உன்னை நீ கற்பனை செய்துக்கொள். மத்திய அரசாங்கம் தனி தெலங்கானா மாநிலம் உருவாக்கிட சம்மதித்து அறிக்கை வெளியிட்டபோது உன்னுடைய மனதில் தோன்றும் எண்ணங்கள் குறித்து வரையறு.



படம் 21.12 : ஐதராபாத் நகரின் டேங்க் பண்ட் சாலையில் 'சாகரஹாரம்' என அழைக்கப்பட்ட ஊர்வலம்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

தொடங்கியது. இரண்டு பிரதேசங்களிலும் மூத்த காங்கிரஸ் தலைவர்களின் ஒற்றுமையே முக்கிய காரணமாக விளங்கியது. இது ஒரு பெரிய தேசிய பிரச்சனையாக மாறும் என்று கூறினர். ஆந்திரா மற்றும் தெலுங்கானா மக்களிடம் ஒரு குழு விசாரித்த பின்னரே முடிவு எடுத்தனர். அதன்படி சட்டமன்றத்தில் மசோதா நிறைவேற்றப்பட்டது. ஜூன் 2, 2014-யில் ஆந்திர மாநிலத்திடம் இருந்து பிரித்து தெலுங்கானா பிரிந்தது. பாராளுமன்றத்தில் மசோதா, பாஜக பகுஜன் சமாஜ் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு இருந்தது. பிற எதிர் கட்சிகளின் மக்களும் கொண்டாடினர். ஜனநாயக வழிமுறையில் முடிவு தாமதமாக எடுக்கப்பட்டதால் எதிர்ப்புகளின் வடிவங்கள் குறைந்திருக்கலாம்.







வரைபடம் 3: தெலங்கானா மாநிலம் ஜூன் 2, 2014ல் உருவானது

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

- ராயலசீமாவில் இருந்து ஐதராபாத் சென்று வேலைசெய்யும் வேலைக்காரராக உன்னை கற்பனை செய்துக் கொள். உன் மனநிலை எண்ணங்கள் குறித்து விவரி.
- பெண் தொழிலாளியாக உன்னை நீ நினைத்துக் கொள். உன் எண்ணங்களை விவரி.
- டிசம்பர் 2009ல் நீ அதிலாபாத் மாவட்டத்தை சேர்ந்த மலைவாழ் மக்களில் ஒருவராக நினைத்துக் கொள். உன்னுடைய எண்ணங்களை விவரி.

### பேராசிரியர் ஜெயசங்கர் (தெலங்கானா சித்தாந்தவாதி)



கோட்டபள்ளி ஜெயசங்கர் அவரது மாணவ பருவத்தில் இருந்தே(1952) தனி தெலங்கானா மாநிலத்திற்கான போராட்டத்தை துவக்கினார். இவர் ஆகஸ்டு 6ஆம் தேதி 1934ஆம் ஆண்டில் வரங்கல் ரூரல் மாவட்டத்தின் ஆத்மகூர் மண்டலத்திலுள்ள அக்கம்பேட் என்னும் கிராமத்தில் பிறந்தார். இவருடைய பெற்றோர் திரு.லட்சுமிகாந்த் ராவ் மற்றும் திருமதி. மகாலட்சுமி ஆவார்.

இவர் தனது பள்ளிப்படிப்பை அனுமகொண்டாவிலுள்ள மார்காஜி உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். இளங்கல்லூரி படிப்பையும், பட்டப்படிப்பையும் வரங்கல் நகரில் பயின்றார். பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுகலை பட்டம் பெற்றார். உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம்(Ph.D) பெற்றார்.

இவர் பள்ளி ஆசிரியராக தனது வாழ்க்கையை துவக்கினார். பின்பு வரங்கல் நகரிலுள்ள சந்த காந்தய்யா நினைவுக் கல்லூரியில் C.K.M முதல்வராக பணிபுரிந்தார். காகதீய பல்கலைக்கழகம் மற்றும் அன்னிய மொழிகளுக்கான மத்திய கல்வி நிறுவனத்தில் தற்போது (CIFL) பதிவாளராக பணியாற்றினார். அதன்பின் காகதீய பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணிபுரிந்தார்.

தனித் தெலங்கானா மாநில ஏற்பாட்டிற்கு தீவிர ஆதரவாளரான பேராசிரியர் திரு.ஜெயசங்கர் பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றார். மாநிலங்களின் மறுசீரமைப்புக்காக 1952ஆம் ஆண்டில் திரு.பஜல் அ-தலைமையிலான மாநிலங்களின் மறுசீரமைப்பு கமிஷன் மக்கள் கருத்துகளை கேட்டறிய ஐதராபாத் வந்தது. இக்கமிஷனை சந்தித்த மாணவர் சங்க தலைவர்களில் பேராசிரியர் ஜெயசங்கர் மிக முக்கியமானவர். இவர் தனது அறிக்கையை தேர்தல் கமிஷனிடம் அளித்தார். அறிக்கையை ஆராய்ந்த கமிஷன் அவரிடம், தெலங்கானா தனி மாநிலமாக நிலைத்து செயல்பட முடியுமா? என வினவியது. அதற்கு



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அவர் நாங்கள் யாசித்து தனித்து செயல்படவும் தயார். ஆனால் ஆந்திர மக்களுடன் இருக்க விரும்பவில்லை. என பதிலளித்தார். 1969ஆம் ஆண்டில் தெலங்கானா போராட்டத்தை வலுப்படுத்த இவர் செய்த முயற்சிகள் பாராட்டத்தக்கவை. ஆந்திரப் பகுதியினரின் ஆதிக்கததால், தெலங்கானா மக்கள் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் கலாச்சார துறைகள் மட்டுமின்றி வேறு இதர துறைகளிலும் வேறுபாட்டுணர்வால் பாதிப்புக்குள்ளாயினர் என்னும் கருத்தைப் பரப்பினார்.

1996 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட தெலங்கானா போராட்ட இயக்கத்தின் அடுத்த நிலையின் சித்தாந்தவாதியாக விளங்கினார். தெலங்கானா மக்கள் எதிர்கொண்ட வேறுபாட்டுணர்வின் விளைவுகளை புள்ளியல் விவரங்களுடன் மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் தெரியப்படுத்தினார்.

தெலங்கானா போராட்டம் மூன்று நிலைகளில் நடத்தப்பட வேண்டும் என இவர் விருப்பம் கொண்டார். முதல் நிலையில் தெலங்கானா தனி மாநிலம் கொள்கையை பரப்புதல், இரண்டாவது நிலையில் தனி மாநிலத்துக்கான இயக்கமும், எதிர்ப்பு போராட்டங்களை பல முறைகளில் நடத்துதல், இறுதி நிலையில் அரசியல் ரீதியான முயற்சிகளை மேற்கொள்ளுதல் என்று அம்மூன்று நிலைகள் கூறுகின்றன. தெலங்கானா மாநிலத்தை சாதிக்கும் வரை இவர் தெலங்கானா சித்தாந்தத்தை பரப்ப மேற்கொண்ட முயற்சிகள் பிரம்மாண்டமானவை.

இவரது கொள்கை பிரச்சாரத்தால் ஊக்கம் பெற்ற மாணவர் சங்கங்கள், வணிக சங்கங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் கூட்டு செயற்குழுக்கள் முழுபலத்துடன் எதிர்த்து போராடின. இவ்வாறாக எதிர்பார்த்தபடி தெலங்கானா போராட்டம் உச்ச நிலையை பெற்றது. தெலங்கானா தனி மாநிலம் ஜூன் மாதம் 2ஆம் தேதி, 2014ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தெலங்கானா மாநிலம் உருவானதை நான் என் கண்களால் பார்த்துவிட்டேன் என்று உணர்ச்சிபூர்வமாக அறிவித்தார். துரதிருஷ்டவசமாக அவருடைய கனவு நனவாகும் முன்னரே தனி தெலங்கானா செயல்படுவதற்கு ஆயத்தமாகும் தருவாயில் உடல்நலக்குறைவால் ஜூன் 21ஆம் தேதி 2011ல் இயற்கை எய்தினார்.

தெலங்கானா மாநில அரசாங்கம் மறைந்த பேராசிரியர் ஜெயசங்கர் நினைவாக மாநிலத்திலுள்ள விவசாய பல்கலைக்கழகத்திற்கு பேராசிரியர் ஜெயசங்கர் விவசாய பல்கலைக்கழகம் என பெயர் மாற்றம் செய்தது. தெலங்கானாவில் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு ஜெயசங்கர் மாவட்டம் என பெயரிடப்பட்டுள்ளது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## Key words

ரஜகர்கள் போலீஸ் நடவடிக்கை வட்டார கவுன்சில்

முல்கி விதிமுறைகள் சீமாந்திரா மொத்த பயிரிடப்பட்ட பரப்பு

## உனது கற்றலை மேம்படுத்துக

1. தவறான கூற்றை சரி செய்க :
   - இந்திய மாநிலங்கள் மொழிகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன.
   - மாநிலத்தில் வாழும் பல்வேறுபட்ட மக்கள் குழுக்களின் மொழிகளுக்கு போதுமான அங்கீகாரம் தரப்பட்டுள்ளது.
2. தெலுங்கானாவில் வாழும் மக்களின் பன்முகத்தன்மை, வரலாற்று, சமூக மற்றும் கலாச்சார அம்சங்களுடன் கொண்டுள்ளது. இந்த அத்தியாயத்தில் கொடுக்கப்பட்ட வாதங்களின் அடிப்படையில் இக்கூற்றை நியாயப்படுத்துக.
3. ஜென்டின் மேன் உடன்படிக்கையில் முக்கிய அம்சங்கள் குறித்து விவரி. வட்டார மக்களிடையே வெறுப்புணர்வுக்கு காரணமாக இந்த ஒப்பந்தம் எவ்வாறு உருவானது?
4. தெலுங்கானா மக்களின் எதிரபார்ப்புகளின் அனுபவங்களை அடிப்படையாக கொண்டு இப்பகுதியில் வாழும் அனைத்து பிரிவு மக்களும் கௌரவமான நிலையை உணர்ந்திடுவதை நிச்சயப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?
5. வேலைவாய்ப்பு, நீர், விவசாயம் மற்றும் கல்வி முத-யவற்றை பெறுவதில் இவ்விரண்டு வட்டாரங்களில் காணப்படும் வேறுபாடுகள் யாவை?
6. நகர்புற வளர்ச்சியும், விவசாய வளர்ச்சியின் வேறுபாடுகள் அரசாங்கத்திடம் இருந்து பெற விரும்பும். எவ்வாறு?
7. இரண்டு வட்டாரங்களும் இணைய வேண்டும் எனக் கருதுவோர் முன்வைக்கும் வாதங்கள் யாவை?
8. தெலங்கானா மாநில உருவாக்கத்திற்கான போராட்டத்தில் மக்களை அணிதிரட்ட பின்பற்றப்பட்ட முறைகள் குறித்து நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?
9. தெலங்கானா மாநிலம் உருவாக JAC யும் அரசியல் கட்சிகளும் மேற்கொண்ட விதிமுறைகள் குறித்து விவரி. கூட்டு செயற்குழுக்கள் எவ்வாறு பல்வேறு அரசியல் கருத்துடையோரை ஒன்றுசேரும்படியாக உருவாக்க முடிந்தது என நீ கருதுகிறாய்?
10. தெலுங்கானா புறவரி படத்தில் கீழ்கண்டவற்றை குறிக்க.

| | | |
|---|---|---|
| 1. மகபூப் நகர் | 2. கம்மம் | 3. நிசாமாபாத் |
| 4. அதிலாபாத் | 5. நல்கொண்டா | 6. மெபூபபாத் |
| 7. நிர்மல் | 8. ஜோகுலம்பா | |

## செயல்திட்டம் :

2009ஆம் ஆண்டில் நடந்த தெலங்கானா போராட்டத்தில் பங்கேற்ற சிலருடன் நேர்காணல் காண்க. அவர்களின் அனுபவங்களை கேட்டறிந்து அறிக்கையை தயார் செய்க. பழைய செய்தித்தாள்கள், வார இதழ்களி-ருந்து தெலங்கானா போராட்ட நிகழ்வுகளை காட்டும் படங்களை சேகரித்து பட சேகரிப்பு புத்தகத்தை தயார் செய்க.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## Africa Political Map




SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## Africa Practice Map




SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# World Political Map






Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

World Outline Map




SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## India Political Map




SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# India Practice Map






SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# India Physical Map






Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## Schedules in the Constitution of India

| | | |
|---|---|---|
| முதல் அட்டவணை | : | மாநிலமும் & யூனியன் பிரதேசம் |
| இரண்டாவது அட்டவணை | : | ஜனாதிபதி, கவர்னர், தலைமை உச்சநீதிமன்றம், கம்பீட் ரோலர் மற்றும் ஆடிட்டர் ஜெனரல் |
| மூன்றாவது அட்டவணை | : | ஒத்ஸ் அப்ரிமேசன்ஸ் |
| நான்காவது அட்டவணை | : | ராஜ்ய சபாவின் ஒவ்வொரு உறுப்பினர் இடங்களை ஒதுக்குதல் |
| ஐந்தாவது அட்டவணை | : | நிர்வாகம் மற்றும் பழங்குடியினர் கட்டுப்பாடு |
| ஆறாவது அட்டவணை | : | திரிபுரா, மிசோரம் மற்றும் அருணாச்சல பிரதேசம் |
| ஏழாவது அட்டவணை | : | 1. மத்தியப் பட்டியல் (97 படங்கள்)<br>2. மாநிலப் பட்டியல் (66 பாடங்கள்)<br>3. பொதுப் பட்டியல் (47 பாடங்கள்) |
| எட்டாவது அட்டவணை | | இந்தியாவில் 22 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.<br>1. அஸ்ஸாமி, 2. பெங்கா-, 3. குஜராத்தி, 4. இந்தி, 5. கன்னடம், 6. காஷ்மீர், .மணிப்புரி, 8. மலையாளம், 9. கொங்கனி, 10. மராத்தி, 11. நேபாளி, 12. ஒரியா, 13. பஞ்சாபி, 14. சமஸ்கிருதம், 15. சிந்தி, 16. தமிழ், 17.தெலுங்கு 18. உருது, 19. சந்தா-, 20. போடோ, 21. டோக்ரி |
| ஒன்பதாவது அட்டவணை | : | 1951-ல் சட்டத்திருத்தத்தில் பதவிக்காலத்தில் நிலவரி ரயில்வே தொழிற்சாலைகள். |
| பத்தாவது அட்டவணை | : | சட்டதிருத்தத்தில் 1915 வரை சேர்க்கப்பட்டுள்ளது. பதவி நீக்கம் முக்கியமானதாக கருதப்பட்டது. |
| 11 அட்டவணை | : | சட்டதிருத்தத்தின் மூலம் பஞ்சாயத்து ராஜ் விதிகள் உள்ளன. |
| 12 அட்டவணை | : | 74-வது விதியின்படி நகராட்சி மாநகராட்சி இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் ஒரு சில முக்கியமான கட்டுரைகள் |

### இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் ஒரு சில முக்கியமான கட்டுரைகள்

| | | |
|---|---|---|
| Art 14 | - | சட்டத்தின் முன் அனைவரும் சமம் |
| Art 15 | - | மதம், இனம், சாதி, பா-னம், பிறந்த இடம் அடிப்படையில் நாட்டுப்பகுதி பாரபட்சம் கூடாது. |
| Art 16 | - | பொது வேலை விஷயங்களில் சம வாய்ப்பு |
| Art 17 | - | தீண்டாமை ஒழிப்பு |
| Art 18 | - | தலைப்புகள் |
| Art 21 | - | வாழ்க்கை மற்றும் தனி மனித சுதந்திர பாதுகாப்பு |
| Art 24 | - | 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் தொழிற்சாலைகளிலும் சுரங்களிலும் வேலை செய்யாதிருத்தல். |
| Art 45 | - | குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாய கல்வி வழங்குதல் |
| Art 54 | - | ஜனாதிபதி தேர்தல் |
| Art 124 | - | உச்சநீதிமன்றம் அமைத்தல் |
| Art 356 | - | மாநில அவசர நிலை |
| Art 370 | - | ஜம்மு காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து. |



Downloaded from https:// www.studiestoday.com